O6:3
M81
115312

# HOURS OF SPIRITUAL REFRESHMENT

By HEINRICH MÜLLER, D. D.

I. PART.

*Compared with the German Original.)*

115312

131/707

# அட்டவணை.


| பிரமாணம். | | பக்கம். |
|---|---|---|
| ௧. | உலக சங்காத்தத்தைப் பற்றியது. ... ... ... | 1 |
| ௨. | உலக சிநேகத்தைப் பற்றியது ... ... ... ... | 3 |
| ௩. | கிறிஸ்தவர்கள் சந்தோஷத்தைப் பற்றியது. ... ... | 4 |
| ௪. | பின்புறணி பேசுகிறதைப் பற்றியது. ... ... ... | 7 |
| ௫. | மரண பயத்தை நீக்கும் ஆறுதலைப் பற்றியது ... ... | 8 |
| ௬. | பாவ அருவருப்பைப் பற்றியது... ... ... ... | 9 |
| ௭. | விழுந்த பாவிகள் மேல் உண்டாயிருக்கிற பராபரனுடைய கிருபையைப் பற்றியது. ... ... ... ... | 10 |
| ௮. | கருத்தான செபத்தைப் பற்றியது.. ... ... ... | 12 |
| ௯. | நன்மையிலுந் தீமையிலும் நிலைத்திருப்பதைப் பற்றியது. | 13 |
| ௰. | பராபரனுடைய பிள்ளைகளுக்குப் பூமியிலே உண்டாயிருக்கிற பாக்கியமான நிலைமையைப் பற்றியது. ... ... | 15 |
| ௰௧. | காலத்தைப் பிரயோசனமாய் உபயோகித்தலைப் பற்றியது. | 18 |
| ௰௨. | கிறிஸ்தவனுடைய மனோதைரியத்தைப் பற்றியது. ... | 19 |
| ௰௩. | குணப்பட வேண்டிய காலத்தைப் பற்றியது ... ... | 22 |
| ௰௪. | எத்தனங்களைக் கையாடுகிற விதத்தைப் பற்றியது. ... | 23 |
| ௰௫. | பாவசங்கீர்த்தனத்தையும் குணப்படுதலையும் பற்றியது... | 25 |
| ௰௬. | கிறிஸ்தவனுடைய சுயாதீனத்தைப் பற்றியது. ... ... | 27 |
| ௰௭. | தேவ ஒத்தாசை தாமதப்படுதலைப் பற்றியது ... ... | 28 |
| ௰௮. | தேவ கிருபையின் உச்சிதத்தைப் பற்றியது. ... ... | 30 |
| ௰௯. | பராபரனுடைய பக்தியையும் உலகத்தினுடைய பக்தியையும் பற்றியது ... ... ... ... ... ... | 32 |
| ௨௰. | தெய்வத்தனமான துக்கத்தையும் உலக உல்லாசத்தையும் பற்றியது ... ... ... ... ... ... | 33 |
| ௨௰௧. | கிறிஸ்து மார்க்கத்தன்மையைப் பற்றியது ... ... | 36 |
| ௨௰௨. | மனச்சாட்சியை ஆராய்ந்து பார்க்குதலைப் பற்றியது. ... | 37 |
| ௨௰௩. | சிலுவை என்னப்பட்ட துன்பத்திலே இருக்கும் ஆறுதலைப் பற்றியது. ... ... ... ... ... | 39 |
| ௨௰௪. | தேவ கிருபையைத் திரும்ப அடைதலைப் பற்றியது. ... | 40 |
| ௨௰௫. | மாயத்தைப் பற்றியது... ... ... ... ... | 41 |
| ௨௰௬. | பெலவீன விசுவாசத்தைப் பற்றியது. ... ... ... | 43 |
| ௨௰௭. | தெய்வ ஊழியத்தைப் பற்றியது. ... ... ... | 45 |
| ௨௰௮. | சீவன் பறந்தோடிப்போகிறதைப் பற்றியது. ... ... | 46 |
| ௨௰௯. | பராபரனிடத்திலே ஆத்துமாவுக்கு உண்டாயிருக்கும் இளைப்பாறுதலைப் பற்றியது. ... ... ... ... | 48 |
| ௩௰. | உபத்திரவத்தில் உண்டாகும் ஆறுதலைப் பற்றியது. ... | 49 |
| ௩௰௧. | ஞான வெறியைப் பற்றியது. ... ... ... ... | 51 |
| ௩௰௨. | பிசாசோடே சமாதானமாயிருப்பதைப் பற்றியது. ... | 53 |
| ௩௰௩. | பராபரனுடைய சாயலாகப் புதிதாகுதலைப் பற்றியது ... | 54 |
| ௩௰௪. | பொறுமையைப் பற்றியது. ... ... ... ... | 55 |
| ௩௰௫. | மீத்கா வைக்குதலைப் பற்றியது ... ... ... | 57 |
| ௩௰௬. | சிநேகிதரிடத்திலிருக்கும் உத்தம பட்சத்தைப் பற்றியது. | 58 |

| தியானம். | | பக்கம். |
|---|---|---|
| ௩௭. | கிறிஸ்துவை இழந்துபோவதைப் பற்றியது. | 61 |
| ௩௮. | ஞான மரணத்தையும் ஞான ஜீவனையும் பற்றியது. | 62 |
| ௩௯. | அதிர்ஷ்டத்தின் நிலையாமையைப் பற்றியது. | 65 |
| ௪௰. | விசுவாசம் சிநேகம் என்பவைகளின் தன்மையைப் பற்றி. | 66 |
| ௪௧. | ஆத்துமத்தைக் காப்பதைப் பற்றியது | 67 |
| ௪௨. | மனித ஜீவனின் நிலையாமையைப் பற்றியது. | 69 |
| ௪௩. | போதகர் மாறுபாட்டைப் பற்றியது. | 71 |
| ௪௪. | தேவ சித்தத்திற்குத் தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்தலைப் பற்றியது. | 72 |
| ௪௫. | நித்தியகால தியானிப்பைப் பற்றியது... | 74 |
| ௪௬. | பராபரனுடைய இரக்கத்தையும் நீதியையும் பற்றியது... | 76 |
| ௪௭. | பராபரனோடு சமாதானமாயிருப்பதைப் பற்றியது. | 78 |
| ௪௮. | மெய்யான கிறிஸ்தவர்களைப் பற்றியது. | 79 |
| ௪௯. | சேதம் வருவியாத ஐசுவரியத்தைப்பற்றியது | 81 |
| ௫௰. | முந்தின பாவத்தில் திரும்ப விழுவதைப் பற்றியது. | 83 |
| ௫௧. | தன்னைத் தானே நியாயந் தீர்க்கிறதைப் பற்றியது. | 84 |
| ௫௨. | பிழைக்க வேண்டுமென்கிற ஆசையைப் பற்றியது. | 86 |
| ௫௩. | செபத்தில் கேட்க வேண்டிய பிரதான பொருளைப் பற்றி. | 88 |
| ௫௪. | உத்தம ஒழுங்கான சிநேகத்தைப் பற்றியது. | 90 |
| ௫௫. | பராபரனுக்குக் காண்பிக்க வேண்டிய கீழ்ப்படிதலைப் பற்றியது | 91 |
| ௫௬. | உதாரத்துவத்தைப் பற்றியது. | 92 |
| ௫௭. | பராபரனுடைய ஆளுகையைப் பற்றியது. | 94 |
| ௫௮. | பராபரனுக்கு உண்டாயிருக்கிற ஆசையைப் பற்றியது... | 95 |
| ௫௯. | பரலோக ஆசையைப் பற்றியது. | 96 |
| ௬௰. | ஜென்ம பாவத்தைப் பற்றியது | 98 |
| ௬௧. | துன்மனச்சாட்சியைப் பற்றியது. | 99 |
| ௬௨. | ஏழைப்பாவிகளின் மேல் இயேசு வைக்கும் பட்சத்தைப் பற்றியது. | 100 |
| ௬௩. | ஆவிக்கும் மாமிசத்துக்குமுள்ள போராட்டத்தைப் பற்றி. | 102 |
| ௬௪. | துன்பங்களின் முடிவைப் பற்றியது. | 105 |
| ௬௫. | பொறுமையில்லாமையைப் பற்றியது | 106 |
| ௬௬. | இயேசுவிலுள்ள இளைப்பாறுதலைப் பற்றியது | 107 |
| ௬௭. | பராபரனை சிநேகிக்கிற சிநேகத்தின் அடையாளங்களைப் பற்றியது. | 109 |
| ௬௮. | கிறிஸ்தவனுடைய வாசஸ்தலத்தைப் பற்றியது. | 111 |
| ௬௯. | குணப்படுதலுக்கேற்ற காலத்தைப் பற்றியது. | 113 |
| ௭௰. | நல்ல நோக்கத்தைப் பற்றியது. | 114 |
| ௭௧. | எல்லா மனுஷருஞ் சரி என்பதைப் பற்றியது. | 116 |
| ௭௨. | அவுழ்தபெலத்தைப் பற்றியது.... | 117 |
| ௭௩. | விசுவாச பெலத்தைப் பற்றியது. | 118 |
| ௭௪. | நன்றியறிதலைப் பற்றியது. | 120 |
| ௭௫. | நன்றியறியாமையைப் பற்றியது. | 121 |
| ௭௬. | மெய்க் கிறிஸ்தவனுக்கு இருக்கவேண்டிய அடையாளங்களைப் பற்றியது. | 123 |
| ௭௭. | மெய்க் கிறிஸ்தவனுடைய குணத்தைப் பற்றியது. | 125 |





| தியானம். | | பக்கம். |
|---|---|---|
| ௭௮. | கிறிஸ்தவனுடைய வளர்த்தியைப் பற்றியது. | 127 |
| ௭௯. | விசுவாசத்தின் ருசுவைப்பற்றியது. | 129 |
| ௮௰. | பராபரன் மனிதரைச் சிநேகிக்கும் சிநேகத்தைப் பற்றி. | 131 |
| ௮௧. | ஒரு கிறிஸ்தவன் பண்ணுகிற மரணசாதனத்தைப் பற்றி. | 132 |
| ௮௨. | கண்களினால் வரும் இடறலைப் பற்றியது. | 135 |
| ௮௩. | தன்னையே சிநேகிக்கிறதைப் பற்றியது. | 137 |
| ௮௪. | கிறிஸ்தவன் பேசும் பேச்சைப் பற்றியது. | 138 |
| ௮௫. | சிறிய பாவங்களைப் பற்றியது. | 140 |
| ௮௬. | பராபரனையும் என்னையும் பூமிக்கடுத்த வஸ்துக்களையும் சிநேகிப்பதைப் பற்றியது. | 142 |
| ௮௭. | பராபரனுக்கு நாம் காண்பிக்கவேண்டிய உண்மையைப் பற்றியது. | 143 |
| ௮௮. | தாராள ஈகையைப் பற்றியது.... | 146 |
| ௮௯. | மனச்சாட்சியின் நரகத்தைப் பற்றியது. | 147 |
| ௯௰. | பரிசுத்தவான்களைப்பார்க்கிலும் பாவிகள் நல்லவர்கள் என்பதைப் பற்றியது.... | 148 |
| ௯௧. | ஒரு கிறிஸ்தவனுக்கு இருக்கிற ஐசுவரியத்தைப் பற்றியது | 150 |
| ௯௨. | தனக்கும் பிறனுக்கும் காண்பிக்க வேண்டிய சிநேகத்தின் ஒழுங்கைப் பற்றியது.... | 153 |
| ௯௩. | கிறிஸ்தவனுடைய சங்காத்தத்தைப் பற்றியது ... | 155 |
| ௯௪. | கிறிஸ்தவர்களுடைய உபத்திரவத்தைப் பற்றியது. | 156 |
| ௯௫. | ஆவியின் ஒருமையைப் பற்றியது. | 157 |
| ௯௬. | ஆத்தும இளைப்பாறுதலைப் பற்றியது. | 158 |
| ௯௭. | சிலுவையைச் சுமக்கும் உத்தம விதத்தைப் பற்றியது... | 160 |
| ௯௮. | உலகத்தின் உண்மைத்தாழ்ச்சியைப் பற்றியது. | 162 |
| ௯௯. | தன்னைத்தான் அறிகிறதைப் பற்றியது.... | 164 |
| ௱. | பராபரனை அறிகிற அறிவைப் பற்றியது. | 167 |
| ௱௧. | மனஸ்தாபக் கண்ணீரைப் பற்றியது. | 169 |
| ௱௨. | சிலுவையிலே உண்டாயிருக்கிற தேவ ஒத்தாசையைப் பற்றியது. | 171 |
| ௱௩. | மன அடக்கத்தைப் பற்றியது... | 173 |
| ௱௪. | நாவுக்குக் கடிவாளம் போடுவதைப் பற்றியது... | 175 |
| ௱௫. | பாக்கியமான மரணத்தைப் பற்றியது.... | 177 |
| ௱௬. | நல்லோர் அருமையைப் பற்றியது. | 178 |
| ௱௭. | விசுவாசத்தின் அசையாத அஸ்திவாரத்தைப் பற்றியது. | 179 |
| ௱௮. | உள்ளான ஆத்துமப் பார்வையைப் பற்றியது.... | 181 |
| ௱௯. | பராபரனைப்பற்றி உண்டாயிருக்கவேண்டிய எதார்த்த இருதயத்தைப் பற்றியது. | 182 |
| ௱௰. | பின்புறணியைப் பற்றியது. | 184 |
| ௱௰௧. | உலகத்தின் மக்களால் மோசம்போகிறதைப் பற்றியது. | 186 |
| ௱௰௨. | மனச்சாட்சி சொல்லும் சாட்சியைப் பற்றியது. | 187 |
| ௱௰௩. | பரலோக சிநேகத்தைப் பற்றியது. | 189 |
| ௱௰௪. | மெய்யான சிநேகத்தின் அருமையைப் பற்றியது. | 191 |
| ௱௰௫. | சமாதானப்படுதலைப் பற்றியது. | 193 |
| ௱௰௬. | கிறிஸ்தவர்களுடைய சத்துருக்களைப் பற்றியது. | 194 |
| ௱௰௭. | சத்துருக்களைச் செயிப்பதைப் பற்றியது. | 199 |

தியானம்.

௱௰௮. மனுஷருடைய தந்திரம் துஷ்டத்தனத்தைப் பற்றியது.
௱௰௯. நல்லோரைத் துன்பப்படுத்துவதைப் பற்றியது. ...
௱௨௰. மாமிச சிந்தைக்கும் ஆவியின் சிந்தைக்கும் உள்ள விரோதத்தைப் பற்றியது. ... ... ... ... ...
௱௨௰௧. சத்தியவேத வாசிப்பைப் பற்றியது. ... ... ...
௱௨௰௨. பண ஆசையைப் பற்றியது. ... ... ... ...
௱௨௰௩. மிகுந்த படிப்பைப் பற்றியது ... ... ... ...
௱௨௰௪. உயர்ந்த உத்தியோகத்தைப் பற்றியது ... ... ...
௱௨௰௫. தான் தானே சரிக்குச் சரிக்கட்ட நினைப்பதைப் பற்றியது. ... ... ... ... ... ... ...
௱௨௰௬. பராபரனுடைய உண்மையைப் பற்றியது. ... ...
௱௨௰௭. பூமியிலே இருக்கும் கிறிஸ்தவர்களுடைய திருவாகத்தைப் பற்றியது. ... ... ... ... ... ...
௱௨௰௮. பெரிய மாளிகைகளைப் பற்றியது. ... ... ...
௱௨௰௯. பராபரனுடைய தயவைப் பற்றியது. ... ...
௱௩௰. உயர்குல மேன்மையைப் பற்றியது. ... ... ...
௱௩௰௧. போதகத்தொழில் அடைவதைப் பற்றியது. ... ...
௱௩௰௨. தகுங் கோபத்தைப் பற்றியது. ... ... ...
௱௩௰௩. நியாயமான வட்டியைப் பற்றியது. ... ... ...
௱௩௰௪. விவேகத்தைப் பற்றியது. ... ... ... ...
௱௩௰௫. தேவபத்தியினால் வரும் பிரயோசனத்தைப் பற்றியது...
௱௩௰௬. மெய்ச்சிநேகத்தின் உற்பத்தியைப் பற்றியது ... ...
௱௩௰௭. சகோதர சிநேகத்துக்கு ஏற்றதான கடிந்துகொள்ளுதலைப் பற்றியது. ... ... ... ... ... ...
௱௩௰௮. கிறிஸ்துவோடே ஐக்கியமாவதைப் பற்றியது... ...
௱௩௰௯. தேவைத்தனமான மாறுதலைப் பற்றியது. ... ...
௱௪௰. இயேசுவைச் சிநேகிக்கிற சுத்த சிநேகத்தைப் பற்றியது...
௱௪௰௧. கிரியையோடு கூடிய சிநேகத்தைப் பற்றியது ... ...
௱௪௰௨. மெய்க்கிறிஸ்தவனைப் பற்றியது. ... ... ...
௱௪௰௩. இகழவும் புகழவும் தக்க பொருளாசையைப் பற்றியது...
௱௪௰௪. கிறிஸ்துவைப் பின் செல்லுவதைப் பற்றியது ... ...
௱௪௰௫. சிலுவை என்னும் உபத்திரவத்தில் செபம் பண்ண வேண்டும் என்பதைப் பற்றியது. ... ... ... ...
௱௪௰௬. மாமிசத்தைக் கொல்லுவதைப் பற்றியது. ... ...
௱௪௰௭. வீண் போகாத நம்பிக்கையைப் பற்றியது. ... ...
௱௪௰௮. மீளாத சேதத்தைப் பற்றியது... ... ... ...
௱௪௰௯. பராபரனுடைய உண்மையுள்ள ஊழியரின் சரியான பட்டத்தைப் பற்றியது ... ... ... ... ...
௱௫௰. போர்க்கிறிஸ்தவர்களுடைய விக்கிரக ஆராதனையைப் பற்றியது ... ... ... ... ... ... ...
௱௫௰௧. பரமண்டலத்தின் மேல் உள்ள ஆசையைப் பற்றியது...
௱௫௰௨. உறுதியைப் பற்றியது ... ... ... ... ...

௧. தியானம்.

# உலக சங்காத்தத்தைப் பற்றியது.

ஒன்றும் இல்லாததுக்கு ஒன்றும் இல்லை. தீர்ந்தது கணக்கு.

உலகமே, உனக்கும் எனக்கும் வழக்கு. நீ எனக்கு ஒத்துவராய், நானும் உனக்கு ஒத்துவரேன், இருவரும் வேறுபட்டிருக்கிறோம். நான் உன்னையும், நீ கொடுக்கிற தித்திப்பான இரைக்குள்ளே சொருகியிருக்கிற விஷமான தூண்டில் முள்ளையும் நன்றாய் அறிந்திருக்கிறபடியால், உன்மேல் எனக்குப் பிரியமில்லை. நீ என்னை அறியாமலும், பரமண்டலங்களில் இருக்கும் என் பிதாவை நோக்கி நான் செபம் பண்ணுகிறதினால் உனக்கு அன்றன்றுள்ள அப்பம் அகப்படுகிறதென்கிறதை அறிய மனதில்லாமலும் இருக்கிறபடியால், என்மேலும் உனக்குப் பிரியமில்லை. ஒரு கிறிஸ்தவன் உலகத்தை அபேட்சிக்கக் காரணம் ஏது. அது அவலட்சணமானவேயாள் ஆச்சே. முற்றிலுங் கெட்டுக்கிடக்கிற இந்த உலகத்திலே அவன் கண்டுபிடிக்கிறதற்கான யாதொரு நன்மை உண்டோ. கயோவா. ரு, ... உலகமோ ஒரு கிறிஸ்தவனைப் பெரிய எண்ணிக்... எண்ண நியாயமுண்டு. ஏனென்றால் மெய்க்கிறிஸ்தவன் ஒருவனாகிலும் உலகத்திலே இல்லாவிட்டால, சோதோமைவிட்டு லோத் புறப்பட்டவுடனே அது அக்கினியால் அழிந்ததுபோல் இதுவும் அழிந்துபோகுமே. ௧ மோசே ௰௯. ஆகிலும் உலகம் என்னைச் சிநேகிக்க வேண்டுமென்று நான் விரும்பேன். ஏனெனில் ஒத்துமையிருந்தால் பட்சம் உண்டாகும். அது எனக்கு மிகவுஞ் சார்பாயிருந்தால், அப்போது அதுக்கொத்த வேஷம் என்னிடத்தில் வெருவாயிருக்கும் என்பதற்குச் சந்தேகம் இல்லை. ஆனால் அது எனக்கு ஏற்காது. அதுதானே கெட்டதாயிருக்கிறபடியால், சன்மார்க்கத்தை அது என்னிடத்திலே கண்டால் அதுக்குப் பிடியாது. ஆகலால் நான் அதற்குப் பிரியமாகேன். அதுவும் எனக்குப் பிரியமாகாது. அப்படியே இருக்கட்டும்.

ஆகிலும் உலகத்தாலே எனக்கு ஒரு பொழிவு உண்டு. அது என்ன. எனக்கு மனதில்லாவிட்டால், நான் அதற்கு ஏற்க நடக்க அவசரமில்லை. அதுவோ தனக்கு மனதில்லாதிருந்தும், என் பராபரனுடைய சித்தத்தின்படியே எனக்கு ஏற்க நடக்க கடமைப்பட்டிருக்கிறது. சாவையுஞ் சகல

கேட்டையும் அது எனக்கு உண்டாக்க மனதாயிருந்தாலும், அப்படிச் செய்யக் கூடாமல், அதற்குப் பதிலாக அது எனக்குத் தினந் சாப்பாடு கொடுக்க வேண்டும். நான் அதற்கு ஆண்டவன், அது எனக்கு அடிமை. நான் அதைக் கூலி கொடாமல் வேலைகொள்ளுகிறேன். அது என்னைச் சுமக்கிறது, நான் அதை மிதிக்கிறேன். அது எனக்கு ஆகாரங் கொடுக்கிறது. நான் அதற்கு ஒரு தோத்திரமுஞ் சொல்லேன். அது என்னைத் தனக்குச் சாபமாக எண்ணுகிறது. ௧ கொரி. ௪, ௰௩. அப்படியிருந்தும் அது என்னை ஆசீர்வதிக்க வேண்டும். அது என்னை அரோசிக்கிறது, ஆகிலும் அது என்னைச் சகிக்கவேண்டும். அது என்னால் வேசாறிப்போகிறது, ஆகிலும் அது என்னைவிட்டு நீங்கலாகக் கூடாது. அது என்னைக்கொல்ல உறுக்குகின்றது, ஆகிலும் என்னைக்கொல்ல அதால் கூடாது. அது தன் சகல வல்லமையுங் கூட்டி வந்து என் மயிரில் ஒன்றைக்கூட சுருட்ட முடியாது. நான் ஒரு சிறு பெருமூச்சுவிட்டால், அதின் சர்வ வல்லமையும் ஒன்றுமில்லாமல் பண்ணலாம்.

நான் உலகத்துக்குப் பிரியமாக நடந்தால், அது எனக்கு வெகு சேதம் வருவிக்கும். ஏனெனில் அதற்குப் பிரியமானது பராபரனுக்குப் பிரியமாகமாட்டாது. உலகசிநேகம் பராபரனைப் பகைக்கிற பகை. யாக். ௪, ௪. பராபரனுக்குப் பிரியமாயிருப்பதை விரும்புகிறாயா, மனுஷருக்குப் பிரியமாயிருப்பதை விரும்புகிறாயா. இந்த இரண்டிலே [illegible]து உத்தமமென்று நீ சொல்லு. முந்தினதே உத்தமமென்று நான் சொல்லுகிறேன். உலகத்துக்கு நான் பிரியமாயிருந்தாலும், அதினால் வருவது சொற்பப் பிரயோசனமானது. ஏனெனில் அதுதானே ஏழையாயிருக்க, அது என்னத்தை எனக்குக் கொடுக்கக்கூடும். ஒன்றும் இல்லாதவன் ஒன்றுங் கொடுக்க மாட்டான். உலகத்துக்கு இருக்கிறது உலகத்துடையதல்ல என் பராபரனுடையது. அவர் தாமே வேண்டியபோது அதைக் கொடுக்கிறதும் வாங்குகிறதுமாயிருக்கிறார். இன்றைக்கு அதின் கையிலே இருக்கிறது நாளைக்கு என் கையிலே வந்தாலும் வரும். ஆகையால் நான் உலகத்துக்கு வெறுப்பானால், அதினால் எனக்குச் சேதம் ஒன்றும் இல்லை. அது என்னைவிட்டு என்னத்தை எடுக்கக் கூடும். மனரம்மியமே என் திரவியம்; சற்குணமே என் வெகுமதி; நன் மனச்சாட்சியே என் சந்தோஷம்; பரமண்டலமே என் காணியாட்சி பரமண்டலத்தில் இருப்பவரே என் ஏகமும் சகலமும். உலகத்திற்கு நான் ஏற்காதவனாகிறதே அதிக பலன். அதின் விரோதம் தேவசிநேகம். அது என்னைவிட்டு எதையாவது



வாங்கிப்போட்டால், அதிலும் அதிகமாய்ப் பராபரன் எனக்குக்கொடுக்கிறார். அது எனக்குச் சஞ்சலம் வருவித்தால், பராபரன் அதைவிட மேன்மையான சந்தோஷத்தை வருவிக்கிறார். அது என்னைச் சின்னப்படுத்தினால், பராபரன் கனமைப்படுத்துகிறார். அது என்னைவிட்டு விலகினால், பராபரன் என்னைக் கிட்டிச் சேருகிறார். அது கைவிட்டால், அவர் கை தாங்குகிறார், அது தள்ளிவிட்டால், அவர் ஏற்றுக்கொள்ளுகிறார். உலகம் எவ்வளவு கோபமாகிறதோ, அவ்வளவு பராபரன் கிருபை பாராட்டுகிறார். ஆகலால் என் இருதயமே, நீ உலகத்துக்குப் பிரியமாயிருக்க விரும்பாதே.

## உ. தியானம்.

# உலக சிநேகத்தைப் பற்றியது.

### உலகம் தூண்மேல் நிற்கிறது.

அது எங்கே என்று உனக்குத் தெரியுமா? உன் இருதயத்திலேதான். ஏனெனில் நீதானே கண் இச்சை, மாங்கிஷ இச்சை, ஜீவனத்தின் பெருமை நிறைந்த சிறு உலகமாயிருக்கிறபடியினாலே, உனக்குப் புறம்பேபோய் அதைத் தேடப் போகிறாய்? ௧ யோவா. உ, ௰௬. சிநேகம் ஒரு தூண். அதின்மேல் உலகம் உன் இருதயத்தில் பொருந்து நிற்கிறது. கண்ணாடியிலே உருவைக் காண்கிறதுபோல் உன் சிநேகத்திலே உலகத்தைக் காண்கிறாய். உலகத்தின்மேல் வைக்கும் உன் சிநேகத்தை நீ தள்ளிவிட்டால், அப்புறம் உன் இருதயத்திலே அதற்குக் கெட்டியான ஆஸ்திவாரம் இல்லாமல் விழுந்துபோம். பராபரனுடைய தேவாலயத்திலே விற்கிறவர்களுக்குங் கொள்ளுகிறவர்களுக்குங் காரியம் என்ன? யோவா. உ, ௰௫. அவர்களைச் சவுக்காலே அடித்து வெளியே துரத்தது. நீ உலகசிநேகத்திலும் பண ஆசையிலும் அமிழ்ந்து போய் அடிக்கடி அற்பச் சங்கைக்காகவும், பணத்துக்காகவும், கெட்ட சிற்றின்பத்துக்காகவும் மோட்சத்தை விற்றுப்போடுகிறாய். உன் சிநேகத்தைச் சம்பாதிக்க உலகத்தைவிட அதிகமாய் உனக்காகப் பிரயாசப்பட்ட உன் இயேசுவுக்கு அதைக் கொடு. உலகம் வாங்குகிறது, அவர் கொடுக்கிறார். அது சஞ்சலப்படுத்துகிறது, அவர் சந்தோஷிப்பிக்கிறார். அது கொல்லுகிறது, அவர் உயிர்ப்பிக்கிறார். நீ இயேசுவை எந்தமட்டுஞ் சிநேகிக்கிறாயோ, அந்தமட்டும் அவர் உன் இருதயத்திலே இளைப்பாறுகிறார். இயேசு எங்கேயோ, அங்கே

பரமண்டலமுங் கூட இருக்கவேண்டும். ஆ என் இருதயத்
தைவிட இயேசுவுக்குப் பிரியமான இடம் எங்கும் இல்லை.
அதின்மேலே அவருக்கு எத்தனை ஆவல். பசியாளிக்கு
ஒரு பிடி அன்னத்தின்மேல் இருக்கும் ஆசையைவிட அவ
ருக்கு என் இருதயத்தின்மேல் அதிக வாஞ்சை உண்டு. நான்
என் இருதயத்தை அவருக்குத் திறக்க வேண்டுமென்று அவர்
தமது ஊழியக்காரரைக் கொண்டு எவ்வளவாய் அங்கலாய்க்
கிறார், எவ்வளவாய்க் கெஞ்சுகிறார், ஓயாமல் எத்தனைதரந்
தட்டுகிறார். உலகமே, வெளியே புறப்படு. என் இருதயம்
இயேசுவுக்கு இருக்கட்டும். மதுர இயேசுவே, என்னிடத்
தில் வாரும். என்னுடையது யாவையும் ஒவ்வொன்றையும்
உமக்குச் சந்தோஷமாய்க் கட்டிக்கொள்ளும். என் இருதயம்
பூமியிலே உமக்குப் பரமண்டலமாவதாக. இயேசுவே, இதி
லேயே தேவரீர் தங்குவீராக.

௩. தியானம்.

## கிறிஸ்தவர்கள் சந்தோஷத்தைப் பற்றியது.

எப்போதும் சந்தோஷம். ௨ கொரி. ௬, ௰.

இதுவே நான் நித்தம் நினைவுகூரும் வாக்கியம். அது உனக்
கும் அடுத்ததல்லவோ: நீ சஞ்சலத்திலே அமிழ்ந்தி என்
இருதயத்தை அதினால் வாங்காமல் அரித்துப் [illegible]
னேன். நான் அப்படிச் செய்யேன். பிசாசு எனக்கு மனமடிவு
வருவிக்க வந்தால், அதோடு எதிர்த்து நின்று, போ, பிசா
சே, எப்போதும் சந்தோஷம் என்பதே நான் நினைவுகூரும்
வாக்கியம் என்கிறேன். இது உனக்குத் தெரியாதா?—நான்
வியாதிப்படுகிறபோது நான் சலிப்பற்றிருக்கிறேன். இயேசு
சிநேகித்திருந்த இலாசருவும் வியாதிப்பட்டானே. யோவா.
௰௧, ௩. பட்சத்தினாலே அடிக்கிறதுமுண்டே. பட்சத்தின்
அடி எத்தனைக்கு உரமாய் அழுந்துகிறதோ அத்தனைக்கும்
அது இரட்சிப்புக்கு உதவியாயிருக்கும். பராபரன் மிலா
றாலே நம்மை அடிக்கிறார் ஆனால் நரகத்திலே இருந்து
நம்மை இரட்சிக்கிறார். வாக்கி. ௨௩, ௰௪. இத்தனை வருஷம்
நான் சுகமாயிருந்தேனே, இப்போது பராபரனுக்குப் புகழ்ச்
சியாக இரண்டொரு கிழமை நான் வியாதிப்பட்டால் என்ன.
மாறுதல் நல்லதே. பராபரன் கையிலே நன்மையை வாங்
கின நாம் தீமையையும் வாங்க வேண்டாமோ. யோபு ௨, ௰.
தேவகிருபையால் என் ஆத்துமம் சுகமாயிருக்கிறதே. வியா



திப்பட்டிருக்கும் என் சரீரத்தைப் பராபரன் வெகு கரிசனை
யாய்ப் பார்த்துப் பக்குவப்படுத்துகிறார். வியாதிப்படுகிற
பிள்ளையைத் தாய் தகப்பன் மிகுதியாய் விசாரிக்கிறார்கள்.
பராபரன் என் வியாதிப்படுக்கையிலே என்னை முசிப்பாற்றி
என் சகல பிணிகளையும் நீக்கி இரட்சிக்கிறார். சங்கீ. ௪௧, ௪.
எனக்கு இன்னம் என்ன வேண்டும்.—

என்மேலே இல்லாததும் பொல்லாததும் பேசுகிறார்
கள். அதுக்காகவும் நான் விசாரப்படேன். என் இயேசுவும்
தம்மை மதுபானப்பிரியன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்
குஞ் சிநேகிதன் என்ற சொல் கேட்க வேண்டியதாயிற்று.
மத். ௰௧, ௰௯. நான் உன்னதமான பராபரனை நோக்கிக் கூப்
பிடுவேன். அவர் என்னை விழுங்கப்பார்க்கிறவன் என்னை
நிந்திக்கையில் வானத்திலே இருந்து ஒத்தாசை அனுப்பி
என்னை இரட்சிப்பார். சங்கீ. ௫௭, ௩. என் மனச்சாட்சி என்
னைக் குற்றப்படுத்தாமலிருக்கிறதே எனக்கு ஆயிரஞ் சாட்சி
போலாகும். நான் பொல்லாங்கு செய்யாமலிருக்க, என்மேல்
பொல்லாப்பாய்ப் பேசுகிறதற்காக நான் சஞ்சலப்படுவே
னோ. இல்லை, இல்லை. மிகவுஞ் சந்தோஷப்படுகிறேன். பின்
புறணிக்காரன் என்மேல் ஒரு புஸ்தகம் நிறைய எழுதினா
லும், அதை என் கக்கத்திலே வைத்துக்கொண்டு ஒரு முடி
போல் சிரசின்மேல் தரித்துக் கொள்வேன். யோபு ௩௧,
௩௫. ௩௬. என் நிமித்தமாக உங்களைத் தூஷணித்துத் துன்
பப்படுத்தி தீமையானதெல்லாம் உங்கள்பேரில் பொய்யாய்ச்
சொன்னால் பாக்கியவான்களாயிருக்கிறீர்கள். சந்
தோஷப்பட்டுக் களிகூருங்கள், ஏனென்றால் உங்கள் பலன்
பரமண்டலங்களிலே திரளாயிருக்கும். ஏனெனில் உங்க
ளுக்கு முன் இருந்த தீர்க்கதரிசிகளை இப்படியே துன்பப்
படுத்தினார்களென்று இயேசு சொன்னது எனக்குத் தெரிந்
திருக்கிறதே. மத். ௫, ௰௧. ௰௨.

பொதுவான அவதியும் உபத்திரவமும் எனக்கு வந்
தாலும், அப்போதும் என் மனங் குன்றாது. சரீரத்தைவிட
அவயவங்களுக்கு அதிக நலம் இராதே, கப்பலிலே இருக்கிற
வர்களெல்லாரும் அமிழ்ந்திப் போகிறபோது நான்மாத்திரந்
தப்பவேண்டுமென்றிருக்கிறது என்ன. நம்பிக்கையில்லாத
வர்கள் துக்கப்பட்டால் படட்டும். நானோ இஸ்ரவேலைக்
காக்கிறவர் தூங்காமலும் உறங்காமலும் இருக்கிறாரென்று
நிச்சயித்திருக்கிறேன். சங்கீ. ௱௨௧, ௪. என்னை நினைத்து
எனக்காகக் கவலைப்படுகிற ஒரு பராபரன் பரமண்டலத்
திலே இன்னம் இருக்கிறார். என் பாவத்துக்காக இந்த உபத்
திரவத்துக்கு நான் பாத்திரவானாயிருந்தால், குணப்படுக்

திருவடியைத் தேடுவேன். குணப்படுகிற பாவிகளெல்லாருக்கும் திருவடியையும் பாவ பொறுத்தலையும் கொடுப்பேனென்று சொன்ன பராபரன் ஏழைப் பாவியாகிய என்னையுந் தள்ளார்.

என் உற்றார் உறமுறையார் பெண்சாதி பிள்ளைகளை இழந்துபோய்விட்டால், அப்போதும் என் தைரியத்தை இன்னம் விடுகிறதில்லை. கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக்கடவது என்பேன். யோபு ௧, ௨௧. பராபரன் எனக்கு இன்னம் இருக்கவே இருக்கிறார். மரணம் ஒரு பிரிவேயன்றி நாசமல்ல. நான் சிநேகித்திருந்தவர்களை இயேசுவும் அதிகமாய்ச் சிநேகித்திருந்தார். என்னைவிட அவர்கள் அவரோடே மெத்த நெருங்கின ஐக்கமாயிருந்தார்களே. என் இயேசுவண்டையில் அவர்கள் இருக்க நான் சம்மதிக்க வேண்டாமா? என் உற்றார் உறமுறையார் பரமண்டலத்தைச் சுதந்தரிக்க நான் சம்மதிக்காமலிருக்கப் போகாது.

என்னுடையதை இழந்துபோனாலோ, அப்போதும் இன்னம் திடமுள்ளவன் தானே. என் பொருள் என் தேவன் அல்ல. என் பொருளென்று நான் சொல்லத்தக்கது ஏது. அது மெய்ப்பொருளாயிருந்தால், இழந்துபோகிறதில்லையே. அது என்னுடையது அல்ல, என் பராபரனுடையது. எனக்குக் கொடுக்கப்பட்டதை நான் திரும்பக் கொடுக்கிறதுக்கு எனக்கு மனமடிவு என்ன. நான் ச[illegible]க்கப்பட்டாலும், அதினாலே எனக்கு ஒரு அவதியுமில்லை. என[illegible]னிருந்ததை மறந்துவிட்டு, இப்போது இருக்கிறதுகளுக்காக என் பராபரனைத் தோத்திரம் பண்ணுகிறேன். எனக்கு உண்ணவும் உடுக்கவும் இருந்தேயானால் அது போதுமென்று இருக்கிறேன். ௧ தீமோ. ௬, ௮. போதுமென்கிற மனரம்மியத்தைக் கொண்டிருக்கிறவனே போதுமான ஐசுவரியமுள்ளவன். பொருள் போனவுடனே, தீவிரமாய்ப் பரமண்டலத்திலே ஏறுவதற்குத் தடையான ஒரு பெரிய பாரம் என்னைவிட்டுக் கழிந்தது. அடர்த்தியாய் நட்ட வயல் எப்படிக் கெட்டுப்போகிறதோ, வெகு பழங்கள் குலுங்கக் காய்த்த கிளை பாரத்தால் எப்படி முறிந்து விழுகிறதோ, அப்படியே ஐசுவரியவான்களுக்கும் நாசம் உண்டு. ஐசுவரியவான்கள் பராபரனுடைய இராச்சியத்திலே வருகிறது எத்தனை வருத்தமாயிருக்கிறதென்று என் இரட்சகர் சொன்ன வார்த்தையை நான் இன்னம் நன்றாய் நினைக்கிறேன். மாற். ௰, ௨௩. ஒட்டகத்தின் முதுகு அற்றுப்போனபடியால், இப்போது நான் சின்ன ஊசியின் காதுவழியாய் லேசாய்ப் புகுந்து



போகலாம். பொருள் போன வழியே கவலையும் போயிற்று அசட்டையும் போயிற்று. முன்னிருந்ததைப்பார்க்க இப்போது அதிக மன மகிழ்ச்சியாயிருக்கிறேன். என் கருத்தைச் சுருக்கமாய் உனக்குச் சொல்லுகிறேன், கேள். என் இருதயம் பராபரனோடே நெருங்கின ஐக்கியமாயிருக்கிறபடியினாலே, பராபரனுக்குக் கோபம் வருவிக்கிறதை விட எனக்குச் சஞ்சலமானது ஒன்றுமில்லை.

௪. தியானம்.

## பின்புறணி பேசுகிறதைப் பற்றியது.

*திருடனும் திருட்டை ஒளிக்கிறவனும் சரி.*

தூக்குண்டு போகாத திருடர் உலகத்தில் என்னத்தினால் இவ்வளவு நிறைந்திருக்கிறார்கள். நான் புறணி பேசுகிறவர்களைக் குறித்துச் சொல்லுகிறேன். பணந் திருடுகிறவர்கள் மிகுதி, சங்கையைத் திருடுகிறவர்கள் அதிலும் மிகுதி. பின்புறணியை நீ நன்றாய்க் கேட்கிறபடியால், பின்புறணிக்காரனும் நன்றாய் அதைப் பேசுகிறான். அவன் வாயே திருடன், உன் காதே திருட்டை மறைக்கிற கள்ளன். இவ்விருவரும் அ[illegible]க்கு உட்கை[illegible]யிருக்கிறார்கள். இதைக்குறித்து நான் ஒரு தீர்ப்புச் சொல்லட்டுமா. திருடனுடைய நாக்கைத் தூக்கு[illegible] அதை மறைக்கிறவனுடைய காதைத் தூக்கு[illegible] அப்போது இரண்டு திருடரும் ஒருமிக்கத் தொங்குவார்கள். கிறிஸ்தவனே, நீ கிறிஸ்தவனாயிருக்க வேண்டுமானால், உனக்கு மூன்றுவித எச்சரிக்கை வேண்டும்.

முதலாவது, பிறனைக் குறித்து லேசாய்ப் பொல்லாங்கு நினைக்காதே. அது சிநேகத்துக்கு விரோதம். உன் பிறன் இப்படிக்கொத்தவன், அப்படிக்கொத்தவன் என்று உனக்குள்ளே தோற்றிக்கொள்ளாதே. காரியம் வேறாயிருந்தாலும் இருக்கும். நீ இருதயத்தை ஆராய்கிறவன் அல்ல. பொல்லாங்கு நினைக்குதல் குருட்டாட்டமும் பிசகுந் தானே. அது உன்னை மோசப்படுத்தும். குருடனுக்குக் குருடன் வழி காட்டினால் வெகு மோசம் வருமே. பிறன்மேல் உன் மனதிலே யாதொரு பொல்லாப்பான நினைவு தோன்றினாலும், சிநேகமுறைப்படி அவனைப்பற்றி நன்மையானதுகளை நினைத்துக்கொள்.

இரண்டாவது, நீ உன்னை அடக்கிக்கொள்ளவும், பொல்லாங்கு நினைக்கிறதை விட்டுவிடவும் உன்னால் கூடா

தென்றால், நீ பிறன்மேல் பொல்லாப்பொன்றும் பேசாமலும், அதினால் மற்றவர்களிடத்தில் அவனைக்குறித்து சந்தேகம் உண்டுபண்ணாமலும் உன்னைக் காத்துக்கொள். ஏனென்றால் இந்த மனுஷன் இப்படிக்கொத்தவன், அப்படிக்கொத்தவனாய்க் காண்கிறதென்று சொல்லுகிறது மெய்யாகவே சகல ஒழுக்கத்துக்கும் கிறிஸ்தமான சிநேகத்துக்கும் விரோதமாயிருக்கும்.

மூன்றாவது, ஆராகிலும் உன்னிடத்தில் ஒருவன்மேல் கபடாய் அசூயை உண்டுபண்ண வந்தால், அவனுக்கு நீ செவிகொடாமல், நான் என் பிறத்தியானிடத்தில் முன்னே அதைக்குறித்துக் கேட்டாலொழிய நான் நம்பமாட்டேன். மனுஷருக்கு விரோதமாய் வெகு பொய் சொல்லுகிறதுண்டே என்று சொல்லு. நீ இப்படிச் செய்வாயானால் வெகு பாவங்கள் தடைப்படுத்தப்பட்டு, சமாதானம் நிலைபெறும். இப்படிச் செய்.

௫. தியானம்.

## மரண பயத்தை நீக்கும் ஆறுதலைப் பற்றியது.

உருவுக்கு உரு வித்தியாசம்.

ஒன்று மா பயங்கரம், பின்னொன்று மனோகரம். ஆகிலும் இரண்டும் ஒரே உருவுதான். மரணத்துக்கு முன்னே ஒரு ரூபம், பின்னே ஒரு ரூபம் உண்டு. முன்னே துக்கம் போகிறது, பின்னே சந்தோஷம் வருகிறது. முன்னே கறுப்பு, பின்னே வெளுப்பு. முன்னே துன்பம் போகிறது, பின்னே இன்பம் வருகிறது. முன்னே கசப்பு, பின்னே தித்திப்பு. தோல் கசப்பு, பருப்பு தித்திப்பு. மரணத்துக்கு முன் நரகமும் பிசாசும் போகிறது. அதுக்குப் பின்னாலே பரமண்டலம் வருகிறது. மரணத்தின் மார்க்கவசத்திலே கொள்ளையிடுகிற பறிகாரனைப்போல் உரு செய்து, நீ எனக்கு ஏற்காதவன் என்கிற வாசகமுங் கூட்டி அதில் எழுதியிருக்கிறது. ஏனென்றால் எவனும் யாதொன்றைப் பறிகொடுக்கச் சம்மதியானே. மரணந் தன் முதுகிலே போட்டுக்கொண்டிருக்கிற கவசத்தில் கொள்ளையைப் பங்கிடும் ஒரு வீர சூரனைப்போல் உருவரைந்து அத்தோடேகூட அதின்மேல் எனக்கெத்தனை ஆசை என்கிற வாசகமும் எழுதியிருக்கிறது.

வேண்டும் என்கிற ஆசை நம்மெல்லாருக்கும் உண்டே. பரமண்டலத்தைப்பார்க்கிலும் உத்தமமானது உண்டா. இதையே மரணம் நமக்குக் கொடுக்கிறது. பரமண்டலங்



கிடைக்கிறதற்காக நீ துக்கங் கொண்டாடுவானேன். அப்படி வேண்டாம், அப்படி வேண்டாம். என் மனமே, பரமண்டலத்தில் நமக்கு அநேகம் நேர்த்தியான வரங்கள் உண்டாயிருக்குமே. மெய்தான், மரணத்தை முன்னே பார்த்தால், பயங்கரமான சகல வஸ்துக்களிலும் பயங்கரமானதாயிருக்கும். பரிசுத்தவான்களும் ஞானிகளும் தைரியசாலிகளும் அதற்குப் பயந்தார்களே. ஆதலால் நீ அதற்குப் பயப்படுகிறது புதுமையல்ல. ஆனாலும் உனக்குள்ளே மனுஷனடைவாய்த் தோன்றுகிற பயத்தை ஒரு கிறிஸ்தவனைப்போல் செயங்கொள்ளவேண்டும். மரணம் உன்னண்டை கிட்டினால், நீ அத்தோடே சொல்லவேண்டியதென்னவென்றால், மரணமே, உன்னைப்பார்த்த உடனே எனக்குப் பயங்கரந் தோன்றுகிறது. ஆனால் நீ உன் முதுகைத் திருப்பிக்காட்டு, அங்கே எப்படியிருக்கிறதென்று பார்ப்போம். உன் ரூபம் பின்னாலேயும் அப்படியே அருக்களிக்கப்படத் தக்கதாயிருக்கிறதா என்று சொல்லு. ஆ, அப்படியில்லை. பாக்கியமான மரணவேளைக்குப் பின்னே என்னவரும். இளைப்பாறுதல், சமாதானம், சுகபத்திரம், சந்தோஷம், சீவன், மோட்சம், பரிபூரணமுந்தானே. ஆ மரணமே, நீ என்னைப் பயங்கரப்படுத்தமாட்டாய். நீ முதுகுக்கவசத்திலே சுமந்திருக்கிறதை வெகுநாளாய்த் தேடினேன். நான் இளைப்பாயிருக்கிறேன். இளைப்பா[illegible] எனக்கு ஆசை.—எனக்குப் பல சத்துருக்கள் உண்டு. எப்படியாகிலும் சமாதானம் அடைய ஆசை உண்டு.—நான் எப்போதும் அவதிப்படுகிறேன். சுறுக்கிலே கப்பல் [illegible]பட்டாகிலும், நல்ல கரையில் ஒதுங்கவே ஏங்கி விரும்புகிறேன்.—நான் எங்குஞ் சஞ்சலப்படுகிறேன். ஆகையால் எப்போது சந்தோஷம் வருமோ. மரணமே, நீ சீக்கிரம் போகிறாயா. ஆ என்னையுங் கூடக்கொண்டுபோ. எவ்வளவு சீக்கிரமாகப்போகிறாயோ அவ்வளவும் எனக்குச் சந்தோஷம்.

௬. தியானம்.

## பாவ அருவருப்பைப் பற்றியது.

பிசாசைப்பார்க்கிலுங் கெட்டது ஒன்றுண்டு.

உன்னைக் காத்துக்கொள். அது என்னவென்று நீ அறியவேண்டுமா. அது பாவந்தான். பாவத்தினாலே பிசாசுக்கு உன்மேல் வல்லமை உண்டாகிறது. பிசாசுக்குத் தப்புகிறது

பெரிய காரியம். பாவத்துக்குத் தப்புகிறதோ அதிலும் பெரிய காரியம் என்று கிறிசொஸ்தமு சொல்லுகிறார். பிசாசானவன் சில சன்மார்க்கரையும் சரீரப்பிரகாரமாகவும் பிடிக்கிறதுண்டு. அதற்கு முகாந்தரம் சுவாமிக்குத் தெரியும். ஆகிலும் அவர்களுடைய சின்ன மயிரையும் அது தனக்குச் சொந்தமென்று சொல்லக் கூடாது. பொல்லாதவர்களை ஆத்துமப்பிரகாரமாய்ப் பிடித்திருக்கிறான். ஆகாத பாவந்தான் அது குடியிருக்கும் வீடு. இந்தப்பாவத்தால் ஆளப்படுகிறவனை அது தனக்குச் சொந்தமென்று சொல்லலாம்.

சரீரப்பிரகாரமாகப் பேய்பிடித்திருக்கிறது மா பரதாபம். ஆத்துமப்பிரகாரமாய்ப் பிடித்திருக்கிறதோ அதிலும் மா பரதாபம். பேய்க்கு நீ பயந்தால், பாவத்திற்கு அதிலும் அதிகமாய்ப்பயப்படு. கொடுக்கை நறுக்கிப்போட்டால், தேள் அப்புறம் ஒன்றுஞ் செய்யக்கூடாது. பாவத்தை விட்டால், பிசாசு நமக்கு ஒன்றுஞ் செய்யக்கூடாது. நரக நெருப்புக்குப் பயப்படுகிறவன் பாவஞ் செய்யப் பயப்படாமல், அதிலே வேக வேண்டும் என்பதற்கு மாத்திரம் பயப்படுகிறான். ஆனால் பாவஞ் செய்யப் பயப்படுகிறவன் பாவமே நரகநெருப்பு என்று பயப்படுகிறானென்று அகுஸ்தினு சொல்லுகிறார். நான் பாவத்தைப்போல் பிசாசையும் பெரிய சத்துருவாக எண்ண மனதாயிருந்தாலும், பிசாசைவிட பாவத்துக்குப் பெரிய சத்துருவாயிருக்கிறேன். பாவமே என்னிடத்திலிருக்கும் பிசாசினுடைய இராச்சியமும் கிரியையுமாயிருக்கிறது. பாவம் பிசாசுக்கு மனதில் இடங்கொடாவிட்டால், பிசாசு உள்ளேவரக் கூடாது. பிசாசுங் கூட என் நன்மைக்கு உதவியாயிருக்கவேண்டும். பராபரனைச் சிநேகிக்கிறவர்களுக்குச் சகல காரியமும் மரணமும் பிசாசுங் கூட அநுகூலமாயிருக்குமென்று அறிந்திருக்கிறோம். ரோ. அ, உஅ. ஆனால் பாவம் மாத்திரம் என்னைக் கெடுக்கப்பார்த்து எனக்குக் கேடு உண்டாக்குகின்றது.

எ. தியானம்.

## விழுந்த பாவிகள் மேல் உண்டாயிருக்கிற பராபரனுடைய கிருபையைப் பற்றியது.

நீ யார். சத்துருவோ மித்துருவோ.

நீ பாவத்திலே விழுந்தவனாயிருந்தால், பராபரனுடைய கிருபையே உனக்குச் சத்துருவும் மித்துருவுமாயிருக்கிறது. ஒரு மின்னல் இடி மரத்தின் மேலாவது மனுஷன் மேலாவது



விழுந்தால், அது இரண்டுவித கிரியையை நடப்பிக்கிறது. முதலாவது அது மரத்தின் மேல் விழுந்தால், மரத்தைக் கிழித்துவிடுகிறது. மனுஷன் மேல் விழுந்தால், அகப்பட்டவனைக் கொன்றுபோடுகிறது. பிறகு அந்தச் செத்த மனுஷன் முகத்தையும் கிழிந்துபோன மரப்பிளப்பையும் தான் வந்த இடமாகிய வானத்தை நோக்கும்படி செய்கிறது. அப்படியே பராபரனுடைய கிருபை பாவிக்குச் செய்கிறது. முதலாவது, அது பாவியை மோசேயின் சாபத்தால் ஒரு மின்னலைப்போல் கீழேவிழ அடிக்கிறது. சாபத்திற்பின் ஆக்கினையை அவனுக்கு அறிவிக்கிறது. சாவுக்கு அவனைக் கையளிக்கிறது. அதினால் திகிலும், பெருமூச்சும், அழுகையும், தன்மேல் முறையிடுதலும் குணப்படுகிறதற்கேதுவாய் அவனிடத்தில் உண்டாகி, யூதர்கள் மகா பெரிய துக்கத்திலே தங்கள் வஸ்திரங்களைக் கிழித்தாற்போல (யோவேல் உ, யங), இருதயம் வியாகுலத்தினாலும் மனமடிவினாலுங் கிழிந்துபோகிறது. அப்படியிராமல் நிர்விசாரத்தோடும் அச்சமற்ற நினைவோடும் செய்யப்படுகிற தவசு மாயக்காரனே. மாமிசம் சிலுவையில் அறையப்பட வேண்டுமானால், மிகுந்த நோவும் வேதனையும் உண்டாயிருக்க வேண்டும். இரண்டாவது, அந்தக் கிருபை திகிலடைந்த பாவியைத் தன் வசமாய்த் திருப்பி, வானத்தை நோக்கப்பண்ணி, அவன் வந்து மார்பில் அடித்துக்கொண்டு ஆயக்காரனோடே பெருமூச்சுவிட்டு: பராபரனே, பாவியாயிருக்கிற என்மேல் கிருபையாயிரும் என்று சொல்லும்படியாக அநேக ஆறுதலான வாக்குத்தத்தங்களினாலே அவனை நட்புக்காட்டி தன்னண்டையில் இழுத்துக்கொள்ளுகிறது. லூக். யஅ, யங. இதற்குமுன் அவன் சொல்லுகிறதாவது:

நான் எங்கே ஓடுவேன்,
மா பாதகனானேன்,
தீட்டெங்கும் என்னை மூடும்,
ஆர் ஆதரிக்கக்கூடும்;
எல்லா உலகத்தார்கள்
என் தீங்கை நீக்கார்கள்! என்பது.

பிறகு அவன் சொல்லுகிறதாவது:

அன்புள்ள இயேசுவே,
வா என்று சொன்னீரே,
என் மனதும்மைப்பற்றவும்;
என் மோசமும் இக்கட்டும்
தணிய நீர் சற்குரு
திடன் அளிப்பீராக. என்பது.

இப்படியாகப் பராபரன் இரண்டு ஆசனத்தை வைத்திருக்கிறார். ஒன்று நியாயாசனம், அது நரகத்தால் சோடிக்கப்பட்டிருக்கிறது. பின்னொன்று கிருபாசனம். அது அலங்காரமான மோட்சத்தால் சோடிக்கப்பட்டிருக்கிறது. நியாயாசனம் கீழானஸ்தலம். கிருபாசனம் மேலானஸ்தலம். நான் கீழான நியாயாசனத்திலிருந்து மேலான கிருபாசனத்திற்குச் சென்று வழக்கைச் சொல்லித் தீர்த்துக்கொள்ளுவேன். எழுத்து கொன்று ஆவி உயிர்ப்பிக்கும். நரகம் திகில் வருவித்தால் மோட்சம் ஆறுதல் வருவிக்கும். ஆ கோபத்தின் நடுவிலே இரக்கத்தை நினைத்துக்கொள்ளுகிற அளவில்லாத பராபரன் நமக்கு இருக்கிறார்.

அ. தியானம்.

## கருத்தான செபத்தைப் பற்றியது.

ஒருமித்த பலமே பலம்.

ஒரு குறி வைத்து அதைக் கூர்மையாய்ப் பார்த்து அந்தக் குறியிலே படச் சுட வேணுமென்றால், ஒரு கண்ணை மூடிக்கொண்டு மறு கண்ணாலே பார்க்க, இரண்டு கண்ணின் கூர்மையும் பெலனும் ஒரு கண்ணிலே சேர்ந்து பார்வை மகா பெலனாயிருக்கும். அதுபோல் ஒரு காரியத்தை ஊன்றி நிச்சயிக்கிறவன் மற்றக்காரியத்தின் பேரிலே உண்டான நினைவு சிந்தனைகளை எல்லாம் விட்டு, தான் நினைக்கிற காரியத்தை அதிகத் திட்டமாய் யோசனைபண்ணத்தக்கதாக அதின் பேரிலே மாத்திரந் தன் சிந்தையை எல்லாங் கூட்டிச் சேர்த்து ஏக மனதாயிருப்பான். என் இருதயமே, நீ கருத்தாய்ச் செபம் பண்ண வேணுமென்றால், அதற்குப் பெலன் வேண்டியிருக்கிறது. நீ உன் மனமாகிய வில்லை லக்குக்கு எதிராகப் பிடித்து, பெருமூச்சாகிய அம்பை அதின் மேல் வைத்து எய்கிறபோது, அந்த அம்பு பரமண்டலத்தைத் துளைத்து பராபரனுடைய இருதயத்திலே ஊடுருவிப்போம். ஆ இதற்கு எவ்வளவு பெலன் தேவை. நீ பராபரனோடே மல்லுக்கட்டப்போகிறாய். வெற்றி உன் பாரிசமாக வேண்டுமானால், அதற்கான பெலன் தேவை இல்லையா. தேவையானால், உன் இருதயம் இத்தனை சிதறி இருக்கிறதென்ன. அதில் பல நினைவுகளைக் கொண்டிருக்கிறதென்ன. மாயையான இந்தக் காரியத்தை ஒரு நினைவும் அந்தக் காரியத்தை ஒரு நினைவும் பற்றிக்கொண்டிருக்கிறதென்ன. நினைவு சிதறினால் பெலன் எப்படி இருக்



கும். இது காரியத்திலே நான் பரிசேயனை மெச்சுகிறேன். அவன் தனக்குள்ளே செபம்பண்ணினானென்று எழுதியிருக்கிறது. லூக். ரஅ. நீ செபம்பண்ண வேண்டுமென்றால், உன் மனதுக்குள்ளே தானே பண்ணு. பங்கிட்ட இருதயம் துண்டிட்ட இருதயம் அரைஇருதயம் கால்இருதயம் பராபரனுக்கு ஏற்காது. முழு இருதயமே அவருக்குத் தேவை. நான் செபம்பண்ணுமுன் என் நினைவுகள் எல்லாவற்றையுங் கூட்டிச்சேர்த்து, அதுகளை என் இருதயத்தின் ஒளிப்பிடமான ஒரு மூலையிலே கொண்டுபோய், அதுகளைக் காவல் பண்ணுகிறதுபோல் வைத்து, பிறகு பராபரனுக்கு முன்பாகச் சென்று, ஆ கர்த்தரே, உமது அடியானாகிய நான் என் இருதயத்தைக் கண்டு பிடித்தேன். நான் புகழ்ந்து செபம்பண்ண என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது, என் செபத்தைக் கேட்டருளும் என்று சொல்லுகிறேன். நினைவு இளைப்படையாதபடிக்கும், செபம் முடியுமுன் நினைவு பிரிந்தோடிப் போகாதபடிக்கும் நான் என் செபத்தைச் சுருக்குகிறேன். பல நினைவுகளோடே நீண்ட செபம்பண்ணுவதைப் பார்க்கிலும், ஒரு நினைவோடே சுருக்கமாய்ச் செபம்பண்ணுகிறதே உத்தமம். விசுவாசத்தோடும் ஆவியோடும் கூடிய செபம் சுருக்கமானாலும் எழுப்புதலானது. செபம் முடியும்போது விசுவாசமாய் ஆமென் என்று சொல்லுகிறதினால் அந்த மன்றாட்டுகளுக்கு முத்திரை போடுகிறேன். அதுதானே கொஞ்சவார்த்தைகளுக்கும் மகா பெரிய பலத்தைக் கொடுக்கும். நீயும் பலமாய்ச் செபம்பண்ண வேண்டுமானால், போய் நீயும் அப்படிச் செய்.

கூ. தியானம்.

## நன்மையிலுந் தீமையிலும் நிலைத்திருப்பதைப் பற்றியது.

ஆகிறது நல்லது, அதில் நிலைத்திருக்கிறது அதிலும் நல்லது.
ஆகிறது பொல்லாது, அதில் நிலைத்திருக்கிறது அதிலும் பொல்லாது.

வெகு சனக்கூட்டம் எப்படிச் செய்கிறதோ அப்படி நானுஞ் செய்கிறேன் என்கிறாய். வர்த்தகனாகிறது நல்லது, அதிலே நிலைத்திருக்கிறது அதிலும் நல்லது என்று வெகு சனம் சொல்லுகிறது. அதினால் அநேகர் கெட்டு முறிந்து போகவில்லையா.—ஐசுவரியவானாகிறது நல்லது, அதில் நிலைத்திருப்பது அதிலும் நல்லது என்பார்களே. அநேகருக்கு அவர்கள் அதிர்ஷ்டம் வெகுவருஷக்காலஞ் சேர்த்து வைத்

ததை அவர்கள் அதிர்ஷ்ட ஈனம் ஒரு நாளிலே கண்ணிலே காணாமல் அடிக்கிறதில்லையா.—பெரிய மனுஷனாகிறது நல்லது, அதிலே நிலைத்திருக்கிறது அதிலும் நல்லது என்பார்களே. ஆமானும் அப்படித்தானே இருந்தான். ஆனால் அது எத்தனை நாள் நின்றது.—கடன்படுகிறது பொல்லாது, அதிலே முற்றிலும் நிலைத்திருக்கிறது அதிலும் பொல்லாது. ஆகாதவன் கடன்வாங்கிச் செலுத்தாதே போகிறான். சங்கீ. ஙஎ, உக.—அவகீர்த்திக்குள்ளாகிறது பொல்லாது, அதிலே நிலைத்திருப்பது அதிலும் பொல்லாது என்பார்கள். நற்கீர்த்தி சீவனைப்பார்க்க விலையேறப்பெற்றது. இதைப் போக்கடித்தவன் நாணயங் கெட்டவன்.—கிறிஸ்தவனே, என் கருத்து இன்னதென்று உனக்குத் தெரிகிறதா. கிறிஸ்தவனாகிறது நல்லது, அதிலே நிலைக்கிருக்கிறது அதிலும் நல்லது. ஆ எத்தனை பேர் மருள்விழுந்து போனார்கள். நீ நல்லவனாகப் பார்க்கிறதே உன் முந்தின கவலையாயிருக்கவேண்டும். அப்புறம் அந்த நன்மையிலே நிலைத்திருக்கிறது உன் இரண்டாங் கவலையாயிருக்க வேண்டும். கவலையே அதற்கு வேண்டும். நீ சறுக்கலான வழியில் நடந்து, உன் பொக்கிஷத்தை மண்பாண்டத்தில் சுமந்துகொண்டிருக்கிறாய். உ கொரி. ச, எ. நீ சறுக்கிவிழுந்து உன் மண்பாண்டம் உடைந்து அதில் இருக்கும் பரிமளதயிலம் எளிதாய் ஊற்றுண்டுபோகக் கூடுமே. ஆ உனக்கு வெகு சத்துருக்கள் உண்டு. அவர்கள் வெகு பலசாலிகளாய் இருக்கிறார்களே. சாத்தான் நெருப்பைத் துப்பி தன் ஆயிரம் சூட்சவித்தைகளால் உன்னைச் சோதிக்கிறானே. உலகம் ஆயிரம் பொல்லாத மாதிரிகளால் உனக்கு வேசாறலுந் தடுக்கலும் வருவிக்கிறதே. மாமிசமும் இரத்தமும் நயங்காட்டி இழுக்குந் தன் நாகசுரத்தை உன் செவிக்கு இன்பமாய் ஊதுகிறதே. ஆனபடியால் நான் உனக்குச் சொல்லும் யோசனையைக் கேள். விழித்திருந்து செபம் பண்ணு. இந்த ஒன்று அற்றால், எல்லாம் அற்றுப்போய் விடும். நான் கிறிஸ்துமார்க்கத்திலே நிலைத்திருக்காவிட்டால், நான் கிறிஸ்தவனாகின காரியம் என்ன. அதில் உறுதியாய் நிலைத்திராவிட்டால், அதைவிடக் கிறிஸ்தவனாகாதிருப்பது தாவிலை. பின்வாங்கி விழுந்த கிறிஸ்தவனுக்கு வரும் ஆக்கினையைப் பார்க்க அஞ்ஞானிக்கு வரும் ஆக்கினை லேசாயிருக்கும். ஆகையால் என் பராபரனே, நான் கொண்டிருக்கிறதை உறுதியாய்க் கைக்கொள்ளத்தக்க கவலையை எனக்குத்தாரும்.

நான் இன்னம் ஒன்று சொல்லுகிறேன், கேள். பொல்லாதவனாகிறது மகா கெட்டது. அதில் நிலைத்திருக்கிறது அதிலுங் கெட்டது. மெய்ப்பொருளை விட்டு விலகுகிறதை விடப் பெரிய கேடு உண்டோ. இந்த மெய்ப்பொருளோடே மறுபடியும் ஐக்கமாகாமல் இருக்கிறது அதிலுங் கேடானதல்லவோ. நீ பாவஞ் செய்தால் உனக்காக நான் பரிதபிக்கிறேன். மனுஷனாய்ப் பிறந்தவனுக்குத் தப்பிதமுண்டு. உன்னைப்போல் நானும் விழ நேரஞ்செல்லாது. என்னை நிறுத்தப்பண்ணுகிறது பராபரனுடைய கை. நீ விழுந்த குழியிலிருந்து உன்னைத் திரும்ப இழுக்க அந்தக் கையையே உனக்கு நீட்டிக் கொடுக்கிறேன். நீ அதைப் பிடிக்கமாட்டாயா. அப்படியானால் நான் இனி உன்மேல் மன உருக்கமாய் இருக்கக் கூடாது. பாவத்திலே நிலைகொண்டிருக்கிறது பிசாசின் குணமாகிறது. பாவத்தில் விழுகிறது உன்னை ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாக்காமல், அதில் நிலைத்திருக்கிறதே உன்னை நரகத்தீர்ப்புக்குள்ளாக்குகிறது. ஆ என்பராபரனே, என்னைப்பாவத்தில் விழ ஒட்டாதேயும். நான் விழுந்தேனேயானால் உமது கிருபையின் கரத்தை உன்னதத்திலிருந்து எனக்கு நீட்டி என்னைத் திரும்ப எடுத்து நிறுத்துவீராக.



ம. தியானம்.

## பராபரனுடைய பிள்ளைகளுக்குப் பூமியிலே உண்டாயிருக்கிற பாக்கியமான நிலைமையைப் பற்றியது.

பூமியிலேதானே இரண்டு மோட்சம், இது போதாதோ.

**ப**ராபரன் இரண்டு மோட்சங் கொடுக்கக் கூடாதென்று ஒருவன் சொன்னால், அது நல்ல சொல்லல்ல. உலகத்தாருக்குப் பூமியே மோட்சம். கிறிஸ்தவனுக்கு அது நரகம். பராபரனிடத்தில் ஒரு ஆசீர்வாதத்துக்கு மேல் அதிகமில்லையா. உலகத்தின் மக்களுக்கு அவர் ஐசுவரியங் கொடுக்கிறதுபோல் தம்முடைய பிள்ளைகளுக்கும் அதைக் கொடுக்காதபடிக்கு அவருடைய ஐசுவரியத்துக்குக் குறைவுண்டா. உலகத்தின் மக்கள் மாத்திரம் பெரிய தனத்திலும் செல்வத்திலும் இருக்கிறதோ. இல்லை இல்லை. பராபரன் ஐசுவரியமுள்ளவர். அதை நாம் அறிந்திருக்கிறோம். இந்த மகாராசன் விசுவாசிகளுக்குத் தகப்பனாயிருக்கிறார். இதை நாம் நம்பியிருக்கிறோம். அவர் தம்முடைய பிள்ளை எப்போதும் சிறுமைப்பட ஒட்டாரென்கிறதை நாம் பார்த்திருக்கிறோம்.

நான் சொல்லுகிறதேதென்றால், உலகத்தாருக்கு ஒரு மோட்சங்கூட இல்லை. கிறிஸ்தவனுக்கோ இரண்டு மோட

சம் உண்டு. மோட்சம் எங்கேயோ அங்கே சந்தோஷமும் உண்டு. உலகத்தின் மக்களுக்கு நல்ல சந்தோஷம் உண்டா. நகைப்பும் மனமகிழ்ச்சியும் ஒன்றுதான் என்று சொல்லப் போகாது. அநேகருடைய வாய் சிரிப்பால் நிறைந்திருக்கையில் இருதயம் அழுதுகொண்டிருக்கிறது. இருதயம் கீழாக அடைபட்டு மேலாகத் திறந்திருக்கிறது. உயர இருந்து வராத காரியம் இவர்களுக்கு ஒரு சந்தோஷத்தையுங் கொடுக்காது. உலகத்தாருடைய பக்தி நிறைய வாய்க்கு இதமான பதார்த்தங்கள் இருந்தால், அது தான் அவர்களுக்கு மோட்சம். அவர்கள் வியாதிப்பட்டுச் சாப்பிடக் கூடாமற் போனால், அப்போது அவர்களுக்கு மோட்சம் ஏது.—வல்லமை, கீர்த்தி, மேன்மை, அவர்களுடைய மோட்சமானால், அவர்கள் ஆமானைப்போலே மோட்சத்தைவிட்டு நரகத்திலும், சங்கையைவிட்டுச் சின்னத்தனத்திலும் விழுவோம் என்கிற பயம்பிடித்து எப்போதுந் திரியவேண்டியிருக்கிறது. இந்தப்பயம் அவர்களுக்கு நரகமாச்சே.—பணப்பெட்டி அவர்களுக்கு மோட்சமா. ஆ, துருப்பிடியாமலும் திருடன் திருடாமலும் பத்திரம் பண்ணக் கூடாத காரியம் ஒன்றுக்கும் உதவாத மோட்சந்தானே. அவர்கள் இதுகளை எல்லாம் விட்டுப்போக வேண்டியவேளையில் அவர்கள் மோட்சம் எங்கே இருக்கும். பொல்லாதவனுடைய மோட்சத்தை ஒரு துண்டு காக்காய்ப்பொன்னுக்கு முதலாய் நான் வாங்கமாட்டேன். அவன் ஆத்துமமே நரகமாயிருக்கிறது. அதில் ஆண்டுகொண்டிருக்கும் பாவம் எத்தனையோ, அத்தனை கொடிய பேய்கள் அதில் குடியிருக்கிறது. அவன் சரீரமும் அதைப்போலவே கேடாயிருக்கிறது. அவனுடைய ஒவ்வொரு எலும்பின் மேலும் ஒவ்வொரு நரம்பின் மேலும் ஒரு பேய் ஏறிக்கொண்டிருக்கிறது. மெய்தான், அது கண்ணுக்குத் தெரியாது.

நீயும் உன் மோட்சமும் கெட்டாய், போ. எனக்கு உத்தமமான இரண்டு மோட்சம் உண்டு. ஒன்று எனக்கு இப்போது இருக்கிறது. பின்னொன்று வரக்காத்து நம்பியிருக்கிறேன். இங்கே இம்மையிலே என் இருதயமே என் மோட்சம். பராபரன் தமது கிருபையோடே எங்கே வாசம் பண்ணுகிறாரோ அங்கேதான் மோட்சம் உண்டாயிருக்கும். ஏசா. ௫௭, ௰௫. பராபரன் என்னோடேகூட என் சவக்குழியில் இறங்கினால், அப்போது அந்தக்குழியிலே என் மோட்சம். அவர் என்னோடேகூட நரகத்தில் இறங்கினால், நரகமே என் மோட்சம். பராபரனோ விசுவாசத்தினால் என் இருதயத்திலே வாசம்பண்ணுகிறார். எபேசி. ௩, ௰௭. நான் கிறிஸ்து



வோடேகூட பரம சஞ்சாரத்தில் வைக்கப்பட்டாயிற்று. எபேசி. ௨, ௬. என் சுதந்தரத்தின் அச்சாரமாகிய பரம ஆவி எனக்கு உண்டு. ஜீவ அப்பமும் ஒளிப்பிடமான மன்னாவுமாகிய பரம போசனம் எனக்குண்டு. யோவான் ௬. என்னைக் கைகளில் ஏந்தும் பரிசுத்த தூதருடைய பரம காவல் எனக்குண்டு. சங். ௯௧. நீதியின் சூரியனாலே தரிப்பிக்கப்பட்ட பரம வஸ்திரம் எனக்கு உண்டு. பரம மணவாளனாகிய இயேசு எனக்கு உண்டு. இப்படியாக மோட்சத்தின் முன்ருசி எனக்கு அகப்பட்டது. அது துளிதுளியாய் என் இருதயத்தில் இறங்குகிறது. நாள்தோறும் பரமண்டலத்திலே எனக்குப் பொக்கிஷங்களைக் கூட்டிச் சேர்க்கிறேன். மத். ௬, ௰௯. இன்னம் அதிகமானதென்னவென்றால் என் இருதயம் மாத்திரமல்ல, என் கால்களும் பரமண்டலத்திலே இருக்கிறது. பிலிப். ௩, ௨௰.

பராபரனுடைய பிள்ளைகளுக்குப் பூமியிலேதானே மோட்சம் அகப்பட்டிருக்கிறதென்பதை நீ இன்னம் ஒத்துக்கொள்ள மாட்டாயா. நரகம் அவர்களுக்கு இங்கேயிருக்கிறதென்பதை நான் அறியேன். நரகத்தின் ஒலிமுகவாசல்கள் எதிர்த்தாலும், அவர்களை மேற்கொள்ளமாட்டாது. நான் பராபரனுடைய பெலத்தினால் சகல நரக சத்துருக்களையும் மிதித்து நசுக்குகிறேன். நரக வியாகுலம் என்னோடே போராடினால், அதைப் பரம சந்தோஷமாகப் பாவிக்கிறேன். அது பரமண்டலத்திலிருந்து தானே வருகிறது. வியாகுலம் பரமண்டலத்திலே இருந்து வருமா. பராபரன் அதிலே என்னோடுகூட இருந்து, அந்த வியாகுலத்தைப் பரம ஆறுதலினாலே தித்திப்பாக்குகிறார். ஆகிலும் எனக்கு ஒரு நரகம் இங்கே பூமியிலே இருக்கிறது. அது பாவந் தானே. சபிக்கப்பட்டவர்கள் நரக வேதனையினால் எப்படி உபாதிக்கப்படுகிறார்களோ, அப்படியோ பாவம் என்னை உபாதிக்கிறது. நான் அதைப்பற்றிப் பவுலோடேகூடத் தினம் பெருமூச்சுவிட்டு: ஆர் இந்த மரண சரீரத்துக்கு என்னை நீங்கலாக்கிவிடுவான் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறேன். ரோ. ௭, ௨௪. ஆ என் மாம்சத்தின் இந்தக் கறைப்பட்ட வஸ்திரத்தை உரிந்துவிட்டு தூய்மையான வெண் வஸ்திரத்தை உடுத்திக்கொள்ளும் நாள் எப்போது வருமோ. அபி. ௭, ௯. அந்தக்காலத்தைக்காண ஒவ்வொரு நாழிகையுங் காத்துக்கொண்டிருக்கிறேன். இந்த நிமிஷமே அது வந்தால் நாவிலா என்கிற ஆசை எனக்குண்டு. அது என் மோட்சத்தை என்னண்டைக்குக்கொண்டு வரும். பராபரனே, அதற்கு உதவிசெய்யும்.

௰௧. தியானம்.

## காலத்தைப் பிரயோசனமாய் உபயோகித்தலைப் பற்றியது.

*கர்த்தரே, இந்தக்காலம் உம்முடையதும் என்னுடையதுமாயிருக்கிறது.*

இப்படி ஒரு கன்னியாஸ்திரி கோவில் சந்நிதியில் பாடினாள். அப்படியே இருக்கும். கர்த்தரே, இந்தக்காலம் உம்முடையதும் என்னுடையதுமாயிருக்கிறதென்று நானும் அதற்கு ஒத்துப் பாடுகிறேன். உலகமே, அது உன்னுடையதல்ல. ஆகையால் உனக்கு ஊழியஞ் செய்வேனோ. அதற்குப் பரிச்சேதம் எனக்கு நேரம் இல்லை. காலம் என்னுடையதும் என் பராபரனுடையதுமாயிருக்கின்றது. காலத்தைவிட தீவிரமாய்க் கடந்துபோகிறதெது. அதின் முடிவு நித்தியம். நான் நல்ல ஊழியஞ் செய்தால், முடிவு நல்லதாயிருக்கும். ஆகாத ஊழியம் ஆகாத முடிவு. நான் பராபரனுக்கு ஊழியஞ் செய்தால், என் நித்தியம் பரமண்டலத்திலே இருக்கும். உலகமே, உனக்கு ஊழியஞ் செய்தால், என் நித்திய காலங்கள் நரகத்திலே இருக்கும். இப்படியிருக்க, உனக்கு ஊழியஞ் செய்ய இன்னம் ஆருக்கு மனது வரும். உலகமே, எனக்கு மிகவுங் கஸ்தியாயிருக்கிறது ஏதென்று அறிவாயா. நான் வெகுகாலங்களைப் பராபரன் கையிலே திருடி உன் ஊழியத்திலே பின்னிட்டேன் என்கிறதே எனக்கு விசனம். ஆ நான் இரத்தக்கண்ணீரோடேயாவது அதைத் திரும்ப வாங்கக் கூடுமானால் எவ்வளவு பாக்கியம். பொன்னும் வெள்ளியும் எனக்கு இல்லை. நீ இன்னம் என்னை வாதிக்க வருகிறாயோ.

இன்னம் ஒன்று சொல்லுகிறேன், கேள். அந்தக் கன்னியாஸ்திரி சரியாய்ப் பாடவில்லை. அவள் கர்த்தாவே, காலம் என்னுடையதல்ல, உம்முடையது என்று பாடவேண்டும். ஏனென்றால் ஒரு நிமிஷமாகிலும் என் கையில் இருக்கவில்லையே. இன்று உனக்கு ஊழியஞ் செய்வேனோ. இந்த நாள் பராபரனுடையது ஆச்சே. இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதேயுங்கள். எபிரே. ௩, ௭. ௮. நீ நாளை மட்டும் பொறுக்க மனங் கொள்ளுவாயா. நான் நாளை எங்கே இருப்பேனென்று யார் அறிவார். இன்றைக்கு ஒரு கல்லின் மேல் ஏறிக்கொண்டு நிற்கிறேன். நாளை அந்தக் கல்லுதானே என் கல்லறையின் மேலே வைக்கப்பட்டிருக்கலாம். நீ இன்னம் எவ்வளவு பொறுமையோடே காத்திருந்தாலும், உனக்கு ஒரு



மணிநேரத்தையாகிலும் விட்டுக்கொடுக்க எனக்குச் சகிக்காது. நாள்கள் எல்லாம் பராபரனுடையதாயிருக்கின்றன. உங்களில் ஒருவனும் பாவமோசத்தினால் கடினப்பட்டுப் போகாதபடிக்கு, "இன்று" என்கிற சத்தங் கேட்கிற மட்டும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொள்ளுங்கள். எபிரே ௩, ௰௩. உலகமே, நேரமும் காலமும் என்னுடையதல்ல ஆகையால் உனக்கு ஊழியஞ் செய்ய என்னால் கூடாது. என் பராபரன் அதற்கு எனக்கு உத்தரவு கொடுப்பாரோ என்று நீ அவரைக் கேள். அவர் உத்தரவு கொடாவிட்டால், நீ என்னை அலட்டாதே.

௰௨. தியானம்.

## கிறிஸ்தவனுடைய மனோதைரியத்தைப் பற்றியது.

* துணிந்த படையே வெல்லும்.

உலகம் அதை ஒத்துக்கொள்ளுகிறது. பொல்லாதவன் துணிந்து பாவஞ் செய்கிறான். பராபரனுடைய இரக்கத்தை முன்னிட்டுத் துணிகிறான். ஆ எத்தனைபேர் தேவகிருபையென்னும் மறைவிடந் தங்களுக்கிருக்குதென்று நினைத்துக்கொண்டு பாவங்களைச் செய்யத் துணிந்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு நான் துணியேன். அதினால் வரும் பலன் கேடானது. கிருபையை முன்னிட்டுப் பாவஞ் செய்கிறவனுக்கு உக்கிரமுங் கோபமும் கூலியாகும். கிருபையை முன்னிட்டுப் பாவஞ் செய்கிறவன் இரட்டிப்பான பாவஞ் செய்கிறான். தன் ஆத்துமத்தைக் கெடுக்கத் துணிகிறது போதாதா. பராபரனுடைய கிருபையையும் போக்கடிக்க வேண்டியதென்ன. பராபரனுடைய கிருபை பாவத்துக்கு அனுசரணையல்லவே. அது பாவத்துக்கு முறிவல்லவோ.

மற்றப்படி துணிந்த படை வெல்லும் என்கிறதை நானும் மெச்சிக்கொள்ளுகிறேன். தளர்ந்த மனதுள்ள கிறிஸ்தவனை நான் மெச்சிக்கொள்ளேன். கிறிஸ்தவர்கள் போராட வேண்டும். போராடுகிறவன் தைரியம் விடாமல் இருக்க வேண்டும். துணியாதவன் வெல்லவும் மாட்டான். உலகமே, உனக்கும் அது சம்மதியா. அப்படியானால் துணிந்துவா. நானும் அதற்குத் துணிகிறேன். ஆதாயம் வருமென்கிற நம்பிக்கை இல்லாதிருந்தால், நஷ்டம் வரும் என்கிற பயமும் இல்லை. நீ எனக்கு ஒன்றுங் கொடுக்கவும் மாட்டாய். என்னை விட்டு ஒன்றையும் எடுத்துக்கொள்ளவும் மாட்டாய். உனக்கே

ஒன்றும் இல்லையே. நீ என்னத்தை எனக்குக் கொடுக்கப்போகிறாய். எனக்கு ஒன்றுமில்லாதிருக்கையிலே நீ என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்போகிறதென்ன. நம்மிருவருக்கும் இருக்கிறதெல்லாம் பராபரனுடையது அல்லவா. அவர் தமக்குப் பிரியமானவனுக்கு அதைக் கொடுக்கிறார், எடுத்துக்கொள்ளுகிறார், அவருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

பிசாசே, என்னிடத்தில் வர உனக்குத் தைரியம் இருக்கிறதா. வா, பார்ப்போம். உன் பெலன் பெரிது; என் பெலன் அதிலும் பெரிது. வல்லமையை சருவவல்லமை மேற்கொள்ளுகிறது. நீ ஒரு சிங்கம், ஆகிலும் கட்டப்பட்டிருக்கிறாய்; கர்ச்சிப்பாய், விழுங்க உன்னால் கூடாது. நீ ஒரு நாய், ஆனால் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறாய்; குலைப்பாய், கடிக்க உன்னால் கூடாது. நீ படை கூட்டிப் புறப்படுகிறாய், வெகு திரளான சேனைகளை உன் பிறகே கூட்டிக்கொண்டுவருகிறாய், ஆனால் என்னோடிருக்கிறவர்கள் எனக்கு எதிரியானவர்களைப் பார்க்க அதிகம். ௨ இராசா. ௬, ௰௬. எனக்கு விரோதமாகப் பாளயம் இறங்குகிற அநேகம் ஆயிரம் பிசாசுக்களுக்கு நான் பயப்படேன். சங்கீ. ௩, ௬. அவர்கள் தேன் ஈக்களைப்போல் என்னை வளைந்துகொண்டாலும், கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களை வெட்டுவே[illegible] ௱௰௮, ௰௨. நீ துஷ்டனாயிருக்கிறாய். நீ எனக்கு ஒரு [illegible]மும் வருவிக்கக் கூடாதபடியினாலே, உன் பொல்லாப்[illegible] நான் ஒரு பொருட்டாய் எண்ண வேண்டியதென்ன. உ[illegible]தலை நசுக்குண்டு போயிற்று. அத்தோடே உன் வல்லமையும் போயிற்று. நீ துஷ்டனாயிருந்தாலும் நான் அசைவேனோ. நீ தந்திரக்காரனாயிருந்து ஆயிரம் விதமான உன் வித்தைகள் மேல் நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கிறாய். ஞானம் தந்திரத்தை மேற்கொள்ளும். எல்லா ஞானத்தின் பொககிஷங்களையும் அடக்கிக்கொண்டிருக்கிறவரை அறிவாயா. கொலொ. ௨, ௧. அவர் பராபரனால் எனக்கு ஞானமாக்கப்பட்டார். ௧ கொரி. ௧, ௩௰.

மரணமே, நீயும் வருகிறாயா. வா, நான் துணிந்திருக்கிறேன். உன்மேல் எனக்கு மெத்தப்பிரியம். நான் உன்னை நன்றாய் அறிவேன். நான் உன்னை என்னோடே கூட பந்தியில் வைத்துக்கொள்ளுகிறேன். என் கட்டிலிலே உன்னையும் படுக்க வைக்கிறேன். நான் தனித்திருக்கும்போது உன்னோடே பேசுகிறேன். என் தோட்டத்திலே உன்னோடே சந்தோஷப்படுகிறேன். நான் தினந்தினஞ் சாகிறபடியால், சாவு என்னிடத்தில் நன்றாய்ப் பழகிப்போயிற்று. நீ எனக்கு ஒன்றுஞ் செய்யாய். நீ கசப்பு என்கிற பேர் கொண்டிருந்தும்,



உன்னை இத்திப்பு என்கிறேன். நீ வெறுப்பு என்கிற பேர் கொண்டிருந்தும் உன்மேல் எனக்கு மிகுந்த விருப்புண்டென்கிறேன். நீ வேண்டாம் போ என்கிற பேர் கொண்டிருந்தும், நீ வேண்டும் வா என்கிறேன். உனக்கு மரணம் என்று பேர். நான் உன்னைச் சீவன் என்கிறேன். ஒருவரையுந் தப்பவிடுகிறதில்லையென்று உன்னைக் குறித்துச் சொல்லப்படக்கொள்ள, என்னைத் தப்பவிடு என்று உன்னை நான் கேட்க வேண்டியது என்ன. நான் மற்ற மனிதரைப் பார்க்கிலும் உனக்கு உத்தமமானவனல்ல. வா, நீ என்னிடத்திலேயிருந்து எதை எடுப்பாய். சீவனையா. சுகமாய் எடு. எப்போது வேண்டுமோ அப்போது எடு. அது மேன்மையுள்ளதாயிருந்தாலும் பிரயாசமும் வீணுந் தானே. சங்கீ. ௯௰, ௰. சரீரத்தை எடுத்துக்கொண்டுபோக வேண்டுமென்றிருக்கிறாயா. இந்த மரண சரீரத்திலிருந்து என்னை மீட்டு இரட்சிக்கிறாய் என்பதற்கு உன்னைத் தோத்திரிக்கிறேன். நீ என்னைப் பறித்துக்கொண்டுபோகிறதினால், என் பெண்சாதி பிள்ளைகள், உற்றார் உறவின் முறையாருக்குச் செய்யக் கூடியது என்ன. என்னை விடப் பராபரன் அவர்களுக்கு அதிகம் அல்லவா. உன்னோடே போகத் துணிவதினால் எனக்கு அநேகம் பலனுண்டே. நீ என்னைப் பிரயாச நிலைமையிலே இருந்து இளைப்பாறும் நிலைமைக்குக் கொண்டுபோகிறாய். துக்கத்தை ஒழித்துச் சந்தோஷத்திற்குட்படுத்துகிறாய். சாவு எனக்கு ஆதாயம். பிலிப். ௧, ௨௧.

பராபரன் வந்தால் என் துணிவைப் பராபரனிடத்திலேயுங் காட்டுவேனோ. நன்றாய்க் காட்டுவேன். அதினால் அதிகப் பலன் கிடைக்கும். சுவாமி நீர் என்னைப் பயமுறுத்த மாட்டீர். எனக்குக் கிடைக்க வேண்டியது முடிவில் கிடைக்கும். கோபமுகத்துக்குள்ளே குளிர்ந்த முகதரிசனமும், சிங்கத்தின் தோலுக்குள்ளே தகப்பனுடைய இருதயமும் எனக்குக் கிடைக்கும். நீர் வேஷம் மாறி உம்மைக் காட்டுகிறீர். நீர் சத்தங் காட்டி பயம் வருவிக்கிறீர். ஒரு துளி கண்ணீர் உமக்குமுன் கீழே விழுந்தால், அதை எடுத்து அழுகிற உமது பிள்ளையண்டை ஓடிவந்து, அதைக் கட்டி முத்தமிட்டு ஆசீர்வதிக்கிறீர். கர்த்தரே, நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப்போக ஒட்டேன். ௧ மோசே ௩௨, ௨௬.

௰௫. தியானம்.

## குணப்பட வேண்டிய காலத்தைப் பற்றியது.

பேய்க்குக் கொடிமுந்திரிகை ரசமும், பாரபரனுக்கு அதின் அடிவண்டலுமா.

இது நியாயமா. பேய்க்குப் பழுதற்றதையும் பாரபரனுக்கு ஊனமானதையுங் கொடுக்கிறது நியாயமா. பேய்க்குச் சுகமுள்ளதையும் பாரபரனுக்கு வியாதிப்பட்டதையும் கொடுக்கிறது நியாயமா. பேய்க்கு மலர்ந்த பூவையும் பாரபரனுக்கு உலர்ந்த பூவையுங் கொடுக்கிறது நியாயமா. பேய்க்கு நிசமானதையும் பாரபரனுக்கு நிசமற்றதையுங் கொடுக்கிறது நியாயமா. பேய்க்கு உன்னுடைய மகா செழுமையான நல்ல இளந்தைப் பருவத்தையும், பாரபரனுக்கு ஊனமும், நாற்றமும், முடமும், அழுகலும், நோய் கொண்டதும், திரங்கிப் போனதுமான உன் விருத்தாப்பியத்தையுங் கொடுக்கிறது நியாயமா. உனக்கு நரைமயிர் கிளம்பும் மட்டும் உன் தெய்வபத்தியை நிறுத்திவைக்க வேணுமென்றிருக்கிறாயா. அந்த மட்டும் நீ பிழைத்திருப்பாயென்று அறிவாயா. கிழமானபோது எல்லாம் ஊனமும் நாற்றமுமாய்ப்போகும். தேவபத்தியுங்கூட அப்படித்தானாகும். வியாதியற்றதும் பழுதற்றதுமானது தனக்கு இருக்க கால்ஊனமானதையும் நசல் கொண்டதையும் ஆண்டவருக்குப் பலியிடுகிறவன் சபிக்கப்பட்டவனென்று நீ அறியாயா. மல்கி. ௧, ௰௩. ௰௪.

உன் சிநேகிதன் ஆர். பாரபரனோ, பிசாசோ. சிநேகிதனுக்கு நல்லதாயிருக்கிறதைக் கொடுக்கத் தேவை இல்லையா. உனக்கு நன்மையானதைக் கொடுக்கிறதார். பாரபரனோ பிசாசோ. உனக்கு நன்மையானது எது. பரமண்டலமோ நரகமோ. உனக்குப் பாரபரன் அனுப்புகிற சிலுவை என்கிற சொற்ப உபத்திரவம் அத்தனை நன்மையாயிருந்தும், நீ ஏன் அதற்காக முறுமுறுக்கிறாய். ஆகையால் நீ கொடுக்கவேண்டுமென்றால் பாரபரனுக்கு நன்மையானதைக் கொடு. அடிவண்டலை, அற்பமானதைக் கொடுத்தால் ஒன்றுக்கும் உதவாதே. உன் விருத்தாப்பியமான அடிவண்டல் பாரபரனுக்கு என்னத்துக்கு. நீ பாவத்துக்கு இனி ஊழியஞ் செய்யப் பெலன் அற்றபிறகு, நீ உன் சிறுவயது முதல் வேசித்தனம் விபசாரம்பண்ணி, மரியாதையில்லாமல் தின்று, வெறியெடுக்கக் குடித்து, சண்டைபோட்டு, கள்ளுக்கு நின்று, அநியாய வட்டிவாங்கி, பிசினித்தனமாயிருந்துவிட்டு, இனிமேல் இப்படியிருக்கக் கூடாதென்று கண்ட உடனே, பாரபரனுக்கு



ஊழியஞ் செய்யத் தொடங்க வேண்டுமென்றிருக்கிறாயோ. பேயுங் கூட உன்னைத் தள்ளிவிட்ட பிறகு பாரபரன் உன்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறாயோ. சாத்தான் கொள்ளவேண்டிய வேலையெல்லாம் உன்னிடத்தில் வாங்கிக்கொண்டு கழித்துப்போட்ட அடிமையாகிய நீ அப்புறம் பாரபரனுக்கு என்னத்துக்கு.

ஆ நான் அதற்கான ஆலோசனையை உனக்குச் சொல்லுகிறேன், கேள். நீ வியாதிப்படும் மட்டும் உன் குணப்படுதலை நிறுத்திவைக்காதே. நீ இன்னம் பாவஞ் செய்யக் கூடியவனாயிருக்கையிலேயே நீ குணப்பட்டு நல்லவனாகத் தாமதியாதே. உன் நடக்கைகளைச் சீர்ப்படுத்த மரணம் மட்டும் அயர்ந்திராதே. சிராக். ௰அ, ௨௨. ஏற்கனவே உன்னை முஸ்திப்பு பண்ணிக்கொண்டு பயணப்படு. ஒரு வேளை நீ பிந்தி வந்து சேருவாய். வாசல் சாயங்காலமாகும்முன் பூட்டப்பட்டுப்போகலாம். கடை திறந்திருக்கும்போதே கொள்ள வேண்டியதைக்கொள்ளு. கதவு இன்னந் திறந்திருக்கையிலேயே ஓடு. ஆ, இன்னம் எவ்வளவு நேரம் திறந்திருக்குமென்று ஆர் அறிவார்.

௰௬. தியானம்.

## எத்தனங்களைக் கையாடுகிற விதத்தைப் பற்றியது.

கண் உயரட்டும், கை தொடட்டும்.

பாரபரன் நம்முடைய கையில் கொடுக்கிற எத்தனங்களை அற்பமாய் எண்ணப்போகாது. ஆனால் நம்முடைய மனதை அதின்மேலே பற்றுதலாய்விட ஒண்ணாது. பாரபரன் கொடுக்கிற எத்தனங்களைக் கையாடுகிறபோது, அது நம்மிடத்தில் தகுந்த பெலன் செய்யும்படிக்கு அதற்குப் பெலனையும் ஆசீர்வாதத்தையும் கொடுக்கிற பாரபரன் மேலே நோக்கமாய் இருக்கவேண்டும். கொஞ்சம் சாப்பாடு நமது சீவனைப் பிழைப்பூட்டுகிறது. ஆகிலும் அதற்குப் பெலன் கொடுக்கிறவர் பாரபரன். ஒரு பச்சிலை மூலிகை வியாதியைத் தீர்த்து புண்ணை ஆற்றுகிறதுண்டு. பாரபரனால் அதற்கு அந்தப் பெலன் வந்திருக்கிறது. ஒரு வாசனையான பூ நம்மை முசிப்பாற்றுகிறது. அதற்குப் பெலன் பாரபரனால் உண்டாயிருக்கிறது. ஒரு நல்ல சிநேகிதன் நம்மை ஆற்றித்தேற்றுகிறான். அந்த ஆறுதலும் தேறுதலும் எனக்குப் பலிதமாக வேண்டு

மானால், பராபரனுடைய பெலன் அத்தோடு கூடி இருக்க வேண்டும். அதைப்பற்றித்தான் கண் உயரட்டும், கை தொடட்டும் என்று சொல்லப்படுகிறது. கண் பரமண்டலத்தை நோக்கி உயரவேண்டும். கை பாத்திரத்தைத்தொடவேண்டும். அப்போது அந்த ஆகாரம் ஆசீர்வதிக்கப்படும், ருசிகரமும் ஆகும். வானத்தை நோக்கி, பாத்திரத்தை எடுத்து, நல்ல மனதோடே அவிழ்தத்தை வாங்கினால், மருந்து பெலன் செய்யும். எத்தனங்களைக் கட்டளையிடுகிற பராபரனை நோக்காமல், எத்தனங்களையே நோக்கிப்பார்க்கிற மனுஷர் எத்தனங்களைத்தானே தங்கள் தெய்வமாக்குகிறார்கள். அவர்கள் சபிக்கப்பட்டவர்கள். நீ சாப்பிடும் பொழுதெல்லாம் ஒவ்வொரு பிடி அன்னமும் உன்னைத் திருப்தியாக்குகிறதற்கான பெலனைப் பராபரன் அதற்குக் கொடுக்கிறாரென்று நீ விசுவாசிக்காவிட்டால், அந்தச் சாப்பாட்டை உன் தேவனாக்குகிறது போலாயிற்று. சாப்பாடு உனக்கு இருக்கும் மட்டும் உன் சுவாமி சாகாமல் இன்னம் உயிரோடிருக்கிறாரென்கிற துணிவோடே இருக்கிறாய். சாப்பாட்டுக்கு இனி வழியில்லை என்று கண்டபோது, உன் மனம் லோடாயப்பட்டு உன்னைப் பிழைப்பூட்டும் சுவாமி செத்தாரென்று நீ நினைக்கிறாய் அல்லவா.

நான் பராபரனைச் சோதிக்கிறவன் ஆகாதபடிக்கு அவர் எனக்குக் கொடுத்திருக்கிற எத்தனங்களைக் கையாடுகிறேன். ஆகிலும் அந்த எத்தனங்களினால் நான் சுவாமியை மறுதலிக்காதபடிக்கு அதின்மேல் என் நம்பிக்கையை வைக்காதிருக்கிறேன். பராபரன் ஒரு வாகுவழியில்லாமல் எனக்கு ஒத்தாசை பண்ணலாம். அவருக்கு அதற்கான வல்லமை ரம்ப உண்டு. பச்சிலை மூலிகைகளாலும், பற்றுகள் என்கிலும் அவர்களுக்கு ஆரோக்கியத்தை உண்டுபண்ணாமல், ஆண்டவரே சகலத்தையுங் குணமாக்குகிற தேவரீருடைய வார்த்தையானது அவர்களுக்கு ஆரோக்கியத்தை உண்டுபண்ணும். சாலமோனின்ஞானம். ௰௬, ௰௨. எத்தனம் பராபரன் இல்லாமல் எனக்கு உதவவேமாட்டாது. அதற்கு அவ்வளவு பெலன் தன்னாலே தானே இல்லை. அவர்கள் தின்று திருப்தியாகாதிருப்பார்களென்று ஒசேயா ௪, ௰-ல் சொல்லியிருக்கிறது. ஆகையால் பராபரனைப் பற்றிப் பிடித்துக்கொண்டிரு. அதுவே உறுதி.



௰௫. தியானம்.

## பாவசங்கீர்த்தனத்தையும் குணப்படுதலையும் பற்றியது.

### சூட்சுமவித்தையும், ஆசைத்தணலும்.

இந்த இரண்டும் சேர்ந்திருக்கிறது எங்கே. ஏழை ஆயக்காரனிடத்திலே. அவனிடத்தில் ஐந்து வித்தைகளைக் கற்றுக்கொள்ளுகிறோம். அவன் தவப் பெருமூச்சு சுருக்கமானது. ஆனால் அவனைப்போல் மன உற்சாகமாய்ப் பெருமூச்சுவிட்டு, பராபரனே, பாவியாகிய என்பேரிலே கிருபையுள்ளவராகும் என்று கண்ணீர் சிந்தாமல் சொல்லக்கூடுகிறவன் ஆர். முதலாம் சூட்சுமவித்தை என்னவென்றால், அந்த ஆயக்காரன் பராபரனையும் பாவியையும் ஒன்றாய் இசைக்கிறதுதான். நீ பாவஞ் செய்கிறதினால் உன்னைப் பராபரனுக்குத் தூரமாக்கினாய். ஆனால் குணப்படுதலின்வழியாய்த் திரும்ப அவரண்டையில் கிட்டிச் சேருகிறாய். நீ நெருப்பையும் வைக்கோலையும் சேர்த்துவைத்தால், வைக்கோல் பற்றிக்கொள்ளாதோ. பராபரன் தமது கோபத்தினால் பட்சிக்கும் அக்கினி அல்லவோ. பாவிகள் தாளடிக் கூளமல்லவோ. ஆகிலும் பராபரனையும் பாவியையும் சேரவைக்கிறது விசுவாசம். ஏனென்றால் வியாதிக்காரனைவிட்ப் பரிகாரிக்குப் பிரியமானவன் இல்லையோ. அப்படிப்போல் குணப்படுகிற பாவியைவிட பராபரனுக்குப் பிரியமானவன் இல்லையென்று விசுவாசம் அறிந்திருக்கிறது.

அப்புறம் இரண்டாம் வித்தையாவது: நெருப்புந் தண்ணீரும் ஒன்றுக்கொன்று பகையாயிருக்கிறதுபோல், பாவமுங் கிருபையும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருந்தும், ஆயக்காரன் அவைகளை ஒன்றாய்ச் சேர்க்கிறான் என்பதே. பாவமும் கிருபையும் ஒத்துவருகிறது எப்படி. கிருபை பாவத்தை அடுத்திராமல், கோபமும் எரிச்சலும் பாவத்தை அடுத்திருக்கிறது. பாவி கிருபை பெற்றால் மோசேக்குச் சம்மதமா. ஆகிலும் விசுவாசம் தேவவசனத்தின் ஆறுதலான வாக்கியங்களாலே குணப்படுகிற பாவிகளுக்குக் கிருபையை அறிவிக்குமே. அதையே உறுதியாய்ப் பற்றி நிற்கிறது. எபேசு. ௨. ௮; மத். ௰௧. விசுவாசம் அதைத் தனக்குத் தக்குவித்துக்கொண்டு, குணப்படுகிற பாவிகள் எல்லாருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிருபை குணப்படுகிற பாவியாகிய எனக்குங் கிடைக்கவே கிடைக்குமென்று சொல்லுகிறது.

மூன்றாவது வித்தை என்னவென்றால்: சுவாமி, பாவியாகிய என்பேரிலே கிருபையுள்ளவராகும் என்று சொல்ல

அவன் அந்தக் கிருபையைப் பராபரனுக்குந் தனக்கும் நடுவாக ஒரு மத்தியஸ்தமாகத் தெரிந்துகொள்ளுகிறான் என்பதே. இங்கே சுவாமி, அங்கே பாவி, நடுவே கிருபை. பராபரன் தம்முடைய பட்டயத்தை உருவி பாவியை வெட்ட வருகிறார். பாவி குனிகிறான். கிருபை அவர் கையைப்பிடித்து வெட்ட வேண்டாமென்கிறது. ஆண்டவர் கோபிக்கிறார். பாவி அழுகிறான். கிருபை அமர்த்தி ஆற்றுகிறது. இப்படியிருக்கையில் நீ பராபரனுக்கும் உனக்கும் நடுவிலே உன் கிரியையோடு உட்படாதே. ஏனென்றால் உன் கிரியையினால் நீ சம்பாதித்தது மரணமேயொழிய உதவக்கூடும் எத்தனம் உன்னிடத்திலே பரிச்சேதம் இல்லை. ஆகையால் உனக்குள்ளே முற்றிலும் மனமடிவாய் இரு. பராபரனுடைய இரக்கத்தில்மாத்திரம் உண்மையாய் ஒட்டிக்கொண்டிரு.

நாலாவது வித்தை என்னவென்றால், அந்த ஆயக்காரன் தேவ கிருபையை இயேசுவினிடத்தில் மாத்திரந் தேடினான் என்பதே. பாவியாயிருக்கிற என்மேல் கிருபையாயிரும் என்றான். அதாவது, தேவரீர் கிருபையின் சிங்காசனமாக ஸ்தாபித்த மேசியாவைப் பற்றும் விசுவாசத்தால், அவருடைய இரத்தத்தை முன்னிட்டு என் பாவத்தைப் பொறுத்துக்கொள்ளும் என்பதுதானே. ஆதலால் ஒரு அர்ச்சியசிஷ்டனும் உனக்குக் கிருபை சம்பாதிக்கக் கூடாது. இயேசுவினிடத்தில் மாத்திரந் தேவ கிருபை இருக்கிறது. இயேசுவைப் பற்றிப்பிடிக்கிறவன் தேவ கிருபையைப் பற்றிப் பிடிக்கிறான். ஆ, நீ இயேசுவின் காயங்களைப் பராபரனுக்குக் காண்பித்தால், அவர் மனமுருகி உன்மேல் கிருபையாயிருப்பார். ஆகையினாலே இயேசுவைப் பற்றிப்பிடி. பாவம் உன்னிடத்தில் இருக்கிறது; நீதி அவரிடத்திலே இருக்கிறது. உன்னிடத்தில் சாபம் இருக்கிறது; அவரிடத்தில் ஆசீர்வாதம் இருக்கிறது. உன்னிடத்தில் மரணமும் நரகமும் இருக்கிறது; அவரிடத்தில் ஜீவனும் மோட்சமும் இருக்கிறது. நீ பட்ட கடனைவிட அதிகமாய்க் கொடுக்க அவரால் ஆகும். அவருடைய தேவ இரத்தத்தின் ஒரு துளி உன் பாவத்தையும் சர்வலோகத்தின் பாவத்தையும் நிவர்த்திபண்ணப்போதும்.

கடைசியானதும் வெகு சிறப்புள்ளதுமான ஆயக்காரனுடைய ஐந்தாம் வித்தையேதென்றால்: அவன் பாவசங்கீர்த்தனத்தையும் பாவமன்னிப்பையும் ஒரு சின்ன பெருமூச்சில் அடக்கிப்போடுகிறான் என்பதே. பாவியாகிய என் பேரிலே, அல்லது ஏழைப்பாவியாகிய நான் என்பதே பாவ அறிக்கை. கிருபையாயிரும், உறவாகும் என்பதே பாவமன்னிப்பு. அவன் நல்ல பாவ அறிக்கைபண்ணி நல்ல பாவமன்



னிப்பைப் பெற்றான். நான் ஏழைப்பாவி என்று நான் சொன்னால், அப்புறம் பராபரன் என்னை என்ன செய்வார். தள்ளிவிட அவரால் ஆகாது. அவருடைய இரக்கம் அவரை அப்படிச் செய்ய ஒட்டாது. அதைவிட அவர் இட்ட ஆணையும் அவசியம் என்னைத் தள்ள ஒட்டாது. நாம் ஆகாதவனுடைய மரணத்தை விரும்பாமல், ஆகாதவன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறோமென்று நமது ஜீவனைக்கொண்டு சொல்லுகிறோம் என்கிறாரே. எசேக். ௩௩, ௰௧. அதின் நிமித்தம் பராபரன் உன் பேரில் கிருபையாயிருக்கிறோமென்று எனக்கு மறுமொழி கொடுக்கவேண்டும். பூமியில் நியாயம் முந்தி, கிருபை பிந்துகிறது. பரமண்டலத்திலே கிருபை முந்தி, நியாயம் பிந்துகிறது. ஒரு ஏழைப் பாவிக்குப் பராபரன் சமுகத்திலே இப்போது கிருபை இன்னம் உண்டு. பராபரன் தானே பாவியைத்தேடி பின்தொடர்ந்து, தமது கிருபையை அவனுக்குக் காட்டி: மாறுபாடான இஸ்ரவேலே, திரும்பு; அப்போது நாம் உங்கள் மேல் நமது கோபத்தை இறங்கப்பண்ணுவதில்லை. ஏனெனில் நாம் கிருபையுள்ளவரும் என்றைக்கும் கோபம் வைக்காதவருமாயிருக்கிறோம் என்கிறார். எரேமி. ௩, ௰௨. அதின் நிமித்தம் தான் நான் துணிகிறேன். கெட்ட குமாரனோடேகூட நீயும் திரும்பி வந்து: தகப்பனே, வானத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று அழைக்கப்படுகிறதற்கு நான் பாத்திரவான் அல்ல. என்னை மறுபடியும் கிருபையாய் ஏற்றுக்கொள்ளுமென்று சொல்லு. லூக். ௰௫, ௰௮. ௰௯. பராபரன் அப்படியே செய்வார். அதை நானும் அறிவேன்.

௰௬. தியானம்.

## கிறிஸ்தவனுடைய சுயாதீனத்தைப் பற்றியது.

காவல் பண்ணப்பட்டும் விடுதலை.

இதற்காக நான் பராபரனை ஸ்தோத்திரம் பண்ணுகிறேன். தன் கூட்டைவிட்டு விலகமாட்டாமல் இருக்கும் ஆமை போல, என் ஆத்துமாவும் தன்னைச் சுமந்துகொண்டிருக்கும் சரீரத்தைவிட்டு அப்பால் போகக் கூடாமல் சரீரத்திலே தானே அடைந்து கிடந்தால் எனக்கு ஐயோ. ஆனால் பராபரன் எனக்குத் தானாய் அசையக்கூடிய ஒரு ஆவியைக் கொடுத்திருக்கிறார். சரீரம் அசையாமல் இருக்கையில் அந்த

ஆவி வெகு தீவிரமாய் அசைந்துகொண்டிருக்கக் கூடியது. சரீரம் ஒரு பக்கத்திலிருந்து மற்றொருபக்கத்தில் திரும்புகிறதற்கு முன்னே, ஆவி பூமியை விட்டுப் பரமண்டலத்திற்கு ஏறக்கூடும். நான் காவல் பண்ணப்பட்டவன்போலே இருக்கிறேன் என்கிறாய். உனக்கு உண்டான சுயாதீனம் இன்னும் அற்றுப்போக இல்லையே. சுயாதீனமானது மனதுக்கு மகா சவுக்கியமான சலக்கரணையாயிருக்கிறது. இப்போது மனதுக்கு மகா வல்லமை உண்டு. அது எல்லாவற்றையும் பலவந்தம் செய்யலாம். ஆனால் அதையோ ஒன்றும் பலவந்தப்படுத்தக்கூடாது. நீ கிறிஸ்தவன் ஆகையினாலே உன் மனதைப் பராபரனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்துவாய். பராபரனுடைய சித்தம் அவருடைய கிரியையிலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர் தமது மனதின்படி செய்கிறார். உன்னைக் காவல்பண்ணப்பட்டவனைப்போல் வைக்க அவருக்கு மனதானால், உன் மனதும் அதுக்குச் சம்மதித்து இருக்கவேண்டும். அவர் மனது உன் மனதானால், உன் சுயாதீனம் அற்றுப்போயிற்று என்று நீ முறைப்படுவது சரியல்ல.

அப்புறம் பராபரன் தமது பட்சம் என்னுந் தூண்டிலைத் தினம் எறிகிறார். அதில் பரம ஆறுதல் என்கிற பூச்சி கோத்திருக்கிறது. அதை நான் கொத்தும்போது அந்தப் பூச்சி நன்றாய் ருசிக்கிறது. ஆனால் பிறகு நான் பிடிபட்டேனென்று எனக்குத் தோன்றுகிறது. பிடிபட்டும் விடுதலை. அது எப்படியெனில், ஒருமீன் இரை விழுங்கின உடனே தூண்டில்காரன் மீனை இங்கும் அங்கும் அலையவிட்டு அது போனபடி விடுகிறான். மீன் பிடிபட்டிருந்தும் அது தன் இச்சையாய் ஓடுகிறதுபோல அதற்குத் தோற்றுகிறது. தேவநேசம் மிகவும் பெலனும் இன்பமுமான கட்டாகவும் இருக்கின்றது. அது மனதை முறிக்காமல் மனதை வளைக்கிறது. ஆகையால் பராபரனுக்குச் சிநேகத்திலே ஊழியஞ் செய்கிறது தானே மகா மேலான விடுதலையாயிருக்கிறது. யோவா. ௮, ௩௨.

௰௭. தியானம்.

## தேவ ஒத்தாசை தாமதப்படுதலைப் பற்றியது.

காலை வாசியாகும்.

இந்த வார்த்தையினால் நான் என்னையுந் துக்கப்படுகிற பலரையும் ஆறுதல் படுத்தியிருக்கிறேன். நாளை தேவ ஒத்தாசையால் வாசியாகும். ஆ அத்தனை சுருக்கிலே வாசியாகு



மா. ஆம், நல்ல இருதயமே, பராபரனுக்குச் சித்தமானால் நாளையே வாசியாகும். நாளைக்குச் சிலுவையில்லாதிருப்பாயென்று நான் சொல்லேன். ஒவ்வொருநாளுந் தன் பாட்டை முதுகிலே சுமந்துகொண்டிருக்கிறது. நாளை வாசியாகும் என்கிறேன், கேள். கர்த்தருடைய கிருபைகள் காலைதோறும் புதியவைகள். புலம். ௩, ௨௩. அருணோதயமாகிறபோது கர்த்தருடைய தயவும் உதயமாகிறது. நவமான கிருபையிலிருந்து ஆவியின் நவமான பெலன் புறப்படுகிறது. நவமான பெலன் தினந்தோறும் உன் சிலுவையை லேசாக்குகிறது. அப்போது நேற்றையைவிட இன்றைக்கு வாசியல்லவா. எத்தனைதரம் நீ நவமான நாளின் வெளிச்சத்தைக் காண்கிறாயோ அத்தனைதரமும்: நாளை வாசியாகும், நாளை வாசியாகும் என்று நினை. இன்று எனக்கு லகுவாயிருக்கிறது, சுவாமி உமக்கே ஸ்தோத்திரமென்று சொல்லு. மறுநாள் வரும்போது உனக்கு வாசியாய்க் காணாவிட்டால், மனந் தளராதே. எப்போது விடியுமென்று விடியுங் காலத்திற்குக் காத்திருக்கிற சாமக்காரரைப்பார்க்கிலும் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறதென்று தாவீது சொன்னதுபோல் நீயும் சொல்லு. சங்கீ. ௱௩௰, ௬. இப்படிப் பராபரனுக்குக் காத்திருக்க வேண்டும். உனக்கு இன்றைக்கு மனதுக்குப் பொருந்தியது பிறவாவிட்டாலும், நாளை உன் மனதுக்குப் பொருந்தியது பிறக்கும். நாளை அவர் வருவார். பராபரனுக்குக் காத்திருக்க வேண்டும். எத்தனையோ மணிநேரம் பராபரன் உனக்குக் காத்திருந்தார். நீ உன் நல்ல சிநேகிதனை எத்தனை நாளோ வரக் காத்திருந்திருக்கிறாய். ஆகையால் பராபரனுக்குச் சங்கையாக நீ சில மணிநேரமாவது பொறுத்திருக்கக் கூடாதோ. நான் என் துக்கத்திற்கு ஒரு மட்டுந் திட்டம் வைப்பேன். ஒத்தாசை எப்படியும் வரவே வரும். இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்காகிலும் வரும். ஒத்தாசை வராவிட்டால், ஆறுதலாவது வரும். ஆறுதலும் வராவிட்டால், பெலனாவது வரும். நாளை என்கிறது வராமல் போகிறதில்லை. பராபரனுக்குச் சித்தமானபோது வரவே வரும். அவருடைய சங்கைக்கும் நம்முடைய இரட்சிப்புக்கும் ஏற்ற வேளையில் அவருக்கு மனது வரும். நமக்கு நலமான வேளை எது என்று அவருக்குத் தெரியும். அவர் தாமதமே அவர் தீவிரம். ஆகையால் நான் அமர்ந்த ஆவியோடே இருந்து கர்த்தருடைய தயவுக்காகப் பொறுமையாய்க் காத்திருப்பேன்.

ராச்சாமங் காக்கிறோர் எப்போ
விடியும் என்பதாக

திற்பார்களே, என் மனதோ
அதிக ஆசையாக
கர்த்தரை நோக்கிக் காக்குது.
ஆ இஸ்ரவேலே, சுவாமிக்குக்
காத்தேயிரு, ரட்சிப்பார்.

௰௯. தியானம்.

# தேவ கிருபையின் உச்சிதத்தைப் பற்றியது.

ஒன்றே தேவை. லூக். ௰. ௪௨.

மனிதராகிய நாம் பிரயோசனமற்றதும் வீண் கவலைகளை உண்டுபண்ணுகிறதுமான வெகு காரியங்களின் மேல் நாட்டமாயிருக்கிறோம். ஆனால் அவசியமாய்த் தேவையான அந்த ஒரு காரியத்துக்காகக் கவலைப்படுவோர் மெத்தக் கொஞ்சம். எப்படி பணக்காரராவதென்று அநேகர் கவலைப்படுகிறார்கள். மனரம்மியமே பொருந்த ஐசுவரியமென்பதை அறியாதே போகிறார்கள். போதுமென்கிற மனதோடு கூடிய தெய்வபக்தியே வெகு ஆதாயமென்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். ௧ தீமோ. ௬, ௬. ஒருவன் இந்த உலகத்திலே பெரியவனாக வேண்டுமென்று கவலைப்படுகிறான். தன்னைத்தானே ஆள அறிந்தவனைவிட பெரியவன் இல்லையென்பதை அறியாதே போகிறான். பலவானைப்பார்க்க நீண்ட சாந்தமுள்ளவனும், ஒரு பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் ஆவியை ஆண்டுகொள்ளுகிறவனும் வாசி. நீதி. ௰௬, ௩௨. சிலர் சுகித்திருக்கப் பிரயாசப்படுகிறார்கள். பாக்கியமான மரணத்தை அடையத்தக்கவிதமாய் நடந்தால், அப்படிச் சுகித்திருப்பதுக்கு தடை என்ன. கர்த்தருக்குள் சாகிற மரித்தோர் பாக்கியவான்கள். அறிவி. ௰௪, ௰௩. ஆனால் தன் சமாதானத்துக்கானதுகளை நினைக்கிறதார். பராபரனோடு ஒப்புரவாகி கிருபையுள்ள பராபரனைக் கொண்டிருப்பதே உத்தமம். அந்த ஒன்றையே தேடி அடையப்பார்ப்பேன். கிருபையுள்ள பராபரனே எனக்குப் போதுமான ஐசுவரியம். அவருடைய கிருபையே போதுமென்று மனரம்மியத்தோடே இருக்கிறேன். எனக்கு வந்திருக்கிற சங்கையைவிட அதிக உயர்ந்த சங்கையைத் தேடேன். ஏனென்றால் நான் பராபரனுடைய பிள்ளையும் சுதந்தரவாளியுமென்று அழைக்கப்படுகிற பெரிய சங்கையைப் பெற்றிருக்கிறேன். பெருவாழ்வை நான் நாடேன். மின்னினவுடனே இடி இடிக்கிறது. பெரு



வாழ்வு வந்தவுடனே பெருங் கேடுவருகிறது வாடிக்கை. கிருபையுள்ள பராபரனைக் கொண்டிருக்கிறதைவிடப் பெரிய வாழ்வு உண்டா. பணக்காரன் வாழுகிறான், அவனுக்கு நம்ப உண்டு என்பார்கள். ஆனால் ஒரு கிறிஸ்தவன் அதிலும் அதிக வாழ்வு அடைந்திருக்கிறான். அவனுக்கு எல்லாம் உண்டு. சிற்றின்பத்தில் வாழ்பவனுக்குப் பூலோகம் மோட்சம் போலிருக்கும். அதிலும் பெரிய பாக்கியம் ஒரு கிறிஸ்தவனுக்கு உண்டு. ஏனென்றால் மோட்சம் அவன் இருதயத்திலே இருக்கிறது. பெரிய தனக்காரனுக்குப் பிள்ளையாயிருக்கிறது பாக்கியம். ஆனால் பராபரனுடைய பிள்ளையாயிருக்கிறது ஒரு கிறிஸ்தவனுக்கு அதிக பாக்கியம் அல்லவா. மின்னலும் இடியும் என் தகப்பனுடைய சத்தம். லோகத்திலுள்ள பெரியோரும் அதற்கு அஞ்சவேண்டும். ஆ கிருபையுள்ள பராபரனுக்காக நாம இத்தனை கவலையற்றவர்களாயிருக்கிறோமே. அதுக்குக் காரணமென்ன, நாம் அறியாத காரியத்தை விலைக்கு வாங்க மனங் கொள்ளாதே. பராபரனுடைய தயவை அறிந்தவர்கள் மெத்த கொஞ்சம். அவருடைய இன்பத்தை ருசித்தவர்கள் அதிலும் கொஞ்சம். பராபரன் தமது மதுரத்தில் கொஞ்சம் உன் இருதயத்தில் வார்க்க அவரை மன்றாடு. மான் குளிர்ந்த தண்ணீருக்குக் கதறி தவிக்கிறதுபோல் உனக்கும் அதின் மேலே தாகம் இருக்குமென்பதற்குச் சந்தேகம் இல்லை. ஆனால் நீ முன்னே உன் இருதயத்திலுள்ளதை ஊற்றிப்போடாவிட்டால், பராபரன் தமது மதுரத்தை வார்க்கக்கூடுவதெப்படி. உன் இருதயம் உலக இச்சையால் மிகவும் நிறைந்திருக்கிறபடியால் பரலோக இன்பத்துக்கு அதில் இடம் எங்கே. பரம ஆறுதல் உலக ஆறுதலை அரோசிக்கிறபடியால், இந்த உலக ஆறுதல் தன்னண்டையிலிருக்க அது சகிக்காதே. உலகம் உனக்குக் கசப்பாகுமுன் பராபரன் ஒருக்காலும் உனக்குத் தித்திப்பாகமாட்டார். வெறுமையானதையே பராபரன் நிரப்புகிறார். நிரம்பியிருக்கிறதுகளை வெறுமையாக்குகிறார். பசித்தவர்களை நன்மைகளினாலே நிரப்பி, ஐசுவரியவான்களை வெறுமையே அனுப்பிவிடுகிறார். லூக். ௧, ௫௩. ஆ என்னுடையது எனக்குக் கட்டோடே இல்லாவிட்டால், பராபரன் எனக்குத் தம்முடையதைத் திரளாய்க் கொடுப்பார். ஆ, கர்த்தாவே, என்னிலுள்ள உலக ஆசையை ஊற்றிவிட்டு பரலோக ஆசையை எனக்குள்ளே ஊற்றியருளும். இவ்விரண்டையும் உமக்குக் கையளிக்கிறேன்.

௰௯. தியானம்.

## பராபரனுடைய பந்தியையும் உலகத்தினுடைய பந்தியையும் பற்றியது.

ரம்ப தித்திப்புமல்ல. ரம்ப புளிப்புமல்ல.

எனக்கும் அதுவே பிடிப்பு. மிகுந்த தித்திப்பு தெவிட்டலைக் கொடுக்கிறது. மிகுந்த புளிப்பு மேனி அம்லப்போகப் பண்ணுகிறது. இந்த இரண்டும் உலக பந்தியானத்துக்கு விரோதம். உலகமானது இதிலே மட்டுத்திட்டம் அறியாமல் இருக்கிறது. அது தன்னை விரும்புகிறவர்களுக்கு மிகுந்த தித்திப்பையாவது மிகுந்த புளிப்பையாவது தருகிறது. ஒருவனுக்கு அது எல்லாத்தையுங் கொடுக்கிறது. மற்றொருவனை வெறுமையாய் விட்டுவிடுகிறது. ஒருவனை அது சிங்காசனத்திலும் மற்றொருவனைப் புழுதியிலும் வைத்து தன்னை வணங்கப்பண்ணுகிறது. அது துக்கம் வருவித்தால் ஆறுதல் சொல்ல அதற்குத் தெரியாது. அது சந்தோஷம் வருவிக்கிற வீட்டிலே துக்கம் கட்டோடே கிடையாது. உலகத்தின் மக்களிடத்திலே அழுகையும் சிரிப்பும் ஒருக்காலும் கூடியிருக்கமாட்டாது.

பராபரனுக்கோ மெத்த உத்தமமான ஒரு பந்தி உண்டு. தித்திப்பும் புளிப்பும் கலந்து வைக்க அவர் அறிவார். புளிப்பான உபத்திரவத்தை ஆறுதலாலே தித்திப்பாக்குகிறார். சீனியில் போட்டுக்காய்ச்சின கொடிமாதளம்பழம் எப்படி ருசிக்குமோ அப்படி அந்த ஆறுதல் மனதைத் திடப்படுத்துகிறது. கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்கள் மேல் பெருகுகிறதுபோல், கிறிஸ்துவினால் எங்கள் ஆறுதலும் பெருகுகிறது அல்லவோ. ௨ கொரிந். ௧, ௫. மதுரமான பரலோக இன்பத்தை அவர் பயத்தினால் புளிப்பாக்குகிறார். நான் நடுக்கத்தோடே களிகூருகிறேன். சங்கீ. ௨, ௰௧. ஏனென்றால் சாத்தானுடைய தூதன் மூன்றாம் வானத்துக்கு வெகு தூரத்திலே குடியிருக்கவில்லையென்று நான் அறிவேன். ௨ கொரிந். ௰௨, ௨. ௭. பராபரனுடைய பிள்ளைகளிடத்தில் அழுகையும் சிரிப்பும் கலந்தாற்போல் இருக்கும். ஏனென்றால் அவர்கள் எத்தராய்க் காணப்பட்டும் சத்தியவான்களாயிருக்கிறார்கள். அறியப்படாதவர்களாய்க் காணப்பட்டும் அறிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்கள். மரிக்கிறவர்களாய்க் காணப்பட்டும் இதோ பிழைத்திருக்கிறார்கள். தண்டிக்கப்பட்டவர்களாய்க் காணப்பட்டும் கொலையுண்ணாதிருக்கிறார்கள். துக்கப்படுகிறவர்களாய்க் காணப்பட்டும் எப்போதும் சந்தோஷப்படுகிறார்கள். தரித்திரராய்க் காணப்பட்டும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறார்கள். ஒன்றும் இல்லாதவர்களாய்க் காணப்பட்டும் எல்லாவற்றையும் உடையவர்களாயிருக்கிறார்கள். ௨ கொரி. ௬, ௮-௰.



உலகத்தாருடைய பந்தியில் இருக்கிறதைவிடப் பராபரனுடைய பந்தியில் இருப்பதே எனக்கு அதிகப் பிரியம். ஏனென்றால் மெத்தப் புளிப்பும் எனக்கு ஒவ்வவில்லை. மெத்தத் தித்திப்பும் எனக்கு ஆகாது. பராபரன் எனக்கு ஆயத்தப்படுத்துகிற பந்தி எப்போதும் ருசிகரமாயிராவிட்டாலும், எவ்விதத்திலும் எனக்கு ஏற்றதாயிருக்கிறது. உலகத்தாருடைய பந்தியில் சாப்பிடுகிறதற்கு ரம்ப விலை கொடுக்க வேண்டும். ஒரு கனியைத் தின்று செல்வவனத்தை இழக்க வேண்டியது ஆச்சே. பராபரன் கொடுக்கிறதற்கு நாம் ஒரு தோத்திரம் அவருக்குச் சொன்னால், அதைப் பிரியமாய் ஏற்றுக்கொள்ளுகிறார். விவேகிக்கு அவருடைய பந்தியே நலமாகக் காணுகிறது.

௨௰. தியானம்.

## தெய்வத்தனமான துக்கத்தையும் உலக உல்லாசத்தையும் பற்றியது.

உல்லாசம் இருந்தால் என்ன, போனால் என்ன.

இப்படி ஒருவன் தனக்குப் பிரியம் இல்லாதிருந்தும், தன்னை உல்லாசமாயிருக்கக் கேட்டவர்களுக்குச் சொன்னான். இருந்தால் என்ன, போனால் என்ன என்பதே எப்போதும் என் நினைவாய் இருக்கிறது. உலகம் என்னைச் சந்தோஷ விளையாட்டுக்கு அழைக்கிறது. ஆனால் அது எனக்கு ருசிக்கவில்லை. இருந்தால் என்ன, போனால் என்ன. உலக சந்தோஷ விளையாட்டு எங்கேயிருந்து வருகிறது. மாம்சத்திலேயிருந்து வருகிறது. எங்கே கொண்டுபோகிறது. நரகத்துக்குக் கொண்டுபோகிறது. உலகமே! நரகத்துக்குப் பயப்படுவதுபோல உன் சந்தோஷத்துக்கும் பயப்படுகிறேன். முன் நாட்களில் அவ்வளவு சந்தோஷமாய் ஆடிப்பாடிக்கொண்டிருந்தவர்கள் இப்போது எங்கே. கண் எதிரே கண்ட நன்மைகளை அநுபவித்து வாலிபத்தில் செய்ததுபோல் ஆஸ்திபாஸ்திகளை உற்சாகத்துடன் கையாளுவோம் வாருங்கள். விலை உயர்ந்த திராட்ச இரசத்தையும், பரிமளதயிலத்தையும் மிகுதியாய்க் கையாடுவோம், செழித்த வசந்த காலத்

ளைத வீண்போகவிடப்படாது. ரோசாப் புஷ்பங்கள் வாடிப் போகுமுன்னே அதுகளைச் சூடிக்கொள்ளுவோம் வாருங்கள். எங்களில் ஒருவனும் நாங்கள் அநுபவிக்கிற செல்வச் செருக்கிலே பங்கில்லாமல் போக ஒண்ணாது. எல்லா இடங்களிலும் எங்கள் மகிழ்ச்சியின் அடையாளங்களைப் பின்வைக்கக்கடவோம். இதுவே எங்கள் பங்கும் சுதந்தரமும் என்று சொல்லிக்கொண்டிருந்த உலகப்பிரியர் எல்லாரும் இப்போது எங்கே இருக்கிறார்கள். சாலமோன் ஞானம் ௨, ௬-௯. ஆ அவர்கள் எல்லாரும் நரகத்துக்குப் போனார்களென்று கண்ணீர் விட்டுச் சொல்லுகிறேன். மிகுந்த சம்பிரமமாக வாழ்ந்திருந்த ஐசுவரியவானுடைய சந்தோஷம் நரக வேதனையாக எப்படி மாறிப்போயிற்று!

பரலோகத்திலிருந்து வருகிறதும் பரலோகத்துக்குக் கொண்டுபோகிறதுமான தெய்வசித்தமான துக்கத்தையே நான் தெரிந்துகொள்ளுகிறேன். அது பின்னுக்கு மனஸ்தாபமற்ற குணப்படுதலை இரட்சிப்பு கிடைக்க உண்டாக்குகிறது. ௨ கொரி. ௭, ௰. உலகத்தோடே உல்லாசமாயிருக்கிறதைவிட பராபரனோடே துக்கப்படுகிறதே நலம். உலகத்தோடே சிரிக்கிறதைப்பார்க்க இயேசுவோடே அழுகிறதே நலம். இயேசு நாதர் சிரித்தாரென்று நீ எங்கேயாகிலும் வாசித்ததுண்டா. கண்ணீர் சொரிகிறவர்களுக்கோ அவர் சமீபமாயிருக்கிறார். மரியாள் அழுகையில் அவரும் அழுகிறார். உலகத்தின் சிரிப்பு அழுகையாய் முடியும். நகைக்கிறவர்களே, உங்களுக்கு ஐயோ. நீங்கள் அழுது புலம்புவீர்கள். லூக். ௬, ௨௫. கிறிஸ்தவர்களுடைய கண்ணீரிலிருந்து சந்தோஷம் விளைகிறது. கண்ணீர்த் துளியாகிய விதை எத்தனையோ அத்தனையும் சந்தோஷ அரிக்கட்டாகும். கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுது நடந்துகொண்டிருக்கிறான். ஆனால் தான் அறுத்த அரிகளைச் சுமந்து கெம்பீரத்தோடே வரவே வருவான். சங்கீ. ௱௨௰௬, ௫. ௬. என்னைச் சந்தோஷப்படுத்துங் காரியம் இந்தப் பூமியில் ஒன்றும் இல்லை. ஆனால் எனக்குத் துக்கம் வருவிக்குங் காரியங்களோ அநேகம் உண்டு. நான் எனக்கு மேலே அண்ணாந்து பார்த்தால், என் பிறந்தகம் காணப்படுகிறது மெய்யே, அதைப்பார்த்த உடனே சந்தோஷம் பிறக்கிறதும் மெய்யே. ஆனால் ஏழை அடியானாகிய நான் இன்னம் எவ்விடத்தில் சேரவில்லையே என்றும், இந்தப் பரதேச வழியில் நிர்ப்பந்தத்தோடே இன்னம் இங்கே அலையவேண்டியிருக்கிறதே என்றும் துக்கப்படுகிறேன். எனக்குக் கீழே குனிந்து பார்த்தால் நரகம் என்னைப் பய



முறுத்துகிறது. எனக்குப் பின்னே பார்த்தால் நான் இந்த மட்டும் செய்த எண்ணத்தொலையாத பாவங்களும் என் காலடியைப் பின்பற்றிவருகிறதே. எத்தனை பாவங்கள் என் நினைவிலிருக்கிறதோ, அத்தனை பாரச் சுமைகள் என் இருதயத்திலே இருக்கிறது, இத்தனையும் அம்புபோல் என்னைக் காயப்படுத்திக்கொண்டிருக்கிறது. எனக்குமுன்னே பார்த்தால், இன்னம் என்னென்ன தீவினை எனக்கு வரப்போகிறதோ என்கிற பயம் தோற்றுகிறது. என்னைச்சுற்றி எங்கே பார்த்தாலும், நான் பெருமூச்சுவிடத் தக்கதான வெகு அருவருப்பு இருக்கிறது. எனக்குள்ளே இறங்கிப் பார்த்தால், அப்பா என் ஆண்டவரே, பாழாக்குதலின் எத்தனை அருவருப்பு என் இருதயத்தின் அடியிலே மறைவாய்க் கிடக்கிறது. ஆ, இது எனக்கு எத்தனை துக்கம்! என் கண்ணீர் ஆறாய் வடிந்து ஓடுகிறதே. துளிமேல் துளி விழுகிறது. நான் வெட்டவெட்ட தண்ணீர் அதிகமாய் ஊறுகிறதே. சந்தோஷம் இருந்தால் என்ன, போனால் என்ன; இன்னம் ஆருக்கு உல்லாசம் இருக்கும்.

ஆகிலும் நான் எப்போதும் துக்கசாகரத்தில் அமிழ்ந்திருக்கிறேன் என்று நீ நினையாதே. எனக்குக் கிருபையுள்ள பராபரன் இருக்கிறார் என்பது எனக்கு மிகுந்த சந்தோஷம் வருவிக்கிறது. அவர் தமது மோட்சானந்த துளியை என் இருதயத்தில் விட்டால், என் சந்தோஷம் அதிகமாகிறது. எனக்கு நன்மனச்சாட்சி உண்டென்பதும் என் மனதுக்கு மகிழ்ச்சியாயிருக்கிறது. மகிழ்ச்சியுள்ள இருதயம் அவுழ்தம்போலாகும். வாக். ௰௭, ௨௨. பரம சுதந்தரம் எனக்கு உண்டென்கிற நம்பிக்கையிலே சந்தோஷப்படுகிறேன். ரோமர் ௰௨, ௰௨. உபத்திரவம் தொடங்கின உடனே உலக சந்தோஷம் முறிந்துபோம். என் சந்தோஷமோ உபத்திரவத்திலும் நிலைநிற்கும். எல்லாம் கசப்பாகும் உபத்திரவத்திலே பராபரன் எனக்கு இன்பமாயிருக்கிறதுபோல், பின் ஒருபோதும் அத்தனை இன்பமாயிருக்கிறதில்லை. உலகமே, நீ எப்படியிருக்கிறாயோ அப்படி இரு. நானும் இருக்கிறபடியே இருந்துவிடுவேன். என் சந்தோஷம் உனக்கு வராது. உன் சந்தோஷத்தையும் நான் விரும்பேன்.

உக. தியானம்.

## கிறிஸ்துமார்க்கத் தன்மையைப் பற்றியது.

நல்ல காரியம் எல்லாம் மூன்று.

மூன்று வார்த்தையின் மேல் ஒரு கிறிஸ்தவன் இரவும் பகலும் யோசிக்க வேண்டும். அதாவது: வேண்டுமென்பதும், ஆகிறது என்பதும், அப்படியே ஆகியிருக்கிறது என்பதுமாம். உனக்கு என்ன வேண்டும். நல்ல கிறிஸ்தவனாக வேண்டும். நீ யார் ஆகிறாய். நான் நல்ல கிறிஸ்தவனாகிறேன். யார் ஆகியிருக்கிறாய். நல்ல கிறிஸ்தவனாகியிருக்கிறேன். வேண்டுமென்பது ஒன்றைத் தொடங்குகிறவனுக்கும், ஆகிறது என்கிறது அதை வளரப்பண்ணுகிறவனுக்கும், ஆகியிருக்கிறது என்பது அதை முடித்தவனுக்கும் அடுத்ததாயிருக்கிறது. வேண்டுமென்கிற மனது உண்டாகிறது வருத்தம். ஏனென்றால் ஒரு நல்ல பிரதிக்கினை பண்ணினால், அதற்குச் சத்துருக்கள் அநேகம் உண்டு. ஆகிறது அதிலும் வருத்தம். ஏனென்றால் ஒரு மலையின்மேல் ஏறத் தொடங்குகிறவன் அடிக்கடி சறுகி விழுகிறதுண்டு. ஆவி மனதுள்ளது தான், மாமிசமோ பெலனற்றிருக்கிறது. ஆகியிருக்கிறது எல்லாவற்றிலும் வருத்தம். சாவுக்குரிய இந்தச் சரீரத்தில் இருக்குமளவும் ஒருத்தனாகிலும் முழுமையும் அப்படி ஆகி இருக்கக் கூடாது. கிறிஸ்துவுக்கு விரோதமான பாவத்தை என் மாங்கிஷத்தில் இன்னம் உணருகிறபடியால், நான் என்னைக் கிறிஸ்தவனென்று சொல்லக் கூடாது. கிறிஸ்தவனாக வேண்டுமென்கிற ஆசையும் மாத்திரம் இருந்தால் போதாது. பணக்காரராக வேண்டுமென்று ஆசைப்படுகிறவர்கள் அதற்காகப் பிரயாசப்படாமல் இருக்கிறார்களா. வேண்டுமென்கிற மனது ஆகிறது என்கிற மனதாக மாறினால் அல்லோ அதை மெச்சிக்கொள்ளுவேன். எனக்கு நல்ல கிறிஸ்தவனாக வேண்டுமென்கிற மனதும் உண்டு. அப்படியும் ஆகிறேன். நாளுக்கு நாள் நல்லவனும் உத்தமனும் தாழ்மையுள்ளவனும் மெத்தனவுள்ளவனும் ஆகவும் பார்க்கிறேன். ஆனால் அப்படி ஆக வேண்டுமென்கிற நினைவு மெத்தக்கொஞ்சம் பேருக்குள்ளே மாத்திரம் இருக்கிறது. வெகு பேர் அதற்கு மனதுண்டு என்கிறதே போதுமென்று எண்ணித் தங்களைத் தானே வஞ்சிக்கிறார்கள். அப்படிப்ப[illegible]ள் செய்யவேண்டுமென்கிற மனதைச் செய்த பாவமாக[illegible]ராபரன் ஏற்றுக்கொள்வாரென்று சொல்லுவார்கள். மெய்தான், ஆனால் வேண்டும் என்கிற காரியம் நடந்தேற, மு[illegible]து பிரயாசப்பட



வேண்டும். இருக்கவேண்டிய பிரகாரம் நான் இருக்கக் கூடாதிருந்தாலும், ஆகவேண்டுமென்கிறபடி பராபரனுடைய கிருபையினால் ஆக எனக்கு மனது உண்டு. அப்படி ஆக முடியாதிருந்தாலும், அதின்மேல் எனக்கு மெத்த வாஞ்சை உண்டு. முடியாததற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். என் பராபரனுக்கும் அதுவே பிரியம் என்று நான் அறிந்திருக்கிறேன். ஏனெனில் தன் எசமானுடைய சித்தத்தை அறிந்த ஊழியக்காரன் அதின்படி செய்யக் கூடாததினிமித்தம் அடிக்கப்படுவானென்று எழுதியிராமல், அதை அறிந்தும், ஆயத்தப்படாமலும் அவர் சித்தத்தின்படி செய்யாமலும் போன ஊழியக்காரனே அநேகம் அடிகளால் அடிக்கப்படுவானென்று கண்டிருக்கிறது. லூக். யஉ, சஎ. என் பராபரனே உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன். சங். சம, அ. இதமியமான மனதை எனக்குள் உண்டுபண்ணியிருக்கிற தேவரீர், உமது சித்தத்துக்குப் பொருந்திய செய்கையையும் என்னில் உண்டுபண்ணியருளும். பிலிப். உ, யங.

உஉ. தியானம்.

## மனச்சாட்சியை ஆராய்ந்து பார்க்குதலைப் பற்றியது.

ஆ பயம். ஆ நடுக்கம்.

நீயும் நடுங்குகிறாய், நானும் நடுங்குகிறேன். ஆருக்கு? பிசாசுக்கோ நான் பயப்படுகிறதில்லை. பிசாசு எனக்கு என்ன செய்யும். அது தன் வாயைத் திறக்கும், ஆகிலும் அது என்னை விழுங்கக் கூடாது. அது என்னைச் சுற்றிக்கொண்டு திரியும், ஆகிலும் என் மனது சம்மதிக்காவிட்டால், அது என் இருதயத்தில் உட்பிரவேசிக்க அதுக்கு நெஞ்சுத்துணிவு இல்லை. அது நெருப்பை எறியும், நான் விசுவாசத்தின் பரிசையால் அதை அவித்துப்போடுகிறேன். அது என்னைக் கடிக்கமாட்டாது. ஏனென்றால் எனக்கு ஒரு பலத்த ஆதாரமுண்டு. ஆனால் நான் நடுங்கிப்பயப்படுகிறது என்னத்துக்காகவென்று நீ அறிவாயா. அதை உனக்குச் சொல்லுகிறேன், கேள். தவுலர் என்னும் ஞானி ஒரு இடத்திலே என்ன சொல்லுகிறான் என்றால் ஒரு நல்ல மனிதன் நாள் ஒன்றுக்குக் குறைந்தது ஒரு விசையாகிலும் தன் பெலத்தை எல்லாம் கூட்டி தன் ஆத்துமாவின் அடியிலும் மனச்சாட்சியின் அடியிலும் இறங்கித் தன்னைச் சோதித்துப் பாராதிருந்தால், அவன் ஒரு நல்ல கிறிஸ்தவன் நடக்க வேண்டிய வழியிலே

இன்னம் நடக்கவில்லையென்று நான் கூசாமல் சொல்லுகிறேன் என்கிறார். ஆ நான் எத்தனை இராத்திரி என் இருதயத்தின் அடியிலே இறங்கி என் நடக்கைகளை ஆராய்ந்து சோதிக்காமல் கட்டிலின் மேலே ஏறிப்படுத்துக்கொண்டேனே, அத்தனைவிசையும் அதின்மேல் நான் அமர்ந்து இளைப்பாறினதும், அந்தக்கட்டில் எனக்கு நரகமாயிருந்தது. நரகத்திலே அமர்ந்து இளைப்பாறுதல் உண்டோ. அப்படிப்பட்ட ஒரு இராத்திரியில் பராபரன் என்னைத் தம்முடைய நடுத்தீர்வை ஆசனத்துக்கு முன்பாக இழுத்தால், அப்போது நான் படப்போகிறபாடு அனந்தம் உண்டே. அவர் என்னை எப்படிப்பட்ட குணத்தோடிருக்கக் காண்கிறாரோ, அப்படியே என்னை நடுத்தீர்ப்பாரே. அந்த இராத்திரிகளிலே ஒரு கொலைபாதகனோ, திருடனோ, பிசாசோ, என் அண்டையில் கூடப்படுத்திருந்தாற்போலாயிற்றே. நான் அதை நினைக்கும்போதெல்லாம் திகில் என்னைப் பிடிக்கிறது. அந்தருணங்களிலெல்லாம் நரகத்துக்கு நான் தப்பி இம்மட்டும் பிழைத்திருக்கிறது பராபரனுடைய நீடிய சாந்தமும் சுத்த இரக்கமுந்தானே. இனிமேல் புத்தியோடே நான் இருக்கவேண்டும். நேரம் எல்லாம் ஒன்றைப்போலே அல்ல. என் இருதயமே, இன்றைக்கு உன்னோடே ஒரு ஒப்பந்தம் பண்ணுகிறேன். நீ எப்படியிருக்கிறாயென்று உன்னைப் பார்க்குமுன் என் படுக்கையில் இனி ஒருநாளும் விழேன். நீ கொலைபாதக சிந்தையை உன்னிடத்தில் வைத்திருப்பாயாகில், என்னோடே கூடப் படுக்காதே. என்னோடு கூடப் படுக்கவேண்டுமென்று உனக்கு மனதிருந்தால், உன் கொலைபாதக சிந்தையை விட்டுவிடு, அப்போது என்னோடுகூடப் படுக்கலாம். உனக்குள்ளே யாதொரு கெட்ட நினைவு இருந்தால், அதை ஒளிக்காதே. பராபரனுக்கு எப்படியும் அது தெரியும். நல்ல பாவ அறிக்கை பண்ணுகிறவனுக்கு நல்ல பாவமன்னிப்பு உண்டு. நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன் என்று தாவீது இராசா சொன்னதுபோல நீயும் சொல்லு. ௨ சாமு. ௰௨, ௰௩. அப்போது கர்த்தர், நாம் உன் பாவத்தை நீக்கினோம், நீ சாக மாட்டாயென்று உனக்குப் பிரத்தியுத்தரம் சொல்லுவார். நீ பாவத்திலே நோப்படத் தாமதித்திருப்பானேன். இயேசுவின் மேலே அதை எறிந்துவிடு. அங்கே அது தன் வழக்கைச் சொல்லிக் கொள்ளட்டும். அது உன்னிடத்தில் ஏதாகிலும் சொல்ல வந்தால், நான் இனிமேல் அதைச் செய்ய மாட்டேனென்று சொல்லிப்போடு. இதுவே உத்தம மனஸ்தாபம்.



௨௩. தியானம்.

## சிலுவை என்னப்பட்ட துன்பத்திலே இருக்கும் ஆறுதலைப் பற்றியது.

எங்கே இருந்து வருகிறாய், எங்கே போகிறாய்.

என் சிலுவை என்னைப் பயமுறுத்தும் வேளையில் எல்லாம் நான் அத்தோடே இப்படிப்பேசுகிறேன். எங்கேயிருந்து நீ வருகிறாய். நான் பரலோகத்திலிருந்து வருகிறேன். அப்படியானால் சுகமாக வா, நீ தேவதூதனாயிருக்கிறாய். நீ எங்கே கொண்டுபோகிறாய். பரமண்டலத்துக்குக் கொண்டுபோகிறேன். ஆ பரலோக இரதமே, என்னையும் கூட ஏற்றிக்கொண்டுபோ.

சிலுவைக்காக மனிதருக்குண்டான அருக்களிப்பு எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. ஆ அவர்கள் இப்படித் திகில் அடையச் செய்கிறதென்ன. தங்கள் சிலுவை நரகத்திலிருந்து அனுப்பப்பட்டு பிசாசாலும் பொல்லாத மனுஷராலும் வருகிறதென்றும் அது தங்களை நரகத்திலே கொண்டுபோகிறதென்றும் நினைக்கிறார்கள். என் பிரியமான ஆத்துமாவே, அப்படியல்ல. சிலுவை பரமண்டலத்திலிருந்து வருகிறது. உன்னை அடிக்கிற கையை நீ கண்டால், அதை முத்திடு. அது பிதாவாகிய பராபரனுடைய கை தானே. உன் சிலுவை பரமண்டலத்துக்கு உன்னைக் கொண்டுபோகிறது. சிலுவை சுமக்கிறவர்களுக்குப் பரமண்டலத்தில் வைக்கப்பட்டிருக்கும் முடியை நீ காணக் கூடுமானால், எல்லா உபத்திரவத்தையும் சந்தோஷத்தோடே சுமக்க உனக்கு மனது வரும். நல்ல சிலுவையே, உன்னை யாரும் வேண்டாமென்றால், அப்போது நீ என்னிடத்துக்கு வந்துவிடு. உன்னை அனுப்பினவர் இன்னாரென்று நான் அறிவேன். அவர் என் பராபரன், அவரால் ஒரு பொல்லாப்பும் வராது. அவர் என் சிருஷ்டிகர், அவர் என்னை அழித்துப்போட மாட்டார். அவர் என் பிரியமான தகப்பன், அவர் தமது பிள்ளைகளுக்குப் பொல்லாப்பு நினைக்கவும் செய்யவும் மாட்டார்.

சிலுவையே, நீ உன்னோடே கூடக்கொண்டுவருகிறது இன்னதென்றும் நான் அறிவேன். கிருபையுள்ள பராபரனைக் கொண்டு வருகிறாய். அவர் எனக்கு அகப்பட்டால், அவரை விட எனக்கு வேறென்ன வேண்டியிருக்கிறது. உன்னை நான் அறிவேன், நீ எனக்குப் பா[illegible] வ[illegible]விக்க மாட்டாய். உன் அழுத்தல் என் முசிப்பாற்றல். உன் துயரம் என் சந்தோ

ஷம். உன் கொடுக்குக்குள் தித்திப்பான தேன் நிறைந்திருக்கிறது. உன் துக்கம் எனக்கு மதுரமான ஆறுதல். நீ என்னோடே கூட வந்து சேரவேண்டிய இடம் இன்னதென்றும் அறிந்திருக்கிறேன். அது பரமண்டலத்திலே தான். ஆ பரமண்டலத்திலேயா? இதைவிட எனக்குப் பிரியமான இடம் எங்கே. அப்படியானால் என்னோடு தங்கியிரு. நான் உனக்காகக் காத்திருக்கிறேன். நீ என வீட்டிலே எனக்குப் பிரியமான தோழனாய் இருப்பாய். சிலுவையே, துரிதமாய் வா. நான் என் போராட்டத்தை முடிக்க வேண்டுமே. எனக்கு முடி பின்னி ஆயிற்று. சிலுவையே பரலோக வழி.

௨௪. தியானம்.

## தேவ கிருபையைத் திரும்ப அடைதலைப் பற்றியது.

*ஆதியில் இன்பம், அந்தத்தில் துன்பம்.*

இதென்ன? நீ சொல்லு. அது பாவந்தானே. பாவம் துவக்கத்திலே தித்திப்பும், முடிவிலே கசப்புமாகும். பாவம் செய்யும்போது சந்தோஷம், அதினால் வருவதை உத்தரிக்கும்போது துக்கம். பேதுருவுக்குப் பாவக்கனி நேர்த்தியாய் ருசித்தபோது அதைக் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சாப்பிட்டு உட்கொண்டான். பிறகு அது என்னமாய் முடிந்தது. துயரக்கண்ணீராய் முடியவில்லையா. மத். ௨௬, ௭௫. கெட்ட குமாரன் தன் தகப்பன் வீட்டைவிட்டுச் சந்தோஷமாய்ப் புறப்பட்டான். பிறகு கஸ்தியோடு திரும்பிவர இல்லையா. லூக். ௰௫, ௰௮. துவக்கத்திலே எவ்வளவு சந்தோஷமோ, அவ்வளவும் முடிவிலே கஸ்தி. ஆதலால் எப்போதும் முடிவை நினை.

ஆதியில் துன்பம், அந்தத்தில் இன்பம். இது என்ன? தேவ கிருபைதானே. மெய்யான குணப்படுதலின் வழியாய்க் கிருபையைத் திரும்பப் பெறுகிறோம். குணப்படுதலிலே எவ்வளவு மனஸ்தாபம் உண்டாகிறது! எசேக்கியா இராசாவைப் பார். அவன் எப்படி விம்மி அழுகிறான். ஏசா. ௩௮, ௰௪. தாவீது இராசாவைப் பார், அவன் எவ்வளவு விசனத்தோடே தன் தவச்சங்கீதத்தைப் பாடுகிறான். பெரும் பாவியாகிய மரியாளைப் பார், அவள் கண்ணீர் ஆறாய்விட இல்லையா. லூக். ௭, ௩௮. ஆயக்காரனைப் பார், அவன் இருதயம் உருகி, எவ்வளவு வியாகுலத்தோடே [illegible]றையப்பட்டு, "பராபரனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்கிற இவ்வளவைத்து சிறு பெருமூச்சான வார்த்தையைச் சொல்லக் கஷ்டமான துக்கம் அவனுக்கு இருந்ததே. லூக். ௰௮, ௰௩. சிரிப்பிலே கிருபையுள்ள பராபரனைப் போக்கடிக்கிறோம். கண்ணீர் வழியாக அவரைத் திரும்ப கண்டுபிடிக்கிறோம். தவசின் கசப்பை ருசிக்குமுன் ஒருவனும் தேவ கிருபையின் தித்திப்பை ருசிக்கக் கூடாது. எவன் திரளான கண்ணீர்களோடே தேவ கிருபையைத் தேடி மிகுந்த கஸ்தியோடே அதைக் கண்டு பிடிக்கிறானோ, அவனையே அது அதிகமாய்ச் சந்தோஷிப்பிக்கும். எசேக்கியா இராசா விம்மி அழுகையில் அவனுக்கு வெகு துயரம் இருந்தது. அப்போது அவன்: "இதோ, சமாதானத்துக்குப் பதிலாக எனக்கு மகா கசப்பு வந்திருந்தது" அதாவது: சமாதானத்தை நினைக்கிறபோதே துக்கம் எனக்கு வந்தது என்றான். பிறகு அவன்: "தேவரீர் என் ஆத்துமாவை அழிவின் குழிக்கு விலக்கி அரவணைத்தீர்" என்று சந்தோஷத்தோடே பாடினான். ஏசா. ௩௮, ௰௭. "என் பெருமூச்சுகளால் இளைத்தேன். இரா முழுதும் என் மெத்தையை மிகவும் ஈரிக்கப்பண்ணி, என் கண்ணீரால் என் கட்டிலை நனைக்கிறேன், என் கண்கள் சலிப்பினால் குழிவிழுந்துபோயின" (சங்கீ. ௬, ௭. ௮) என்று துவக்கின துயரகீதம், அப்புறம் "கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார், கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார், கர்த்தர் என் செபத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்" என்று சந்தோஷமாய் முடியுது. நிலம் காய்ந்தபோது தெளித்து, ஈரத்திலே அறுக்கிறதும் உண்டா. ஈரத்திலே தெளித்து காய்ச்சலிலே அறுக்கவல்லோ வேண்டும்.

௨௫. தியானம்.

## மாயத்தைப் பற்றியது.

*கண்டும் அறியக் கூடாதது.*

ஆ உலகம் மாயக்காரரால் நிறைந்திருக்கிறதே! அவர்களைப் பார்க்கிறதார், நானும் நீயும் பார்க்கிறோம். ஆனால் அவர்களை அறிகிறதார். பராபரன் மாத்திரம் அறிகிறார். மனுஷர் முன்பாக மாயத்தை ஒளிக்கலாம். பராபரனுக்கு முன்பாக அப்படிச் செய்யக் கூடாது. மனுஷர் கிரியைகளின் வேஷத்தைப் பார்க்கிறார்கள். பராபரனோ இருதயத்தின் அடியைப் பார்க்கிறார். ஆகிலும் மாயக்காரனைக் கண்டுபிடிக்கிற இடம் எங்கே என்று உனக்குக் காட்டுகிறேன், கேள். மயிரிலேயும் சட்டையிலேயும் அல்ல. ஏனென்றால், மொட்டைத்தலைய

ரிடத்திலேயும் நெடுஞ்சால்வை உடுத்திருக்கிறவர்களிடத்
திலும் மாயங்கள் மிகுதி. ஆனால் மாயம் பிரதானமாய் இரு
தயத்திலே இருக்கிறது ஒவ்வொருவனும் தாடிக்காரச் சந்
நியாசியைத் தன் இருதயத்திலே சுமந்து திரிகிறான் என்று
லூத்தர் நன்றாய்ச் சொல்லுகிறார். ஒவ்வொருத்தனுந் தன்
இருதயத்திலே ஒரு பரிசேயனைச் சுமந்துகொண்டு திரிகி
றான். நீ பரிசேயனை எருசலேமிலே தேடத்தேவை இல்லை.
உனக்கு நீ எவ்வளவு கிட்டியிருக்கிறாயோ அவ்வளவு அவ
னும் உனக்குக் கிட்டத்தான் இருக்கிறான். நீ ஒரே காரியத்
தைக் கவனிக்கவேண்டும். அதாவது, ஒருவனிடத்தில் மனுஷ
சுபாவ பெலவீனங்கள் வெளிக்குத் தோன்றுவிட்டால், அவ
னிடத்தில் நிச்சயமாகவே மாயக்காரனைக் கண்டுபிடிக்கலாம்.
செபம்பண்ணத் தெய்வாலயத்துக்குப் போன அந்தப் பரிசே
யனைப் பார். அவன் என்ன சொல்லுகிறான். "நான் மற்ற
மனுஷரைப்போல் இராதபடியால் உம்மைத்தோத்திரம் பண்
ணுகிறேன்" என்கிறான். லூக். ௰அ, ௰௧. மனுஷருக்கு அடுத்
ததே உன்னிடத்திலும் உண்டு என்கிறதை நீ அறியாயோ.
மனுஷருக்கு அடுத்தது என்ன? தப்பிதமே. நீயும் பாவி, நீயும்
தப்பிதம் செய்கிறவன் என்கிறதை அறியாயோ. பாவிகளின்
தொகையிலே தன்னைச் சேர்க்க மனதில்லாதவன் மனுஷர்
தொகையிலேயும் தன்னைச் சேர்க்க மனதில்லாதவனாயிருக்
கிறான். எனென்றால் "ஒரு பாவமும் செய்யாமல் நன்மையே
செய்யத்தக்க நீதிமான் பூமியில் இல்லை." பிரசங்கி. எ, உ௰.
இதிலே வித்தியாசமில்லை. எல்லாரும் பாவஞ்செய்து பரா
பரனுடைய மகிமையற்றவர்களானோம். ரோமர் ௩, உ௩.
ஒருவன் மற்றவனைவிட நல்லவன் அல்ல. நீ உன்னைப் பரி
சுத்தவானென்று எண்ணினால், நீயே மகா மாயக்காரன் என்கி
றது நிச்சயம்.

நீ இன்னம் ஒன்றைக் கவனிக்கவேண்டும். பராபர
னும் பிசாசும் எங்கே ஒருமிக்க இருக்கக் காணப்படுகிறதோ,
அங்கே மகா மாயக்காரன் இருப்பான் என்பது நிச்சயம்.
பராபரன் நியாயந் தீர்க்கிறவராயிருக்கிறார். என்னை நியாயம்
விசாரிக்கிறவர் கர்த்தரானவர். க கொரி. ச, ச. பிசாசான
வன் வழக்காளி. அவன் பராபரனுக்கு முன்பாக இரவும் பக
லும் நல்லவர்கள் மேல் முறைப்பாடு சொல்லுகிறான். அறிவி.
௰உ, ௰. அந்தப் பரி[illegible]யன் [illegible]க்காரனை நடுத்தீர்த்து அவன்
மேலே தூறுபேசினான். ஆகையால் அவனிடத்திலே பராபரனும்
பிசாசும் ஒருமிக்க இருக்கிறதாகக் காணுகிறது. நீ உன் பிறனை
நடுத்தீர்க்கத் துணிகிறாயே [illegible]வன் இருதயத்திலே இருக்
கிறதென்ன என்று நீ அறிவாயா, சொல்லு, பார்ப்போம்.



எனக்குத்தெரியாது என்கிறாய், அப்படியானால் நீ அவனை
நடுத்தீர்க்கிறதென்ன. முகாந்தரமில்லாமல் நடுத்தீர்க்க உனக்
குச் சொன்னதார். நான் அப்படித்தான் செய்வேன் என்கி
றாயோ. அப்படியானால் நீ உன்னைத் தானே தேவனாக்குகிறாய்.
இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிற வல்
லமை இந்தமட்டுக்கும் பராபரனுக்கு மாத்திரம் இருந்தது.
சங்கீ. எ, ௯; எரேமி. ௰எ, ௰. நீ உன் பிறன்மேல் பராபர
னிடத்தில் முறைப்பாடு சொல்லுகிறதற்குக் காரணம் என்ன.
சிநேகம் அப்படிச் செய்யாது. சிநேகம் மன உருக்கமுள்ள
தும் திரளான பாவங்களை மூடுகிறதுமாயிருக்கிறது. ஆதலால்
பராபரன் தண்டிக்கிறதைவிட பொறுத்துவிட்டால் நல்லது
என்கிற மனது அந்தச் சிநேகத்துக்கு இருக்கவேண்டும். ஆகை
யால் பகையும் பொறாமையும் பிறனைக் குற்றஞ் சாட்டுகிறது.
இது எங்கே இருந்து வருகிறது? பிசாசினிடத்திலிருந்து வரு
கிறது. ஒரு மனுஷன் மோட்சத்தை அடைகிறதற்கு எவன்
பொறாமைப்பட்டு தடைசெய்கிறானோ, அவனே பிசாசு.
ஆனால் பராபரனும் பிசாசும் உன்னிடத்தில் ஒருமிக்கக்
காணப்பட்டதோ. அப்படியானால் சூரியனுக்குக் கீழே இருக்
கிற மாயக்காரரெல்லாரிலும் நீ அதிக கெட்ட மாயக்காரன்
தானே. கிறிஸ்தவனே, இந்தப் பிரகாரம் உன்னைச் சோதித்
துப்பார். இப்படிப்பட்ட மாயம் இன்னம் உனக்குள்ளே
இருந்தால், அதை முள்ளிட்டு முள்ளால் ஆராய்ந்து அறிந்து
உணர்ந்து கண்டித்து அத்தோடே எதிர்த்து வீரியமாய்ப்
போராடி அதை மேற்கொள்ளப் பார். ஆண்டவர் உனக்கு
உதவிசெய்வாராக.

உசு. தியானம்.

# பெலவீன விசுவாசத்தைப் பற்றியது.

ஒரு பொறியும் நெருப்புத்தான்.

இதைப் பரிட்சை[illegible]ர். ஒரு பொறியின்மேல் கரியையும் உமி
யையும் போட்[illegible] நெருப்பாகிறதோ இல்லையோவென்று
ஊதிப்பார். பெலவீன விசுவாசமும் விசுவாசந் தான். விசு
வாசம் எப்போதும் திவட்டிபோல் எரியாமல் அடிக்கடி மங்கி
எரியும் திரிச்சீலைபோல் இருக்கிறது. திரிச்சீலை அத்தனை பிர
காசங் கொடாதிருந்தும் திவட்டியைப்போலவே திரிச்சீலை
யும் வெளிச்சங் கொடுக்கிறது. விசுவாசம் இயேசுவை நோக்
கிப்பார்க்கிற கண்ணாய் இருக்கிறது. கூச்சப்பார்வையுடைய

கண்ணும் கண்தான். அழுகிற கண்ணும் கண் தான். நீ கண்ணீர்விட்டு, ஆ எனக்கு விசுவாசமில்லாதபடியால் மனது எவ்வளவு இடுக்கமாயிருக்கிறதென்றும் நான் விசுவாசமுள்ளவனாயிருந்தால் தாவிலை என்றும் முறைப்பட்டு அழுகிறாய். என் அருமை இருதயமே, உனக்குள்ளே விசுவாசம் இல்லை என்று நினைத்து உருக்கமாய் அழுகிறபோது, நீ விசுவாசமுள்ளது ஆகிறாய் என்று அறியக் கடவாய். ஏனென்றால் விசுவாசத்தின் மேல் விருப்பம் உண்டாயிருக்கிறதென்பதற்கு இப்படிப்பட்ட கண்ணீரோ அடையாளம். விசுவாசம் வேண்டுமென்கிற உத்தம ஆசையையே பராபரன் விசுவாசமாக எண்ணுகிறார். ஏனெனில் இதமியமாய் மனதையும் செய்கையையும் பராபரன் நம்மில் உண்டாக்குகிறவர். ஆகையால் பராபரன் இந்த இரண்டையும் புறக்கணிக்க முடியாது.

நாம் இயேசுவைப் பிடிக்கிறதற்கு விசுவாசம் ஒரு கைபோலே இருக்கிறது. நடுக்கிற கையும் கை தானே. இயேசுவைப் பற்றிப்பிடிக்கையில், ஒருவன் இருதயமும் உடலும் நடுங்கினாலும், அவனும் விசுவாசமுள்ளவனே. நான் செய்த அநேகம் பெரும்பாவங்களை நினைத்தால், என் உள்ளம் நடுங்குகிறதே. இயேசுவின் காயங்களினால் எனக்கு ஆறுதல் கிடைப்பது எப்படி. அவ்வாறுதலுக்கு நான் அபாத்திரனாயிருக்கிறேனே என்று நீ அடிக்கடி சொல்லுகிறாய். ஆனால் அதுவே விசுவாசம், அல்லது நடுங்குகிற கையால் இயேசுவைப் பற்றிப்பிடிக்குதல் என்று நான் உனக்குச் சொல்ல வேண்டும்.

மேலும் விசுவாசம் வாய்போலிருக்கிறது. அதினால் கர்த்தர் எவ்வளவு தயவுள்ளவரென்றும் நாம் ருசிபார்க்கிறோம். லேசாய் ருசிதெரியாத நாக்கும் நாக்குத்தான். * ஒரு துளி ஆறுதலை நாம் ருசிக்கக் கூடாதிருந்தபோதிலும், நமக்கு விசுவாசம இல்லை என்று நினைக்கப்போகாது. ஏனென்றால் நம்முடைய விசுவாசம் நமது உணர்விலல்ல, பராபரனுடைய வாக்குத்தத்தத்தில் அஸ்திவாரப் பட்டிருக்கிறது.

கடைசியாக விசுவாசம் இயேசுவினிடத்துக்கு நம்மைச் சுமந்துகொண்டுபோகிற காலாய் இருக்கிறது. ஒரு வியாதிஸ்தன் காலும் கால் தான். மெள்ள வருகிறவனும் கடைசியில் வந்து சேருவான். ஒரு கிறிஸ்தவன் தன் விசுவாசத்திலே எவ்வளவு பெலவானென்று பாராமல், தான் என்னத்தைப் பற்றுகிறானென்கிறதை நோக்கிப் பார்க்க வேண்டும். கிறிஸ்தவனே, உன் விசுவாசம் எதைப்பற்றிக் கொண்டிருக்கிறது; இயேசுவையே. எப்படி அவரைப்பற்றி இருக்கிறது, பெலவீனமாய். இயேசுவைப் பற்றிப்பிடித்துக் கொள்ளுதல் மாத்திரம் இருந்தால், அதின் பெலவீனத்தைப்



பார்க்க வேண்டியதில்லை. பராபரன் உன் ஈடேற்றத்தை உன் கைப் பிடிக்குள்ளே வைக்காமல், நீ பிடிக்கும் இயேசுவினிடத்தில் வைத்திருக்கிறார். மோட்சத்தை அடைகிறதற்கு இரண்டு கை எனக்கு உதவியாய் இருக்கிறது. ஒன்று என் விசுவாசம் என்னும் கை. அதினால் நான் என் இயேசுவையும் அவருடைய உத்தரவாத புண்ணியத்தையும் பற்றிக்கொள்ளுகிறேன். மற்றொன்று இயேசுவின் கிருபை என்னும் கை. இது என் கையைப்பிடித்து என் பெலவீனத்துக்கு உதவிசெய்கிறது. என் பிடியும் நிலையும் சற்றுச் சறுகினால், அவருடைய பிடியும் நிலையும் அதிகக் கெட்டியாகிறது. ஆகையினால் நான் என்னில் முற்றிலும் பெலவீனனாக இருந்தாலும், என் இயேசுவில் பலமுள்ளவனாயிருக்கிறேன்.

உஅ. தியானம்.

## தெய்வ ஊழியத்தைப் பற்றியது.

கீ ஆர்.

நான் கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேனென்று யோவான் ஸ்நானகன் சொன்னான். யோவான் க, உங. நானும் அப்படித்தான். பகலில் நான் கூப்பிடுகிற பராபரனுடைய சத்தமாய் இருக்கிறேன். பராபரன் ஒரு வேளை என்னைக் கொண்டு கண்டிப்பாகவும், சில வேளை சாந்தமாகவும், சில வேளை நயமாயும், சில வேளை பயமாயும், சில வேளை நட்புக் காட்டியும், ஆறுதல் சொல்லியும், சில வேளை பயங் காட்டியும், ஊழுக்கியும் கூப்பிடுகிறார். நான் வேசாறிப் போகத்தக்களையாக என் முழு பெலத்தையுங்கொண்டு கூப்பிடுகிறேன். ஓயாமல் என் கண்ணீர்களோடே புத்திசொல்லுகிறேன், ஆதலால் என் கண்ணீரும் கூப்பிடுகிறது. என் வேர்வைத் துளிகளும் கூப்பிடுகிறது. ஆ பிரசங்கத்தொட்டி பேசக் கூடுமானால் அதற்குச் சாட்சிசொல்லும். என் இரத்தத்துளிகளும் கூப்பிடுகின்றன. கண்டிப்பான பிரசங்கத்திலே என் கண்ணிமைக்குக் கிழாக இரத்தம்போல் சிவந்துபோகிறதை அநேகந்தரம் நீ காணவில்லையா. ஆ என் சத்தத்துக்கு ஒரு எதிர் சத்தம் பிறக்கும்படியாக ஆண்டவருக்குச் சித்தமாகாதா. பராபரன் முன்சத்தங் காட்டுகிறதுபோல் ஆத்துமாக்கள் பின் சத்தங் காட்டார்களா. ஆனால் ஐயோ, அநேகரைக் குறித்து அங்கே ஒரு சத்தமே ஒழிய மறுசத்தங் காணேனென்று பரிதாபத்தோடே சொல்ல வேண்டும். ஒரு காக்காய் வீட்டின்

மேல் இருந்து கூப்பிடுகிறது என்ன பிரயோசனம். ஒரு சத்தமே ஒழிய வேறல்ல. காக்காயும் போதகரும் ஒன்றாய்ப்போகிறார்களே. பராபரன் இரங்கவேண்டும். ஆத்துமாவே, பராபரன் கூப்பிடுகையில் கேள், மனதிலே இடங்கொடு. அவர் கூப்பிடுகிறதிலே சீக்கிரம் வேசாறிப்போக இடம் உண்டே.

இராக்காலத்திலே நான் கூப்பிடுகிற திருச்சபையின் சத்தமாயும் இருக்கிறேன். ஆத்துமாக்களுடைய இக்கட்டுகளைச் செபத்தினால் பராபரனுக்கு முன்பாகக் கொண்டுபோகிறேன். எல்லாம் அறிந்திருக்கிறவர் இதையும் அறிந்திருக்கிறார். நான் தாழ்விலிருந்து கூப்பிடுகிறேன். என் கண்ணீரும், ஆ கர்த்தரே, உதவிசெய்யுமென்று கூப்பிடுகிறது. என் நரம்புகளிலே இருக்கிற இரத்தமும், ஆ கர்த்தரே, எப்போது தயவு வைப்பீர்; கர்த்தரே, தேவரீர் மீட்டிரட்சித்த உமது சனத்தின் மேலே கிருபையாய் இருமென்று கூப்பிடுகிறது. அடிக்கடி அந்தச் சத்தம் வெறும் சத்தமாகத் திரும்பிவந்துவிடுகிறது. நீ கேட்காதபடியால் பராபரனும் என் சத்தத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறார். அது மனஸ்தாபமாயிருக்கிறது. அடிக்கடி அந்தச் சத்தத்துக்கு இன்பமான ஒரு வதில் சத்தம் பிறக்கிறதும் உண்டு. ஆ கர்த்தரே, எப்போது தயவு வைப்பீரென்றால், தயவு வைப்போம் என்கிற பதில் சத்தம் உண்டாகும். அது முசிப்பாறுதலைக் கொடுக்கிறது.

கிறிஸ்துவின் ஊழியக்காரனே, போதிக்கிறதும் செபம்பண்ணுகிறதும் உன் கிரியையாயிருக்க வேண்டும்.

உஅ. பிரானம்.

## சீவன் பறந்தோடிப் போகிறதைப் பற்றியது.

*சீவனுக்கும் மரணத்துக்கும் நடுவே ஒரு சிறு தப்படி மாத்திரம்.*

அந்தத் தப்படிக்குப் பேர் என்ன; கண் சிமிட்டு. ஒரு கண் சிமிளிப்பிலே ஒன்றைவிட்டு ஒன்றிலே விழுகிறோம். பிழைக்கிறதும் சாகிறதும் ஒரு நிமிஷம். மனுஷர் தங்கள் கணக்கை வெகு நீளமாக்குகிறார்கள். ஒருத்தன் ஐம்பது, பின்னொருத்தன் அறுபது, வேறொருத்தன் எழுபது, இப்படியாக நூறு வருஷம்மட்டும் நீளமாக்குகிறார்கள். வெகு தூரப்படி வெகு மோசம். அது எப்போதும் நன்றாய் வாய்க்காது. வெகு நாள் இருக்கிறதிலே எத்தனையோ சஞ்சலம் உண்டாயிருக்கிறது. அதிலே இருக்கிற வாழ்வோ மெத்தக் கொஞ்சம் ஆச்சே. எத்தனை நாள் உயிரோடிருக்கிறாயோ, அத்தனை அதிகமாய்ப் பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறாய். குறுகினகாலத்தையோ உன் கருத்திலே நினை. ஒரு நிமிஷம் உன்னை எப்படியும் பிடிக்கும். அது எப்போது என்று உனக்குத் தெரியாது. எனக்கு ஒவ்வொரு நிமிஷமும் என் கடைசி வேளையாயிருக்கும். உனக்கும் ஒரு திட்டம் வைத்தாயிற்று. ஆனால் அது எத்தனை கிட்டியிருக்கிறதென்று உனக்குத் தெரியாது. நான் என் லக்குக்கு நேராய் இருக்கிறேனோ இல்லையோ என்பதைவிட பின்னொன்றும் நினையேன். நீ ஒருவிசை பயணத்துக்கு விடைகேட்க வேண்டும். எப்போது என்று உனக்குத் தெரியாது. நான் நாள்தோறும் என் சரீரத்தோடே அனுபவித்துக்கொள்ளுகிறேன். நான் படுத்துக்கொள்ளுகிறபோது சரீரம் தன் கல்லறையில் இளைப்பாறப்போகிறாப்போலிருக்கிறபடியால், என் ஆத்துமாவைப் பராபரன் கையில் ஒப்புக்கொடுக்கிறேன். அப்பொழுது ஆத்துமா சரீரத்தை விட்டுப் பிரிந்து போகிறது போலிருக்கிறது.



என் இருதயமே, நீ இதைக் கவனி. இப்போ நீ பிழைத்திருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் உன் ஆயுள் குறைகிறது. நாழிகை செல்லச் செல்ல நமது ஆயுசுகாலம் வளருகிறதும் இறங்குகிறதுமாயிருக்கிறது. எத்தனை சின்ன தப்படியை அந்தச் சீவன் காண்கிறதோ, அத்தனைக்கும் சுறுக்காய் அந்த நேரம் ஓடிப்போகும். ஆ நீ எங்கும் உன்னோடுகூட மரணத்தைச் சுமந்துகொண்டு திரிந்தாலும், மரணத்துக்கு அத்தனை அச்சமற்றிருப்பது எப்படி. உன் சரீரம் மரண சரீரம் அல்லவோ. பாவம் அதில் வாசம்பண்ண இல்லையா. ரோமர் எ. மரணத்தின் தாய் அதில் இருக்கிறதே. அநேகம் பெலவீனங்களை நீ உணருகிறாயே. அவ்வுணர்வு மரணத்தின் முன்தூதன் அல்லவோ. எத்தனை ஆடு, கோழி, மீன்களை உன்னிடத்தில் நீ அடக்கம்பண்ணியிருக்கிறாய். நீயே பிரேதக் குழியாயிருக்கையில் உன் குழியை நினையாமல் இருக்கிறதென்ன. ஆ மரணத்துக்கு உன்னை ஆயத்தம்பண்ணிக்கொள். எவனை மரணம் ஆயத்தம் இல்லாதவனாகக் கண்டுபிடிக்கிறதோ, அவன் நிர்ப்பாக்கியன் தானே. மரணம் ஒரு நிமிஷமாகிலும் உனக்குக் காத்திராது. உன் சீவனின் கடைசி நிமிஷம் உன்னை எப்படி விடுகிறதோ, அப்படியே நித்தியம் உன்னை ஏற்றுக்கொள்ளுகிறது. இதை நினைத்து எப்போதும் ஆயத்தமாய் இருக்கிறது. சாவு தூரமாய் இருக்கவில்லை. இதுவே நான் சொல்லும் யோசனை

உக. தியானம்.

## பராபரனிடத்திலே ஆத்துமாவுக்கு உண்டாயிருக்கும் இளைப்பாறுதலைப் பற்றியது.

துவக்கத்திலே முடிவு, முடிவிலே துவக்கம்.

சூரியனிடத்திலே அப்படியிருக்கிறது. அது தன் ஓட்டத்தைத் தொடங்குகிற இடத்திலே தானே அந்த ஓட்டத்தையும் முடிக்கிறது. அது எங்கே அதை முடிக்கிறதோ அங்கே இருந்து தானே அதைத் திரும்பத் தொடங்குகிறது. மனிதனுக்கும் அப்படித் தானே இருக்கிறது. அவனுக்குச் சீவனின் துவக்கமே சீவனின் முடிவாயிருக்கிறது. புது நிமிஷமே புது சீவனும் புது மரணமுமாயிருக்கிறது. நாம் பிழைக்கிறது ஒரு சின்னப் புள்ளியாயிருக்கிறது. மற்ற நிமிஷம் எல்லாம் கழிந்துபோனதும் மரணத்துக்கு அடுத்ததுமாயாவது, இனி வரப்போகிறதும் நிச்சயமற்றதுமாயாவது இருக்கிறது. அவன் சீவகாலத்தின் முடிவு நித்தியத்தின் துவக்கமாயிருக்கிறது. எப்படி வருகிறதோ அப்படியே போகிறது.

ஆகையால் மனிதனே, நித்தியத்தை நினை. நீ நன்மையோடே சீவகாலத்தைப் பின்விட்டால் மரணம் உன் சீவனின் முடிவாயிராமல், அதின் துவக்கமாயிருக்கும். இரத்த சாட்சியாகிய சேசிலியாள் என்கிறவள் சொல்லுகிறதுபோல், நீ சாகாமல் உன் நிர்ப்பாக்கியம் மாத்திரம் சாகிறது. நீ மரணத்தின் வழியாகச் சீவனுக்கு உட்படுகிறாய். அது முன் இருந்த சீவனிலும் வாசியானது. முன் இருந்தது மகா பிரயாசையான சீவன், இப்போது வருகிறதோ இளைப்பாறுதலான சீவன். முந்தின சீவன் நிர்ப்பந்தம் நிறைந்தது, இனி அகப்படும் சீவன் சந்தோஷம் நிறைந்தது. முன் இருந்த சீவன் அநித்தியம், இனி வருகிறதோ நித்தியம். ஆகையால் நீ இழந்துபோனது என்ன, சம்பாதித்தது என்ன. பாக்கியமான மரணம் அடைவதற்கு ஏற்றபடி நடந்துகொள். அப்போது நீ ஒருக்காலும் சாகாதபடி பிழைத்திருப்பாய்.

ஒரு கிறிஸ்தவன் அப்படியே செய்கிறான். பராபரன் அவன் கிரியைகளுக்குத் துவக்கமும் முடிவுமாயிருக்கிறார். செபத்தோடே அவன் அதைத் துவக்குகிறான், தோத்திரத்தோடே அதை முடிக்கிறான். ஒவ்வொரு முடிவும் ஒரு நவமான துவக்கத்தைக்கொடுக்கிறது. அவன் வீணனாயிருக்கக் கூடாது. ஒருக்காலும் நிற்காமல் ஓடுகிற ஞானக் கெடியாரமாயிருக்கிறான். கர்த்தருக்குள் செய்யப்பட்ட ஒரு கிரியை அவனுக்கு உண்டானால், அது அவன் உயிருள்ளமட்டும் ஒன்



யின் பிறகாலே ஒன்றுக்குத் [illegible] ரம்பத்திரும்ப வேறு கிரியை
கனைக் கொண்டு வரும்.

பராபரன் ஆத்தும [illegible] க்கு ஆதிகாரணராயிருக்கிறார்.
ஆகையால் அது அவரைவி [illegible] பின்னொரு இடத்திலும் தன்
ஆசை தீர இளைப்பாறக் [illegible] ரது. அது எங்கே இருந்து
புறப்பட்டதோ, அங்கே த [illegible] ன திரும்பப் போய் அடங்கி
மனரம்மியப்படுகிறது. எ [illegible] த கல்லு ஆகாசத்திலே தங்
காது. அது மறுபடியும் [illegible] பிலே தானே விழுந்து தங்க
வேண்டும். பூமி அதற்குத் த [illegible] மடிபோயிருக்கிறது. ஆகை
யால் உன் ஆத்துமாவுக்கு [illegible] சமா[illegible]னமும் இளைப்[illegible]றுத
லும் வேண்டுமானால், அ [illegible] அதைப் பரா[illegible]னிடத்
திலே கொண்டுபோ. [illegible] அதற்கு மனரம்மி[illegible]ம் உண்
டாக்கும் காரியம் அகப்படும்

௩௰. [illegible]னம்.

## உபத்திரவத்தில் உண்டா[illegible]ம் ஆறுதலைப் பற்றியது.

சிங்கத்தி[illegible] தேன்.

“பலத்திருக்கிறதிலிருந்து [illegible]த்திப்பு வந்தது” என்பது சிம்சோன் சொன்ன விடுகதை. நியாயாதி. ௧௪, ௧௪. பராபரன் கோபமாகிறபோது, சிங்கம்போலும் பயங்கரமுள்ளவராயும் கொடூரமுள்ளவராயும் இருக்கிறார். ஏசா. ௩௮, ௰௩; எரேமியா, ௰; யோபு. ௩௰, ௨௧.

அப்படியிருந்தும் அவரிடத்திலே எனக்குத் தேன் அகப்படுகிறது. அதாவது, கோபமாயிருக்கையிலும் அவர் கிருபையை நினைக்கிறார். பரமபிதா தமது குமாரனுக்கு இஸ்பைய மலைத் தோட்டத்திலே இரத்தவேர்வை வேர்க்கும்படி செய்தபோது காண்பித்த அவ்வளவு கடுங்கோபத்தைப் போல் பின்னை எப்போதாகிலும் அவர் காட்டினதுண்டா என்று நீயே சொல்லு. அப்படியிருந்தும் தேவசுதன் அக்[illegible]லே வேளையிலும் பிதாவை நோக்கிக் கூப்பிடவில்லையா. தேவநீதியில் உண்டாக்குகிறதானாலும், தேவதயை மதுரமும் ச[illegible]ந்தோஷமும் கொடுக்கிறது. நியாயப்பிரமாணத்தின்படி பா[illegible]த்தால் அவர் பயப்படத்தக்கவர். சுவிசேஷத்தின்படி பார்க்கில் அவர் மகா கிருபையுள்ளவர். சத்துருவுக்குப் பயங்கரமாயும் சிநேகிதருக்குக் கடாக்ஷமுள்ளவராகவும் இருக்கிறார்.

Müller, Spiritual Hours.

பிசாசும் ஒரு சிங்கம
இரையைக் கண்டு கெர்ச்சி
துமாயின் மேல் கெர்ச்சிப்
பான அம்புபோல் பயப
மை வாங்கிக்கையில், அது
ஆறல் அதைக் கிட்டிச்சே
கண்டுபிடிக்கிறேன். ஏனெ
கூடும்; ஆசைப்படக் கூடு
டுமென்கிற மனது அவனு
அல்லாமல் அவன் என
ஆகாது. பராபரன் உட
என் கிட்ட அனுக ஒன்று
மாகவும் என் இடப்பி
பிசாசு இயேசு வுக் கொ
அப்படியிருந்தும் அதி
இயேசுவினிடத்திலே சர
கண்டு பிடிக்கலாயிற்று.
மெத்தவும் பிரயாசப்பட்
ரு தன் சகோதரரைப் ப
டானே. "நீ சிங்கத்தின் ட
நடந்து, சிங்கக் குட்டியை
மிதிவாய்" என்கிற வார்த்
கொடுத்திருக்கிறார். சங்கீ

றது. ஒரு சிங்கம் தன்
பால், அதுவும் நமது ஆத்
கபேது. ரு, அ. நெருப்
க்க விசாரங்களால் நம்
பயங்கரமாயிருக்கிறது.
அதினிடத்திலே தேனைக்
சாத்தான் என்ன செய்யக்
குச் சேதம் பண்ணவேண்
ண்டு. ஆனால் பராபரனை
சேதம்பண்ண அவனாலே
காடுத்தாலொழிய அவன்
ன் மனதுக்கு விரோத
தவியாயிருக்க வேண்டும்.
வனவு பிரயாசப்பட்டது.
ம்தன்ன, கொலையுண்ட
த்தாரும் தர்கள் மேலேங்
பதுருவைச் சல்வி அரிக்க
ாலே ஆனதென்ன. பேது
த்தும் படியாகக் குனைப்பட்
விரியன் பாம்பின் மீதிலும்
ஜுசர்ப்பத்தையும் மிதித்து
ட்டை பராபரன் எனக்குக்
௧. பராபரன் பிசாசுக்களை

ஒன்றின்பின் ஒன்றாய் என் பாதத்தின் கீழ் நசுக்கிப் போடும்படி செய்யும்போது, அவர் தம்முடைய வசனத்தை மெய்ப்பிக்கிறாரென்று அன்றாட பரீட்சையினால் அறிந்திருக்கிறேன். ரோ. ௰௬, ௨௰. ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் சிங்கத்தைச் செயங்கொள்ளுகிறேன். அபிவிப்பு ௰௨. ௧௧. சிங்கம் ஆட்டுக்குட்டிக்குப் பயப்படுகிறது புதுமை அல்லவா.

மரணமும் ஒரு சிங்கமாயிருக்கிறது. அது எல்லா எலும்புகளையும் முறிக்கிற பயங்கரத்தின் இராசாவாயிருக்கிறது. ஆகிலும் அது தன்னோடே கூடத் தேளையும் ஆறுதலையும் கொண்டுவருகிறது. நான் அதை நிந்தித்து, "மரணமே, உன் கூர் எங்கே" என்று சொல்லலாம். நீ கொண்டுவாயா, உன் மனதுபோல் கொட்டினாலும், பெருங்காற்று, பெருமழை, மின்னல், இடி, பிசாசு, நரகம் உன்னோடே சேர்ந்தாலும், நான் கர்த்தருக்குள் மரிக்கிறவனாயிருந்தால், மரணமே என்னைச் சமாதானமாய்க் கொண்டுபோகிற வாகனமாயிருக்கும். என் சத்துரு என்னைப் பயங்கரப்படுத்தி, கெர்ச்சிக்கிற சிங்கம்போல் என்னை எதிர்த்துவந்தாலும், இந்தப்



பயங்கரமானவனிடத்திலே எனக்குத் திருப்பு உண்டாகும். அது என்னைத் தாழ்த்திப் பண்ணப் பார்க்கையில், என்னை உயர்த்திப்பண்ண வேண்டியதாகிறது. அது என்னிடத்திலிருந்து பெருமைச்சு முறைப்படும்படி என்னை நெருக்குகிறது. ஆனால் ஒரு சின்ன பெருமைச் சிறைவேலை நாளையைச் [illegible] ஒருவிக்கப் பறந்தோடப்பண்ணுகிறேன். ஆகையால் [illegible] கரியாதே.

௩௬. தியானம்.

## ஞான வெளியைப் பற்றியது.

மதுபானம் என்னைக் கொண்டு பேசுகிறது.

இப்படி ஒரு குடிகாரன் சொல்லுகிறான். இது நல்லதல்ல. நீ இதுக்கு [illegible]றாய். நான் பயப்படுகிறேன். மதுபானம் உன்னைக் கொண்டு பேசுகிறது. இப்படி பிசாசு உன்னைக்கொண்டு பேசுகிறது. பிசாசு உன் நாவை ஆளும்போது, உன் இருதயத்திலும் அது குடியிருக்கிறது. நம்முடைய உடலில் இருதயமும் நாவும் ஒரு நரம்பினாலே சேர்ந்து இசைந்திருக்கின்றது. இருதயம் பொல்லாங்கான பிசாசின் [illegible] பொங்குகிற ஊற்றுக்கண்ணாயிருக்கிறது. நாவு [illegible] வாய்க்கால்போலிருக்கிறது. அதின் வழியாய்ப் பிசாசு [illegible] நஞ்சைப் புறப்படப்பண்ணுகிறது. இப்படியிருக்க மதுபானத்துக்குள்ளே பிசாசு எப்படி நுழையும் என்று நீ கேட்கிறாய். நேசனே, பிசாசு பாம்புக்குள்ளே எப்படி புகுந்தது. அதுக்கு வெகு தந்திரமாய் ஒரு வஸ்துவுக்குள் புகுந்துகொண்டு, அவ்வழியாய் இருதயத்திலே நுழையத்தெரியும். மெய்யாகவே அதுக்கும் எனக்கும் கவைவேண்டாம். அது பாம்பைக் கொண்டு ஏவாளையே மோசம் போக்கியிருக்க உன்னையும் என்னையும் விடுமா.

நல்லது அது இருக்கட்டும். மதுபானம் உன்னைக் கொண்டு பேசுகிறதென்று நீ வீம்பாய்ச் சொல்லுகிறாயே. நானும் அப்படித்தானே வீம்பு பேசுவேன். மதுபானம் என்னைக்கொண்டும் பேசுகிறது. உன்னைக்கொண்டு அது பேசுகிறதைப்பார்க்கிலும் அநேகம்விசை என்னைக்கொண்டு பேசினாலும் பேசும். நான் பிரசங்கம் பண்ணும்போது, பரிசுத்த ஆவியின் நிறைவு என் வாயின் வழியாய் எப்படி ஊறிவருகிறதென்கிறதை நீ பார்க்கிறாயே. சில வேளைகளில் என் இருதயம் ஆயிரம் பாய்ச்சலாய் நின்று களிக்கிறது. ஒவ்வொரு

பாய்ச்சலும் பரமண்டலத்துக்கு உட்படுகிறது. அந்த வேளை எனக்கிருக்கிற தவிரியமானது நான் என் இயேசுவோடே கூட சட்டி, பட்டையம், அக்கினிசுவாலை, இடுக்கண், மரணம் இதுகளெல்லாவற்றிற்கும் நடுவே விழுந்து அடித்துக்கொண்டு போகிறதுபோலிருக்கிறது. அப்போது நான் என்னவிதமாயிருக்கிறேனென்று எனக்குத் தானே தெரியவில்லை. என் ஆவி பரவசமானதுபோலிருக்கிறது. மாமிசசிந்தையுள்ள மனுஷனுக்கு இது கிரகிக்கக் கூடாதகாரியம். பரமண்டலத்தின் பெலத்தை ருசித்தவன் மாத்திரம் நான் ஞான வெறியாயிருக்கிறேனென்று அறிந்துகொள்ளுகிறான்.

இன்னமும் கேள். என் இயேசு எனக்கு மகா கசப்பான துக்கம் வரப்பண்ணி, [illegible] அதை ஆற்ற நினைக்கும்போது, அவர் என்னைத் [illegible] திராட்சப்பழரசத்தின் வீட்டிலே அழைத்துப்போகிறார். உன்னதப்பாட்டு உ, ச. தமது செல்வங்களின் ஆறுதலால் என் தாகத்தைத் தீர்க்கிறார். சங். ௩௬, அ. அப்போது நான [illegible] மிகுதியினால் [illegible]யப்படுகிறேன். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். மத். ௧௨, ௩௪. அப்போது என் இயேசு எத்தனை மதுரமாயிருக்கிறாரென்று நான் அவர் பேரில் பாடி பேசுகிறேன். சந்தோஷத்தால் நான் பூரித்து, ஆவியில் என்னோடே ஒரே கட்டாயிருக்கிற ஆத்துமாக்களைப்பார்த்து: ஆ வாருங்கள், கர்த்தர் நல்லவர் என்றதை ருசித்துப்பாருங்கள், அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்று கூப்பிட்டுச் சொல்லுகிறேன். சங். ௩௪, அ. அப்போது பேசுகிறது நானல்ல, ஆவியின் நிறைவாகிய பரமசந்தோஷத்தின் மதுபானமே என்னைக்கொண்டு பேசுகிறது. அப்போஸ்தலன் பவுல் எபேசி. ரு, ௧௮-ல் சொல்லுகிறதுபோல் எனக்கும் இருக்கிறது. ஆவியினால் நிறையப்பட்டு சங்கீதங்களாலும் கீர்த்தனங்களாலும் ஞானப்பாட்டுகளாலும் உங்களுக்குப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம் பண்ணுங்களென்பது தானே. பார், மதுபானம் என்னைக்கொண்டு மாத்திரம் பேசாமல், என்னைக்கொண்டும் இப்படி பேசுகிறது. ஆ இயேசுவே, உமது மதுரத்தை நான் என் உள்ளத்திலே ருசிக்கப்பண்ணும். உமது மேல் வாஞ்சாத தாகத்தை எனக்குத் தாரும்.



௩௨. தியானம்.

## பிசாசோடே சமாதானமாயிருப்பதைப் பற்றியது.

பிசாசுக்கு விரோதமாய்ச் செய்யும் யுத்தத்தை [illegible] ஒருக்காலும் ஓய்ந்திராதே.

அது அப்படி ஓய்ந்திருக்கிறதே இல்லை. பிசாசுக்கும் [illegible]கும் சண்டையில்லாமல் இருக்கவேண்டுமென்கிற மனது நமக்கு மிகவும் உண்டு. ஆ, பிசாசு என்னோடே சண்டை போடாமலிருந்தால் தாவிளை என்று சிலர் சொல்லுகிறதுண்டு. ஆனால் அது ஒருக்காலும் ஒருத்தரோடே சமாதானமாயிருக்க மாட்டாது. அது கலகஞ் செய்கிற ஆவி. ஆகையால் அது அப்படியிருக்கமாட்டாது. [illegible]தப்படுத்த அதுக்கு மெத்த ஆசையுண்டு. பராபரன் உத்தரவு கொடுப்பாரேயாகில் அது ஒவ்வொரு நிமிஷமும் தன் நகங்களினால் நம்மை இறுகப்பிடிக்கப்பார்க்கிறது. தனக்கு இன்னம் கொஞ்சக்காலம் மாத்திரம் இருக்கிறதென்கிறதையும் அது நன்றாய் அறிந்திருக்கிறது. அறிவி. ௧௨, ௧௨. ஆதலால் அது தூங்குகிறதில்லை. மனுஷனே, நீ இவ்வளவு அச்சமற்றவனென்பது எனக்கு ஆச்சரியம். சத்துரு விழித்திருக்க, நீ தூங்குகிறாய். நீ தூங்குகிறபோது அது உன் நிலத்திலே எத்தனை களைகளை விதைத்துப்போகும். சத்துரு உன்னைச் சுற்றித்திரிந்து எந்தவழியாய் உள்ளே நுழையலாமென்று பார்க்கிறது. நீ அதுக்கு உன் வாசலையும் பலகணியையும் திறந்து வைத்து, உன்னோடே சண்டைபண்ணாமல் இருப்பேனென்று அது சொல்லிற்று என்கிறாய். அது பொய்யன், தன் வார்த்தையைக் காப்பாற்றுகிறதில்லை.

ஆ, விழித்திரு. பொல்லாத நேரம் இவ்வளவு கிட்டிவந்ததென்று ஆருக்குத் தெரியும். அது பொருளையும் இரத்தத்தையும் அல்ல, ஆத்தும சம்பத்தைக் கெலித்துக்கொண்டு போகப்பார்க்கிறது. பிசாசு என்னோடே சமாதானமாகவும் சிநேகமாகவும் இருக்கிறதாக எவ்வளவு சொன்னாலும் நான் ஒருக்காலும் சற்றும் நம்பேன். ஏனென்றால் நான் நினையாத வேளையிலே அது என்மேல் வந்து விழவேண்டுமென்கிற நினைவு அதுக்கு இருக்கிறது. நான் பிசாசுக்கு விரோதமாகப் பிடித்திருக்கிற கொடியிலே "பராபரனுக்குச் சிநேகிதன், பிசாசுக்குச் சத்துரு" என்ற வாசகம் எழுதியிருக்கிறது. பராபரனுடைய சிநேகம் எனக்கு இருந்தால், பிசாசின் சமாதானம் எனக்கு என்னத்துக்கு. பராபரன் பலபல பிசாசுகளை என் காலின் கீழ்ப்போட்டு நசுக்கி

ளுரே. நான் பிசாசுடனே சமாதானம் பண்ணினால் என் பராபரனுக்கு வெட்கமாச்சே. பராபரன் பிசாசின் வல்லமைக்கு என்னை நீங்கலாக்கிக் காப்பாற்ற அவருக்கு வல்லமை போதாதென்கிறது போலாகும்.

[illegible]லே கூடினமட்டும் எல்லாரோடும் சமாதானமாயிருப்பேன். ஆனால் பிசாசு லோகம் மாங்கிஷத்தோடே சமாதானமாயிருக்கமாட்டேன். பிசாசோடே எதிர்த்து நிற்பேன், அப்போது அது என்னைவிட்டு ஓடிப்போகும். யாக்கோபு ௪, ௭. உலகத்தின் உபதேசத்தையும் அதின் நடக்கைகளையும் கடிந்துகொள்ளுவேன். அப்போது அது வெட்கிப் போகும். என் மாங்கிஷத்தின் பேரில் எப்போதும் ஜாக்கிரதைப்பட்டுக்கொண்டே இருப்பேன். அப்போது அது என்னை வெல்கிறது அத்தனை லேசல்ல. இந்த மூன்றின் சிநேகத்தையும் கட்டோடே தள்ளுவேன்.

௩௩. தியானம்.

## பராபரனுடைய சாயலாகப் புதிதாகுதலைப் பற்றியது.

இந்தச் சுரூபம் யாருடையது? மத். ௨௨, ௨௰.

இது என் பராபரனுடையதாயிருக்க வேண்டும். பின்னொருவருடையதாயிருக்கிறதற்கு எவ்வளவும் நியாயம் இல்லை. உன் இருதயம் பலகைபோலிருக்கிறது. அதில் பராபரனுடைய சுரூபத்தையும், பிசாசு உலகம் பரலோகம் என்றவைகளின் சுரூபத்தையும், பின் என்ன சுரூபம் வேண்டுமோ அதையும் அதில் எழுதிப்பதிக்கலாம். நீ எதைச் சிநேகிக்கிறாயோ, அதுவே உன் மனதில் உருவாகும். நீ பராபரனைச் சிநேகித்தால், பராபரனுடைய ரூபம் உன் இருதயத்தில் பதியும். நீ உலகத்தைச் சிநேகித்தால், நீ உலகத்தை அதிலே கண்டுபிடிக்கிறாய். சிநேகம் அந்தச் சுரூபங்களைக் காட்டுங் கண்ணாடியாயிருக்கிறது. அது, உன் இருதயத்திலே பராபரனுடைய சுரூபத் தவிர வேறே சுரூபம் பதிக்கப்பட்டிருந்தால் உனக்கு ஐயோ.

பரிசேயருக்கு இயேசு இரட்சகர் சொன்னதை நீ நினைக்கவில்லையா. மத். ௨௨, ௨௧. பராபரனுடையதைப் பராபரனுக்குக் கொடுங்கொன்கிறாரே. நீ யாருடையவனென்று உன் சுரூபத்திலே வெளியாகிறது. பராபரனுடையவனோ, பிசாசினுடையவனோ, இம்மையிலே யாருடைய சுரூபத்தைத்



தரித்துக்கொண்டு திரிகிறாயோ, அவருடையவனாய்த் தானே மறுமையில் என்றென்றைக்கும் இருப்பாய். நித்திய காலமெல்லாம் பிசாசினுடையவனாய், உனக்கு வரப்போகிறதென்னவென்று நன்றாய் நினை. நான் ஏற்கனவே புத்திமானாகி, இதுகாரியத்திலே சுரூபம் எழுதுகிறவர்களுக்கு ஒப்பாயிருக்க விரும்புகிறேன். அவர்கள் தாங்கள் ஒரு சுரூபத்தை எழுதும்முன் ஒரு மாதிரியைத் தங்களுக்கு முன்னே வைத்து, திட்டமாய்ப்பார்த்து அதின்படியே அந்தக் குறிப்பு அளவு எல்லாம் எடுத்துக்கொண்டு, கூடியமட்டும் அதைப் போல் சரியாய் எழுதுவார்கள். அப்படியே நானும் சேசுநாதர் இயேசுவை எனக்கு மாதிரியாக வைத்துக்கொள்ளுகிறேன். ௧ பேது. ௨, ௨௧. அவருடைய உபதேசத்தையும் நடக்கையையும் எப்போதும் என் நினைவில் வைக்கிறேன். அவருடைய சாயலாக மகிமையின் மேல் மகிமையாய் மறுரூபப்படும்படி நான் பிரயாசப்படுகிறேன். ௨ கொரி. ௩, ௰௮. உடனே அந்த மாதிரிப்படி சுரூபம் என்னிடத்திலே உண்டாகாவிட்டாலும், அவர் ரூபம் வடிவுள்ளதாய் என்னில் ஏற்படுமட்டும் அவரை என் கண்ணாடியாக வைத்து, அதிலே என்னை நாள்தோறும் ஓயாமல் உற்றுப்பார்த்துக்கொண்டு வருவேன். அவருக்கு முற்றிலும் ஒப்பாகச் சரியாய் என்னை உருப்படுத்த என்னாலே ஆகாவிட்டாலும், எவ்வளவாகிலும் அவருடைய சாயலுக்கு ஒத்துவரும்படி என்னாலே ஆனமட்டும் பிரயாசப்படுவேன். அவர் எப்போதும் எனக்குக் குரு. நான் சீஷப்பிள்ளையாய் மட்டும் இருக்கிறேன். அவரே வழியாயிருந்து முந்திமுந்தி அடி எடுத்து வைக்கிறார். நான் அதை ஊன்றிப் பார்த்து அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறேன். அளவில்லாத [illegible]முள்ள இயேசுவே, நான் உம்மைப்போல் உருப்பட்டு [illegible]றென்றைக்கும் உம்முடையவனாயிருக்க உம்மைத் தானே என் இருதயத்திலே பதிந்தருளுவீராக.

௩௪. தியானம்.

## பொறுமையைப் பற்றியது.

ஒரு மூலிகையால் எல்லா வியாதியும் தீரும்.

ஆனால் இந்த மூலிகை எல்லாத் தோட்டங்களிலேயும் முளைக்காது. இது மிகவும் அபூருபமாயிருந்தும் விலையுயர்ந்ததல்ல. இது கசப்பாயிருந்தும் தித்திப்புண்டாக்கும்.

மருந்து விற்கிறவன் வசத்திலே இது அகப்படாது. ஆகிலும் வயித்தியர் இந்த மூலிகையைத் தேடிச் சாப்பிடச் சொல்லுவார்கள். இது பூமியிலே விளைகிற மூலிகை அல்ல. பரலோகத்திலே விளைகிறதாயிருக்கிறது. இந்த மூலிகைக்குப் பெயர் தெரியுமா. பொறுமைதான். பொறுமையில்லாமை துக்கத்தையும், கலக்கம் கஸ்தியையும், கஸ்தி வியாதியையும் உண்டாக்குகிறது. எவ்வளவுக்குப் பொறுமையில்லையோ அவ்வளவுக்குச் சரீரம் வியாதிப்படுகிறது. பொறுமையோ, இளைப்பாறுதலைக் கொடுக்கிறது. இளைப்பாறுதல், கஸ்தியை ஆற்றுகிறது; கஸ்தி அமர்ந்தால், புண் ஆறிப்போகிறது. பொறுமை சகல வியாதியையும் தீர்க்கிறதென்று உனக்கு இப்போது தெரிகிறதா.

நான் பொறுமையாயிருப்பேன். நான் துன்பப்பட வேண்டுமென்கிறது பராபரனுடைய சித்தம். தகப்பன் வேண்டும் என்பது பிள்ளைக்குச் சம்மதியாயிருக்க வேண்டும். என் பாவத்துக்காக இதையும் இதிலும் அதிகமாகவும் நான் பட நியாயமுண்டு. ஆகிலும் பராபரன் சிறுமையிலே தமது கிருபையோடே எனக்கு மிகவும் கிட்டியிருக்கிறார். அவர் எனக்கு வெகு தூரமாயிருக்கிறவராகக் கண்டாலும், அப்போது எனக்கு அதிகங் கிட்டியிருக்கிறார். எவ்வளவு கடினமாய் அடிக்கிறாரோ அவ்வளவு தயவாகவும் இருக்கிறார். துன்பம் எனக்கு நன்மையாக முடியவேணும். சுவாமிக்கு மகிமையாக நான் படும் துயரம் எவ்வளவு அற்பமானாலும் பலன் கொடுக்கும். ஆம், ஒருவன் முழு லோகத்தையும் நமக்குக் கொடுத்தாலும் அவ்வளவு பலன் இராது. எனக்குமுன் இருந்த பரிசுத்தவான்கள் எத்தனை பாடுபட்டார்கள், மகா கஸ்திவாதனையிலே எவ்வளவு மனமகிழ்ச்சியாயிருந்தார்கள். என் இயேசு எத்தனை பாடுபட்டார். அப்படியானால் நான் எம்மாத்திரம். என் நிமித்தம் இவ்வளவு பிரயாசப்பட்ட அவர் நிமித்தம் நான் கொஞ்ச உபத்திரவப்பட்டால், அதற்காக மனஸ்தாபப்படுவேனோ. இல்லை, இல்லை. இன்னம் இதைப் பார்க்கிலும் பெரிய பாடு வந்தாலும், ஆம், நரகவேதனைபோல இருந்தாலும் பரவாயில்லை. என் சிறுமையின் பாத்திரத்தில் அவர் தமது உதட்டிலிருந்து எத்தனை திரள் மதுரமான தேன் துளிகளை விழவிடுகிறார். துன்பம் போனபிறகு எவ்வளவு இன்பமான பிரகாரமாக என்னைச் சந்தோஷிப்பித்து, என் போராட்டம் முடிந்த பின்பு எவ்வளவு மகிமையாய் என்னை முடி சூட்டுவார்.

இப்படியிருக்க என் இருதயமே, நீ இன்னம் பொறுமை ஆகாயோ, அப்படியல்லவென்றால் இருக்கட்டும். ஆனால்



பொறுமையில்லாதிருக்கிறதினால் பலன் என்ன. உன் துன்பத்தை நீ தானே பெரிதாக்குகிறாய், உன் சுமையைப் பாரமாக்குகிறாய், உன் வேதனையை அதிகக் கசப்பாக்குகிறாய். நான் என் இயேசுவோடேகூட: பிதாவே, என் சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று சொல்லுவேன். மத். ௨௬, ௩௯. இந்த வார்த்தை பராபரனுக்கு எல்லாவற்றிலும் மகாப்பிரியம்.

## ௩௬. தியானம்.

## மீத்துவைக்குதலைப் பற்றியது.

மீத்துவைத்தது ஆகியாவது.

இதை நம்புகிறதார், ஆகிலும் இது நிசந் தானே. மீராத வீட்டில் ஒன்றும் இராது. உலகத்தார் மீந்த துணிக்கைகளைத் தாலாலே மிதித்துத் தள்ளுகிறார்கள். ஆதலால் அவைகளைச் சேர்த்துவைக்கிற சுடையவர்களுக்குக் காணாமற் போனதாகத் தோன்றுகிறது. அவர்கள் சாயங்காலத்துக்குள்ளே கையில் உள்ளதை எல்லாம் செலவழித்துப் போட வேண்டுமென்கிற காப்புசீனர் சந்நியாசிகள்போல இருக்கிறார்கள். தங்களுடைய காசுகளைச் சீராய்ச் செலவழிக்க வேண்டுமென்கிற யோசனையில்லாததால், அநேகர் க்ஷேமமாயிருப்பார்கள். கிறிஸ்துநாதர் ஐயாயிரம் பேருக்குப் போசனம் கொடுத்தபோது, மீந்த துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடை நிறையச் சேர்த்து நிரப்பினார்களென்பதை வாசிக்கிறோம். ஆதலால் மிஞ்[illegible]தியான ஒரு சோற்றையாகிலும் எறிந்து போடாதே. [illegible]னால் நீ உன் சகல வல்லமையையுங் கூட்டிப் பிரயாசப்பட்டாலும், ஒரு சின்னப் பருக்கையையாகிலும் சிருஷ்டிக்க [illegible] ஆகாது. பராபரனுடைய ஈவுகளை ஊதாரிச் செலவு [illegible]னால் அவைகள் பறந்துபோகும், சேர்த்துவைக்கிறதினால் துணிக்கைகள் விர்த்தியாகிக்கொண்டுவரும். இறைத்தல் தரித்திரத்தைக் கொண்டுவரும், சேர்க்குதல் சம்பத்தை உண்டுபண்ணும். துணிக்கைகளைப் பத்திரமாய்ப் பார்த்தால், ஒவ்வொரு சின்ன துண்டிலேயும் பராபரனுடைய நவமான ஆசீர்வாதம் உண்டு. நாளையத்தினத்துக்காகக் கவலைப்பட வேண்டாமென்பது மெய்தான். அந்த நாள் வரும்போது அதற்கேற்றதான யோசனையும் வரும். சீவனைக் கொடுக்கிற பராபரன் அதற்கு வேண்டிய அப்பத்தையும் கொடுப்பாரே. ஒன்றுங் கொடாமல் அவர் தம்மைவிட்டு

நம்மைப்போகச் சொல்ல மாட்டார். ஆகிலும் இன்றைக்குத் தானே கையிலுள்ளதெல்லாம் செலவழிந்து போகவேண்டுமென்று நாம் நினைக்க ஒண்ணாது, நாளையும் சாப்பிடவேண்டுமே. அந்தந்த நாளுக்குத் தேவையான செலவுக்கு அதிகமாய்ப் பராபரன் நமக்குப் படி அளந்துகொடுக்க ஐசுவரியமுள்ளவர். கிருபை சம்பன்னரான பராபரன் நமக்குப் பலவிதமான நன்மைகளையும் திரளாய் அனுபவிக்கக் கொடுக்கிறார். ௧ திமோ. ௬. அவர் தமது கை நிறைய கையை ஒரு நாளைப் படிக்குமாத்திரம் நிரப்பபோமென்று சொல்லவில்லை. அடிக்கடி நேரத்திலே வெகு வருஷங்களுக்குத் தேவையானதுகளை ஒருமிக்கக் கொடுக்கிறார். அப்போது நீ மிச்சம் வைத்தால் அது உனக்கு ஆஸ்தியாகும்.

ஆனால் இன்னம் ஒன்று சொல்லுகிறேன், கேள். பிசினித்தனம் மீத்து வைக்கிறதல்ல. பிச்சைக்காரரைப் பட்டினியோ போகவிட்டு மிஞ்சினதை எனக்கும் என் பிள்ளைகளுக்கும் எடுத்துவைப்பேனென்று நினையாதே. பராபரனிடத்திலே சேர்த்து வையாதது பிசாசுக்காகக் காக்கப்படும். பிச்சைக்காரர் பராபரனுடைய பொக்கிஷப்பெட்டியாயிருக்கிறார்கள். அங்கே உன்னுடையது பத்திரமாய்க் காக்கப்படும். பராபரனுடைய சிநேகிதருக்குச் செலவழிக்கிறது வீண்போகாது. அவர்களே நீதியை வைக்கிற மெய்யான சோற்றுக் கூடையாயிருக்கிறார்கள். அவர்களிடத்திலே உன் நீதி எல்லாம் பத்திரமாய்க் காக்கப்படுவதுமல்லாமல் அதிகமாய் விர்த்திக்கும். அவர்களை நீ ஆசீர்வதித்தால் உன்னைத் தானே ஆசீர்வதிக்கிறாய்.

௩௪. தியானம்.

## சிநேகிதரிடத்திலிருக்கும் உத்தம பட்சத்தைப் பற்றியது.

பட்சமும் பகையும் ஒன்றையொன்று சகித்துப்போகிறது.

நெருப்புக்கும் தண்ணீருக்கும் பகை. அப்படியிருந்தும் வெந்நீரிலே இந்த இரண்டும் இசைந்துப்போகிறது. பட்சமும் பகையும் விரோதிகள். ஆகிலும் தேவபத்தியுள்ள மனுஷனுக்குள்ளே இந்த இரண்டும் நன்றாய் ஒன்றை ஒன்று சகித்துக்கொண்டிருக்கிறது. அது எப்படியெனில், நான் பராபரனைச் சிநேகித்து, என்னிடத்திலும் மற்றவர்களிடத்தி



லும் பராபரனுக்கு விரோதமானதை எல்லாம் பகைக்கிறேன். சிநேகந் தானும் பகையுடையதாயிருக்கிறது. பராபரன் பாவத்தைப் பகைக்கிறாரே. அது என்னத்தினாலே, அது தாம் சிநேகிக்கிற தமது நீதிக்கு விரோதமாயிருக்கிறபடியினாலே தானே. நான் உன்னைச் சிநேகிக்கிறேன், ஆனால் உன்னிடத்தில் காண்கிற துர்க்கிரியைகளைப் பகைக்கிறேன். இதினிமித்தம் முழுமனதினாலேயும் நான் உன்னைச் சிநேகிக்கவில்லை என்று நினைக்கிறாயா. சிநேகமும் பகையும் இசைந்திருக்குமா என்கிறாயா. நன்றாய் இசைந்திருக்கும். அதெப்படியெனில் உன்னைச் சிநேகிக்கிறேன். உன் பாவத்தைப் பகைக்கிறேன். மனிதன் வேறும், அவன் செய்யும் பாவம் வேறுமாச்சுதே. உன்னையும் உன்னுடையதையும் வேறாய்ப் பிரி. அப்போது சிநேகத்தையும் பகையையும் பிரிக்கிறாய். உன் பாவம் விலகினால், என்பகையும் விலகும்.

சிநேகமும் பகையும் சிலரிடத்திலே மாத்திரம் சேர்ந்திருக்கும். சிலர் பகையில்லாமல் இருக்கிறார்கள். உன்னையும் உன்னுடையதாகிய பாவத்தையும் ஒன்றைப்போலே சிநேகிக்கிறார்கள். நீ பாவஞ் செய்கிறதைக் கண்டால் பேசாக் கண்சாடையாயிருந்து, நீ செய்கிற பொல்லாப்புக்குச் சம்மதப்பட்டாற்போல உன்னைக் கோபிக்காமலிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் உன்னைச் சிநேகிக்கிறார்களென்று நினைக்கிறாயோ, சிநேகிதர் அல்லவே. நான் ஒரு குழியிலே விழுகிறதை ஒருவன் கண்டும், என்னை எடுத்துவிடப் பாராமல் கிடந்தபடி கிடக்கட்டுமென்று இருக்கிறதுமல்லாமல், எனக்கு வந்த காரியத்தாழ்ச்சியைப் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தால், அப்படிப்பட்டவன் என்னைச் சிநேகிக்கிறவனோ. சிநேகம் தன்னுடைய கூடிய மட்டும் சரீரத்தை மாத்திரமல்ல, விசேஷமாக ஆத்துமாவையும் இரட்சிக்கப்பார்க்கிறது. உன்னுடையதாகிய பாவத்தைக் கடிந்துகொள்ளாமலிருக்கிறவன் உன்னுடையதைச் சிநேகிக்கிறதினிமித்தம் உன்னைப் பிசாசு கொண்டு போகிறதற்கு இடம் பண்ணுகிறான்.

சிலர் சிநேகம் இல்லாமல் உன்னையும் உன்னுடையதையும் பகைக்கிறார்கள். நீ பாவஞ் செய்தால், அவர்கள் கோபித்துக்கொண்டு புறப்பட்டுப்போய், உன்னை நிந்தித்து, குற்றமாய் நிர்ணயித்து, உன்னைப் பாராமல் விலகி, மற்றவர்கள் உன்னோடே பேசிப் பழகுகிறதற்காக வெறுப்பாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் உன்னை உத்தமமாய்ச் சிநேகிக்கிறவர்களென்று நினைக்கிறாயோ, ஒருக்காலும் இல்லை. சிநேகம் பிறனுக்கு நன்மையாக மாத்திரம் கோபிக்கிறது.

அவன் பாவத்துக்காக அது அமர்ந்திருக்கவும் அதை ஒத்துக் கொள்ளவும் கூடாதிருந்தும், அவனுக்கும் அவனிடத்திலிருக்கும் அவகுணத்துக்கும் வெகு தூரம் வித்தியாசம்பண்ணுகிறது. பிறன் குணப்படுகிறதற்கு உதவியான சகல உபாயங்களையும் செய்கிறதிலே இளக்கரியாது. அகுஸ்தீனு என்கிற வேதசாஸ்திரி: நீ மனுஷன் முகத்துக்காக அவன் துற்குணத்தைச் சிநேகிக்காமலும் அவன் துற்குணத்தின் நிமித்தம் அவனைப் பகைக்காமலும் இருந்து, மனுஷனை எத்தனைக்குச் சிநேகிக்கிறாயோ அத்தனைக்கு அந்த மனுஷனை அழுக்காக்கிற பாவத்தைப் பகைக்க வேண்டும் என்கிறார்.

நான் குற்றமற்றவன் அல்ல என்று அறிந்திருக்கிறேன். ஆகையால் என் குற்றங்களை எனக்குச் சொல்லிக்காட்டி என்னை எச்சரிக்கிற மனுஷனை எனக்கு நல்ல சிநேகிதனாக எண்ணுகிறேன். என் சிநேகிதனும் குற்றமற்றவனாயிருக்கக் கூடாதென்பதையும் அறிந்திருக்கிறேன். அதை நான் கண்டவுடனே அதற்காக அவனைக் கடிந்துகொள்ளுகிறேன். அவன் தப்பிதங்களுக்கு அநுசரணையாயிருக்கிறவன் அவனுக்குச் சிநேகிதனாயிருக்கக் கூடாது. தட்டான் பொன்னைச் செய்கிற பாவனையாய், நான் பாவத்திலே விழுந்த என் சிநேகிதனைத் துப்பரவாக்கப் பார்ப்பேனே அல்லாமல் அவனைப் புறக்கணித்துத் தள்ளிவிட மாட்டேன். வயித்தியனைப்போல் அவனைச் சொஸ்தமாக்கப் பிரயாசப்படுவேனே அல்லாமல் அவனைக் கைவிடமாட்டேன். தகப்பன் பிள்ளையை நடப்பிக்கிறது போல் நான் அவனைக் கடிந்துகொள்ளுவேனேயன்றி தள்ளிவிடேன். அவனைக் குணப்படுத்த நான் பார்ப்பேன். குணப்பட்ட உடனே பிரம்பை எறிந்துபோடுவேன். என் பட்சம் பகையைவிட்டும், என்பகை பட்சத்தைவிட்டும் ஒருக்காலும் பிரியாது. நீ உன்னைத்தானே சிநேகித்தால், உன் தப்பிதங்களை நான் சிநேகிக்கவில்லை என்கிற குறை என்மேல் வராது. நீ உன்னையே சிநேகிக்காவிட்டால், என்னைச் சிநேகிப்பதெப்படி. அப்படியானால் நீ உனக்கு ஆனாயாகிலும் சிநேகிதனாகத் தெரிந்துகொள். நான் உனக்குச் சிநேகிதனாகவே மாட்டேன்.



கஎ. தியானம்.

## கிறிஸ்துவை இழந்துபோவதைப் பற்றியது.

எல்லாம் போயிற்று, ஒன்றும் போகவில்லை.

சேதம் வந்ததென்று நீ முறைப்படுகிறாய். உன் சேதம் அவ்வளவு பெரிதா. என் பொருள் போயிற்றென்கிறாய். பொருள் போயிற்று, ஒன்றும் போகவில்லை. பொருள் போனாலும் அவருடைய அருள் உன்னை விட்டுப்போகாதிருந்தால், அதுவே உனக்கு என்றைக்கும் போதும். இந்த உலகப்பொருள் என்ன. ஒரு பிடிமண் அல்லவோ, இதை உன்னிடத்திலிருந்து பிடுங்கிக்கொண்டவனுக்கு அதினாலே பலன் என்ன.—என் சிநேகிதன் போய்விட்டான் என்கிறாய், ஒருவரும் போகவில்லை. உத்தம சிநேகிதர் பரலோகத்திலே இருக்கிறார். உண்மை பூமியிலே எங்கே அகப்படும்.—உன் பெண்சாதிபிள்ளைகள் போனார்களா, ஒருவரும் போகவில்லை. அவர்கள் உன்னுடையவர்கள் அல்லவே. பராபரன் தமக்குச் சம்மதியான வேளையில் அவர்களைத் திரும்ப எடுத்துக்கொள்வோம் என்கிற உடன்படிக்கையோடே அவர்களை உனக்குக் கொடுத்தாரே.—என் புருஷன் போனான், என் தகப்பன் போனான் என்கிறாயோ, ஒருவரும் போகவில்லை. தாய்தகப்பன் இல்லாதவர்களுக்குத் தகப்பனும், கைம்பெண்சாதிகளுக்கு நியாயம் விசாரிக்கிறவரும் பரமண்டலங்களில் வாசஞ்செய்கிறார்.—என் கீர்த்திபோயிற்றே என்கிறாய். ஒன்றும் போகவில்லை. குற்றமற்றவனாய்ப் பிழைக்கிறதே உத்தம கீர்த்தி. பரமண்டலத்திலே உன் பெயர் எழுதியிருக்கிறது, அதைக் கிறுக்கிப்போட ஆராலாகும்.—என் சீவன் போயிற்றென்கிறாய். உன் பிரயாசமும் நிர்ப்பந்தமும் போனதே அல்லாமல் வேறொன்றும் போகவில்லை. இனி அங்கே உனக்கு நல்வாழ்வு உண்டு. சாவு உனக்கு ஆதாயமாயிற்று.

ஆனால் கிறிஸ்தவனே, உனக்கு ஒன்றுபோனால் எல்லாம்போயிற்று. அது என்ன, இயேசு தாமே. அப்பா, இயேசுவை இழந்துபோகாதே. அவரை நீ எங்கே கண்டுபிடிப்பாய், சிலுவையிலே. அவரை எங்கே இழந்துபோவாய், நல்ல நாட்களிலே. உன் இருதயம் முழுவதும் நல்ல நாட்களை மாத்திரம் பற்றிக்கொண்டு நிற்கிறது. அது ஏனென்று கேட்டால், அப்படி சுகித்திருக்கிறதே எனக்குப் பிரியம் என்கிறாய். நீ இயேசுவை அன்றி எப்படி சுகமாயிருக்கலாம். இயேசு பரமண்டலத்தில் இல்லாதிருந்தால், பரமண்டலமும் நரகமாம். இயேசுவண்டை இருக்கிறதைவிட நேர்த்தியான

இடம் எனக்கு இல்லையென்றால், அப்போது சிலுவையை விட உத்தமமானது ஒன்றும் இல்லை. ஏனெனில் அங்கே அவரைக் காண்கிறேன். அங்கே அவரை ருசிக்கிறேன்.

எல்லாம் இழந்தவனுக்கு இயேசு அகப்படுவார். ஏனென்றால் எனக்கு எல்லாம்போனாலும் இயேசு எனக்குச் சகலருமானவர்.- என் ஆஸ்தி போயிற்று. இயேசு என் ஆஸ்தியாயிருக்கிறார். நூறாயிரம் பொக்கிஷங்களைப்பார்க்க அவர் என்னை அதிகமாய் முசிப்பாற்றுகிறார்.- என் சந்தோஷம் போயிற்று. இயேசு என் சந்தோஷம். மகிழ்வேன், என் சிநேகிதர், அல்பா ஓமெகா என்பவர்; என் நேசர் ஆதி அந்தம்.- என் சிநேகிதன் போனான். இயேசு என் ஆத்தும நேசர். இயேசு கிறிஸ்து நாதரே, உம்மிடத்திலே இருக்கிறதைவிட எனக்கு அதிக உண்மையான சிநேகிதன் பூமியிலே உண்டா.- என்தாயும் தகப்பனும்போனார்கள். இயேசு என்னை ஏற்றுக் கொண்டு என்னை விசாரித்து பராமரிக்கிறார்.- சீவன் போயிற்று. இயேசு என் சீவன் தாமே. என் இயேசு எனக்கு இருக்கும் மட்டும் எனக்குச் சேதம் வந்ததென்று முறையிடேன். இயேசு எனக்கு இருந்தால், அவரை என்னைவிட்டு எடுக்கிறவன் ஆர். அவரை நான் இழந்தால், வேதனையோடே அவரைத் தேடி, அவரைக் கண்டுபிடிக்கும் மட்டும் ஓயாமல் தேடுவேன். இயேசுவைக் கண்டுபிடித்தால், எல்லாம் கண்டுபிடித்தேன். இயேசுவைக் கண்டுபிடித்தால், பரமண்டலத்தைக் கண்டுபிடித்தேன். என் மனமே, உனக்கு இதைவிட அதிகமாய் வேண்டியதென்ன.

௩௮. தியானம்.

## ஞான மரணத்தையும் ஞான சீவனையும் பற்றியது.

### செத்தும் பிழைத்திருக்கிறான்.

அதார், பாணித்துச்சொல். மெய்க் கிறிஸ்தவன் தான். அவன் பிழைக்கிறபோது சாகிறான், சாகிறபோது பிழைக்கிறான். இராத்திரிக்குச் சாகிறான்; காலமே திரும்பப் பிழைக்கிறான். அவன் படுக்கையோ அவன் சவக்குழி; அவன் போர்த்திருக்கிற துப்பட்டியே அவன் சவப்போர்வை; அவன் நித்திரையே மரணம். ஒவ்வொரு இராத்திரியும் அவனுக்குக் கடைசி இரவாயிருக்கிறது. செத்தவன் குழியில் இளைப்பாறுகிறதுபோல், அவனும் நித்திரையில் இளைப்பாறி, புதுப்பெலனை அடைகிறான். இராத்திரி படுத்துக்கொள்ளுகிறபோது



இருந்ததைவிட காலையில் அதிக சுறுசுறுப்போடே அவன் எழுந்திருக்கிறான். இப்படியாக உன் படுக்கை மரணத்துக்கும், உயிர்த்தெழுதலுக்கும் ஒப்பாயிருக்கிறது.

இன்னம் ஒன்று இருக்கிறது. அதாவது: ஒரு கிறிஸ்தவன் மாமிசத்தின்படியே எத்தனைக்குச் சாகிறானோ அத்தனைக்குப் பெலனாய் ஆவியின்படியே பிழைக்கிறான். அவனுக்குச் சீவனிலே மரணம் உண்டு. நீங்கள் மாமிசத்தின்படி சீவனம்பண்ணினால், சாகப்போகிறீர்கள் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறான் [illegible] க்குச் சாவிலே சீவன் உண்டு. ஆவியினாலே சரீரத்தின் செ[illegible]களை மரிப்பபண்ணினீர்களேயாகில் பிழைப்பீர்கள் என்[illegible]ழுதியிருக்கிறது. ரோ. அ, ௰௩. மாமிசம் எத்தனைக்குச் [illegible]றதோ, அத்தனை பெலனாய் ஆவி பிழைக்கிறது; ஏனென்றால் ஆவிக்கு அப்போது மாமிசத்தால் அத்தனை [illegible]டைகள் இராது. ஆவி எத்தனைக்குப் பிழைக்கிறதோ, அத்தனைக்கு மாமிசம் சா[illegible]றது. ஏனென்றால் அப்போது நவமான சீவனின் ஒவ்வொரு[illegible] படியும் நாம் நவமாய்ச் சாக நம்மை முஸ்திப்பாக்கிப் பெலப்படுத்துகிறது.

இதற்கு மாறாக ஆ[illegible]த்தனைக்குச் சாகிறதோ, அத்தனைக்கு மாமிசம் பெலத்[illegible] பிழைக்கிறது. அடங்காக் குதிரைக்குக் கடிவாளம்போ[illegible]விட்டால், அதை அடக்க ஆராலே ஆகும். ஆவி மா[illegible]த்தைக் கடிவாளம்போட்டு அடக்கப்பார்க்கிறது. மாமி[illegible]த்தனைக்குப் பெலனாய்ப் பிழைக்கிறதோ, அத்தனைக்கு [illegible]வி சாகிறது. [illegible]லே தண்ணீரை ஊற்றினால் அவிந்துபோமே. ஆவி நம்[illegible]த்தில் லேசாய் அவியக்கூடிய சின்ன வெளிச்சம் போலிருக்[illegible]து. பழைய ஆதாம் கொலைபாதகன், அவன் உ[illegible]ல் சாகட்டும். இயேசு சீவபிரபுவாயிருக்கிறார்; அவர் உ[illegible]னில் [illegible] பார். செத்தும் பிழைக்கிறவனைப்போல் இருப்[illegible]த்துக்குச் சாவேன். நீதிக்குப் பிழைப்பேன். நான் இந்த [illegible]ஷத்திலே தானே சாகவேண்டியதாயிருந்தாலும், அதற்கு பயப்படாமல் துணிந்திருக்கத்தக்க பிரகாரமாகப் பிழைக்கவும் நடக்கவும் பிரயாசப்படுகிறேன். வெகுகாலம் பிழை[illegible]திருக்க வேண்டியதாயிருந்தாலும், வெட்கப்படாமல் [illegible] தக்கவனாய்ப் பிழைத்து நடக்கப் பிரயாசப்படுகிறேன்.

உலகம் சாவை எனக்குக் காட்டி என்னை உறுக்கி[illegible]லும், நான் பயப்படேன். என் சீவனின் கர்த்தர் அதற்குச் சம்மதிக்கும்முன் அதுதானே என் சீவனை எடுக்கக்கூடாது. மரணத்துக்குக் கொண்டுபோகிறதுபோல், மன வியாகுலத்

தின் ஆழ்ந்த பள்ளத்தாக்கில் என்னைப் பராபரன் கூட்டிக் கொண்டுபோனாலும், நான் உற்சாகமாய் அவரைப் பின்செல்லுவேன். அவர் அதிலே தமது பரம சீவனின் பெலத்தை எனக்குக் கொடுத்து முசிப்பாற்றுவார். நான் மரண அவஸ்தைகளுள்ளானாலும் அருக்களியேன். பராபரன் அதிலேயும் தமது சித்தத்தின்படி ஆச்சரியமாய் என் சீவனைக் காப்பாற்றலாம். செத்தும் பிழைத்திருக்கிறவன் இவன் தானே.

பிழைத்தும் செத்தவன் யார், கள்ளக் கிறிஸ்தவன் தானே. இவன் தன் சாவை நினைக்காமல், வெகுநாளைக்கு இருப்போமென்று நினைக்கிறான். இதற்குள்ளே சாவு அவனை அசுப்பிலே கீழே விழ அடித்துப்போடும். அந்த ஐசுவரியவான் தன் ஆத்துமத்தோடே என்ன சொன்னான். என் ஆத்துமமே, உனக்கு அநேக வருஷங்களுக்கு வெகு நல்ல வஸ்துக்கள் வைத்திருக்கிறது. இளைப்பாறு, புசி, குடி, பூரிப்பாயிரு என்று சொன்னானே. அதற்குப் பராபரன் என்ன சொல்லுகிறார். மதியற்றவனே, இந்த இராத்திரியிலே உன் ஆத்துமம் உன்னிடத்திலே கேட்டு வாங்கப்படும். அப்பொழுது நீ ஆயத்தம் பண்ணினதுகள் ஆருடையதாம் என்கிறார். லூக். ௰௨, ௰௯. ௨௰. இந்த ஐசுவரியவான் தான் உயிரோடிருக்கிறதாக எண்ணினாலும், அது வெறுந் தோற்றுதல். பிழைத்திருக்கிறான் என்கிற பெயர் அவனுக்கு இருந்தாலும், செத்தவனாய் இருந்தான். அபிவி. ௩, ௧. ஞான சீவனின் அடையாளம் ஒன்றும் அவனிடத்தில் காணப்படவில்லை. அவன் தன் பாவ நடக்கையோடே இருந்து, நித்திய சீவன் உண்டென்று தன்னைத் தேற்றிக்கொண்டான், ஆகிலும் அவனுக்கு மரணமே ஒழிய பின் ஒன்றும் வருகிறதற்கு இடமில்லை. ௧ தீமோ. ௫, ௬. கிறிஸ்துவின் கல்லறையண்டையிலே வந்த ஸ்திரீகளைப்பார்த்து தேவதூதன் என்ன சொல்லுகிறான். நீங்கள் உயிரோடு இருக்கிறவரை மரித்தோரிடத்திலே தேடுவானேன் என்கிறான். லூக். ௨௪, ௫. அப்படித்தானே கள்ளக் கிறிஸ்தவனை நோக்கி: செத்த கிரியைகளிடத்தில் நீ நித்திய சீவனைத் தேடுவானேன் என்று சொல்ல வேண்டும். முள்ளுச் செடிகளில் திராட்சப்பழங்களையும் முள்ளுப்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் அறுக்கிறார்களோ. மத். ௭, ௰௬. இருளின் கிரியைகள் உன்னைப் பரிசுத்தவான்களின் சுதந்தரத்தின் வெளிச்சத்துக்குக் கொண்டுபோகக் கூடுமோ, கூடாது. கிறிஸ்தவனே, நீ பிழைக்குஞ் செத்தவனாயிருந்தால், உன்னைத்தானே மோசம் போக்குகிறாய் என்பதற்குச் சந்தேகமில்லை.



௩௰௧. தியானம்.

## அதிர்ஷ்டத்தின் நிலையாமையைப் பற்றியது.

*அதிர்ஷ்டம் பிள்ளைவிளையாட்டு, அதை நம்பாதே,*

அது மெய் அல்லவோ. நம்முடைய பிள்ளைகள் விளையாடும் போது, ஒருவனை இராசாவாகவும், மற்றொருவனைக் குடியானவனாகவும், ஒருவனைப் பணக்காரனாகவும், மற்றொருவனைப் பிச்சைக்காரனாகவும் வைக்கிறார்கள். அந்த விளையாட்டிலே தானே அடிக்கடி என்ன நடக்கிறதென்றால், இன்றைக்குப் பணக்காரனானவன் நாளைக்குப் பிச்சைக்காரனாகிறான், இன்றைக்குக் குடித்தனக்காரனானவன் நாளைக்கு இராசாவாகிறான். இந்த பிள்ளைவிளையாட்டு போல்தான் உன் அதிர்ஷ்டமும் இருக்கிறது. எப்படியெனில், அது இன்றைக்கு உனக்கு சங்கை கொடுக்கிறது, நாளைக்கு வெட்கம் உண்டாக்குகிறது; இன்றைக்குச் சிலர் ஆமானைப்போல் பெரியோர்களோடே பந்தியிலே இருக்கிறார்கள், நாளைக்கு மரத்திலே தூக்குண்டு தொங்குகிறார்கள்; இன்றைக்கு ஐசுவரியவான், நாளைக்குப் பிச்சைக்காரன்; இன்றைக்குச் சந்தோஷம், நாளைக்குத் துக்கம்; இன்றைக்குச் சுகமும் செழிப்பும், நாளைக்கு வியாதியும் சாவும். இது விளையாட்டு என்று சிலருக்குத் தெரியாது. இவர்கள் தங்கள் மகிமை என்றைக்கும் நிலைத்திருக்குமென்றும், தங்கள் மகிழ்ச்சிக்கு முடிவு ஒருக்காலும் வராதென்றும் நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் நினையாத வேளையிலே அதெல்லாம் முடிந்து கீழது மேலதாய்ப்போகும்.

அதிர்ஷடம் குண்டுபோல் உருட்சியாயிருக்கிறது. ஒருவனும் சாய்ந்துவிழாமல் அதின்மேலே ஊன்றி நிற்கக்கூடாது. அதிர்ஷ்டமும் கண்ணாடியும் சரி. திடீரென்று விழுந்து உடையும். ஆனால் அதிர்ஷ்டத்தையும் அதிர்ஷ்டீனத்தையும் சமமாய்ப் பாவிக்கிறவன் நூற்றிலே ஒருவன். அதிர்ஷ்டம் எவர்களுக்கு அனுகூலமாயிருந்து, வெற்றிவிளையாட்டு விளையாடிற்றோ, அவர்கள் பெருமையினாலே தலைதெரியாதே போயிருந்ததையும் நான் கண்டேன். அந்த அதிர்ஷ்டம் துக்கமுகத்தைக் காட்டித் தோல்வி விளையாட்டு விளையாடத் தொடங்கும்போது, அவர்கள் மனஸ்தாபத்தினாலே மடிந்துபோகிறதையுங் கண்டேன். நானோ இவ்விரண்டுக்கும் நடுவிலே இருக்கப் பார்க்கிறேன். எனக்கு வாழ்வு வந்தால், கேடும் ஒருவேளை வருமென்று நினைத்து பெருமை கொள்ளேன். ஐசுவரியவானாயிருந்த யோபு தரித்திரனாக நேரந் சென்றதா. கேடு வந்தால், திரும்பவும் வாழ்வு வரு

மென்று நினைத்து மனமடிவாகாமல் இருப்பேன். அதிர்ஷ்டம் விளையாடுகிறது. அது வேண்டுமென்று ஒன்றும் செய்கிறதில்லை. பராபரனே அதை ஆண்டுகொள்ளுகிறார். பராபரன் கொடுக்கிறதே அதிர்ஷ்டம். அதை உலகம் மகா அதிர்ஷ்ட ஈனம் என்றாலும், அதுவே நல்ல அதிர்ஷ்டம். பராபரன் அனுப்புகிறது மின்னலும் இடியுமாயிருந்தாலும், அது பூமிக்கு ஆசீர்வாதமாம்.

௪௰. தியானம்.

## விசுவாசம் சிநேகம் என்பவைகளின் தன்மையைப் பற்றியது.

*எப்போதும் இளைப்பாறுதலுள்ளது. ஒருக்காலும் இளைப்பாறாதது.*

இப்படித் தாய்க்கும் மகளுக்கும் பெயர். விசுவாசம் தாய், சிநேகம் மகள். விசுவாசம் பராபரனுடைய மடியிலே தாய்மடிப் பிள்ளைபோலே இருந்து, பராபரனிடத்திலே மெதுவாய் அயர்ந்து இளைப்பாறுகிறது.—அது இயேசுவின் பாதந்தண்டை அமர்ந்து உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுச் சந்தோஷப்படுகிற மரியாளைப்போலிருக்கிறது. இயேசுவின் மார்பிலே இளைப்பாறி, அவருடைய மதுரமான ஆறுதலின் பாலை வாஞ்சையோடே குடித்து உட்கொள்ளுகிற சிசுவைப்போலும் இருக்கிறது.—விசுவாசம் மலை வெடிப்புகளிலே இருக்கிற புறாப்போலவும், கெபிகளிலே இருக்கிற காட்டு மிருகங்கள் போலவும், கோழியின் செட்டைக்குள் இருக்கிற குஞ்சுபோலவும், தன் இளைப்பாறுதலை இயேசுவின் காயங்களிலே அடைந்து, பிசாசு, பாவம், மரணம் என்றதுகளால் ஒரு கலக்கமும் இல்லாமல் இருக்கிறது. இயேசு சிநேகிக்கிறவனைத் துக்கப்படுத்துகிறவன் ஆர்.

தாயைப்போலே பிள்ளை என்பார்கள். ஆனால் இங்கே வேறேவிதமாயிருக்கிறது. ஒருக்காலும் இளைப்பாறாதது என்கிறது சிநேகத்துக்குப் பெயர். அது இரண்டு கை நிறைய அலுவலுள்ள மார்த்தாளாயிருக்கிறது. அது தன் ஆஸ்தி பாஸ்தியையும் இரத்தத்தையும் சரீரத்தையும் ஜீவனையும் பிறனுடைய ஊழியத்திலே செலவழிக்கிறது அதற்கு இன்பம். அது தன்னை ஒருவன் பார்த்து: நீ எனக்கு ஊழியஞ் செய் என்று கேட்குமட்டும் காத்திருக்கிறதில்லை. அது வலிய எங்கும் போய்த் தான்தானே ஊழியஞ் செய்யும். அதற்கு உண்டாகிய தரும சிந்தையைப் புறக்கணித்து அதற்குப்



போதுமான அலுவல் இடாவிட்டால், அது மிகுந்த துயரப்படும். வெகுபேர் ஒருமிக்க வந்து அதின் கதவைத் தட்டி அலட்டினாலும், அது சந்தோஷப்பட்டுச் சிரித்துக்கொண்டிருக்கும். அது ஒருக்காலும் வேசாறிப் போகாமல் இரவும் பகலும் சாக்கிரதையாய்க் காத்துக்கொண்டிருக்கும். நல்ல மனதோடே உதவிசெய்யும். தன்னுடைய ஒத்தாசையை வாங்கி அநுபவிக்கிறதை அது தனக்குத் தானே உபகாரஞ் செய்ததாக எண்ணி, அதற்காகத் தோத்திரம் சொல்லும். இந்தப் பிரகாரமாகப் பராபரன் அதற்குச் செய்கிறபடியாலே, அது திரும்பவும் தன் பிறருக்கும் அப்படிச்செய்யும், ஆகையால் சிநேகம் பூமியிலே ஒரு சுவாமிபோலே இருக்கிறதென்று நன்றாகச் சொல்லலாம்.

இவ்வளவு வித்தியாசம் தாய்க்கும் மகளுக்கும் இருக்கிறது. தாய் ஏழை, எப்போதும் கை ஏந்தி வாங்குகிறவள்; மகள் சீமாட்டி, எப்போதும் கொடுக்கிறவள்.—தாய் பெருமோடிக்காரி, பராபரனும் தேவதூதரும் அவளை உபசரிக்க வேண்டும். மகளோ மிகவும் தாழ்மையுள்ளவள். ஆகையால் மகா நீசர் காலிலேயும் விழுகிறாள்.—தாய் தன் இளைப்பாறுதலையும் அச்சமற்றிருக்குதலையும் மாத்திரம் தேடுகிறாள். மகளோ கலக்கத்திலேயும் ஆத்தும சரீர அவதியிலேயும் எப்போதும் தலையிட்டுக்கொண்டிருக்கிறாள்.—தாய் கடைசியிலே சாகவேண்டும். மகள் என்றென்றைக்கும் பிழைக்கிறவளாய் இருக்கிறாள். ஏனென்றால் சிநேகம் ஒருக்காலும் விழுந்து போகாது. ௧ கொரி. ௰௩, ௮. மகள் உனக்கு வேண்டுமானால் தாயை அடுத்துக்கொண்டிரு, ஏனெனில் விசுவாசம் சிநேகத்தால் பெலனைக் காட்டும். என் இயேசுவே, தேவரீர் உமது ஆவியைக்கொண்டு விளக்கைக் கொளுத்தும். அப்போது அது எரியும்.

௪௧. தியானம்.

## ஆத்துமத்தைக் காப்பதைப் பற்றியது.

*பராபரனுடைய கை வெகு கெட்டியாய்ப் பிடிக்கிறது.*

மனுஷனுடைய ஆத்துமாவுக்கு இருப்பிடம் எது என்பதைக் குறித்து சாஸ்திரிகள் வெகுவாய்த் தர்க்கிக்கிறார்கள். சிலர் அது இருதயத்திலே இருக்கிறதென்றும், சிலர் மூளையில் இருக்கிறதென்றும், சிலர் அது சரீரம் முழுவதும் பரவி

இருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். நாமோ இம்மூவிடத்திலேயும் அந்த அருமையான விருந்தாடிக்கு இடங்கொடுப்போம். இருதயத்தில் அதின் வேரும், மூளையிலே அதின் பிரதான பெலனும், சரீரம் எங்கும் அதின் செய்கையும் இருக்கும் என்று சொல்லலாம். ஆனால் ஒரு கிறிஸ்தவன் அதுக்கு மேலாகச் சிந்தித்து ஆத்துமாவுக்குச் சிங்காதனத்தைத் தன் கைகளிலே கட்டி எடுப்பிக்க வேண்டும். அப்படியே தாவீது இராசாவும், என் ஆத்துமம் எப்போதும் என் கைகளிலே இருக்கிறது என்கிறார். சங்கீ. ௱௰௯, ௱௯. கை சுமக்கிறதைக் கண் பார்க்கிறது. நீ உன் பிள்ளைக்கு யாதொரு சேதம் வராமல் அதைப் பத்திரமாய்ப் பார்க்கும்படிக்கு அதின் கையைப்பிடித்து நடத்திக்கொண்டாவது, உன் கக்கத்திலே அதை இடுக்கிக்கொண்டாவது போகிறாய். ஆனால் எந்தச் சேதம் பெரிது. பிள்ளை சேதமோ, ஆத்தும சேதமோ. நீ எங்கே போனாலும், எங்கே நின்றாலும், எங்கும் பராபரனுடைய நடுத்தீர்வையிலே போகிறாய் அல்லவா. நித்தியம் ஒரு நிமிஷத்திலே நிற்கிறது. நீ ஒவ்வொரு நிமிஷத்திலும் தரித்து நின்று உன் ஆத்துமத்தின் கிரியைகளை நோக்கிப் பார்க்கும்படியாக உன் ஆத்துமத்தை எப்போதும் உன் கைகளிலே ஏந்திக்கொண்டுபோ. அது யாதொரு நன்மையான காரியத்தைச் செய்ய விரும்பினால், அப்படிப்பட்ட மனதைக் கொடுத்தவர் அதை நிறைவேற்றுகிறதற்கான பெலத்தையும் தரும்படி அவரை நோக்கி மன்றாடு. உன் ஆத்துமா தீங்கு செய்ய விரும்பினால், நீ உன் ஆத்துமாவை நோக்கி: ஆ, என் ஆத்துமாவே, நீ என்ன செய்யப் போகிறாய், இந்த நிமிஷமே உனக்குக் கடைசி நேரமாய் இருந்தாலும் இருக்குமே என்றுசொல்லி அதைத் தடுத்துப்போடு. நீ லோகத்தை எல்லாம் ஆதாயப் படுத்திக்கொண்டு, உன்னைத்தானே சேதப்படுத்தினால் லாபமென்ன. பொல்லாப்பை விட்டு நன்மை செய்யப் படி. ஆத்துமத்தைத் தெருவிலே போடாமல் அதை உன் கையிலே ஏந்திக்கொள்ள வேண்டும். எந்த நிமிஷமும் உன் கடைசி நேரமாயிருக்கக் கூடுமே. விற்கிற உடைமைகளைக் கையிலே எடுத்துக் கொண்டு திரிவார்களே. அதுபோல் உன் சீவனைக் கையில் ஏந்தி பராபரன் நிமித்தம் விலைகூற வேண்டும். உன் சீவனைப்பார்க்கப் பராபரன் உனக்கு அருமையாயிருந்தால், நீ சீவனை இழந்தாலும், அதைப் பராபரனிடத்திலே திரும்ப அடைவாய். பராபரனைப் பார்க்கிலும் உன் சீவன் உனக்கு அருமையானால், நீ இரண்டையும் ஒருமிக்க இழந்து போவதுமல்லாமல், நீயும் என்றென்றைக்குங் கெட்டு, மகா நிர்ப்பாக்கியனாவாய்.



உன் ஆத்துமாவுக்கான நிலை இதுவே. ஆனால் இதுவும் அத்தனை சுபத்திரமான நிலை என்று சொல்லப்படாது. ஏனென்றால் உன் கையைப்பார்க்க பராபரனுடைய கை அதை அதிகக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் தாவீது இராசா சொன்னதுபோல், நீயும்: கர்த்தாவே, உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று சொல்லு. சங்கீ. ௩௧, ௫. "என் ஆத்துமா என் கையில் இருக்க எனக்கு அத்தனை மனதில்லை. அது என் கையில் இருந்தால், பருந்து கோழிக் குஞ்சை எப்படி எடுத்துக்கொண்டுபோகுமோ, அப்படியே சாத்தான் வெகு நாளைக்கு முன்னமே அதைப் பறித்துக்கொண்டுபோய் இருக்கும். ஆனால் நான் என் ஆத்துமத்தைப் பராபரன் கையிலே ஒப்புவித்தால், அவர் கையிலேயிருந்து பிசாசானாலும் பின்னை ஏதாகிலும் பறிக்க மாட்டாது என்று லுத்தர் அடிக்கடி சொல்லி வந்தார். கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தையும் இதுவே: என்னுடைய ஆடுகள் என் சத்தம் கேட்கிறது. அதுகள் என்னைப் பின்செல்லுகிறது. ஒருவனும் அதுகளை என் பிதாவின் கையிலிருந்து பறிக்கக் கூடாது என்றார். யோவா. ௰, ௨௭. ௨௯.

என் ஆத்துமத்தை உமக்கே
நான் ஒப்புவிப்பேன், கர்த்தரே.
நீர் என்னை மீட்டோராமே,
என் நேரமும் முடிவிலும்,
ரட்சிப்பவர் நீர் தாமே.

௬௨. தியானம்.

## மனித சீவனின் நிலையாமையைப் பற்றியது.

பளிங்குப் பாத்திரம் எத்தனை லேசாய் உடைகிறது!

இதைவிட லேசாய் உடைகிறது எது. மனுஷன்தான். ஒரு நாள் வேதசாஸ்திரியாகிய லுத்தர் தம்முடைய கூட்டாளியாயிருந்த யுஸ்து யோனா என்கிறவருக்கு நேர்த்தியான ஒரு பளிங்குப் பாத்திரத்தை இனாமாகக் கொடுத்தபோது அதைப்பற்றி ஒரு சுலோகம் சொன்னார்:

பளிங்காகிய லுத்தர் யோனா என்னும் பளிங்குக்கு அளித்தார்
இந்தப் பளிங்கை; இருவரும் பளிங்கே

என்று சொன்னார். அநேகர் கையாண்ட பளிங்குப் பாத்திரங்கள் அவர்கள் உயிருள்ள நாள் எல்லாம் உடையாமல்

தப்பியிருந்ததைக் கண்டிருக்கிறேன். அவைகள் நாலும் நீயும் இறந்த பிற்பாடும் உடையாமல் இருக்கலாம். நீ பளிங்குப் பாத்திரத்தையும் விசேஷமாக அதில் நல்ல பதார்த்தத்தையும் பார்க்கும்போது சந்தோஷப் படுகிறாய். ஆகிலும் அது சுறுக்காய் இரண்டாய்ப் போமென்றும் நினைக்கிறாய். அதுபோல் சிலர் தங்களுக்குப் பராபரன் கொடுத்த மகா பெரிய வரங்களுக்காகத் தங்களைத்தானே புகழுகிறார்கள். பொன் நகைகளை வைத்துக்கொண்டிருக்கிற மரப்பெட்டியானது அவைகளை இஷ்டப்படி தன்னிடத்தில் வைக்கவும் திரும்ப எடுக்கவும் சுதந்தரக்காரன் ஒருத்தன் இருக்கக் கொள்ள, அது தன்னிடத்திலிருக்கும் ஆபரணங்களுக்காக மெத்தவும் பெருமைகொண்டாடுமா. என் பிள்ளைத்தனமே, நீ எப்பேர்ப்பட்டவன் என்று நினை. பளிங்குப்பாத்திரம். அது எத்தனை லேசாய் உடைகிறது! பளிங்குப்பாத்திரம் தன்னைத் தான் உடைத்துக் கொள்ளுகிறதில்லை. ஆனால் உன்னை அன்றுடகம் உடைத்து பெலன் ஒடுங்கப்பண்ணுங் காரியம் உன்னிடத்திலேயே இருக்கிறது. எத்தனை துக்கம்; எத்தனை வியாதி, எத்தனை இடிப்பு உன் சீவனை கொறுங்கப் பண்ணுகிறது. ஒரு பூச்சி பழத்தை அரித்துப்போடுகிறதுபோலே உன்னிடத்தில் குடியிருக்கும் சென்ம பாவம் சரீரத்தை அரித்துக் கொண்டே இருக்கிறது.

ஒரு பளிங்குப் பாத்திரத்தைப் பத்திரமாய்க் கையாண்டால் வெகு நாள் இருக்கும். நீ உன்னை எத்தனை பத்திரமாய்ப் பார்த்தாலும், எத்தனை எச்சரிக்கையாயிருந்தாலும், உன் சீவன் ஒரு நிமிஷமாகிலும் நிலையல்லவே. பளிங்குப் பாத்திரத்தைக் கையில் பிடித்த பிடியோடே சடுதியில் விழுந்து செத்தவர்களை நான் அறிந்திருக்கிறேன். பாத்திரம் தப்பிற்று, அவர்கள போய்விட்டார்கள். ஆகையால் ஏற்கனவே மரணத்தை நினைத்து இப்போதே சாகிறவன்போலே பிழைத்துக் கொண்டிரு. செனெக்கா என்னும் ஞானி சொன்னதைக் கேள்: நாம் திடீரென விழுந்து சாகாமல் சாவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கிட்டிப்போகிறோம். நாம் தினந்தினம் சாகிறோம். எனெனில் ஒவ்வொருநாளும் நமது ஆயுசின் ஒரு சின்னப்பங்கு பிரிந்துகொண்டிருக்கிறது. நாம் போகப் போக நம்முடைய மரணத்துக்கு அதிகமதிகமாய்ச் சமீபிக்கிறோம். இளமையும், வாலிபமும் கழிந்துபோயிற்று. வளர்ச்சி குறைகிறது. முதுமை வருகிறது. இதுவரையில் நாம் செலவழித்த காலங்கள் தீர்ந்துபோயின என்றும், இன்னம் இருக்குங் காலத்தையோ மரணம் பங்கிட்டுக்கொள்ளுகிறதென்றும் காண்கிறோமென்கிறார். பெட்ரியார் என்



கிறவர் மரணத்தின் பேரிலே எழுதின புஸ்தகத்தில்: நீ குடியிருக்கிற வீடு பழசாய்ப்போய், அதின் சுவர் மல்லாந்து, அதின் மேல் ஏற்றிய கைமரம் வரிச்சும் கலகலத்து, வீட்டை வாம் அடித்து மோதி விழுகிறதுபோல் இருக்கக்கண்டால், உடனே அதிலுள்ள தட்டுமுட்டுகளை எல்லாம் வாரிக்கொண்டு அப்புறப்படாமல் இருப்பாயோ. அதுபோல் உன் சீவனின் குடிசை பழசாகி வேறுபட்டு சடுதியிலே அடித்து மோதி விழுகிறதுபோலே இருக்கக்கண்டும், நீ சுறுக்கிலே அப்புறப் படாமலும் முடிவு வாசலுக்கு முன்னே வந்து நிற்கிறதென்று நினையாமலும் இருக்கிறதென்ன என்கிறார். நானோவெனில் ஒருக்காலும் அச்சமற்றவனாய் இராமல், என் சீவகாலத்தின் ஒரு நாழிகையையாகிலும் விருதாவாக்காமல் மரணம் எவ்விடத்திலும் எனக்குக் காத்திருக்கிறதுபோல் நானும் அதற்குக் காத்திருக்கிறேன். நானும் அதுவும் கூடிச்சேர்ந்து ஒருவரை ஒருவர் கட்டி அணைப்பது எத்தனை சுறுக்கிலே சம்பவிக்கும் என்று ஆராலே சொல்லக் கூடும். அது எனக்குப் பயமுறுத்தாது. நான் அதுக்கு எதிர்த்து நிற்கக் கிலியின்றி ஆயத்தமாயிருக்கிறேன். சாவு வரும்முன்னே செத்திருக்கிறவனே பாக்கியவான். அப்படிப்பட்டவனுக்குச் சாவு எந்த வேளையிலே வந்தாலும் சரி.

௬௭. தியானம்.

## போதகர் மாறுபாட்டைப் பற்றியது.

ஐக்கிக்கக் கூடியவன் ஐக்கிக்கக் கடவான்.

அது ஏன், உலகம் அவ்வளவு கபடுள்ளதாயிருக்கிறதற்காகத் தான். இப்போது மாறுபாடு கூட அதிக உடுப்புப் போட்டுக்கொண்டு வெளிப்படுகிறது. நீண்ட அங்கி தரித்துப் போட்டுக்கொண்டவர்களிடத்திலே இருக்கிற மாறுபாட்டைப் பார்க்க இருக்கிறவர்களிடத்தில் எங்கே இருக்கிறது. வேதசாஸ்திரிகளுக்கு அதிக மாறுபாடு மகா நுட்பமாயிருக்கிறது. அவர்கள் தங்கள் கபடத்தையும் கபடு மூடுகிறதற்கான பற்பல ஆட்டுத்தோல் அவர்களுக்குண்டு. நீ அந்தக் கபடத்தைப் புத்திக்கூர்மை என்று அழைக்கிறாய். ஆ இப்படிப்பட்ட புத்திக்கூர்மையுள்ள அறிவாளிகள் எத்தனை பெயர் சுருக்குச் சட்டைகளிலே புகுந்துகொண்டு பொய்யை மெய்போல் விற்கிறது உபசாரம் இதிகிறார்கள். இப்படிப்பட்ட ஆசார உபசாரக்காரர் எங்கும் என்கிறாய். இப்படிப்பட்டபடியால், பெரியோர்கள் அரசனை விஸ்தாரமாய்த் தலைப்பட்டபடியால்,

களிலே இந்தக்கபடம் வெகு குஞ்சுகளைப்பொரித்து மேய்ந்துகொண்டிருக்கிறது. இந்தக் குஞ்சுகளுக்கு நான் சரியான பேர் இட வேண்டுமானால் விரியன் பாம்பின் குட்டிகள் என்று சொல்லவேண்டும். ஏனென்றால பாம்பு தன் வாயிலே நஞ்சை மறைத்துக்கொண்டு அடிதெரியாமலிருக்க கோணிக்கோணிபோகிறது வழக்கம் அல்லவோ. நீயும் வாயிலே தேனையும் வாலிலே கொடுக்கையும் வைத்துக்கொண்டிருக்கிற தேன் ஈயைப்போல் இருக்கவேண்டுமானால் அப்படி இரு. நான் பராபரனுடைய சபையில் ஊழியஞ் செய்துவருகிற இந்தப் பதிமூன்று வருஷத்துக்குள்ளே உலக உபாய புத்தியுடைய அநேக நல்ல வேதசாஸ்திரிகளையும், வேதசாஸ்திரம் படித்த மகா கெட்ட லவுகிக உபாயதந்திரப் புத்திக்காரரையும் கண்டதுண்டு. ஆகையால் நான் உலக உபாயதந்திர புத்தியுடையவர்களில் ஒருவரையும் பொல்லாதவர்கள் என்றாவது, வேத சாஸ்திரிகளிலே ஒருவரையும் நல்லவர் என்றாவது நிர்மானமாய்ச் சொல்லேன். அவர்களை நடுத்தீர்க்கப்போகிற பராபரனே அவர்கள் இருவரையும் அறிந்திருக்கிறார். ஆனால் சாத்தான் வெளிச்சத்தூதனுடைய வேஷம் எடுத்து என்னை வஞ்சிக்காதபடிக்கு, சோதித்து அறிவதற்கு முன் ஒருவனையும் நான் நம்ப மாட்டேன்.

௪௪. தியானம்.

## தேவ சித்தத்திற்குத் தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்தலைப் பற்றியது.

பராபரனுடைய யோசனைக்கு இடங்கொடு. அவர் மூத்தவர்.

எனக்கு அடுத்த காரியமாச்சே. ஆ, என் யோசனையும் அதிலே கூட இருக்கத் தேவை இல்லையா என்று நீ சொல்லுகிறாய். அப்படி அல்லவே. எக்காலங்களிலும் அவருக்கு உசாவுதுணை ஆனவன் ஆர். ரோ. ௰௧, ௩௪. அவர், தாம் மாத்திரம் யோசனை சொல்லவேண்டும். அல்லது கட்டோடே யோசனை சொல்லாமல் இருக்கிறார். வயது சென்றவர் சிறு பிள்ளைகளோடேயும், அளவில்லாத ஞானமுள்ளவர் அறிவீனரோடேயும், அளவில்லாத பரிசுத்தமுள்ளவர் பாவிகளோடேயும் யோசனை பண்ணுகிறதெப்படி. என் யோசனையும் உன் யோசனையும் உதவாது. பராபரன் யோசனையே உத்தமம். நமது யோசனைப்படி பராபரன் நம்மைப்போகவிட்டால், வெட்கமாய் முடியும். ஆனால் பராபரன் தம்



டைய யோசனைப்படி நடத்தினால் கடைசியிலே நம்மை மகிமையிலே ஏற்றுக்கொள்ளுகிறார். சங்கீ. ௭௩, ௨௪. ஆகையால் பராபரன் மாத்திரம் யோசனைபண்ணட்டுமென்று நான் அவருடைய யோசனைக்கு என்னை ஒப்புக்கொடுக்கிறேன். உலகத்தை எல்லாம் ஆளுகிறவருக்கு இந்த மண்ணாங்கட்டியாகிய என்னையும் ஆள வகை தெரியாதோ. அவர் என் தகப்பன். அவர் ஆச்சரியமான பிரகாரமாகவும் அத்தோடேகூட மகா ஞானமாகவும் அதை நன்றாய் நடத்துவார். அவருடைய ஆலோசனைகள் ஆராயப்படாதவைகள். அதின் துவக்கம் மெத்த பிரமிப்பாய்க் காணுகிறது. மகா மகிமையாய் அது முடிகிறது. பராபரன் தமது சன்மார்க்கரை அதிசயமாய் நடத்துகிறார். சங்கீ. ௪, ௩. யோபு, தாவீது முதலியவர்களைக் குறித்து உனக்கு என்னமாய்த் தோன்றுகிறது. எவ்வளவு பிரமிப்பாகப் பராபரனுடைய ஆலோசனை அவர்களிடத்திலே தொடங்கி எவ்வளவு மகிமையாக முடிந்தது என்று பார்.

இதிலே பராபரனும் உலகமும் ஒரே விதமாகச் செய்கிறதில்லை. உலகம் நல்ல முந்திரிகை இரசத்தை முந்திக்கொடுத்து இளப்பமானதை பிந்திக்கொடுக்கிறது. யோவா. ௨, ௰. தித்திப்பை முன்கொடுத்து கசப்பைப் பின்கொடுக்கிறது. பராபரன் அதை மாற்றி துவக்கத்தில் கசப்பையும், முடிவிலே தித்திப்பையும் கொடுக்கிறார். அவர் கனவீனத்திலிருந்து கனத்துக்கும், துக்கத்திலிருந்து சந்தோஷத்திற்கும், நரகத்திலிருந்து பரமண்டலத்திற்கும் கொண்டுபோகிறார். துவக்கத்திலே எந்த ருசியாயிருந்தாலும் இருக்கட்டும். கடைசியிலே நல்ல ருசியானால் போதும். தித்திப்பான பின்சாப்பாடு கசப்பான முன்சாப்பாட்டைத் தோன்றாதிருக்கப்பண்ணும். நான் பராபரனுக்கு* வகை தொகை சொல்ல வேண்டியதில்லை. வகைதொகை சொல்லுகிறது* எனக்கு அல்ல, அவருக்கு அடுத்தது. என் வண்டிலை நடத்துகிறவன் அதைக் கரடுமுரடும் கோணலுமான வழியிலே கொண்டுபோனாலும், குடையடித்தாலும், எல்லாவற்றையும் நான் சகிக்கிறேன். என் நல்ல சுவாமி என்னை நடத்துகிறபடி நடத்தட்டுமென்று இராமல் போகிறதென்ன. அவரைவிட எனக்கு நன்றாய்த் தெரியுமா. அவர் சித்தம் என் இரட்சிப்பு. என் சித்தம் என் கேடு. என் பரனே, உமக்குச் சம்மதியானபடி என்னை நடத்தும். தேவரீர் என் பரிசை, தேவரீர் இருக்கும் இடத்தில் நான் இருந்தால், நான் கெட்டுப்போக மாட்டேன். எல்லாவற்றையும் நன்மையாய்ச் செய்தவரே, உமக்குச் சம்மதியானபடி இதையும் செய்யும் நீர் எனக்குத் தீமை செய்ய

மாட்டீரே. நீர் என் பிதா. உம்முடைய மனது எனக்குத் தெரியும். ஆகையால் நான் உம்மை நம்பியிருக்கிறேன்.

௪௫. தியானம்.

## நித்தியகால தியானிப்பைப் பற்றியது.

இம்மையிலே இம்மைக்குப் புறம்பு.

இப்படியிருந்து காலத்தைப் பின்னிடுகிறவனே பாக்கியவான். நான் இம்மையிலே பிழைத்திருந்தாலும் ஒவ்வொரு வருஷமாய், ஒவ்வொரு மாதமாய், ஒவ்வொரு வாரமாய், ஒவ்வொரு நாளாய், ஒவ்வொரு மணிநேரமாய், ஒவ்வொரு நாழிகையாய் எண்ணியெண்ணி கழிக்கிறேன். என் இருதயமோ இம்மைக்குப் புறம்பாயிருக்கிறது. நான் நித்தியத்துக்குப் போகிற வழியிலே இருக்கிறபடியால், அதை எப்போதும் சிந்திக்கப் பிரதிக்கினை பண்ணிக்கொண்டேன். ஒரு பொல்லாத இச்சை என் இருதயத்தில் எழும்பினால், என்றென்றைக்கும் எரிகிற நரகக்கழல் இந்த இச்சையை என்னில் எரித்துப் பஸ்பமாக்கட்டும் என்றும், நரகத்தில் நான் இறங்குகிற வேளை இப்போதே என்றும் நினைக்கிறேன்.

என் இருதயமே, உனக்கு எதின்மேல் இச்சை என்று கேட்கிறேன். பிரபஞ்ச மாயையிலே உன் கண்ணை மேய்விட உனக்கு ஆசையா. அப்பா, சபிக்கப்பட்டு நரகத்தில் கிடக்கிறவர்களுக்குக் கண் இச்சை ஏது என்று நினைத்துப்பார். அவர்கள் கண் சதாகாலமும் பராபரனைக் காணாதே. அவர்கள் சதாகாலமும் வெளிச்சத்தைப்பார்க்கக் கூடாதே. அவர்கள் எல்லாத்துக்கும் புறம்பான இருளிலே கிடந்து, அவர்கள் கண்கள் கன்னங்கறேலென்ற பிசாசுகளையும், நரகத்துக்கு விருந்திட அடிக்கப்படும் ஆடுகளையும், பயங்கரமும் பாதாளமுமான நிர்ப்பாக்கியத்தையும் கண்டு, நடுங்கி, தத்தளிக்க வேண்டும்.

போசனபானத்தினால் உன்வயிற்றை நிரப்ப வேண்டுமென்கிற இச்சை உனக்கு இருக்கிறதா. ஆ, இம்மையின்பத்தினால் கெம்பீர மகிழ்ச்சியும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்த அந்த ஐசுவரியவானை நினைத்துக்கொள். அவனுக்கு இப்போது நாவறண்டு எவ்வளவு தாகமும் தவிப்பும் உண்டாயிருக்கிறது. அவன் இப்போது எவ்வளவு பரிதாபத்தோடே கெஞ்சுகிறான். முந்திரிகை இரசத்துக்காகவும் அல்ல, ஒரு சிரங்கை தண்ணீருக்காகவுமல்ல, ஒரு துளிக்காகக் கெஞ்சுகிறான். அதுவும் பொன்பாத்திரத்தினால் அல்ல, லாசருவின் விரலினாலே தன் நாவில் தெளித்தால் போதுமென்று கெஞ்சிக் கேட்கிறான்.



புழுகு சவ்வாது முதலிய சுகந்தவாடை மேலே உனக்கு இச்சையா. ஆ, நரகத்திலே எந்த வாடை வீசும் என்று நினை. கர்த்தர் சபிக்கப்பட்டவர்கள் மேல் அங்கே அக்கினியையும் கெந்தகத்தையும் பெய்யப்பண்ணுவார். ஒரே ஒரு கெந்தகக் குச்சியைக் கொளுத்தினால், எவ்வளவு துர்க்கந்தம் வீசுகிறது. ஆயிரம் கெந்தகக் குச்சியை ஒருமிக்கக் கொளுத்தினால், எவ்வளவு பொல்லாத நாற்றம். இவ்வளவு நாற்றமும் நரக கெந்தக நாற்றத்துக்குக் கொஞ்சமாகிலும் சரிக்கட்டாதே. அத்தோடே கூட பேய்களுடைய நாற்றம் அங்கே பொறுத்து முடியாதே.

பாவஞ்செய்கிறது அவ்வளவு இன்பமாய்த் தோற்றினால், நீ உன் பாவத்தினாலே தேவகோபநெருப்பைப் பற்றி எரியப்பண்ணுகிறாய் என்றும், அது என்றென்றைக்கும் பற்றி எரியும் என்றும் நினைத்துக்கொள். எரேமி. ௨௧, ௰௪. ஒரு மணிநேரம் மாத்திரம் நீ உன் சுண்டுவிரலை விளக்கிலே பிடித்தால், எத்தனை வேதனையாய் இராது. கை எல்லாம் பற்றி எரிய நெருப்பிலே நீட்டினால், அதைவிட சொல்லிமுடியாத எவ்வளவு வேதனை உண்டாய் இராது. நீ நித்திய காலமாய் நரகத்திலே கிடந்து வேகிறது உனக்கு எத்தனை பெரிய துன்பமாய் இராது.

பரிசுத்தமான நடக்கைக்கு என்னிடத்திலே அசமந்தம் தோற்றினாலும், உபத்திரவப்பட மனதில்லாமல் இருந்தாலும், என் கண்ணை உயர எடுத்து கர்த்தருக்குள் நான் செய்கிறதற்கும், பாடுபடுகிறதெல்லாவற்றிற்கும் பலனாக எனக்குக் கிடைக்கப்போகிற பரமண்டல மகிமை எத்தனை பெரியதென்று நோக்கிப்பார்க்கிறேன். பராபரனுடைய முந்திரிகைத் தோட்டத்திற்குள் நான் உட்பட்டும், அங்கே படுகிற பிரயாசத்துக்காக நான் வேண்டாவெறுப்பாய்ப் போவானேன். பகலின் வெயிலையும் பாரத்தையும் சுமக்க வேண்டியதாயிருந்தாலும், கிருபையின் நேர்த்தியான வெள்ளிக்காசு எனக்குக் கூலியாகக் கிடைக்குமே. ஆகையால் கிறிஸ்தவனே, உற்சாகமாய்ப் போராடு. செயங்கொள்ளுகிறவனுக்குப் பரலோகத்தில் முடி உண்டு. பந்தயத்தை நோக்கி ஓடுஞ்சாலைக்கு அஞ்சி பின்வாங்காதே. ௧ கொரி. ௯, ௨௪. பரமண்டலத்திலே மகா நேர்த்தியான பந்தயப்பொருள் உனக்கு வைத்திருக்கிறது. தரித்திரமே, நீ என்னைப் பயமுறுத்த முடியாது. ஆபிர

காம் மடியிலே சொல்லிமுடியாத தேற்றலை அடைகிற லாசருவை நான் காண்கிறேன்.

அங்கே அங்கே என்றென்றைக்கும்
ஆற்றிய உத்தம நன்மைகள் கிடைக்கும்.

உபத்திரவமே, நீ என்னை அருக்களிக்கப் பண்ணுவதில்லை. பெரிதான உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் வெள்ளையிலே அங்கி தரிப்பிக்கப்பட்டவர்களும் தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்தவர்களுமாய் ஆட்டுக்குட்டிக்கு முன்பாக நிற்கிறதைக் கண்டேன். அவர்கள் இனிப் பசியுமாய் இரார்கள், இனித் தாகருமாய் இரார்கள். அவர்கள் மேல் வெயிலாகிலும் எந்த உஷ்டணமாகிலும் படுவதும் இல்லை. ஆசனத்தின் நடுவிலிருக்கிற ஆட்டுக்குட்டி அவர்களை மேய்த்து அவர்களைச் சீவனுள்ள நீரூற்றுகளண்டைக்குக் கூட்டிக்கொண்டுபோம். அபிவி. எ, கூ. ௰ச-௰எ. என் கண்ணீர் ஆறாய்ப்பெருகி ஓடினால் என்ன. இயேசு எல்லாக் கண்ணீரையும் என் கண்களில் இல்லாமல் துடைக்குங் காலம் கிட்டியிருக்கிறது. மந்தாரமும் மழையுமான இந்த விதைப்புக் காலம் சென்றபிறகு, இன்பமான சந்தோஷ அறுப்பு நாள் வரவே வரும். ஆகையினாலே பிரியமான கிறிஸ்தவனே, நீ ஒவ்வொரு நிமிஷத்திலும் இம்மையை விட்டு மறுமையில் உட்பட அருக்களியாமல் இருக்கத்தக்கதாக இம்மையில் பிழைத்துக்கொண்டிரு.

சகூ. தியானம்.

## பராபரனுடைய இரக்கத்தையும் நீதியையும் பற்றியது.

### கிருபையும் நியாயமும்.

தாவீது இராசா கிருபையையும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பாடுவேன் என்று இவற்றின்மேல் நல்ல பாட்டைப் பாடியிருக்கிறார். சங்கீ. ௱க, க. நானும் அதற்கு இசைந்து பாடுகிறேன். சிலர் ரோமாபுரிக்குப் போய் பாப்புவின் காலை முத்தம் இடுகிறார்கள். நான் அப்படிச் செய்யப்போகேன். இயேசுவை ரோமாவில் தேடுகிறதெப்படி. ஆகிலும் இயேசுவின் பாதத்தை ஒவ்வொரு நாளும் நான் என் இருதயத்திலே முத்தஞ் செய்துகொண்டுவருகிறேன். அவருடைய வழிகள் எப்படியோ, அப்படியே அவருடைய பாதங்கள் நீதியும்



தயவுமாயிருக்கிறது. இந்த இரண்டும் அவருக்குச் சொந்தமானபடியால், இந்த இரண்டிலும் அவர் புகழப்படத்தக்கவராயிருக்கிறார். அவர் சங்கையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். பரமண்டலத்திலேஇருந்து மாத்திரமல்ல, நரகத்திலேஇருந்துங் கூட அதை வரப் பார்க்கிறார். அவருடைய நீதி என்னைக் கடிந்துகொள்ளுகிறது. அவருடைய தயவு என்னை ஆற்றுகிறது. தம்முடைய கடிந்துகொள்ளுதலால் என்னைத் தமக்குப் பயப்பட பழக்குகிறார். தம்முடைய ஆற்றுதலினாலே என்னிடத்திலே தம்மைப் பற்றும் நம்பிக்கையை உண்டுபண்ணுகிறார். உலகம் ஒரு காலை மாத்திரம் முத்தஞ் செய்கிறது. அவர் ஆறுதல் சொல்ல வந்தால், அவரை வாரும் என்று அழைக்கிறது. அவர் அடிக்க வந்தால், அவரை வரவேண்டாம் என்று கதவைப் பூட்டிக்கொள்ளுகிறது. உலகத்திற்கு அவரை நம்ப மனது உண்டு, ஆனால் அவருக்குப்பயப்படக் கட்டோடே மனதில்லை. ஒரு காலை எப்படி நல்லதென்கிறோமோ, அப்படித்தானே பின் ஒரு காலையும் நல்லதென்க வேண்டும். உன்னைக் கண்டிக்கிறவரும் உன்னைத் தேற்றுகிறவரும் ஒரே இயேசு அல்லவோ. இந்த இரண்டும் ஒரே இருதயத்திலிருந்து வருகிறதல்லவோ. இந்த இரண்டும் ஒரு நோக்கத்தைப் பற்றி உனக்கு நன்மையாக நடக்கிறதல்லவோ. ஒரு இயேசுவைச் சிநேகித்து அத்தோடேகூட அவரையும் பகைக்கக் கூடுமோ. ஒரே இருதயத்திலே இருந்து என் இரட்சிப்பும் கேடும் ஒருமிக்க வரக் கூடுமோ. அவர் என்னோடேகூட முள்ளுகள் வழியாய் நடந்தாலும், வாசனையான பூவின் வழியாய் நடந்தாலும், என்னைப் பரமண்டலத்துக்கு மாத்திரம் கூட்டிப்போய்விட்டால், எல்லாம் எனக்குச் சரியல்லவோ. இயேசு நாதர் உன்னைக் கண்டிக்கிறதென்னத்துக்கு, சொல். பின்பு உன்னை ஆறுதல் படுத்த அல்லவா. அழுத்தமான கல்லை நொறுக்கினாலொழிய, அதின் பேரில் விடுகிற எண்ணெய் சுவறுமா. இயேசு உனக்கு மகா மதுரமாகிறதெப்போது. நீ கசப்பான ஔஷதத்தைச் சாப்பிட்டால்தான், அவர் உனக்கு மகா மதுரம் ஆவார். ஆறுதல் மேல் உனக்குப் பிரியம் இருந்தால், கடிந்து கொள்ளுதல் மேலும் நீ பிரியப்படவேண்டும். இருதயம் நொறுங்குண்டவர்களை அவர் குணமாக்குகிறார். சங்கீ. ௱சஎ, ௩. இயேசு தமது ஆறுதலின் எண்ணெயை எந்த இருதயத்தில் ஊற்றவேண்டுமோ, அந்த இருதயம் முன்னால் காயப்பட்டதாயிருக்க வேண்டும். ஆரோக்கியவானுக்கு வயித்தியன் தேவையா. நான் எனக்கு ஆறுதல் சொல்லுகிற இயேசுவின் வாயை முத்தமிட்டு, என்னை அடிக்கிற அவருடைய கையையும் முத்

தவிக்கிறேன். சிலுவையில் அடிபட்ட அடி. சிநேகத்தின் அடி. அவருடைய பிரியம் என்னை நல்ல கிறிஸ்தவனாக்குகிறது. நான் அதை முத்தமிட்டு, தாவீதோடேகூட: தேவரீர் என்னைத் தாழ்த்தினவனாய் ஒத்தாசை செய்தபடியால், நான் உம்மை ஸ்தோத்திரம்பண்ணுகிறேன் என்று சொல்லுகிறேன். சங்கீ. ௱௰௮, ௨௧.

சஎ. தியானம்.

## பராபரனோடே சமாதானமாயிருப்பதைப் பற்றியது.

### சமாதானம் இல்லாமையில் சமாதானம்.

இது கூடுமா. நன்றாய்க் கூடும். நான் எப்போதும் சமாதானமாயிருந்தும், ஒருக்காலும் சமாதானம் இல்லை; அழுத போதிலும், சிரித்துக்கொண்டிருக்கிறேன்.

சமாதானம் உண்டென்று நீ சொல்லுகிறாயே. அதை ஒப்புவி, பார்ப்போம். சத்துருக்கள் தேசத்திலும் ஊரிலும் இல்லாததிலேதானே.—நானே சொல்லுகிறதென்ன, கேள். பிசாசும் மனுஷரும் ஏகமாய் ஒத்து விரோதமாய் ஒன்றுகூடி என்னை வளைத்துக்கொண்டு நாலுபக்கத்திலும் என்னை நெருக்கியும், எனக்கு இன்னும் சமாதானந்தான். எனக்குப் புறம்பே சமாதானம் இல்லாமல் இருக்கையில், எனக்குள்ளே சமாதானமாயிருக்கிறது. சத்துருக்கள் அநேகராயிருக்கவும், அவர்களை நான் சற்றும் சட்டைபண்ணுகிறதில்லை. மோசம் பெரிதாயிருந்தும், நான் அச்சமற்றிருக்கிறேன். சத்துருக்கள் கொந்தளிக்கக் கொந்தளிக்க, நான் அதிகத் திடாரிக்கமாயிருக்கிறேன். அது எப்படி நடக்கும் என்று நீ கேட்டால், சொல்லுகிறேன், கேள். நான் சமாதானமாயிருக்கிறது பிசாசுக்குப் பொறுக்காது. ஆகையால் அது ஒன்றின் பிறகாலே ஒன்றாய் எனக்குச் சேதம் உண்டாக்குகிறது. நானும் அதின் சமாதானத்துக்கு ஆசைப்படவில்லை. ஏனென்றால் நான் அதோடு சமாதானமாயிருந்தால், அப்போது பொல்லாப்பு என்னைச் சூழ்ந்துகொண்டே இருக்கும். அது தன் சிநேகிதரோடே அல்லாமல் மற்றவர்களோடே சமாதானமாயிருக்கிறதில்லை. பிசாசு என்னைக் கலக்கப்படுத்த எவ்வளவு முயற்சி செய்தாலும், எனக்குச் சமாதானம் இருக்க வேண்டும். கிறிஸ்துவானவர் தமது சமாதானத்தை எனக்குத் தருகிறார். யோவா. ௰௪, ௨௭. இருதயத்தை அமர்த்தி, பயத்தையும் திகிலையும் நீக்குகிறார். நான் பிசாசை ஒரு சக்குச்



சமானமாய் எண்ணி, அதுக்கு இனி பயப்படாதபடிக்கு பண்ணுகிறார். ஒரு தாய் அழுகிற தன் பிள்ளையோடே குளிர்ந்த முகமாய்ப் பேசினால், அதின் அழுகை அமர்ந்து போகாதா. அதுபோல் இயேசுவும் வியாகுலப்படுகிற என் ஆத்துமத்துக்கு ஆறுதலான விசேஷம் சொன்னால், என் மனதும் அமர்ந்து சமாதானம் ஆகிறதும் அல்லாமல், ஆத்துமம் பிசாசை மரணத்தைப்போலும், மரணத்தை ஒன்றும் இல்லாததுபோலும் எண்ணுகிறதற்கான அவ்வளவு தைரியமும் துணிகரமும் அதற்குப் பிறக்கிறது. இதுவே இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள் காப்பாற்றும் எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம். பிலிப். ௪, ௭. மோசத்தின் நடுவிலே திடாரிக்கமும், தரித்திரத்தின் நடுவிலே நிறைவும், பரிபூரணமும், பெலவீனத்துக்குள்ளே மகா பெலனும், பரம சக்தியும், இந்த சமாதானத்தால் வருகிறது. அது கிறிஸ்துவின் மதுரத்தை ருசிக்க இருதயத்தை அவருக்குள்ளே இழுக்கிறது. அந்த ருசிபார்க்குதல் ஆத்துமாவுக்கு எவ்வளவு பெலனாயிருக்கிறதோ, அவ்வளவு உறுதியாய் அவருக்குள் தங்கி, ஜெயிக்கக்கூடாத கோட்டைக்குள் இருக்கிறதுபோல், அங்கே அமர்ந்து அச்சம் அற்றிருக்கிறது. ஏனென்றால் இந்தக் கோட்டையை இடித்துத்தள்ள எந்தப் பேயாலும் கூடாதே. இப்படி அந்தச் சமாதானம் இருதயத்தை அச்சமறப் பண்ணுகிறதுமல்லாமல், மகிழ்ச்சி[illegible]யுங் கொடுக்கிறது. மகிழ்ச்சியை மாத்திரம் அல்ல, தயி[illegible]யுங் கொடுக்கிறது. தயிரியத்தை மாத்திரம் அல்ல, [illegible]படாமையையுங் கொடுக்கிறது. நம்மை வெல்லப்படாதவ[illegible]ளாக்குகிறதுமல்லாமல், சத்துருவையும் திகிலடையப்ப[illegible]ணுகிறது. நான் சகல காரியத்திலும் பராபரனுடைய ப[illegible]பிரியமான சித்தத்துக்கேற்றபடி நடக்கப் பிரயாசப்படுவேன். அப்போது சமாதானம் இல்லாமையின் நடுவிலே சமாதானம் எனக்குண்டு.

சஅ. தியானம்.

## மெய்யான கிறிஸ்தவர்களைப் பற்றியது.

### எல்லாம் ஆயிருந்தும் ஒன்றும் இல்லை.

மனுஷன் இப்படிப்பட்டவன். அவன் சகல செந்துக்களின் அவை அடக்கமாயிருக்கிறான்; எல்லாவற்றிலேயும் இருக்கின்ற குணம் ஒவ்வொன்று அவனிடத்தில் உண்டாயிருக்கிறபடியால், எல்லாம் அவனே என்று சொல்லலாம். அவன்

ஒரு பொருளாயிருக்கிறபடியினாலே, கல்லுக்கு ஒப்பாயிருக்கிறான். அவன் வளர்ந்து வர்த்திக்கிறபடியால், மரங்களுக்கும் செடிகளுக்கும் ஒப்பாயிருக்கிறான். அவன் உணர்ச்சியுள்ளவனாயிருந்து கண்டு கேட்டு நடந்து தின்று குடிக்கிறபடியினாலே, மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான். சம்மனசுக்களோடு அவனை ஒப்பிடலாம். ஏனென்றால் சம்மனசுக்களுக்கு இருக்கிற புத்தியும் புத்தியும் அவனுக்கும் உண்டு.

இப்படி அவனுக்கு எல்லாம் இருந்தும், ஒன்றும் இல்லாதவனாகவும் இருக்கிறான். ஏனென்றால் அவனுக்கு இருக்கிறதெல்லாம் பராபரனுடைய கிருபையினாலே உண்டாயிருக்கிறது. கிழுக்குச் சரீரம் காரணமாயிருக்கிறதுபோல், அவனுக்கு உண்டாயிருக்கிறவைகளுக்குப் பராபரன் காரணராயிருக்கிறார். பெட்டியிலிருக்கிற உடைமை அப்பெட்டியினுடையதாயிராமல், அதிலே அதை வைத்து எடுக்கிறவனுடையதாயிருக்கிறது. அவனுக்கு அழகு உண்டாயிருந்தால், அது அவனுடையதல்ல, பராபரனுடையது. நேர்த்தியான பூ சூரியனிலே வாடிப்போகுமாப்போல், தோல் அழகு சீக்கிரத்திலே குன்றிப்போகும். இப்படி அவன் ஒன்றுமில்லை.— அவனுக்கு விவேகம் உண்டாயிருந்தால் அதுவும் பராபரனுடையதல்லவோ. ஏனென்றால் நேபுகாத்நேசனைப்போல் தன்னை மிகுதியாய்ப் பெருமைப்படுத்துகிறவனுடைய
த்தியுள்ள இருதயத்தை எடுத்துப்போட்டு, மிருகப்
அதற்குப் பதிலாகக் கொடுக்க அவருக்கு எளிதாய்க்
தானியேல். ௪.—மனிதன் செய்கிற நன்மை அவனுடையதல்ல, பராபரனுடையது. இவன் பணிமுட்டு, பராபரன் வேலைசெய்கிறவர். நான் அல்ல, எனக்குள்ளிருக்கும் பராபரனுடைய கிருபை இதைச் செய்கிறது.

எல்லாம் இருந்தும் ஒன்றும் இல்லை என்கிறதை ஒரு மெய்யான கிறிஸ்தவனிடத்தில் காணலாம். சகலமுமாயிருந்து சகலத்தையுங் கொடுக்கிறவருடைய சாயலைத் தனக்குள் அணிந்துகொள்ளுகிறபடியினாலே, அவன் எல்லாமாயிருக்கிறான். அவன் எல்லாருக்கும் எல்லாமானபடியினாலே, எல்லாமாயிருக்கிறான். ௧ கொரி. ௯, ௨௨. மனச்சாட்சி அவனுக்கு எம்மாத்திரம் உத்தரவு கொடுக்கிறதோ, அம்மாத்திரம் ஒவ்வொரு மனுஷனுக்கும் ஏற்ற பிரகாரமாக நடந்து கொள்ளப் பார்க்கிறான்.—மேலும் அவன் ஒன்றுமில்லை. ஏனென்றால் அவன் தனக்குத்தானே எல்லா மகிமையையுந் தக்குவித்துக்கொண்டு தன்னைத்தானே உயர்த்தாமல், எல்லாவற்றிலும் பராபரனுடைய மகிமையை விளங்கப்பண்ணுகிறானே. நான் மெய்யான கிறிஸ்தவனுடைய குணங்களைப்பற்றி முன்



கிசை சொன்னதை இப்போது நினைவுகூருகிறேன். ஒரு மெய்யான கிறிஸ்தவன் எப்போதும் மனத்தாழ்மையாயிருக்கிறான். ஏனென்றால் அவன் ஜென்மபாவத்தைத் தவிர வேறே ஒன்றும் தனக்குச் சொந்தமாயிருக்கவில்லை என்று அறிந்து கொண்டிருக்கிறான். ஆகையால் அவன் தன்னைத்தானே அற்பமாய் எண்ணுகிறதும் இகழ்ந்து கொள்ளுகிறதுமல்லாமல் மற்றவர்கள் தன்னை இகழ்ந்து பேசினாலும், அதையும் நல்ல மனதோடே சகிக்கிறான். தன் கிரியை ஒன்றும் இல்லை என்று எண்ணுகிற படியால், அது மெச்சிப்பேசப்பட அவனுக்கு மனதில்லை. பராபரன் மாத்திரம் சகல நன்மைக்கும் ஊற்றும் ஆதிகாரணமுமாயிருக்கிறாரென்று அறிந்து ஒன்றுந் தன்னுடையதென்று சொல்லாமல் எல்லாவற்றிலும் பராபரனுடைய மகிமையை விளங்கப்பண்ணுகிறான். நானும் அப்படித்தானே இருக்கிறேன். நீயும் உன்னைச் சோதித்துப் பார்.

௨௮. தியானம்.

## சேதம் வருவியாத ஐசுவரியத்தைப் பற்றியது.

### வெகு ஆஸ்தியிலும் தரித்திரம்.

லோபிகளைக் குறித்து இப்படிச் சாதாரணமாய்ச் சொல்லுகிறதுண்டு. அதுவும் மெய்தான். ஐசுவரியமும் தரித்திரமும் மனதிலே இருக்கிறது. அதிகம் வேண்டுமென்று ஆசைப்படாமலிருக்கிறவனே ஐசுவரியவான், இன்னம் அதிகம் வேண்டுமென்று ஆசைப்படுகிறவனே தரித்திரன். நான் எத்தனைக்குப் போதும் என்று இருக்கிறேனோ அத்தனைக்கு நான் ஐசுவரியவான், நான் இன்னம் எத்தனைக்கு வேண்டுமென்று இருக்கிறேனோ அத்தனைக்கு நான் தரித்திரன். பொருளாசைக்காரன் தனக்கு இருக்கிறது போதும் என்று ஒரு போதும் சொல்லான். அவனுக்கு அநேகம் இருந்தும் ஒன்றும் அற்றவன்போல் இருப்பதால், அவனை வெகு ஆஸ்தியிலும் தரித்திரன் என்று சொல்ல வேண்டும். அவன் ஆஸ்தி எல்லாம் அவன் கண்ணுக்குக் காட்சியே அல்லாமல் வேறல்ல. பிச்சைக்காரனாயிருக்கிறவனுங் கூட ஆஸ்தியைக் கண்ணாலே பார்க்கத் தடையில்லை. ஆனால் அது அவனுடையதல்லாதபடியால், அதை அவன் எடுத்துக்கொள்ளக் கூடாது. அப்படியே பொருளாசைக்காரனும் தன் சொந்தப்பொருளைத் தொடக் கூடாது. ஏனெனில் பொன் அவனுக்குச் சுவாமி. ஆகையால் நான் எப்படி அந்நியன் பொருளை அநுப

விக்கக் கூடாதோ, அப்படியே பொருளாளைக்காரனுந் தன் பொருளை அநுபவிக்கக் கூடாதவனாயிருக்கிறான். அவன் தனக்குத் தானே சொந்தம் இல்லாத தரித்திரன். அப்படிப் பட்ட லோபியை ஒரு சாஸ்திரி, ஈயைப் பிடிக்க வலை பின்னும் போது, தன் குடலைத் தானே செலவழிக்கிற சிலந்திப்பூச்சிக்கு ஒப்பிடுகிறார். அது போலவே லோபியுந் தன் சீவனுக்காக வும் பிழைப்புக்காகவும் கவலைப்படுகிறதிலே தன்னைத் தானே அரித்துக்கொள்ளுகிறான். தனக்குத்தானே சொந்தமில்லாத வன் எதுக்குச் சொந்தக்காரனாயிருக்கலாம்.

வெகு ஆஸ்தியிலும் தரித்திரனாயிருப்பது கிறிஸ்தவனுக்குத் தகுதி. உனக்கு அநேகம் இருந்தும் நீ சிற்றின்பத்தையும் ஊதாரித்தனத்தையும் விலகி நடி, உன் சரீரத்துக்கு அவசியமானவற்றை மாத்திரம் செய்வாயானால், வெகு ஆஸ்தியிலும் தரித்திரனாயிருப்பாய். அன்றாடகப் பிழைப்பற்ற தரித்திரன் எங்கும் உண்டா. பராபரன் ஒருவனும் கிலேசியாத படிக்கு ஒரு பிடி அன்னமாகிலும் கொடுத்து ஆச்சரியமான பிரகாரம் அவனைப் பிழைப்பூட்டுகிறார். நீ உன் ஆஸ்தியான்று உன் சுயபுத்தி பிரயாசத்தால் வந்தது என்று எண்ணாமல், நீ பராபரனை நோக்கி இடைவிடாமல் செய்த செபத்தினால் அவருடைய தயவுள்ள கரத்திலிருந்து வாங்கின பிச்சையாக அதை எண்ணுவது நியாயம். நீ இப்படிச் செய்வதால் எந்நேரமும் வீட்டுக்கு வீடு பிச்சை வாங்குகிற பிச்சைக்காரனைப்போல் தரித்திரனாயிருக்கிறாய். நீ உன் பொருளை உன் சொந்த பொருளாகப் பாராமல், இரவலாய் வாங்கின உடைமைபோல் பாவித்து, நான் அதற்கு எசமானாயிராமல், பராபரனால் அதற்கு உக்கிராணக்காரனாய் வைக்கப்பட்டவன் என்று நினைத்து, உனக்குள்ளதிலிருந்து ஏழைகளுக்குத் தாராளமாய்க் கொடுத்து உதவவேண்டும். இப்படி நீ வெகு ஆஸ்தியிலுந் தரித்திரனாயிருக்கிறாய். வேறொன்றும் தனக்கு ஒன்றும் சொந்தமாக வைத்திராதவனையன்றி தரித்திரன் ஆர். உன் ஆஸ்தியின் பேரிலே உன் இருதயத்தை வைக்காதிருக்கவும், பராபரனுக்குச் சித்தமான வேளையிலே அதை விட்டுவிடவும் நீ ஆயத்தமாய் இரு. உனக்குச் சேதம் வந்தால், மனம் வேசாறாமல் மனரம்மியமாயிருந்து ஒருக்காலும் அந்த ஆஸ்தி உன்னிடத்தில் இராதிருந்ததுபோல் எண்ணி மெய்யான தாழ்மையிலும் பொறுமையிலும் இருந்து, யோபோடே: கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக் கடவது என்று சொல்லு. இப்படியாக நீ திரளான ஆஸ்தியிலும் தரித்திரனாய் இருப்பாய். ஆகையால் அநித்திய பொருளின் மேல்



இருதயத்தை வைக்காவிட்டால், அந்தப்பொருள் ஒருத்தனுடைய ஆத்துமத்துக்கும் சேதமாய் இராது.

௰௬. தியானம்.

## முந்தின பாவத்தில் திரும்ப விழுவதைப் பற்றியது.

முந்தினதிலும் பிந்தினது கேடானது.

நான் பாவஞ் செய்தேன். அதற்காக உத்தமமனஸ்தாபப் படுகிறேன். இனிமேல் அப்படிச் செய்யாமல் குணப்பட்டவனைப்போல் நடப்பேன் என்று குருவின் முன்பாக நீ அறிக்கையிட்டு போய், உன் முந்தின பாவங்களின் சுத்திகரிப்பை மறந்து முன் செய்ததுபோலே தானே திரும்பச் செய்தால், முந்தின காரியங்களைப் பார்க்கப் பிந்தின காரியங்கள் அதிகக் கேடாகும். நாய் தான் கக்கினதைத் தின்னவும் குளிப்பாட்டப்பட்ட பன்றி சேற்றில் புரளவும் திரும்புகிறதென்கிற மெய்யான பழமொழியின் படியே உனக்குச் சம்பவிக்கிறது. வேகாகம. ௨ பேது. ௨, ௨௨. உன்னை யாருக்கு ஒப்பிடுவேன். உன்னை பச்சைக்கல்லைத் தண்ணீரிலே அலசுகிற மனுஷனுக்கு ஒப்பிடலாம். அந்தக் கல்லைத் தண்ணீரிலே அலச அலசச் சேறாய்ப்போகும் அல்லவோ.—வலையிலிருந்து எடுத்துவிடப் பட்டு திரும்பவும் அதிலே ஆங்காரமாய் ஓடிவந்து மாட்டிக்கொள்ளுகிற மிருகத்துக்கு உன்னை ஒப்பிடுகிறேன்.—அழுக்காய்ப்போன தன் வேட்டியைக் களைந்துவிட்டு வெள்ளை வஸ்திரந் தரித்துக்கொண்டு அத்தோடே சேற்றிலே விழுந்து முன்னிலும் அதிகமாய்த் தன்னை அழுக்காக்குகிற சிறு பிள்ளைக்கு உன்னை ஒப்பிடுகிறேன். இப்படிப்பட்டவர்களுடைய பின்நிலைமை முன்நிலைமையிலுஞ் சேடுள்ளதல்லவா. முன்னாலே பழைய வஸ்திரம் மாத்திரம் அழுக்காய்ப் போயிற்று. பிறகு புதிதும் அத்தோடே கூட கெட்டது. இதைக் குறித்துக் கிறிசொஸ்தொமு என்பவர் சொன்னதைக் கேள்: வியாதிக்காரர் எப்போதும் ஒழுங்காய் நடக்காமல் இரண்டு மூன்று நாளைக்கு மாத்திரம் பத்தியம் பிடிக்கிறது உதவாது. அதுபோல் பாவஞ் செய்கிற மனிதனும் இரண்டு மூன்று நாளைக்கு மாத்திரம் குணப்பட்டவனாயிருந்து பிறகு பாவத்தை மட்டுக்கட்டாமல் செய்தானேயில் அது உதவாதென்கிறார். ஆகையால் ஆத்துமாவே, எப்போதும் எச்சரிக்கையாயிரு. உன்னை ஒருவிசை சுட்ட அக்கினிக்கு அஞ்சி நடந்து ஒருவிசை விழுந்து பல நொறுக்கத்தோடே தூக்கி எடுக்

கப்பட்ட குழியைவிட்டு விலகு. அடிக்கடி ஒரு பாவத்திலே விழுந்தால், பிறகு அது தானே ஒரு பழக்கமாய்ப்போகும். அந்தப்பழக்கம் பாவத்தைப் பிரியமாக்குகிறதுமல்லாமல், கடைசியிலே அந்தப் பாவத்தைவிடக் கூடாமலும் விட மன தில்லாமலும் போகும்படியாய் துணிகரத்தையும் பலத்தை யும் கொடுக்கிறது. ஆ, உனக்கு ஒருவேளை முழுவதும் கசப் பானது மறுபடி எப்படி தித்திப்பாயிற்று. உன் முந்தின குணப்படுதல் வெறும் மாயமாய் இருந்ததோ என்று ஐயப் படுகிறேன்.

௩௧. தியானம்.

# தன்னைத் தானே நியாயந் தீர்க்கிறதைப் பற்றியது.

இன்று என்னுடையது, நாளை பராபரனுடையது.

பூர்வத்தாருக்குள்ளே நியாயம் விசாரிக்கிறதற்கென்று விசே ஷித்த நாட்கள் குறிக்கப்பட்டிருந்ததால், கடைசி நியாயத் தீர்ப்பும் வேத புத்தகத்திலே நியாயத்தீர்ப்பின் நாள் என்று அழைக்கப்பட்டிருக்கிறது (௧ கொரி. ௪, ௩). நாம் வருஷத் திலே பல நாட்களை எண்ணுகிறோம். ஒவ்வொன்றுக்கும் இன்று என்று பெயர். நேற்று இருந்த நாளும் இன்று என்று தான் சொல்லப்பட்டது. இப்போது இருக்கிறதும் இன்று என்று தான் சொல்லப்படுகிறது. வரப்போகிற நாளும் இன் று என்று சொல்லப்படும். ஒரு கிறிஸ்தவன் இரண்டு நாளை நன்றாய்க் கவனிக்க வேண்டும்; ஒன்று அவனுடையது, ஒன்று பராபரனுடையது. இன்று என்பது அவனுடையது (லூக். ௰௯, ௯; எபிரே. ௪, ௭). நாளை என்பது பராபரனுடை யது. எவன் இன்றைக்கே பராபரனுடைய கைக்குக் கீழா கத் தாழ்ந்து வளையாமல் இருக்கிறானோ, அவன் நாளைக்கு அதின் கீழே முறிந்து விழ வேண்டும். எவன் இன்றைக்குத் தன்னைத்தானே நிதானித்து விசாரிக்காமல் இருக்கிறானோ, அவன் நாளைக்குப் பராபரனால் நியாயந் தீர்க்கப்படுவான் (௧ கொரி. ௰௧, ௩௧). ஆகையால் கிறிஸ்தவனே, உனக்குச் சம்மந்தியானதைத் தெரிந்துகொள். நான் தெரிந்துகொள்ளு வதோ உத்தமமானது. அது இன்றுதான். ஆனால் ஆதாமின் மக்கள் தங்கள் தகப்பன் குணமாயிருந்து பராபரனைப்போல் இருக்கவேண்டுமென்று நினைத்து இன்று என்கிற நாள் அல்ல, நாளை என்கிற தினமே எங்களுடையதாயிருக்க வேண்டும், நாளைக்குக் குணப்படுவோம, நாளைக்கு கவனித்துக்கொள்ளுவோம்



என்று சொல்லுகிறார்கள். ஆ பைத்தியமே, நாளை என்கிற நாள் உன் கையில் இல்லையே, பராபரனுடைய கையில் அல்ல வோ இருக்கிறது.

பின்வரும் மூன்று காரியங்கள் இன்றைக்கு நமக் குண்டு; நாளைக்கு இருக்குமோ என்பது நிச்சயமல்ல. அதில் முந்தினது உன் சீவன். நாளைக்கு நல்லவன் ஆவேன் என் கிறாயே. நாளைமட்டும் உயிரோடிருப்பாய் என்பது ஆருக் குத் தெரியும். இன்றைக்குச் சுகமும் பெலமும், நாளைக்குச் சாவும் பாடையும். நாளைமட்டும் இருப்பேன் என்று நான் சொல்லுகிறது எப்படி. நீ பிழைக்கும் ஒரு நிமிஷமாகிலும் நிச்சயமல்லவே. உன் சீவன் இடைவிடாத சாவாயிருக்கி றது. விளக்கு அவிந்தால் திரி செலவழியாது. ஆனால் அது எரிய எரிய, திரியும் குறைந்து கொண்டே வரும். ஒரு ஓட் டைப்பானையிலுள்ள தண்ணீர் எல்லாம் ஒழுகினபின் அது வெறுமையாகத் துவக்காமல், ஒழுகத் தொடங்கும்போது வெறுமையாகத் துவக்குகிறது. நெருப்பானது தன்னை வளர்க்கிற வஸ்துவைத்தானே பட்சித்து விடுகிறதுபோல், மனுஷனுடைய சீவனும் தனக்குப் பிழைப்பையும் புசிப்பை யும் சம்பாதித்துக் கொடுக்கிற மனுஷனைத்தானே பட்சித் துப்போடுகிறது. சாவும் சீவனும் ஒன்றை விட்டு ஒன்று இணைபிரியாததாயிருக்கிறது. ஏனென்றால் சீவன் சாவுக்குப் போகிற வழி. நமது ஆயுசு எவ்வளவு நீளமோ, அவ்வள வுக்கு மரணம் சமீபம். இதற்கு ஒத்தபடியே அகுஸ்தீன் என்பவர் நமது ஆயுசுகாலத்தை மரணசீவன் என்றும், சீவ மரணம் என்றும் எவ்வளவு தகுதியாய்ச் சொல்லுகிறார். ஒருத்தன் பிறப்பிலே இறப்பு தொடங்குகிறது. அவன் இறக் கையில் இறப்பு முடிகிறது. ஆனால் மெய்க் கிறிஸ்தவனுக்கு அவன் சாவுவேளையில் மெய்யான சீவன் துவக்குகிறது.

நாளைக்கு இருக்கும் என்கிற நிச்சயமில்லாத இரண் டாங் காரியம் என்னவென்றால், குணப்படுதல் தானே. நாளைக் குணப்படுவேன் என்கிறாயே. நாளை அதற்கு ஒரு தடையும் வராதென்று உனக்குத் திட்டமாய்த் தெரியுமா. நாளைக்கு உன் புத்தி கலங்கியாவது உன் மனம் பேதலிக்கா வது போகலாமே. அல்லது நாளைக்கு உன் அனுவலால அதற்குத் தடை நேரிடலாமே. ஆ, பராபரன் உனக்குக் கொ டுக்கையிலே வாங்கு. இன்றைக்கு அவர் உன் இருதயத்தை அசைக்கையிலே நீயும் அவருடைய இருதயத்தைப் பற் றிக்கொள். அவருடைய இருதயம் இரக்கத்தால் இரத்த மாய்ப் பொங்குகிறபோது, உன் இருதயம் இரத்தக் கண்ணீ ராய் ஓடத் தேவையில்லையோ.

நாளைக்கு இருக்கும் என்கிற நிச்சயமில்லாத மூன்று வது காரியம் தேவ கிருபை. நாளை கிருபையுள்ள பராபரனைத் தேடக் கவலைப்படுவேன் என்கிறாய். ஆனால் நீ இன்றைக்குப் புறக்கணித்த தேவ கிருபை நாளைக்கு உன்னைவிட்டு விடுபடுவது நீதியாயமென்று உனக்குத் தெரியாதா. இன்றைக்குப் பராபரன் தமது கையை நீட்டித் தமது கிருபையை உனக்குக் கொடுக்க வருகிறார். நீயோ வேண்டாம் என்கிறாய். நாளைக்கு அவர் தமது கையைத் திரும்ப மடக்கிக்கொள்ளுவார். இன்றைக்கு அவர் தமது கிருபையின் கதவைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கிறார். நீயோ அதை அசட்டைபண்ணுகிறாய். நாளை அவர் அதை உன் முகத்துக்கு முன் அடைத்துப் பூட்டிப்போடுவார். அவரும் வேசாறி உன் மனதில்லாமையைத் தமது மனதில்லாமையினால் தண்டிப்பார். இன்றைக்கு உனக்கு மனதில்லாவிட்டால், நாளை அவருக்கும் மனதிராது. உனக்கு அவர் அநியாயம் செய்கிறதில்லை. ஆகையால் என் இருதயமே! இன்றைக்கு, இன்றைக்கு. நான் என் பராபரனை எனக்காகக் காத்திருக்கச் செய்யேன். ஊழியக்காரனே ஆண்டவருக்குக் காத்திருக்க வேண்டும்.

௩௨. தியானம்.

## பிழைக்க வேண்டுமென்கிற ஆசையைப் பற்றியது.

இனி பிழைத்திருக்கிறது என்னத்துக்கு ஈசுவி. ஆமக்கபேயர். ௨. ௰௩.

இப்படி மத்தத்தியாஸ் என்கிற ஆசாரியன் சொல்லுகிறார். இனி பிழைத்திருக்க எனக்கு ஆசையில்லை, நான் பிழைத்திருந்தது போதும். எனக்கு இருக்கிற ஒன்றை அறியவும் எனக்கில்லாத ஒன்றைத் தேடுகிறேன். முந்தினது என் சீவனை எனக்குக் கசப்பும், பிந்தினது என் சாவை எனக்குத் தித்திப்புமாக்குகிறது. எனக்குள்ளே அதாவது என் மாம்சத்துக்குள்ளே நன்மை வாசமாயிருக்கிறதில்லை என்று அறிவேன். நிர்ப்பந்த மனுஷன் நான், ஆர் இந்த மரண சரீரத்தினின்று என்னை நீங்கலாக்கி விடுவான். ரோ. எ, ௰அ. ௨௪. நான் எனக்கில்லாமல் தேடுகிற மற்றொன்று என்னவெனில், என் ஆத்தும நேசர் தான். அவரை நான் தேடுகிறேன். உன்னதப்பாட்டு ௩, ௧. பிரிந்துபோய் கிறிஸ்துவுடனே இருக்க எனக்கு ஆசையிருக்குது. பிலிப். ௧, ௨௩. இயேசுவை விட நான் இருப்பதற்குப் பிரியமான இடம் எங்கே. ஒரு மணவாளிக்குத் தன் மணவாளனண்டையிலிருக்கிறதை வி



பிரியமான இடம் எது. மேய்ப்பன் கிட்ட இருக்கிறதை விட ஆட்டுக்கு நலமான இடம் எங்கே. ஆ இயேசுவே, சீக்கிரமாய் வாரும்.

இன்னம் பிழைத்திருக்க உனக்கு ஆசை உண்டா. அப்படியானால் உன் சீவன் எப்படிப்பட்டதென்பதை நான் சொல்லுகிறேன், கேள். நீர் என்னமாயிருக்கிறீரென்று ஒரு ஞானமுள்ள பெரிய மனுஷனைக் கேட்டபோது, நான் மெள்ள மெள்ள சாகிறேன் என்று உத்தரவு சொன்னார். இவர் சொன்னது மெத்த உசிதம். ஏனென்றால் நம்முடைய சீவன் எழுகையில் குறைந்துகொண்டு வருகிறது, அது ஓட ஓட, தன் ஓட்டத்தின் இலக்கை எட்டிப்பிடிக்கிறது. சாகிறதற்கு ஆசை உனக்குள்ளே தானே இருக்கக்கொள்ள, சாக மனதில்லை என்று நீ சொல்லுகிறதெப்படி. நீ மெள்ள சாக வேண்டும் என்கிறாய். அப்படியானால் வேதனை அதிகக் கொடிதாயிருக்கும். பாக்கியமான மரணத்தின் வழியாய்ப் பெறும் பலனாகிய உத்தம சீவனை அடைய மனதில்லாமல் மரணத்திலே நாள்படத் தரித்துப் பிழைக்க ஆசைகொண்டிருக்கிறாயோ. இன்னம் அப்புறம் கேள். பிழைத்திருக்குதல வெகு பொல்லாப்பைப் பார்க்கிறதும், வெகு பொல்லாப்பைச் செய்கிறதும், பொல்லாப்பை உத்தரிக்கிறதுமாயிருக்கிறது. பொல்லாப்பை உத்தரிக்கிறதினால் கஸ்தி உண்டாகிறது. கஸ்தி இருதயத்தை அரித்துப்போடுகிறதாம். பொல்லாப்புகளைப் பார்க்கிறதினால் இடறல் உண்டாகிறது. இடறல் கீழே விழத் தள்ளுகிறது. பொல்லாப்பைச் செய்கிறதினால் பொல்லாத மனச்சாட்சி உண்டாகிறது. பொல்லாத மனச்சாட்சியோடே இருக்க உனக்கு ஆசை இருக்கிறதோ [illegible]கம். உயிரோடே இருக்க வேண்டுமானால் இரு. ஆகிலும் திறகா[illegible] அப்படியிருக்க [illegible] என்கிறவர் சொன்னதைக் கேள். பொல்லா[illegible]ராத்து [illegible] பொல்லாததும் மெத்த பொல்லாததும் எல்லாவற்றிலும் பொல்லாததும் உலகத்திலே உண்டாயிருக்கிறது. நல்லதும் மெத்த நல்லதும் எல்லாவற்றிலும் நல்லதும் பரமண்டலத்திலே இருக்கிறது என்கிறார். நான் எல்லாவற்றிலும் நல்லதைத் தெரிந்துகொள்ளுகிறேன். நீயும் அப்படிச் செய்வாயாக.

## செபத்தில் கேட்க வேண்டிய பிரதான பொருளைப் பற்றியது.

*மன்றாடுவது ஒன்றுக்காக, மற்றொன்றுக்காகவும் அல்ல.*

மனுஷராகிய நாம் வெகு காரியங்களுக்காகப் பராபரனை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறோம். நாம் வேண்டிக்கொள்ளுகிறது இன்னதென்று அடிக்கடி நமக்குத்தானே தெரிகிறதில்லை (ரோ. ௮, ௨௬). பராபரன் பிரியத்தோடே கொடுக்க மனதில்லாததைச் சிலவிசை கோபத்தோடே கொடுக்கிறார். இஸ்ரவேல் சனங்கள் இறைச்சி வேண்டுமென்றபோது, பராபரன் அதை அவர்களுக்குக் கொடுத்தார். ஆனால் சனங்கள் அதைத் தின்று செத்தார்கள்.—சிலர் வெகு ஆஸ்தி வேண்டுமென்று பராபரனை மன்றாடுகிறார்கள். அவரும் அதைக் கொடுக்கிறார். ஆனால் அது அவர்களுக்குச் சாபமாகிறது. அவர்கள் அத்தனை ஐசுவரியவான்களாயிராவிட்டால் அவர்கள் ஒருவேளை இரட்சிக்கப்படக் கூடியதாயிருக்கும். இடுக்கமான பரமண்டலத்து வாசலிலே மிகுதியான பொக்கிஷங்களோடே பிரவேசிக்க முடியாது.—சிலர் பெரிய அந்தஸ்து வேண்டுமென்று செபத்திலே கேட்கிறார்கள். அவர்கள் ஆசைப்படுகிறபடி அவர்களுக்குக் கிடைத்தாலும் அவர்களுக்கு அது கேடாகிறது. பெரிய அந்தஸ்து ஆத்துமத்துக்கு மோசமும் பெருந் துன்பத்துக்கு இடமுமாம். எத்தனை உயரமாய் ஏறுகிறார்களோ, அத்தனை தாழ்வாய் விழுகிறார்கள். பெரிய மனுஷருடைய விழுகுதல் சாதாரணமாய் நரக பாதாளத்திலே முடிகிறது.

பராபரனுடைய நன்மையும் கிருபையுமுள்ள ... என்னிடத்தில் செய்யப்பட வேண்டுமென்கிறதேயல்லாமல் பின் ஒன்றையும் என் பராபரனிடத்தில் கேளாதபடிக்குத் தீர்மானித்துக்கொண்டேன். பராபரன் தமக்குச் சித்தமானதை எனக்குக் கொடுக்கட்டும், அதுவே எனக்குப் போதும். அவர் தமக்குச் சித்தமான பாரத்தை என்மேல் சுமத்தட்டும். அவருடைய பெலத்தினால் அதைச் சுமப்பேன். பராபரன் தம்முடைய சித்தத்தை என்னிடத்திலே நிறைவேற்றுகிறபோது என்னுடைய சித்தத்தையுங் கூட அத்தோடே அவர் நிறைவேற்றுகிறார். ஏனென்றால் அவர் சித்தமும் என் சித்தமும் ஒன்றாயிருக்க வேண்டும். பராபரனுக்குப் பயந்தவர்கள் அவருக்குச் சித்தமானதையேயொழிய வேறொன்றையும் விரும்பார்கள். பராபரன் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்கிறார். பராபரனுடைய இருதயத்துக்கேற்ற மனுஷனாயிருந்தான் என்று தாவீது ராசா ஒருத்தனையேயல்லாமல் வேறே ஆரைக்குறித்தும் வேத புஸ்தகத்தில் எங்கும் வாசித்திருக்கிறதில்லை. அப். ௰௩, ௨௨. இது எதினால் என்றால், அவன் பராபரனுக்குச் சித்தமானதை எல்லாம் செய்ததினாலேதான். சமுத்திரத்திலே விழுந்த ஒரு துளி தண்ணீர் காணாமல்போகிறதுபோல, அவனுடைய சித்தம் பராபரனுடைய சித்தத்தோடு பொருந்தி ஒன்றாய்ப்போயிற்று. அவன் அப்சலோமுக்கு முன்பாக ஓடிப்போகிறபோது, தனது செங்கோல் முடியைக் குறித்து வேண்டிக்கொள்ளாமல், பராபரனுடைய அளவில்லாத பரிசுத்தமுள்ள சித்தம் செய்யப்பட வேண்டுமென்பதாக மாத்திரம் வேண்டிக்கொண்டு: கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், அவர் என்னைத் திரும்ப வரப்பண்ணுவார்; உன்மேல் நமக்குப் பிரியம் இல்லை என்றாரேயாகில், இதோ இங்கே இருக்கிறேன். அவர் தமது பார்வைக்கு நலமானபடி எனக்குச் செய்வாராக என்றான். ௨ சாமு. ௰௫, ௨௫. ௨௬. பராபரனோடே ஒரே இருதயமும் ஆத்துமமுமாய்ப் போக எனக்கு ஆசை. ஆகையால் நான் என் செபத்திலே எல்லாம்: கர்த்தரே, உமது சித்தம் செய்யப்படுவதாக; உமக்குச் சித்தமாயிராதது எதுவோ அது என் ஈடேற்றத்துக்கு ஆனதல்ல. கர்த்தரே, உமது சித்தம் செய்யப்படுவதாக என்கிறேன். இப்படியே பராபரனுடைய நேச குமாரனும் ஒலிவமலைத்தோட்டத்தில் செபம்பண்ணி, பிதாவே, என் சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படி ஆகக் கடவது என்று சொல்லக் கேட்கிறேன். ஆகையால் நானும்: பிதாவே, நீர் எனக்கு அனுப்புவது நோவானாலும், எனக்குச் சித்தமானதை அல்ல, உமக்குச் சித்தமானதைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறேன். இது வேண்டும், அது வேண்டும்; இது வேண்டாம், அது வேண்டாமென்று எனக்குத் தானே திட்டங் குறிக்கிறவனும் கற்பிக்கிறவனும் சொல்லுகிறவனுமாயிராமல் அப்படிச் செய்யுஞ் சங்கை என் பராபரனுக்குத் தகுமென்று எண்ணியிருக்கிறேன். நான் தாழ்மையும் சுய வெறுப்பும் உள்ளவனாகத் தேவசித்தத்துக்கு நல்ல மனதோடே கீழ்ப்படிகிறதை விட பின் ஒன்றையும் அவர் என்னிடத்திலே கேட்கிறதில்லை. இதை மாத்திரம் நான் செய்தால், அவருக்குப் போதும், மற்றதெல்லாம் பராபரன் தமக்குப் பிரியமும் எனக்குப் பிரயோசனமுமாகும்படி கற்பித்துத் திட்டப்படுத்துவார்.

௫௪. தியானம்.

## உத்தம ஒழுங்[கா]ன சிநேகத்தைப் பற்றியது.

சிநேகி, அளவுக்கு [மி]ஞ்சியுமல்ல, அளவுக்குக் குறைந்துமல்ல.

நம்து சிநேகஞ் செல்லும் இடம் விசேஷமாய் நாலு. பாவம் ஒன்று, நாம் [illegible], பிறன் ஒன்று, பராபரன் ஒன்று.

பாவத்தை நாம் கட்டோடே சிநேகிக்கப்படாது. அதைச் சிநேகிக்கிறவன் பராபரனையும் தன்னையும் பிறனையும் பகைக்கிறவனாயிருக்கிறான். பராபரனுக்குக் கோபம் மூட்டி, தன்னைத்தானே கொலைசெய்து, பிறனுக்கு இடறல் உண்டாக்குகிறான்.—நம்மையும் பிறனையும் சிநேகிக்கலாம். ஆனால் மித மிஞ்சியல்ல. நம்மைப்பார்க்கிலும் அதிகமாகப் பராபரனைச் சிநேகிக்க வேண்டியதேயல்லாமல், அவரைப் பார்க்கிலும் அதிகமாக நம்மைச் சிநேகிக்கக் கூடாது. நான் என்னைத் தானே சிநேகிக்கிற படியால் சுகமாயிருக்க ஆசிக்கிறேன். நான் வியாதிப்படக் கர்த்தருக்குச் சித்தமானால், அவருடைய சித்தத்தின்படி ஆகக்கடவது. பராபரனுடைய சித்தம் மேலாகவும் என் சித்தம் கீழாகவும் இருக்கட்டும்.—நான் பிறத்தியானைப் பராபரனுக்குள் சிநேகிக்க வேண்டுமேயல்லாமல் அவரை அன்றி சிநேகிக்கக் கூடாது. நான் பிறத்தியானைச் சிநேகிக்கிற படியால், அவனோடே பட்சமாய்ச் சஞ்சரிக்கிறேன். அவன் பாவஞ் செய்து பராபரனை விட்டு விலகினால், என் சிநேகம் கண்டிப்பாய் மாறி அவன் பிழைகளுக்காக அவனைக் கடிந்துகொள்ளுகிறேன்.—பராபரனை மாத்திரம் அளவுக்கு மிஞ்சிச் சிநேகித்துவிட்டேன் என்று சொல்லுகிறதுக்கு முடியாது. கைமாறு செய்யக் கூடாத அவருடைய உபகாரங்களுக்காகப் போதுமானபடி ஸ்தோத்திரஞ் செலுத்தவும் முடியாது. பராபரனுக்குப் பதிலைக் கொடுக்க ஆராலே ஆகும். அவர் உன்னைப் படைத்தாரே. அதற்கு ஈடாக நீயும் அவரைப் படைக்கக் கூடுமா. அவர் உன்னை மீட்டு இரட்சித்தாரே, நீயும் அவரை மீட்டு இரட்சிக்கக் கூடுமா. அவர் சிநேகத்தை மாத்திரம் உன்னிடத்திலே கேட்கிறாரேயல்லாமல் பின் ஒன்றும் அதிகமாய்க் கேட்கிறதில்லையே. அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்துத் தம்முடைய ஜீவனை உனக்காக விட்டவரை நீ போர்த்தபடி சிநேகிக்கக் கூடுவதெப்படி. ஆ, உன்னைப் பதிலுக்குச் சிநேகிக்கமாட்டாத உலகத்துக்கு உன் சிநேகத்தின் பெரும் பங்கைக் கொடுத்து விடுகிறாயோ. நீ உன் ஆயுசு நாளெல்லாம் பராபரனைச் சிநேகிக்கிறதிலே செலவழித்த நிமிஷம் எத்தனை சொற்பம். [illegible] இதுமுதல்



எல்லாவற்றையும் பார்க்கப் பராபரனையே சிநேகிக்கவும், என்னையும் சகல வஸ்துக்களையும் பராபரனுக்குள் சிநேகிக்கவும், என்னையும் சகல வஸ்துக்களையும் பராபரன் நிமித்தமாய் மனதாரப் பகைக்கவும், விட்டுவிடவும் தொடங்குகிறேன். கிறிஸ்தவனே, நீயும் அப்படி செய்[illegible]னக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

௫௫. தியானம்.

## பராபரனுக்குக் காண்பிக்க வேண்டிய கீழ்ப்படிதலைப் பற்றியது.

ஒன்றில் வளைய வேண்டும் அல்லது முறிய வேண்டும்.

காரியம் ஆகவேண்டுமென்ற பிடிவாதமுள்ள உலகமும் பிசாசும் இப்படிச் சொல்லுகிறது. பராபரனும் இப்படிச் சொல்லுகிறார். ஆனால் உலகமே, உன் சபதம் முடியாது. நான் உனக்குமுன் வளைய மாட்டேன், உன் மனதின்படி செய்யப் பரிச்சேதமாய் எனக்குத் தெரியாது. கடினத்துக்குக் கடினம். நீ பெருமை பாராட்டுகிறாயோ. நானும் அப்படித் தான். உன் வல்லமை உன் பெருமை. என் பராபரன் என் பெருமை. ஒரு கோட்டை[யி]ன் மேல் நம்பிக்கை வைக்கிறதுபோல், அவர் மேல் நம்பிக்கை வைக்கிறேன். நீயும் சகல பிசாசுகளும் எனக்கு எவ்வளவு. உன் பெலன் பெரிதோ. அவர் உன்னிலும் பெலத்தவர். அவர் முன்னமே அநேகம் ஆயிரம் போர்களோடே வந்த ஒரு இராசாவை முறியடித்தாரே. உன் தந்திரம் பெரிதோ. அவர் உன்னிலும் விவேகி. முன்னே அவர் [illegible] தந்திரமுள்ள அகித்தோபேலுடைய ஆலோசனையை அவத்தமாக்கினாரே. நீ உன் ஆயுத பெலத்தின் மேல் நம்பிக்கை வைக்கிறாயோ. வா, எந்தக் கை பலத்ததென்று பார்ப்போம். உன்னுடையதோ, என்னுடையதோ. நான் கர்த்தரிடத்திலும் அவருடைய பெலத்தின் வல்லமையிலும் பெலத்திருக்கிறேன். ஒரு சிறுதுண்டு மாமிசமும் மண்ணும் கட்டியுமாகிய நீ தமது எரிச்சலினால் உன்னை முறிக்க வல்லவருக்கு விரோதமாய்ச் செய்ய வேண்டுமென்றிருக்கிறதென்ன. நீ புகைகிற அடிக்கொள்ளி அல்லவோ (எசா. ௭, ௪). [illegible]முவாய், உன்னிடத்திலிருந்து புகை எழும்பும். அது கண்ணிலே படும்போது, சற்றே கரிக்கும். ஆனால் என்னைச் சுட்டெரிக்க[illegible] அழிக்கவும் உன்னால் ஆகாது. உறுக்கவும், கொக்கரிக்கவும், இ[illegible]தயத்தைத் துயரப்படுத்தவும், கண்ணீரைப்

புறப்படப்பண்ணவும் என்னால் ஆகும். ஆனால் சேதப்படுத்த உன்னால் ஆகாது.

பிசாசே, உனக்கு முன்பாகவும் நான் ஒருக்காலும் வளையேன். உன் தண்டாயுதத்தை எனக்கு விரோதமாக எடுக்கிறு ... எடு, என்னை ஆயிரம் பிளப்பாய்ப் பிளந்தாலும், என் ... தறி... என்னிடத்தில் வேலைகொள்ள உன்னால் முடியாது. ... மாத்திரம் பொல்லாப்பு செய்யாதிருந்தால், பொல்லாப்பை அநுபவிக்கிறதினால் எனக்குச் சேதம் வராது.

ஆனால் என் பராபரனே, நான் உமக்கு முன்பாக முறிக்கப்படுகிறதை விட என்னை வளைக்க மனதாயிருக்கிறேன். நினைத்தபடி உருவாக்கக் கூடிய ஒரு துண்டு மெழுகுபோல நான் உம்முடைய கையிலே இருக்க விரும்புகிறேன். மனதின்படி வளைக்கக்கூடிய ஒரு இளமூங்கிற்கொம்புபோல உமது கரத்தில் இருக்க விரும்புகிறேன். உமது அம்பு மகா கூர்மை. உமது ஆயுதம் மகா பெலத்தது. இதோ நான் இங்கே இருக்கிறேன், என் பராபரனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன். நீர் என் மனதின்படி உம்மை வளைக்கிறீர், நான் உம்முடைய மனதின்படியே என்னை வளைக்கிறேன். நீரும் நானும் ஒரே இருதயமும் ஆத்துமாவுமாக இருக்கக் கிருபை செய்யும்.

ருசு. தியானம்.

## உதாரத்துவத்தைப் பற்றியது.

வாங்குகிறதைப் பார்க்கக் கொடுக்கிறது பாக்கியம்.
அப். நடபடி. உ0, கரு.

அது உலகத்துக்குச் சம்மதமல்ல. உலகம் கொடுக்கிறதை விட வாங்குகிறதற்கு ஆசைப்படுகிறது. நிரம்பக் கொடுத்தால், பை வெறுமையாய்ப் போம் என்று சொல்லுகிறது. ஆனால் வாங்குகிறதைப் பார்க்கக் கொடுக்கிறது பாக்கியம் என்று நான் சொல்லுகிறேன். அதிகமுள்ளவன் அதிகங் கொடுக்கிறான். உன் கருத்திலே ஐசுவரியவான் தரித்திரனிலும் பாக்கியவான் என்று பட்டிருக்கிறதா. அப்படியானால் கொடுக்கிறது வாங்குகிறதைவிட பாக்கியமானது தானே. தரித்திரன் வாங்குகிறான், ஐசுவரியவான் கொடுக்கிறான்.

வாங்குகிறதைப்பார்க்கக் கொடுக்கிறது பாக்கியமானதென்று நான் இன்னொரு தரம் சொல்லுகிறேன். ஏனென்



றால் எவ்வளவு அதிகமாய்க் கொடுக்கிறாயோ, அவ்வளவு அதிகமாய் வாங்குகிறாய். இரண்டு குடியானவர்கள் தங்கள் விதைகளை விதைக்கிறார்கள். ஒருத்தன் அதிகம் விதைக்கிறான். மற்றவன் கொஞ்சம் விதைக்கிறான். அதிகம் விதைக்கிறவன் கொஞ்சம் விதைக்கிறவனைவிட யோக்கியனல்லவோ. அது நிச்சயந் தானே. ஏனென்றால் திரளாய்க் கொடுக்கிறவன் திரளாய் வாங்குகிறான். திரளாய் விதைக்கிறவன் திரளாய் அறுக்கிறான். மண்ணிலே போட்டது பழுது போகாமல் திரும்ப முளைத்து, கனிகொடுக்கிறது. கொடுப்பது ஒருத்தனையும் தரித்திரனாக்காமல், அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறது. ஓட்டம் எவ்வளவு தாராளமோ, அவ்வளவுக்குத் தண்ணீர் தாராளமாய் ஊறும். இறைத்த கிணறு ஊறும். நான் மற்றவர்களுக்கு உபகாரம் செய்கிறதினால் சேதப்படவில்லை, குறைந்துபோக வளருகிறது.

வாங்குகிறதைப் பார்க்கக் கொடுக்கிறது பாக்கியம் என்று நான் மூன்றாந் தரம் சொல்லுகிறேன். ஏனென்றால் பராபரனுக்கு எத்தனைக் கிட்டியிருக்கிறோமோ அத்தனைக்குப் பாக்கியந் தானே. பராபரன் வாங்குகிறதில்லை, கொடுத்துக் கொண்டுவருகிறார். எல்லா கிருபையினுடைய பராபரனென்கிற பேர் அவருக்கு உண்டாயிருக்கிறதே. தன்னைத்தானே பகிர்ந்துகொடுக்கிறது உத்தம குணத்துக்கு இயல்பாயிருக்கிறது. நிரம்பக் கொடுக்கிறவனாயிருந்தால், பூமியிலே நீ ஒரு தேவன்போலிருக்கிறாய். வல்லோர்களுக்குத் தேவர்கள் என்கிற பெயர் வந்திருக்கிறது என்னத்தினாலே, சொல். அவர்கள் உபகாரிகளாயிருக்கிற படியினாலே அல்லவோ. லூக். உஉ, உரு. பாக்கியத்தை என் மனம் விரும்புகிறதே. ஆகையால் வாங்குகிறதை விடக் கொடுக்கிறதே எனக்குச் சந்தோஷம்.

தினந்தினம் எனக்குப் போசனம் கொடுத்து அநேகவிதமான நன்மைகளை எனக்கு அளிக்கிற என் இயேசுவுக்கு அதிலே கொஞ்சம் திரும்பக் கொடுக்காமல் போவதென்ன. வாங்க வேண்டும் என்கிற ஆசை உனக்குள்ளே அதிகமாயிருந்தால், திரளாய்க் கொடு. எவ்வளவு நீ கொடுக்கிறாயோ அவ்வளவு உனக்கு உண்டாயிருக்கும். நீ இறைக்கையில் ஊறுகிறது. நீ மற்றவர்களை ஆசீர்வதிக்கையில் உன்னைத் தானே ஆசீர்வதித்துக்கொள்ளுகிறாய். ஒரு ஆத்துமத்தையாவது ஆறுதல்படுத்தாமல் உன் வாசலை விட்டுப்போக விடாதே. அப்பொழுது பராபரன் உன்னையும் ஒருக்காலும் ஆறுதலற்றவனாகத் தள்ளிவிட்டுப் போகவிடார். அவர் உன்னைப் பார்த்

னுக்கொண்டு நீ முன்னாலே செய்கிறபடி அவர் பின்னாலே செய்கிறார்.

௫௭. தியானம்.

## பராபரனுடைய ஆளுகையைப் பற்றியது.

*காரியம் எப்படிப்போனாலும் போகட்டும். கடைசியிலே பராபரனுடைய சித்தத்தின்படியே முடியும்.*

பிசாசினுடைய மனதின் படியேயும் ஆகாத மனிதருடைய மனதின் படியேயும் எல்லாம் நடக்கிறதானால், உலகத்திலே ஆர் பிழைத்திருக்கலாம். ஆனால் பராபரன் இன்னம் பிசாசுக்கும் மனிதருக்கும் மேலாயிருக்கிறார். பிசாசின் மனதின்படி போகாதென்கிறது நிச்சயம், மற்றப்படி மனுஷரெல்லாரும் நரகபாதாளத்தில் கிடக்க வேண்டுமே. உலகம் அப்படிப்பண்ணுவேன், இப்படிப்பண்ணுவேன் என்று என்னை உறுக்கினாலும், அதினால் நான் சாகிறதில்லை. உலகமே, நான் உன் முகத்துக்கு முன்னே நிற்கிறேன். நீ கிட்டவந்து ஒரு சின்னமயிரை மாத்திரம் கோணலாக்கமாட்டுவாயா. உனக்கு நெஞ்சுத் துணிவு இருக்கிறதா, பார்ப்போம். பரமண்டலங்களில் வாசமாயிருக்கிறவர் உன்னை நகைப்பார். மேலது கீழதாயும், கீழது மேலதாயும் போனாலும், கடைசியில் பராபரன் மனதின்படி நடக்கிறது நடக்கும். ஆகையினாலே என் இருதயமே, இவ்வளவு தீமை வருகிறதென்று ஏன் நீ முறைப்படுகிறாய். பராபரன் மனதின் படியே நடந்தால், அது தீமையாய்ப் போவதெப்படி. அவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார். அவருடைய சித்தம் நல்ல சித்தம். ரோ. ௰௨, ௨. மெய்தான் பராபரன் மாமிசத்துக்கு வெகு ஆனந்தமும் இன்பமும் உத்தமமுமாயிருக்கிறதை அழித்து, ஒன்றும் இல்லாமல் பண்ணுகிறபடியால், பராபரனுடைய சித்தம் தீமையும் கசப்பும் அருவருப்புமான சித்தம்போலே உனக்குத் தோன்றுகிறது. ஆ அது அப்படிப்பட்டதல்லவே, அவர் சித்தம் நல்ல நோக்கம் உடையதென்று அநுபோகத்தினால் அறிந்துகொள்வாய். அப்படியே முடிவிலே காண்பாய். அது வேதனை வருவித்தாலும் அதுவும் நன்மையாகத் தான் செய்கிறார்.

சுகமா, காரியம் எப்படி நடக்கிறது என்று நீ கேட்கிற வாடிக்கை உண்டே. அதற்கு: பராபரனுக்குச் சித்தமான படி நடக்கிறதென்று உத்தரம் சொல்லுகிறேன். நடக்கவேண்டிய பிரகாரம் நடக்காதிருந்தாலும், அப்போதும் எனக்கு



எந்நாளும் நன்மையாய்த் தான் நடக்கும். ஏனென்றால் பராபரனைச் சிநேகிக்கிறவர்களுக்கு எல்லாக்காரியங்களும் நன்மைக்கு உதவி செய்கிறது. நான் என் பராபரன் மேல் திருப்தியாயிருக்கிறேன். ஆ அவரும் என் பேரில் மனதிருப்தியாயிருக்கக் கூடுமானால் எவ்வளவு பாக்கியம்.

௫௮. தியானம்.

## பராபரனுக்கு உண்டாயிருக்கிற ஆசையைப் பற்றியது.

*பராபரனைப் பார்க்க ஐசுவரியவான் நானே.*

இப்படி நான் மனுஷனாட்வாய்ப் பேசுகிறேன். எனக்குத் தாழ்ச்சி ஒன்றும் இல்லை, எனக்கு எல்லாம் உண்டு. ஏனெனில் எல்லாம் பராபரனுடையது. பராபரனே என்னுடையவர்.—எல்லாம் பராபரனுடையதென்று சொல்லுகிறேன். ஆகிலும் அவருக்குக் குறைகிறது ஒன்று உண்டு. அது என்னவென்றால், உன் இருதயம் தான். என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா என்று அவர் கூப்பிடுகிறார். வாக்கி. ௨௩, ௨௬. இந்த விரிவான பூமண்டலத்தில் இது ஒன்று தவிர பராபரனுக்கு அவசியமானது அல்லது அவர் மனம் இச்சிக்கிறது வேறொன்றும் இல்லை. இவ்வொன்றை அவர் மெத்த வாஞ்சையாய் ஆசித்து, அது தமக்கு வந்து சேர ஓயாமல் சகல பிரயாசமும் படுகிறார். இந்த ஒரே காரியம் மனுஷனுடைய இருதயந்தான். அதுவும் நிறைந்த இருதயத்தை அல்ல, வெறுமையான இருதயத்தையே அவர் விரும்புகிறார். மெய்தான், வானத்திலேயும் பூமியிலேயும் அவருக்குச் சகல அதிகாரமும் உண்டு. அவருடைய சித்தத்தை ஒரு சிருஷ்டியும் தடுக்கக் கூடாது. ஆகிலும் அவர் தமது சிநேகத்தை இருதயத்திலே ஊற்றுகிறதற்கு இடம் இல்லாதேபோனால், அவருக்கு வெகு அங்கலாய்ப்பாயிருக்கிறது. அவர் உச்சிதப்பொருளாயிருக்கிற படியால், பூரணமாய்த் தம்மைப் பங்கிட்டுக்கொடுக்க அவருக்கு ஆசை. விசேஷமாகத் தம்முடைய சாயலின் படியே சிருஷ்டிக்கப்பட்ட மேன்மையான சிருஷ்டிப்பாகிய மனுஷருக்கு இப்படிச் செய்ய அவருக்கு ஆசை. அவருடைய மார்பு சிநேகத்தை எப்போதும் சுமந்துகொண்டிருக்கிறது. அதைக் கொடுக்க ஆசைப்படுகிற ஆத்துமம் ஒன்றாகிலும் இல்லையோ என்று காத்துக்கொண்டிருக்கிறார். அவர் தமது பூரண இரட்சிப்பு நிறைந்த

பாத்திரத்தை கையில் பிடித்து, நமக்குப் பின்னாலே ஓடிவருகிறார். அவர் தமது கிருபையை நமக்குப் பின்னாலே கொண்டு வந்து அதை வாங்கிக்கொள்ள நம்மை வருந்தி அழைக்கிறார். நாம் அவரை முந்தி ஓடுகிறதை அவர் கண்டால், அவர் நம்மைப் பின்தொடர்ந்து வருவார். நாம் அந்த கிருபையைக் கட்டோடே ஏற்றுக்கொள்ள மாட்டோமென்றால்: எருசலேமே, எருசலேமே, கோழி தன் குஞ்சுகளைத் தன் செட்டைகளின் கீழ்க் கூட்டிச் சேர்க்கும் வண்ணமாக நான் எத்தனை தரம் உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்க்க வேண்டுமென்றிருந்தேன், ஆனால் மாட்டோம் என்றீர்கள் என்று அங்கலாய்த்து முறையிடுகிறார். மத். ௨௩, ௩௭. அந்தக் கிருபையை நாம் ஏற்றுக்கொண்டால், அவர் சந்தோஷப்பட்டு பரிபூரணமாய் அதை ஊற்றுகிறார். ஆ, நமக்கு மனது மாத்திரம் இருந்தால், பரமண்டலமும் சகலமும் நம்முடையதாகுமே. வாங்கவேண்டுமென்கிற நமது ஆசையைப் பார்க்கிலும் கொடுக்க வேண்டுமென்கிற அவருடைய ஆசை அதிகம். ஆத்துமமே, எல்லாம் உடையவரும் எல்லாவற்றையும் உனக்குக் கொடுக்கிறவருமாகிய அவர் உன் இருதயத்துக்காக இத்தனை கெஞ்சுகிறதும் நீ அதைக் கொடுக்க மாட்டேன் என்கிறதும் மகா துக்கமான காரியம் அல்லவோ. என் பராபரனே, தேவரீர் வீணுக்குக் கேட்க நான் பார்த்திரேன். இருதயம் உம்முடையது, என்னுடையதல்ல. பிரயோசனம் எனக்கே அன்றி உமக்கு அல்ல. இந்த என் இருதயத்தை நீர் ஏற்றுக்கொண்டு உமது அளவில்லாத பரிசுத்தமுள்ள சித்தத்தின்படியே நடத்தும். வெறுமையாய் நான் அதை உமக்குக் கொடுக்கிறேன். நீர் வெளிச்சத்தினாலும் சந்தோஷத்தினாலும் பரலோக பாக்கியத்தினாலும் அதை நிரப்பி எனக்குத் திரும்பக் கொடுக்கிறீரே. ஆ பராபரனே, தேவரீர் என் இருதயத்தைப் புறக்கணியாதேயும்.

௫௧. தியானம்.

## பரலோக ஆசையைப் பற்றியது.

இலேசு, ஆகிலும் பாரம்.

இப்படி என் ஆத்துமா இருக்கிறது. இலேசானது மேலே எழும்புகிறது. பாரமானது கீழே அமிழ்ந்துகிறது. நமது ஆத்துமம் இலேசான இறகுக்குச் சமானமாயிருக்கிறது. அந்த இறகு தனியே இருந்தால், ஒரு சிறு காற்றாவது பயி



கிற சுவாசமாவது அதை உயரக் கிளப்பும். ஆனால் ஒரு கல்லையாவது ஒரு துண்டு ஈயத்தையாவது ஒரு கட்டையையாவது அதிலே கட்டி பறக்கவிட்டால், அது பூமியிலே விழும். நான் என் ஆத்துமத்தைப் பெருந்தீனியாலும் வெறியினாலும் பிழைப்பின் கவலைகளினாலும் பாரப்படுத்தாதிருந்தால், அது ஞான தியானமாகிய செட்டைகொண்டு மகா இலேசும் இலகுவுமாய் உயரப் பறந்து பரமண்டலத்துக்கடுத்த காரியங்களை நோக்கிப் பார்க்கப் பரவசமாகிறது. நான் என் ஆத்துமத்தை உலக சிநேகத்தினால் பாரப்படுத்தினேனேயாகில், அது பரவசமாகிறது பரிச்சேதங் கூடாத காரியமாயிருக்கிறது. தண்ணீர் நிறைந்த குடம் அமிழ்ந்துகிறதும், வெறுங்குடம் மிதக்கிறதும் அதிசயமா. உலக சிநேகம் இருதயத்தைப் பராபரன் வசமாய் ஏற ஒட்டாமல் கீழே இருத்திக்கொண்டே இருக்கிறது. உலக நினைவு பரலோக நினைவுக்கு மனதிலே இடங் கொடாது. ஒரு பலகையிலே இரண்டு குறி வைத்து இரண்டிலும் பட ஒருமிக்கச் சுடுவதெப்படி. ஒரு கண்ணாடியிலே பரமண்டலத்தையும் பூமியையும் ஒருமிக்கப் பார்ப்பதெப்படி.

இரண்டில் ஒன்றை மாத்திரம் தெரிந்துகொள்ளக் கூடும். நான் பரலோகத்தைத் தெரிந்துகொள்ளுகிறேன். பரம காரியங்களில் நான் எவ்வளவுக்குச் சந்தோஷப்பட்டுக் கொண்டே இருக்கிறேனோ, அவ்வளவுக்கு அதிகமாய்ப் பரலோகம் எனக்கு மதுரமாகும். பரலோகம் எவ்வளவுக்கு மதுரமாகிறதோ, அவ்வளவுக்குப் பூலோகம் கசப்பாகும். எத்தனை அதிகமாய்ப் பரத்துக்கடுத்ததைச் சிந்திக்கிறேனோ, அத்தனைக்கு அதிகமாய்ப் பரலோகத்தானாகிறேன். பரிமளகலத்தில் புழங்குகிறவன் மேல் பரிமளவாசனை வீசும் அல்லவா. வெகு நேரம் வெயிலிலே நின்றால், முகங் கறுத்துப் போம் அல்லவா. நான் என் சிந்தையினால் பரமண்டலத்துக்கு ஏறும் போதெல்லாம் எனக்கு முன்னே ஒரு ஆசீர்வாதத்தைக் கண்டுபிடிக்கிறேன். பரமண்டலத்தை விட்டுப் புறப்படும் போதெல்லாம், நான் விடும் பெருமூச்சாவது: உலகத்தை நான் மறந்துபோகிறதற்கு மிகுந்த கசப்பைப் பராபரன் உலகத்திலே எனக்கு உண்டுபண்ணக் கடவார். உலகத்திற்குண்டானது அழிந்துபோம், பரலோகத்துக்குண்டானது நிலைநிற்கும். நித்திய பொருள் மனதுக்கு உத்தம உறுதி தரும். அதையே நான் நாடிக்கொண்டிருக்கிறேன்.

௯௰. தியானம்.

## ஜென்ம பாவத்தைப் பற்றியது.

பிறக்கும் முன் ஆக்கினைத் தீர்ப்பு.

ஆ மனுஷனே, இப்படி உனக்கும் எனக்கும் ஆயிற்று. ஆதாமுக்குள் நாம் பாவஞ் செய்தோம். ஆதாமுக்குள் ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளானோம். ஏனென்றால் ஆதாம் தனக்காக மாத்திரமல்ல, தன் பின்னடியாருக்காகவும் வரங்களைப் பெற்றிருந்து, தன் மட்டிலே மாத்திரம் பாவஞ் செய்யாமல் சகல மனுஷசாதிக்கும் ஆதித்தகப்பனாயிருந்து பாவஞ் செய்தான். ஆகையால் வித்துவழியாய் அவன் சுபாவம் நாமெல்லாருக்கும் சொந்தமாகிறதுபோல், அவன் சுபாவத்தோடே கூட பாவமும் அதின் குற்றமும் ஆக்கினையும் நமக்குச் சொந்தமாயிற்று. ஆ, நான் என்ன சொல்லப்போகிறேன். என் தாயின் கர்ப்பத்திலே இருந்து தானே ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவான துர்க்குணம் என்னோடே ஒட்டிக்கொண்டிருக்கிறது. ஏனென்றால் ஒரு ஓநாய்க்குட்டி ஆட்டைப்பிடித்துப் பீறிப் போடாதிருந்தாலும், அதின் ஜென்மத்தோடே ஓநாய்க்குணம் பிறந்திருக்கிறதுபோல், ஒவ்வொரு பிள்ளைக்கும் அது கர்ப்பந் தரித்தவுடனே அந்தப்பாவ குணம் ஒட்டிக்கொண்டிருக்கிறது. அதைப்பற்றி நாம் எல்லாரும் தாவீதோடே கூட பிரலாபித்துக்கொண்டு: இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்திலே கர்ப்பந் தரித்தாள் என்று சொல்லவேண்டும். சங்கீ. ௫௧, ௭. ஆகாத வேரிலிருந்து ஆகாத கனி உண்டாகிறது. அழுக்கான ஊற்றிலிருந்து அழுக்கான தண்ணீர் புறப்படுகிறது. குஷ்டரோகமுள்ள பெற்றோருக்குக் குஷ்டரோக பிள்ளைகள் பிறக்கிறது. ஆகையால் நான் என்னை நீதிமானாக்கவும் மாட்டேன். மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாக்கவும் மாட்டேன். மகா பரிசுத்தவானாக எண்ணப்பட்டவனும் தன் தாயின் கர்ப்பத்தில் தானே, சரியாய்ச் சொன்னால் ஆதாம் முதற்கொண்டே, ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாயிருக்கிறான். மனுஷன் நீதிமானும் பாக்கியவானுமாகிறதோ, கிறிஸ்துவின் கிருபையால் தானே. ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமானதுகள் எல்லாம் மனுஷனை ஆக்கினைக்குள்ளாக்காதிருக்கச் செய்கிறார். கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறவர்கள் மீதில் ஆக்கினைச் சுமத்தல் ஒன்றும் இல்லை. ரோ. ௮, ௧.



௯௧. தியானம்.

## துன் மனச்சாட்சியைப் பற்றியது.

மடியிலே நெருப்பு. வாக்கி. ௬, ௨௭.

மனச்சாட்சியே, மனச்சாட்சியே, நீ என்ன. சகல பாவங்களையும் காண்பிக்கும் கண்ணாடியாயிருக்கிறாய். ஓயாமல் முறையிடுகிற வழக்காளியாய் இருக்கிறாய். எதிர் பேசக்கூடாத சாட்சியாய் இருக்கிறாய். ஒருவரும் தப்பித்துக்கொள்ளக் கூடாத நியாயாதிபதியாய் இருக்கிறாய். இரவும் பகலும் ஓயாமல் வாதிக்கிறவனாய் இருக்கிறாய். கலைக்கவும் மறைக்கவும் படாத சூட்டுத்தழும்பாய் இருக்கிறாய். ஆறாப்புண்ணாயிருக்கிறாய். சாகாமல் பிடுங்கிக்கொண்டே இருக்கும் பூச்சியாய் இருக்கிறாய். அவியாமல் எரிந்துகொண்டிருக்கும் அக்கினியாய் இருக்கிறாய்.

ஒரு பொல்லாதவனுடைய மனச்சாட்சி விழித்துக்கொண்ட உடனே அவன் முறையிடத்தொடங்கிச் சொல்வதாவது: அது என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போலே என் இருதயத்தில் இருந்தது. அதைச் சகித்து இளைத்தேன், எனக்குக் கூடாதே போயிற்று என்கிறான். எரேமி. ௨௰, ௯. ஆ, துன்மனச்சாட்சிக்கு உன்னைக் காத்துக்கொள். தினந்தினம் இந்தக் கண்ணாடிக்கு முன்னே வந்து நின்று உன் கறைகளை உற்றுப்பார். கண்ணீரால் அதைக் கழுவு. உன்னை எல்லாப் பாவமும் நீங்கச் சுத்திகரிக்கும் இயேசு-கிறிஸ்துவினுடைய இரத்தத்தோடே உன் கண்ணீரைக் கலந்துபோடு. ௧ யோவா. ௧, ௭. உன் மனச்சாட்சி உன்னைக் குற்றப்படுத்தும் முன், நீ உன் குற்றத்தை அறிக்கையிட்டு தாவீதோடே கூட: நான் என் மீறுதல்களை அறிந்திருக்கிறேன், என் பாவம் எப்போதும் எனக்கு முன்பாக நிற்கிறது. நான் தேவரீர் ஒருவருக்கு விரோதமாகப் பாவத்தை நடப்பித்து, உமக்கு முன்பாகப் பொல்லாப்பானதைச் செய்தேன் என்று சொல்லு. சங்கீ. ௫௧, ௫. ௯. ஒருத்தனும் சாட்சியாயிருக்கக் கூடாத ஒளிப்பிடத்திலே நீ ஒன்றையும் செய்யாதே. ஏனெனில் சகல கிரியையையும் அந்தரங்கமானவை எல்லாவற்றையும் கூட, அது நன்மையானாலும் தீமையானாலும் பராபரன் நியாயத்திலே கொண்டுவருவார். பிரசங்கி. ௰௨, ௰௪. உன் மனச்சாட்சி உன்னை மரணத்துக்குப் பாத்திரனாய்த் தீர்க்குமுன், நீ தானே உன்னை மரணத்துக்குப் பாத்திரனாய்த் தீர்த்துக்கொள். நாம் நம்மையே நிதானித்து விசாரித்தால், கர்த்தரால் நியாயந் தீர்க்கப்படோம்.

௧ கொரி. ௰௧, ௩௧. ஆகையால் உத்தம மனஸ்தாபமே உன் ஆக்கினையும் வேதனையுமாயிருக்கக் கடவது. நீ உன் சந்தோஷத்தால் இழந்துபோன கிருபையுள்ள பராபரனை மனஸ்தாபத்தின் வேதனையுடனே திரும்பத் தேடு. நமக்கு எதிராக இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவில் இராதபடிக்கு எடுத்து, அதைச் சிலுவையில் ஆணி அடித்துப் போட்ட கிறிஸ்துவின் இருதயத்தில் உன் துன் மனச்சாட்சியின் காயத்தைப் பதித்துப்போடு. கொலொ. ௨, ௰௪. இயேசுவின் புண்ணால் உன் புண் ஆறுகிறது. ஏனென்றால் அவருடைய தழும்புகளால் குணமானோம். ௧ பேது. ௨, ௨௪. மனச்சாட்சியிலுள்ள பூச்சியின் கடிக்குச் சிலுவையிலே தொங்கின இரத்தாம்பர பூச்சியே ஔஷதம். சங்கீ. ௨௨, ௭. ஆ எச்சரிக்கையாய் நட. கேடான மனச்சாட்சியைக் கொண்டிராதவனும், தன் நம்பிக்கையை இழந்துபோகாதவனும் பாக்கியவான். சிராக். ௪, ௨.

௬௨. தியானம்.

## ஏழைப் பாவிகளின்மேல் இயேசு வைக்கும் பட்சத்தைப் பற்றியது.

### உடலும் நிழலும் பிரியாது.

பிரியாமல் ஐக்கியமாய்ச் சேர்ந்திருக்கிற காரியம் ஒன்றும் இல்லை. புருஷன் பெண்சாதி ஒரே மாமிசமாய் இருக்கிறார்கள். ஆகிலும் விவாகப்பிரிவினை அவர்களைப் பிரிக்கிறது. சரீரமும் ஆத்துமமும் கூடி ஒரு மனிதனாகிறது. ஆகிலும் இந்த இரண்டையும் மரணம் பிரிக்கிறது. சிநேகம் ஒன்றாய் இணைத்துக் கட்டின கட்டை அடிக்கடி ஒரு அற்ப சமுசயமே அவிழ்த்துப் போடுகிறது. மோசே என்பவர் கையிலே இருந்த கோல் பாம்பாய்ப் போனபோது, அவர் அதற்குத் தூரமாய் ஓடினார். என் சிநேகிதன் எனக்கு ஒரு கோலாய் இருக்கும் மட்டும் நான் அவனைப் பிடித்துக் கொள்ளுகிறேன். பாம்புத் தோலை அவன் தரித்துக் கொண்டால், நான் ஓடத் தொடங்குவேன்.

ஆனால் பிரியமாட்டாத காரியம் இரண்டுண்டு. அவையாவன: இயேசுவும் அவரை விசுவாசிக்கிற ஏழைப்பாவியும் தான். ஒரு நல்ல வயித்தியன் தன் வயித்தியம் [illegible]னம் பலிக்கும் என்கிற நினைவு அவனுக்குள்ளே இருக்கிற மட்டும் வியாதிக்காரனை வி[illegible] ...ன்

பாவஞ்செய்தால், கிறிஸ்துவை விட்டு விலகிப் போகிறேன். நான் கோபத்தைத் தரித்தால், அவருடைய மெத்தனத்தை விட்டும், பெருமையைத் தரித்தால், அவருடைய தாழ்மையைவிட்டும் பிரிகிறேன். ஆனால் அவர் எப்போதும் என் பிறகே ஓடி வருகிறார். எதினாலே என்கிறாயோ. பாவியானவன் கிறிஸ்துவின் நிழலாயிருக்கிறதினாலே தான். நீ உன் சரீரத்தை விட்டு உன் நிழலைப் பிரிக்கக் கூடுமா. நிழல் சரீரத்துக்கு முன்னாலே ஓட்டம் பிடிக்கிறது. சரீரமோ அந்த நிழலைப் பின்தொடர்ந்து ஓடுகிறது. நான் இயேசுவை என் இரட்சகராக அறியாமையால் அவருக்குமுன்னே ஓடுகிறேன். இயேசுவோ என் இக்கட்டை நன்றாய் அறிந்திருக்கிறதினால், என்னைப் பின்தொடர்ந்து வருகிறார். நான் நரகத்தைத் தேடிக்கொண்டுபோகையில், மோட்சம் என்னைத்தேடிப் பின் வருகிறது. நான் நகைக்கிறேன், இயேசு அழுகிறார். அப்படி வேண்டாம். நான் அழ வேண்டும், என் இயேசு நகைக்க வேண்டும், அப்போது என் அழுகையும் நகைப்பாய் மாறும். இயேசு அழ நான் நகைத்தால், என் நகைப்பு நிச்சயமாகவே அழுகையாகும். என் இயேசு விரும்புவதைத் தெரிந்து கொள்ளுவேன். நான் அழுதால், அவர் நகைக்கிறார். ஆகையால் நான் நகைக்கிறதிலும் அழுகிறது உத்தமம். என் இயேசு அழுதால், அவருடைய கண்ணீரை நான் மனஸ்தாபத்தின் சீலையாலே துடைப்பேன். நான் பாவஞ்செய்கிறதைவிட்டு ஓய்ந்தால், அவர் அழுகிறதைவிட்டு ஓய்வார். நான் என் பாவத்துக்காக அழுதால், அவர் தமது ஆறுதலான சீலையாலே என் கண்ணீரைத் துடைக்கிறார். ஆ என் கண்கள் கண்ணீர் ஊற்றானால் தாவிலை. ஆ கர்த்தாவாகிய இயேசுவின் சி[illegible]முற்[illegible]ம் நனைய எனக்கு எத்தனை ஆசை உண்டு. என் கண்ண[illegible] எல்லாம் வெறுந் தண்ணீர். இயேசு தமது இரத்தத்தினால் அதை வேறே நிறமாக்குகிறார். இயேசுவின் இரத்தத்தினால் சிவப்பாய்மாறின ஒரு துளி கண்ணீர் சர்வ லோகத்தையும்விட விலை உயர்ந்தது.

நான் என் பாவத்துக்காக அழ விரும்புகிறேன் ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் தமது பெருமூச்சுகளை என் கண்ணீர்த்துளிகளோடே கலக்கிறார். கண்ணிலிருந்து எத்தனை கண்ணீர்த்துளிகள் புறப்படுகிறதோ, அத்தனை பெருமூச்சு இருதயத்திலே இருந்து புறப்படுகிறது. அந்த வேளையிலே தான்: ஆ பராபரனே, ஆ இயேசுவே, இரங்கும், கிருபை புரியும், அப்பா, பிதாவே என்கிற சொற்கள் புறப்படுகிறது. ஆ[illegible]னால் பராபரனுடைய மனது உருகாதா. நான் என் பாவத்துக்காக அழுகிற போது, இயேசு எனக்குக் கிட்டிவரு

கிறதுபோல், மற்றவேளையில் எனக்கு அத்தனை கிட்டி வருகிறதில்லை. உன் இருதயம் இளைப்பான வேளையில் முந்திரிகைப் பழ இரசம் அதை மகிழ்ச்சியாக்குகிறதுபோல், இயேசுவின் இருதயந் துக்கப்படுகிறபோது என் கண்ணீர் அதை ஆற்றுகிறது. பராபரனால் சிநேகிக்கப்பட்ட ஆத்துமாவே, நீ இயேசுவை இழந்தால், துக்கப்படுகிற இருதயத்திலே அல்லாமல், பின்னை ஒரு இடத்திலேயும் அவரைத் தேடாதே. அங்கே நீ அவரை நிச்சயமாய்க் கண்டு பிடிப்பாய்.

௬௫. தியானம்.

## ஆவிக்கும் மாமிசத்துக்குமுள்ள போராட்டத்தைப் பற்றியது.

*பிசாசும் சம்மனசும் எனக்குள்ளும் புறம்பும் இருக்கிறது.*

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அவனைச் சுற்றிக்கொண்டு வாதிக்கிற பிசாசும், அவனைக் காவல் காக்கிற அவனுடைய சம்மனசும் உண்டு. அவன் இடறிவிழத் தக்கதாகப் பிசாசு வழியிலே அவனுக்குக் கல்லுகளைப் போட்டு வைக்கிறது; சம்மனசோ அதற்கு அவனைத் தப்புவித்து அவனைக் கையிலே ஏந்திக்கொள்ளுகிறது. பிசாசு அவன் இருதயத்திலிருந்து அநேக பெருமூச்சுகளையும், அவன் கண்ணிலிருந்து அநேகந் துளி கண்ணீரையும் புறப்படப் பண்ணுகிறது. சம்மனசோ அதுகளை எல்லாம் பொன் கலசத்தில் பிடித்து, பராபரன் சமுகத்திலே கொண்டுபோகிறது. மிகாவேல் என்கிற தூதன் மோசேயுடைய சரீரத்தைக் குறித்து பிசாசோடு போராடினதுபோல், பிசாசும் சம்மனசுகளும் என்னைக் குறித்து போர் செய்கிறது. யுத்தமின்றி வெற்றியில்லை. வெற்றி பராபரன் பக்கம் இருக்கும் என்று நான் நிச்சயிக்கிறேன். பிசாசு என்னை எத்தனைக்குப் பயமுறுத்துகிறதோ, அத்தனைக்கும் சம்மனசு என்னைச் சந்தோஷிப்பிக்கிறது. இதற்காகப் பராபரனுக்கு ஸ்தோத்திரம்.

மேலும் ஒரு கிறிஸ்தவனுக்குள்ளேயும் அவனுடைய பிசாசும் அவனுடைய சம்மனசும் இருக்கிறது. மாமிசம் அவனுடைய பிசாசு. ஆவி அவனுடைய சம்மனசு. பிசாசு பொய்யன். மாமிசமும் அப்படியே. செம்படவன் மோசம் போக்கும் தூண்டில்போட்டு மீன் பிடிக்கிறதுபோல் மாமிசமும் மனுஷர்களை மோசம்போக்கும் இச்சைகளினாலே வஞ்



சிக்கிறது, எபேசி. ௪, ௨௧. அது சில வேளை அந்தந்த பொழிவை நமக்குக் காட்டி: நீ இந்தப் பாவஞ் செய்தால், இது உனக்கு வரும் என்று சொல்லுகிறது. ஆனால் பாவத்தினால் வருகிற ஆதாயத்தைப் பார்க்கிலும் அதனால் வருகிற நஷ்டம் பெரிது. ஏனெனில் மனுஷன் லோகத்தை எல்லாம் ஆதாயப்படுத்திக்கொண்டு தன் ஆத்துமத்தைச் சேதப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன. மத். ௰௬, ௨௬. கிறிஸ்தவனே, உனக்கு ஆதாயம் வேண்டுமானால் பிசாசுக்கு அல்ல, பராபரனுக்கு ஊழியஞ் செய். தெய்வபத்தி எல்லாத்துக்கும் பிரயோசனமாயிருந்து, இச்சீவனுக்கும் வருஞ் சீவனுக்கும் வாக்குத்தத்தம் பெற்றிருக்கிறது. ௧ தீமோ. ௪, ௮.—சில வேளை மாமிசம் பாவத்திலே இருக்கிற இன்பத்தையும் சந்தோஷத்தையும் நமக்குக் காட்டுகிறது. இதனால் நாம் எத்தனை பரதாபமாய் மோசம்போகிறோம்! பொல்லாப்பு அவன் வாயிலே தித்திக்கையால், அவன் அதைத் தன் நாவின் கீழ் அடக்கி, அதை விடாமல் பதனம் பண்ணி, தன் வாய்க்குள்ளே வைத்துக்கொண்டு இருந்தாலும், அவன் போசனம் அவன் குடல்களில் மாறுபட்டு, அவனுக்குள் விரியன் பாம்புகளின் பிச்சாய்ப் போகும் என்று சோப்பார் சொல்லுகிறான். யோபு ௨௰, ௰௨–௰௪. பாவமானது வாயிலே வைத்து மெல்லும் மட்டும் மெத்தவும் ருசிகரமாயிருந்து, விழுங்கி வயிற்றிலே விழுந்த பிறகு வயிற்றுவலியும் உளைச்சலும் உண்டுபண்ணி, வேதனைப் படுத்துகிற ஒரு தின்பண்டம்போல் இருக்கிறது. உனக்குச் சந்தோஷம் வேண்டுமென்றால், நீ அதைக் கர்த்தரிடத்திலே தேடாமல் போகிறதென்ன? பராபரனுடைய இராச்சியம் நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினால் அடைகிற சந்தோஷமுந் தானே. ரோ. ௰௪, ௰௭.—சிலவேளை மாமிசம் பாவத்தினாலே மிகுந்த கீர்த்தியும் சங்கையும் வரும் என்று வாக்குக் கொடுக்கிறது. ஐயோ, அது முழுப் பொய். பாவத்தினால் வரும் கீர்த்தி ஆகாததே. சங்கை பாவத்தின் நிழலாயிராமல், புண்ணியத்தின் நிழலாயிருக்கிறது. பாவத்தால் வரும் சங்கை வெட்கமும் மனமடிவுந் தானே. நீங்கள் பாவத்துக்கு ஊழியக்காரராயிருந்தபோது, என்ன பலனை அடைந்தீர்கள். இப்போது நீங்கள் அதற்காக வெட்கப்படுகிறதே அன்றி வேறல்ல. ரோ. ௬, ௨௧. உனக்குச் சங்கை வேண்டுமென்றால், கிறிஸ்துவுக்கு ஊழியம் செய். ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால், அவனைப் பிதா கனம்பண்ணுவார் என்று அவர் சொல்லுகிறார். யோவா. ௰௨, ௨௬.—சில வேளை மாமிசம் பாவஞ்செய்கிறவனுக்கு அநேகம் பெரிய மனிதருடைய தயவும் சிநேகமும் கிடைக்கும் என்கிறது.

ஐயோ, மகா திருவாதிரம். சிநேகமில்லாத சிநேகிதமும், பராபரன் இல்லாத சிநேகமும் உண்டா. பராபரனும் பாவத்தின் ஆளுகையும் சேர்ந்திருக்கக் கூடுமா. நல்ல சிநேகிதரைச் சம்பாதிக்கிறதற்குச் சற்குணமே நல்ல உபாயம். ஒரு மனுஷனுடைய வழிகள்மேல் கர்த்தா பிரியமாயிருந்தால், அவர் அவன் சத்துருக்களையும் அவனோடே சமாதானம் ஆக்குவார். வாக். ௰௬, ௭.

மாமிசத்தின் வஞ்சனைகளை எல்லாம் ஆராலே எண்ணி முடியும். பிசாசு கொலைபாதகன். மாமிசமும் அப்படியே. ஏனென்றால் நாம் மாமிசத்தின்படியே சீவனம் பண்ணினால், சாகப்போகிறோம் என்று எழுதியிருக்கிறது. சம்மனசு சத்தியநேசன். ஆவியும் அப்படித்தான். அவர் நம்மை எல்லாச் சத்தியத்துக்குள்ளும் வழி நடத்துகிறார். சம்மனசு குணப்படுதலையும் சீவனையும் விரும்புகிறது. ஆவியும் அப்படியே. ஏனெனில் நாம் ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை மடியப்பண்ணினோமாகில் பிழைப்போம். ரோ. ௮, ௰௩. சம்மனசும் பிசாசும் என்னிடத்திலே எப்போதும் ஒன்றுக்கொன்று போர்க்களத்திலே இருக்கிறதுபோலிருக்கிறது. ஏனென்றால் மாமிசம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவியோ மாமிசத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. இதுகள் ஒன்றுக்கொன்று எதிர்க்கிறது. கலா. ௫, ௰௭. உன் மாமிசம் உனக்குள்ளே எத்தனை ஆகாத நினைவுகளை எழும்பப்பண்ணுகிறது! இதுகள் எல்லாம் உன்னை நரகத்திற்கு இழுக்கிற பிசாசுக்கள் அல்லவோ. ஆவி உன்னிடத்திலே எத்தனை நல்ல நினைவுகளை உண்டாக்குகிறது! இதுகள் எல்லாம் உன்னை மோட்சத்துக்குக் கூட்டிக்கொண்டுபோகிற சம்மனசுக்கள் அல்லவோ. ஆகையால் பிசாசை விட சம்மனசு உனக்கு எத்தனை நலமானதாயிருக்கிறது! பிசாசு வழியிலே கல்லைப்போட்டு வைக்கிறது, சம்மனசு அதுகளுக்கு உன்னைத் தப்புவிக்கிறது. பிசாசு காலாலே மிதிக்கிறது, சம்மனசு உன்னைக் கைகளில் ஏந்திக்கொண்டு போகிறது. உனக்கு இவ்விரண்டில் ஒன்றை வழிகாட்டியாகத் தெரிந்துகொள். நீ பிசாசைப் பின்பற்றுகிறாயோ. நான் சம்மனசைப் பின்செல்லுகிறேன். நீ நரகத்துக்குப்போகிறாயோ. நான் மோட்சத்துக்குப்போகிறேன். இப்போதும் தனக்கு நலமானதைத் தெரிந்துகொண்டது ஆர்.



௬௪. தியானம்.

## துன்பங்களின் முடிவைப் பற்றியது.

தபலை நிறைந்திருக்கிறது. மொண்டு எடு.

**என்** இருதயம் துக்கம் நிறைந்திருக்கிறது என்று நீ முறையிடுகிறாய். அது சரிதான். அப்படித்தான் இருக்கவேண்டும். துக்கம் உங்கள் இருதயத்தை நிரப்பிற்று என்று இயேசுநாதர் முன்சொன்னாரே. யோவா. ௰௬, ௬. பராபரனும் சுபாவமும் ஒன்றையும் வெறுமையாய் விடுகிறதில்லையே. தண்ணீர் நிறைந்திராத பாத்திரம் காற்றினாலாவது நிறைந்திருக்குமே. பராபரன் வாசம்பண்ணுகிற இருதயம் சந்தோஷத்தாலே நிறைந்திராவிட்டால், துக்கத்தால் நிறைந்திருக்குமே. தபலை நிறையச் சலம் இருந்தால், அதை மொள்ள வேண்டும். உன் பாத்திரம் இவ்வளவு கொள்ளும் என்று பராபரன் அறிவார். ஆகையால் அவரே அதை நிரப்பட்டும். அவசரம் தோன்றின உடனே அவர் கிட்டிவந்து அதை வடிய விடுவாரே. அப்போது இருதயத்துக்கு இலகுவாகும். இயேசுநாதர் கானாவூரில் தண்ணீரை முந்திரிகைஇரசமாக்கும் நேரம் வருமுன்னே சாடிகளை வாய் மட்டாக நிரப்ப வேண்டியதாயிருந்ததே. யோவா. ௨, ௭. இருதயம் உடைந்து இரத்தம் வடியப்பண்ணும் படியான பெரிய துக்கத்தை அடையும்போதும், கண்ணில் நீர் ததும்பும்போதும் இயேசுவின் வேளை வரும். அப்போது அவர் எல்லாத் துக்கத்தையும் மகா சந்தோஷம் ஆக்குகிறார் என்று நன்றாய் உணர்ந்துகொள். துன்பம் எத்தனைக்கு மும்முரிக்கிறதோ, அத்தனைக்கு அதின் முடிவு கிட்டுகிறது. ஏராளமான உபத்திரவங்கள் உன்மேல் விழுந்து, சகல பெலத்தோடும் உன்னை அழித்துப்போடுகிறதென்று நீ கண்டால்: என் ஆத்துமமே, நீ திடன்கொள். இப்போது சுழுக்கிலே நன்மையாகும். எகிப்தின் உபத்திரவம் அதிகரிக்கிறது. ஆனால் இரட்சகர் கிட்டியிருக்கிறார். இந்தக் கொஞ்சப்பாடுகளைப் பொறுமையாய் உத்தரி. அப்போது நீ செயங் கொண்டாய் என்று சொல்லு.

என் துன்பங்கள் திரளாய் இருக்கிறதென்று நான் ஒருக்காலும் முறையிடேன். நான் உத்தரிக்கக் கூடுகிறது எம்மாத்திரம் என்று பராபரனுக்கு நன்றாய்த் தெரியும். என் இருதயம் துக்கத்தினால் நிரம்பினால், ஆறுதலினாலும் நிறைய வேண்டும். இப்படி என் இரட்சகர் எனக்கு நிச்சயப்படுத்திச் சொல்லியிருக்கிறார்: துக்கம் உங்கள் இருதயத்தை நிரப்பிற்று. ஆனால் நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லு

கிறேன். அது உங்களுக்குப் பிரயோசனமாயிருக்கிறது. ஏனெனில் தேற்றரவாளன் உங்கள் அண்டைக்கு வருவார் என்றார். யோவா. ௰௬, ௭. ஒவ்வொரு துக்கத்துக்கும் அதின் ஆறுதல் கூடவே இருக்கிறது. ஒவ்வொரு ஆயுதமும் தேவ உதவியைத் தன்னோடு கொண்டுவருகிறது. மழை பெய்து விட்டபிறகு எனக்கு வெய்யில் திரும்பவும் புறப்படும். பராபரனுடைய சித்தத்தின்படியே எனக்கு ஆகக்கடவது.

௯௫. தியானம்.

## பொறுமையில்லாமையைப் பற்றியது.

ஒன்று இரண்டாகும்.

கணக்கிலே இது பிசகு. ஆனால் துன்பசாலையில் இருக்கிறவர்கள் கணக்கை நன்றாய் அறியாமல், சாதாரணமாய் ஒன்றை இரண்டாய் எண்ணுகிறார்கள். பராபரன் நமக்கு ஒரு சிலுவையைப் பரமண்டலத்திலிருந்து அனுப்பினால், நாம் நம்முடைய மாமிசத்தாலும் இரத்தத்தாலும் இன்னம் ஒன்றை அத்தோடே கூட்டிக்கொள்ளுகிறோம். நாம் வியாதிப்படுகிறது பெரிய சிலுவை தான். புறம்பான துன்பங்களில் அது மகா பெரியது தான். ஆனால் நமக்கு வருகிற வேதனைகளில் நாம் பொறுமையில்லாமல் போகிறது அதிலும் பெரிய சிலுவை. முந்தினதைப் பராபரன் நம்முடைய மேல் சுமத்தி அதைச் சுமக்கிறதற்கு உதவி செய்கிறார். ஆனால் நாமே நமது மேல் சுமத்திக்கொள்ளுகிற பிந்தின சிலுவைக்கு ஆர் உதவி செய்வார். ஆம், பிந்தினது முந்தினதை உத்தரிக்கக் கூடாத கஸ்தியாக்குகிறது.

சிலுவை மெத்த பாரமாய் இருக்கிறது, அதை இனிச் சுமக்க என்னாலே முடியாது என்று நீ அடிக்கடி முறையிடுகிறதைக் கேட்கிறேன். நேசனே, இந்த பாரம் எங்கே இருந்து வருகிறது. பராபரனாலேயா, அல்ல. பராபரன் உண்மையாயிருக்கிறார். உங்கள் பெலத்துக்கு மிஞ்சினதாய் நீங்கள் சோதிக்கப்பட ஒட்டார் என்று எழுதியிருக்கிறது. ௧ கொரி. ௰, ௰௩. உன் மிருகம் சுமக்கிறதை விட அதிகமாய் நீ அதின் மேல் சுமத்துகிறதில்லையே. என்ன, உனக்கு உன் மிருகத்தின் மேல் இருக்கிற அவ்வளவு இரக்கம் பராபரனுக்குத் தம்முடைய பிள்ளையின் மேல் இராதா. அவர் அவ்வளவு இரக்கம் இல்லாதவரோ, அல்லவே. அப்படிச் செய்தால் அவர் தகப்பன் அல்லவே! உன் பொறுமையில்லாமையினால் நீயே உன் சிலுவையை உனக்குப் பாரமாக்குகிறாய். பொறுமையில்லாமை உன் சிலுவையோடு சேர்ந்திராவிட்டால், உன் சிலுவை சிலுவையாய் இராது. இதைப் பார்த்தால் நீ உன்னைக் கடிந்து கொள்ளுகிறவரை விட உன் மேலே தானே இரக்கம் இல்லாதவன் ஆகிறாய். அவர் உன் மேல் சுமத்துகிறது ஒரு ராத்தலானால், நீ உன் மேல் சுமத்திக் கொள்ளுகிறது நூறு பார நிறையாயிருக்கிறது. பராபரன் மேல் முறையிடாதே, உன் மேலே தானே முறையிடு. நான் என் சிலுவையை உற்சாகமாய்ப் பொறுமையோடே சுமக்கிறேன். எவ்வளவுக்கு உற்சாகமாய் அதைச் சுமக்கிறேனோ, அவ்வளவுக்கும் அது எனக்கு லேசாகிறது. சந்தோஷமாய்க் கொடுக்கிறவனைப் பராபரன் சிநேகிக்கிறார். உற்சாகமாய்ச் சுமக்கிறவனைச் சிலுவை சிநேகிக்கிறது. அது அவ்வளவு பாரமாயும், அவ்வளவு நேரமாயும் இருக்கிறதும் இல்லை. ஒரு சிலுவை எனக்குப் போதுமான பாரம். ஆகையாலே இன்னொன்றை அத்தோடே கூட்டிக்கொள்ளுகிறது புத்தியல்ல. அதிகம் சுமக்கமாட்டாத என் தோளின் பெலனத்தை நான் அறிந்திருக்கிறேன். ஆகையால் ஒரு சிலுவையே எனக்குப் போதும்.



௯௬. தியானம்.

## இயேசுவிலுள்ள இளைப்பாறுதலைப் பற்றியது.

நான் இயேசுவைத் தேடுகிறேன்.

அவரை எங்கே கண்டுபிடிப்பேன் என்கிறாயோ. இந்த நினைவு உனக்குண்டானதே நல்லதாயிற்று. தம்முடைய கெட்டுப்போன ஆடாகிய உன்னை அத்தனை வேதனையோடு தேடின நல்ல மேய்ப்பராகிய உன் இயேசுவை விட ஆரை நீ அதிக ஆசையோடு தேடுவாய். தேடத் தகும் இடத்திலே அவரைத் தேடுகிறவனே அவரைக் கண்டுபிடிப்பான். மணவாளி தன் படுக்கையிலே அவரைத் தேடினபோது, அவரைக் கண்டுபிடிக்கவில்லை. உன்னதப்பாட்டு ௩, ௧. ஏனெனில் இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குகிறதும் இல்லை, தூங்குகிறதும் இல்லை. சங்கீ. ௱௨௧, ௪. தமது தலைசாய்க்க இடங் காணாதிருந்தவரை மிருதுவான தலையணை மேலே தேடுகிறாயோ. அகுஸ்தீன் என்பவர் சொல்லுகிறதைக் கேள். நீ உனக்குள் ளே தானே இறங்கிப் பார். நீ பராபரனை உனக்குள்ளே கண்டுபிடிக்கிறதுபோல், பின்னை எங்கும் அவரைக் கண்டுபிடிக்க

மாட்டாய். நீ உனக்குள்ளே இறங்கினால், பராபரனுக்குள்ளே இறங்குகிறாய். ஏனென்றால் பராபரன் உன்னிலும் நீ அவரிலும இருப்பதினால் நீ அவரோடே ஐக்கியமாயிருக்கிறாய் என்கிறார். இது நல்ல வார்த்தை. பராபரன் உன்னிலும் நீ அவரிலுமாமே. பராபரன் சிநேகத்தினால் உன்னில் இருக்கிறார். நீ விசுவாசத்தினால் அவரில் இருக்கிறாய். ஆகையால் பராபரனையும் உன்னையும் தேட வேண்டிய இடம் எது என்று நீ அறிந்துகொண்டாய் அல்லவா.

மேலும் தௌலர் என்பவர் சொன்னதைக் கேள். நம்முடைய வகுப்பாருக்குள் மகா பத்தியுள்ள ஒரு கன்னியாஸ்திரி இருந்தாள். அவள் அடிக்கடி நம்முடைய கர்த்தராகிய இயேசுவை ஒரு சிறு குழந்தை வடிவமாய்க் காண மெத்தவும் ஆசைப்பட்டாள். ஒரு நாள் அவள் தன் தியானத்திலே இருக்கும்போது, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய கிறிஸ்துவானவர் ஒரு சின்னப்பிள்ளையைப்போல் மகா அடர்த்தியும் சன்னல் பின்னலுமான முள்ளினாலே சுற்றப்பட்டுக் கிடக்கிற பாவனையாக அவளுக்குத் தரிசனையானார். அப்போது அவள் அவரை முள்ளுக்குள்ளே கையிட்டு எடுக்க வேண்டியிருந்ததேயல்லாமல், வேறே விதமாய் எடுக்கக் கூடாமல் இருந்தது என்கிறார். ஆகையினாலே இயேசுவைத் தேட வேண்டுமென்றிருக்கிறவன் அவரை ரோசாப்புஷ்பங்களின் நடுவே தேடாமல், முள்ளுக்களின் நடுவே தேட வேண்டுமென்று இப்போது உனக்குத் தெரிகிறதே. சிலுவையிலே அன்றி பின்னே எங்கும் அவரைத் தேடப் போகாது. சிலுவை என்றால் எனக்குப் பயமாயிருக்கிறதே என்கிறாய். நீ கூச்சப்படாமல் தாராளமாய்ச் சொன்னது நல்ல காரியம். நானும் கூச்சப்படாமல் தாராளமாய்த் திரும்பச் சொல்லுகிறதென்னவெனில், இயேசு என்றாலும் உனக்குப் பயமாயிருக்கிறது. நீ அவரைத் தேடுகிறேன் என்கிறதும் மாயம். சிலுவை என்னைவிட்டு ஒருக்காலும் பிரியாமல் இருக்க நான் அடிக்கடி விரும்புகிறேன். அது ஏதினாலே. அது என்னை விடாதிருக்கும் மட்டும் இயேசுவும் என்னை விட மாட்டார். கிறிஸ்துவையும் அவர் சிலுவையையும் ஒருக்காலும் பிரிக்கக் கூடாது. சிலுவை ஒருவிசை என் வாசல்வழியாய்க் கடந்துபோனால், அப்போது அது என்னோடே கூட ஒரு ஆவியும் ஒரு கட்டுமாயிருக்கிற வேறொரு உண்மையுள்ள கிறிஸ்தவனிடத்திலே போய்ச்சேரும் என்கிறது நிச்சயம். ஆ நான் இயேசுவைத் தேடுவேன். அவர் என்னை ஆசீர்வதித்தால் ஒழிய நான் அவரைப் போக ஒட்டேன். உத்தம ஆசீர்வாதம் சிலுவையிலே உண்டு. ஆ இயேசுவே, நீர் உமது சிலுவையோடு என்னண்டையிலும் வாரும். நீரே என் பிரியமான விருந்தாடியாய் இருப்பீர்.



கூஎ. தியானம்.

# பராபரனைச் சிநேகிக்கிற சிநேகத்தின் அடையாளங்களைப் பற்றியது.

பராபரனைச் சிநேகிக்கிறாயா.

நான் உன்னைப் பரிட்சை பார்ப்பேன்: செபம் பண்ண உனக்கு ஆசையுண்டா. சிநேகம் தான் சிநேகிக்கிறவனுக்குத் தன் இருதயத்தைத் திறந்துகாட்டி, தனக்கு எல்லா நன்மையையும் அவனால் பெறும்படி பார்க்கும். பிள்ளைகள் பெற்றாரோடும், மணவாளி மணவாளனோடும், சிநேகிதன் சிநேகிதனோடும் எவ்வளவு பட்சமாய்ச் சஞ்சரிக்கிறார்கள்! இது சிநேகத்தினால் அல்லவோ. நீ பராபரனைச் சிநேகித்தால், அவர் பேரிலே மகா ஆறுதலான நம்பிக்கை உனக்கு உண்டாயிருக்கும். உன் இருதயத்தை அவருக்கு அடிக்கடி செபத்தின் வழியாய் ஊற்றிவிட்டு, புத்திர சுவிகாரத்தின் ஆவியினால் சகல இடுக்கண்களிலும் அப்பா பிதாவே என்று கூப்பிடுவாய்.

பாடுபட உனக்கு மனது உண்டா. சிநேகந் தான் சிநேகிக்கிறவரோடே கூட எல்லாப் பிரயாசம், வேதனை, வியாகுலம், துன்பம், மரணத்தையுங் கூட அநுபவிக்க உற்சாகமாயிருக்கிறது. ஒரு தாய் தன் பிள்ளையின் நிமித்தம் எவ்வளவோ சகிக்கிறாள். பிரசவிக்கும் வேளையில், பிள்ளை மாத்திரம் உயிரோடே பிறக்க உயிர்விட்டுப்போனாலும் போகும். எத்தனைவிசை அவள் முலைகொடுத்து, பிள்ளையைத் தன் இரத்தத்தினால் போஷிக்கிறாள். எத்தனை இராத்திரி அவள் தூக்கம் இல்லாமல் இருந்து, அதுக்காகக் கவலைப்படுகிறாள். அதுபோல நீ பராபரனைச் சிநேகித்தால், எல்லாவற்றையும் பராபரன் நிமித்தம் நல்ல மனதோடே பட்டு உத்தரிப்பாய். நிந்தை தரித்திரம் துன்பம் வேதனை மரணத்தையுங் கூடப் பட்டு, இதுகள் எல்லாவற்றிலும் நாம் நம்மைச் சிநேகிக்கிறவராலே அதிகமாய்ச் செயங்கொள்ளுகிறோம் என்று பவுல் என்கிறவரோடே சொல்லுவோம். ரோ. அ, கூஎ. தேவ சிநேகம் நமது சிலுவையின் கசப்பான தண்ணீரைத் தித்திப்பாக்குகிற அதிமதுரமாயிருக்கிறது. அது கசந்த உபத்திரவங்களைச் சந்தோஷமாக்குகிறது.

உனக்குச் சாகவும் ஆசையுண்டா. கிரெகோரியு சொல்லுகிறதாவது: பராபரனைச் சிநேகிக்கிற சிநேகத்தின் தன்மை எப்படிப்பட்டதென்றால், அது பரிசுத்த ஆசையிச்சைகளால் அதிகம் அதிகமாகப் பெருகி, தான் சிநேகித்திருக்கிறவரைக் கண்டுபிடிக்கும் மட்டும் இளைப்பாறாமல் இருக்கிறது. ஏனென்றால் அதுதான் சிநேகித்திருக்கிறவரிடத்தில் ஒழிய வேறிடத்தில் மனரம்மியம் அதற்குக் கிடையாது. சிநேகம் எங்கே இருக்கிறதோ, அங்கே சிநேகிதனைச் சேர வேண்டிய விருப்பமும் உண்டு. அப்படி நானும் இதை உணர்ந்து இருக்கிறேன். என் மெய்ப்பொருளாகிய பராபரன் மேல் என் சிநேகம் எத்தனை நெருக்கமாய் ஒட்டிக்கொண்டிருக்கிறதோ, அத்தனைக்கும் உலகத்துக்குப் பிரியமானதெல்லாம் எனக்கு வெறுப்பாகும். என்மேலே தானே எனக்குப் பிரியம் இல்லை. நான் நேசிப்பவரிடத்தில் எனக்கு அநுபவிக்கத் தக்கதாயிருக்கும் இன்பங்களை அநுபவிக்கத் தடையாயிருக்கிற யாவும் அற்றுப்போக, நான் சீவனை வெறுத்து மரணத்துக்குக் காத்திருக்கிறேன். நான் இடைவிடாமல் பெருமூச்சுவிட்டு: ஆ இயேசுவண்டையில் இருந்தால் தாவிளோ. இயேசுவே, என் ஆறுதலே, என் விருப்பத்தைக் கேட்டுத் தாரும். ஆ என் இயேசுவே, நான் உம்மிடத்தில் இருந்தால் தாவிளோ என்று சொல்லுகிறேன். இன்னம் இம்மையில் வெகுநாளைக்கு இருக்க உனக்கும் மனதா. அப்படியானால் நீ பராபரனை உன் முழு மனதால் இன்னம் சிநேகிக்கிறவன் அல்ல. பராபரனை சிநேகிக்கிறவனுக்குப் பராபரனிடத்திலே இருக்க ஆசை உண்டாயிருக்கும். நீ எத்தனை நாள்பட இருக்கிறாயோ, அத்தனை நாள்படப் பாவஞ் செய்துகொண்டுவருகிறாய். ஆகையால் பாவஞ் செய்ய உனக்கு இன்னம் மனது இருப்பதினாலே, பராபரனைச் சிநேகிக்கிறேனென்று நீ சொல்லக் கூடுகிறதெப்படி. பராபரனைச் சிநேகிக்கிற சிநேகமும் பாவசிநேகமும் கூடி கலந்திருக்க மாட்டாதே. ஆகையால் பராபரனைச் சிநேகிக்கிற சிநேகம் எவனிடத்திலே உண்டாயிருக்கிறதோ, அவனுக்குச் சாகவே ஆசை இருக்கும். ஆகிலும் அதையும் சுவாமியின் சித்தத்தின்படியே தானே வரப்பார்த்துக்கொண்டிருப்பான்.

சிநேகம் தன்னையே வெறுத்துவிட்டு தான் சிநேகிக்கிற வஸ்துவின் மனதுக்கு முற்றிலும் தன்னைக் கீழ்ப்படுத்தி ஒப்புவிக்கும். நான் வெகுநாள் உலகத்திலே இருக்க பராபரனுக்குச் சித்தம் இருந்தால், அப்போது பராபரனுடைய சித்தம் ஆகக்கடவது என்பேன். அப்படிச் சொல்வதும் சிநேகமாம். கிறிஸ்து இந்த ஒழுங்கை ஏற்படுத்தியிருக்கிறார்.



அதின்படியே நீ நடக்கவேண்டும். உம்முடைய இராச்சியம் வருவதாக என்று செபம் பண்ணி, பிறகு உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக என்று அத்தோடே கூடச் சொல்லு. நான் உலகத்தை விட்டுவிடுகிற விதமாய் அதை அநுபவித்து, பராபரன் என்னை அழைக்கும் பாக்கியம் கிடைக்கும்போது, அவரைப் பின்செல்லக் கூடும்படியாய் அவரைச் சிநேகிக்க வேண்டும். அவர் முதன்மையானவர், அவரே சிநேகிக்கப்படத் தக்கவர். என் ஆத்துமம் என் நிர்ப்பந்தத்துக்கு முடிவு வருவிக்கும் பராபரனண்டையிலே இருக்க மகா வாஞ்சையாய் விரும்புகிறது. தாகம் பெரிது. சீவ ஊற்றே, அந்தத் தாகத்தைத் தீரும்! பராபரனுடைய சமுகத்தைத் தெரிசிக்க நான் எப்போது அங்கே வந்து சேருவேன். எத்தனை நாள் செல்லும். ஆ கர்த்தாவே, எத்தனை நாள் செல்லும்.

௯௮. தியானம்.

## கிறிஸ்தவனுடைய வாசஸ்தலத்தைப் பற்றியது.

இடம் இல்லை; இடம் உண்டு.

எனக்கு நிலைநிற்கிற இடம் இங்கே இல்லை. ஆகிலும் என் வீட்டை நான் எங்கும் என்னோடே சுமந்துகொண்டு திரிகிற நத்தைக்குச் சரியாய் இருக்கிறேன்.

என் வீடு என்னிடத்திலே இருக்கிறது. நான் எனக்குள்ளேதானே வாசம்பண்ண ஆசைப்படுகிறேன். ஆ அது வருத்தம் தான். நீ உனக்குப் புறம்பே குடியிருக்க மனதாய் இருந்து, உன் நினைவுகளை நீ உலகம் எங்கும் சிதறவிட்டு, ஒருக்காலும் இளைப்பாறுதலைக் காணாதேபோகிறாய். நான் என் வீட்டோடே இருந்துவிடுகிறேன். என் நினைவுகளைப் பிரியவிடாமல் ஒன்றாய்க் கூட்டி, மனரம்மியமாயிருக்கிறேன். நீ ஒரு மடத்திலே உன்னை அடைத்து வைத்துக்கொண்டிருந்தும், ஒருக்காலும் உன் நினைவு நீ இருக்கிற அந்த இடத்திலே இராமல், அதை இங்கும் அங்கும் அலையவிட்டால் பலன் என்ன.

என் வீடு எனக்கு மேலாகவும் இருக்கிறது. பரமண்டலத்தில் வாசம்பண்ண எனக்கு ஆசை. என் சஞ்சரிப்பும் குடிமுறையும் அங்கே இருக்கிறது. பிலிப். ௩, ௨௰. என் பொக்கிஷம் எங்கேயோ, அங்கே என் இருதயமும் இருக்கவேணும். பரமண்டலத்தைச் சிநேகிக்கிறேன். அதைத் தேடுகிறேன். அதன்மேல் நினைவாயிருக்கிறேன். அதை வாஞ்

சித்துப் பெருமூச்சு விடுகிறேன். நீ என்னைத் தேடினால் பரமண்டலத்திலேயே அன்றி வேறெங்கும் தேடாதே.

என் வீடு என்னைச் சுற்றியிருக்கிறது. அது என் ஆத்துமா வாசஞ்செய்யும் சரீரம் தான். ஆத்துமா சரீரத்தைப் பார்க்கிலும் கொஞ்சத்திலே எத்தனை திருப்தியாயிருக்கிறது. சரீரத்துக்குப் பெரிய மாளிகைகளைக் கட்டுகிறாய். ஆத்துமாவோ சரீரமாகிய ஒரு சின்ன வீடு போதும் என்று இருக்கிறது. ஏனெனில் அது என்றென்றைக்கும் அதில் குடியிருக்கப் போகிறதில்லை. சரீரம் அதற்கு நிலைவரமான இடமாயிராமல், ஒரு சத்திரமும் சிறைச்சாலையுமாயிருக்கிறது. ஆகையால் அதில் வாசம்பண்ண அது மனதாயிராமல், எப்போதும் அதைவிட்டுப் புறப்பட ஆசையாயிருக்கிறது. ஒரு குருவிக்கு வெளியே திரிய எப்படி ஆசை உண்டோ, அப்படியே ஆவியின் முதல் வரங்களைப் பெற்ற நாமும் கூட நமது சரீரத்தின் மீட்பாகிய புத்திரசுவிகாரத்துக்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம். ரோ. ௮, ௨௩.

இன்னம் ஒன்று இருக்கிறது. என் வீடு என் கீழே இருக்கிறது. அது நான் மிதித்துக்கொண்டு திரிகிற பூமி தான். அது எப்படி என் தாயாயிருக்கிறதோ, அப்படியே அது கடைசியிலே என் குழியாகும். கர்த்தர் சிங்கார வனத்திலே: நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்று ஆதாமுக்குச் சொன்னதை நினைவுகூருகிறேன். நான் எப்பொழுதும் மண்ணைச் சுமந்துகொண்டு திரிகிறவனாய் இருப்பதால், என் மண்குழி எப்பொழுதும் என் நினைவில் இருக்கிறது. நீ அதற்குப் பயப்படுகிறாயோ. நான் பயப்படேன். பாம்பும் பூச்சிகளும் என்னோடே கூட அதில் வாசம்பண்ணும் என்று நான் நன்றாய் அறிவேன். ஆனால் பராபரனும் அங்கே இருக்கிறார். என் இரட்சகர் என் தூள்மேல் நிற்கிறார். பிசாசு அந்தத் தூளின் ஒரு அணுவை எடுக்கத் துணிந்தால், அப்போது இயேசு அதற்கு என்ன புத்தி கற்பிப்பாரென்று நீ பார்ப்பாய். பாம்பு குடியிருப்பாகிய என் குழி பராபரனுக்கு ஏற்றிருந்தால், எனக்கு அது ஏற்காதிருப்பதெப்படி. பாம்பு இருக்கும் கல்லறையில் பராபரனுங் கூட இருந்தால், அது பரிசுத்த ஸ்தலம். பராபரனைவிட்டுப் பிரியாதிருப்பதே மெய்ப் பரலோகம். இப்போதும் என் வீடு எங்கே என்று கேட்கிறாயோ, பூமியிலே எனக்கு ஒரு வீடும் இல்லை என்று உனக்குச் சொல்லுகிறேன். நான் அத்தனை ஏழை. ஆகிலும் நான் எங்கும் என்னோடேகூட இப்போது சொல்லப்பட்ட நாலு வீடுகளைச் சுமந்துகொண்டு திரிகிற அத்தனை ஐசுவரியவானாய் இருக்கிறேன்.



௬௬. தியானம்.

## குணப்படுதலுக்கேற்ற காலத்தைப் பற்றியது.

என் வேளை எப்போதும். யோவா. ௭, ௬.

இதை அறிகிறவனே பாக்கியவான். என் காலம் குணப்படும் படியான காலமாம். அது நான் என் இருதயத்தைத் திறந்து, நான் இன்னான் என்று பராபரனுக்கு வெளிப்படுத்துகிற காலம் தான். நான் செய்கிற அநேக நற்கிரியைகளிலேயும் கூட எப்போதும் பாவத்தையும் கலந்துபோடுகிற படியால், நான் எப்போதும் குணப்பட வேண்டும். ஆகிலும் கிருபையின் வாசல் எனக்கு எப்போதும் திறந்திருக்கிறது. உலகத்தாருக்கு மும்மூன்று மாதத்துக்கு ஒரு நேரம் உண்டு. அப்போது ஒரு மணிநேரம் செலவிட்டு பல்லைக் கடித்துக்கொண்டு பாவசங்கீர்த்தனத்துக்குப் போய், தேவபக்தர்களாகி, பிறகு புது கணக்காகச் சுறுசுறுப்பாய்ப் பாவஞ் செய்கிறார்கள். ஆ குருட்டு லோகமே, நீ குணப்படுதலுக்கேற்ற காலத்திலே குணப்படாமல் போகிறாய். உன் காலம் குணப்படுதலின் காலம். ஆனால் நீ இப்போது இருக்கிற இந்த நிமிஷமே அல்லாமல், மற்றக்காலம் உனக்குச் சொந்தம் அல்ல. வருகிற காலம் பராபரனுடையது. அது அவர் கையிலே மாத்திரம் அகப்பட்டிருக்கிறது. நீ பின்னிட்ட மூன்றுமாதம் உன்னுடையதாயிருந்தது. இனி வருகிறது பராபரனுடையது. அதிலேயும் நீ உயிரோடிருப்பாய் என்று ஆருக்குத் தெரியும்.

நாளையத்தினத்தைக் குறித்து நீ என்ன நினைக்கிறாய். இன்றைக்குத் தானே உன்னைக் கணக்கு கேட்க அழைக்கிற நாளாயிருந்தாலும் இருக்கும். இனிமேல் குணப்படுவோம் என்று பிரதிக்கினை பண்ணினவர்களில் எத்தனை ஆயிரம் பேர் இப்போது நரகத்திலே கிடந்து வேகிறார்கள். நீ பாவங்களிலே நெடுநாள் பழகினால் பிறகு குணப்படுகிறது வருத்தமாகும். நீ ஒரு கிணற்றிலே விழுந்தால், உடனே ஒருத்தன் வந்து, தன் கையை நீட்டி, தூக்க வந்தால்: நான் இன்றைக்கு வர மாட்டேன், நாளை மட்டும் கிணற்றிலே தானே கிடப்பேன் என்று ஒத்தாசையை அசட்டைபண்ணுவாயோ. நொந்துபோன இறைச்சிக்கு உப்பிட்டு பலன் என்ன. பழம் புண்ணுக்குப் பற்று என்னத்துக்கு. இளநாற்றைப் பிடுங்கி நடலாம். சின்னப்பொறி சுறுக்காய் அவிந்துபோம். முட்செடிகளில் திராட்சப்பழம் பறிக்கக் கூடாதே. மத். ௭, ௧௬. உன் சுபாவம் பாவத்தின் பழக்கத்தினால் முட்செடியாக மாறுபட்டுப்போனால், அது முந்திரிகைச் செடியாகிறது

வருத்தம் அல்லவா. உன் வீட்டுச்சாமான்கள் அழுக்காய்ப் போனால், அவைகளை விளக்கி சுத்தம்பண்ண மகா தீவிரமாயிருக்கிறாயே. உன் ஆத்துமத்துக்காக இவ்வளவு தாமதிப்பானேன். இது எத்தனை வெட்கம். நான் எங்கே போனாலும் எங்கே நின்றாலும் குணப்பட வேணுமென்று இருக்கிறேன். பராபரன் எத்தனைநாள் எனக்குக் காத்திருப்பார். என் பாவசங்கீர்த்தனம் கேட்கிறவர் அவரே. அதை ஒவ்வொரு நிமிஷத்திலும் கேட்க அவருக்கு ஆசை உண்டு. நான் அடிக்கடி அவரண்டையில் போனாலும் அது அவருக்கு அலுப்பாயிராது. நான் எப்போது போனாலும் சமயபேதமாயிராது. பாவசங்கீர்த்தன ஆசனம் என் இருதயம். அது இராவும் பகலும் திறந்திருக்கிறது. என் பாவசங்கீர்த்தனமும் சுருக்கம். அதாவது: பராபரனே, பாவியாகிய என் பேரில் கிருபையுள்ளவராகும். அதை வாயினால் திறந்து சொல்லக் கூடாதிருந்தால், பெருமூச்சு விடுகிறேன். பெருமூச்சும் விடக் கூடாதிருந்தால், அப்போது அழுகிறேன் கர்த்தர் என் அழுகையைக் கேட்கிறார். ஆ இருதயமே, காலத்தின் ஒவ்வொரு நிமிஷத்திலும் அமர்ந்திருந்து, இந்த நிமிஷம் என்னுடையது, இதிலே நான் குணப்பட வேண்டும், இனி வருகிற நிமிஷம் என் கையில் இல்லையே என்று நினை. ஆ இயேசுவே, நான் இதை நன்றாய் நினைக்கப்பண்ணும். அப்போது என் காரியம் நன்மையாய் நடந்தேறும்.

எய். தியானம்.

## நல்ல நோக்கத்தைப் பற்றியது.

### துவக்கம் முடிவு.

இதை முன்னது பின்னதாக்கு. அப்போது விவேகத்தோடே நடப்பாய். முந்தினது முடிவு, பிந்தினது துவக்கம். ஒவ்வொரு காரியத்தைச் செய்வதிலும், அதைச் செய்கிறவனுக்கு ஒரு நோக்கமுண்டு. நோக்கம் கிரியைக்குத் துவக்கமானாலும், அது கிரியையின் முடிவிலே நிறைவேறும். நீ ஞானத்தோடே நடக்க வேண்டுமென்றிருந்தால், எப்போதுந் துவக்கத்துக்குமுன் முடிவை நினை. இரோனிமு என்பவர் சொல்லுகிறதாவது: ஒவ்வொருத்தனும் தன் நினைவு பேச்சு கிரியைகளிலே மகா கவனமாயிருந்து அதினாலே வரப்போகிறதென்னவென்று ஆய்ந்தோய்ந்து பார்த்து அது பராபரனுக்கு மகிமையாகவோ, சங்கினையாகவோ, பிறருக்குப்



பிரயோசனமாகவோ, சேதமாகவோ, தனக்கு நலமாகவோ, கேடாகவோ முடியப்போகிறதென்று நினைத்துப் பார்க்க வேண்டும். ஏனெனில் நாணேற்றப்படும் அம்புக்குக் குறியிருப்பதுபோல, நாம் துவக்குகிற காரியங்களெல்லாம் பராபரனுக்கு நற்பிரியமும் புகழ்ச்சிக்குரியதும் பிரயோசனமுமான முடிவையடையும்படிக்கான நோக்கமுடையதாயிருக்க வேண்டியது என்கிறார்.

ஆகாத முடிவு ஆகாத கிரியை. நல்ல முடிவு நல்ல காரியம். புத்தியற்ற மிருகங்கள் முடிவை நினைத்துச் செய்கிறதில்லை. புத்தியுள்ள மனிதரோ யாவையும் முடிவை நினைத்துச் செய்கிறார்கள். நல்ல கிரியைகளுக்கும் ஆகாத கிரியைகளுக்கும் உண்டாயிருக்கிற வித்தியாசம் முடிவைக் கொண்டு தான் தெரியவரும். சவுலின் குணப்படுதலுக்கும் தாவீதின் குணப்படுதலுக்கும், பரிசேயனின் செபத்துக்கும் ஆயக்காரனின் செபத்துக்கும், யூதாவின் மனஸ்தாபத்துக்கும் பேதுருவின் மனஸ்தாபத்துக்கும் உள்ள வித்தியாசம் முடிவினால் தான் விளங்கிற்று. சரீரத்துக்கு ஆத்துமமும் மரத்துக்கு வேரும் எப்படி ஆதாரமோ, அப்படியே கிரியைக்குப் பரிசுத்த தீர்மானம் ஆதாரமாம்.

உன் கிரியைகளுக்கெல்லாம் பராபரனையே துவக்கமும் முடிவுமாய் வைத்துக்கொள். கர்த்தர் துணை என்பதே உன் துவக்கமாயிருக்கக் கடவது. அப்போது முடிச்சு அவிழாது. கர்த்தர் துணையின்றி காரியஞ் சித்திக்காது. கர்த்தருக்கு மகிமை என்பதே உன் முடிவாயிருக்கக்கடவது. பராபரனுடைய நாமத்தினாலே நீ தொடங்கினதை உன் சுய புகழ்ச்சியிலும் சுய மகிழ்ச்சியிலும் முடிக்காதபடிக்குப் பத்திரமாய்ப்பார். ஆகாத முடிவு ஆகாத கூலி. பராபரனுக்கு மாத்திரம் மகிமையுண்டாகக்கடவது. ஒரு மகாத்துமா இதைக் குறித்து: ஒவ்வொரு நற்கிரியைக்கும் கனமும் பலனுமாகிய இரண்டு காரியங்களுண்டு. பிந்தினதைப் பராபரன் நமக்குக் கொடுக்கிறார். முந்தினதை அவர் தமக்குத் தானே வைத்துக்கொள்ளுகிறார் என்று சொல்லுகிறார். நமது கிரியைகளின் பலன் பராபரனைச் சேராது. நமது நலம் அவரண்டை எறாது. ஆனால் நற்கிரியைகளினாலுண்டாகுங் கனத்தை நாம் நமக்குச் சொந்தமாக்கக் கூடாது. பராபரன் நாம் நமது மகிமையை வேறொருவனுக்கும் கொடோம் என்று சொல்லுகிறார். (எசா. ௪௨, ௮.) அவர் என்னுடைய பங்கை என்னை விட்டு எடுக்காதபடிக்கு நான் அவருடையதை எடுக்க மாட்டேன். எங்களுக்கல்ல கர்த்தரே, எங்களுக்கல்ல உமது நாமத்துக்கே மகிமை வரப்பண்ணும்.

எக. தியானம்.

## எல்லா மனுஷருஞ் சரி என்பதைப் பற்றியது.

மண் மண் தானே.

நான் மண், நீ அதை விட என்ன அதிகம். அப்படியிருக்க நீ மேன்மை பாராட்டுகிறதென்ன. நீயும் என்னைப்போலே தான். நானும் உன்னைப்போலே தான். நீ மண்ணாயிருக்கிறபடியால், மண்ணைச் சேர். இனத்தை இனஞ் சேருமல்லவா. மெய்தான் நீ மகமல் பட்டு உடுத்திக்கொண்டு திரிகிறாய். நானோ ஒரு பெரும்படிச் சட்டையைப் போட்டுக்கொண்டு திரிகிறேன். இரத்தாம்பரம் உடுத்தாலுஞ் சரி, பழந்துணி உடுத்தாலுஞ் சரி, மண் மண்ணே. நீ உயர உட்கார்ந்திருக்கிறாய். நான் தாழ உட்கார்ந்திருக்கிறேன். உயர இருந்தாலுஞ் சரி, தாழ இருந்தாலுஞ் சரி, மண் மண்ணே. நீ உன் வாய்க்கு இதமான விலை உயர்ந்த சாப்பாட்டைக் கொடுக்கிறாய். நான் அகப்பட்டதைச் சாப்பிடுகிறேன். தண்ணீராலே நனைத்தாலுஞ் சரி, பன்னீராலே நனைத்தாலுஞ் சரி, மண் மண்ணே.

ஆனால் பொன்வெள்ளி செம்பில் வித்தியாசமில்லையா. கோவில் உண்டியிலே வெள்ளிக்காசும் பொன்காசும் கொஞ்சமாகவும் செம்புக்காசு மிகுதியாகவும் போடுகிறதை நான் காண்கிறதில்லையா. பொன் என்ன, மஞ்சள் நிறமான மண்ணல்லவோ. வெள்ளியென்ன, வெண்ணிறமான மண் அல்லவோ. செம்பென்ன, செந்நிறமான மண்ணல்லவோ. நீ செம்புக்காசைப்பார்க்கிலும் பொன்காசையும் வெள்ளிக்காசையும் அதிகமாய் எண்ணுகிறதென்ன. ஒரு வேளை அதுகள் கனமாயிருக்கிறதினாலேயோ. அப்படியானால் நீ இவைகளினால் உன் இருதயத்தைப் பாரப்படுத்துகிறது அதிசயமல்ல. இலேசான காசு, இலேசான இருதயம். கனமான காசு கனமான கவலை. ஒரு வேளை அந்தக்காசு வருணத்தின் நிமித்தம் உனக்கு அதிகமாய்க் காணுகிறதோ. வருணம் வருணந்தான். மண் மண்தான். வெள்ளையும் சிவப்பும் மனுஷருக்கு மேற்பட்டது. ஒரு வேளை அந்தக்காசு அதிகமாய் விலைபெற்றதானபடியினாலே அப்படி எண்ணுகிறாயோ. அது வெறுந் தோற்றுதல்தானே. பொன்காசு பெற்ற விலை செம்புக்காசு பெறாமல் போகிறதென்ன. அது உன் கூட தோற்றுதலாயிருக்கிறபடியினாலே தான். ஆகிலும் அது அப்படித்தான் இருக்கிறது. செம்மைவிட பொன் உயர்ந்தது. உயர்ந்ததோ பராபரனுடையது. அவர் கொ[illegible] ருக்குக்கொடு.



பொன்னுஞ் செம்பும் அவரால் உனக்கு வந்திருக்கிறதே. பராபரனுடையதைப் பராபரனுக்குக் கொடு. பொன்னுஞ் சரி செம்புஞ் சரி. எல்லாம் அவருடையது.

எஉ. தியானம்.

## அவுஷத பெலத்தைப் பற்றியது.

வயித்தியனே! உன்னையே குணமாக்கு. லூக்கா. ச, உங.

இத்தனை வயித்தியர் சாகிறார்களே. அதேதினாலே. மற்றவர்களுக்கு உதவி செய்கிறவர்கள் தங்களுக்கே உதவி செய்யக் கூடாததாயிருக்கிறதே. இதன் முகாந்தரம் இன்னதென்று அறிந்துகொள். பச்சிலை மூலிகைகளானாலும் சேர்வைகள் என்கிலும் அவர்களுக்கு ஆரோக்கியத்தை உண்டு பண்ணாமல், ஆண்டவரே, சகலத்தையும் குணமாக்குகிற தேவரீருடைய வார்த்தையானது அவர்களுக்கு ஆரோக்கியத்தை உண்டு பண்ணிற்று. ஞானம். யசு, யஉ. மனுஷர் இரணவைத்தியராய் மாத்திரம் இருக்கிறார்கள். இயேசுவோ ஞான பரிகாரியும் அதிசய வைத்தியருமாயிருக்கிறார். வெளிப்புறத்தைக்கண்ட அவர்கள் புறம்பாக மாத்திரம் பரிகாரம் பார்க்கக் கூடும். உனக்கு வயிற்றிலே வியாதி இருந்தால் ஒருவேளை கழுத்தின்மேல் தைலம் பூசுகிறதுண்டு. இவரோ உன் உள்ளத்தை அறிந்து சகல தின்மைக்கும் வேர் எங்கே என்று பார்த்து குணமாக்கத் தெரிந்திருக்கிறார். சுகப்படுதல் எங்கே, அவுஷதம் எங்கே என்று கேட்கிறாயோ. வயித்தியனிடத்தில் அல்ல, பராபரனிடத்தில் இருக்கிறது. மருந்தினாலே அல்ல, பராபரனுடைய வார்த்தையினாலே மனுஷன் பிழைப்பான். வயித்தியன் சில வேளை மகாவிலைபெற்ற அவுஷதங்கள் எல்லாங் கொடுத்தும் வியாதி தீராமல் அற்ப எத்தனங்களாலே வியாதி தீருகிறதுண்டே. மகா ராசனுக்கு வியாதி வந்தால் மகா விலையேறப்பெற்ற தைலங்கள், மாத்திரைகள் கொண்டுவந்து கொடுப்பார்கள். அப்படி கொடுத்துஞ் சாகிறான். ஒரு கூலிக்காரனுக்கு ஒருபிடி மண்ணினாலே குணமாகிறதும் உண்டே. இது ஆசீர்வாதம் நிறைந்த பராபரனுடைய வார்த்தையினாலே சம்பவிக்கிறது அல்லவா? எத்தனை விசை பராபரன் சொற்ப எத்தனங்களினால் வியாதியைத் தீரப்பண்ணுகிறார். எசேக்கியா இராசாவுக்குப் பெருவாரிக் காய்ச்சலினால் எரிவந்தப் பருக்கண்டு வியாதிப்பட்டுக் கிடக்கையில் அத்திப்பழத்தால் குணமாயிற்றே. உ இராசா. உய.

அத்திப்பழத்தினால் இந்த நாளிற் பெருவாரிக் காய்ச்சல் தீரு மோவென்று பரீட்சை பார். ஆ, அத்திப்பழத்தால் அவனுக்கு குணமாகாமல் அதிசயபெலனையுடைய பராபரனுடைய வார்த்தையால் குணமாயிற்று. சிலவிசை பற்பல பிரமிக்கத்தக்க காரணங்களால் குணமாகிறதுண்டே. அப்படியே திடுக்கிடும் பயத்தினாலும் காய்ச்சல் தீர்ந்துபோகிறதும் உண்டே. ஆனால் அது பயத்தினால் ஆகாமல் பராபரனுடைய வார்த்தையினாலே ஆகிறது. பராபரனுடைய வார்த்தையாலன்றி சூரியன் பிரகாசிக்கவும், தண்ணீர் நனைக்கவும், அப்பம் பிழைப்பூட்டவும், மருந்து குணமாக்கவுங் கூடாது. நான் சீராக்கென்பவருடைய பிரமாணத்தைப் பின்பற்றுகிறேன். கர்த்தர் மருந்துகளைப் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணுகிறார். புத்திமான்களானயாவரும் அதுகளை அசட்டைபண்ணார்கள் என்கிறார். சீராக்கு ௩௮, ௪. ஆகிலும் பரிகாரி ஒருவனையும் நான் தேவனுக்க மாட்டேன். மற்றப்படி நான் சாகுமுன்னே என் தேவனை எனக்குச் செத்துப் போனவரைப் போலாக்குகிறேன். எத்தனங்களை கையாடுவேன். ஆனால் அத்தோடேகூட பராபரனை நோக்கிப்பார்த்து அவரை நம்பி மிகுந்த தாழ்மையோடும் பொறுமையோடும் அவர் சித்தத்துக்கு என்னை ஒப்புவித்து, கர்த்தரே உமக்குச் சித்தம் உண்டானால் என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆம் என்று அந்த குஷ்டரோகி சொன்னதுபோல் சொல்லுவேன். லூக்கா. ௫. ௰௨.

௭௬. தியானம்.

## விசுவாச பெலத்தைப் பற்றியது.

உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. லூக்கா. ௰௭, ௰௯.

ஆ, இது மிகவும் இனிமையும் ஆறுதலுமுள்ள சொல். இதற்கு ஈடாக உலகப் பொருள்களை எல்லாம் கொடுத்தாலும் போதாது. இது எப்படியாம். இயேசுவினால் காரியமாகிறதில்லையா? அவரால் ஆகிறது மெய்யே. ஆனால் ஒரு ஐசுவரியவான் ஒரு பிச்சைக்காரன் கையிலே ஒரு பொன் காசைக்கொடுத்து: இதோ, உன் கை உன்னை ஐசுவரியவானாக்கிற்று என்று சொல்லுகிறதுபோலே, இயேசுவும் தமக்குரிய கனத்தை விசுவாசத்துக்குக் கொடுக்கிறார். பராபரன் தம்முடைய உபகாரங்களைத் தமக்கும் தமது தயவுக்கும் உரியதாக்காமல் நமக்கும் நமது விசுவாசத்துக்கும் உரியதாக்குகிறார்.



அதேதினாலே என்றால், நாம் விரும்புவதும் நமக்குத் தேவையானதுமான யாதொன்றை நாம் அடையாமல் போனால், அதற்குப் பராபரனும் அவர் தயவின் குறைவும் அல்லல், நமது விசுவாசக் குறைவே காரணமென்று அதினால் அறியும் பொருட்டு அப்படி செய்கிறார். விசுவாசமில்லாதவன் பராபரன் கொடுப்பாரோ கொடுக்க மாட்டாரோ என்று சந்தேகப்பட்டு தன் வழிகளில் நிலையற்றவனாயிருக்கிறான். அப்படிக்கொத்த மனுஷன் கர்த்தரிடத்தில் எதாகிலும் பெறமாட்டான். யாக். ௧, ௭. பராபரன் அவனுக்குக் கொடுக்கப் பிரியப்பட்டாலும் கொடுக்க முடியாது. அதெப்படி என்றால், ஒருவன் ஒரு பாத்திரத்தைத் தன் கையிலே வைத்திருந்து, அதிலே பின்னொருவன் யாதொன்றை வார்க்க வருகிறவேளை அதிலே பாத்திரத்தை அசையாமல் பிடித்தாலொழிய அதில் வார்க்கிறது அதிலே விழாமல் இந்தண்டையிலும் அந்தண்டையிலும் சிந்திக் கெட்டுப்போமே அத்தன்மையாகும். பராபரன் தமது தயவு சேதமாய்ப் போகத்தக்கதாக அந்த விழியிலே வார்த்துவிடச் சித்தமாயிரார்.

நீ விசுவாசித்தபடி உனக்காகும். பராபரனுடைய வார்த்தை வெறும வார்த்தையாய்ப் போகிறதில்லை. நமது விசுவாசம் அதைப் பற்றிப்பிடித்தால் அதினாலே பெலத்த கிரியைகள் உண்டாகும். பஞ்சத்திலே உனக்குப் பிழைப்பு கிடைக்கும் என்று பராபரன் உனக்கு வார்த்தைப்பாடு கொடுத்திருக்கிறார். இதை நீ விசுவாசி. அப்போது அப்படியே நடக்கும். கல்லுகள் அப்பமாக வேண்டியிருந்தாலும் உனக்கு அன்னத் தாழ்ச்சி வாராது. ஆகவேண்டியபடி உனக்காகாமல் போகிறதுக்கு உன் அவிசுவாசமே காரணம். விசுவாசத்திலே ஐசுவரியம்; அவிசுவாசத்திலே தரித்திரம். விசுவாசத்திலே மோட்சம்; அவிசுவாசத்திலே நரகம். விசுவாசத்திலே எல்லாம் உண்டு; அவிசுவாசத்திலே ஒன்றுமில்லை. எனக்கு எல்லாந் தீமையாய் வாய்த்தால், என்னையும் என் அவிசுவாசத்தையும் நோக வேண்டுமேயன்றி பின்னொருத்தரையும் நோக வேண்டியதில்லை. எனக்கு நன்மையாய் வாய்த்தால், இது பராபரனுடைய தயவு என்று அவரைப் புகழுவேன். எனென்றால் தெய்வ கிருபையே விசுவாசத்தை எனனிடத்தில் உண்டுபண்ணி அதையும் முடிசூட்டுகிறதாயிருக்கிறது.

௭௪. தியானம்.

## நன்றியறிதலைப் பற்றியது.

*திரும்புதல் உத்தம நன்றியறிதல். லூக்கா ௰௫, ௰௮.*

நீ உன் வாயினால் பராபரனைக் கொண்டாடுகிறாய். அது மெத்த நல்லதுதான். தோத்திரத்தை அவர் தமக்குப் பலியாகக் கேட்கிறார். நீ எவ்வளவுக்கு உன் வாயைத் திறக்கிறாயோ அவ்வளவுக்கு அவர் அதில் வார்க்கிறார். ஒவ்வொரு தோத்திரமும் நவமான உபகாரத்தை அடைகிறது. ஆறுகள் கடல்தண்ணீரால் உண்டாகி மறுபடியுங் கடலிலே போய்ச் சேருகிறது. அதுபோல செபம் பராபரனுடைய கிருபையின் நதி நமது மேல் வழிந்தோடச் செய்கிறது, தோத்திரம் அதை மறுபடியும் அவரண்டை உயரக்கொண்டு போகிறது. பராபரனுடைய தயவு தேவதூதர்கள் ஏறி இறங்குகிற யாக்கோபின் உத்தம ஏணியாயிருக்கிறது. ஒரு செபப்பெருமூச்சு ஏற, ஒரு ஆசீர்வாதம் இறங்குகிறது. ஒரு தோத்திரப்பெருமூச்சு ஏற, ஒரு ஆசீர்வாதம் இறங்குகிறது. ஆசீர்வாதம் இறங்குகிறதும் ஏறுகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய செபத்தினால் நம்மண்டைக்கு இறங்குகிறது. இஸ்தோத்திரஞ் செலுத்துவதினால் திரும்ப அவரண்டை ஏறுகிறது. ஒவ்வொரு காரியமுந் தன் பிறந்தகத்தைத் தேடி அதிலே இளைப்பாறுகிறது. பராபரனுடைய உபகாரங்களும் அப்படித்தானே.

ஆனால் நீ உன் நடக்கையினாலும் பராபரனை மகிமைப்படுத்துகிறாயா. திரும்புதல் உத்தம நன்றியறிதலாம். ஆகையால் உன் வழிகளைக் கவனித்துப்பார். நீ எங்கே நிற்கிறாய். இடுக்கவாசலால் உட்பிரவேசியுங்கள். அதேனென்றால் கேட்டுக்குங் கொண்டுபோகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது. இதுக்குட் பிரவேசிக்கிறவர்கள் அநேகம் பேராயிருக்கிறார்கள் என்று உன் இரட்சகர் புத்தி சொல்லுகிறாரே. மத். ௭, ௰௩. நீயும் அந்த வழியிலே போகிறாயோ. நீயுங் கேட்டுக்குக்கொண்டுபோகிற விசாலமான வழியிலே போகிறாயோ. நீயுங் கூட வெகு கூட்டத்தோடே சேர்ந்து இப்பிரபஞ்சத்துக்கொத்த வேஷந் தரித்துக்கொண்டாயோ. சீவனுக்குக்கொண்டுபோகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. இதைக் கண்டு பிடிக்கிறவர்கள் கொஞ்சம் பேர். இந்தக்கொஞ்சம் பேருக்குள்ளே நீயும் ஒருவனாயிருக்கிறாயா. உன் நடக்கை உன்னை எங்கே கொண்டுபோகிறது. உன் காலடிகளை நோக்கிப் பார். பெருமை, கோபம், பகை, அநியாயம், ஆடம்பரம், பிசினித்தனம், இரக்கமில்லாமை, பொய் இவைகளெல்லாம் உலகத்தின் காலடிகளாம். தாழ்மை, மெத்தனவு, சிநேகம், நீதி, போதுமென்கிற மனது, இரக்கம், உண்மை இவைகளெல்லாம் இயேசுவின் காலடிகளாம். இப்போது நீ எங்கே இருக்கிறாய். ஆ, நீ சரியான வழியிலே இராவிட்டால், திரும்பு திரும்பு. உன் குணப்படுதலினாலே பராபரனைப் புகழ வேண்டும். இப்படியே மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துகிறதற்காக உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கக் கடவது. மத்தே. ௫, ௰௬.



நான் இன்னம் ஒன்று உன்னைக் கேட்கிறேன். துன்பத்திலும் பராபரனை மகிமைப்படுத்துகிறாயோ. பொறுமையே பராபரனுக்கு மிகவும் பிரியமான தோத்திரம். பராபரன் உனக்கு ஆஸ்தியைக் கட்டளையிட்டால், அப்போது கர்த்தர் கொடுத்தார், அவருடைய நாமத்துக்குத் தோத்திரமென்று நீ சொல்லுகிறாய். பராபரன் அதைத் திரும்ப எடுத்துக் கொள்ளுகிறார். அப்போதும் கர்த்தர் எடுத்துக்கொண்டார், அவருடைய நாமத்துக்குத் தோத்திரமென்று சொல்லுவாயோ. சகிப்புள்ள இருதயம் எப்போதுந் திரும்புகிறதற்கு ஆயத்தமாயிருக்கும். பராபரன் அதற்கு யாதொன்றைக் கொடுத்திருந்தால், அவர் அதைத் திரும்ப வாங்கச் சித்தமான வேளையிலே நல்ல மனதோடே திரும்பக் கொடுத்துவிடும். பராபரனுக்கு வாயினாலும் இருதயத்தாலும் நடக்கையினாலும் துன்பத்திலுந் தோத்திரஞ் சொல்லுவேன். எனக்குள்ளதெல்லாம் கர்த்தாவைப் புகழக் கடவது.

௭௫. தியானம்.

## நன்றியறியாமையைப் பற்றியது.

*விட்டு விலகு, பட்டு உத்தரி.*

என்னத்தை? உலகத்தில் மிகவும் சாதாரணமான நன்றியறியாமையைத் தானே. ஆ, உலகம் எவ்வளவு நன்றிகேடு உள்ளது. விசேஷமாக அது தன பராபரனுக்கு எத்தனை நன்றியறியாமையைக் காண்பிக்கிறது. சுத்தமாக்கப்பட்ட குஷ்டரோகிகள் செய்தியை நீ வாசிக்கிற போது, அந்தப் பத்துபேரில் ஒருவன் மாத்திரம் நன்றியறிந்த தோத்திரஞ் சொல்ல வந்தான் என்பதற்காக உனக்குக் கோபம் வருகிறது.

லூக். யஎ. ஆனால் நீ மற்றவர்கள் மேல் கோபமாயிறதேது. உன்மேலே கோபமாக வேண்டும். நீ உன் மடியிலே கைவிட்டுப் பார். அங்கே நன்றிகெட்ட விருந்தாடி ஒருவனைக் கண்டு பிடிப்பாய். நீ எத்தனை விசை பொன்னிலும் விலையேறப் பெற்ற உன் சுகத்துக்காக பராபரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தினாய். பராபரன் ஞானஸ்நானத்தின் வழியாய் உன் பாவக்குஷ்டரோகத்திலிருந்து உன்னைச் சுத்தம் பண்ணினதற்காக நீ அவரை எத்தனை விசை நன்றியறிதலோடு தோத்திரித்தாய். நீ தோத்திரம் பண்ணப்போகிறதேது. நீ அதை ஒரே விசையாகிலும் நினைக்க இல்லையே. கிறிஸ்தவர்களுக்குள் வியாதி முதலான இடுக்கண் நீங்க, பிரசங்கபீடத்தின் மேலே நின்று வேண்டிக்கொள்ள வேண்டுமென்று ஒரு வருஷத்திலே நூறு தரத்துக்கதிகமாய் எழுதிக் கேட்டுக்கொள்ளுகிறதுண்டு. ஆனால் தங்களுக்குக் கிடைத்த விசேஷித்த உபகாரங்களுக்காகப் பராபரனுக்குத் தோத்திரஞ் சொல்லப் பத்து தரமாகிலும் எழுதியனுப்புகிறது அபூருவமாகிறது. அது ஏதினாலே என்று நான் வெகுவிசை நினைக்கிறேன். ஒருவருக்கும் அந்த மன்றாட்டினால் ஒத்தாசை கிடைக்கிறதில்லையோ. அப்படியல்ல, நன்றிகேடு கிடைத்த ஒத்தாசையை நன்றியறிய மனதில்லை. ஒவ்வொருவனுந் தான் செய்கிற உபகாரத்தைப் பிறன் நன்றியறிந்துகொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறான். நன்றியறிதல் இல்லாவிட்டால், கோபம் பிறக்கிறதே. உனக்கு வருஷத்திலே ஒரு ரூபாய்மட்டும் உபகாரம் செய்கிற சிநேகிதன் ஒருவன் உனக்கு இருந்தால், அவனை எவ்வளவு பூசித்து அவனிடத்தில் எவ்வளவோ எச்சரிக்கையாய்ச் சாவகாசம் பண்ணுவாய். ஆனால் எல்லாவற்றையுங் கொடுக்கிற பராபரனைத் தோத்திரம் பண்ணுகிறதுக்கு ஒரு வீட்டிலே ஒருவனுமில்லாமல், கட்டோடே அற்றுப்போகிறதென்ன. பத்துப்பேரில் ஒருவனாவது வருகிறது அபூர்வமாயிருக்கிறது.

என் பிரியமான கிறிஸ்தவனே! நன்றியறியாமை என்கிற இலச்சை கெட்ட குணத்தை விட்டு விலகு. நன்றி கெட்டவன் என்கிறதும், சகல தோஷத்திற்கும் இராசா என்கிறதும் ஒன்றுதான். நன்றி கெட்டவன் ஒரு உபகாரத்துக்கும் பாத்திரன் அல்ல. நன்றி கெட்டவன் பராபரனாலும் மனுஷராலும் பகைக்கப்படுகிறான். அப்படிப்பட்டவன் தாராளமாய்த் தண்ணீர் ஊறுகிற தயவு என்னும் கிணற்றைத் தூற்றுப்போடுகிறான். ஆகையினாலே தனக்குப் பண்ணின குறையைச் சீக்கிரமாய் மறக்கிறதும் தனக்குச் செய்த உபகாரத்தை ஒருக்காலும் மறக்காமலிருக்கிறதும் கிறிஸ்தவனான குணமா



யிருக்கிறது உனக்கு உபகாரத்துக்கு அபகாரஞ் செய்யப்பட்டாலும், சிநேகிக்கிறதிலே இளக்கரியாதே.

மேலும் நீ விட்டு விலக வேண்டிய நன்றி கேட்டைப் பிறன் உனக்குக் காண்பிக்கிறபோது, அதையும் பட்டு உத்தரி. உலகத்துக்குப் பராபரன் எத்தனை நன்மை செய்து வருகிறார். அதற்காக அவரை நன்றியறிந்தவனாய்த் தோத்திரிக்கிறவன் ஆர். இயேசு நாதர் எவ்வளவு உயர்ந்த விலையாய் மனுஷரை மீட்டு இரட்சித்தார். அதை யார் நினைக்கிறான். அதற்காக அவரை யார் தோத்திரம் பண்ணுகிறான். உன் இயேசுவுக்குக் கிடைத்ததிலும் உனக்கு அதிகம் கிடைக்க வேண்டுமென்றிருக்கிறாயோ. தோத்திரத்துக்காக உபகாரஞ் செய்யத் தொடங்குகிறதில்லை. அப்படியே நன்றியறியாமையின் நிமித்தம் நன்மைசெய்கிறதை நிறுத்தாதே. சிநேகம் எல்லாத்தையுஞ் சகிக்கிறது. க கொரி. ந, எ. அது தன்னைக் குலுக்குகிறவனுக்கும் அடிக்கிறவனுக்கும் பழத்தின்மேல் பழம் இடைவிடாமல் உதிர்த்துக்கொண்டிருக்கிற நல்ல மரத்துக்கொப்பாயிருக்கிறது. நான் நன்றியறியாமையை மகா வெட்கங்கெட்ட அருவருப்பான துர்க்குணமென்றுஞ் சகல துன்மார்க்கத்துக்குந் தாய் என்றும் எண்ணி அதை விட்டு விலகி, அத்தோடே கூட நான் செய்கிற நன்மைக்குப் பதிலாக உலகத்தில் வெகு சாதாரணமான நன்றியறியாமையைக் காண்பித்தாலும் அதையும் மனங்கொண்டு சகிக்கிறேன். பூலோகம் அறிய மாட்டாததற்குப் பரலோகம் பலன் கொடுக்கும்.

எகா. தியானம்.

## மெய்க் கிறிஸ்தவனுக்கு இருக்க வேண்டிய அடையாளங்களைப் பற்றியது.

புடத்துக்கு நிற்பதே அடையாளம்.

நீ உன்னை நல்ல கிறிஸ்தவன் என்கிறாய். நான் அதை நம்புகிறதில்லை. அதை ஒப்புவி. எதினாலே ஒப்புவிப்பேன் என்றால், புடத்துக்கு நிற்பதே அத்தாட்சி. எளிமைத்தனமாகிய சூளையிலே நீ புடமிடப்பட்டு நின்றாயா. ஏனென்றால் ஒருத்தனுக்கு எல்லாம் நன்றாய் வாய்க்கும்போது, தெய்வ பத்தியுள்ளவனாயிருக்கிறது அதிசயம் அல்ல. சிலுவையிலே கிறிஸ்தவனை அறிய வேண்டும். நல்ல காற்று வீசி கடல் அமர்ந்திருக்கையில் எவனும் மாலுமியாய் இருக்கலாம். ஆனால் காற்றுங் கடலுங் கொந்தளிப்பாய் இருக்கிறபோதுதான்

மானுபியினுடைய திறமை வெளியாகும். நல்லபொன் புடத்துக்கு நிற்கும். ஆகையால் சிலுவை வரும்போது, நீ எப்படி நடக்கிறாய், சொல்லு. நீ இவ்வுலகத்தில் இருக்கிற உன் ஆஸ்திகளை இழந்துபோகையில், யாரும் உன்னைவிட்டுப் பறித்துக் கொள்ளக் கூடாத பெரிய ஆஸ்தி பரமண்டலத்திலே உனக்கிருக்கிறதென்று நினைக்கிறாயா? கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்துக்குத் தோத்திரமென்று நீயும் யோபோடு கூடச் சொல்லக் கூடுமா.—நோவு உன்னை வாதிக்கையில், வேதனையினாலே முறையிடுகிறாயோ? அல்லது புறம்பாகச் சரீரபெலன் அதினால் எவ்வளவு குறைந்தாலும், உள்ளான மனுஷன் தினந்தினம் அதிகமதிகமாய் வர்த்திக்கிறான் என்று நம்புகிறாயோ.—ஊரைவிட்டு உன்னைத் துரத்தினாலும், தைரியம் விடாமல் மிகவுந் திடமனதாயிருந்து நீ உன் பிறந்தகத்துக்குப் போகிற வழியிலே இன்னம் இருக்கிறாய் என்றெண்ணிக் கொள்ளுகிறாயோ.—சாவு வருகிறதாகக் கண்டால், அருக்களியாமலிருந்து கிறிஸ்து என் சீவன் சாவு என் ஆதாயமென்று பவுல் சொன்னதுபோல சொல்லுகிறாயா.—தொகுத்துச் சொன்னால், தன் சிலுவையை உற்சாகமாய் மேலேற்றுக் கொள்ளுகிறவனே நல்ல கிறிஸ்தவன். அதைப் பொறுமையோடே சுமக்கிறவன் அதிக நல்ல கிறிஸ்தவன். உபத்திரவத்தில் மேன்மைபாராட்டி மகிழ்ச்சியாயிருந்து பராபரனை முழு மனதோடும் தோத்திரம் பண்ணுகிறவன் எல்லாவற்றிலும் நல்ல கிறிஸ்தவன். மெய்தான் தங்கள் சுபாவ வைராக்கிய குணத்தினாலும் உலகத்திலே தங்களுக்கு மகாபெரிய பெயரை உண்டுபண்ணிக் கொள்ள வேண்டுமென்கிற பேராசையினாலும் பற்பல சேதங்களையும் வேதனைகளையும் பொறுமையாய்ச் சகிக்க தைரியசாலிகள் அஞ்ஞானிகளுக்குள்ளேயும் சிலர் இருந்ததுண்டு. ஆனால் அவர்களில் ஒருத்தனும் உபத்திரவத்தில் மேன்மைபாராட்டி சந்தோஷப்படுகிறதற்கான நிலைமைக்கு வந்ததில்லை. இந்த மேன்மை கிறிஸ்தவனுக்கு மாத்திரம் உரியது. மற்றவர்கள் கேடென்கிறதை இவன் பாக்கியமென்று எண்ணிக் கொண்டு, உபத்திரவங்களில் மேன்மை பாராட்டுகிறோமென்று பவுல் அப்போஸ்தலனைப்போல் சொல்லுகிறான். ஏனெனில் உபத்திரவம் பொறுமையையும், பொறுமையோ உத்தமத்தையும், உத்தமமோ நம்பிக்கையையும் உண்டாக்கும். நம்பிக்கையோ வெட்கப்படுத்தாது என்று அறிந்திருக்கிறான். ரோ. ௫, ௩. இதின்படி நீ உன்னைச் சோதித்துப்பார். நீ உபத்திரவப்படுகிற போது எப்போதாகிலும் மனமகிழ்ச்சியாய் இருந்தாயா. நீ எப்போதாகிலும் பராபரனை அந்த உபத்திரவத்



துக்காக ஸ்தோத்திரம் பண்ணினாயா. இப்படி இல்லாவிட்டால் நான் நல்ல கிறிஸ்தவன் என்று உன்னைக் குறித்து பரிச்சேதம் சொல்லாதே. ஆனால் உன்னிடத்தில் இன்னம் உண்டாகாத இந்தக் குணங்களைப் பராபரன் இனிமேலாகிலும் உன்னிடத்தில் உண்டாக்க அவரைக் கெஞ்சி மன்றாடு.

௭௮. தியானம்.

## மெய்க் கிறிஸ்தவனுடைய குணத்தைப் பற்றியது.

எப்போதும் துவக்குகிறதே கிறிஸ்தவனுக்குச் சீவன்.

கிறிஸ்துமார்க்கத்திலே இத்தனை சோம்பலும் அசமந்தமுமாயிருக்கிறது எதினாலே. இன்னம் துவக்கம் முதலாய் உண்டாகாதிருந்தும், முடிந்து போயிற்றென்று நினைக்கிற படியினாலே தான். நான் நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன் என்கிற பவுலின் வாக்கியத்தை வெகுபேர் அவ்வளவு நன்றாய் அறிந்து சாதாரணமாய் வழங்கி வருவது நன்றாய்த் தோன்றுகிறதில்லை. ௨ தீமோ. ௪, ௭. சிலர் பந்தயத்தை அபேட்சிக்கிறார்கள். ஆனால் ஓடுகிறதற்கு இன்னம் சற்றாகிலும் தொடங்கினவர்கள் அல்ல. சிலர் முடிதரித்துக்கொள்ள வேண்டும் என்கிறார்கள். ஆனால் போராடிச் செயிக்க வேண்டிய சத்துருக்களை அவர்கள் இன்னம் கண்ணாலே முதலாய்க் கண்டவர்கள் அல்ல. நம்முடைய கிறிஸ்தவர்கள் தங்கள் கிறிஸ்துமார்க்க ஓட்டத்தைத் துவக்குகிறவர்களாய் மாத்திரம் இருந்து, அப்புறம் எட்டிச் செல்லாமல் தரித்து நின்று விடுவது எனக்குச் சம்மதியல்ல. முடிவிலே அல்லவா முடி பெறுவது. தொடங்கியும் முடிக்காமல் இருக்கிறதை விட கட்டோடே தொடங்காமல் இருக்கிறது தாவிலை. ஆனால் மற்றவர்கள் இன்னம் தொடர்ந்து போய்ப் பிடிக்க வேண்டியதாயிருக்கிறதைத் தாங்கள் பிடித்தாயிற்று என்றும், தாங்கள் குறையற்றுத் தேறினவர்கள் என்றும், தங்களுக்கு அப்புறம் ஒன்றும் தேவையில்லை என்றும், நம்முடைய கிறிஸ்தவர்கள் ஆண்மைகொள்ளாமல் இருந்தால் தாவிலை. ஏனென்றால் இப்படிப்பட்ட ஆணவத்தினாலும் எண்ணத்தினாலும் தான் நிறைவாகராகப் பிரயாசப்பட வேண்டும் என்கிற கவலை கிறிஸ்துமார்க்கத்திலே இல்லாமல், எங்கே பார்த்தாலும் அசமந்தம் நிரம்பிக் கிடக்கிறது. வில்லை விட்டுப் பறிந்த அம்பு துவக்கத்திலே விசையாய் ஓடினாலும்

அது தன் குறிக்குச் சமீபிக்கும்போது ஓட்டமும் விசையும் குறைந்து மெதுவாகிக் கீழே விழுந்துபோம்.

உத்தம கிறிஸ்தவர்கள் முனைமென்னவென்றால், அவர்கள் தாங்கள் ஆக வேண்டிய காரியத்தை இன்றைக்குத்தான் முதல் தொடங்குகிறதுபோல எண்ணி, நிறைவாகமான லக்குக்கு வரும் மட்டும் அதை விடாமல், வெகு சுறுசுறுப்போடே இருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவர்களாகத் தாங்கள் இன்றைக்கு முதல் துவக்கம் பண்ணுகிறவர்களாய் இராமல், அந்த லக்குக்கு முன்னே தாங்கள் கிட்டி வந்தாயிற்று என்று எண்ணுகிறவர்கள், தங்கள் முயற்சி முழுதும் அற்றுப்போகும் வரையில் தளர்ந்து, முற்றும் அயர்ந்து வேசாறிப்போகிறார்கள். வாலிபர் தினந்தினம் வளருகிறார்கள். கிழவரோ குறைந்துபோகிறார்கள். எவன் தான் கிறிஸ்து மார்க்கத்திலே இன்னம் இளந்தை என்றும், வளரவேண்டியவன் என்றும் தன்னை எண்ணுகிறானோ, அவன் எப்போதும் அதிகமாய் அதில் வளரப் பிரயாசப்படுவான். எவன் தான் கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்த்தியின் அளவாய்ச் சேர்ந்த ஒரு புருஷனாகத் தன்னை எண்ணுகிறானோ, அவன் வளராமல் தேய்கிறான். வரவர வயது குறைகிறதே அல்லாமல் ஏறுகிறது இல்லையோ. ஆ, நாம் நிறைவை அடைகிறதற்கு இன்னம் எவ்வளவு தூரம் இருக்கிறது. நமது காலம் எவ்வளவு குறுகினதாய் இருக்கிறது. அதிலும் சேர்ச்சி அடைகிறதற்கு எத்தனை தடைகள் உண்டு. பிசாசும் உலகமும் மாமிசமும் நமது மேல் எவ்வளவாய் ஆவசங் கட்டிக்கொண்டிருக்கிறது. நாம் துவக்கத்தில் எவ்வளவு லகுவாய் அடிக்கடி கீழே விழுகிறோம். ஆகையால் நவமான பிரதிக்கினையையும் நவமான துவக்கத்தையும் தினந்தோறும் பண்ணாவிட்டால், நாம் தொடங்கின நற்கிரியைகளை முடிப்பதெப்படி. கர்த்தருடைய செபத்தைத் தொடங்கி, பரமண்டலங்களில் இருக்கிற என்று சொல்லுமுன்னே வீண் நினைவுகள் வந்து விடுகிறதே. அப்போது நீ அதை முற்றும் சொன்னாலும், உனக்குள்ளே தோன்றின வீண் நினைவுகளும் கடவுளுக்கு முன்பாகக் கொண்டுவருகிறதுபோலே ஆயிற்று. அது அவருக்குப் பிரியமாகிறது எப்படி. அவருக்குப் பிரியம் இல்லை என்று அப்புறம் சொல்லாமல் வியந்துபோகிறதா, அல்ல. அப்போது நீ அதைத் தொடங்கி காரியம் என்ன. என் யோசனை என்னவென்றால், வீண் நினைவுகளைத் துரத்தி விட்டு, மறுபடியும் அந்தச் செபத்தைத் தொடங்கு என்பதே. நான் கர்த்தருடைய செபத்தை நல்ல பத்தியோடே சொல்லி முடிக்கும் முன்னே, சில வேளை அதை இருபது விசை திரும்



பித் தொடங்கி சொல்ல வேண்டியதாயிற்று என்று நான் சொல்லுகிறதை நம்பு. இடைவிடாமல் துவக்கம் பண்ணுகிறதே கிறிஸ்தவனுக்கு உயிர்போலாகும். தொண்ணூற்றொன்பது நல்ல நினைவும் நல்ல கிரியையும் என்னிடத்தில் ஒருமித்து கூடியிருந்தாலும், இன்னம் ஒன்று எனக்குக் குறைச்சலாய்த் தானே இருக்கிறது. அதாவது: என்னையே முற்றிலும் வெறுக்கிறதென்பதாம். நான் உயிரோடு இருக்கும் நாள் எல்லாம் அதைத் தேட வேண்டும். எந்தமட்டும் இந்தக் குறைச்சலை என்னிடத்தில் காண்கிறேனோ, அந்தமட்டும் என்னை வெறுக்கத் திரும்பவும் நவமாய்த் துவக்கம் பண்ணப் பிரயாசப்பட வேண்டும்.

## எகூ. தியானம்.

# கிறிஸ்தவனுடைய வளர்த்தியைப் பற்றியது.

*தரித்து நிற்றல் பின்வாங்குதலாம்.*

உலகத்திலே வளர்த்திக்கும் குறைந்துபோகுதலுக்கும் நடுத்தரமான ஒரு நிலைமை உண்டு. பன்னிரண்டு வயது பிள்ளைக்குப் பெலன் வளருகிறது. எழுபது வயது கிழவனுக்குப் பெலன் குறைகிறது. நாற்பது ஐம்பது வயது மனிதனுக்குப் பெலன் ஏறாமலும் குறையாமலும் நடுத்தரமாயிருக்கிறது. கிறிஸ்துமார்க்கத்திலே இப்படி இல்லை. பாவம் குறையாவிட்டால், அது வளர்ந்துகொண்டே இருக்கிறது. நீ தினந்தினம் உன் பாவேஷ்டத்தைச் சிறுமையிலே அறைந்து கொன்று போடாவிட்டால், அது வரவர துணிகரங்கொண்டு, தன் இச்சையிலே பெலத்துப்போய், உன்னை மேற்கொண்டு, உனக்கு உண்டாயிருந்த நன்மைகளைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கெடுத்துக்கொண்டுபோகிறது. பாவஞ் செய்கிறதற்கு மனது மாத்திரம் உனக்குள்ளே உண்டாகத் தொடங்கினால், உடனே அது தன் இன்பத்தினால் உன் இருதயத்தைத் தன் வசப்படுத்திக்கொள்ளுகிறது. அதினால் பாவஞ் செய்வதற்கான ஆசை ஆற்றிலே வெள்ளம் ஏறுகிறதுபோலே உன் இருதயத்தில் பெருகி, கன்னக்கிராந்தி சதையைத் தின்றுகொண்டு போவதுபோல, அது உன் இருதயத்தை அரித்துக்கொண்டு போகும். ஒரு ருசியான பதார்த்தத்தைத் தின்னத் தின்ன ஆசை உண்டாகிறதுபோல, பாவம் செய்யச் செய்ய அது ருசிக்கும். அதை முன்னே பதம் பார்க்காதபடிக்குத் தன்னைக் காக்காமல் போனால், பாவம் வரவர மதுரமாகும். ஏனென்

ருல் பாவம் சகலவித இச்சையையும் உண்டாக்குகிறது. ரோ. எ, அ. வயது ஏற ஏற பண ஆசையும் ஏறுகிறதென்ற பழமொழியின்படி இதுவும் ஆகிறது.

இதற்கு எதிரிடையாக எங்கே நற்குணம் வர்த்தியாமல் இருக்கிறதோ, அங்கே அது குறைந்துகொண்டே வரும். நற்குணத்தின் வித்து நம்மிடத்திலே ஒரு சிறு பொறிபோலே இருக்கிறது. அதின்மேல் உமியையும் கரியையும் போட்டு ஊதாவிட்டால், அவிந்துபோம். நற்குணத்தின் வித்து விளக்கிலே இருக்கிற திரிக்கும் ஒப்பாயிருக்கும். அதற்கு எண்ணெய் வார்த்து எரிக்காவிட்டால், சீக்கிரத்தில் அவிந்துபோகும். ஒரு இளங்கன்றைப்போலும் இருக்கிறது. அதற்குத் தண்ணீர் வார்த்துக் காப்பாற்றாவிட்டால், வளராமல் சுருக்கிலே பட்டுப்போகும். இடியப்போகிற ஒரு பழைய வீட்டிற்கும் ஒப்பாயிருக்கிறது. அதை அடிக்கடி திருத்திப் பழுது பார்க்காவிட்டால், ஒருமிக்க விழுந்துபோகும். இப்போது பிறந்த பிள்ளைக்கும் ஒப்பாயிருக்கிறது. தினந்தினம் தாய் முலைப்பாலால் புதுப்பெலன் உண்டுபண்ணாவிட்டால், இளைத்துப்போகிறது. அப்படிப்போல நற்குணத்தின் வித்துப்போய்விடும்.

ஆகையால் நாம் வரவர பூரண சற்குணமுள்ளவர்களாகப் பார்க்க வேண்டும். நாம் ஞான மரங்களைப்போலே எப்போதும் ஓங்கி வளர்ந்து திரளான கனிகொடுக்க வேண்டியது. நாம் நவமான மனுஷன் அடைவாய் எப்போதும் பெலத்திலே வர்த்தித்து, வரவர வயதிலே ஏற வேண்டும். ஞான வழிப்பயணக்காரராக எப்போதும் அப்புறப்பட்டு, நம்முடைய லக்குக்கு அதிகமாய்க் கிட்டிப்போய்ச் சேரப் பார்க்க வேண்டும். மனுஷரில் குறையற்றவனாயிருக்கிறவன் உண்டா என்று சொல்லி உன்னையே ஏய்க்கிறதினால் காரியம் ஆகாது. கிறிஸ்தவனே, நீ அடையவேண்டிய பூரண சற்குணத்தை நீ இன்னம் அடையாததற்காகக் கஸ்திப்பட்டு, அதை அடையும்படி பிரயாசப்படவேண்டும். நீ குறையற்றவனாகக் கூடாதிருந்தாலும், குறையற்றவனாக மனது உள்ளவன்போல சகல பெலத்தோடே அதற்காகப் போராடு. கிறிஸ்தவனுடைய வளர்ச்சி பெரியகாரியம். உன் விசுவாசமும் தேவபக்தியும் வளராமல், எப்போதும் ஒரு சிறு பொறியத்தனையாகத் தானே இருந்தால், அது அசுப்பிலே ஒருமிக்கத் தன்னாலே அவிந்துபோம் என்று பயப்பட வேண்டும். பெர்னார்து சொன்னதை எப்போதும் நினைவுகூருகிறேன். அதாவது: இன்னம் நல்லவனாக வேண்டும் என்று விரும்பாதவன் பரிச்சேதம் நல்லவன் அல்ல. நீ அதைத் தொடங்கியும்,



நல்லவனாகிறதில் அதிகரிக்க மனதில்லாமல் போனால், நல்லவனாயிருக்கிறதை நீ கட்டோடே நிறுத்திப்போடுகிறவனாயிருக்கிறாய் என்கிறார்.

௭௧. தியானம்.

## விசுவாசத்தின் ருசுவைப் பற்றியது.

உன் கண் உன்னைக் காணும்படிப் பேசு.

ஆ, உலகம் எவ்வளவு ஏமாற்றுகிறது. அது காது கேட்கத் திரம்பப் பேசுகிறது. கண் காண ஒன்றுஞ் செய்கிறதில்லை. சொல்லுகிறது அதிகம், செய்கிறது மெத்தக் கொஞ்சம். இது பெரியவர்களுக்குள்ளும் சிறியவர்களுக்குள்ளும் மெத்த வாடிக்கையாயிருக்கிறது.

நான் கிறிஸ்தவன், பிதாவாகிய பராபரன் பேரிலும் என் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பேரிலும் விசுவாசிக்கிறேன்; என் பிறனைச் சிநேகிக்கிறேன் என்று சொல்லுகிறாய். அந்தச் சொல்லைக் கேட்கிறேன். ஆனால் அப்படிச் செய்கிறது எங்கே. என் கிரியையைப் பார்க்க என் வார்த்தை அதிசமாய்ச் சொல்லுகிறது உண்டானால், எனக்கு ஐயோ, எனக்கு மோசம் என்று அஞ்ஞானியாயிருந்த சிசேரோவுங் கூடச் சொல்லுகிறானே. என் நல்ல கிறிஸ்தவனே, உன் வார்த்தை மாத்திரம் உனக்காகப் பேசி, உன் கிரியை அதற்கு ஒத்துப்பேசாமல் இருந்தால், உனக்கு எத்தனை மோசம். உன் நடக்கை பேசட்டும், அப்போது ஒத்துக்கொள்ளுவேன். வாய் பேசி, கை அசையாமல் இருக்கிறதை விட, கை உரக்கப் பேசி, வாய் ஊமையாயிருக்கிறது உத்தமம். ஒருவன் கறுப்பாய் இருக்கிறான் என்பதை உன் கண் பார்க்கையிலே, நான் கறுப்பல்ல, வெள்ளை என்று அவன் உன்னோடே சொன்னால், நீ ஒத்துக்கொள்ளுவாயா? பராபரன் என் தகப்பன் என்று விசுவாசிக்கிறேன் என்று நீ சொல்லுகிறாய். ஆனால் நீ பிள்ளைக்கொத்த பட்சம் நம்பிக்கை பயம் கீழ்ப்படிதலோடே அவருக்கு முன்பாக நடக்கிறதைக் காணேம். ஆகையால் நான் உன் பேச்சை நம்புகிறதில்லை என்பது நியாயமோ, அல்லவோ. இயேசுநாதர் என்னைப் பாவத்திலும் மரணத்திலும் நின்று மீட்டு இரட்சித்தார் என்று நான் விசுவாசிக்கிறேன் என்கிறாய். சொல் நன்றாய் இருக்கிறது. ஆனால் நான் காண்கிறதென்ன. நீ பாவத்துக்கு ஊழியஞ் செய்கிறதையும், அதினால் உன்னை மரணத்துக்கு உட்படுத்து

கிறதையும் காண்கிறேன். பாவத்தை விட்டு நீங்கலடிகிறதும், பாவத்துக்கு ஊழியஞ் செய்கிறதும் பொருந்தியிருக்கிறது எப்படி. மரணத்தினின்று இரட்சிக்கப்படுவதும், மரணத்துக்குத் தன்னை ஒப்புவிக்கிறதும் ஒத்திருக்குமா. நான் என் பிறனைச் சிநேகிக்கிறேன் என்கிறாய். அது மெய்யாயிருந்தால், நீ செய்கிறது நல்ல காரியமே. ஆனால் அவனுடைய ஆத்தும சரீர இடுக்கண்களுக்காக உன் மனதிலே சற்றுகிலும் உருக்கம் இல்லை என்கிறதை எத்தனைதரம் பார்க்கிறேன். உன் பிறன் துக்கப்பட்டால், நீ ஒரு ஆறுதலான வார்த்தையும் அவனுக்குச் சொல்லுகிறதில்லையே. அவன் வழி தப்பித் திரிகிற போது, நீ அவனைச் சரியான வழியில் நடத்துகிறதில்லையே. உன் கண் முன்னே அவன் பாவஞ் செய்கிற போது, நீ அவனைக் கடிந்துகொள்ளாமல் போகிறாயே. அவன் பசித்தாகம், நிர்வாணத்தோடே இருக்கும் போது, நீ அவனுக்கு அன்னவஸ்திரங் கொடாமல் இருக்கிறாயே. அவன் வியாதிப்படுகிறான், நீ அவனைப் போய்ப் பார்க்காமல் இருக்கிறாயே. நேசனே, என் கண் உன்னைக் காணப் பேசு. உன் விசுவாசத்தைக் காட்டு. உன் சிநேகத்தைக் கிரியையிலே வெளிப்படுத்து. மரத்தைக் கனியினாலும், வார்த்தையைக் கிரியையினாலும் சோதித்து அறிய வேண்டும் என்று அறியாயோ. என் கண்ணும் காதும் நிறைந்தாலே அல்லாமல், நான் நம்பமாட்டேன். நீங்கள் உங்களை ஆசாரியர்களுக்குக் காண்பியுங்கள் என்பது கர்த்தருடைய கற்பனை. லூக். ௰௭, ௰௪. ஆகையால் கிரியைகளினால் உன்னைக் காண்பி. மற்றப்படி நான் உன்னை நம்பேன். பராபரன் நம்மை வார்த்தையினாலே மாத்திரம் அல்ல, கிரியையினாலேயும் சினேகம் பண்ணியிருக்கிறபடியால், நாமும் அவருக்குச் செலுத்தும் சங்கை வெறும் வார்த்தையினால் மாத்திரமல்ல, கிரியையினாலும் உண்டாயிருக்க வேண்டுமென்று கிறிசொஸ்தொமு என்பவர் சொல்லுகிறார்.

நான் பேசுகிறது போலும் செய்வேன். என் சொல்லைச் செய்கையினாலே உறுதிப்படுத்துவேன். இப்படி இயேசுகிறிஸ்து பராபரனுக்கும் சகல சனத்துக்கும் முன்பாகச் செய்கையிலும் வார்த்தையிலும் வல்லமையுள்ளவரென்று சீஷர்கள் அவர் உயிர்த்தெழுந்த நாளிலே அவரை மகிமைப்படுத்தினார்கள். லூக். ௨௪, ௰௯. செய்கை வார்த்தையை நிசமாக்கிப் பலப்படுத்துகிற படியினால், செய்கை வார்த்தைக்கு முன்னே சொல்லியிருக்கிறது. பராபரனுடைய கிருபையினாலே நானும் அப்படிச் செய்வேன்.



௮௰. தியானம்.

## பராபரன் மனிதரைச் சிநேகிக்கும் சிநேகத்தைப் பற்றியது.

*எல்லாவற்றைப் பார்க்கிலும் அதிகமாய்ச் சிநேகிக்கப்பட்டவன்.*

அவன் யார்? மனிதனைத் தவிர வேறொருவரும் இல்லை. எல்லாவற்றிலும் உத்தம பொருளாகிய பராபரனை நாம் எல்லாவற்றிற்கும் மேலாகச் சிநேகிக்க வேண்டும். ஆனால் ஆர் அப்படிச் செய்கிறது. நீ எல்லாவற்றையும் பராபரனையும் பார்க்க உன்னைச் சிநேகிக்கிறாய்: ஏனென்றால் நீ பராபரனிடத்தில் பராபரனுடையதை அல்ல, உன்னுடையதையே தேடுகிறாய். அவருடைய சனத்தை அல்ல, உன்னுடைய நன்மையைத் தேடுகிறாய்.

பராபரன் எல்லாவற்றையும் பார்க்க உன்னைச் சிநேகிக்கிறார். சகல தேவதூதரையும் பார்க்க உன்னைச் சிநேகிக்கிறார். நீ பராபரனுடைய சிஷ்டிகள் எல்லாவற்றிலும் உத்தமமான வஸ்துவாயிருக்கிறாய். நீ பராபரனுடைய பிள்ளை என்று அழைக்கப்படுகிறாய். தேவதூதரில் யாருக்கும் இந்தப் பேர் இல்லை. தேவதூதர் ஊழியக்காரரென்று சொல்லப்படுகிறார்கள். எபிரே. ௧, ௰௪. ஊழியக்காரரைவிடப் பிள்ளைகள் பெரியவர்கள் அல்லவா. நீ கிறிஸ்துவின் சகோதரனும் பராபரனுடைய ஆத்துமாவுமாயிருக்கிறாய். இப்படித் தேவதூதரைப் பற்றி எங்கே சொல்லியிருக்கிறது. சம்மனசு இரட்சகரைத் தோத்திரிக்கிறது; நீயோ உன் இரட்சகரைத் தோத்திரிக்கிறாய். சங்கீ. ௱௩. உன் என்கிற வார்த்தையினாலே வான பூமியினால் வரும் சகல வரத்தைப்பார்க்கிலும் நீ அதிக வரத்துடைய ஐசுவரியவானாயிருக்கிறாய். தேவதூதர் பராபரனுக்கும் உனக்கும் பணிவிடை செய்கிறவர்கள். நீயோ ஒரு தேவதூதனுக்கு அல்ல, பராபரனுக்கு மாத்திரம் ஊழியஞ் செய்கிறவன். ஒரு சம்மனசு அல்லது சம்மனசுக்குச் சொந்தமானது ஆகிலும் பராபரனுடைய வலது பாரிசத்திலே உருக்கார்ந்திருக்கிறதில்லை. நீயோ என் மாமிசமும் என் இரத்தமும் பராபரனுடைய வலது பாரிசத்திலே உருக்கார்ந்திருக்கிறதென்று சொல்லக் கூடும். கிறிஸ்துவுக்கு மகிமையாக நான் ஒரு துளி இரத்தம் சிந்தினேன் என்று ஒரு சம்மனசும் தன்னை மெச்சிச் சொல்லக் கூடாது. ஆனால் நீ பவுலோடே கூட, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அச்சடையாளங்களை என் சரீரத்தில் சுமந்துகொண்டிருக்கிறேன் என்று நீ உன்னைக் குறித்து மேன்மை பாராட்டிச் சொல்ல

லாம். கலாத். ௯, ௰௭. இப்படியாகப் பராபரன் சம்மனசுக்கள் எல்லாரையும் பார்க்க உன்னைச் சிநேகிக்கிறார்.

பராபரன் தம்மைப் பார்க்கிலும் உன்னை அதிகமாய்ச் சிநேகிக்கிறாரா. ஆம், அது உள்ளதுதான். அப்படியே பராபரன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அவர் பேரில் விசுவாசிக்கிறவன் எல்லாம் கெட்டுப்போகாமல், நித்திய சீவனை அடைவதற்காகத் தந்த அத்தன்மையாய் லோகத்தைச் சிநேகித்தார். யோவா. ௩, ௰௬. ஒரு உடைமையை ஆயிரம் வராகனுக்கு அல்லது அதற்கு அதிகமாய் வாங்கினால், அந்த உடைமை மேலே உனக்கு விருப்பம் இருக்குமோ, அல்லது அந்தப் பணத்தின் மேலே இருக்குமோ, சொல்லு. அந்த உடைமை மேலே உனக்கு விருப்பம் அல்லவா. மற்றப்படி அவ்வளவு பணம் அதற்குக் கொடுக்க மாட்டாயே. இப்போதும் பராபரன் உன்னைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளத் தம்மைத் தாமே விலையாகக் கொடுத்திருந்தால், மிகுந்த பட்சம் ஆர் மேலே இருக்கிறது; உன் பேரிலேயோ, தம்முடைய பேரிலேயோ? உன் பேரிலே தானே என்கிறேன். பராபரன் எல்லாவற்றிற்கும் மேலாய் உன்னைச் சிநேகிக்காவிட்டால், உன் நிமித்தமாக இந்தக் கஸ்திவேதனைகளை எல்லாம் சகிப்பார் என்று நீ நினைக்கிறாயா. ஆ, நீ இதற்காகச் சந்தோஷப்படு. உலகம் உன்னைச் சிநேகிக்காவிட்டாலும், பராபரன் உன்னைச் சிநேகிக்கிறார். சர்வலோகத்தையும் பார்க்க அவர் உன்னைச் சிநேகிக்கிறார். இதுவே உனக்குப் போதும் என்று இரு. ஆனால் அவருக்கு வதில் பட்சம் காண்பிக்க வேண்டுமென்கிறதையும் நீ நினை. தம்மைப் பார்க்கிலும் உன்னைச் சிநேகிக்கிறவரை நீ உன்னைப் பார்க்கிலும் சிநேகிக்க வேண்டும். நீ உன்னை விட்டுவிடு. அப்போது பராபரனைக் கண்டடைவாய்.

௮௧. தியானம்.

## ஒரு கிறிஸ்தவன் பண்ணுகிற மரண சாதனத்தைப் பற்றியது.

உன் வீட்டுக்குப் பண்ண வேண்டிய திட்டங்களைச் சட்டமாய் பண்ணு; ஏனெனில் நீ பிழைக்காமல் மரிப்பாய். எசாயா ௩௮, ௧.

நான் ஆயத்தமாயிருக்கிறேன். என் மரண சாதனம் எழுதியாயிற்று என்பதற்காகப் பராபரனுக்கு ஸ்தோத்திரம். பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவே, என்னைப்படைத்தவரே, உமக்கு என் ஆத்துமத்தை எழுதி ... ... ...



அதை எனக்குக் கொடுத்தீர். நான் அதை உமக்குத் திரும்பக் கொடுக்கிறேன். என் சொந்தம் அல்லாத பொருளை என் இஷ்டப்படி மற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடாதே. உமது கைகளில் அது எல்லாவற்றையும் பார்க்கப் பத்திரமாய்க் காக்கப்பட்டிருக்கும். பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று என் இரட்சகர் எனக்குப் போதித்த ப...ணும் சொல்லுகிறேன். லூக். ௨௩, ௪௬.

...என்னை மீட்டு இரட்சித்த என் சகோதரரான இயேசுவே, உமக்கு என் பாவத்தை எழுதி வைக்கிறேன். ஆ, லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற பராபரனுடைய ஆட்டுக்குட்டியே, அதை உம்முடைய மேல் எடுத்துக்கொள்ளும். என் பாவம் என்றைக்கும் நினைக்கப்படாத படிக்கு கடல்போல் ஆழ்ந்த உமது காயங்களில் இதை எறிந்துபோடும்.

என் இருதயத்துக்குத் தேற்றரவு வருவிக்கும் பரிசுத்த ஆவியே, நீர் பரம முசிப்பாறுதலால் என்னை அதனை விசை முசிப்பாற்றினீரே. உமக்கு என் சீவனின் கடைசி மூச்சை எழுதி வைக்கிறேன். என் பேச்சு ஒடுங்கும் வேளையில் நீர் சொல்லுக்கடங்காத பெருமூச்சுகளால் எனக்காகத் தேவசந்நிதிக்கு முன்னே வேண்டுதல் செய்துவாரும். என் காது இனி கேளாத வேளையில் என் மனதுக்குத் திடன் சொல்லும். என் கண்ணொளி மங்கும்போது, நான் மரண நித்திரையிலே அகப்பட்டுப்போகாதபடிக்கு என் கண்களைப் பிரகாசிப்பியும்.

என்னைக் கைகளில் ஏந்திக்கொண்டிருந்த தேவதூதரே, நான் என் பாவத்துக்காகத் தினம் அழுது விடும் கண்ணீரை உங்களுக்கு எழுதி வைக்கிறேன். இத்தாலே உங்களை முசிப்பாற்றுங்கள். நான் அழும்போது நீங்கள் மகிழுகிறீர்கள் என்றும், குணப்படும் பாவியின் பேரில் பரமண்டலத்திலுள்ள உங்களுக்கு முன்பாகச் சந்தோஷம் உண்டென்றும் அறிவேன்.

பிசாசே, உனக்கும் ஏதாகிலும் வேண்டுமா. நல்ல மனதோடே செய்யப்படாத நற்கிரியைகளை எல்லாம் உனக்குத் தருகிறேன். அத்தோடே நீ நட.

பூமியே, நீ என் தாய். நீ வெகு வருஷமாய்ப் பராபரனுடைய கிருபையினால் என் சரீரத்தைப் பராமரித்தாயே. அதற்காக உனக்கு இந்தச் சரீரத்தைத்தானே கொடுத்து விடுகிறேன். தாய் தானே பிள்ளையைப் புதைக்கும் இடமானால், எனக்கென்ன. நிருவாணமாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து புறப்பட்டேன், நிருவாணமுமாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன். யோபு ௧, ௨௧. என் சவத்தைக் குறித்து ஆடம்பரம் பண்ண வேண்டாம்.

பெண்சாதியே, உனக்கு ஒரு புருஷனை வைக்கிறேன். கைம்பெண்சாதிக்கு நியாயஞ் செய்கிறவர் என்று அவருக்குப் பெயர். பூமியிலே உனக்கு நியாயங் கிடைக்காதே போனால், அவருக்கு மாத்திரம் உண்மையாய் இரு. அவர் உனக்கு நியாயங் கிடைக்கும்படி செய்வார். வறுமையிலே உனக்கு ஆதரவும், இடுக்கத்தில் உனக்கு அடைக்கலமும், துக்கத்திலே உனக்கு ஆறுதலுமாய் இருப்பார். நீ அவரை நம்பியிரு. அப்போது உலகம் உனக்கு மனமடிவு வருவிக்க மாட்டாது. தாய்தகப்பன் இல்லாத பிள்ளைகளுடைய விண்ணப்பத்தையும், கைம்பெண்சாதியின் அங்கலாய்ப்பையும் அசட்டைபண்ணார். அவர்கள் கண்ணீர் கன்னத்தின் வழியாய் ஓடும் போது, அவைகள் ஓடும்படி பண்ணினவனுக்கு விரோதமாக அவைகள் கூப்பிட்டுக்கொண்டே இருக்கும். சீராக். ௩௫, ௰௫-௰௯.

என் பிள்ளைகளே, என்னைவிட அதிக உத்தமமான ஒரு தகப்பனை உங்களுக்குக் குறித்து வைக்கிறேன். அவர் பரமண்டலங்களிலும் பூமியின்மேலும் உள்ள இனக்கூட்டம் அனைத்துக்கும் நாமகாரணர். எபேசி. ௩, ௰௫. தாய்தகப்பனற்றவருக்கும் தகப்பனாயிருக்கிறவர் உங்களுக்கும் தகப்பனாயிருப்பார். காக்கைக் குஞ்சுகளைப் பராமரிக்கிறவர் உங்களைப் பராமரிக்காமல் இருப்பாரோ. ஆனால் என் பிள்ளைகளே, உங்கள் தகப்பன் சொல்லுகிறபடியே கேளுங்கள். உண்மையாய்க் கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள். உத்தமமாய் அவரை அண்டிக்கொண்டிருங்கள். நீங்கள் பராபரனுக்குப் பயப்படவும், அவரை முழு மனதால் நம்பவும் அவர் கற்பனைப்படிச் செய்யுங்கள். தோபியா. ௪, ௫. ௰௯. அப்போது பூமியிலே உங்களுக்கு நன்மை வரும்.

சிநேகிதரே, நல்ல சிநேகிதராகிய கிருபையுள்ள பராபரனை உங்களுக்கு வைத்திருக்கிறேன். நீங்கள் பராபரனை விடாதேயுங்கள், அப்போது அவர் உங்களையும் விடார்.

என் ஆதிகளே, நான் பரமண்டலத்திலே உங்களை இடைவிடாமல் நினைத்து, உங்களுக்காக வேண்டிக்கொள்ளுவேன். நீங்கள் என்னையும் என்னுடையவர்களையும் மறந்துவிட்டாலும், நான் உங்களை ஒருக்காலும் மறவேன்.

ஏழைகளே, உங்களுக்கு ஐசுவரியமுள்ள பராபரனையும் விசுவாசமுள்ள செபத்தையும் பின்வைத்துப் போகிறேன். வேறே ஒன்றும் எனக்கு இல்லை. என் ஆஸ்தி எல்லாம் எங்கே போயிற்று என்று கேட்கிறீர்களோ. பொன்னும் வெள்ளியும் எனக்கு இல்லை. நான் அதுகளை வைத்



திருந்தால், அது எனக்கு கனஈனம் தானே. பராபரனுடைய ஊழியக்காரர் மீத்துவைக்கிறதெல்லாம் ஏழைகளைச் சேர வேண்டும். நானோ உங்களுக்குப் பரமண்டலத்தில் பொக்கிஷங்களைக் கட்டிவைத்திருக்கிறேன். பராபரன் கருதியான காலத்திலே அவைகளை உங்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பார். இதுதான் என் மரண சாதனம். இனிமேல் பராபரனுக்குப் பிரியமான வேளையில் என் கண்களை மகிழ்ச்சியோடே மூடுவேன்.

௨. தியானம்.

## கண்களினால் வரும் இடறலைப் பற்றியது.

### உன் இருதயம் உன்னை மோசம் போக்குகிறது.

நீயும் உன் இருதயத்தை மோசம் போக்குகிறாய். இப்படி இரண்டும் சமமாக இருக்கிறது. நான் என் இருதயத்தை எதினாலே ஏய்க்கிறேன் என்று கேட்கிறாயா. கண்களினாலே தானே. வண்டில் குதிரையைப் பின்பற்றுகிறதுபோலே, இருதயம் கண்ணைப் பின்பற்றுகிறது. இருதயம் கண்களைப் பின்தொடருகிறதென்று யோபு என்பவர் சொல்லுகிறார். யோபு ௩௧, ௭. கண் இருதயத்து வாசல். அந்தக் கண் வழியாய்ப் பாவம் இருதயத்தில் உட்படுகிறது. ஆம், கண் பாவம் இருதயத்திலே உட்படும் வாசலாயிருக்கிறதும் அல்லாமல், அது பாவத்தை உள்ளே கொண்டுபோகிற எத்தனமாகவும் இருக்கிறது. உன் ஆதித்தாயாராகிய ஏவாளுக்கு நடந்ததெப்படி. விலக்கின மரத்தின் கனி போசனத்துக்கு நல்லதென்று அவள் கண்டபோது, அதின் கனியில் அறுத்துப் புசித்தாள். ௧ மோசே ௩, ௬. அப்போது சாவு அவளுடைய பலகணிகளில் ஏறி உள்ளே விழுந்தது என்கிற பெயர் உண்டாகிறது. எரேமி. ௯, ௨௧. மேலும் அவள் பின்னடியாருக்கும் நடந்ததென்ன. அவர்கள் மனுஷருடைய குமாரத்திகளை அவர்கள் சவுந்தரியமுள்ளவர்கள் என்று பார்த்து, தாங்கள் தெரிந்துகொண்ட அனைவரிலும் பெண்களைக் கொண்டார்கள். ௧ மோசே ௬, ௨. கொலைபாதகனை நீ எங்கே சுமந்துகொண்டிருக்கிறாய்? கண்களிலே தான். இப்படிச் சில செந்துக்களும் கூடத் தங்கள் விஷத்தைக் கண்ணிலே வைத்துக்கொண்டிருக்கிறது. விபசாரக்காரனை நீ எங்கே சுமந்துகொண்டிருக்கிறாய்? கண்களிலே தான். விபசாரத்தால் நிறைந்த கண்கள் உள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்று வேதம் சொல்லு

கிறது. ௨ பேது. ௨, ௰௪. ஒரு கண் சேதப்பட்டுப்போன ஒருவனுக்காக அவன் சிநேகிதர் கூடி அழுதுகொண்டிருக்கையிலே, அவன் அதைக் கண்டு: என்ன, இழந்துபோன கண்ணுக்காக அழுகிறீர்களோ என்று கேட்டு, அற்றுப்போன சத்துருவை விட இன்னம் ஒட்டிக்கொண்டிருக்கிற சத்துருவுக்காக அழுகிறதே உத்தமம் என்று அவன் சொன்னான். அந்தச் சொல் நிசம். உன் கண் உனக்கு மகா பொல்லாத சத்துரு. அது இருதயத்தையும், இருதயம் உன்னையும் மோசம் போக்குகிறது. கண்ணாலே பார்த்து விழுகிறாய். அநேக விசை நீ பார்க்கிறதற்காக எவ்வளவாய் அழவேண்டியிருக்கிறது! கண்ணாலே வரும் சேதம் மகா பெரிதாமே. ஆதலால் கண்ணால் சேதம் உண்டாகிற நேரம் மிகவும் குறையும்படியாக மகா ஞானத்தோடே ஏற்பட்டிருக்கிறது. எப்படியென்றால், தாயின் வயிற்றிலே கடைசியிலே உருவாகிறது கண். மரணநேரத்திலே முதலில் மங்கிப்போகிறதும் கண்தான். இதின் நிமித்தமும் பராபரன் கண்ணை எவ்வளவு பத்திரமாய் மூடி வைத்திருக்கிறார். ஆதலால் அதை வீணாக அலைய விடாதே. இருதயத்திலே ஆகாத இச்சையை எழும்பப்பண்ணுகிற எல்லாவற்றுக்கும் உன் கண்ணை விலக்கமாய்க் காக்க வேண்டும். உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப்பிடுங்கி எறிந்துபோடு. ஏனென்றால் இரண்டு கண்ணுடையவனாய் எரி நரகத்திலே தள்ளப்படுவதைப்பார்க்க ஒற்றைக் கண்ணனாய்ச் சீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். மத். ௰௮, ௯. கண்ணைக் காப்பாற்றுகிற நிமித்தம் சரீரத்தை எல்லாம் கெடுத்துப்போடுகிறதிலும், சரீரத்தை எல்லாம் காக்கிற நிமித்தம் கண்ணை மாத்திரம் பிடுங்கிக்கொள்ளுகிறது நலமாயிருக்கும். ஆகையால் பாவமான இச்சையை நிறைவேற்றுகிறதினால் தன்னையே நரக நெருப்பிலே அமிழ்த்துகிறதை விட, ஆகாத இச்சைகளுக்கு இடங்கொடாமல் அவயவங்களை அடக்கி, இந்தச் சிநேகிதர்களைப் போகவிடுகிறது எல்லாவற்றிலும் உத்தமம் தானே. இதின் நிமித்தமாக விலக்கப்பட்ட காரியங்களைப் பார்க்கிறதற்கு ஆகாத இச்சைகள் என்னை ஏவினால், விலக்கப்பட்ட காரியங்களை அநுபவிக்கிறதற்கு உதவியான கண் இல்லாதவனைப்போலே செய்வேன். என் கண்ணைப்போல நேசிக்கும் சிநேகிதன் பாவத்துக்கு என்னை ஏவினால், அவன் சொற்படி கேளாமல், எனக்குச் சிநேகிதன் இல்லை என்கிறதுபோலே அது காரியத்தில் நடந்துகொள்ளுவேன்.



## ௮௯. தியானம்.

## தன்னையே சிநேகிக்கிறதைப் பற்றியது.

*நீ உனக்குத் தானே அடுத்தவன் அல்ல.*

ஏனென்றால் உன்னை வெகு குறைவாய்ச் சிநேகிக்கிறவன் உன்னைவிட வேறொருவனும் இல்லை. அதை நானே ஒப்புவிப்பேன். சிநேகம் அடுத்தவனுக்குப் பொல்லாப்பைச் செய்யாதென்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார். உரோமர் ௰௩, ௰. சேதம் வருவிக்கிற எவனும் சிநேகிக்கிறவன் அல்ல. எத்தனைக்குச் சேதப்படுத்துகிறானோ, அத்தனைக்குச் சிநேகக் குறைச்சல் அதிகமாயிருக்குமே. இப்போதும் உனக்கு மகா பெரிய சேதத்தை வருவிக்கிறது ஆர்? பிசாசோ? அது சேதம்பண்ணக் கூடுமோ? ஒரு மயிரை முதலாய்ச் சேதப்படுத்தக் கூடாது. மரணமோ? கொடுக்கு முறிந்த தேள் பூச்சி கொட்டக் கூடுமோ. மரணமே, உன் கூர் எங்கே. ௧ கொரி. ௰௫, ௫௫. உலகமோ? உனக்குச் சொந்தமானது ஒன்றும் உனக்கு இல்லாதிருக்கையிலே, அது உன்னிடத்திலிருந்து எதைப் பிடுங்கிக் கொள்ளப்போகிறது. நீயே உனக்கு மகா பெரிய சேதங்களை வருவிக்கிறவனாய் இருக்கிறாய். நீ ஆஸ்திக்காரனாயிருக்கக் கூடுமானாலும், போதும் என்கிற மனது உனக்கு இல்லையே. பரலோகத்திலே உனக்காகப் பொக்கிஷங்களைக் கூட்டிவைக்க வேண்டும் என்கிற மனதும் உனக்கு இல்லையே. நீ பெரிய தனத்தோடும் மகிமையோடும் இருக்கிறதற்கு இடமானாலும், உன் ஆகாத சுபாவகுணங்களை அடக்கி ஆளாமலும், கிறிஸ்து இயேசுவினிடத்திலே உனக்கு உண்டான மகிமையைப் பெரியதாக எண்ணாமலும் இருக்கிறாய். நீ எப்போதும் சந்தோஷமாய் இருக்க இடம் இருந்தும், நீ உன்னையே சஞ்சலப்படுத்தி, முகாந்தரம் இல்லாமல் உன் மனதை வாதித்து, அரித்துப்போடுகிறாயே. நீடிய ஆயுசு உள்ளவனாய் இருக்க இடம் இருந்தும், பாவங்களால் உனக்கு நீ தானே கொலைபாதகனாகி, காலம் வரும் முன்னே உன்னைக் கொன்று போடுகிறாய். நீ மோட்சம் அடையக் கூடியதாயிருந்தும், உன் அச்சங்கெட்ட குணத்தினால் உன் சுதந்தரத்தைக் கெடுத்துப்போடுகிறாய். ஆகையினால் உன்னை விட உனக்கு அதிகக் கொடுமையான சத்துரு ஆர்.

ஆனால் உன்னைச் சிநேகிக்கிறவன் ஆர். பராபரனும் உன் நல்ல சிநேகிதனும் உன்னைச் சிநேகிக்கிறதுபோல் ஒருத்தரும் உன்னைச் சிநேகிப்பார் இல்லை. பராபரன் உன்

னைச் சிநேகித்து, உன்னை ஈடேற்ற மனதாய் இருக்கிறார். ஆகின் நிமித்தம் நீயும் உலகத்தோடே கூட ஆக்கினைத்தீர்ப் புக்கு உள்ளாகாதபடிக்கு உன்னைக் கண்டித்துக்கொண்டே வருகிறார். பிள்ளை மேல் எத்தனைக்குப் பட்சமோ, அத் தனைக்கு மிலாறு உரமாயிருக்கும். பராபரன் உன்மேல் பட்ச மாயிருக்கிறபடியால், எப்போதும் உன் மனதுக்கு ஏற்றபடிச் செய்யாமல், உன் இரட்சிப்புக்கு உதவியானதையே செய்கி றார். வெகு கருக்கான கத்தியைத் தன் பிள்ளை கையில் கொடுக் கிற தகப்பன் உண்டா. வியாதிக்காரனுக்கு அநுகூலமாய் இராமல், அவனுடைய வாய்க்கு மாத்திரம் ருசியாயிருக்கிற தைக் கொடுக்கிற வயித்தியன் உண்டா. பராபரன் உன்மேல் பட்சமாகையால், அவர் உன் வயித்தியரும், காப்பாருமாய் இருக்கிறாரே அல்லாமல், உன்னைக் கெடுத்து அழிக்க விட அவருக்கு மனசு இல்லை.

உன் நல்ல சிநேகிதன் நீ தப்பிதம் செய்கிறதைக் கண் டால், உன்னைக் கண்டிக்கிறான். அவன் உன்னைச் சிநேகிக்கி றபடியால், உன் ஆத்துமத்தை நரகத்திலிருந்து கைதூக்கி இரட்சிக்கப் பார்க்கிறான். அதை அறிந்து அவனுக்கு ஸ்தோத் திரம் சொல்லு. இப்போதும் உனக்கு அடுத்தவன் ஆர் என்று கேட்கிறாயா. அங்கே குற்றுயிராய்க்கிடந்த மனுஷனுக்கு அடுத்தவனாயிருந்தது ஆர். அவனுக்கு இரக்கஞ் செய்தவன் தானே. ஆகையால் உனக்கும் இரக்கம்செய்கிறது ஆர். நீ அல்ல. முதலாவது பராபரனும், பிற்கு உன் நல்ல சிநேகி தனும் தானே.

அச. நியமனம்.

## கிறிஸ்தவன் பேசும் பேச்சைப் பற்றியது.

ஆம், ஆம்; அல்ல, அல்ல. மத். ரு, ௩எ.

கிறிஸ்தவன் பேச்சு இப்படி இருக்கவேண்டும், மெய்தான். ஆனால் சிநேகிதா! நீ அறியவேண்டியது என்னவென்றால், ஆம் ஆம்; அல்ல அல்ல என்பது அடிக்கடி இரண்டு எச மான்களுக்கு ஊழியஞ் செய்கிறது. அதினால் பராபரனுக் கும் பிசாசுக்கும், மெய்க்கும் பொய்க்கும், தாழ்மைக்கும் பெருமைக்கும் ஊழியஞ் செய்கிறதுண்டு. ஆம் ஆம், அல்ல அல்ல என்கிற சொல்லினால் அடிக்கடி பொய்யை மெய்க்கு விற்றுப்போடுகிறார்கள். நீ பரிசேயனா என்று நான் பரி சேயனைக் கேட்டால், அல்ல என்று அவன் சொல்லுகிறான்.



பராபரனே, நான் மற்ற மனுஷரைப்போலும் அல்ல, இந்த ஆயக்காரனைப் போலும் அல்ல என்பதற்காக உமக்கு இஸ் தோத்திரம் செலுத்துகிறேன் என்கிறான். நீ பெரிய பரி சுத்தவானு என்று நான் அவனை மறுபடியும் கேட்டால், ஆம் என்கிறான். நான் வாரத்துக்கு இரண்டுவிசை உபவாசிக் கிறேன், எனக்குக் கைவசமான எல்லாத்திலும் பத்தில் ஒன் றைச் செலுத்துகிறேன் என்கிறான். மெய்க்கு வதிலாக இது பொய்யை விற்கிறதல்லவோ. ஆம், அல்ல என்கிறதிலே அநேக மாயக்காரர் மறைந்திருக்கிறார்கள். அவர்கள் இருத யத்தைப் பார்க்க ஆராலே ஆகும்.

கொஞ்சம் வார்த்தை நல்லது. மிகுதியான வார்த்தை யிலே அநேகம் விசை மிகுதியான பாவங்கள் உண்டு. ஆனால் சுருக்கமான பேச்சுக்கு இரண்டு வழிகாட்டிகள் தேவை. அதாவது, மெய்யும் தாழ்மையுமாமே. ஒருவிசை ஆம் என் றது ஆம் என்றே இருக்கட்டும்; அது அல்ல என்றே போகப் படாது. ஒரு விசை அல்ல என்கிறது அல்ல என்றே இருக் கட்டும், அது ஆம் என்றே போகப்படாது. மெய்யும் உண்மை யும் ஒரு கிறிஸ்தவனைச் சிறப்பிக்கிறதுபோல, ஒன்றும் அவ னைச் சிறப்பிக்க மாட்டாது. மெய்யானது மனிதனுக்குள்ளே இருக்கிற பராபரனுடைய சாயல். ஒருவன் மெய்க்கு எவ் வளவு கிட்டியிருக்கிறானே, அவ்வளவு பராபரனுக்குக் கிட்டி யிருக்கிறான். ஆ, உலகம் எவ்வளவு கவடுள்ளதாயிருக்கிறது. அடிக்கடி அது தன் பேச்சிலே ஒரு பொன் மலையைக் காட்டு கிறது. ஆனால் பின்னாலே பார்த்தால், அதிலே ஒரு மணலா கிலும் இருக்கவில்லை. வாய் ஆம் என்கிறபோது, இருதயம் அல்ல என்று நினைக்கிறது. உலகத்தை நம்பாதே, அது வஞ்க கிறது. சத்தியத்தினுடைய ஆவியைப் பெற்றிராத உலகம் மெய்யைப் பேசக் கூடுகிறதெப்படி. கசப்புக் கடலிலே இருந் து தித்திப்புப் புறப்படுமோ, அழுக்கான ஊற்றிலேஇருந்து சுத்தமான தண்ணீர் புறப்படுமோ. அவர்களுடைய நாக்கு மணி அடிக்கிறதுபோலே இருக்கிறது. பொய்யின் ஆவி அதை ஆளுகிறது. மெய் பொன்னிலும் உயர்ந்தது. பொன் னிலும் அது வெகு அருமையானது. ஆகையால் சத்தியத் தைக் கொள்ளு. அதை விற்காதே. வாக்கி. உ௩, உ௩.

ஆனால் மெய்யோடே கூடத் தாழ்மையும் இருக்கக் கடவது. தாழ்மை முற்றிலும் ஆம் என்று சொல்லுகிறதும் இல்லை, முழுவதும் அல்ல என்று சொல்லுகிறதும் இல்லை. ஆம் என்பதிலே அல்ல என்பதையும், அல்ல என்பதிலே ஆம் என்பதையும் இணைக்கிறது. நீ பவுல் அப்போஸ்தலனை நோக்கி, மற்ற எல்லா அப்போஸ்தலரையும் பார்க்க நீர்

அதிகமாய் உழைத்ததில்லையா, உம்முடைய பிரயாசத்தினால் கிறிஸ்துவின் சபையிலே அதிக பலன் உண்டாகவில்லையா என்று கேட்டால், ஆம் என்று சொல்லுவார். பராபரனுக்கு அடுத்ததை மறைக்கப்போகாது, நான் அவர்களைப் பார்க்க அதிகமாய் உழைத்தேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கும் பராபரனுடைய கிருபை தானே என்கிறார். ௧ கொரி. ௰௫, ௰. மெய் ஆம் என்கிறது, தாழ்மையோ அத்தோடே அல்ல என்று சேர்க்கிறது. மறுபடியும் அப்போஸ்தலனை நோக்கி: பவுலே, நீர் உமது உத்தியோகத்தில் உண்மைத் தாழ்ச்சியாய் நடந்ததில்லையா என்று கேட்டால், இல்லை என்று சொல்லுவார். என் மனச்சாட்சிக்குத் தெரிந்தமட்டும் நான் என்னில் ஒரு குற்றத்தையும் அறியேன். ஆகிலும் இதினாலே நான் நீதிமான் ஆகிறவன் அல்ல, என்னிடத்தில் காண்கிறதென்ன என்று பராபரன் என்னை விட நன்றாய் அறிந்திருக்கிறார் என்கிறார். ௧ கொரி. ௪, ௪. இப்படியாகத் தாழ்மை ஆம் என்கிறதால் இல்லை என்பதையும், இல்லை என்பதால் ஆம் என்பதையும் திருத்துகிறது. நான் சுருக்கமும் மெய்யும் தாழ்மையுமாகப் பேச விரும்புகிறேன். அப்போது என் பேச்சு நிசமாகும்.

௮௫. தியானம்.

## சிறிய பாவங்களைப் பற்றியது.

சின்ன நாய் அந்தந்த வேளைகளிலே பெரிய சேதம் பண்ணும்.

வேட்டையாடப்படுகிற மானுக்கு அது தோன்றாது: ஆகிலும் அது தனக்கு வரும் சேதத்தினால் பிறகு அறிந்துகொள்ளுகிறது. அது பெரிய வேட்டை நாயோடே மல்லுக்கட்டி, அதைத் தோற்கடித்து, மரத்திலே மோதுகையில், சின்ன நாய்கள் வந்து கூடி, அதின்மேல் ஏறிக்கொண்டு, அதைப் பிடுங்குகிறது. அது அப்போது காயங்களை எண்ணாதிருந்தும், பின்பு அதுகள் சீழ்ப்பிடித்து, அழுகி நாற்றம் காணும்போது, மிகுந்த உபாதை அடைந்து செத்துப்போகிறது. கிறிஸ்தவனே, நீ பெரிய பிரதான பாவங்களோடே மாத்திரம் யுத்தம் பண்ணி, உலகத்தார் முன் உனக்கு வெட்கம் உண்டாகாதபடிக்குக் கொலைபாதகன், திருடன், வேசிக்கள்ளன் என்கிற பெயர் பெறாமல் இருக்க உனக்கு மனது உண்டு. இதற்குள்ளே உன் மாமிசம் நீ அத்தனை பெரிய காரியமாய் எண்ணாத அற்ப பாவங்களால் உன்னைச் சோதிக்கிறது.



நீ மனுஷருடைய களரியிலே இருக்க விரும்புகிறாய். உலகத்தாருடைய அழகான உயர்ந்த வஸ்திரங்களைப்போலே நீயும் உடுத்திக்கொள்ளுகிறாய். அவர்களோடே கூடிக்கொண்டு, அந்தந்தப் பரியாசங்களைப் பண்ணுகிறாய். இதினாலே எல்லாம் நீ உன்னை அறியாமல், உன் இருதயத்தைக் காயப்படுத்திப் போடுகிறாய். அந்தக்காயங்களை நீ அத்தனை பெரிதென்று எண்ணுகிறதில்லை. ஆனால் கிறிஸ்துமார்க்கத்திலே உனக்குத் தோனறின முந்தின சுறுசுறுப்பு வரவர குறைந்து, உன்னிடத்தில் அவிந்துபோகிறது. கடைசியிலே அந்தக் காயத்தோடே நித்திய மரணத்துக்கு இரையாய்ப் போகிறாய். பார், இப்படி அநேகம் விசை பெரிய பாவங்களைப் பார்க்கிலும், சிறிய பாவங்களினாலே அந்தந்தப் பெரிய கேடுகள் எழும்புகிறது. ஏனென்றால் பெரும் பாவங்களை மாத்திரம் பாவம் என்று எண்ணி, அதுகளை விலக்குகிறாய். ஆனால் சிறு பாவங்களைப் பாவம் என்று நீ எண்ணுகிறதில்லை, அதுகளுக்கு எச்சரிக்கையாயிருக்கிறதும் இல்லை.

நான் உனக்குச் சொல்லும் யோசனை என்னவென்றால், நீ ஒரு பாவத்தையும் அற்பமாக எண்ணாதே. அது உனக்கு எத்தனை அற்பமாய்க் கண்டாலும், அதினாலே பராபரனுக்கு மனஸ்தாபமாகி, உன் மனச்சாட்சி காயப்பட்டு, அநேகம் பெரிய பாவங்களுக்கு அதுவே வேர் ஆகிறது. ஒரு சிறு பொறியை உடனே அவித்துப் போடாவிட்டால், அது பிறகு எத்தனை பெரிய நெருப்பாகாது. தண்ணீரில் ஒரு கல்லை எறியும் போது அதனால் வட்டமான அலை உண்டாகி, வரவர முந்தினதிலும் பெரிதான பல வட்டங்கள் ஆகிறதில்லையா? ஏனென்றால் முந்தி எழும்பும் அலை பின்னால் பெரிய அலையை எழுப்புகிறது. மறுபடியும் வருகிறது அதைவிடப் பெரிதாய் இருக்குமே. பாவமும் அப்படியே இருக்கிறது. சின்ன பாவம் பெரிய பாவத்துக்குத் துவக்கம் என்றும், பெரும் பாவம் அதிலும் பெரிய பாவத்துக்குக் காரணம் என்றும் அறிந்துகொள். இதைப் பற்றி பெர்னார்த்து என்பவர்: பெரிய பாவங்களில் சிக்குண்டவர்கள் சிறிய பாவங்களில் துவக்கிக் கெட்டுப்போகிறபடியால், ஆண்டவருக்குத் தன்னை முற்றிலும் கையளித்த மனுஷன் பெரிய பாவத்துக்கு அஞ்சுகிறதுபோலே, சிறிய பாவங்களுக்கும் அஞ்சி நடப்பான் என்கிறார். ஒரு பாவம் எத்தனை சின்னதாயிருந்தாலும், அதினால் மரணம் வரும். அது நியாயமே. ஏனென்றால் மரணம் சகல பாவங்களுக்கும் சம்பளமாயிருக்கிறது. ரோமர் ௬, ௨௩. ஒருவன் நியாயப்பிரமாணத்தை எல்லாம் கைக்கொண்டும், ஒன்றில் இடறினால், எல்லாத்துக்கும் நேரஸ்தனாகிறான்.

யாக். ௨, ௰. அகுஸ்தீனு சொல்லுகிறதாவது: பாவம் சிறிதென்று அதை அற்பமாய் எண்ணாதே. ஆனாலோ பாவம் ஏராளமாயிருக்கிறதென்று எண்ணி, அதற்குப் பயப்படு என்கிறார். ஆ, ஒரு மணல் எத்தனை சிறியதாயிருக்கிறது. ஆகிலும் அப்படிப்பட்ட மணல் திரளாகக் கப்பலிலே விழுந்தால், அதினால் கப்பல் பாதாளத்திலே அழுந்திப்போகிறதுண்டே. மழைத்துளி எத்தனை சிறிது. ஆகிலும் அதினால் ஆறுகுளங்கள் எல்லாம் வெள்ளம் எடுத்து, கரைகள் இடிந்து, வீடுகளும் விழுகிறது. சின்ன பாவத்திற்கும் விலகி ஓடுகிறதே பிரகாசிக்கப்பட்ட இருதயத்துக்கு அடையாளமாயிருக்கிறது. ஏனென்றால் இருட்டிலே மகா பெரிய அழுக்கு தெரியாதிருந்தாலும், சூரியனுடைய வெளிச்சத்திலே ஒரு சின்ன தூசி கூடத் தெரிகிறதுபோல், ஒரு மனுஷன் எத்தனைக்குப் பராபரனால் பிரகாசிக்கப்படுகிறானோ, அத்தனைக்குக் கூர்மையோடே அற்பபாவத்தையும் பார்த்து அறிந்து பகைக்கிறான். நான் என் பராபரனுக்கு விரோதமாயிருக்கிறதெல்லாம், அது எத்தனை அற்பமாய்க் கண்டாலும், அதை எல்லாம் பாவம் என்று எண்ணி பகைப்பேன். பராபரன் கிருபையில்லாவிட்டால், என்னை நரக ஆக்கினைக்குள்ளாக்க ஒரு அற்பபாவமே போதும்.

௮௬. தியானம்.

## பராபரனையும் என்னையும் பூமிக்கடுத்த வஸ்துக்களையும் சிநேகிப்பதைப் பற்றியது.

*நீ ஒன்றும் இல்லாததைச் சிநேகிக்கிறாய். நான் சகலமுமானதைச் சிநேகிக்கிறேன்.*

இப்போது ஆர் செய்கிறது உத்தமம். ஒன்றும் இல்லாததைச் சிநேகிக்கிறது கூடாத காரியம் என்று நீ சொல்லுகிறாய். சிநேகம் இல்லாமல் பிழைத்திருக்க ஆரால் ஆகும் என்கிறாய். நானும் அதை ஒப்புக்கொள்ளுகிறேன். எதையாகிலும் சிநேகிக்காமல் இருக்கிறது கூடாத காரியம். ஆனால் ஒன்றும் இல்லாததைச் சிநேகிக்கிறது மிகுந்த வழக்கமாய்ப் போயிற்றென்பது பரிதாபம். நீ எதைச் சிநேகிக்கிறாய்? உன்னையே அல்லவா. சரீரத்தோடு நிழல் சேர்ந்திருக்கிறதுபோலே நீ பராபரனிடத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிறாய். நிழல் என்ன? ஒன்றும் இல்லாதது. ஒன்றும இல்லாமையிலே இருந்து நீ உண்டாக்கப்பட்டாய். உன் பாவத்தால்



நீ ஒன்றும் இல்லாமல் போனாய். எல்லாவற்றையும் சுமக்கிற பராபரனுடைய வல்லமையுள்ள வார்த்தை உன்னைச் சுமக்காவிட்டால், இனி ஒன்றும் இல்லாமையிலே அமிழ்ந்த வேண்டும்.

மேலும் நீ எதைச் சிநேகிக்கிறாய்? சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களைதான். அதுகள் என்ன? ஒன்றும் இல்லை. மெய்தான், சிருஷ்டிக்கப்பட்டதுகள் வஸ்துகள் தான். அவைகளை ஒன்றோடு ஒன்று ஒத்துப்பார்த்தால், ஒன்று ஒன்றைவிட உசிதமானதாயிருக்கிறது. ஆனால் நீ இந்தச் சிருஷ்டிப்புகளைச் சிருஷ்டிகரோடே ஒத்துப்பார்த்தால், அவருக்குமுன்னே அதுகள் எல்லாம் ஒன்றும் இல்லாததுபோல எண்ணவேண்டியது. மகா பெரிய சமுத்திரத்துக்கு ஒரு மழைத்துளி எம்மாத்திரம், ஒன்றும் இல்லையே. மகா பெரிய மலைக்கு ஒரு மணல் எம்மாத்திரம், ஒன்றும் இல்லை. ஆகையால் இப்படி ஒன்றும் இல்லாதிருக்கிறதைச் சிநேகிப்பதை விட்டு ஓய்ந்துபோ.

சகலமுமாயிருக்கிறதை நான் சிநேகிக்கிறேன். என் பராபரனே சகலத்திலும் சகலமுமாயிருக்கிறார். சகலமும் அவர் கையிலே இருக்கிறது. சகலத்தையும் அவர் கொடுக்கிறார். ஆகையால நான் உன்னை விட எத்தனை ஐசுவரியவான். உனக்கு இருக்கிறது ஒன்றும் இல்லை. எனக்கு எல்லாம் இருக்கிறது. நான் இதை உன்னிடத்திலே மாற்றிக்கொள்ளேன். ஆகிலும் இதை மாற்றிக்கொள்ள மனதாய் இராவிட்டாலும், கொடுக்க மனதாயிருக்கிறேன். உனக்கு இருக்கிற ஒன்றும் இல்லாததை வைத்துக்கொள். ஆனால் அதைச் சிநேகிக்காமல், அதைப் பராபரனுக்கு மகிமையாக அநுபவி. நான் எனக்கு இருக்கிற சகலமுமானதையும் உனக்குத் தருகிறேன். பராபரன் உனக்கும் எனக்கும் போதுமானவராயிருக்கிறார்.

௮௭. தியானம்.

## பராபரனுக்கு நாம் காண்பிக்க வேண்டிய உண்மையைப் பற்றியது.

*உன் இருதயத்தைப் பராபரனுக்குக் கொடு.*

உன் இருதயம் ஒரு துண்டு மாமிசம். அது முக்கோணமாயிருக்கிறது. திரியேக பராபரன் அதிலே வாசம்பண்ண விரும்புகிறார். இருதயத்திலே உயிர் வசிக்கிறது. பராபரன்

உத்தம சிவனின் ஊற்றும் இருதயத்தைப் பலப்படுத்தும் உயிரின் ஆவியுமாய் இருக்கிறார் அல்லவா. சரீரத்துக்கு நடுமத்தியிலே இருதயம் இருக்கிறது. பராபரன் சகல காரியத்துக்கும் மத்தியமாயிருக்கிறார். உன் வலது பக்கத்தைவிட, இடது பக்கத்துக்குக் கிட்டியிருக்கிறார். நன்னாளிலே இருக்கிறதைப் பார்க்கிலும், துன்னாளிலே அவர் உனக்கு அதிக ஆறுதலாயிருக்கிறார். இவருக்கு யாதொன்றைக் கொடுக்க மனதுள்ளவன் மகா நல்லதையும் கொடுக்கக் கடவான். இருதயமே அவருக்கு எல்லாவற்றிலும் நல்லது. மேலும் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறவன், அவருக்குப் பிரியமானதைக் கொடுக்கக் கடவான். இருதயமே அவருக்குப் பிரியமானது. என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா என்று அவர் தானே கேட்கிறார். வாக்கி. ௨௩, ௨௬.

பிசாசுக்கு நீ உன்னை மகா எதார்த்தமாய்க் காண்பிக்கிறாய். அதற்கு முழுமனதால் ஊழியஞ் செய்கிறாய். ஆனால் பராபரன் உன் இருதயத்தைக் கேட்டும், நீ அவருக்கு அதைக் கொடுக்க மாட்டேன் என்கிறாய். மெய்தான், உன்னிடத்திலே சில புறம்பான கிரியைகள் உண்டாயிருக்கிறது. ஆனால் அதுகளில் இருதயம் கட்டோடே இல்லை. அதுகளில் பதரே அல்லாமல் நல்ல நெல் ஒன்றும் இல்லை. விளக்கு இருக்கிறது, எண்ணெய் இல்லை. தோடு இருக்கிறது, பருப்பைக் காணோம். மேகம் மாத்திரம் இருக்கிறது, மழையைக் காணோம். ஆ என்ன, பேயும் வேண்டாம் என்பதைப் பராபரனுக்குக் கொடுக்க வருகிறாயோ. உன் இருதயம் ஆருடையது, பேயுடையதோ, பராபரனுடையதோ? பராபரனுடையதைத் திருடுகிறவனே! அவருடையதை அவருக்குக் கொடுக்காமல் இருக்கிறதென்ன. மேலும் உன் எசமான் ஆர், பராபரனோ, பிசாசோ? நீ பராபரனைப் பார்க்கப் பிசாசுக்கு உண்மையாய் ஊழியஞ் செய்கிறதென்ன. பழைய ஏற்பாட்டின் காலத்திலே முதற்பேறு எல்லாம் ஆருடையதாயிருந்தது? பராபரனுடையதாய் இருக்க இல்லையா. அவர் தமக்குப் பரிசுத்தமானதாக்க வேண்டும் என்று இருக்கிறதை நீ அவருக்கு ஒளிக்கிறதென்ன. தாயின் கர்ப்பத்திலே எல்லா அவயவங்களுக்கும் முன் உன் இருதயம் முதல் உருப்படுகிறது. ஆகையால் அது பராபரனுக்கே அன்றி உனக்குத் தகாது. அன்றியும் உன் இருதயத்துக்காக அத்தனை பிரயாசப்படுகிறது ஆர்? பிசாசு அதற்காக உனக்கு நல்லவார்த்தை முதலாய்ச் சொல்லவில்லை. பராபரனோ உன்னை அதற்காக அத்தனை நெருங்கிக் கேட்கிறாரே. ஆ உன் இருதயத்தை நமக்குத் தா என்கிறாரே. பின்னும் உன் இருதயத்துக்கு ஆராலே வெகு பிரயோசன



கிடைக்கிறது. பிசாசு அதில் குடியிருந்தால், அது நரகமாயிருக்கிறது. பராபரன் அதில் குடியிருந்தால், அது மோட்சமாயிருக்கிறது. ஆதலால் இவ்வளவு அதற்காகப் பிரயாசப்பட்ட பராபரனுக்குத் தானே அதைக் கொடுத்து விடு.

ஆனால் உன் இருதயத்தை அவர் இரவலாய் வாங்கார். அறுதியாய்க் கொடுத்தால், வாங்குவார். இன்றைக்குப் பராபரனுக்கும் நாளைக்குப் பிசாசுக்கும் ஊழியஞ் செய்கிறாய். அப்படிப்பட்ட ஊழியம் அவருக்கு என்னத்துக்கு. வீட்டை விட்டுப்போ என்று அடிக்கடி சொல்லுகிறவன் வீட்டில் குடியிருக்க ஆருக்காகிலும் மனது வருமா. பிசாசு உட்புகுந்தால், பராபரன் வெளிப்புறப்பட வேண்டுமே. இது வெட்கம் அல்லவா. உன் இருதயம் பராபரனுக்கு நிலையுள்ள வாசஸ்தலமாய் இராவிட்டால், உன் இருதயத்தை அவர் கேளார். யோவா. ௰௭.

மேலும் உன் இருதயத்தைக் கொள்ளுகிறதுக்கும் பராபரனுக்கு மனது இல்லை. நீ தானே அவருக்குக் கொடுக்க வேண்டும். அவர் உன்னை மகா இன்பமாய் ஆறுதல்படுத்துகிறதினாலே நீ அவரைச் சிநேகிக்கிறாய். இது அவரை அல்ல அவருடையதைச் சிநேகிக்கும் சிநேகம். அவருடையதையும்; அவர் நிமித்தமாய் அல்ல, உன் நிமித்தமாகவே சிநேகிக்கிறாய். பராபரன் தமது இரத்தத்தினால் உன் இருதயத்தை ஒரு விசேச உயர்ந்த விலைக்குக் கொண்டாரே. அது அவருடையதாக இருந்தால், அதை அவருக்கு உடனே கொடு.

ஆ என் சுவாமி, உம்மைவிடத்தான் நான் அதை ஆருக்குக் கொடுக்கப்போகிறேன். உமது குமாரன் இரத்த ஊற்றில் கிடந்து எனக்காக மரித்த போது, தேவரீர் உமது இருதயத்தை எனக்குப் பங்கிட்டுக் கொடுத்தீரே. இன்னமும் உமது இருதயத்தை எனக்குப் பங்கிட்டுக்கொடுக்க என்மேல் அனலான சிநேகமாயிருக்கிறீர். என் நிர்ப்பந்தத்தைப் பார்க்கும் போது, உமது இருதயம் பாகாய் உருகிப்போகிறதே. ஆகையால் அடியேன் சிநேகத்துக்குப் பிரதிசிநேகம் காண்பித்து, என் இருதயத்தைத் திரும்பத் தேவரீருக்குக் கொடுப்பேன். நீர் அதில் வாசம்பண்ணி, உமக்கு மகிமையாகவும் எனக்கு ஈடேற்றமாகவும் உம்முடைய சித்தத்துக்குச் சம்மதியானதை அதில் நடப்பித்தருளும்.

Mollet. Spiritual Hours.

௮௮. தியானம்.

## தாராள ஈகையைப் பற்றியது.

பராபரனிடத்திலே கொடுத்து வாங்குகிறது நல்லது.

நீ பரிட்சைபார். நான் அவருக்குக் கொடுக்கிறதை அவர் நன்றாய்ச் சீர்படுத்தித் திரும்ப எனக்குக் கொடுக்கிறார். அழுக்கும் அவலட்சணமுமான இருதயத்தை நான் அவருக்குக் கொடுக்கிறேன். சுத்தமும் சோடிக்கப்பட்டதுமான இருதயத்தை அவர் எனக்குத் திரும்பக் கொடுக்கிறார். அவர் தாம் வாங்குகிறதை விட அதிகமாய் எனக்குத் திரும்பக் கொடுக்கிறார். நான் விதைக்கிறது ஒரு சிறு விதை. அதைப் பை பையாக வாரிச் சேர்க்கிறேன். நித்தியத்துக்கும் அநித்தியத்துக்கும் சரிக்கட்டி வருமா. என்றாலும் உலகம் அதிலே கவியவில்லையே. அது என்னத்தினாலே, அது பராபரனை நம்பாததினாலே தான். கொடுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்கிறாரே. லூக். ௬, ௩௮. அதை ஆர் துணிந்து செய்யலாமென்று அது நினைக்கிறது. கையிலே இருக்கிறதை விடாதே, என் கையில் இருக்கிறதே எனக்கு உதவி, இனிமேல் எனக்குக் கிடைக்கப்போகிறது எனக்கு நிச்சயம் அல்ல என்கிறது. தினந்தோறும் அன்னங்கொடுத்துப் பராமரித்து வருகிற பராபரனுக்கு உலகத்தில் இருக்கிற நாணயம் இவ்வளவு தானா. பராபரன் அதை உனக்குத் திரும்பக் கொடுப்பாரென்று நீ நம்பாத படியால், உனக்கு இருக்கிறதை நீ பத்திரம் பண்ணுகிறது நல்லது தான். ஏனென்றால் நீ விசுவாசிக்கிறபடியே உனக்கு ஆகும். நீ அவிசுவாசத்தினால் செய்கிறதெல்லாம் அவத்தமாய்ப் போம். விசுவாசியாகிய எனக்கோ, பராபரனுடைய கையெழுத்தும் முத்திரையும் இருக்கிறது. அதை நம்பித் துணிந்திருக்கிறேன். ஆசீர்வாதங்களோடே விதைக்கிறவன் ஆசீர்வாதங்களோடும் அறுப்பான் என்று அவருடைய கையெழுத்து சொல்லுகிறது. ௨ கொரி. ௯, ௬. இதை நம்பி நான் என் விதைகளைத் திரளாய் விதைக்கிறேன். பரிசுத்தஆவி அந்த வார்த்தையை என் மனதில் முத்திரித்து, திரளான அறுப்பு வராமல் போகாதென்று அவர் எனக்கு நிச்சயப்படுத்துகிறார். பராபரனுடைய கையெழுத்தும் முத்திரையும் பிசகிப்போகிறதில்லை. அறுப்பு இன்றைக்குத் தொடங்காவிட்டால், நாளையாகிலும் தொடங்கும். சுறுக்கிலே அது நடவாதிருந்தாலும், நடுத்தீர்வை நாளிலே அது வரும் என்கிறது நிச்சயம். ஏழைகள் என்னைத் தங்கள் நித்திய கூடாரங்களில் ஏற்றுக்கொள்ளும்



போது, ...ன் இயேசு என்னைப் பார்த்து... பிதாவினால் ஆசீர்வ...க்கப்பட்டவனே, உலகத்தோற்றம் முதல் உனக்கு ஆயத்த... பண்ணப்பட்ட இராச்சியத்தைச் சுதந்தரித்துக் கொள். ...ஏனென்றால்: பசியாய் இருந்தேன், எனக்குச் சாப்ப...கொடுத்தாய்; தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தாய் என்று சொல்லுவார். மத். ௨௫, ௩௫. நான் விதைக்கிற ஒவ்வொரு சிறு விதையும் இப்படியாக... பலனை கொடுக்குமென்றும், பராபரனிடத்திலே நூறத்தனை... வாங்குகிறது நல்லதென்றும் அறிந்துகொள் கொடுத்...ாமல் விசுவாசிக்கிறவனே பாக்கியவான். யோவா. வேன். ௪ ௨௰, ௨௯.

௮௯. தியானம்.

## மனச்சாட்சியின் நரகத்தைப் பற்றியது.

நரகம் எங்கே.

பெலார்மீன் என்பவனைக் கேட்டால், பூமியின் நடுமையத்தைக் காண்பிப்பான். மெத்த நேர்த்தி. அப்படியானால் நீ ...கத்துக்குப் பயப்படத் தேவை இல்லை. பூமி அழியும் போது, நரகமும் அழிந்துபோம். நீயும் தப்பிப் போவாய். ஆனால் சிநேகிதனே, அதிகமாய்ச் சந்தோஷப்படாதே. உனக்குள்ளே நரகம் இருக்க, உனக்குப் புறம்பே நரகத்தைத் தேடுகிறதென்ன.

நீ தெய்வபத்தியுள்ளவனா? அப்படியானால், பராபரன் உன்னை எத்தனை விசை நரகத்துக்குக் கொண்டுபோகிறார்! எத்தனை விசை நரக வேதனையை நீ உன் இருதயத்தில் உணருகிறாய்! பிசாசின் நெருப்பான அம்புகள் உன்மேல் மாரி போல் பொழியும் போது, நரக நெருப்பு மகா அகோர அக்கினியாய் உனக்குக் காணுகிறது. அப்போது நரகக் கட்டினால் நீ கட்டப்பட்டுப் போனதுபோல் உனக்குத் தோன்றுகிறது. அப்போது பராபரனுடைய ஆறுதலும் கிருபையுள்ள வெளிச்சம் உன்னைச் சற்றும் முசிப்பாற்றாமல், நீ நரக இருளிலே இருக்கிறதுபோல உனக்கு இருக்கிறது. ஐசுவரியமுள்ள அந்த மனுஷன் ஒரு துளி தண்ணீருக்குப் பெருமூச்சு விட்டுக் கேட்டதுபோலே நீயும் ஒரு துளி ஆறுதலுக்காகப் பெருமூச்சு விடுகிறாய். ஆனால் அது விருதாவாகப்போகிறது. ...பயம், திகில், நடுக்கம் உன்னைச் சூழுகிறது. நீ அவஸ்தைக்குள்ளாகி தொய்ந்து போகிறாய். இதுகள் எல்லாம் நரகம் அல்லவோ.

நீ ஆகாதவனா? அப்படியானால், உன் சுய மனச்சாட்சியே உனக்கு நரகம். உன் மனச்சாட்சி தூங்கும் போது, பரமண்டலத்திலே இருக்கிறது போலே உனக்குக் காணுகிறது. அது விழித்தவுடனே நரகத்திலே இருக்கிறாய் என்று முதல் அறிந்து கொள்ளுகிறாய். நரகத்தின் தோன்றுதி உன் மனச்சாட்சியிலே இருக்கிறது. பிசாசுக்கும் சபிக்கப்பட்டவர்களுக்கும் இருக்கிற துக்கம் எப்படிப்பட்டதென்று உனக்கு அப்போது ஓராளவாகத் தெரிகிறது. நீ பொருளாசைக்காரனே, அப்போது உன்னையே நோக்கிப்பார். நீ நரகத்தை உன்னிலே காண்பாய். பாதாளமும் அழிவும் திருப்தியாகிறதில்லை, மனுஷருடைய கண்கள் திருப்தியாகிறதும் இல்லை. வாக்கி. ௨௭, ௨௰.

நான் இன்னம் உயிரோடு இருக்கையிலேயே நான் நரகத்தில் இறங்குவேன். செத்த பிறகு அந்தப்பயணஞ் செய்வது கேடு. என் பராபரன் இப்போது எங்கே என்னைக் கூட்டிக்கொண்டு போனாலும், அது நரகமாயிருந்தாலும் பரலோகமாயிருந்தாலும், அவரை நான் பின்பற்றுவேன். அவர் என்னிடத்திலே இருந்தால், நரகமும் மோட்சமாம். அவர் பாதாளத்தில் இறங்கவும் அதிலிருந்து ஏறவும் பண்ணுகிறவர். ௧ சாமு. ௨, ௬. துக்கமான நரக பயணத்தின் பின்பு சந்தோஷமான மோட்ச பயணம் வருகிறது. என் இயேசுவுக்கு இப்படி நடந்தது. எனக்கும் அப்படியே நடக்கும். ஆகையால் உற்சாகமாய் அதில் உட்படுகிறதே காரியம்.

௯௰. தியானம்.

## பரிசுத்தவான்களைப் பார்க்கிலும் பாவிகள் நல்லவர்கள் என்பதைப் பற்றியது.

மகா பாவி, மகா பரிசுத்தன்.

இவர்களிலே ஆர் நல்லவன், முந்தினவன் தான் என்று நான் சொல்லுகிறேன். பரிசேயனைப்பார்க்கிலும் ஆயக்காரன் நல்லவனாக எண்ணப்பட்டான். பவுல் தம்மைப் பாவிகளில் பிரதானமானவன் என்றும், எல்லாப் பரிசுத்தவான்களிலும் சிறியவன் என்றும் எண்ணுகிறார் (௧ தீமோ. ௧, ௰௫). மகா பரிசுத்தம் மகா பெருமை. நரக சர்ப்பம் நம்மைத் தலையிலே கொத்தாமல், குதிகாலிலே கொத்துகிறது. அந்தப்படி, பிசாசானவன் ஒரு சந்நியாசியைத் ஆவகத்திலே தொடா



மல், முடிவிலே நான் என்கிற எண்ணத்திலும், அகந்தையினாலும் சேதப்படுத்துகிறான்.

மகா பரிசுத்தம் மகா மோசம். மகா பரிசுத்தவான்களைப் பிசாசானவன் தெய்வாலயத்தின் உப்பரிகையின்மேலே கொண்டுபோகிறான். அவர்கள் அதுக்கிலே மோட்சத்துக்கு ஏறும்படி அல்ல, அவர்களைச் சடுதியாய் மோட்சத்தை விட்டு நரகத்திலே தள்ளும்படியாகத் தான். உச்சியிலே நிற்பது மெத்த மோசம். பாவிகளை அவன் தாழ்விலே கிடக்க விடுகிறான். ஆனால் அவர்கள் நரகத்திலிருந்து மோட்சத்துக்குள் விழுகிறார்கள். மகா பரிசுத்தம் மகா சோதனை. நான் மகா பரிசுத்தன் என்று என்னைக் குறித்து சொல்ல மாட்டேன். அப்போது பிசாசு என்னை அத்தனை அதிகத் தொந்தரவு பண்ணாது.

மகா பரிசுத்தம் மகா மாயம். நமது பரிசுத்தம் பெரியதல்ல. நமது உத்தம பரிசுத்தம் ஒரு அழுக்குவஸ்திரம். தன்னை மகா பரிசுத்தனாக எண்ணிக்கொள்ளுகிறவன் மெய்யாகவே மகா மாயக்காரன். பரிசேயன் அதற்குத் திருஷ்டாந்தம். மாயம் தன்னையும் பராபரனையும் வெவ்வேறாய்ப் பிரித்துப் போடுகிறது. மாயக்காரன் இருமனப்பட்டவன். பராபரன் ஒருமனப்பட்டவர். மாயக்காரன் கோணல்காரன், பராபரனோ நேர் செவ்வையாளர். மாயக்காரன் குளிரும் அல்ல, அனலும் அல்ல; அனலாயிராததைப் பராபரன் தமது வாய்க்குப் புறம்பாக வாந்திபண்ணிப் போடுகிறார். அறிவி. ௩, ௰௬. மாயக்காரனைப் பராபரன் இன்னம் உயிரோடே வைத்திருக்கிறது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. மனுஷரை ஏய்க்கிறவர்களுக்கு ஆகாத கூலி கிடைக்கிறதே. பரமண்டலத்தில் இருக்கிற பராபரனை ஏய்க்கத் துணிகிறவர்களுக்கு என்ன வராது.

இன்னம் ஒன்று சொல்லுகிறேன். மகா பரிசுத்தன் மகா பாவிக்கு மேல் தன்னை உயர்த்த நியாயம் இல்லை. மகா பாவி மகா பரிசுத்தவானை விட இரட்சிப்பைக் குறித்து நம்பிக்கையற்றவனாய்ப் போக நியாயமும் இல்லை. ஏனெனில் கிறிஸ்துவின் இராச்சியத்தின் ஒழுங்கு தலைகீழாயிருக்கிறது. அதிலே முந்தினோர் பிந்தினோரும், பிந்தினோர் முந்தினோருமாய் இருக்கிறார்கள். மத். ௰௯, ௩௰. இன்றைக்குப் பாவியானவன் நாளைக்கு மகா பரிசுத்தவானாகக் கூடும். இன்றைக்குப் பரிசுத்தவான் நாளைக்கு மகா பாவியாகவுங் கூடும். மகா பரிசுத்தவானாயிருந்து மகா பாவியாகிறதை விட, மகா பெரிய பாவியாயிருந்து சிறிய பரிசுத்தவான் ஆகிறதையே நான் விரும்புகிறேன்.

கக. தியானம்.

## ஒரு கிறிஸ்தவனுக்கு இருக்கிற ஐசுவரியத்தைப் பற்றியது.

*என்னிடத்தில் தாழ்ச்சி என்ன, எனக்கு எல்லாம் உண்டு.*

ஆண்டவரே, உம்மைத் தவிர பின்னை ஆர் எனக்குப் பரமண்டலங்களில் இருக்கிறார். உம்மோடே நான் இருக்கையில் பூமியில் எனக்கு வேறே விருப்பம் இல்லை. என் மாமிசமும் என் இருதயமும் மாளும் போது, பராபரன் என் இருதயத்தினுடைய கன்மலையும் என் பங்குமாயிருக்கிறாரென்று (சங்கீதம் ௭௩, ௨௫. ௨௬.) சொல்லுகிற மனுஷனை விட, பெரிய ஐசுவரியவானை நான் உலகத்திலே கண்டதில்லை. 'என் பராபரன்' என்கிற இந்த இரண்டு சிறிய சொற்களை எவன் மெய்விசுவாசத்தோடே சொல்லக் கூடுமோ, அவனே எல்லாரிலும் மகா ஐசுவரியவான். இதை எவன் சொல்லக் கூடாதவனோ, அவனே மகா தரித்திரன். ஏனெனில் நாம் உக்கிராணக்காரராக மாத்திரம் இருக்கவேண்டும். பராபரனே எசமான். எல்லாம் அவருடையது. அவர் மாத்திரம் நம்முடையவர். அவரை அல்லாமல் நமக்கு ஒன்றும் இல்லை. பராபரன் என்னுடையவராய் இராவிட்டால், ஒன்றும் என்னுடையதல்ல. அவர் என்னுடையவராயிருந்தால், எல்லாம் என்னுடையது. ஏனெனில் பராபரனிடத்திலே எனக்கு எல்லாம் அகப்படும். தகப்பனுடையது எல்லாம் பிள்ளையினுடையது. நான் ஒன்றும் இல்லாதவனாகக் காணப்பட்டும், எல்லாத்தையும் உடையவனாயிருக்கிறேன். ௨ கொரி. ௬, ௰. உலகம் எனக்கு ஒன்றும் கிடைக்க ஒட்டாது. அது எனக்கு ஒன்றுங் கொடுக்கவும் மாட்டாது. என்னைச் சந்தோஷப்படுத்துகிறது பராபரனிடத்திலே எனக்கு அகப்படுகிறது. உலகம் பல காரியங்களிலே தனக்குப் பல சந்தோஷங்களைத் தேடுகிறது. பற்பல காரியங்களைத் தேடினால், நினைவு சிதறுண்டு போகும். நான் என்னுடையதெல்லாவற்றையும் ஒன்றிலே தேடுகிறேன். ஆகையால் என் நினைவுகள் எப்போதும் ஒன்றித்திருக்கிறது. என் நினைவுகளைத் தேட வேண்டுமென்றால், பராபரனிடத்தில் அல்லாமல், வேறு இடத்தில் தேடக் கூடாது.

அதிக ஆசைப்படாமல் இருக்கிறதே உத்தம ஐசுவரியம். ஆனால் இது உலகத்திலே மகா அருமையிலும் அருமையாயிருக்கிறது. உள்ளது போதாது, இன்னம் வேண்டும் என்று மிச்சமானவர்கள் சொல்லக் கேட்போம். இனி வேண்டாம், இதுவே போதும் என்கிற மனம் மெத்த கொஞ்சம் பேரிடத்தில் மாத்திரம் உண்டு. இந்த உலகத்தின் ஐசுவரியவான்கள் நீர்க்கோர்வை வியாதிக்காரரைப் போலிருக்கிறார்கள். அவர்களுக்குக் குடிக்கக் குடிக்க அதிகத் தாகங் காணுகிறது. அதுபோல இவர்களும் தங்களுக்கு எத்தனை இருக்கிறதோ, அத்தனைக்கு அதிகமாக ஆசைப்படுகிறார்கள். பராபரனண்டையிலே அல்லாமல் பின் ஒருவரிடத்திலும் நமது ஆசை தீராது. அங்கே மாத்திரம் அதற்குத் திருப்தி உண்டாயிருக்கிறது. பராபரனிடத்திலே மனத்திருப்தியடையாதவன் எவனோ, அவனைத் தீராத பொருளாசைக்காரனென்றாவது, உணர்வு தாழ்ச்சியுள்ளவன் என்றாவது சொல்ல வேண்டும்.

இன்றைக்கு நான் எப்படி ஐசுவரியவானாய் இருக்கிறேனோ, அப்படியே நாளை தரித்திரவானாயிருக்கவுங் கூடும். என்னை ஒரு சொல் ஐசுவரியவானும் ஆக்கும், எளியவனும் ஆக்கும். இந்தச் சொல்லை விசுவாசத்தோடே சொன்னால், அது சொல்லுகிறவனை மகா ஐசுவரியவானாக்கும். அந்த விசுவாசத்தோடே சொல்லாவிட்டால், அதுவே அவனைத் தரித்திரனாக்கும். இவ்வளவு வல்லமையுடைய சொல் எது? 'என்' என்பதே தான். பராபரன் ஒருத்தர் என்பதை நான் எப்போதும் அறியக் கூடுமானாலும், அவரை என்னுடைய பராபரன் என்று எப்போதும் பற்றிப் பிடிக்கிறது கூடாது. அப்போது எனக்கு மனத்திருப்தி அவரிடத்திலே அகப்படாமல் போகிறது. அவர் உனக்கு இரக்கமுள்ளவரானாலும், எனக்கு அப்படியல்ல, அவர் உண்மையுள்ளவரானாலும் எனக்கு அப்படியல்ல என்று சில வேளை என் விசுவாசம் சொல்லுகிறது. இது விசுவாச பலவீனத்தைக் காண்பிக்கிறது. சிறு பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறேன். அவர்களுக்கு என் என்ற வார்த்தையை உபயோகிக்கத் தெரிகிறதில்லை. நீர் என் பராபரன், என் வெளிச்சம், என் சந்தோஷம், என் ஜீவன் என்றும், உமக்கு உள்ளது யாவும் என்னுடையது, நீர் செய்கிறது யாவும் எனக்கு நன்மையாய் முடிகிறது என்றும்; நீர் என் தகப்பன், நீர் என்னை அடித்தாலும், நான் உம்முடைய நேசமான பிள்ளையாயிருக்கிறேன் என்றும், எப்போதும் மன்தாரச் சொல்லக்கூடியவன் பராபரனுக்குள் எத்தனை சீமான், எத்தனை மகிழ்ச்சியுள்ளவன்! ...னால் அநேகம் விசை விக்கலிலும் அழுகையிலும் என் என்ற வார்த்தை தப்பிப்போகிறது. ஆகிலும் இதினாலே நான் ...முயிலடைகிறதில்லை. நான் என் பராபரனை அறிந்திருக்கிறேன். அவர் என்மேல் நல்ல மனம் உடையவராயிருக்கி

ளுர் என்று அறிந்திருக்கிறேன். மெலிந்த பலவீ[illegible] பிள்ளைகள்மேல் பெற்றோருக்கு அதிகப் பட்சம் உண்டு. நான் பராபரனிடத்திலே முலைப்பால் குடிக்கிற பிள்ளையானல், அவருடைய மடிப்பிள்ளையாகவும் இருக்கிறேன். சிறுமைப்பட்டவர்களின் வேண்டுதல் அவருக்குப் பிரியமாயிருக்கிறது. உரக்கக் கூப்பிட எனக்குக் கூடாதிருந்தாலும், தேம்பி அழுது சொல்லுகிறேன். என் பிதாவே என்று சொல்லக் கூடாதிருந்தாலும், அப்பா பிதாவே என்று சொல்லுகிறது அவருக்குப் போதும். ஏனெனில் என் பராபரனே என்று சொல்ல எனக்கு வாஞ்சை உண்டு. அந்த வாஞ்சையை என்னிடத்தில் உண்டாக்குகிறவர் அவரே. அவர் தமது கிரியையைப் புறக்கணித்துத் தள்ளக் கூடுகிறதெப்படி. பராபரன் என் பராபரனாயிருக்கிறாரென்று விசுவாசிக்க வாஞ்சையானபடியால் அல்லவா, என் மன இடுக்கத்திலே இப்படி பெருமூச்சுவிட்டுச் சொல்லுகிறேன். ஆதலால் நீதியின்பேரிலே பசிதாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள், அதேனென்றால் அவர்கள் திருப்தியடைவார்கள் (மத். ரு, கூ.) என்கிற வார்த்தை எனக்கு அடுத்தது. உண்டாயிருக்க வேண்டும் என்று ஆ[illegible]படுகிறவனுக்கு அவன் ஆசைப்பட்ட காரியம் உண்டாயிருக்கவே இருக்கும், அல்லது அது தனக்கு உண்டாயிருக்கும் என்கிற நிச்சயமாகிலும் அவனுக்கு உண்டு.

பெருமையோடே கூடிய செல்வத்தை விட தாழ்மையோடே கூடிய தரித்திரம் அநேகம் விசை தாவிலை. ஒன்றும் இல்லாமல் தங்களை ஐசுவரியவான்களாய்ப் பாராட்டுகிறவர்களும் உண்டு; திரளான ஆஸ்தியிருந்தும் தங்களைத் தரித்திரராய்ப் பாராட்டுகிறவர்களும் உண்டு. வாக்கி. ௰௩, எ. நான் பணக்காரனாகத் தீவிரப்படேன். ஏனென்றால் வெகு ஆஸ்திக்காரராயிருக்கிற மற்றவர்களை விட நான் மனத்தரித்திரம் உள்ளவனாயிருந்தால், அது பராபரனுக்கு அதிகப் பிரியம். நான் எனக்கு இல்லாததை மிகுந்த ஆவலாய்த் தாவிப் பிடிக்கப் பார்ப்பேனாகில், எனக்கு உண்டாயிருக்கிறதற்காகப் பராபரனுக்கு ஸ்தோத்திரம் சொல்லப்போகிறதெங்கே. தமது ஐசுவரியத்தின் பரிபூரணத்தை மற்றவர்கள்மேல் பொழிந்து, அவர்களைச் சீமான்களாக்கவும், என்னையோ தமது கிருபையின் சிறு துளிகளால் மாத்திரம் முசிப்பாற்றவும் அவருக்குச் சித்தமானல், அதற்காக நான் விசனப்படுவதே இல்லை அவர் எனக்குக் கொடுக்கிற ஒரு துளியானது, அவர் எனக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறதைவிட அதிகமு[illegible] நான் உயிரோடே இருக்கிற நாள் எல்லாம் அவருக்[illegible] திரும்பக் கொடுக்கிறதைவிட அதிகமுமாயிருக்கிறது. சிை



வான விருந்துக்கு அடையாளமாகிய முதல் விளைவை நன்றியறிதலோடு ஏற்றுக்கொள்ளுவேன். இந்நேரத்தில் என் பசிக்கு அதிக மன்றாவும் என் கலயத்துக்கு அதிக எண்ணெயும் தருமோ தகாதோ என்று ஆருக்குத்தெரியும், அவர் மாத்திரம் அறிவார். சீமானுடைய மேசையிலிருந்து எத்தனை துணிக்கைகள் விழுந்து கிடக்கிறது! அது ஏழை லாசருவுக்கு அகப்பட்டால். பரா[illegible]ு ஆவலாய்த் தின்னுவான்! பெலவீன வயிறுள்ள[illegible] பரகடியும் கொஞ்சம் கொஞ்சமாயும் சாப்பிடுகிற[illegible]ன் பெ[illegible] எனக்குக் கொடுக்கிறதை விட அதிகமாய் நான் எ[illegible]க்குச் [illegible]னத்தில் ஒருமிக்க உட்கொள்ளப் போனல், எ[illegible]ரணமாகாதே போனாலும் போகும்.

௩௨. தியானம்.

## தனக்கும் பிறனுக்கும் காண்பிக்க வேண்டிய சிநேகத்தின் ஒழுங்கைப் பற்றியது.

மேற்சட்டையை விட உட்சட்டை உடம்புக்கு மிகவும் கிட்டினது.

சிலர் பிறருக்கு இரங்கினாலும் தங்கள் மேல் இரக்கம் இல்லாதிருக்கிறார்கள். பிறருக்கு அன்னமிட்டு தண்ணீர் வார்த்து, தங்கள் சொந்த ஆத்துமத்தையோ தவிப்போடும் இளைப்போடும் போட்டுவைக்கிற அனேகரை நான் வெகு புதுமையாய்க் கண்டதுண்டு. பிறருக்கு வஸ்திரங் கொடுக்கிறார்கள், தங்கள் சொந்த ஆத்துமத்தையோ நிருவாணமாய் விட்டு வைக்கிறார்கள். பிறருடைய வியாதியைக் குணமாக்குகிறார்கள், தாங்களோ அந்தந்த நோயினால் துன்பப்படுகிறார்கள். பிறரைக் கடிந்துகொள்ளுகிறார்கள். தங்களுக்குத் தானே இளக்காரங் கொடுத்து மாய்மாலம் செய்கிறார்கள். அவர்கள் மற்ற இடங்களுக்குத் தண்ணீரை ஓட விட்டு தனக்குத்தானே எவ்வளவும் வைத்துக்கொள்ள மாட்டாத வாய்க்கால்களுக்குச் சமானமாய் இருக்கிறார்கள். உனக்கடுத்தவனை உன்னைப் போல சிநேகிப்பாயாக என்கிற கர்த்தருடைய கற்பனையை இந்த மனுஷர் இன்னம் அறிந்தவர்களல்ல.

நீ யாரைச் சிநேகிக்க வேண்டும். உனக்கு அடுத்தவனைத் தான். உனக்கு அடுத்தவனார்? நீயோ, உன் சிநேகிதனோ? ஆத்துமமோ, சரீரமோ? உனக்கடுத்தவனை எவ்வளவாகச் சிநேகிக்க வேண்டும். உன்னைப்போலே அல்லவா. நீ உன்னையே சிநேகிக்காதிருந்தால், உன்னைப்போல் உனக்

கடுத்தவனைச் சிநேகிக்க உன்னால் ஆகுமா. எந்த மருந்து
புண்ணுக்கு ஏற்றதென்று உன்னிடத்திலே நீ பரீட்சை பார்த்
திராவிட்டால், பிறருடைய புண்ணிலே அதைப்போடுகிற
தெப்படி. உன் சகோதரனைக் கண்டிக்கிறதிலே நீ அதிக
இலக்காரமாய் இருக்கிறாயோ, அல்லது அதிக கடினமாய்
இருக்கிறாயோ என்று உனக் [illegible] தெப்படி. அகுஸ்
தீனு என்ன சொல்லுகிறா [illegible] உனக்கடுத்தவனைக்
கடிந்துகொள்ள மனதா [illegible] ன்னை விட உனக்
கடுத்தவனாக இருக்கிறவ [illegible] னும் இல்லை. நீ
வெகுதூரம் போக வே [illegible] ந் உனக்கு முன்னே
இருக்கிறாயே. நீ உன்னை [illegible] க்காவிட்டால், உனக்
கடுத்தவனைச் சிநேகிப் [illegible] றார். நீ பிறனுக்குச்
செய்கிறதெல்லாம், அது எத்தனை விலையுயர்ந்ததாயிருந்தா
லும், அது உன்னையே சிநேகிக்கிற சிநேகத்தின் அளவாயிரா
திருந்தால் விருதா தானே.

உன் சிநேகம் முந்த உன்னிடத்திலே செல்ல வேணும்.
உன்னிடத்திலோ உன் சிநேகம் முந்த உன் ஆத்துமத்துக்
குத் தேவை. முந்தி எசமாட்டி, பிந்தி வெள்ளாட்டி. நீ எவ்
வளவாக உன் ஆத்துமத்தைப் பராமரிக்கிறாயோ, அவ்வள
வாகப் பராபரன் உன் சரீரத்தைப் பராமரிக்கிறார். ஆத்து
மத்தை நன்றாய்ப் பராமரித்தால், அதுவே சரீர பராமரிப்
புக்கு உதவியாய் இருக்கிறது. ஆத்துமம் முன்னதாக தேவ
வசனத்தினாலே முசிப்பாற்றப்பட்டிருந்தால், சரீரத்தைக் காப்
பாற்றுகிறதுக்குக் கொஞ்சம் ஆகாரம் அகப்படுகிறது பெரி
தல்ல. இந்த ஒழுங்கைத்தானே, நீ உனக்கடுத்தவனைச் சிநே
கிக்கிற சிநேகத்திலும் பின்பற்ற வேண்டும். ஆறுதலோடே
கூடியிராத தருமதானம் என்னத்துக்கு உதவி. நீ ஏழைக்
குச் சாப்பாடு கொடுக்கிறாய். ஆனால் அவன் சாவான பாவத்
திலே கிடக்கிறதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறாய்.
அவன் தன் பாவத்திலே பிழைத்திருப்பதை விட பட்டினி
யாய்க் கிடந்து சாகிறது தாவிலையல்லவா. நீ அவன் சரீரத்
தைக் காப்பாற்றுகிறபோது, நீ அவன் ஆத்தும கொலைபாதக
னாகாத படிக்கு எச்சரிக்கையாயிரு.



௩௩. தியானம்.

## கிறிஸ்தவனுடைய சங்காத்தத்தைப் பற்றியது,

ஒண்டியாயிருந்தாலும் ஒண்டியல்ல. நான் ஒண்டியாயிருக்க விரும்புகிறேன்.

ஏனென்றால் வஞ்சக உலகத்தோடே சங்காத்தம் பண்ண
எனக்குப் பிரியமில்லை. அது தன்னோடே கூட பொல்
லாப்பில் கிடக்கிறவைகளை மாத்திரமே சிநேகித்துப் புகழுகிறது.
அது நன்மையைப் பகைத்துத் தூஷணித்துத் துன்பப்படுத்து
கிறது.

ஆகிலும் நான் ஒருக்காலும் ஒண்டியாயிருக்கிறதில்லை.
ஒண்டிக்காரனுக்கு ஐயோ, ஏனெனில் விழுகிற அவனை எடுப்
பதற்குத் துணை இல்லை என்று ஞானமுள்ள பிரசங்கி சொல்
லுகிற வார்த்தையின் நிமித்தம் நான் அஞ்சுகிறதும் இல்லை.
என் பராபரன் எப்போதும் எங்கும் என்னோடே கூட இருக்
கிறார். நான் இடறினால், அவர் கை தாங்குகிறார். நான் விழுந்
தால், அவர் என்னைத் திரும்ப எடுத்து நிறுத்துகிறார். என்
சிநேகிதன் என்னைப் பார்க்க வருகிறான். ஆனால் அவன் என்
னிடம் எப்போதும் இருக்க மாட்டான். அவன் எப்படி வந்
தானோ அப்படியே திரும்பப் போய்விடுகிறான். பராபரனோ
என் கிட்ட வர வேண்டும் என்று நான் அவரைக் கேட்கத்
தேவையில்லை. அவர் ஏற்கனவே என்னிடத்தில் வாசமா
யிருக்கிறார். நான் எனக்குக் கிட்டி இருக்கிறதைப் பார்க்கி
லும் அவர் எனக்கு அதிகமாய்க் கிட்டி இருக்கிறார். அவர்
திரும்பவும் என்னைவிட்டுப் போய்விடுவார் என்று நான் எண்
ணங்கொள்ள வேண்டியதுமில்லை. அவர் தமது பிள்ளையைக்
கைவிட மாட்டார் என்று நான் அறிவேன். மெய்தான்,
அவர் எனக்கு மறைவாகத் தம்மை ஒளித்துக்கொள்ளக்
கூடும். ஆனால் என்னை விட்டுவிடக் கூடாது.

மனுஷர் என் கிட்ட இருந்ததினாலே எனக்கு உதவி
என்ன. மாறுபாடான உலகத்தை நம்பலாமா. உலகத்தார்
எனக்கு உற்ற சிநேகிதராயிருந்தாலும், என்னாலே அவர்க
ளுக்கு அல்லது அவர்களாலே எனக்கு இடறல் வருமோ
என்று அஞ்சவேண்டியதாய் இருக்கிறதே. இரண்டு பக்கத்
திலும் மோசந் தான். அவர்கள் விழுந்தால், அவர்களைக்
கை தூக்கிவிட என்னால் கூடுமோ. நான் விழுந்தால், என்னை
எடுத்து நிறுத்த அவர்களால் முடியுமோ. அவர்கள் என்
னோடும் நான் அவர்களோடும் விழுந்தாலும் விழ நேரிடும்.
[illegible] இந்தச் சங்காத்தம் வேண்டியதில்லை. நான் ஒரு

வருஷக்காலத்திலும் கட்ட முடியாததை, இச்சங்காத்தம் ஒரே நாழிகையில் இடித்தாலும் இடிக்கும். நான் பராபரனை மாத்திரம் என் இருதயத்தின் ஆழத்திலே வைத்திருந்தால், அவர் ஆயிரம் சிநேகிதரை விட எனக்கு அதிகம். அப்போது சகல பிசாசுகளும் மனுஷரும் ஏகமாய்க் கூடி என்மேலே சீறி விழுந்தாலும் அவர்கள் என் பராபரனுக்கு என்ன நஷ்டம் உண்டுபண்ணலாம். வெட்கத்தோடே அவர்கள் பின்வாங்க வேண்டியதாகும். ஆகையால் எப்போதும் ஒண்டியாயிருந்தும் ஒருக்காலும் ஒண்டியாயிராதவனே பாக்கியவான்.

௧௪. தியானம்.

## கிறிஸ்தவர்களுடைய உபத்திரவத்தைப் பற்றியது.

நியாயமாகிலும் நியாயமல்ல.

உனக்கு உபத்திரவம் வந்தால் அது நியாயமல்ல, அநியாயம் நடக்கிறதென்கிறாய். நானோ அது நியாயமுமல்ல அநியாயமுமல்ல என்கிறேன். உலகத்தார் உனக்குத் தீமை செய்கிறது நியாயமல்ல. அதற்காக உலகத்துக்கு யாராகிலும் நன்றி செலுத்துவார்களா. ஆனால் நீ தீமையை அனுபவிக்கிறது அநியாயம் அல்ல. ஏனெனில் நீ அதற்கல்லவோ அழைக்கப்பட்டாய், அதற்கே கிறிஸ்தவனானாய் (௧ பேது ௨, ௨௧). நன்மைசெய்து தீமையை அனுபவிக்கிறது கிறிஸ்தவர்களின் சிலாக்கியம்.

இயேசு நாதர் பட்டு உத்தரித்ததெல்லாம் நியாயமோ, சொல்லு. ஆம், ஏனென்றால் அது பராபரனுடைய சித்தம். அப்படியாக அவர் நமது பாவத்துக்கு உத்தரவாதம் பண்ண வேண்டியிருந்தது. ஆகையினால் நீயும் உத்தரிக்கிறது அநியாயமல்ல. ஏனென்றால் பராபரனுடைய சித்தம் அதுவே. உன் பாவத்தினாலும் நீ அதற்குப் பாத்திரனானாய். ஆ, நியாயமெல்லாம் உனக்கு விரோதமாயிருக்கக்கொள்ள, நீ இன்னம் நியாயம் பேச வருகிறாயே. நியாயமானபடி உனக்குச் செய்ய வேண்டுமானால், வெகு நாளைக்குமுன் தானே நீ உன் ஆத்தும சரீரத்தோடே நரகத்திலே அமிழ்த்தப்பட வேண்டியதாயிருந்தது. ஆனால் பராபரனிடத்திலே நியாயம் பின்னும் கிருபை முன்னுமாக நிற்கிறது. உனக்கு நியாயம் வேண்டுமா? அப்போது நீ பசாசின் ஆள். உனக்குக் கிருபை வேண்டுமா? அப்போது நீ பராபரனுடையவன். பராபரனுடைய நீதி உன்னை என்றென்றைக்கும் எரிகிற நரகத்திலே போட நியா



யமேயன்றி வேறே நியாயமில்லை. இதை நீ உணர்ந்துகொண்டால் தாவிலை.

உனக்கு உபத்திரவம் வந்தால், என் ஆத்துமமே, நீ பராபரனுக்குக் கீழடங்கிச் சகித்திரு, இல்லாவிட்டால் உன் நிர்ப்பந்தம் பெரிதாயிருக்கும் என்று உன் ஆத்துமாவுக்குச் சொல்லு. பராபரன் சவுக்கை எறிந்துபோட்டுச் சிறு பிள்ளைகளை அடிக்கிற மிலாறினால் உன்னைத் தண்டிக்கிறது அவருடைய கிருபை என்று நினை. ஆகையால் அநியாயம் என்று ஒருக்காலும் முறைப்படேன். ஏனெனில் என் பாடுகள் பராபரனாலே எனக்கு வருகிறது. அவர் எனக்கு நியாயம் செய்கிறவரல்ல, அநியாயம் செய்கிறவருமல்ல, அவர் செய்கிறதெல்லாம் சுத்த கிருபை. உலகம் எனக்கு நெருக்கிடை பண்ணுகிறதானால் அதற்கு நியாயமில்லை. ஏனெனில் நான் அதைச் சேர்ந்தவனல்ல, பராபரனைச் சேர்ந்தவன். ஆகிலும் நான் என்னை அடித்த கோலை நொந்துகொள்ளாமல் அதைப் பிடித்த கையைப் பார்க்கிறேன். பராபரன் எனக்கு நியாயம் செய்ய அறிவார். கர்த்தர் என் வழக்கை வழக்காடி என் நியாயத்தை விசாரிக்குமட்டும் அவருடைய சினத்தைச் சுமப்பேன். ஏனெனில் அவருக்கு விரோதமாகப் பாவம் செய்தேன். என்னை வெளிச்சத்திலே புறப்படப்பண்ணுவார். அவருடைய நீதியை மகிழ்ச்சியாய்ப் பார்ப்பேன். மீகா ௭, ௯.

௧௫. தியானம்.

## ஆவியின் ஒருமையைப் பற்றியது.

ஒருவன் மற்றொருவனைப்பார்க்க நல்லவனல்ல.

நீ என்னை விட அதிக நல்லவனல்ல. அப்படியிருக்க எனக்கு ரம்ப இருக்கிறது என்றால், நீ ஏன் பொறாமை அடைகிறாய். எனக்குக் கொஞ்சம் இருந்தால், நீ ஏன் என்னை அற்பமாய் எண்ணுகிறாய். நீ பொன்னினாலும் நான் மண்ணினாலுமா உண்டாக்கப்பட்டவனா? நாம் இருவரும் ஒருபிடி மண் அல்லவோ. ஆனால் நீ என்னை விட ஆஸ்திக்காரனும் வலுத்தவனுமாய் இருக்கிறாயே. ஆகிலும் அதினாலே நீ அதிக நல்லவனல்ல. திருடரும் ஆஸ்திக்காரராயிருக்கிறார்கள். மகா கொடியரும் வலுத்தவர்களுமாயிருக்கிறார்களே. யூதா பணப்பையை வைத்திருந்தினால் அவன் பேதுருவை விட நல்லவனாயிருந்தானா. ஆமான் இராசாவண்டையிலே உட்கார்ந்திருந்ததினால் அவன் மொர்தேகாயை விட நல்லவனா? அல்

லவே. நீ என்னைப்போலே, நான் உன்னைப்போலே தான் என்கிறேன்.

நாம் இருவரும் ஒருமிக்கவே கெட்டோம். கொலைபாதகன் உனக்குள்ளும் எனக்குள்ளும் குடியிருக்கிறான். நீ விழுந்து கிடக்கையில் நான் நிற்கிறது பராபரனுடைய கிருபை. நீ இன்றைக்கிருக்கிறதுபோல் நாளை நானும் ஆகக்கூடும். நாம் இருவரும் கிறிஸ்துவுக்குள் ஒருமிக்க உயர்த்தப்பட்டிருக்கிறோம். உன்னை வேண்டி அவர் வருத்தப்பட்டதுபோலே என்னையும் வேண்டிப் பட்டார். உன்னை அருமையாய்க் கொண்டதுபோலே என்னையும் கொண்டார். நீ பராபரனுடைய பிள்ளை; நானும் அப்படியே. உன் சுதந்திரம் பரமண்டலத்திலே இருக்கிறது. என் சுதந்திரமும் கூடத்தான். நம்மெல்லாருக்கும் ஒரே கர்த்தரும் ஒரே விசுவாசமும் ஒரே ஞானஸ்நானமும் ஒரே ஆவியும் ஒரே பராபரனும் பிதாவும் உண்டல்லவோ. அவர் நம்மெல்லார் மீதிலும் உள்ளவரும் நம்மெல்லாரைக்கொண்டு கிரியை நடப்பிக்கிறவரும் நம்மெல்லாருக்குள்ளும் இருக்கிறவரும் அல்லவோ. எபே. ௪, ௫. ௬. நேசனே அப்படி இருக்க, நாம் இரண்டுபட்டிருக்கக் காரணம் என்ன. நமக்குள்ளே ஒரே மேன்மை ஒரே சுதந்திரம் ஒரு சிநேகம் ஒரு சிந்தை ஒரு இருதயம் ஒரு ஆத்துமம் இருக்கிறதென்று சொல்லக் கூடாமல் போகிறது என்ன. அப்போஸ்தலர் ௪, ௩௨. உலகம் இரண்டு பிரிவாய்ப்போகிறது. அது எதினால் என்றால், அதிகம் ஆக வேண்டும், அதிகம் அடைய வேண்டும் என்கிற முகாந்திரத்தினாலே தான். ஆனால் நான் எப்படி இருக்கிறேனோ, அப்படி நீயும் இருக்கிறாய். நீ எப்படி இருக்கிறாயோ, அப்படியே நானும் இருக்கிறேன். உனக்கிருக்கிற அம்மாத்திரம் எனக்கும் இருக்கிறது. கிறிஸ்து நம்மைப் பிரிக்க மாட்டார். ஆகையால் இருவரும் பிரியாமல் இருப்போம். நீயும் நானும் ஒரு இருதயமும் ஒரு ஆத்துமாவும் போலிருக்க இயேசு உதவி செய்யக் கடவார்.

௬௬. தியானம்.

## ஆத்தும இளைப்பாறுதலைப் பற்றியது.

இளைப்பாறுதலே எல்லாவற்றிலும் உத்தமம்.

நிச்சயமாகவே பராபரனுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் அதுவே மகா உத்தமமானது. பராபரன் எங்கே இளைப்பாறுகிறார்? உன் இருதயத்திலே தான். பிள்ளை



கள் தங்கள் தாய்மார் நெஞ்சுக்கடியிலே இளைப்பாறுகிறதல்லவோ உலகநடை. இங்கேயோ பிள்ளையின் இருதயத்திலே தகப்பன் இளைப்பாறுகிறார். மனுஷனைச் சிருஷ்டித்த பிறகு பராபரன் இளைப்பாறினார். ஏனெனில் அவருடைய இளைப்பாறுதல் மனுஷனிடத்திலே இருக்கவேண்டியது. நீ உன் இருதயத்தை அவருக்குக் கொடுத்தால் ஒழிய அவருக்கு திருப்தி இருக்காது. அது அவருக்கு அகப்பட்ட பிறகு அவர் இளைப்பாறுகிறார்.

உன் ஆத்துமா இளைப்பாறுகிறதெங்கே? பராபரனிடத்திலேயல்லாமல் வேறெங்கும் இல்லை. வியாதிக்காரப் பிள்ளை தன் தாயின்மடியில் படுத்து இளைப்பாறுகிறதுபோல் வேறெங்கும் இருக்காது. கப்பலானது துறை முகத்திலும் மணவாளி தன் மணவாளன் கொடுங்கையிலேயும் இளைப்பாறுவதுண்டு. அகுஸ்தீனு: ஆத்துமம் நித்தியத்துக்கு உண்டாக்கப்பட்டதாகையால், அது நித்திய பராபரனையல்லாமல் வேறெங்கும் இளைப்பாற மாட்டாது என்று சொல்லுகிறார்.

உனக்கு நல்ல இளைப்பாறுதல் கிடைப்பது எப்போது? எனக்குச் சொல்லு. நீ பணக்காரனாகும் போதா? அல்லவே. வெகு ஆஸ்தி வெகு கவலை. முள்ளுக்கள் நடுவே மெதுவாய்த் தூங்கக் கூடாது. உயர்ந்த சங்கை உனக்கு வந்தால், அப்போது இளைப்பாறுவாயோ? இல்லையே. சரீரத்தை அதின் நிழல் கூடத் தொடருகிறதுபோல் பெரியதனத்தைப் பெருமை சர்ப்பனை கலகம் பின்தொடருகிறதாயிருக்கிறது. மதுவான பஞ்சு மெத்தையிலே சுகமாய்த் தூங்கும்போது, ல இளைப்பாறுதல் உனக்கு உண்டா? இல்லையே. அப்போ ம உன்னைச் சொற்பனம், அமுக்கன் எத்தனை இராத்திரி லங்க வைக்கிறது. கிருபையும் இரக்கமும் உள்ள பராபரன் எனக்கு உண்டானால் அதைப்போல என் மனதுக்கு உத்தமரம்மியமுண்டாக்குகிறது வேறில்லை. ஏனெனில் எங்கே என் ஆசைக்கு முடிவுண்டாகிறதோ, அங்கே தான் என் மனதுக்கு இளைப்பாறுதல் துவக்கமாகிறது. இப்போது பராபரனுடைய கிருபையை விட என் ஆசையைத் தீர்க்கக் கூடிய வேறொன்றும் பூமியிலேயுமில்லை வானத்திலும் இல்லை. அதுவே எனக்குப் போதும் என்றிருக்கிறேன். பராபரனையும் அவருடைய கிருபையையும் எங்கே கண்டுபிடிக்கிறேனோ, அங்கே எல்லாவற்றையும் கண்டுபிடிக்கிறேன், அங்கே இளைப்பாறுகிறேன், அங்கே மனரம்மியமாயிருக்கிறேன். இயேசுவுக்குள்ளே தேவகிருபையையும் இளைப்பாறுதலையும் கண்டுபிடிக்கிறேன். இயேசுவின் உத்தம இருதயம் எவ்வளவு ஆவலாய் எனக்கு இளைப்பாறுதலைத் தரப் பார்க்கிறது! அவர் தாமே

"மிகவும் பிரயாசப்பட்டுப் பாரம் சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள், நான் உங்களை முசிப்பாற்றுவேன், அப்படியே உங்கள் ஆத்துமங்களுக்கு முசிப்பாறுதல் கிடைக்கும்" என்று எத்தனை இன்பமாய் கட்புக் காட்டி நம்மை அழைக்கிறார். மத்தேயு ௰௧, ௨௮. ஆம் பிரியமான இயேசுவே, என் இருதயம் நீர் இளைப்பாறும் படுக்கையாய் இருக்க வேண்டியது. உமது காயங்கள் நான் இளைப்பாறும் தலங்களாய் இருக்க வேண்டியது. அங்கே பிழைத்திருப்பேன், அங்கே சாவேன். அப்போது சமாதானத்தோடு நான் பிழைப்பேன், சந்தோஷத்தோடு சாவேன். என் சகாயரே இதுக்கு உதவி செய்யும். ஆமென்.

௯௰. தியானம்.

## சிலுவையைச் சுமக்கும் உத்தம விதத்தைப்பற்றியது.

அவசியம் என்கிற கசப்பான பூண்டு.

உன் சிலுவை உனக்கு இன்னங் கசப்பாயிருக்கிறது அதிசயமா. உன் சுகம் எப்படி என்று நான் உன்னைக் கேட்டால், அதற்கு நான் அதைப் பட்டு உத்தரிக்கத் தான் வேண்டியது அவசியம் என்கிறாய். அவசியம் என்கிறது உன் உபத்திரவத்தை உனக்குக் கசப்பாக்குகிறது.

என் பாடுகளை எல்லாம் தித்திப்பாக்குகிறதுக்கு என் கையிலே இருவகை சர்க்கரைப்பொடி உண்டு. அதாவது என்னாலாகுமென்பதும் எனக்கு மனதுண்டென்பதும் தான். முந்தினது மதுரம். பிந்தினது அதிலும் மதுரம். முந்தினது என் சிலுவையை எனக்கு இலகுவாக்குகிறது. பிந்தினது அதை இன்பமாக்குகிறது. சுகமெப்படி என்று ஒருவன் என்னைக் கேட்டால், லகுவாயிருக்கிறது, அதை இன்னஞ் சுமக்க என்னாலாகும் என்பேன். சுகமெப்படியென்று இன்னொருவிசை கேட்டால், இன்பமாயிருக்கிறது, நல்ல சுகந் தானென்பேன். ஏனெனில் நான் பாடுபடத் தேவையில்லையா. நன்றாய்ப் பாடுபட வேண்டும். நாம் அனேக உபத்திரவங்களின் வழியாய் பராபரனுடைய இராச்சியத்துக்குள் பிரவேசிக்க வேண்டியது.. அப். ௰௪, ௨௨. இயேசு நாதர் பாடுபட வேண்டியிருந்ததில்லையா. பராபரன் அறுதியாய் இதைத் தீர்மானம் பண்ணினாரே. அவர் ஆலோசனையை நான் தள்ள மாட்டேன். அவர் தமது வசனத்திலே அதை எனக்கு முன்னமே சொல்லியிருக்கிறார். அவருடைய வார்த்தையை நான் பொய்யாக்க மாட்டேன். நான் மனுஷன். மனுஷன் சருவலோகத்தின் அவையடக்கமாயிருக்கிறான். ஒரு சக்கரவட்டத்தின் நடுமையத்திலே எல்லாம் வந்து கூடுகிறதுபோலே உலகத்திலுள்ள பாடுகளெல்லாம் அவனிடத்திலே வந்து கூடுகிறது. நான் மனுஷனாயிருக்க வேண்டுமானால், நான் பாடுபட வேண்டியது அவசியம்.



மேலும் நான் கிறிஸ்தவன். கிறிஸ்தவனுஞ் சிலுவையைச் சுமப்பவனும் ஒருவன் தானே. கிறிஸ்துவை இருதயத்திலே வைத்திருக்கிறவன் அவருடைய சிலுவையை தன் தோளின்மேல் ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் கிறிஸ்தவனாயிருக்க வேண்டுமானால், நான் பாடுபட வேண்டியது அவசியம். ஆனால் அவசியமென்பதைப் பார்க்கிலும் என்னாலாகுமென்பது நன்றாய்த் தொனிக்கிறது. ஏனெனில் என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவுக்குள் எனக்கு எல்லாத்துக்கும் பெலனுண்டு. பிலிப்பியர் ௪, ௰௩. நான் பெலவீனனே. ஆகிலும் பராபரன் என்மேல் சுமத்தினதைச் சுமக்க என்னாலாகும். ஏனென்றால் நான் என்னில் பெலவீனன், பராபரனிலோ நான் பெலத்தவன். அவருடைய பெலன் என் பெலவீனத்திலே நிறைவேற வேண்டும். ௨ கொரி. ௰௨, ௯. அதினால் அவருக்குப் பெரிய மகிமை.

அது மெத்த வருத்தமாயிருக்கிறது, இனி அதை சுமக்க என்னாலே தள்ளாதென்று நான் சொல்வதினாலே என் பராபரனுக்கு கனவீனம் வருவிக்க மாட்டேன். வானத்தையும் பூமியையும் சுமக்கிற பராபரன் என்னையும் என் சிலுவையையும் இனிச் சுமக்கமாட்டாமற் போக அவ்வளவு பெலவீனராய்ப் போய்விட்டாரா. அல்லது நான் சுமக்கக் கூடுகிறதைப்பார்க்க அதிகமாய் என்மேல் சுமத்த அவர் இப்போது அவ்வளவு இரக்கமற்றவராய்ப் போய்விட்டாரா.

சிலுவையிலே பராபரனுடைய உன்னதபலன் மறைவாயிருக்கிறது. ஆகையினாலே பாடுபட எனக்கு மனதுண்டென்று நான் சொல்வது எல்லாவற்றிலும் உத்தமமாயிருக்கும். அதினால் சிலுவை தோளின்மேல் வைக்கப்பட்டு அத்தோடே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சிலுவைக்கு முதுகு காட்டி நான் ஓடினால், அது என்னைப் பின்தொடர்ந்து வரும். நான் ஊரைவிட்டு வெளியே ஓடினாலும் அது என்னை விடாது. ஆனால் நான் தைரியமாய் அதற்கு எதிர்கொண்டு போய், நல்ல விருந்தாடியே, நீ வந்தது சந்தோஷமாயிற்று, இதோ என் முதுகு. நீ அதின் மேல் ஏறு. அதை வருத்தப்படுத்து. அதை இருத்தி உனக்கு இளைப்பாறுமட்டும் அதை அழுத்தென்று சொன்னால், அப்போது அந்தச் சிலுவை

இவன் நமக்குப் பயப்படாத முண்டன், இவன் நம்மைச் சட்டை பண்ணுதபடியால், இவன் கிட்ட இருக்கிறதிலே நமக்கு ஒரு பலனுமில்லை; ஆகையால் இவனை விட்டுப் போவோம் என்று சொல்லிப் போய்விடும். கிறிஸ்தவனே! நான் உனக்கு அடிக்கடி சொன்னது உனக்குத் தெரியுமே. நாம் பராபரனுடைய சித்தத்திற்கு ஒத்து நடந்தால் அவர் நம்முடைய மனதின்படி ஒத்துவருவார். நான் சிலுவையை நல்ல மனதோடே சுமப்பேன் என்றால் பராபரனும் என்னைத் தப்பவிடுவார். அப்போது எனக்கு மனதுண்டு என்றதை நான் செய்ததாகப் பாவிக்கிறார். எவ்வளவு அதின்மேல் எனக்கு மனது உண்டாகிறதோ அவ்வளவு சீக்கிரத்திலே அது என்னை விட்டு நீங்குகிறது.

௬௮. தியானம்.

## உலகத்தின் உண்மைத்தாழ்ச்சியைப் பற்றியது.

நான் உன்னை அறியேன்.

இப்படி நான் என்னுடைய போதகத்தொழில் முறைமைப்படி சொல்லுகிறேன். நான் ஒரு மனுஷனையும் அறியாமற்போக தேவ சிநேகம் என் கண்ணை மூடி மயக்கிப்போட்டது. நீ சிநேகிதனாயிருந்தாலும் சரி சத்துருவாயிருந்தாலும் சரி, ஐசுவரியவானாயிருந்தாலும் சரி தரித்திரனாயிருந்தாலும் சரி, உயர்ந்தவனாயிருந்தாலும் சரி, தாழ்ந்தவனாயிருந்தாலும் சரி, நீ பாவம் செய்தால் நான் உன்னைக் கண்டிப்பேன். என் கண் நேராய் பாவத்தை நோக்கிப்பார்க்கிறதே அல்லாமல் அதைச்செய்த ஆளை நோக்கிப்பார்க்கிறதில்லை.

உன்னை அறியேன் என்று உலகமும் நான் துன்பம் அனுபவிக்கிற வேளையிலே எனக்குச் சொல்லுகிறது. உலகமே நான் அதைச் சட்டைபண்ணுகிறதில்லை. என் வீடு நிறையப் பணமும், என் பந்தி நிறைய ருசிகரமான போசனமும் இருந்தபோது, நீ என்னை நன்றாய் அறிந்தாய். வயது சென்ற ஒரு பெருமாட்டி தன்னுற்றார் உறவினர் எல்லாரும் தன்னைக் கைவிட்டார்கள் என்று ஒருநாள் என்னிடத்தில் முறையிட்டுக் கொண்டிருந்தபோது, அது எதினாலே என்று அவளைக் கேட்டேன். அவள் பிரத்தியுத்தரமாக, நான் வாகனம் ஏறித் திரிந்தபோது, அவர்கள் என்னை நன்றாய் அறிந்தார்கள். நான் கால் நடையாய்ப்போகிற இப்போது என்னை ஒருத்தரும் அறியவில்லை என்றாள். கேட்டாயா? நீ வாகனம் ஏறிப்போகிறபோது உலகம் உன்னை அறியும்; நீ கால் நடையாய்ப்போனால் ஒருத்தனும் உன்னை அறியான். என்றாலே தங்களுக்கு யாதொரு உதவி உண்டாயிருக்கிறமட்டும் என்னிடம் சிநேகிதர் கூடி வருகிறார்கள். அவர்கள் எனக்கு ஒரு வேளை உதவிசெய்ய வேண்டியிருந்தால், வீட்டிலே இருந்துகொண்டும் இல்லை என்று சொல்லச் சொல்வார்கள். அது சரிதான். ஏனெனில் அவர்கள் என்னைச் சிநேகிக்காமல் என் கையில் இருக்கிறதை மாத்திரம் சிநேகிக்கிறார்கள். எனக்கு பாக்கியமுள்ள காலத்திலே அவர்கள் சிநேகம் பூத்திருக்கின்றது. என் நிர்ப்பாக்கிய காலத்திலே அவர்கள் சிநேகம் வாடுகிறது. கள்ளப்பொன் புடத்துக்கு நில்லாது. கள்ளச் சிநேகிதன் சிலுவைக்குமுன் நில்லான். ஆ! என் சிறுமையிலே உதவுகிற சிநேகிதா, நீ எத்தனை அருமை. இவன் ஆருக்கு அகப்பட்டானோ, அவன் இவனை அருமையாய் எண்ணிக்கொள்ளக் கடவான். இவனுக்கெத்தனை பொன்னைக்கொடுத்தாலும் ஈடல்ல. பொன் போனாலும், சிநேகிதன் நிலைநிற்பான்.



ஆனால் உலகமே, நீ என் வருத்தத்திலே என்னை அறியாதிருந்தாலும் அதினாலே நான் சாக மாட்டேன். உன்னால் எனக்கு ஆகவேண்டியது ஒன்றும் இல்லை. ஏனெனில் மனுஷன்மேல் நம்பிக்கை வைக்கிறவன் சபிக்கப்பட்டவன் (எரே. ௧௭, ௫). என்றால் உனக்கு ஆகவேண்டியதும் ஒன்றும் இல்லை. நீ தேடுகிறது என்னிடத்தில் உனக்கு அகப்படாது. நீயும் நானும் பிரிந்துபோனோம். உன்னை விட்டுப் பிரிந்து பராபரனோடே ஒன்றாய்ப் போனதற்காகப் பராபரனுக்குத் தோத்திரம். நாம அறியப்படாதவர்களாகக் காணப்பட்டும், அறிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறவர்களின் தொகையிலே நானும் சேர்ந்திருக்கிறேன் (௨ கொரி. ௬, ௯). நீ என்னை அறியாயா? நல்லது, என்னை அறிகிறவர் ஒருவருண்டு. பராபரன் தம்முடையவர்களை அறிந்திருக்கிறார். ஒரு தகப்பன் தன் பிள்ளையையும், ஒரு மேய்ப்பன் தன் ஆட்டையும், மணவாளன் தன் மனைவியையும், கோழி தன் குஞ்சையும் அறிந்திருக்கிறதில்லையா. ஆகையால் அவர் என்னை மெய்யாகவே அறிந்திருக்கிறார். உலகத்திலே ஒருவரும் என்னை விசாரணை பண்ணாதிருந்தாலும், பராபரன் விசாரணை பண்ணுகிறார். என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டார்கள். ஆனால் கர்த்தர் என்னைச் சேர்க்கிறார். இந்த ஆறுதலை நான் விடேன். பூமியிலுள்ளவர்களில் ஒருத்தனும் என்னை அறியாவிட்டாலும் பராபரன் என்னை அறிந்திருக்கிறார். நான் என்னுடையதை அறிந்திருக்கிறேன். பராபரன் தம்முடையதை அறிந்திருக்கிறார். ஆ! என் பரனே,

அடியேன் தேவரீரால் உயர்ந்த விலைக்குக் கொள்ளப்பட்டு உமது சொந்தமானபடியால், உம்முடையவனாயிருக்கிறேன். உம்முடைய பிள்ளை என்று அழைக்கப்படுவதற்கு நான் பாத்திரவானல்ல என்றால், அடியேனை உம்முடைய ஏழைப்பூச்சியாக என்கிலும் இருக்கப்பண்ணும். சிறு பூச்சியையும் தேவரீர் விசாரிக்கிறீரே. அப்படியே ஆகக்கடவது. பராபரன் என்னை அறிகிறார். உலகமே நீ என்னை அறியவில்லை என்கிறதற்காக நான் கவலைப்படேன்.

௧௧. தியானம்.

## தன்னைத் தான் அறிகிறதைப் பற்றியது.

அபூர்வம் ஆகிலும் அவசியம். வருத்தம் ஆகிலும் பிரயோசனம்.

தன்னை அறிவது எல்லாருக்கும் அவசியமான காரியமாதலால், உலகத்தில் எங்கும் அது சாதாரணமாய் இருக்கும் என்றும் அது மிகவும் பிரயோசனமானபடியால், எல்லாராலும் அது ஆவலாய்த் தேடப்படும் என்றும் எண்ண வேண்டியது. உன்னையே அறிந்துகொள் என்கிறது பெரிய ஞானி சொன்ன வாக்கியம். ஆகிலும் தன்னை அறிவதைப்பார்க்கிலும் அபூர்வமானதென்ன.

தற்சிநேகம் உலகத்தில் சாதாரணம். பத்திமான்களுக்குள்ளும் தற்சிநேகம் இல்லாதவர்கள் மெத்தக் கொஞ்சம். மற்றவர்களைப் பார்க்க அதிக வரப்பிரசாதத்தைப் பெற்று நற்கிரியை ஒன்றைச் செய்திருந்தால், அவர்கள் பூரிப்படைந்து தங்களையே மெச்சிக்கொண்டு, மயில் தன் இறகைப்பார்த்து மகிழுகிறதை காட்டிலும் தங்களுக்கு இருக்கிற வரங்களையும் நற்குணங்களையும் பார்த்து மகிழ்ந்து வீம்பு பாராட்டுகிறார்கள். சுய புகழ்ச்சி நாற்றம் என்கிற வாக்கியம் குறுக்கே இராவிட்டால், இவர்கள் தங்களையே புகழுகிறதை ஒழிய மாட்டார்கள். ஆனால் பிறர் இவர்களைக் கொண்டாடினால், இவர்களுக்குச் சந்தோஷம். இவர்களை அசட்டை பண்ணி இவர்களுக்கு இருக்கிற வரத்தை அல்லது கிரியைகளைக் குறைவாகப் பேசினால், தங்களுக்குப் பெரிய உபத்திரவம் வந்ததுபோல அதற்காக முறையிட்டு, தங்களிடத்தில் இருக்கிற இத்தனை பெரிய பாக்கியத்தை உலகம் அறியாதபடியால், உலகம் தங்களுக்குப் பாத்திரம் அல்லவென்று நினைக்கிறார்கள். பராபரன் தங்களை மாத்திரம் தமது மடியில் வைத்திருக்கிறது போலும், மற்றவர்கள் மேல் அவருக்



குக் கவனம் இல்லாதது போலும், தங்களுடைய செபத்தின் நிமித்தமாக பட்டணங்களுக்கும் நாடுகளுக்கும் நன்மை செய்கிறாரென்றும், தாங்கள் போனால், தங்களோடே கோவில் சபை எல்லாம் அற்றுப்போய் அப்புறந் தெய்வபத்தி கிடையாதென்றும் நினைக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களை அறிந்தவர்களென்று சொல்லலாமா, சொல்லக் கூடாது. தன்னை அறிந்தவன் தன்னைச் சிநேகியான். ஒன்றும் இல்லாததைச் சிநேகிக்கிறவன் ஆர். அவன் தன் மனதின் அடியிலே ஒரு நன்மையையும் கண்டு பிடியாதபடியால், தன்னை ஒரு பொருட்டாய் எண்ணாமல், தனக்கு இருக்கிற நன்மையும் தான் செய்கிறதும் தன்னாலே வந்ததென்று சொல்லாமல், அதைக் கொடுத்தவரும் அதைத் தன்னிடத்திலே உண்டாக்கினவருமாகிய பராபரனுக்கே அது சொந்தம் என்று சொல்லுவான். ஊரார் உடைமையைப் போட்டுக்கொண்டு பெருமை பண்ணலாமா. தச்சனுடைய ஆயுதம் தான் வீட்டைக் கட்டினதாக வீம்பு பேசுமா.

தன்னை அறிந்தவன் தன்னையே கொண்டாடுவதும் இல்லை. தன்னைக் கொண்டாடிப் புகழுகிறதற்குப் பாத்திரமான நன்மை தன்னிடத்திலே ஒன்றும் கண்டுபிடியாதபடியால், மற்றவர்கள் தன்னைக் கொண்டாடுகிறதும் அவனுக்குச் சம்மதியாகாது. மற்றவர்கள் தன்னை மகா அற்பமாக எண்ணுகிறதைப்பார்க்க அவனே தன்னை அற்பமாக எண்ணுகிறான். புறக்கணிக்கப்படுதலை வெகு ஆவலாய் ஏற்றுக்கொள்ளுகிறான். மற்றவர்கள் தன்னைப் புறக்கணித்தாலே அல்லாமல் அவனுக்கு ஒருக்காலும் திருப்தியாகாது. அவன் தன்னையே மிகவும் அற்பமாய் எண்ணி, மற்றவர்களைத் தன்னைவிட மேன்மையும் பரிசுத்தமுமாக எண்ணுகிறான். ஆனால் இப்படிப்பட்டவன் எங்கே அகப்படுவான்! தன்னையே சிநேகிக்கிறது எங்கும் உண்டு. தன்னையே அறிகிறதோ மகா அருமை. ஆகிலும் அது மகா அவசியமானது.

தன்னை அறிகிற அறிவில்லாமல் ஒருவனும் மோட்சம் அடையக் கூடாது. தன்னை அறியும் அறிவு எங்கே இல்லையோ அங்கே விசுவாசமும் இல்லை. தன்னையே அறியாதவன் பராபரன் பேரிலே நம்பிக்கை வைக்காமல், தன்மேல் நம்பிக்கை வைக்கிறான். அவன் கிறிஸ்துவினிடத்திலே தன் நீதியைத் தேடாமல், தன்னிடத்திலேயும் தன் கிரியையிடத்திலேயும் நீதியைத்தேடுகிறான். அவன் மோட்சத்தைத் தன் சுதந்தரமாகப் பாவியாமல், தான் சம்பாதித்ததாகப் பாவிக்கிறான். அவன் அதை ஒரு உபகாரமாய் வாங்க வேண்டுமென்று எண்ணாமல், தன் புண்ணியத்தினாலே வாங்க வேண்

டும் என்று இருக்கிறான். இப்படிப்பட்டவன் கரை ஏறுவது எப்படி. தன்னையே அறிதல் எத்தனை அவசியமோ, அத்தனைக்குப் பிரயோசனமாயிருக்கிறது.

இடிக்கிறதும் கட்டுகிறதும் கிறிஸ்தவனுக்கு மகா பிரயோசனம். பாவத்தை இடித்துப் புண்ணிய குணங்களைக் கட்டி எடுப்பிக்க வேண்டும். எவன் தன்னை அறிகிறானோ அவன் தன் சுபாவத்துக்கு எந்தத் துர்க்குணத்தின் பேரிலே மெத்தப் பிடிப்பாயிருக்கிறதென்றும், எந்தச் சற்குணத்தின் பேரிலே மெத்த வெறுப்பாயிருக்கிறதென்றும் அறிகிறான். அந்தத் துர்க்குணத்தோடே வெகு உற்சாகமாய் எதிர்த்து நின்று, சற்குணத்தை வயிராக்கியமாய்ப் பின்தொடருகிறான். தன்னை அறிதல் எத்தனை அவசியம்! எத்தனை பிரயோசனம்! ஆகிலும் எத்தனை அபூர்வம்!

தன்னை அறிதல் மெத்த அபூர்வம். ஏனெனில் அது மகா வருத்தம். நாள்தோறும் தன்னைச் சோதித்துப் பார்க்கிறதினால் அது உண்டாகும். அடித்தலம் வெகு ஆழமான படியால், உள்ளே இறங்க ஒருத்தனுக்கும் துணிவு வர இல்லை. சிலர் பாழாக்கும் அருவருப்புக்குணம் தங்களுக்கு வெளியாகப் போகிறதென்று தங்கள் இருதயத்தின் அடியில் இறங்க அச்சமும் கூச்சமும் படுகிறார்கள். சிலர் மற்றவர்களை ஆராய்கிறதிலே அத்தனை அலுவலாயிருக்கிற படியினால், தங்களையே மறந்துவிடுகிறார்கள். மற்றவர்கள் வாசலை இவர்கள் பெருக்கிக் கூட்டுகிறார்கள், தங்கள் வாசலிலே வெகு வாய்க் குப்பைக் காடாய்ச் சுமந்து கிடக்கிறது. நான் என் மார்பிலே அடிப்பேன். ஆனால் மற்றவர்களை நோக்கி என் விரலைக்கூட நீட்டேன். என்னையே அறியப் படிப்பேன். என் கிரியை கிறிஸ்துவினிடத்திலே இருந்து புறப்படுகிறதோ, ஆதாமிடத்தில் இருந்து புறப்படுகிறதோ, பராபரனுக்கு அதினால் மகிமை உண்டாகிறதோ, எனக்குக் கனம் உண்டாகிறதோ என்று அதை நன்றாய்ச் சோதித்து ஆராய்ந்து பார்ப்பேன். அது நான் என்னையே சீர்ப்படுத்தவும், நான் பரிசுத்தத்திலே பெருகவும், எனக்கு வெகு உதவியாயிருக்கும்.



௩. தியானம்.

# பராபரனை அறிகிற அறிவைப் பற்றியது.

அறிவு நல்லது. சிநேகம் அதிலும் நல்லது.

இதைக் கவனி. நீ பரமண்டலத்தை அறிந்திருக்கிறாய். நான் அதிலும் உத்தமமானதை அறிந்திருக்கிறேன், அதாவது, பரமண்டலத்தில் வாசமாயிருக்கிற பராபரனைத்தான். ஞானி தன் ஞானத்தைத் தொட்டும், பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைத் தொட்டும், ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைத் தொட்டும் மேன்மை பாராட்ட வேண்டாம். ஆனால் மேன்மை பாராட்டுகிறவன் நம்மை உணர்ந்து அறிந்திருக்கிறதையே தொட்டு மேன்மை பாராட்டக் கடவான் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமி. ௯, ௨௩. ௨௪.

நான் பராபரனுடைய இருதயத்தை அறிந்திருக்கிறேன். அது என் நிர்ப்பந்தத்தை எல்லாம் உணருகிறதென்று எனக்குத் தெரிந்திருக்கிறது. அவர் எவ்வளவு கடினமாக என்னை அடிக்கிறாரோ, அவ்வளவும் இரங்குகிறார். ஏனெனில் அவர் என்னை எவ்வளவு கடினமாய் அடிக்கிறாரோ, அவ்வளவும் அவருக்கு நோவுகிறது. அவருடைய இருதயம் அவருக்குள்ளே உடைந்துபோகிறது. அவர் என்மேல் இரங்க வேண்டும்.

நான் பராபரனுடைய கண்ணை அறிந்திருக்கிறேன். அது என் நிர்ப்பந்தம் எல்லாத்தையும் பார்க்கிறதென்று எனக்குத் தெரிந்திருக்கிறது. என்னை ஒரு மனிதனுந் திரும்பிப் பார்க்காமல் போனாலும், அவர் எப்படியும் என் இக்கட்டை உற்றுப்பார்க்கிறார். அவர் கண் எப்போதும் என்மேல் இருக்கும்படியாக அவர் என்னைச் சிநேகிக்கிறார். ஆ கர்த்தாவே, தேவரீர் என் சிறுமையையும் என் வருத்தத்தையும் பார்த்தருளும். சங்கீ. ௨௫, ௰௮.

நான் பராபரனுடைய செவியை அறிந்திருக்கிறேன். அது என் கூப்பிடுதலைக் கவனிக்கிறதென்று எனக்குத் தெரிகிறது. மனுஷர் தங்கள் காதுகளை எனக்கு முன்பாக அடைத்துக் கொண்டாலும், பராபரனுடைய செவிகள் எப்போதும் எனக்குத் திறந்திருக்கிறது. நான் அவரண்டையில் எத்தனை விசை வந்து கூப்பிட்டாலும், எவ்வளவு நேரங் கூப்பிட்டாலும், அது அவருக்கு அலட்டாய்த் தோன்றுகிறதில்லை. அவர் என் வாயிலே இருந்து புறப்படுகிற வார்த்தைகளைக் கேட்கிறதல்லாமல், என் இருதயத்தின் வியாகுலத்தையும் விருப்பத்தையும் கேட்கிறார். சங்கீ. ௩௪, ௰௫. கண்களிலே ஓடுகிற

கண்ணீருடனே நான் அழுகிற என் அழுகையின் சத்தத்தைக் கர்த்தர் கேட்கிறார். சங்கீ. ௬, ௮.

நான் பராபரனுடைய வார்த்தையை அறிந்திருக்கிறேன். தாம் வாக்குத்தத்தம் பண்ணினதைக் காப்பாற்றுகிறார் என்று எனக்குத் தெரியும். எனக்குத் துன்பம் வந்தால், அவர் எனக்குச் சொன்ன வாக்குத்தத்தங்களை அவருக்குச் சொல்லிக் காட்டுகிறேன். அவர் என் காரியத்திலே தம்முடைய வசனம் பொய்யாகவே போக ஒட்டார்.

நான் பராபரனுடைய கையை அறிந்திருக்கிறேன். அது எனக்குச் சிலுவையின் பாத்திரத்தை வார்த்துக்கொடுக்கிறது என்று எனக்குத் தெரிகிறது. தகப்பன் கை பிள்ளைக்கு நஞ்சை வார்த்துக்கொடுக்கக் கூடுகிறது எப்படி. கர்த்தருடைய் கை எல்லாவற்றையும் வேறுப்படுத்தக் கூடுமென்றும் எனக்குத் தெரியும். மனுஷருடைய கைக்கு எட்ட மாட்டாததை பராபரனுடைய கை எட்டிப்பிடிக்கிறது.

பராபரனுடைய பாதத்தை அறிந்திருக்கிறேன். சிலுவையிலே அது எனக்குக் கிட்டிவருகிறதுபோலே பின் ஒரு வேளையிலும் அவ்வளவு கிட்டி வருகிறதில்லை என்று எனக்குத் தெரிகிறது. இக்கட்டு எத்தனைக்குப் பெருகி வருகிறதோ, அத்தனைக்கு அவர் சால கிட்டி வருகிறது. ஏனென்றால் அவர் எனக்கு மெத்த தூரமாயிருக்கிறார் என்று நான் நினைக்கிறபோது, அவர் எனக்கு மெத்த கிட்டியிருக்கிறார்.

ஆனால் அறிவினால் என்ன பயன். அறிவைப் பார்க்கிலும் சிநேகம் நல்லது. எவன் பராபரனைச் சிநேகிக்கிறானோ, அவன் அவரோடே ஐக்கியமாய் இருக்கிறான். சிநேகம் ஒன்றாய்க் கட்டுகிறது. நான் பராபரனோடே ஒன்றாயிருந்தால், அப்போது எனக்கு உபாதி வருவிப்பவன் ஆர். சத்துரு என்னைப் பிடித்தால், என்னை அல்ல, பராபரனைப் பிடிக்கிறவன் ஆவான். என்னை அடித்தால், பராபரனை அடிக்கிறவன் ஆவான். நீ என் உடம்பை மூடிக்கொண்டிருக்கிற வஸ்திரத்தைத் தொடாமல், என் உடம்பைத் தொடக் கூடுமா. நான் ஞானஸ்நானத்திலே இயேசுவைத் தரித்துக்கொண்டேனே. தாயின் கெர்ப்பத்தில் இருக்கிற பிள்ளையைத் தாய்க்குத் தெரியாமல் நீ காயப்படுத்தக் கூடுமா. ஒரு தாய் தன் கர்ப்பத்திலே பிள்ளையைச் சுமந்து கொண்டிருக்கிறதுபோல்; பராபரன் என்னைத் தமது சிநேகத்திலே சுமந்துகொண்டிருக்கிறார். மாங்கிஷம் பராபரனோடே எதிர்த்தால், அதற்கு என்ன முடிவு சம்பவியாது. நான் அதற்குத் துணியேன். தலையால் சுவரிலே முட்டினால், சுவர் இடியாமல் தலை உடையும்.



பராபரனை அறிந்தவன் அவரைச் சிநேகிக்க வேண்டியது அவசியம். அவரைச் சிநேகிக்காதவன் அவரை இன்னம் அறிந்தவன் அல்ல. அவர் அத்தனை மதுரமும் முடிவில்லாத புத்திக்கெட்டாத இன்பமுமாயிருக்கிற படியால், அவரை அறிந்தவன் எல்லாம் அவரைச் சிநேகிக்காமல் இருக்க முடியாது.

இன்னம் ஒன்று இருக்கிறது. அதாவது, அறிகிறது நல்லது. சிநேகிக்கிறது கெட்டது. நான் உலகத்தை அறிகிறேன். அது மாயையும் வஞ்சகமுமன்றி வேறல்ல என்று எனக்குத் தெரிகிறது. அது தருகிறேன் என்று சொன்னதைக் கொடுக்கிறதில்லை. அது கொடுக்கிறதை விட அதிகமாய் வாங்குகிறது. அதின் சுபாவம் ஒன்று, அது புறம்பே தன்னைக் காட்டும் வேஷம் வேறொன்று. புறம்பே ரூபம், உள்ளே குரூபம். புறம்பே இன்பம், உள்ளே துன்பம். கொமோரா பட்டணத்துப் பழம்* போலும், எகிப்து கோபுரம் போலும், சாந்து பூசப்பட்ட கல்லறைகள் போலும் இருக்கிறது. அதின் திரவியம் சேறு, அதின் மகிமை அந்தகாரத்தின நிழல், அதின் சந்தோஷம் தித்திப்பான விஷம். அதை அறிந்தவன் ஆரோ, அவன் அதைச் சிநேகிக்கான். அது பொல்லாப்பிலே முற்றும் அமிழ்ந்து கிடக்கையிலே அதில் நன்மை இருப்பது எப்படி. பராபரனை அறியவும் அவரைச் சிநேகிக்கவும் நான் படிப்பேன். உலகத்தையோ அது வீண் என்று அரோசிக்கப் படிப்பேன்.

௯௧. தியானம்.

## மனஸ்தாபக் கண்ணீரைப் பற்றியது.

*காற்று அனலாக, ஊற்றும் பெருமழை. மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை. இருதயம் உருகில், கண்ணீர் பெருகும்.*

நீ உன் பாவத்துக்காக அழக் காண்கிறேன். ஆ, இயேசு நாதர் தமது கண்ணீரால் பரிசுத்தமாக்கின விலையுயர்ந்த கண்ணீர் இதுவே. இயேசுவின் சிநேகம் உன் இருதயத்தைச் சூடாக்கிற்று என்பதற்கு இதுவே சாட்சி. பனிக்கட்டியை வெயிலிலே போட்டால், இளகிக் கரைந்துபோம். மெழுகை நெருப்பிலே போட்டால், உருகுமே. அதுபோல் இயேசு

*) கண்ணுக்கு அழகாயிருந்தபோதிலும், தொட்டால் சாம்பலாய்ப்போகும்.

வின் சிநேகப் பார்வையால் இருதயம் கரைந்து கண்களிலே
கண்ணீர் ஆருய்ப் பெருகுமே.

இயேசு பேதுருவை நோக்கிப்பார்த்தபோது, பேதுரு
மனங்கசந்து அழுதாரே. இடியும் மின்னலும் கூடிச் சொரி
கின்ற மழையைப் பார்க்கிலும் காற்று அமர்ந்திருக்கையில்
எங்கும் பரந்து தூறுகிற தூற்றலே நான் அதிகமாய் எண்ணு
கிறேன். அப்படியே மோசே தன் சாபத்தின் இடிமுழக்கத்தி
ஞல் வருவிக்கிற கண்ணீர் வெள்ளத்தைப்பார்க்கிலும் இயேசு
வின் சிநேகம் புறப்படப்பண்ணுகிற கண்ணீர்த் துளிகளை அதிக
மாக எண்ணுகிறேன். மோசேயின் இடிமுழக்கம் நின்ற உட
னே அதனுலுண்டான கண்ணீரும் நின்றுபோம். இயேசுவின்
சிநேகத்தினுலுண்டான கண்ணீரோ நின்று போகாமல் இரு
தயத்தைத் தொடர்ந்தேற்றியான மனஸ்தாபத்தில் நிலைத்
திருக்கச் செய்கிறது. ஒருபாட்டம் பெருமழையிலும் தூற
லான மழை நேரப்பட நிற்கிறது. கல்லுப்போல் அழுத்தமா
யிருக்கிற இருதயத்திலிருந்து மோசேயினுல் வெள்ளம் புறப்
பட்டாலும் அந்த இருதயம் முன்போல் அழுத்தமாயிருக்
கும். அன்று மோசே கன்மலையை அடித்தபோது தண்ணீர்
புறப்படவில்லையா. இயேசுவின் சிநேகத்தினுல் உண்டாகும்
கண்ணீரோ அவருடைய ஆறுதலால் இளகிப்போன இரு
தயத்திலிருந்து மாத்திரம் புறப்படுகிறது.

குணப்படுதலின் கண்ணீர் சிநேகத்தின் கண்ணீரா
யிருக்க வேண்டும். மற்றப்படி அது பராபரனுக்குப் பிரிய
மாகாது. நான் செய்த குற்றத்துக்காக அழாமல், நான்
செய்த பாவத்துக்காக அழாமல், நான் பெற்ற தண்டனைக்காக
அழுது சிந்துகிற கண்ணீரும் வீணுகத் தரையிலே விழுந்து
பலனற்றுப்போகிறது. ஆனுல் பராபரனுடைய சிட்சைய
ஞல் எனக்கு வரும் வருத்தத்துக்காக அழாமல் நான் பாவத்
தினுல் பராபரனுக்கு வருவித்த மனவருத்தத்துக்காக நான்
அழுதால், அந்த அழுகை பராபரனுடைய பாத்திரத்திலே
விழுந்து பரமண்டலத்திலே பலனுக்கென்று சேர்த்து வைக்
கப்பட்டிருக்கும். மார்த்தீன் லுத்தர் சாஸ்திரியார் சொல்லு
கிறதாவது: பாவங்களையும் அதினுல் வரும் நஷ்டங்களையும
மாத்திரம் எடுத்துக் காட்டுவதினுல் ஒருவனுக்குள் மனஸ்தா
பத்தை உண்டுபண்ணப் பார்ப்பது மோசம் போக்கும் மாய
மாலமே. நாம் கிறிஸ்துவையும் அவருடைய காயங்களையும்
நோக்கிப்பார்த்து, அதனுல் அவர் நமக்குப் பாராட்டின சிநே
கத்தையும் நாம் அவருக்குக் காட்டிய நன்றி கேட்டையும்
உணர்ந்துகொண்டு, இப்படியாக இயேசுக் கிறிஸ்துவின் பேரி
லே முழுப்பற்றுதலையும் வைத்து நம்மையே அருவருத்து



நமது பாவத்துக்காக அழ வேண்டும் என்கிருர். பராபரன்
என்னைத் தண்டித்தால் அதற்காக நான் அழேன். ஏனெனில்
அதற்கு நான் பாத்திரனுனேன். ஆனுல் எனக்கு ஆத்தும சரீ
ரப்பிரசாரம் இத்தனை நன்மை செய்த பிதாவாகிய பராபரனுக்
கும் எனக்காக அத்தனை வருத்தப்பட்டு தமது விலை மதியாத
இரத்தத்தினுல் என்னைத் தமக்குச் சம்பாதித்துக்கொண்ட
இயேசுவுக்கும், என் இக்கட்டிலே எனக்கு ஆறுதல் வரு
வித்து நீ பராபரனுடைய பிள்ளையாயிருக்கிருய் என்று எனக்
குள் சாட்சி கொடுக்கிற பரிசுத்த ஆவிக்கும் நான் எத்தனை
விசை கோபம் வருவித்தேன் என்கிறதற்காக அழுகிறேன்.
இப்படிப்பட்ட என் கண்ணீர் பராபரனுக்குப் பிரியமாகும்
என்று நான் அறிந்திருக்கிறேன்.

௱௨. தியானம்.

## சிலுவையிலே உண்டாயிருக்கிற தேவ ஒத்தாசையைப் பற்றியது.

*மற்றவர்களைப் போல நானும் பராபரனுக்குக் கிட்டியிருக்கிறேன்.*

அப்படியிருக்க, நல்ல ஆத்துமமே, நீ சிலுவைக்குப் பயப்
படுகிறதென்ன. மற்றவர்களைப்போல நீயும் பராபர
னுக்கு அவ்வளவு நெருங்கியிருந்தால், அவரும் மற்றவர்க
ளுக்கு இருப்பதுபோல் உனக்கும் அதிகமாய் நெருங்கியிருக்
கிருரே. பராபரனுடைய பிள்ளைகள் எல்லாரும் ஒரே இரு
தயத்துக்கு அடியிலே இளைப்பாறி, எல்லாரும் ஒரே மடி
யில் உளுக்கார்ந்திருந்து, எல்லாரும் சரியாய் வித்தியாசமில்
லாமல் பராபரனுக்குக கிட்டியிருக்கிருர்களே.

உபத்திரவம் பெரிதாயிருக்கிறதென்று நீ முறையிடு
கிருய். நீ படுகிற பாடுகளைப்போல் பட்டவர்களில் ஒரு
வரையும் நீ அறிந்ததில்லையோ என்று உன்னைக் கேட்கிறேன்.
ஆம், இன்னின்னுன் இப்படிப்பட்டவனுயிருக்கிருன் என்கி
ருய். நல்லது, அப்படியானுல் நீயும் அதற்குச் சம்மதிக்கிரு.
நீ இன்னின்னுனைப்போலே பராபரனுக்கு அவ்வளவு கிட்டி
யிருந்தால், இன்னின்னுனைப்போல நீயும் சிலுவைக்குக் கிட்டி
யிருக்கிருய்.

எனக்கு வெகு சத்துருக்களுண்டு என்று முறையிடு
கிருய். தாவீது இராசாவும் அப்படியே: ஆகர்த்தாவே, என்
சத்துருக்கள் எத்தனையாய்ப் பெருகினுர்கள் என்று முறை
யிடுகிருர். சங்கீ. ௩, ௧. ஆகையால் நீயும் தாவீதும் ஏக

மாய்ப் பராபரனுக்குக் கிட்டியிருக்கிறீர்கள். இது உனக்குச் சந்தோஷம் அல்லவா?

சரீரவேதனை உனக்கு உண்டாயிருக்கிறது. யோபு எத்தனை வேதனையினாலே நிறையப்பட்டிருந்தான். ஆதலால் யோபும் நீயும் சரியாய்ப் பராபரனுக்குக் கிட்டியிருக்கிறீர்கள். இது ஆறுதல் அல்லவா?

கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சீயோனோடு கூட நீ புலம்புகிறாய். ஏசா. ௪௯, ௰௪. தேவ சுதனாகிய இயேசுவும் சிலுவையிலிருந்து: என் பராபரனே, என் பராபரனே, நீர் என்னைக் கைவிட்டதேது என்று கூப்பிட்டாரே. சங்கீ. உஉ, க. ஆதலால் இயேசுவும் நீயும் பராபரனுக்குச் சரியாய்க் கிட்டியிருக்கிறீர்கள். நிச்சயமாகவே இது மகா ஆறுதலான சொல். இயேசுவைப் போல நானும் பராபரனுக்குக் கிட்டியிருக்கிறேன் என்கிற நிச்சயத்தை என் சிலுவையானது எனக்குக் கொடுக்கிறது. நான் அதிலும் அதிகமாய்ப் பராபரனுக்குக் கிட்டியிருக்கக் கூடுகிறதெப்படி. பராபரனுக்குள் நாம் இயேசுவின் இருதயத்துக்கு எத்தனையாகக் கிட்டியிருக்கிறோமோ, அத்தனையாக அவர் பாடுகளுக்கும் கிட்டியிருக்கிறோம்.

நான் மனமடிய வேண்டியதாகிறதே என்கிறாய். அது எதினாலே? மற்றவர்கள் பராபரனுக்குக் கிட்டியிருக்கிற அம்மாத்திரம் நீ அவருக்குக் கிட்டியிருக்கவில்லையா. மற்றவர்களுக்குப் பராபரன் சிலுவையிலே தமது ஆறுதலோடு கிட்டியிருக்கிறது போல், உனக்கும் கிட்டியிருக்கிறதில்லையா. எப்போதாகிலும் ஒரு பரிசுத்தவான் மனமடிவானதுண்டா.

என் பாவம் என்னை வாதிக்கிறது என்கிறாய். எசேக்கியா இராசாவின் பாவமும் அவரை வாதித்ததே. ஆனால் எசேக்கியா: தேவரீர் என் ஆத்துமாவை அழிவின் குழிக்கு விலக்கி, அரவணைத்தீர். ஏனெனில் என் பாவங்களை எல்லாம் உமது முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட்டீர் என்று ஸ்தோத்திரம் செய்தார். ஏசா. ௩௮, ௰௭. இவரைப்போல பராபரனுக்கு அத்தனை கிட்டினவனாயிருந்தால், நீயும் ஒருவிசை அப்படி ஸ்தோத்திரிப்பாய்.

நான் பசியும் பட்டினியுமாய்க் கிடக்கிறேன் என்கிறாய். எலியாவுக்கும் அந்தப் பாடு தான் வந்தது. அவருக்குப் போசனம் கொண்டு வருவதற்கான காகமும் பராபரனுக்கு உண்டாயிருந்ததல்லவா. அவருக்குக் காகங்களை எழுப்பிவிட்டாரே. உனக்கு உதவிசெய்கிறதற்கான ஒரு தர்ம சிந்தையுள்ளவனை எழுப்பிவிடவும் அவரால் ஆகும். நீயும் எலியாவைப்போல் அவருக்கு அத்தனை கிட்டியிருக்கிறாய்.



ஒரு சிலுவையும் என்னை மனமடியச் செய்யாது. பராபரனுடைய பிள்ளைகளிலே ஒருவனும் எனக்கு முன்னாலே மனமடிவானதில்லையே. பராபரன் எப்போதும் ஒத்தாசை பண்ணிக்கொண்டே வந்திருக்கிறார். நானும் மற்றவர்களைப் போல் அவருக்கு அத்தனை கிட்டியிருக்கிறேன். காலம் சென்று போனாலும், அவர் இன்னம் மாறாத உண்மையும் தயையும் அன்பும் உள்ளவராய்த் தான் இருக்கிறார். அவர் இருதயம் மாறிப்போகவும் இல்லை, அவர் கை குறுகிப்போகவும் இல்லை. பராபரனே, தேவரீர் இன்றும் என்றும் மாளாச் சம்பன்னர். நான் பற்றும் என் நம்பிக்கை தேவரீரே.

௩௯. தியானம்.

## மன அடக்கத்தைப் பற்றியது.

பராபரனுக்குப் போதியாதே.
உனக்கும் நீயே போதித்துக்கொள்ளாதே.
அவரையே உனக்குப் போதிக்கச் சொல்லு.

இந்த மூன்று காரியத்தையும் மனதிலே வைத்துக்கொள். அதினால் உனக்கு வெகு பலன் உண்டாயிருக்கும். பராபரனுக்குப் போதியாதே. அவர் யாவும் கற்றறிந்தவர். அவரைப் பள்ளிக்கூடத்தில் வைக்கிறதற்கு அவர் மிகவும் வயது சென்றவராயிருக்கிறாரே. அவர் அளவில்லாத ஞானமுள்ளவராயிருக்கிறபடியால், நீ அவருக்கு ஆசானாயிருக்கக் கூடாது. ஆதலால் அவருக்கு இப்படி அப்படி என்று வகை சொல்லாதே. பராபரன் எவனையும் தமக்கு யோசனை சொல்ல ஒட்டார். தேறின மாளுமி தனக்குப் பணிக்குச்சொல்ல ஒட்டான். வெகு நாளாய்ச் சேவிக்கிற விவேகமுள்ள சேவகன் தனக்கு வெகுவாய்ச் சொல்வதைச் சகிக்க மாட்டான். என்ன, பராபரனைப் பார்க்க உனக்கு அதிகமாய்த் தெரியுமா என்று உன்னைக் கேட்கிறேன். அதற்கு, ஆம், அத்தனை தெரியும் என்கிறாய்.. ஆனால் உனக்கு அதைப் படிப்பித்துக் கொடுத்தவன் ஆர். பிறத்தியான் எனக்குப் படிப்பித்துக் கொடுத்தான் என்கிறாய். அவனுக்குப் படிப்பித்துக்கொடுத்தது ஆர். சகல ஞானமும் பராபரனால் வருகிறதல்லவா. ஆதலால் பராபரனுக்கு உன்னை விட அதிகமாய்த் தெரிந்திருக்க வேண்டும். பராபரனைப் பார்க்க எனக்கு அதிகமாய்த் தெரியாது என்றால், எல்லாம் அறிந்திருக்கிற பராபரனுக்கு நீ ஆலோசனை சொல்லத் துணிகிறதென்ன.

உன்னை நீயே போதியாதே. உன் ஆலோசனை உனக்குக் கேடாகும். சகல இச்சைகளிலும் விசாரங்களிலும் கெட்டவனாக இருக்கிற நீ துன்மார்க்கத்தைவிட வேறென்னத்தை உனக்குப் போதித்துக்கொள்ளலாம். நீ உன்னையே நடத்த வேண்டியிருந்தால், எத்தனை சேதமான மோசவழிகளில் அகப்பட்டுப்போவாய். மாமிசமும் இரத்தமும் தனக்கே சுயவழி உண்டுபண்ணி தன் சித்தப்படி நடத்துகிறது. உன்னிடத்திலே இருக்கிற வஞ்சகனைப்போல அத்தனை பொல்லாதவஞ்சகன் பின் ஒரு இடத்திலும் இல்லை. நீ எத்தனை விசை விழுகிறாய். உன்னை இடறிவிழத் தள்ளினதார். நீயும் உன் பழைய ஆதாமும் தானே. ஆகையால் உனக்கு அடுத்தவனாயிருக்கிறவனும் உன் மடியிலே தூங்குகிறவனும் இன்னானென்று நீ நன்றாய் அறிந்து அவனை நம்பாதே. அவன் ஆரெனில், நீ தான்.

பராபரனையே உனக்குப் போதிக்கச் சொல்லு. அவர் உத்தம போதகர். அவர் உனக்குத் தமது பள்ளிக்கூடத்தை ௩௨-ம் சங்கீதத்திலே திறந்திருக்கிறார். உனக்கு நாம் புத்தி படிப்பித்து, நீ நடக்க வேண்டிய வழியில் உன்னைப் போதிப்பிப்போம் என்கிறார். ஒரு கிறிஸ்தவன் தன் சித்தத்தைச் செய்யாமல், பராபரன் சித்தத்துக்கே தன்னைக் கையளிக்க வேண்டும். தன் சுய மனதின்படி உலகத்தின் விசாலமான வழிகளில் நடக்காமல், அவர் தன்னைக் கூட்டிக்கொண்டுபோகிற வழியிலேயே நடக்க வேண்டும். அந்த வழியிலே பல துன்பத்தைக் கடந்துபோக வேண்டியிருந்தாலும், அது பரமண்டலத்துக்குக் கூட்டிக்கொண்டுபோகிற வழி என்பது நிச்சயம். ஒரு குற்றவாளியை மிகவும் வேடிக்கையும் சந்தோஷமுமான வழியால் கூட்டிக்கொண்டுபோனாலும் அந்த வழி அவனைத் தூக்கு மரத்தில் தூக்குகிறதற்குக் கொண்டுபோகிற வழியாயிருந்தால், அவனுக்குப் பலன் என்ன. பராபரன் என்னைப் பலபல துன்பத்தின் வழியாய்க் கொண்டுபோனாலும், நான் எப்படியும் கடைசியிலே மோட்சத்தைக் காண்கிறதாய் இருந்தால், எனக்குச் சேதம் என்ன. நான் என்னைப் பராபரனுக்குக் கையளித்து விடுவேன். அவர் தமக்குப் பிரியமானபடி என்னை நடப்பிக்கட்டும். அவர் ஒருக்காலும் எனக்குத் தீங்கு நினைக்கிறதில்லையே. கர்த்தாவே, உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் படிப்பியும். ஏனெனில் தேவரீர் என் பராபரன். உமது நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக. சங்கீ. ௱௪௩, ௰.



௱௪. தியானம்.

## நாவுக்குக் கடிவாளம் போடுவதைப் பற்றியது.

வழுவழுப்பு, வழுவழுப்பு. எச்சரிக்கையாய் இரு.

நாவானது வழுவழுப்பான இடத்திலே இருக்கிறது. ஆதலால் மனுஷன் தன் பேச்சிலே அடிக்கடி இடறிவிழுகிறது அதிசயமா. சறுக்கலான இடத்திலே நடப்பவர் ஒவ்வொரு அடியையும் எண்ணிவைத்து, எச்சரிக்கையோடே நடவாவிட்டால், சேதமற்றுப்போகக் கூடாது.

நாவானது சின்ன அவயவம். ஆனால் அது பெரிய அமளிபண்ணும். அது ஒரு சின்ன நெருப்பு, ஆனால் அது எத்தனை பெரிய காட்டைக் கொளுத்திவிடும். அது அநியாயமுள்ள உலகமும், அடங்காத பொல்லாப்பும், விஷமான சர்ப்பமுமாயிருக்கிறது. ஏனென்றால் பாம்பு தன் விஷத்தைக் கடைவாயில் அடக்கிக் கொண்டிருக்கிறாப்போலே, சரீரத்தையும் ஆத்துமத்தையுங் கொல்லுகிற விஷத்தை நாவானது தனக்குள்ளே அடக்கிக்கொண்டிருக்கிறது. அது அடங்காத முரட்டு குதிரையாயிருக்கிறது. கடிவாளத்தை அதற்குத் தளர்த்திவிட்டால், அது ஆயிரங் காட்டுவழிகளில் போகிறதும் அல்லாமல், அப்புறம் அதை அடக்குகிறது மகா வருத்தம். நல்ல இருதயமே, விவேகத்தோடும் எச்சரிக்கையோடும் அதற்குக் கடிவாளம் போட்டு அடக்கவேண்டும். ஒரு கப்பல் அதிகப் பெரிதாயிருந்தும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், நடத்துகிறவன் மனது எவ்விடத்திற்கு நோக்குகிறதோ, அவ்விடத்துக்கு மெத்த சின்ன சுக்கானாலே நேராகத் திருப்பப்படுகிறது. தாவீது இராசா அந்த சுக்கான் பிடித்த நேர்த்தியை அவர் சொல்லுகிற வசனத்தினால் அறிந்துகொள். நான் என் நாவினாலே பாவம் செய்யாதபடிக்கு என் வழிகளைக் காத்து, என் நாவைக் கடிவாளத்தால் பத்திரப்படுத்துவேன் என்று பிரதிக்கினை பண்ணிக்கொண்டேன் என்கிறார். சங்கீ. ௩௯, ௧. நீயும் கர்த்தரிடத்திலே அப்படி பிரதிக்கினைபண்ணு. அப்போது நீயும் சரியாய்ப் பேசுவாய். உன் நாவு ஒரு நரம்பாலே இருதயத்தோடும், இன்னொரு நரம்பாலே மூளையோடும் கட்டப்பட்டிருக்கிறது. அதைங் கவனித்தால், புத்தியாய் நடப்பாய்.

எல்லாவற்றிற்கும் முன்னே உன் இருதயத்தைச் சுத்திகரி. கடலிலிருந்து மதுரம் உண்டாகாததுபோல, கெட்ட இருதயத்திலே இருந்து நன்மையான பேச்சு புறப்படாது. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் தன்

இருதயத்தின் நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதுகளை எடுக்கிறான். பொல்லாத மனுஷனோ பொல்லாததுகளை எடுக்கிறான். மத். ௰௨, ௩௫. ஆகாத வேர் உன் இருதயத்தில் முழுதும் அற்றுப்போகும்படி அதை முழுவதும் சுத்திகரிக்க உன்னாலே கூடாதென்கிறதே மகா பரதாபம். இதினாலே தான் பரிசுத்தவான்களும் தங்கள் பேச்சிலே அடிக்கடி இடறுகிறார்கள். இப்படி மோசேயைக் குறித்தும் அவருக்குக் கோபமூட்டினதினாலே தன் உதடுகளால் பதறிப்பேசினாரென்று எழுதியிருக்கிறது. சங்கீ. ௱௬, ௩௩. ஆ, நீ அதை நினைத்து அதிக எச்சரிக்கையாயிரு.

ஆனால் இது நிமித்தம் உன் இருதயமும் வாயும் பேச்சினாலே இரண்டு பட்டுப்போகாதபடி எச்சரிக்கையாயிரு. சுபாவமாய் இணைக்கப்பட்டதை நீ பிரிக்காதே. வார்த்தைகள் இருதயத்துக்குச் சாட்சிசொல்லுகிறது. நீ பொய்ச்சாட்சிக்காரனாகாதபடிக்குச் சாவதானமாயிரு. வாய் பேசுகிறதை இருதயம் உணர வேண்டும். இருதயம் நினைக்கிறதை மாத்திரம் வாய் பேச வேண்டும். ஆகையால் நீ முன்பின் விசாரியாமல் பதறி வாயில் வந்தபடி பேசுகிறவனாகாதபடிக்கு உன்னைக் காத்துக்கொள். நீ பேசும் முன்னே, நீ பேச வேண்டும் என்று இருக்கிறதைக் குறித்து உன் தலையில் இருக்கும் புத்தியோடு யோசனை பண்ணு. பேசுகிறதற்குத் தாமதமாயிருங்கள் என்று பரி. யாக்கோபு சொல்லுகிறதே நல்ல யோசனை. யாக். ௧, ௰௯. ஒரு கிறிஸ்தவன் நான் பேசுகிற இந்த வார்த்தையினால் பராபரனுடைய மகிமைக்குப் பின்னம் வருமோ, பிறத்தியானுக்கு இடறலாவது மனஸ்தாபமாவது சேதமாவது வருமோ, என் சொந்த மனச்சாட்சிக்கு அதினால் கலக்கம் வருமோ, என்று தான் பேசும்முன் தனக்குள்ளே ஆராய்ந்து பார்த்து, பிறகு பேசவேண்டுமே அன்றி, அதற்கு முன் தன் வாயில் இருந்து ஒரு சொல்லாவது புறப்படுகிறதற்கு இடங் கொடுக்க ஒண்ணாது. ஆ, என் நாவினாலே நான் இடறுண்டு விழாதபடிக்கும், என் நாவு என்னைக் கெடுக்காதபடிக்கும், நான் என் வாய்க்குப் பூட்டும் என் உதடுகளின் பேரிலே முத்திரையும் போடக் கூடுமாகில் காவலை. சீராக் ௨௨, ௩௩. என் பரனே, நான் அப்படிச் செய்ய எனக்கு உதவிசெய்யும்.



## ௱௫. தியானம்.

## பாக்கியமான மரணத்தைப் பற்றியது.

கடைசியானதே வாசி.

உலகமே, உனக்கு அது கவையில்லை. நீ அதை நம்புகிறதும் இல்லை. வாலிபரும் கிழவரும் எங்கே பார்த்தாலும் பெரியதனத்துக்கு அடித்துக்கொள்ளுகிறார்கள். மிகுந்த பெரியதனம் மிகுந்த பயித்தியம். பாவமே, உனக்கும் எனக்கும் வழக்கு இருக்கிறது. நீ என்னோடு கூட உலகத்தில் உட்பிரவேசிக்கிறாய். அதை நான் தடுக்க முடியாது. நீ என்னோடு கூட உலகத்தை விட்டுப்போக வேண்டும் என்றிருக்கிறாய். ஆனால் அது ஆகாது. எனக்கு முன்னாலே போகும் மேன்மையை நான் உனக்குத் தருகிறேன். நீ முந்தினது. நான் பிந்தினவன். பிந்தினதே வாசி.

நான் மனுஷனாய்ப் பிறந்த போதே பாவியாகவும் பிறந்தேன். பாவமும் மனுஷனும் ஒருமிக்கத்தான் தோன்றி வளருகிறது. விதையைப்போல் பழமும் இருக்கும். பாவமுள்ள தாய்தகப்பன்மார் பாவமுள்ள பிள்ளைகளைப் பெறுகிறார்கள். இதோ, துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்திலே கர்ப்பம் தரித்தாள். சங்கீ. ௫௧, ௬. பெர்னார்து என்பவர்: நான் கருப்பிடிக்கையில் தானே வேரில் பற்றின வியாதி நான் இருந்த கர்ப்பத்தை அசுத்தமாக்கிற்று என்று நன்றாய்ச் சொன்னார். பாவம் மனுஷனோடு கூடத்தோன்றி எழுகிறாப்போலே அது அவனோடு கூட வெளிப்பட்டு இறங்கவும் பார்க்கிறது. ஆ அப்படி வேண்டாம். பாவத்தில் சாகிறதை விட நிர்ப்பாக்கியமானது எது. மனஅழுத்தமான யூதர்களை இயேசு நாதர் எப்படி உறுக்கினார் என்றால்: நான் போகிறேன், நீங்கள் உங்கள் பாவத்திலே சாவீர்கள் என்றார். யோவா. ௮, ௨௧. இயேசுவைப் பற்றிக்கொள்ளாமல் சாகிறவன் எல்லாம் பாவத்திலே சாகிறான், அவன் என்றென்றைக்கும் கெட்டுப்போகிறான். உன் காலிலே பெரிய பாரக்கல்லு கட்டியிருக்கிறபோது, நீ உயர்ந்த மலைமேலே தொத்தி ஏறுகிறது எப்படி. பாவம் உன்னை நரகத்தில் இழுத்துக்கொண்டு போகிறதாயிருக்கிறதே.

பராபரனுடைய கிருபையினாலே நான் செய்திருக்கிற தீர்மானம் என்னவெனில், பாவம் முந்திச் சாகவேண்டும். நான் கிறிஸ்துவின் ஆவியைக்கொண்டு மாமிசத்தின் கிரியைகளை என்னில் அன்றாடகம் கொல்லுவேன். அது என்னை ஆளும்படி சற்றும் இடம் கொடேன். என் அன்றாடக குற்

தங்களுக்கு உத்தம மனஸ்தாபப்பட்டு, இயேசுவின் மேல் அதுகளைப் போட்டுவிடுவேன். பாவமே, நீ விலகிக்கொண்டிருக்க மனதானால், என் அருகே வராதே. அதற்கு நான் பெருந்த பலவீனன். அவர் தோள் பலமுள்ளது. உன்னைச் சுமக்க என்னை விட அவர் சமர்த்தர். எனக்குப் பெரிய பாரமான சுமை அவருக்கு ஒரு அணு என்று சொல்லுகிறேன். இப்படி மகிழ்ச்சியாகவும் சாவேன். பாவம் செத்ததானால், மரணத்தின் கொடுக்கு அற்றுப்போகும். அப்போது மரணம் மரணம் அல்ல. பாவமே, நீ செத்தாய். இனி யாதொரு துன்பமும் இல்லை. மரணமே, நான் உன்னை லட்சியம் பண்ணேன். பராபரனிடத்திற்கு ஏறுகிறேன். ஆமென்.

என் இயேசுவே, என் கடைசிநேரத்திலே இப்படியிருக்க எனக்கு உதவி செய்யும். ஆமென்.

௫௬. தியானம்.

## நல்லோர் அருமையைப் பற்றியது.

அதிசயத்திலும் அதிசயம்.

நல்லவன் ஒருவன் பூமியில் இன்னமும் இருப்பது அதிசயந்தான். மனுஷருக்குள்ளே மனுஷர் அகப்படுகிறது அபூர்வமாயிருக்கிறது. எத்தனை பேர் மனுஷத்தனத்தைக் களைந்து போட்டுத்திரிகிறார்கள். ஒருவனைப் பொறாமை விஷமுள்ள பாம்பாக்குகிறது. ஒருவனைச் சண்டைக்குணம் சீறிக்கடிக்கிற நாய் ஆக்குகிறது. பின் ஒருவனைச் சினம் கொடூரமான சிங்கமாக்குகிறது. பின் ஒருவனை பெருந்தீனியும் காமவிகாரமும் அழுக்குள்ள பன்றியாக்குகிறது. மனுஷர் இவ்விதமாக மாறிப் போவதால், மனுஷருக்குள் மனுஷர் அகப்படுகிறது எத்தனை அபூர்வம். எந்தச் சிஷ்டியும் தன் சாதிக்குணத்தை மாற்றுகிறதில்லை. மனுஷன் மாத்திரமே மாற்றுகிறவன். ஆதலால் மனுஷன் அகப்படுகிறது அதிசயம்.

மனுஷருக்குள்ளே ஒரு கிறிஸ்தவனைக் கண்டுபிடிக்கிறது அதிலும் அதிசயம். சீலைத் தொட்ட கை கறையாகாமலிருக்கிறது அரிது. கெட்டுப்போன மனுஷருக்குள் சஞ்சரிக்கிறவன் கெட்டுப்போகாதிருப்பதும் அப்படியே. ஆகாத சம்பாஷணைகள் நற்குணங்களைக் கெடுக்கும் என்று பரிசுத்த பவுல் சொல்லவில்லையா? ௧ கொரி. ௰௫, ௩௩. தண்ணீரானது தான் ஊறிவருகிற ஊற்றின் ருசியையும், அந்தப் பூமியின் வருணத்தையும் எடுத்துக்கொண்டிருக்கிறதில்லையா? பரிமளக்காரன் மேல் பரிமளம் வீசும் அல்லவா? இடைவிடாமல் காட்டில் வேட்டையாடித் திரிகிறவனுக்குக் காட்டுக்குணம் உண்டாகும். ஒருவன் கால் சுடாமல் நெருப்புத்தணல் மேல் நடப்பதும், ஒரு கப்பல் கற்பாறைகள் நடுவே உடையாமல் செலுத்துவதும், சிக்கிக்கொள்ளாமல் கண்ணிமேல் நடக்கிறதும், வேசி வீட்டிலே கற்பைக் காப்பாற்றுகிறதும், கள்ளர் கெபியில் குற்றமற்றவனாயிருக்கிறதும், எகிப்திலே கற்புள்ள யோசேப்பாயிருக்கிறதும, சோதோமிலே நீதிமானாகிய லோத்தாயிருக்கிறதும் எத்தனை வருத்தம். இந்தச் சீர்கெட்ட லோகம் எத்தனை நல்ல மனிதரைச் சீர்கேடாக்கிற்று. ஆனால் சீர்பட்ட கிறிஸ்தவர்களால் சீர்பட்ட பொல்லாதவர்கள் எத்தனை கொஞ்சம்.

ஆகிலும் பாவத்துக்கான சோதனையிராதமட்டும் நல்லவனாயிருக்கிறதும், நன்மைக்குப் பலனும் புகழ்ச்சியும் வரக்காண்கிற மட்டும் நன்மையை அப்பியாசிக்கிறதும் அத்தனை அரிதான வித்தை அல்ல. அநேகம் பாவமுட்செடிகளின் நடுவே சுகந்த புஷ்பம் போலச் சேதப்படாமல் வளருவதும், யாவரும் பகைத்துத் துன்பப்படுத்துகிற நன்மையை அப்பியாசிக்கிறதும் புகழப்படத்தக்கதே. நான் மனுஷர் நடுவே கிறிஸ்தவனாகச் சஞ்சரித்து, என் கிறிஸ்தமான குணத்தினால் அவர்கள் நலம் அடையச்செய்து, அவர்களுடைய மனிதகுணத்தைச் சகித்து வருவேன். என் நல்ல மனச்சாட்சியின்படி உத்தரிக்கக் கூடும் மட்டும் உத்தரிக்கிறேன். ஆகிலும் அவர்கள் மனுஷ குணத்தை நான் ஏற்றுக்கொள்ளேன். ஒருவன் என் சிநேகிதனாயினும், அவன் பாவத்துக்கு நான் சிநேகிதன் அல்ல; அவன் பாவம் அவனுக்கே சொந்தம்.



௫௭. தியானம்.

## விசுவாசத்தின் அசையாத அஸ்திவாரத்தைப் பற்றியது.

முப்புரிநூல் சீக்கிரமாய் அறுந்து. பிரசங். ௪. ௧௨.

அதின் பேரில் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன். பராபரன் தயவுள்ளவராயிருக்கிறார்; அது என்னைச் சந்தோஷிப்பிக்கிறது. பராபரன் சத்தியமுள்ளவராய் இருக்கிறார்; அது என்னைக் காக்கிறது. பராபரன் சர்வத்திற்கும் வல்ல

வராயிருக்கிறார்; அது எனக்குப் பெலன் கொடுக்கிறது. அவருடைய தயவு சிலுவையை என்மேல் சுமத்துகிறது. அவர் சத்தியம் என் சிலுவையைச் சுமக்கிறதற்கு உதவியாயிருக்கிறது. அவருடைய சர்வவல்லமை என்னைச் செயங்கொள்ளப் பண்ணுகிறது. தயவு ஒத்தாசை செய்ய மனதாயிருக்கிறது. சத்தியம் ஒத்தாசையைப்பற்றி நிச்சயம், கொடுக்கிறது. சர்வவல்லமை ஒத்தாசை செய்யப் பெலன் உள்ளது. தயவு அவர் இருதயம், சத்தியம் அவர் வாய், சர்வவல்லமை அவர் கை. பராபரனுடைய இருதயமும் வாயும் கையும் எனக்கென்று இருக்கிறது. இதைவிட எனக்கு அதிகம் வேண்டியது என்ன? அவருடைய இருதயம் இரக்கத்தால் இளகிப்போகிறது. அவருடைய வாய் தேனாய் ஒழுகுகிறது. அவருடைய வலதுகை எல்லாவற்றையும் மாற்றக் கூடியது.

வா, சத்துருவே, உனக்கு தைரியம் இருக்கிறதோ, பார்ப்போம். உன் இருதயம் பொங்கிக் கொந்தளிக்கிறதோ. இருதயத்துக்கு இருதயம் சரி. ஏனெனில் பராபரனுடைய இருதயம் தயை நிறைந்திருக்கிறது.—உன் வாய் பதறிப் பயமுறுத்துகிறதோ. வாய்க்குவாய் சரி. ஏனெனில் பராபரனுடைய வாய் ஆறுதலால் நிறைந்திருக்கிறது.—உன் கை பிடுங்கிக்கொள்ளுகிறதும் காயப்படுத்துகிறதுமாயிருக்கிறது. கைக்குக் கை சரி. ஏனெனில் பராபரனுடைய கை கொடுக்கிறதும் குணமாக்குகிறதுமாயிருக்கிறது. நீ எனக்கு என்ன சேதம் வரப்பண்ணுவாய். உன் இருதயம் என்மேல் தயவாயிருக்கிறதில்லை. பராபரனுடைய இருதயமோ என்மேல் அதிக கிருபையாயிருக்கிறது. ஆ பராபரனுடைய கிருபை மாத்திரம் எனக்கு இருந்தால், உன் தயவை மதியேன். உன் வாய் என் இக்கட்டில் ஒரு ஆறுதலான வார்த்தையையும் எனக்குச் சொல்லாது. அதினால் என்ன. பராபரனுடைய வாயோ மிகவும் என்னை ஆற்றித்தேற்றுகிறது. எவ்வளவு உபத்திரவமோ, அவ்வளவு ஆறுதல். உன் கை என்னிடத்தில் இருக்கிறதைப் பிடுங்கிக்கொள்ளுகிறது. நான் அதைப் பட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. பராபரனுடைய கையோ அதற்குப் பதிலாக எனக்கு வேண்டியதைக் கொடுக்கக் கூடியது.

உலகமே, நீ உன் இருதயத்தை அடிக்கடி ஒரு கணப்பொழுதிலே வேறு படுத்துகிறாய். பிசகான ஒரே சமுசயத்தினால் எவ்வளவு கேடு சம்பவியாது. பராபரனுடைய இருதயமோ மாறாமல் இருக்கிறது. துன்பத்திலும் மரணத்திலுமே அவர் கிருபை உத்தமமாய் வெளியாகிறது. உன் வாய் பொய்யும் புரட்டும் நிறைந்தது. இந்த மோச உலகத்தை



ஆர் நம்பலாம். பராபரனோ வாக்குத் தப்பார், வஞ்சனை செய்யார். அதை நான் நன்றாய் அறிவேன். உன் கைப்பெலன் வெகு சொற்பம். பராபரனுடைய கையோ குறுகிப்போகிறதில்லை. ஆயிரம் வருஷத்துக்குமுன் அவருக்கு இருந்த வல்லபம் இன்றைக்கும் இருக்கிறது, என்றைக்கும் இருக்கும்.

என் பரனே, நான் உம்மை நம்புவேன். ஒருவரும் எனக்கு உதவிசெய்ய மனதில்லாத வேளையில் நீர் உதவி செய்ய மனதாயிருக்கிறீர். ஏனெனில் நீர் தயவுள்ளவராயிருக்கிறீர். ஒருவரால் உதவிசெய்யக் கூடாத வேளையிலும் உம்மால் உதவிசெய்யக் கூடும். ஏனெனில் நீர் சர்வத்திற்கும் வல்லவராயிருக்கிறீர். ஒருவரும் தான் சொன்னதை நிறைவேற்றாதபோதும் நீர் வாக்குத் தப்பாதிருக்கிறீர். ஏனெனில் தேவரீர் உண்மையும் சத்தியமுமுள்ளவர். ஆ தேவரீரை நம்பிப்பற்றிக்கொள்ளும் இருதயமே பாக்கியம் உள்ளது.

௫௮. தியானம்.

## உள்ளான ஆத்துமப் பார்வையைப் பற்றியது.

குருடு, ஆகிலும் அநேகத்தைக் காண்கிறது.

சரீரக்கண் இருள் அடைந்து மங்கிப்போகும் போது, மனக்கண் கூர்மையாய்ப் பார்க்கத் தொடங்கும் என்று பிளாத்தோ என்ற ஞானி நேர்த்தியாய்ச் சொல்லியிருக்கிறார். மனுஷன் புறம்பாக இருக்கிறபடியே உள்ளாகவும் இருக்கிறான். சரீரத்துக்குக் கண் இருக்கிறாப்போலே, ஆத்துமாவுக்கும் இருக்கிறது. புத்தியும் விசுவாசமுமே ஆத்துமக்கண்கள். சரீரக்கண்ணை மனுஷத்தன்மையின்படி கொண்டிருக்கிறோம். ஆத்துமக் கண்ணைக் கிறிஸ்துவதன்மையின்படி கொண்டிருக்கிறோம். சரீரக்கண்ணைக் குறித்து சாலோமோன் இராசா: மனுஷனுடைய ஆத்துமா கர்த்தர் தந்த தீபமாயிருந்து, வயிற்றின் உள்ளுக்குள்ளானவைகளை எல்லாம் ஆராயும் என்கிறார். வாக்கி. ௨௰, ௨௭. ஆத்துமக்கண்ணைக் குறித்து பரிசுத்த யோவான்: பராபரன் வெளிச்சமாயிருக்கிறார். அவரில் இருள் ஒன்றும் இல்லை. அவர் வெளிச்சத்திலே இருக்கிறது போல, நாமும் வெளிச்சத்திலே நடந்தோமேயானால், நமக்கு அன்னியோன்னிய ஐக்கம் உண்டாயிருக்கிறது என்கிறார். ௧ யோவா. ௧, ௫. ௭. ஓமர் என்கிறவருக்கு புத்திக்கண் வெகு கூர்மையாயிருந்தது. அவர் முழுக் குருடராயிருந்தாலும், பிற்காலத்தில் எழும்பின பண்டிதருக்கு அநேக காரியங்களிலே

வெளிச்சங் கொளுத்திக் காட்டினவராய் இருந்தார். கிரேக்க இராச்சியத்தில் அக்காலத்தில் இருந்த அநேக தேசங்கள், பட்டணங்கள், நாடுகள், படைவரிசைகள், கப்பல்கள், குடிகள், மிருகங்கள் முதலியவற்றைப் பற்றி வெகு விவரமாய் எழுதி வைத்திருக்கிறார். அவர் அதுகளைப் பார்க்கக் கூடாதிருந்தும், நாம் அவைகளைப் பார்க்கும்படி செய்திருக்கிறார். விருத்தாப்பியமுள்ள சிமேயோன் இயேசுவைத் தன் கொடுங்கைகளில் ஏந்திக்கொண்டபோது, அவன் விசுவாசக்கண் எவ்வளவு பிரகாசமாயிருந்தது. அவன் சரீரக்கண் பச்சைப் பாலகனை ஏழைப்பிள்ளையை மாத்திரம் கண்டது. அவன் விசுவாசமோ, இந்தப் பிள்ளையினால் இஸ்ரவேலுக்கும் சகல சனசதளங்களுக்கும் உண்டாயிருக்கிற வெளிச்சத்தையும் இரட்சிப்பையும் மகிமையையும் கண்டது. இந்த இரண்டு ஆத்தும வெளிச்சங்கள் நம்முடைய இரண்டு சரீர வெளிச்சங்களைப்பார்க்க மேன்மையானதாயிருக்கிறது. இருளுக்கும் வெளிச்சத்துக்கும் எத்தனை வித்தியாசம் உண்டோ, அத்தனை வித்தியாசம் அதுகளுக்கும் உண்டு. உன் சரீரக்கண் பார்க்கக் கூடிய சகல வஸ்துக்களிலும் சூரியன் மகத்துவமானது. ஆத்துமக்கண்ணோ சூரியனைப் படைத்தவரையும் ஊடுருவப்பார்க்கிறது. நான் என் பராபரனிடத்தில் மனரம்மியமாயிருப்பேன். அவர் கொடுத்தாலும் எடுத்தாலும் அவர் நாமத்துக்கே ஸ்தோத்திரம். அற்பமானதை அவர் பிடுங்கிக்கொண்டால், அதிலும் பெரிதானதை அதற்குப் பதிலாகக் கொடுக்கிறார். மாம்சத்திலே பாடுபட்டும் ஆவியிலே சீர்படுத்தப்படுகிறோம்.

௯௧. தியானம்.

## பராபரனைப்பற்றி உண்டாயிருக்க வேண்டிய எதார்த்த இருதயத்தைப் பற்றியது.

*இருதயத்தை இரண்டாகப் பிரிக்கவொண்ணாது.*

மாயக்காரனே, நீ அதைக் கவனி. சங்கீ. ௰௨, ௧. பராபரன் உனக்கு இரண்டு கண் கொடுத்திருக்கிறார். அதினாலே நீ உயரவானத்தையும், கீழே நரகத்தையும் உற்றுப்பார்க்கலாம். உனக்கு இரண்டு காது கொடுத்திருக்கிறார். நீ வழக்குத் தீர்க்க வேண்டுமென்றால், ஒரு காதை வழக்காளிக்கும், மற்றொரு காதை அவன் எதிராளிக்கும் திருப்பிக்கொடுக்கலாம். இரண்டு கை உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கை



யைப் பராபரன் வசமாய் நீட்டி வாங்கலாம்; மற்றொரு கையால் உன் பிறனுக்குத் தேவையானதைக் கொடுக்கலாம். இரண்டு கால் உனக்குக் கொடுத்திருக்கிறது. ஒரு காலாலே உனக்கு ஊழியஞ் செய்துகொண்டு, மற்றொரு காலால் உன் ஊழியம் தேவையானவனுக்கு உதவலாம். ஆனால் ஒரு நாவும் ஒரு இருதயமும் மாத்திரம் உண்டு. இருநாக்குக்காரராயிருந்து, ஒரு வாயினாலே குளிர்ச்சியும் அனலுமானதைப் புறப்படப்பண்ணி, உளுக்கார்ந்திருக்கும்போது ஒரு பேச்சும், நிற்கிறபோது ஒரு பேச்சும் பேசுகிறவர்களைப் பராபரன் சிநேகிக்கிறதில்லை. இருமனப்பட்டவர்களாயிருந்து, தங்கள் இருதயத்தைப் பங்கிட்டு, தமக்குப் பாதியும் பிசாசுக்குப் பாதியும் கொடுக்கிறவர்களை அவர் எவ்வளவும் மதிக்கிறதில்லை. இருபிரிவான இருதயமுள்ளவர்கள் சுபாவத்துக்கு விரோதமான விகாரப் பிறவிகள்போல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இருதயத்தைப் பராபரனுக்குப் பலியிடவந்தால், அவருக்கு ஏற்காது. கொடுத்தால் ஒன்றில் முழுதுங் கொடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் அணுவளவும் அவருக்கு ஆகாது. இந்த நோக்கம் பிசாசுக்கும் உண்டு. ஏனென்றால் உன் இருதயத்தைப் பங்கிட்டு எனக்கு அரைவாசி கொடுத்தாலும் போதும் என்று சொல்லி, அது உன்னைப் பயிற்றுவிக்காலும், அது முழு இருதயத்துக்கும் தான் அடிப்போடுகிறது. எதினால் என்றால், இரண்டு பிரிவாய்ப்போன இருதயத்தைப் பராபரன் விரும்பார். ஆகையால், முழுதுந் தன்னுடையதாய்ப் போம் என்று அதற்கு நன்றாய்த்தெரியும். ஆ, இருதயம் எத்தனை நுட்பமான மாம்சத்துண்டாயிருக்கிறது. அது பெரிதானாலும் சின்னதானாலும் அதை உனக்குக் கொடுத்தவரும், அதைச் சீர்ப்படுத்துகிறவருமாகிய பராபரன் அதில் வாசமாயிருக்க அதை அவருக்கு ஒப்புவிக்க நீ கடனாளியல்லவோ. ஆனால் இத்தனை சின்னதாகிய உன் இருதயத்தை நீ பங்கிட்டு இன்னம் சிறிதாக்கிப் போடப்பார்க்கிறாய். உன்னுடையதல்லாததும் பராபரனுடையதுமாகிய இருதயத்தைப் பங்கிட உனக்கு அதிகாரம் கொடுத்ததார். பாதி மாத்திரமல்ல, முழுதும் அவருடையதல்லவா. நீ பராபரனையும் பிசாசையும் உன் இருதயத்திலே ஐக்கியமாக்கிக் கொள்ளுகிறதெப்படி. இருவருக்கும் ஒரு இருதயம் பங்காகிறதெப்படி. பராபரன் நன்மையாக்கப் பார்க்கிறதைப் பிசாசு தீமையாக்கப் பார்க்கிறது. பராபரன் சாத்தானுடைய கிரியையை நிர்மூலமாக்குகிறார். சாத்தான் பராபரனுடைய கிரியையைக் குலைத்துப்போடப் பார்க்கிறது. பராபரன் எங்கே வாசம் பண்ணுகிறாரோ, அங்கே மோட்சங் கூட இருக்கிறது. சாத்

தான் எங்கே வாசம் பண்ணுகிறதோ, அங்கே நரகமுங் கூட இருக்கிறது. உன் இருதயம் நரகமும் மோட்சமுமாயிருப்பது எப்படி. பராபரன் குடியிருக்கிற இடத்திலே அவருக்குப் பணிவிடை செய்ய வேண்டும்; சாத்தான் இருக்கிற இடத்திலே சாத்தானுக்குப் பணிவிடை செய்ய வேண்டும். ஒன்றுக்கொன்று ஒத்துவராத இரண்டு எசமான்களுக்கு நீ ஊழியஞ் செய்யக் கூடுமோ. அது மகா மோசமானதென்று நான் அறிந்திருக்கிறேன். என் முழு இருதயத்தையும் எனக்குக் கொடுத்தவர் பராபரன் தான். நான் அதற்கு எசமானாயிருக்க அல்ல, அதற்கு உக்கிராணக்காரனாயிருக்கத் தானே. கொடுத்தவருக்கு உண்மைத்துரோகம் பண்ணுமல், அவருக்கே அதைத்திரும்பக் கொடுக்கிறேன். இருதயம் அவருடையது, என்னுடையதல்ல. அவர் பங்கிட்டுப் பிரிக்க வேண்டுமென்று இருந்தால், அது அவருடைய வல்லமையினுல் அல்லாமல், என் வல்லமையினுல் ஆகாது.

௯௰. தியானம்.

## பின் புறணியைப் பற்றியது.

ஒரு நாக்கிலே மூன்று பட்டையம்.

இது அதிகம் அல்லவா. பின்புறணிக்காரனைக் குறித்துப் பேசுகிறேன். அவன் மூன்று பேரை ஒருமிக்கக் கொல்லுகிருன். தன்னையும், பின்புறணி சொல்லப்படுகிறவனையும், அந்தப் பின்புறணியைக் காதுகொடுத்துக் கேட்கிறவனையும் தானே. பொய்யும் கொலையும் பிரியாதிருக்கிறது. பிசாசைக் குறித்து கிறிஸ்துவானவர்: அது பொய்யனும் ஆதிகொலைபாதகனுமாயிருக்கிறது என்கிருர். யோவா. ௮, ௪௪. பின்புறணிக்காரன் அதைவிட நல்லவன் அல்ல. பிசாசின் சுபாவத்தை அவன் தன்னில் கொண்டிருந்து, அதின் பணிமுட்டாயிருக்கிருன். நமக்கு பிசாசினுல் எப்படி மோசம் உண்டோ, அப்படி பொல்லாத வாயினுலும் எப்போதும் மோசம் உண்டு. பிசாசை மட்டுக்கட்ட ஒருவராலும் கூடாததுபோல், பிறபொல்லாத நாவை மட்டுக்கட்ட ஒருவராலுங் கூடாது. பிறனுக்கு விரோதமாய்ப் பயம் இல்லாமல் பொய் சொல்லுகிறவன் தான் பிசாசு என்று அறிய வேண்டும். பிசாசு சிங்காரவனத்திலே பாம்பு வேஷம் எடுத்து வந்து, தன் விஷத்தை நாவின் கீழே வைத்துக்கொண்டு, தன் பொய்யான நாவி



னுலே குத்தி விஷம் ஏற்றிவிட்டது. பின்புறணியைப்போல அவ்வளவு கூர்மையாய் வெட்டுகிற பட்டையம் ஒன்றும் இல்லை. அதைப்போல அவ்வளவு ஆழமாய்ப் பாய்கிற அம்பு வேறு இல்லை. அதைப்போல வேதனை செய்கிற புண் வேறில்லை. சவுக்கு அடி தழும்புகளை உண்டாக்கும். பொல்லாத வாயோ எலும்புகளை எல்லாம் நொறுக்கிவிடும். பட்டையத்தால் விழுந்த பேர் அநேகர் உண்டு. பொல்லாத வாயால் விழுந்தவர்களோ வெகு கோடி. சீராக்கு ௨௮, ௨௨. பொய்யான வாயால் வருங் காயங்களை ஆற்றுவது கடினம். மற்றக் காயங்களை ஆற்றுவது எளிது.

ஆகிலும் என்மேல் ஒருவன் பின்புறணி சொன்னுல், நான் அதற்கு மனஸ்தாபப்பட மாட்டேன். நான் செபத்தினுல் சாத்தானுடைய தலைமேல் ஏறும்போது, அது தன் பொய்யான நாவினுல் என் குதிகாலை கொத்தாமல் விடாது என்று எனக்கு நன்றுய்த்தெரியும். அது குதிகாலை கொத்துமே அல்லாமல், கொல்ல மாட்டாது. பின்புறணிக்காரர் தங்களுக்குச் சம்மதியானபடி பேசட்டும். நடுத்தீர்வை நாளிலே அதற்கு எல்லாம் கணக்கு கொடுக்க வேண்டும். நான் மனுஷராலே அல்லது ஒரு மனுஷ நியாய நாளின் விசாரிப்பினுலே நியாயந் தீர்க்கப்படுவது எனக்கு அற்ப காரியமாயிருக்கிறது. என் கனம் மற்ற மனுஷர் நாவினுல் உண்டாயிராமல், என்னுடைய நல்ல மனச்சாட்சியினுல் உண்டாயிருக்கிறது. மனுஷர் என்னைப் புகழ்ந்ததினுலே நான் அதிக நல்லவனுய்ப் போகவில்லை. அதுபோல், அவர்கள் என்னை இகழ்ந்ததினுலும் நான் அதிகக் கெட்டவனுய்ப் போகிறதில்லை. பராபரன் என்னை அறிந்திருக்கிருர். பராபரனுலே புகழ்ச்சியைப் பெற்றவனே பாக்கியவான். மேலும் என் கிரியை தானே எனக்குப் பரிந்துபேசி, பின்புறணி பேசுகிறவன் வாயை அடக்க வேண்டியது. பின்புறணி நாள்பட நில்லாது. நிசம் வெளிச்சத்தைச் சிநேகிக்கிறது. சத்தியத்தின் பராபரனுக்கென்று நான் காத்திருப்பேன். அவர் என் வெளிச்சத்தை விடியற்காலத்தின் வெளுப்பைப்போல எழுப்பி, என் குணமாகுதல் சீக்கிரமாய்த் துளிர்விடப்பண்ணுவார். ஏசாயா ௫௮, ௮.

௱௰௧. தியானம்.

## உலகத்தின் மக்களால் மோசம் போகிறதைப் பற்றியது.

சிறு கூட்டத்தோடே சேர்.

ஒன்பது பேரோடு அல்ல, ஒருவனோடு மாத்திரம். இது நல்ல ஆலோசனை. இதைத் தள்ளிப்போடாதே. கிறிஸ்து சொல்வதைக் கேள். கேட்டுக்குக் கொண்டுபோகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. இதற்குள் பிரவேசிக்கிறவர்கள் அநேகம் பேராயிருக்கிறார்கள். ஆனால் ஜீவனுக்குக் கொண்டுபோகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. இதைக் கண்டுபிடிக்கிறவர்கள் கொஞ்சம் பேராயிருக்கிறார்கள் என்றார். மத். ௭, ௰௩. ௰௪. வெகு சனம் அப்படி நடக்கிறதே, நானும் அப்படித்தான் நடக்கிறேன், நீரோட்டத்துக்கு எதிர்த்துத் தனியே நீந்த ஆரால் ஆகும் என்கிறாய். என் நேசனே, வெகு சனக் கூட்டம் பிசாசண்டையில் போனால், நீயும் போகிறாயா? இந்த யோசனை நான் உனக்குச் சொல்ல மாட்டேன். நரகம் மிகவும் தணலாய் எரிகிறது. பூச்சி கொடுமையாய்க் கடிக்கிறது. குறியிலே பட எய்கிற பேர் கொஞ்சம். குறிதப்பி எய்கிற பேர் மிகுதி. பந்தயத்தைப் போய்ப் பிடிக்கிறவர்கள் கொஞ்சம். ஓடியும் வீணாய்ப் போகிறவர்கள் மிகுதி. போராடிக் கிரீடம் பெறுகிறவர்கள் கொஞ்சம். ஆகாசத்தில் அடிக்கிறவர்களாகச் சிலம்பம் பண்ணுகிறவர்கள் மிகுதி. கடைசியில் கரையேறுகிறவர்கள் கொஞ்சம் பேர். இவர்களோடு நீ சேர்ந்துகொள். அப்போது நீயும் இவர்களோடு கரை ஏறுவாய். உலகத்தின் மக்கள் நல்ல வழிகாட்டிகள் அல்ல, மோசமான வழிகாட்டிகளாயிருக்கிறார்கள். நிசமான வெளிச்சங்கள் அல்ல, கள்ள வெளிச்சங்களாயிருக்கிறார்கள்.

நீ இந்தப் பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷந் தரிக்காதே. ரோமர் ௰௨, ௨. நீரோட்டத்துக்கு எதிராக நீந்துகிறது வருத்தம் என்றால், தீமை செய்கிறதை விட, நன்மை செய்கிறது எப்போதும் வருத்தம் என்று நினை. ஏனெனில் உன் மனம் தீமைக்குச் சார்ந்ததாயிருக்கிறது. அதற்கு உதவியான எத்தனங்களும் உனக்கு நிரம்ப உண்டு. நன்மைக்கு நீ சத்துரு. அதற்கு அநேகம் தடையும் உண்டு. ஆசையும் பழக்கமும் அனைத்தையும் இலேசாக்கும். மாங்கிஷத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தினால், நன்மை செய்வது இலேசாகும். வெகு பேர் உன்னை நகைக்கிறதானாலும், சிறு பிள்ளைகளும் கை



நீட்டிக் காட்டி பரியாசம் பண்ணுகிறதைச் சகித்துக்கொண்டு நன் வழியே போகிற பரதேசியைப்போல் நீ இந்த உலகத்தில் இருப்பதாக நினைத்துக்கொள். கர்த்தருடைய பார்வையில் அருமையான புருஷராயிருந்த அப்போஸ்தலருக்கு எப்படி நடந்தது. பவுல் அப்போஸ்தலன் என்ன சொல்லுகிறார்: நாம் தூஷணிக்கப்படுகையில் வேண்டிக்கொள்ளுகிறோம்; உலகத்தினுடைய குப்பைகளைப் போலவும், இதுவரைக்கும் எல்லாரும் துடைக்கிற அழுக்கைப்போலவும் ஆனோம்; லோகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம் என்று சொல்லுகிறார். ௧ கொரி. ௪, ௰௩. ௯. நீ தாவீது இராசாவோடு கூட, நான் கர்த்தருக்கு முன்பாக இதைப் பார்க்கிலும் நீசனாக மனதாயிருக்கிறேன், என்று சொல்லு. ௨ சாமு. ௬, ௨௨. கொஞ்சம் பேருக்குள்ளேயும் அற்பமான மனுஷர் நடுவேயும் இருக்க எனக்கு மெத்த மனது உண்டு. ஏனென்றால் மிச்சமானவர்களும் உயர்ந்தவர்களுமே துன்மார்க்கராயிருக்கிறார்கள். மகா பொல்லாதவனையுங் கூட உலகத்தார் நல்லவன் என்பார்கள்.

ஆனதுபற்றி நான் ஏதேனும் செய்யவேண்டுமானால், எனக்கு முன்மாதிரியானவர்களும் என்னைப் பின்பற்றுகிறவர்களும் மிகுதியோ என்று பாராமல், நன்மை தீமையைப் பகுத்தறியச் செய்கிற பராபரனுடைய சித்தத்தையே நோக்குகிறேன். நான் செய்கிறது வெகுபேருக்கு ஏற்காமல் இருந்தாலும், அதைப்பற்றி எனக்குக் கவையில்லை. பராபரனுடைய கிரியைகளுங் கூட நல்லதென்று ஒப்புக்கொள்ளுகிறவர்கள் வெகு கொஞ்சம் என்கிறதையும் அவர் சகிக்கிறாரே. நான் செய்கிறது பராபரனுக்கும் நல்லோர்களுக்கும் பிரியமானால் போதும். என் பிதாவாகிய பராபரனுக்கு அதினால் கனமும், நல்லவர்களாகிய என் சகோதரர் சகோதரிகளுக்கு எழுப்புதலும் உண்டானால் போதும்.

௱௰௨. தியானம்.

## மனச்சாட்சி சொல்லும் சாட்சியைப் பற்றியது.

நான் அப்படிப்பட்டவனா?

என்னை ஏன் கேட்கிறாய்? உன் மனச்சாட்சியைக் கேள். நீ நல்லவனோ அல்லது பொல்லாதவனோ என்று அது உனக்குச் சொல்லும். சிலர் தங்களைக் குறித்து மற்ற மனுஷர் மெய்ப்பாய்ச் சொல்லுகிறபடியே தாங்கள் இருக்கிறதாக, தங்

களுக்குள்ளே நினைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் அப்படி இல்லை. ஒருவன் தன் மனச்சாட்சியினிடத்தில் அதைப்பற்றி விசாரித்தால், அந்தச் சூதை சீக்கிரத்திலே அறிந்துகொள்ளுவான். நீ தானே உன்னை அறிந்திருக்கிற திட்டமாய் வேறொருவனும் உன்னை அறிந்திருக்கிறதில்லை. ஆகையால் ஒருவனும் உன் அவ்வளவு திட்டமாய் உன்னைப்பற்றிச் சாட்சி சொல்லக் கூடாது. ஆனால் நீ இதிலே பொய்ச்சாட்சிக் காரனாகாதபடிக்குப் பத்திரமாய் இரு. சிலர் நல்லவர்களாயிராதிருந்தும் தற்சிநேகமயக்கத்தால் தங்களை நல்லவர்களாகப் பாவித்துக்கொள்ளுகிறார்கள். நீ வெளிச்சத்துக்கு எத்தனைக்குக் கிட்டுகிறாயோ, அத்தனையாக நீ நன்றாய்ப் பார்க்கலாம். நீ தேவவசன வெளிச்சத்திலும், அதனால் பிரகாசிப்பிக்கப்பட்ட உன் மனச்சாட்சியின் வெளிச்சத்திலும் உன்னை ஊன்றிப்பார். அப்போது நீ அப்படிப்பட்டவனோ, அல்லவோ என்று உடனே அறிந்துகொள்ளுவாய்.

சிலர் தங்கள் பாவங்களை மறைக்கப்பார்க்கிறார்கள். அவர்கள் குற்றஞ் சாட்டப்படும்போது, கோபமாகி: நான் அப்படிப்பட்டவனோ, நான் அப்படிப்பட்ட மனுஷன் என்று நீ நினைக்கிறாயோ என்கிறார்கள். சிநேகிதனே, மிஞ்சின வீம்பு பாராட்டாதே. உன் மனச்சாட்சியை ஊன்றிப்பார். என்னைவிட நீ அதை அதிகமாய் அறிந்திருக்க, என்னை ஏன் கேட்கிறாய். நீ பிறந்த நாள்முதல் நினைத்துப் பேசினதுகள், செய்ததுகள் எல்லாம் பலகையிலே எழுதியிருக்கிறாப்போலே, உன் மனச்சாட்சியில் எழுதியிருக்கக் காண்கிறாயே. இந்தச் சாட்சி ஒருக்காலும் உன்னைவிட்டு விலகுகிறதில்லையே. நீ உனக்கு எவ்வளவு சமீபத்தில் இருக்கிறாயோ, அவ்வளவு சமீபத்தில் அது உனக்கு இருக்கிறதே. ஒருவரும் பார்க்கக் கூடாததும் அதற்கு மறைவாயிருக்கக் கூடாதே. அது சில நேரமாகத் தூங்கினாலும், பிறகு எப்படியும் விழித்துக்கொள்ளுமே; விசேஷமாக சிலுவை வருகிற வேளையில் விழித்துக்கொள்ளுமே. அது எந்த நேரத்தில் பேசாமல் இருந்தாலும், மரண வேளையிலே பேசும் என்கிறதற்குச் சந்தேகம் இல்லையே.

இந்தச் சாட்சிக்குமுன் யாதொரு போக்கும் செல்லாது. அறியாமையினால் அதை செய்தேன் என்பாயோ? ஆ, நீ அதை அறிந்தே செய்தாய் என்று உன் மனச்சாட்சி சொல்லுமே. நான் அதைப் பொல்லாப்பாய் நினைத்துச் செய்ய இல்லை என்பாயோ? உன்னிலுள்ள மெய்யான அந்தச்சாட்சி, நீ உனக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லுகிறாய் என்கிறதற்கு உன்னிலே திடமான சாட்சி சொல்லு



மே. நீ எப்படி வேண்டுமோ, அப்படி புரட்டு. உன் மனச்சாட்சியை நீ ஊன்றிப் பார்க்கும் போது, அது உன் போக்குகளை எல்லாம் உதவாமல் பண்ணிப்போடும்.

எனக்கு நல் மனச்சாட்சி இருந்தால், லோகம் என்னைக் குறித்துச் சொல்லுகிறதை ஒரு பொருட்டாய் எண்ணேன். அது பேசட்டும். நான் ஒரு பொல்லாப்பும் அறியேன். ஆகிலும் நான் என் மனச்சாட்சியை ஒவ்வொரு நாளும் நன்றாய்க் கண்டித்து, நான் அப்படிப்பட்டவனோ என்று கேட்கிறேன். நான் என்னையே வஞ்சிக்க வேண்டியதென்ன? நான் அறிந்தவர்களுக்குள்ளே என்னைப்போல் கெட்டவன் இல்லை. ஏனெனில் என்னை விட அதிகமாய் நான் ஒருவனையும் அறியேன். மற்றவர்களைக் குறித்து நான் கேள்விப்படுகிறதையும், பார்க்கிறதையும் அல்லவோ நான் நம்ப வேண்டும். மனுஷன் சொல்லிலே பொய் உண்டு, கிரியையிலே மாறுபாடு உண்டு; ஆனால் என் மேலே சாட்சி சொல்ல நிசமான ஆயிரம் சாட்சிகள் எனக்குள்ளேயே உண்டு.

௱௰௬. தியானம்.

## பரலோக சிநேகத்தைப் பற்றியது.

நான் இருக்கிற இடத்திலே இருக்கிறதில்லை.

என் நடமாட்டம் பூமி. என் நேசம் பரமண்டலத்தில் இருக்கிறது. ஆத்துமம் தான் சஞ்சரிக்கிற இடத்திலே இராமல், தான் நேசிக்கிற இடத்திலே இருக்கிறது. உடல் சிறைச்சாலையிலும் ஆத்துமம் பரமண்டலத்திலும் இருக்கிறது. இது கட்டப்பட்டிருந்தும் விடுதலை உள்ளது. கோபக்காரன் தன் நினைவு அழிந்திருக்கிறான் என்று சொல்லுகிறார்கள். அது சரியே. ஏனென்றால் எரிச்சலிலே அவன் நினைவு அவனுக்குள் இருக்கிறதில்லை. ஆனால் உலகத்தின் மக்களுக்கெல்லாம் இப்படியே இருக்கிறது. அவர்கள் இப்பிரபஞ்சத்துக்கு அடுத்ததுகளைச் சிநேகிக்கிறபடியால், இப்பிரபஞ்சத்திலே அவர்கள் ஆத்துமம் அமிழ்ந்து போகிறது. அவர்கள் ஆவி மண்ணிலே புதைந்து, விலைமதிக்கக் கூடாத அவர்கள் பொக்கிஷம் சேற்றில் அமிழ்ந்து கிடக்கிறது.

நான் பரமண்டலத்தில் இருப்பதைச் சிநேகிக்கிறேன். அங்கே தான் என் பொக்கிஷம். அங்கே என் இருதயமும் இருக்கிறது. நீ என்னைத் தேடினால், பரமண்டலத்தில் என்னைக் கண்டுபிடிப்பாய். பரமண்டலத்தை என்னிலும் என்

லைப் பரமண்டலத்திலும் காண்பாய். பூமண்டலத்திலும் பரமண்டலம் அதிக நலம் அல்லவா? ஏனெனில் பராபரன் அதைத் தமக்கும், தமது சிநேகிதருக்கும் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார். சிருஷ்டிகர் தமது சிருஷ்டிகளுக்கு மேலானவர் அல்லவா? பராபரனுடைய சிநேகிதர் அவருடைய பகைஞரிலும நல்லவர்கள் அல்லவா?

கண்ணானது சிநேகத்துக்கு வழிகாட்டி என்று சொல்லுவார்கள். பூமியைவிடப் பரமண்டலம் கண்ணுக்கு அதிகமாய்த் தென்படவில்லையோ? பூமியைச் சிறிது காத வழி தூரம் மாத்திரம் காணலாம். வான மண்டலமோ அரைவாசி தூரம் ஒருமிக்கத் தெரிகிறதே. பராபரன் பூமியை என் காலின் கீழாக்கிவைத்தார். ஆனால் பரமண்டலத்தை அவர் என் தலைக்கு மேலாக்கிவைத்தார். ஏனென்றால் பூமிக்கடுத்ததை அசட்டை பண்ணி மிதித்து, பரமண்டலத்துக்கு அடுத்ததைச் சிநேகித்துத் தேடத் தானே.

பூமி எப்போதும் அசைந்து கொண்டே இருக்கிறது என்றும், பரமண்டலம் அசையாமல் நிற்கிறது என்றும் கணக்கர் எண்ணிக் கொள்ளுகிறார்களே. அப்படியே பூமியிலே எனக்கு ஓட்டமும் பிரயாசமும் உழைப்பும் சஞ்சலமும் உண்டு. பரமண்டலத்திலே மெய்யான இளைப்பாறுதல் எனக்கு உண்டாயிருக்கிறது. பூமி கொடுக்கிறது நிலையுள்ளதல்ல. அது ஒருவனிடத்திலிருந்து வேறொருவனண்டை ஓடுகிறது. இன்றைக்கு என்னிடத்திலும், நாளைக்கு உன்னிடத்திலும் இருக்கும். பரலோகம் கொடுக்கிறதோ என்றைக்கும் நிலையாயிருக்கிறது. ஏனெனில் பரமண்டலங்களில் வாசம் பண்ணுகிறவர் ஒரு மாறுதலும் வேற்றுமையின் நிழலும் இல்லாதவர். நான் பரிசுத்த பவுலைப்போல்: பூமியை எனக்குப் பின் வைத்து, பரத்தை முன் வைத்து, என்னை நடுவே வைத்து, பின்னானதுகளை மறந்து, முன்னானதுகளைத் தாவுகிறேன் என்று சொல்லுவேன். பிலிப். ௩, ௰௩. உலகமே, நீ எனக்கு ஒத்துவராய். பரமண்டலமே, நீ என் மனம் வாஞ்சிக்கும் பொக்கிஷம். இயேசுவைத் தாவ என் மனம் பரத்தை நோக்குகிறது. ஆ தேவரீர், என்னை இந்த உலகத்தை விட்டு பரமண்டலத்திலே சேர்த்துக்கொள்ளும்.



௱௰௬. தியானம்.

# மெய்யான சிநேகத்தின் அருமையைப் பற்றியது.

நேச உரிமை வெகு அருமை.

மாயமற்ற சிநேகம் எங்கே இருக்கிறது? உலகத்தில் இருக்கிற சிநேகம் எல்லாம் வேஷமாயிருக்கிறது. அது நரையும் வர்ணமும் சுவரிலே எழுதியிருக்கிற சீவனில்லாத சித்திரமும் போல் இருக்கிறது. அது பேசுகிறது இன்னதென்று நினையாத நாவின் சிநேகம். நிரம்ப வாக்குக் கொடுத்து, கொஞ்சம் கைக்கொள்ளுகிற சொல்லின் சிநேகம்போல் இருக்கிறது. எனக்கு அநேக நல்ல சிநேகிதர் உண்டென்று நீ சொல்லுகிறாய். அப்பா, அவர்கள் எதைச் சிநேகிக்கிறார்கள். உன்னையோ, உன்னுடைய கையில் இருக்கிறதையோ. உன்னுடைய சிநேகிதர் பறந்துவருகிறார்கள். வாய்க்கு இதமான உன் பதார்த்தத்தின் வாசனை அவர்கள் மூக்கிலே வீசினால், அல்லது உன் கையிலுள்ள விலை உயர்ந்த பானங்களின் உருசி அவர்கள் நாவில் தட்டினால், ஈக்கூட்டம்போல் வந்து மொய்த்துக்கொள்ளுகிறார்கள். எல்லாம் ஆன உடனே அவர்கள் எங்கே போகிறார்கள். வாயைத் துடைத்துப்போட்டு இருந்த இடம் விட்டுப்போகிறார்கள். அவர்கள் உன்னுடையதையன்றி உன்னை எண்ணி வரவில்லையோ.

நீ ஒருவனை உன் சிநேகிதன் என்று கொண்டாடுகிறாய். அது நல்லது தான். ஆனால் நீ அவனைப் பரிட்சைப் பார்த்தாயா. உத்தம சிநேகிதனுக்கு இரண்டு பூட்டு இருக்க வேண்டும். எவ்விடத்தில் என்றால், ஒரு பூட்டு வாயிலும், ஒரு பூட்டு காதிலும் இருக்க வேண்டும். அவன் வாய் நீ அவனை நம்பிச் சொல்லுகிற இரகசியங்களை வெளியிலே விடப்போகாது. ஆ எத்தனை நம்பிக்கைதுரோகிகள் நல்ல சிநேகிதர்களுக்குள்ளும் உண்டு. வாய்ப்பேச்சு வாயைவிட்டுப் புறப்பட்டவுடனே அதைக் கடைபரப்பி, அவனைக் காட்டிக்கொடுக்கிறதுண்டே. ஆகையால் நீ எச்சரிக்கையாயிரு. நீ ஒரு சாடியை ஓட்டையோ, நல்லதோ என்று சோதித்துப் பார்க்கும் முன்னமே உயர்ந்த பானங்களையாவது, தயிலங்களையாவது அதில் வார்த்துச சோதிக்காமல் தண்ணீரை ஊற்றிச் சோதிக்கிறதுண்டே. அப்படிப்போல் புதிதாய் உனக்கு அகப்பட்ட சிநேகிதனோடு எடுத்தாப்போலே பெரிய செய்திகளை நம்பி அதை அவனோடு சொல்லாதே. அற்ப சங்கதிகளை முக்கிய விஷயம்போல் சொல்லி சோதித்துப்பார். உண்மையுள்ள சிநேகிதன் இரண்டகம் பண்ணான். என்னைச்

டு, என்னைக்கொல்லு, என்ன வேண்டுமோ அது எல்லாம் செய், நான் இரண்டகம் பண்ணமாட்டேன் என்றும்; வேதனை எத்தனைக்கு அதிகமாகிறதோ, அத்தனைக்கு அதிகம் இரகசியமான காரியத்தை அடக்கிவைப்பேன் என்றும் சேனேக்கா என்ற ஞானி சொன்னார். உத்தம சிநேகிதனுடைய நாவிலும் ஒரு பூட்டு இருக்க வேண்டியது. இக்கட்டிலும் மரணத்திலும் உன்னைவிட்டுப் பிரியாமல், உன்னிடத்தில் உறுதியாயிருக்க வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட சிநேகிதன் அகப்படுகிறது அரிது என்று சொல்ல வேண்டும்.

இன்னம் ஒன்று சொல்லுகிறேன். நீ உன் சிநேகிதன் மேல் மிகவும் பிரியமாயிருக்கிறாயே. அது நல்லது என்கிறேன். ஆனால் நீ அவனிடத்தில் கண்ட தப்பிதங்களுக்காக எப்போதாகிலும் அவனைக் கண்டித்தது உண்டா. உன்னை அவனாகிலும் உன் தப்பிதத்துக்காக எப்போதாகிலும் கண்டித்ததுண்டா. அவன் உன்னைக் கண்டிக்காதிருந்தால், உன்னைச் சிநேகிக்கிறதெப்படி. சிநேகமானது கருக்கென்று கொட்டுகிறதும், தேன் கொடுக்கிறதுமான தேன் ஈயைப் போல் இருக்கிறது. நான் தப்பிதம் செய்கிறதைக் கண்டு என்னைக் கண்டிக்காதவனை நான் என் சிநேகிதனாக எண்ணுகிறதில்லை. நான் எத்தனைதரம் பாவம் செய்கிறேனோ, அத்தனைதரம் நான் என்னையே கொலைசெய்கிற சுய கொலைபாதகனாயிருக்கிறேன். நான் ஒரு கட்டாரியை எடுத்து, என் நெஞ்சிலே குத்திக்கொள்ளப் போகிறதை ஒருவன் கிட்ட நின்று பார்த்திருந்தும், தடைபண்ணாதிருந்தால், அவன் என் சிநேகிதன் ஆவானா. என் சாவை விரும்புகிறவன் என்னைச் சிநேகிக்கிறது எப்படி. அவன் உன்னைக் கண்டித்தபோது, அந்தக் கடிந்துகொள்ளுதல் உனக்கு எப்படியாய்க் கண்டது. அது உன்மேல் இருக்கிற பட்சத்தினால் உன்னைச் சீர்படுத்தும்படி கண்டித்ததாக உனக்குத் தோன்றிற்றா? அத்தோடு கூட மெத்தனவின் ஆவியும் உருக்கமான மனதும் மிருதுவான நாவும் இருந்ததா? மேலும் நீ அவனைக் கண்டித்தபோது, அவன் உன் கடிந்துகொள்ளுதலை எப்படி ஏற்றுக்கொண்டான். நீ பட்சத்தினால் அதைச் செய்தாய் என்றும், அவன் நன்மையை விரும்பி செய்தாய் என்றும் அவன் உன்னை நம்பினானா? நீ தன்னைச் சிநேகிக்கிறாய் என்கிறதை நம்பாதவன், உன்னைச் சிநேகிக்கிறதெப்படி.

ஆ, உலகத்திலே மாயமற்ற சிநேகமும் உத்தம சிநேகமும் மகா அபூர்வம் என்கிறதை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். சிநேகம் செய்கிறது மோசமான காரியம் என்று நான் அறிந்திருக்கிறபடியால், கொஞ்சம் பேரோடு



மாத்திரம் நான் சிநேகம் பண்ணுகிறேன். பராபரனைச் சிநேகிக்கிறவன் எனக்கும் சிநேகிதன். ஏனென்றால் பராபரனைச் சிநேகிக்காதவன் பராபரனுக்குள் என்னைச் சிநேகிக்கிறதெப்படி.* மத்தியிலே சேராத நால் பக்கத்திலே சேருவதெப்படி. அப்படிப்பட்ட சிநேகிதனை எனக்குத் தர பராபரனை வேண்டுவேன். அவரும் அப்படிப்பட்ட சிநேகிதனை எனக்குக் கொடுப்பார்.

## ௯௰௫. தியானம்.

# சமாதானப்படுத்தலைப் பற்றியது.

†என்னுடையதும் *உன்னுடையதும் என்கிறதே எல்லாச் சண்டைக்கும் காரணம்.

இப்படி செனெக்கா என்பவர் சொல்லுகிறார். நான் சொல்லுகிறதோ வேறே: என்னுடையதும் உன்னுடையதும் எல்லாச் சண்டையையும் அடக்குகிறது என்பதே. பராபரன் என்பேரில் வருத்தம் அடைந்து என் பாவத்துக்காக என்னைக் கணக்குக் கேட்க வரும்போது, என்னுடையதும் உன்னுடையதும் என்கிறது காரியத்தைத் தீர்க்க வேண்டும். ௨ கொரி. ௫. என் அருமை இரட்சகரே, என்னுடைய பாவம் உம்முடைய பாவம்; உம்முடைய நீதி என்னுடைய நீதி: பரமபிதாவே, நீர் என்னிடத்திலே தேடுகிறதென்ன. பாவத்தையோ? அதை நீர் என்னிடத்தில் கண்டுபிடிக்க மாட்டீர். என் பாவம் எல்லாம் இயேசுவின் முதுகின்மேல் கிடக்கிறது. மெய்யாகவே அவர் நம்முடைய பெலவீனங்களை எடுத்துக்கொண்டு நம்முடைய நோவுகளைச் சுமந்தார். எசாயா. ௫௩, ௪. நீதியை என்னிடத்தில் தேடுகிறீரோ? அது எனக்குண்டு. கர்த்தரிடத்திலே எனக்கு நீதியும் பெலனும் உண்டு.

பிசாசே, நீயும் கோபமாய் வருகிறாயோ. உனக்கு என்ன வேண்டும்? உன்னுடையதும் என்னுடையதும் என்கிறதே காரியத்தைத் தீர்க்க வேண்டும். உன்னுடையது நரகம், என்னுடையது மோட்சம். உன்னுடையது உன்னிடத்தில் இருக்கட்டும். என்னுடையது என்னிடத்தில் இருக்கட்டும். அப்போது நம்மிருவருக்கும் பேச்சில்லை.

மரணமே, நீ என்னைக் கடுமையாய்ப் பார்க்கிறாயோ. உன்னுடையதும் என்னுடையதும் என்பதே காரியத்தைத் தீர்க்க வேண்டும். நாம் மாற்றிக்கொள்ளுவோம். உன்னுடையதை எனக்குக் கொடுத்து, என்னுடையதை நீ எடுத்துக்கொள். என் பிரயாசத்தை உனக்குத் தருகிறேன். உன்

இளைப்பாறுதலை எனக்குத் தா. என் துக்கத்தை உனக்குத் தருகிறேன், உன் சந்தோஷத்தை எனக்குத் தா.

என் பிரியமுள்ள கிறிஸ்தவனே, உன்னோடு நான் சண்டைக்கு நில்லேன். நாம் இருவரும் சகோதரர். ஒன்றித்திருப்போமாக. உன்னுடையதும் என்னுடையதும் என்பது நமக்குள்ள எல்லா மனஸ்தாபத்தையும் தீர்த்துப்போட வேண்டியது. நான் உன்னைப்போல் ஐசுவரியவான், நீ என்னைப்போல் ஐசுவரியவான். பராபரன் என்னுடையவர், அவர் உன்னுடையவருமாமே. அவர் என் தகப்பன், உன் தகப்பனுமாமே. இயேசுவும் என்னுடையவர், அவர் உன்னுடையவருமாமே. அவர் என் சகோதரம், உன் சகோதரருமாமே. மோட்சம் உன்னுடையதும் என்னுடையதுமாமே. உன் சுதந்தரம் என் சுதந்தரம். எனக்குப் பணம் கனம் மகிமை இருந்தால், அதற்காக வருத்தமாகாதே. அது என்னுடையதும் அல்ல, உன்னுடையதும் அல்ல. பராபரன் தாம் வேண்டுமென்கிற பேருக்கு அதைக் கொடுக்கிறார். எனக்கு அது இருந்தாலும் இல்லாதவனைப்போல இருக்கிறேன். அது இன்றைக்கு என்னுடையது, நாளைக்கு உன்னுடையது. இன்றைக்கு என்னிடத்தில் இருக்கிறது நாளைக்கு உன்னிடத்தில் இருக்கக்கூடியதாகும். இன்றைக்கு நான் இருக்கிறப்போலே நாளைக்கு நீ இருக்கக்கூடியதாகும். உனக்குக் கொஞ்சமும் எனக்கு அதிகமும் இருக்கிறதே என்கிறாயோ. உனக்கு இருக்கிற கொஞ்சமானது உன்னுடையதல்லாததுபோல, எனக்கு இருக்கிற அதிகமானதும் என்னுடையதல்ல. ஆகலால் நாம் ஒன்றித்திருப்போமாக. நீ என்னுடையவன், நான் உன்னுடையவன். நாம் இருவரும் ஒரு இருதயமும் ஒரு ஆத்துமமுமே.

## ௱௯௬. தியானம்.

# கிறிஸ்தவர்களுடைய சத்துருக்களைப் பற்றியது.

எப்போதும் போராட்டம். யோபு ௭, ௧.

சண்டையில் செலவும் சமாதானத்தில் வரத்தும் உண்டென்று சொல்லுகிறதுண்டு.—ஆனால் சத்துருக்கள் எங்கே இருக்கிறார்கள்? கிறிஸ்தவனே, நீ பாவத்தில் விழும்முன் அது உன்னைச் சோதிக்கும் போதும், நீ பாவத்தில் விழுந்த பின்பு அது உன்னை வாதிக்கும்போதும், நீ அத்தோடே போராட வேண்டியது. *சென்மப்பாவம் உன்னை எப்போதும் சோதித்து, இப்போது இந்தத் துன்மார்க்கத்துக்கும், பிறகு



அந்தத் துன்மார்க்கத்துக்கும் இழுத்துவிட்டு, உன் அவயவங்களை அதின் இச்சைகளுக்குக் கீழ்ப்படியச் சொல்லிக் கேட்கிறது. இந்தச் சத்துருவோடே நீ எப்போதும் போர்க்களத்தில் இருப்பதுபோல் விழித்திருந்து யுத்தம்பண்ணி, நீ சோதனையில் அகப்படாதபடிக்குச் செபம் பண்ணிக்கொண்டே இருக்க வேண்டும். பரிசுத்த பவுல் எப்படி புத்திசொல்லுகிறார் என்றால், மாமிசத்தின் இச்சையை நிறைவேற்றாதிருந்து ஆவியிலே நடந்துகொள்ளுங்கள். ஏனெனில் மாமிசம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவியோ மாமிசத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் வேண்டும் என்றதுகளைச் செய்யாதபடிக்கு இதுகள் ஒன்றுக்கொன்று எதிர்க்கிறது. கலாத். ௫, ௰௬. ௰௭. நன்மையையாவது தீமையையாவது செய்ய வேண்டும் என்கிற பிரதிக்கினை உன்னில் தோன்றின உடனே இதைச்செய்யத் தூண்டுகிறதும் செய்யப்படாதென்று தடுக்கிறதுமான சிந்தனைகள் உனக்குள்ளே தோன்றுகிறதே. அதுவே மாங்கிஷத்துக்கும் ஆவிக்கும் இருக்கிற போராட்டம். ஆவி தீமையை அடக்குகிறதுக்கான நல்ல நினைவுகளை உண்டுபண்ணுகிறது. மாமிசம் நன்மையை நிறைவேற்றுகிறதற்குத் தடையான ஆகாத நினைவுகளை வருவிக்கிறது. பாவம் நிறைவேறின பிறகோ உன் மனச்சாட்சி உன்மேல் முறைப்படவும், உன்னைக் குற்றப்படுத்தும் விரோதமான சாட்சி சொல்லவும், உன்னை ஆக்கினைக்குள்ளாய்த் தீர்க்கவும், மரணம் மட்டும் உன்னை வியாகுலப்படுத்தவும், உனக்கு விரோதமாய் உன் மனச்சாட்சியை எழுப்பிவிட நவமான போராட்டத்தை மூட்டிவிடுகிறது. எத்தனை விசை உன் ஆத்துமம் அவஸ்தைப் படத்தக்கதாய்ப் பாவ வியாகுலத்தோடே போராடுகிறது!

உலகம் நயமும் பயமும் இன்பமும் துன்பமும் காட்டி உன்னைச் சோதிக்கும்போது, நீ அத்தோடும் போராட வேண்டியிருக்கிறது. அது தன் மக்களைக்கொண்டு எத்துவார்த்தைகளினால் நட்புக் காட்டி அழைக்கிறது. ஏவாள் ஏமாற்றப்பட்டதுபோல், எத்தனைபேரோ தந்திரமுள்ள உலகம் என்கிற சர்ப்பத்தின் நயவசனிப்பினால் புத்தியீனமாய் மோசம் போகிறார்கள்! இதைப் பரிசுத்த பவுல் அறிந்திருந்தபடியினாலன்றோ, உங்களை ஒருவனும் வீண் வார்த்தைகளினால் மோசம்போக்க வேண்டாம் என்று புத்தி சொல்லுகிறார். எபேசி. ௫, ௬. உலகம் ஆகாத மாதிரிகளை உனக்குக் காட்டி அழைக்கிறது. நீ ஓனாய்களுக்குள் இருந்தால், ஓனாயைப்போல ஊளையிடாமல் திருமா. நாம் உலகத்தில் இருக்கிறபடியினால், உலகம் பிடிக்கிற பிடியைப் பிடிக்க வேண்டுமென்று நினைக்கிறதுண்டே. ஆனால் பரிசுத்த பவுல் அதற்கு என்ன சொல்லுகிறார்? இ

தப் பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷம் தரிக்காமல், நீங்கள் பராபரனுடைய நன்றும் நற்பிரியமும் பரிபூரணமுமான சித்தம் ஏதென்று வகையறுக்கும்படிக்கு உங்கள் மனதின் புதிதாக்குதலினால் மறுரூபமாகுங்கள் என்கிறார். ரோமர் ௧௨, ௨. அது தன் ஆஸ்தி சங்கை சிற்றின்பம் என்றதுகளை உனக்குக் காட்டி உன்னை அழைக்கிறது. நீயும் விலக்கப்பட்ட இந்தக் கனியின் பேரிலே ஆசைப்பட்டு விழுந்து புசித்துத்தின்று மோட்ச செல்வத்தை இழந்து போகிறாய். ஆகிலும் அது நஷ்ட வியாபாரம். ஒரு பிடி மண்ணை ஆதாயப்படுத்தப்போய் ஆத்தும கதியை இழக்கிறோம். பரிசுத்த யோவான் இதைக் குறித்து நமக்குச் சொல்லுகிறதென்ன? நீங்கள் லோகத்தையாகிலும் லோகத்திலுள்ளதுகளையாகிலும் சிநேகியாதிருங்கள். ஒருவன் லோகத்தைச் சிநேகித்தால், அவனிடத்தில் பிதாவின் சிநேகம் இல்லை. ஏனெனில் மாமிசத்தின் இச்சையும், கண்களுடைய இச்சையும் ஜீவனத்தின் பெருமையும் என்ற லோகத்தில் உள்ளதெல்லாம் பிதாவினால் உண்டாயிராமல், லோகத்தினால் உண்டாயிருக்கிறது. லோகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் என்கிறார். ௧ யோவா. ௨, ௧௫. ௧௬. லோகம் இப்படி நட்புக் காட்டி அழைத்து ஒன்றும் பலிக்கவில்லை என்று கண்டால், அப்புறம் அது உன்னை உறுக்குதலாலும் வசவு வார்த்தைகளாலும் இக்கட்டு துன்பத்தினாலும் உன்னைப் பயமுறுத்த தொடங்குகிறது. உலகத்தின் ஐசுவரியத்தைச் சட்டைபண்ணாவிட்டால், தரித்திரியத்துக்குப் பயப்பட வேண்டியதாகிறது. கனத்தை அற்பமாக எண்ணினால், அந்த அடியோடே சின்னத்தனம் வருகிறது. லோகம் காண்பிக்கிற உல்லாசமும் சுகிப்புமான நாட்களை நீ விரும்பாவிட்டால், சஞ்சலமும் பொல்லாப்புமான நாளைப் பார்த்திருக்க வேண்டியது. உலகத்தின் நயத்தினால் பிடிபடாத அநேகர் அதின் பயத்தினால் மேற்கொள்ளப்படுகிறார்கள். தரித்திரம் சிறுமையும் வேதனை சின்னத்தனமும் அடைந்த இயேசுவின் பாதத்தண்டையிலிருக்க மாமிசத்துக்கும் இரத்தத்துக்கும் மனதில்லை.

அல்லாமலும் பிசாசோடும் நரகத்தோடும் உனக்குப் போராட்டம் உண்டாயிருக்கிறது. அது உன்னை கலக்கத்தில் சந்தேகம் வருவிக்கிற பல நினைவுகளாகிய நெருப்பான அம்புகளால் குத்தி வியாகுலப்படுத்துகிறது. உள்ளான சோதனைகளும் மனப்பீடையும் இதில் வருவிக்கும் நினைவுகளும் ஆத்துமத்தைக் காயப்படுத்தி உள்ளிந்திரியத்தைப் பயமுறுத்துகிற பிசாசின் அம்புகள் அல்லவோ. அது சரீரத்தைக் கையினால் குத்தி வாதிக்கிறதுபோல, அவைகள் நமது ஆத்து



மத்தைப் பாதாபமாய்க் குத்தும் சாத்தானுடைய தூதர். கூர்மையான கழுவிலே ஏற்றப்பட்டு வேதனைப்படுகிறதுபோல் நமது ஆத்துமா அதுகளால் கஸ்திவேதனைப்படுகிறது. இப்படிப்பட்ட தருணத்தில் தாவீது இராசா முறையிட்டு, கர்த்தாவே உம்முடைய திகிலே நான் உணருகிறதினால் தொய்ந்து போகிறேன் என்கிறார். இப்படியே யோனாத்தீர்க்கதரிசியும் என் ஆத்துமம் என்னிலே தொய்ந்துபோயிற்று என்று விம்மி அலறிப் புலம்புகிறார். ஆ, இது கடினமான போராட்டம்.

ஆனால் இதிலும் உக்கிரமான போராட்டம் நமக்குப் பராபரனோடு இருக்கிறது. கர்த்தருடைய தூதனோடு போராடின யாக்கோபின் மாதிரியினாலும் கிறிஸ்துவோடே தர்க்கம் பண்ணின கானான் ஸ்திரியின் மாதிரியினாலும் நீ அதை அறியலாம். அடிக்கடி பராபரன் தம்முடைய கிருபையை முழுதும் மறைத்துக்கொண்டு மகா கடினக்காரராகவும் மகா கோபக்காரராகவும் உனக்குத் தம்மைக் காண்பிக்கிறார். நீ செபம் பண்ணினால் அதைக் கேளாதவர்போலே இருக்கிறார். நீ கூப்பிட்டால், அவர் தமது காதை அடைத்துக்கொண்டவர்போல் இருக்கிறார். நீ துன்பத்தில் அகப்பட்டிருந்தால், அந்த வேளையில் அவர் உன் துன்பத்தை அறியாத அந்நியனைப் போலவும் ஒத்தாசை செய்யமாட்டாத தொய்ந்துபோன பெலவானைப் போலவும் தம்மைக் காட்டுகிறார். அந்தந்த வேளைகளிலே நீ செபம் பண்ணவும் பெருமூச்சுவிடவும் அவரை நினைக்கவும் கூடாதவனாயிருக்க உன்னை விட்டுவிடுகிறார். ஆ, ஆறுதலுக்காக பெருமூச்சுவிட்டாலும் ஆறுதல் ஒன்றுங் கிடையாது. மனுஷர் உன்னை ஆற்றுவார்களா? அந்த ஆற்றுதலிலே உப்புமில்லை சப்புமில்லை. இப்படிப்பட்ட போராட்ட வேளையிலே தான் யோபு பயம் அடைந்து பராபரனுடைய பயங்கரங்கள் எனக்கு முன்பாக அணி அணியாய் நிற்கின்றன என்று சொல்லுகிறார். யோபு ௬, ௪. பராபரன் யோபை வேசாறப்பண்ணி அவன் நினைவைக் கலங்கடித்து பயப்படுத்தக் கூடியதெல்லாவற்றையும் ஒன்றின்பின் ஒன்றாய் படையின் இராணுவ வரிசைபோல அவன்மேல் வரவிட்டுத் தாக்கினார். அந்த வேளையிலே யோபு, என் ஆத்துமம் நெறுக்குண்டு சாகிறதையும் என் எலும்புகளோடே உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் மரணத்தைத் தெரிந்துகொள்ளும். இப்படியிருக்கிறதை அரோசிக்கிறேன் என்கிறார். யோபு ௭, ௧௫. ௧௬. இவ்விதமாகப் பராபரனுக்கும் மனுஷனுக்கும் நடக்கிற போராட்டம் நாட்பட்டால், அப்போது அந்த ஆத்துமாவுக்கு அதைச் சகிப்பதிலும் நெறுக்குண்டாவது தண்ணீரிலே விழுந்தாவது வேறே விதமாயாவது தன் சீவனை மாய்த்

தாக்கொள்ளுகிறது ஆயிரம் பங்கு நலமானதாய்த்தோன்றும். ஆதலால் யோபு என்பவர், நான் கூப்பிட்டாலும் எனக்கு மறு உத்தரவு கொடுப்பாரென்றும் என் சத்தத்துக்குச் செவி கொடுப்பாரென்றும் நம்பேனென்று சொல்லுகிறார். யோ. ௯, ௰௬. பராபரன் எவர்களைச் சற்று கடினமாய்ப் பிடிக்கிறாரோ அவர்களுடைய விசுவாசம் அந்தந்த வேளைகளில் அத்தனை பெலவீனமாகிறது. தேவரீர் உமது முகத்தை மறைத்து என்னை உமக்குப் பகைஞனாக எண்ணிக்கொள்வானேன் என்கிற யோசனை அந்த வேளையிலே அவர்களுக்கு உண்டாகிறது. யோ. ௰௩, ௨௪. பராபரன் விசுவாசிகளோடே போராடும்போது, அவர் தமது கிருபை ஆறுதல் வெளிச்சம் சீவன் எல்லாவற்றையும் மறைத்து, தமக்குக் கொல்லச் சினமான சத்துருக்களோடே சஞ்சரிக்கும் பாவனையாய் அவர்களோடே சஞ்சரிக்கிறார். இதைக் கண்டு தாவீது இராசன் என் ஆத்துமா ஆறுதல் அடைந்துகொள்ளாதே போயிற்று என்று புலம்புகிறார். சங். ௭௭, ௨. ஆத்துமம் பராபரனுடைய சாயலின்படி சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறபடியால், பராபரனிடத்திலே மாத்திரம் அதற்கு ஆறுதல் உண்டாயிருக்கிறது. பராபரன் பின்வாங்கித் தம்மை மறைத்துக்கொண்டால், புருஷனற்ற கைம்பெண்சாதிபோல் ஆத்துமம் ஆறுதலற்றுப் போகிறது. அப்புறம் தாவீது இராசா, தேவரீர் என் கண்களின் இமையை அது விழித்திருக்கும்படி பிடித்தீர். நான் பேசமாட்டாத படிக்கு மனமுறிதலாயிருக்கிறேன் என்கிறார். ஆத்துமாவுக்கு இவ்வளவு இளைப்பும் தவிப்பும் உண்டாகும்படி போராட்டம் உண்டாயிருக்கிறது ஆச்சரியம். இளைப்பான சரீரத்துக்கு நித்திரையிலேயாகிலும் கொஞ்சம் முசிப்பாறுதல் உண்டு. ஆனால் பராபரன் சோதனையின் போராட்டத்திலே சற்றும் இளைப்பாற ஒட்டாமல் அவர்கள் கண்களிலே நித்திரை வராத படிக்கு ஆறாய் ஓடும் கண்ணீரால் விழித்திருக்க வைக்கிறார். அப்புறம் தாவீது சொல்லுகிறதாவது: ஆண்டவர் இனி தயை செய்யாமல் நித்திய காலங்களாய் ஒழித்துவிடுவாரோ. அவருடைய கிருபை என்றென்றைக்கும் அற்று, வாக்குத்தத்தமானது தலைமுறை தலைமுறைக்கும் ஒழிந்துபோயிற்றோ? பராபரன் இரங்க மறந்தாரோ? தம்முடைய இரக்கங்களைக் கோபத்தினால் அடைத்துப்போட்டாரோ? என்று புலம்புகிறார். இது நரகத்தின் நினைவுகள் தானே. ஆ பராபரனே, தாவீதுடைய நல்ல ஆத்துமமும் அப்போது எத்தனை விதனப்பட்டிருக்கும்!

கிறிஸ்தவனே, அதோ உன் சீவன் அப்படியிருக்கிறது என்று பார். இராசாக்களுக்கும் பிரபுக்களுக்கும் சில வேளை



சமாதானம் உண்டு. ஆனால் உன்னிடத்தில் எப்போதும் போராட்டம் என்று சொல்ல வேண்டும். இப்போதும் சமாதானம் உண்டு என்று நினைக்கிறது மோசம் போகிறதற்கு இடமான நினைவானபடியால், நான் ஒருக்காலும் அச்சமற்றிரேன். மனந் தொய்ந்து போகவும் மாட்டேன். போராட எனக்குக் கற்பித்தவர் அதிலே செயத்தைப் பெறுகிறதற்குத் தயிரியமும் பெலனும் கொடுப்பார்.

௯௰. தியானம்.

## சத்துருக்களைச் செயிப்பதைப் பற்றியது.

### துணிவாய்ப் போராடு.

கிறிஸ்தவனே, உன் சத்துருக்களை அறிவாயே. ஆயுதம் தரித்துக்கொள். துணிந்த படையே வெல்லும். அதிலே நல்ல திடனும் சந்தோஷமும் இருக்க வேண்டும். உன் மாமிசத்தை அதின் இச்சைகளோடும் சிலுவையில் அறை. பாவ இச்சைகளை நீ உணருவாய். அவைகள் உன் மனதில் தரிகொள்ளாதபடி, அவைகளை அருவருத்து அவைகளுக்காக மனஸ்தாபப்பட்டு துவக்கத்திலேயே அவைகளை ஒடுக்கி அடக்கவேணும். உனக்கு இடறலான கண்களையும் கால்களையும் பிடுங்கி தறித்துப்போடு. ஆகாத இச்சையை எழுப்பிவிடுகிறதற்கான காரியங்களை உன் மாமிசத்திலின்று விலக்கு. உன் மாமிசம் உன்னைத் தப்பிதத்தில் அகப்படப்பண்ணாதபடிக்கு, எந்நேரமும் விழித்திருந்து செபம்பண்ணு. நீ தப்பிதத்தில் அகப்பட்டுக் கொண்டால், அந்நேரமே மனஸ்தாபப்பட்டு உன் பெலவீனத்தை உணர்ந்து அதற்காகப் புலம்பி பராபரனிடத்தில் பாவமன்னிப்பைத் தேடி இனி மேற்பட மகா கண்டிப்பாய் உன் மாமிசத்தோடே போராட உறுதியான பிரதிக்கினை பண்ணு. உன் பாவம் உன்னை வாதித்தால், அது உன்னை அவநம்பிக்கைக்குட்படுத்த இடங்கொடாமல் உன் பாவத்தைவிடப் பராபரனுடைய கிருபை அதிக பலத்ததும், இயேசுவின் உத்தரவாத புண்ணியம் அதிக உயர்ந்ததுமாயிருக்கிறதென்று நம்பு. நீ உன் பாவத்துக்காகத் துயரப்படுகிறது நியாயம். ஆனால் அந்த துயரத்திலே உன் மனம் நம்பிக்கையற்றுப் போக வேண்டாம். பாவத்தை மன்னிக்கச் சித்தமுள்ள பராபரன் உனக்கு இன்னம் இருக்கிறாரே. தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல் கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். சங். ௱௩, ௰௩. அழுகிற பிள்ளையை

உதைத்துத் தள்ளும்படியான கல்நெஞ்சுள்ள தகப்பனை நீ கண்டதுண்டா? இல்லையே. தகப்பன் மனது அப்படிச்செய்ய சம்மதியாதே. ஒரே பெருமூச்சாலே நீ பராபரனுடைய இருதயத்தைக் குத்தலாம். ஆ தகப்பனே, வானத்துக்கும் உமக்கும் விரோதமாகப் பாவஞ் செய்தேனென்று நீ சொல்லுகிறதற்குள்ளே அவர் பிரத்தியுத்தாரமாக: என் மகனே திடன்கொள், உன் பாவம் உனக்கு மன்னிக்கப்பட்டது என்பார். உன் பாவத்துக்காகச் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தம் எத்தனை விலையுயர்ந்ததும் எத்தனை வல்லமையுள்ளதுமாயிருக்கிறது! அதின் ஒரு துளி சகல மனுஷருடைய பாவக் கடன்களைச் செலுத்த உயர்ந்தவிலையாயிருக்கிறதே. ஒருவன் பாவம் செய்தானேயாகில், நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்கிற காரியக் கர்த்தர் நமக்குப் பிதாவினிடத்தில் இருக்கிறார். அவர் நம்முடைய பாவங்களினிமித்தம் கிருபை உண்டாக்குதலாயிருக்கிறார். க யோவா. உ, க. உ.

சிற்றின்ப உலகம் உன்னை நட்புக்காட்டி அழைக்கிறதோ? மோசம் போக்குகிற சர்ப்பத்தின் சொல்லைக்கேட்டு நடவாமல் சத்தியத்தின் வசனப்படி நட. பிறருக்கு நீ இடறல் உண்டாக்காதபடிக்கும், நீ உலகத்தால் இடறல் படாதபடிக்கும் சாக்கிரதையாய் இரு. உலகம் உன்னைத் துன்மார்க்கனாக்க இடங்கொடாமல், நீ அதைச் சன்மார்க்கத்துக்கு உள்ளாக்கப் பார். உலகத்தில் இருக்கையில் அதற்கு ஒத்தபடி நடக்க வேண்டுமென்று அது சொல்லுகிறபடி நீ சொல்லுகிறாய். அதற்கு நான்: உலகத்தோடு கூடிக்கொண்டு பாவம் செய்கிறவன் அதனோடு கூடிக்கொண்டு பிசாசண்டையில் போகிறானென்று சொல்லுகிறேன். உலக நேசம் உலக வேஷம். உலகத்துக்கு ஒத்த பாவம் உலகத்துக்கு ஒத்த ஆக்கினை. பரிசுத்த பவுல், நீங்கள் அந்தகாரக் கிரியைகளுக்கு உடந்தையாய் இராமல் அதுகளைக் கடிந்துகொள்ளுகிறவர்களாகுங்கள் என்கிறார். எபேசி. ரு, யக. கிறிஸ்து உலகத்திலே இருந்தபோது, உலகத்தாரைப்போல் நடக்காமல் உலகத்தைக் கடிந்துகொண்டு அதற்கு விரோதமான தமது நடக்கையினால் அதின் நடக்கையை வெட்கப்படுத்தினார். அதின் ஆடம்பரத்தைத் தமது எளிமையினாலும், அதின் பெருமையைத் தமது தாழ்மையினாலும், அதின் பொருளாசையைத் தமது தரித்திரத்தினாலும் வெட்கப்படுத்தினார். அப்படியே நீயும் இந்த உலகத்திலே பிழைக்க வேண்டும். உலகத்தின் மக்கள் தேடுகிறதை நீ வேண்டாமென்று விலக்கி ஓட வேண்டும். அவர்கள் புறக்கணிக்கிறதை நீ தெரிந்துகொள்ள வேண்டும். உலகம் மாமிசத்தின் இச்சையும் கண்களின் இச்சையும்



சீவனத்தினுடைய பெருமையும் என்ற இவைகளைத் தன் தாண்டிகையில் கோத்து உனக்குமுன் எறிந்தால்,—ஆ அதுகள் உன்னால் நேசிக்கப்படப் பாத்திரமானதுகள் அல்ல என்று எண்ணு. அது மேலே பொன் பூசியிட்டதும் உள்ளே கசப்புமான மாத்திரை உருண்டைபோலும், மேலே நேர்த்தியான வன்னத்தைத் தூவி வைத்திருக்கிற சேறுபோலும் இருக்கிறது. கிறிஸ்து உன்னை விசுவாசத்தால் அதிக ஐசுவரியம், மகிமை, பாக்கியம் உடையவன் ஆக்கியிருக்கக்கொள்ள, அதை எல்லாம் தரக் கூடாத உலகம் உனக்கு என்னத்துக்கு.

இந்த கசப்பான உலகம் உன்னைப் பயமுறுத்துகிறதா? ஆ அப்போது நீ திடன் கொண்டிருந்து: நம்மைக் கிறிஸ்துவினுடைய சிநேகத்தைவிட்டுப் பிரிப்பவன் ஆர்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிருவாணமோ, நாசமோசமோ, பட்டையமோ? இதுகள் எல்லாவற்றிலும் நாம் நம்மைச் சிநேகிக்கிறவராலே அதிகமாய்ச் செயங்கொள்ளுகிறோம். ஏனெனில் மரணமானாலும், சீவனானாலும், தூதரானாலும், துரைத்தனங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங் காரியங்களானாலும், உயர்த்தியானாலும், தாழ்த்தியானாலும், வேறொரு சிருஷ்டி என்கிலும், நம்மை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவுக்குள்ளான பராபரனுடைய சிநேகத்தை விட்டுப் பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் என்று பவுல் அப்போஸ்தலனோடே கூட சொல்ல வேண்டியது. ரோமர் அ, ௩௫. உலகம் உன்னிடத்திலிருந்து ஒன்றையுங் எடுத்துக்கொள்ள மாட்டாது. ஏனென்றால் இயேசுவையும் மோட்சத்தையும் உன்னைவிட்டு எடுக்காதவன் ஒன்றையாகிலும் உன்னை விட்டு எடுத்தவன் அல்ல.

பிசாசு உனக்கு விரோதமாய் எதிர்த்தால், விசுவாசத்தின் கேடகத்தைப் பிடித்துக்கொண்டு அதின் நெருப்பான அம்புகள் எல்லாவற்றையும் அவித்துப்போடு. மெய்தான், தூஷணமான கெட்ட நினைவுகளினால் அல்லவோ அது உன்னை வாதிக்கிறது. அதை நீ தடைபண்ணக் கூடாது. ஆனால் அதற்கு விரோதமாய் நீ விசுவாசத்தினால் உன்னைப் பலப்படுத்திக்கொண்டு, அது உன் காதில் ஓதும் விசேஷங்களுக்குச் செவிகொடாமல் கருத்தோடு எதிர்த்து நிற்க உன்னாலாகும். அது உனக்குள் உண்டாக்கும் நினைவுகளுக்கு நீ சம்மதியாமல், அதற்காக உன்னில் மனவியாகுலப்படு. எங்கே மனது சம்மதிப்படாமல் இருக்கிறதோ அவ்விடத்திலே பாவமும் இல்லை. இப்படிப்பட்ட நினைவு என்னைவிட்டு நீங்கினால் தாவிலை என்கிற விருப்பம் உனக்குள்ளே பிறக்கும், ஆகிலும்

பராபரன் அது காரியத்திலே பிசாசை மட்டுக்கட்டுகிற நேரம் வரும் மட்டும் நீ பொறுத்துக்கொண்டிருக்க வேண்டும். நீ சாத்தானுடைய ஆகாத நினைவுகளை ஆவியின் பட்டையத்தால் கீழே விழத்தள்ளி அதற்குப் பதிலாகப் பராபரனுடைய வசனத்திலுள்ள வேறே நல்ல ஆறுதலான நினைவுகளை வைத்துக்கொள். சத்தியத்தின் வசனத்திலே எவனும் செயிக்கக் கூடாத பெலன் உண்டாயிருக்கிறது. சாத்தான் தன் பொய் அனைத்தைக்கொண்டும் எதிர்த்தாலும் அதினால் ஆகாது.

பராபரன் தாமே உனக்கு எதிராகப் படை எடுத்து வந்தாலும் நீ மனந்தளராதே. அவர்மேல் வைத்த உன் நம்பிக்கையில் உறுதியாய் நிலைத்திரு. உன்னைக் கைவிட அவருக்கு மனதில்லை என்றும் கைவிட மாட்டாரென்றும் அவருடைய வசனத்திலே நீ நிச்சயம் பெற்றிருக்கிறாயே. அவர் தம்மை உனக்கு மறைத்துக்கொள்ளக் கூடும். ஆனால் உன்னைக் கைவிட அவராலே கூடாது. சத்துருவைப்போல அவர் தம்மை உனக்குக் காண்பிக்கக் கூடும். ஆனால் அவர் உன் சத்துருவாயிருந்து சத்துருவைப் போல உனக்கு விரோதமாய்ப் பொல்லாப்பை நினைக்க அவராலே கூடாது. கர்த்தர் என்னைக் கொல்ல வந்தாலும் நான் அவர் பேரில் நம்பிக்கையாய் இருக்கிறேன் என்று யோபைப்போல சொல்லு. பராபரன் உன்னை முசிப்பாற்றக் குறித்த நேரத்துக்குப் பொறுமையாய்க் காத்திரு. ஆ கர்த்தாவே, உமது அடியானின் ஆத்துமத்தை முசிப்பாற்றியருளும். நீர் என்னை ஆசீர்வதித்து எனக்கு ஆறுதல் சொன்னாலே ஒழிய உம்மை நான் போக ஒட்டேன் என்கிற செபத்திலே உறுதியாய்த் தரித்திரு. பராபரன் தம்மை உன் பெருமூச்சுக்கு மறைத்துக்கொண்டால், கண்ணீர் விட்டு அவரைத் தேடு. யாக்கோபு கர்த்தருடைய தூதனோடு போராடி அழுது அவரை மேற்கொண்டான். ஒசேயா ௰௨, ௫. செபம் பண்ணவும், பெருமூச்சுவிடவும், அழவும் உன்னால் *ஆகவில்லை என்றால், அப்போதே அதற்காக உன்னில் மனவியாகுலப்படு. வியாகுலப்படும் ஆத்துமத்துக்குப் பராபரன் மிகவும் சமீபமாயிருக்கிறார்.

கேளார் ரட்சியார் என்றதாய்
கண்டும் பயப்படாதே.
தயையைச் சில காலமாய்
ஒளிப்பார்; பின் வாங்காதே.
உன் நெஞ்சின் அனுமானத்தை
கேளாமல், தேவவார்த்தையை
நீ திடனாக நம்பு.

(௱௭௮-ம் பிரார். ௰௨, கவி.)



௱௰௮. தியானம்.

## மனுஷருடைய தந்திரம் துஷ்டத்தனத்தைப் பற்றி *யது.

மனுஷன் மனுஷனுக்குப் பிசாசு.

ஆகாத மனுஷர்மேல் முறையிட்டுப் புலம்புதல் அதிகம். பிசாசின்மேல் *முறையிட்டுப் புலம்புதல் அவ்வளவல்ல. ஆனால் இரண்டும் ஒன்றுதான். இவ்விஷயத்திலே பிசாசும் மனுஷனும் புருஷன் பெண்சாதியைப்போல் ஒன்றாயிருக்கிறார்கள். மனுஷன் குதிரையைப்போலும், பிசாசு அதின்மேல் ஏறி நடத்துகிறவனைப்போலும் இருக்கிறது. பிசாசு விசேஷமாய் வெளிச்சத்தின் தூதனுடைய வேஷம் எடுக்கிற போது, அதற்கு எவனும் தன்னைக் காக்க மாட்டான். மனுஷனையும் யார் நம்பலாம். உன் சம்மனசைப்போல் எண்ணின மனுஷன் அடிக்கடி உன் பிசாசும் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டிருக்கும் ஓநாயுமாய் இருக்கலாம். வீடு விழும் முன் மடமட என்கிற சத்தங் கேட்கும். புகையினால் நெருப்பு இருக்குதென்று அறியலாம். ஆனால் மனுஷன் தான் கபடாய்ச்செய்ய நினைத்திருந்த காரியத்தை வெளியே சொல்லாமல் சடுதியில் நினையாத வேளையிலே கேடு வருவிக்கிறான். துஷ்டமிருகம் பசியும் இடுக்கமும் இல்லாவிட்டால் உனக்கு ஒரு பொல்லாப்பும் செய்யாது. மனுஷனோ உனக்குப் பொல்லாப்புச்செய்யச் சந்தோஷப்படுகிறான். ஆகையினால் பிசாசுக்கு உன்னை எச்சரிக்கையாய்க் காக்கிறதுபோலே, மனுஷனுக்கும் உன்னைக் காத்துக்கொள். சிங்கம் சிங்கத்துக்கு விரோதமாகவும், ஓநாய் ஓநாய்க்கு விரோதமாகவும், பிசாசு பிசாசுக்கு விரோதமாகவும் கர்ச்சிக்கிறதில்லை. ஆனால் மனுஷன் தன் மாம்சத்துக்கும் இரத்தத்துக்கும் விரோதமாக ஆர்ப்பரித்து ஆங்காரிக்கிறான். ஆதியிலே பிசாசுக்குப் பணிமுட்டாயிருந்த சர்ப்பம் தன் பல்லுக்குக் கீழே கடைவாயிலே விஷத்தை அடக்கி வைத்திருந்தது. மனுஷனும் நஞ்சைத் தன் நாவிலே அடக்கி வைத்திருக்கிறான். அவன் இங்கிதமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில் கொத்தி காயப்படுத்துகிறான். மாயம்பண்ணி இச்சகம் பேசுகையில் கொல்லுகிறான். எச்சரிக்கையாய் இரு. நாவிலே தேனும் இருதயத்திலே நஞ்சும் ஒளித்திருக்கிறது.

என் பிறனுக்கு ஆலோசனை சொல்லுகிறதிலும் ஆறுதல் சொல்லுகிறதிலும் ஒத்தாசை சொல்லுகிறதிலும் கூடிய மட்டும் சம்மனசுபோல் இருப்பேன். மேலும் மோசே தன்

கோலை கையாடினதுபோலே நானும் என் பிறனைக் கையாடுவேன். அது கோலாயிருந்தமட்டும் அவர் தமது கையிலே அதைப் பிடித்திருந்தார். அது பாம்பான உடனே அதற்குத் தூர ஓடிப்போனார். ௨ மோசே ௪, ௩. என் பிறன் என் தப்பிதத்துக்காக எந்தமட்டும் என்னை வெளியரங்கமாய் அதட்டித் தண்டிக்கிறானோ, அந்தமட்டும் அவன்மேல் பிரியமாயிருப்பேன். ஆனால் அவன் மெள்ள இரகசியமாய் எனக்குள்ளே நுழைந்துகொண்டு. இன்சொல்லால் வஞ்சிக்க வருகிறான் என்று நான் கண்டவுடனே அவனைவிட்டு ஓடுகிறேன்.

௫௰௩. தியானம்.

## நல்லோரைத் துன்பப்படுத்துவதைப் பற்றியது.

*நீ கடிக்கிறபடி எல்லாம் கடி. எனக்கு அதினால் சேதம் இல்லை.*

நீ நல்லவனைப் பகைத்துத் துன்பப்படுத்துகிறாயா? துன்பப்படுத்து. அது எனக்கு ஆச்சரியம் அல்ல. ஏனென்றால் நீ ஓநாய்போல் இருக்கிறாய். அந்த உத்தமனோ ஆடுபோல் இருக்கிறான். ஓநாய் கையில் ஆட்டுக்குட்டி அகப்பட்டால் முத்தியிட்டுக்கொள்ளுமா? அந்த உத்தமன் ஆபேலைப்போலவும் நீ காயீனைப்போலவும் இருக்கிறீர்கள். காயீனுடைய ஆவியினாலும் கொலையின் ஆவியினாலும் ஆளப்படுகிறாய். சிநேகத்தின் ஆவியைக்கொண்டிராத நீ சிநேகிக்கிறதெப்படி. முள் செடியிலே அத்திப்பழத்தையும், உப்புக்கடலிலே தித்திப்பையும், பகையும் ஆங்காரமும் பற்றி எரிகிற நரகத்திலே சிநேகத்தையும் தேடுகிறது வீண் அல்லவா.

ஆனால் நீ ஆருக்குச் சேதம் வருவிக்கிறாய்? உனக்கோ, நல்லவனுக்கோ? நீதிமானுடைய பொருளையாவது அவன் சரீரத்தையாவது நீ தொட்டு உன் கை மாறுமுன்னே உன் ஆத்துமம் காயப்பட்டுப்போம். நெருப்போடே சண்டை செய்கிறவனும் மலையோடே மோதுகிறவனும் பயித்தியக்காரன் அல்லவா. அதினாலே அவன் தனக்குத்தானே சேதம் வருவிக்கிறானே அல்லாமல் மற்றொருவருக்கும் சேதம் வருவிக்கவில்லை. நீதிமானை நெருப்புமதில் சூழ்ந்திருக்கிறது. அவன் மலைமேல் போடப்பட்ட அஸ்திவாரம் போலிருக்கிறான். எரிகிற தீயைக் கையாலே அவிக்கப்போனால் உன் கையிலே கரிபடுகிறதுதான் உனக்கு லாபம். அதினால் நெருப்பு கம்மினால்போல் எரிந்தாலும் உடனே முன்னிலும்



அதிக ஒளிவாய் எரியும். நீ துன்பப்படுத்துகிறதினால் உத்தமனுக்குச் சேதம் வருவியாமல் அவனுக்கு ஆதாயத்தையே வருவிக்கிறாய். ஏனென்றால் அவனுடைய மெத்தனவு பொறுமை முதலிய நற்குணங்கள் முன்னிலும் அதிக ஒளிவாய்ப் பிரகாசிக்கிறது. அவன் புகழ்ச்சி அதிகரிக்கிறது, அவன் மோட்ச கிரீடம் அதிக மகிமையுள்ளதாகும். ஆனால் நீ உன்னைத்தானே சேதப்படுத்தி உனக்கு மனக்கலக்கத்தையும் மனச்சாட்சியின் வேதனையையும் வருவித்துக்கொள்ளுகிறாய். கடைசியிலே கல்லைக் கடித்த நாயைப்போல வெட்கத்துக்கு உட்படுகிறாய். கல்லு கல்லாகவே இருக்கும். கடித்த நாய்க்கோ பல்லு போவது நிச்சயம்.

நல்லோரைச் சிநேகிக்க வேண்டும். அவர்கள் பராபரனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள். ஒரு சிநேகிதன் மற்றொரு சிநேகிதனோடு பேசுகிறாப்போல, அவர்கள் பராபரனோடே தனதாய்ப் பேசிக்கொண்டு வருகிறார்கள். பராபரனுடைய வல்லமை அவர்களுக்கு எந்தக்காரியத்திலும் உதவியாயிருக்கும். பராபரனுடைய கோபம் பற்றி எரிந்து நம்மை அழிக்காதபடிக்கு அவர்கள் தடுக்கிறார்கள். பராபரன் ஒரு தேசத்தை அழிக்க வந்தால், இவர்கள் தீவிரமாய் அவருக்கு எதிர் கொண்டுபோய் அவர் கையைப் பிடித்துக்கொண்டு அவருக்குச் சமாதானம் சொல்லுகிறார்கள். நல்லோரைத் துன்பப்படுத்தினால் பராபரன் அவர்களை அவ்விடம்விட்டு அப்பால் எடுக்கிறார். அது அந்தப்பட்டணம் நாசமாய்ப்போம் என்பதற்கு நிச்சயமான அடையாளமாயிருக்கிறது. சோதோம் பட்டணத்தார் லோத்தைத் துன்பப்படுத்தின போது, லோத்து அவ்விடம் விட்டு புறப்பட்டார். அப்போதே சோதோமும் அழிந்துபோயிற்று. இஸ்ரவேல் சனம் எகிப்து தேசத்தில் பட்ட இடுக்கண் தாளமாட்டாமல் அதை விட்டுப்புறப்பட்ட போது, பார்வோன் தன் சேனைகளோடு சிவந்த சமுத்திரத்திலே அமிழ்ந்திப்போகலாயிற்றே. ஆ நல்லவன் ஒரு தேசத்தில் இருக்கிறது அதற்கு எத்தனை பெரிய பொக்கிஷமும் ஆசீர்வாதமுமாக இருக்கிறது! உத்தமனாக இருந்த யோசேப்பு ஒருவனாலே எகிப்துதேசம் முழுவதும் பஞ்சத்தில் காப்பாற்றப்பட்டதே. வார்க்கப்பட்ட கன்றுக்குட்டிக்குமுன் கூத்தாடின இஸ்ரவேல் சனத்தின்மேலே கர்த்தர் கோபம்மூண்டு அவர்களை நாசம்பண்ணவேண்டும் என்று இருந்தபோது, மோசே ஒருவனாய்த் துணிந்து, அவரண்டையில் போய் மன்றாடினானே.

ஆனால் அப்படிப்பட்ட நல்லோர் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அது ஒரு

வருக்கும் தெரியாதபடியால், அதை எண்ணாமல், ஒவ்வொருவரும் காலாலே மிதித்துக்கொண்டு போகிறார்கள். புத்தியில்லாத சிருஷ்டிகளும் நல்லோர்களைக் கனம்பண்ணி, அவர்களை ஆதரித்து அவர்களுக்கு அஞ்சுகையில், மனிதர் அவர்களைத் துன்பப்படுத்துகிறது மகா பெரிய குருட்டாட்டமாமே. பார்வோன் தன் சேனாபலத்தால் இஸ்ரவேல் புத்திரருக்கு இடுக்கம் செய்தபோது, சிவந்த சமுத்திரம் இரண்டாகப் பிரிந்து அவர்கள் தன்னைக் கடந்துபோக இடங்கொடுத்ததே. மகா எரிச்சலோடே மனுஷரை விழுங்க வேண்டும் என்று இருந்த சிங்கங்கள் தானியேலைத் தப்பவிட்டதே. ஏசபேல் இராசாத்தி எலியாவை பசியால் கொல்ல நினைத்த வேளையில் காகம் அவருக்கு ஆகாரம் கொடுத்ததே. யோனாவை கப்பல்காரர் கடலில் எறிந்தபோது, திமிங்கலம் தன் வயிற்றில் அவருக்கு இடங்கொடுத்ததே. நேபுகாத்நேசார் அந்த வாலிபரைக் கொல்ல வேண்டும் என்று நெருப்பிலே போட்டபோது, நெருப்பு அவர்களைக் காப்பாற்றினதே. ஆகையால் நல்லவர்களில் ஒருவனையும் துன்பப்படுத்தாதபடிக்கு நான் பத்திரமாயிருக்கிறேன். ஏனென்றால் அவனைத் துன்பப்படுத்துகிறவன் பட்டணங்களை நாடுகளை அல்லது பராபரனைத் துன்பப்படுத்துகிறான். ஆனால் நான் துன்பப்பட்டால், பொறுமையாயிருப்பேன். பார்வோன் இஸ்ரவேல் சனத்தை எத்தனைக்கு அதிகமாய் ஒடுக்கினானோ, அத்தனைக்கு அதிகத் திரளாய் இஸ்ரவேல் சனம் பெருகி வர்த்தித்ததே. யோசேப்புக்கு சகோதரரால் வந்த துன்பம் பிற்காலத்தில் அவனுக்குக் கிடைத்த மகிமைக்கு ஏதுவாயிற்று. தாவீது துன்பப்பட்ட படியினாலே தீர்க்கதரிசனத்தின் ஆவியினால் சங்கீதங்களைப் பாடுவதற்கான பெரிய வெளிச்சத்தை அடைந்தார்.

என் இருதயம் நல்லதாய் இருந்தால், பொல்லாத லோகம் எனக்குச் செய்யப்போகிற சேதம் என்ன! ரோசா புஷ்பத்துக்கு முள்ளுக்களாலும், பொன்னுக்கு நெருப்பாலும் வரும் சேதம் என்ன. எவனுக்கும் தன் சுய இருதயத்தினால் சேதம் வருமே அல்லாமல் பின் ஒன்றினாலும் வராது.



௱௨௰. தியானம்.

## மாமிச சிந்தைக்கும் ஆவியின் சிந்தைக்கும் உள்ள விரோதத்தைப் பற்றியது.

### இன்பம் துன்பம்.

அப்படி எனக்குள்ளே உணருகிறேன். என் மாமிசத்துக்கு இன்பமாகிறது என் ஆவிக்குத் துன்பமாகிறது. நான ஐசுவரியவானாகும்படி ஆசிக்கிறேன். ஆனால் அதினால் என் இருதயம் பாரப்படுகிறதென்கிறதைப் பார்க்கிறேன். எவ்வளவு ஆஸ்தியோ அவ்வளவு கவலை. நான் உயர்ந்த அந்தஸ்தை அடைய விரும்புகிறேன். ஆனால் அதினால் என் ஆத்துமத்தின் பேரிலே தாங்கக் கூடாத பாரச் சுமையைப் போடுகிறேன். பெரிதான அந்தஸ்துக்கு அரிதான அலுவலும், சங்கடமும், பொறாமையும், கண்ணிகளும் உண்டு. மாமிசத்துக்கு மகிழ்ச்சியுண்டாக்க ஆத்துமத்தை நான் பாரப்படுத்த வேண்டியதென்ன. எசமாட்டி அடிமைக்கு ஊழியம் செய்கிறதா? மாமிச இச்சை எதுவரைக்கும் இருக்கும்? அதினால் பயன் என்ன? நான் செத்தால், என் பணம் எங்கே போம்? என் மேன்மை என்னோடு கூட குழிக்குள் இறங்குமா? உலகமக்கள் மனஸ்தாபத்தோடு முடிவிலே என்ன சொல்லுவார்கள் என்று வாசிக்க இல்லையா. அகந்தையானது எந்த நலனை எங்களுக்கு உண்டாக்கிற்று. ஐசுவரியம் ஆடம்பரமும் எங்களுக்குக் கொண்டு வந்ததென்ன. இதுகள் எல்லாம் நிழலைப்போலவும், பாவிப்போகிற தூதன செய்தி போலவும் கடந்து போயிற்றென்று சொல்லுகிறார்களே. ஞானத்தின் ஆகமம். ௫, ௮, ௯.

இன்பம் துன்பம் என்று நான் இந்த உலகத்தில் இருக்கும் என் காலத்தைக் குறித்துச் சொல்லுகிறேன். மாமிசத்துக்கு இன்பமானது ஆவிக்குப் பாரமானதாயிருக்கும். அப்படித்தான் அல்லவோ? பூமியில் வெகுநாளைக்கு இருக்க உனக்கு ஆசை உண்டு. அதினால் உனக்குப் பலன் என்ன? ஆத்துமத்துக்குச் சுமை தானே. எத்தனைநாள் இப்புவியில் இருக்கிறாயோ, அத்தனைக்கு அதிகப் பாவகுப்பைகளை நீ சேர்த்து அதைக் கோபுரமாக்குகிறாய். என் அக்கிரமங்கள் என் தலையின்மேல் ஏறி பாரச்சுமையைப்போல் எனக்கு மிஞ்சின பாரமாயிற்று என்று தாவீது இராசாவோடு பெருமூச்சு விட்டு சொல்ல வேண்டியது. சங்கீ. ௩௮, ௫. என் பாவம் கடற்கரை மணலைப்பார்க்கத் திரளாயிருக்கிறதென்று மனாசே இராசாவோடு சொல்ல வேண்டியதே. அப்படியிருக்க, வெகு

நாளைக்கு இருந்து, வெகு பாவத்தைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்கிற ஆசை உனக்கு இன்னம் போகவில்லையே. மகா பரிசுத்தமான கிரியைகளிலும் பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிற நீ ஒரு நிமிஷப்போதாகிலும் பாவம் இல்லாதிருக்க உன்னால் கூடுமோ? நீ உன்மேல் எத்தனை இரக்கமில்லாதவனாயிருக்கிறாய்! நீடித்திருக்கிறது மாமிசத்துக்கு மதுரமானாலும் பாவத்தினாலே நீடித்திருக்க எனக்கு ஆசையே இல்லை. கசப்பான பாவம் கசப்பான சீவன்.

இப்போது நாம் அதைத் திருப்பி துன்பம் இன்பம், என்று சொல்லுகிறோம். கிறிஸ்துவின் சீவன் மாமிசத்துக்குத் துன்பமும் ஆவிக்கு இன்பமுமாமே. அதை எடுக்கிற போது வருத்தமும், சுமக்கிற போது இலேசும் ஆச்சே, ஏனெனில் உன்னை இருத்தும் சுமையை அவர் தாங்குகிறார். உன் தோள் மேல் கிடக்கிறது மகா அற்ப காரியம். பட்சிக்கு அதின் செட்டை கனமாயிராமல், அது எழும்பிப் பறக்கிறதற்கு எப்படி உதவியாயிருக்குதோ, அப்படிப்போல் கிறிஸ்துவின் நுகத்தடி இருதயத்தைப் பாரப்படுத்தாமல், அதைப் பாரப்படுத்துகிற லோக காரியங்களை விட்டு அதைப் பிரிக்க உதவுகிறது. இந்தப் பாரம் அசதியைக் கொடாமல் சுறுசுறுப்பைக் கொடுக்கிறது. மனதைத் தளர ஒட்டாமல், அதைத் தயிரியப்படுத்துகிறது. கிறிஸ்துவினுடைய ஆறுதலும அவருடைய ஆவியின் ஒத்தாசையும் எல்லாவற்றையும் இலேசாக்குகிறது. பரம மதுரத்தின் ஒரு துளி இந்த உலகத்தின் சகல சிற்றின்பத்திலும் மேன்மையும் இன்பமுமானது. அது ஓர் அதிசயபாரம், சுமக்கச் சுமக்க இலேசாகிறது. மாமிசத்துக்கு எட்டிக் கசப்பாயிருக்கிறதைத் தேவ சிநேகம் ஆவிக்கு நல்ல தேனாக்குகிறது.

கிறிஸ்துவின் பாடுகளும் மாமிசத்துக்குத் துன்பம், ஆவிக்கோ அது இன்பமானது. பழைய ஆதாமைக் கிறிஸ்துவோடு கூடச் சிலுவையில் அறையப்போனால், ஆ அவன் எப்படித் திமிறி மல்லுக்கட்டுகிறான். அதில் தன்னை அறைய அவனுக்குச் சம்மதியில்லை. ஆவிக்கோ அது சம்மதியாயிருக்கிறது, ஏனெனில் அது கிறிஸ்துவின் சிலுவை. கிறிஸ்துவே சிலுவையைச் சுமத்துகிறவர். அவரே அதைச் சுமக்க உதவி செய்கிறவருமாம். அவரே தமது ஆறுதலால் அதை மதுரமாக்குகிறவர். சிலுவை என்கிற பாத்திரத்திலே அவர் ஆறுதலின் ஒரு துளி விழுந்தால் எல்லாம் தித்திப்பாய்ப்போம்.

மாமிச சிந்தையுள்ள மனுஷனுக்கு மரணம் பாரமாயிருக்கிறது. மரணம் கிட்டிற்று என்று கண்டால் அந்த மாமிசம் எப்படித் துடித்துப் பதைக்கிறது! ஆவியின் சிந்தையுள்ள



மனுஷனுக்கோ அது இன்பமானது. அவன் பவுல் அப்போஸ்தலனைப்போல், நான் பிரிந்துபோய் கிறிஸ்துவுடனே இருக்க எனக்கு ஆசை இருக்கிறது என்பான். ஏனெனில் அவன் தன் மரணத்தினால் தான் ஒன்றையும் இழந்துபோகாமல், அதனால் வெகு ஆதாயம் தனக்கு உண்டாகும் என்று நன்றாய் அறிந்திருக்கிறான். நான் என் ஆத்துமத்தைப் பராபரன் வசமாய்ப் பரமண்டலத்தில் உயர்த்தத் தடையாயிருக்கும் யாதொன்றால் அதைப் பாரப்படுத்தேன். என் மாமிசத்தையோ அது ஆவிக்கு எதிர்த்து நிற்கிற குணத்தை விட்டு செத்துப்போகும்படி, அதை பாரச் சுமையின் கீழே போட்டு ஒடுக்கிக் கீழ்ப்படுத்த எனக்கு மனதுண்டு. என் மாமிசத்துக்கு இன்பமானதை வெறுத்து என் ஆவிக்கு இன்பமானதையோ தெரிந்துகொள்ளுகிறேன்.

௩௨௧. தியானம்.

## சத்தியவேத வாசிப்பைப் பற்றியது.

ஒரு புஸ்தகத்தை நன்றாய் வாசித்தவன் நீரப் படித்தவன்.

சத்திய வேத புஸ்தகத்தை எத்தனை விசையோ முழுதும் வாசித்தேன் என்று வீம்புபேசுகிறாய். வாசிக்கிறது நல்லதுதான். அந்த வீம்போ உதவாது. பிரயோசனம் உன்னுடையதும் புகழ்ச்சி பராபரனுடையதுமாயிருக்க வேண்டியது. நீ சத்தியவேத புஸ்தகத்தை கருத்தாய் வாசித்தவன் என்று நான் உன்னை அடக்கம் பண்ணும் போதல்லவோ புகழ்ந்து சொல்ல வேண்டும். அந்தப் புகழ்ச்சியினாலே தான் பிரயோசனம் என்ன. எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல; உம்முடைய நாமத்துக்கே மகிமை வரப்பண்ணும் (சங்கீ. ௱௰௫, ௧) என்று நீ சொல்ல வேண்டும்.

சத்திய வேதத்தை நீ அருமையாக எண்ணி வாசி. அது விலையேறப்பெற்றதும் பொன்னிலும் பொன்னுமான புஸ்தகம். நீ விசாலவழியில் போகிறதானால், அது உன் கால்களை நெருக்கமான வழியிலே திருப்பி உன் நடக்கையை இயேசு கிறிஸ்துவின் உபதேசத்துக்கும் நடக்கைக்கும் ஏற்றதாக்கும். உன் இருதயத்திலே தப்பறையும் சந்தேகமும் இருக்குமே ஆகில், அப்போது அது அந்த இருளை எல்லாம் நீக்கி உன்னைப் பிரகாசிப்பிக்கும். உன் இருதயம் உலகத்தைச் சாருமேயாகில், அப்போது அது உலகத்தை விட்டு உன்னை இழுக்கும். அதின் அக்கினி உலக இச்சையை எல்

லாம் பட்சிக்கும். அது தேவ சிநேகத்தின் ருசியை உனக்குக் கொடுப்பதால், உலக சிநேகத்தை எல்லாம் கழுக்கிலே மறக்கடிக்கிறது. சென்ம சுபாவத்தின் ஆகாத குணம் இருதயத்தைப் பூமிக்குள் அழுத்தும்போது, அது இருதயத்தைக் காந்தக் கல்போல் உயரத் தூக்குகிறது. இருதயம் நன்மைக்கு அசதியாய்ப் போமேயாகில், அது பராபரன் பாராட்டின தயவினால் இருதயத்தை நயம்பண்ணி இழுத்து, பராபரனுடைய இரக்கங்களுக்காகப் புத்திசொல்லுகிறது. இப்படிப்பட்ட சிநேகத்தின் அடிகள் இருதயத்தை இளகப்பண்ணாதா? இப்படிப்பட்ட சிநேகத்தின் அனல் குளிர்ந்துபோன இருதயத்தைச் சூடாக்காதா? தெய்வதயவு இருதயத்தில் படும்பொழுது, அது பலமும் கரிசனமுமான வல்லபத்தால் இருதயத்தைத் தன் வசப்படுத்தி, பராபரனுக்குப் பிரியமானதைச் செய்ய அதற்கு உற்சாகத்தைக் கொடுக்கத்தக்க அனலாயிருக்கிறது. மனது துக்கம் அடைந்தால், தேவவசனம் அதைச் சந்தோஷிப்பிக்கிறது. ஏனெனில் அதிலே பேசுகிறவர் பராபரன். அவருடைய இன்பமான தயாள சத்தம் அழுகிற பிள்ளைக்கு ஆறுதலாயிருக்கிறது. இருதயம் பெலவீனமாயிருந்தால், அது அதைப் பலப்படுத்துகிறது. வாசனையான சுவர்க்கத்தைத் தேய்த்து முகர்ந்தால்; அது இளைப்பானவனுக்குப் பெலன் கொடுக்கிறதுபோல், பராபரனுடைய வசனமானது அதைப் பரிசுத்த தியானத்தோடு இருதயத்திலே முகர்ந்தால், பெலனற்று இளைப்பாய்ப்போன ஆத்துமத்தைப் பலப்படுத்துகிறது.

ஆனால் என் பிரியமான கிறிஸ்தவனே, நீ சத்தியவேத புஸ்தகத்தை வாசித்தால், அதில் அடங்கிய சரித்திரத்தை மாத்திரம் அறிய வேண்டுமென்கிற நோக்கமாய் அதை வாசியாமல், தேன்பூச்சி பூவில் இருக்கும் தேனைக் குடிக்கிறது போலவும், மரம் வேர் வழியாய்த் தனக்குச் சாரத்தை இழுத்துக்கொள்ளுகிறது போலவும், நீயும் ஜெபத்தைக்கொண்டு வசனத்தின் பெலத்தை உன்னிடத்தில் இழுத்துக்கொண்டு, பிறகு அந்தப் பெலனை நடக்கையிலே காண்பிக்க வேண்டும். சத்தியவேதம் வித்தைக்கென்றல்ல, தெய்வபத்திக்கென்றும், படிப்புக்கென்றல்ல, விசுவாச நடப்புக்கென்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிசாசு கூட, தான் வேதபுஸ்தகத்தை வாசித்ததாக வனாந்தரத்திலே காண்பித்தது. ஆனால் அது அதினாலே தன்னை நல்லவன் ஆக்குகிறதற்கல்ல, கிறிஸ்துவுக்கும் அவருடைய அவயவங்களுக்கும் கண்ணி குத்த அதை வாசித்திருந்தது. தர்க்க சிந்தைக்காரரான சில படிப்பாளிகள் வேதபுஸ்தகத்தைச் சுருசுறுப்பாய் வாசிக்கிறார்கள், தங்



கள் குணப்படுதலுக்கு அல்ல, மற்றவர்களைக் கலக்கப்படுத்துகிறதற்குத்தான். இப்படிப்பட்டவர்கள் பிசாசின் வித்தே.

வேதபுஸ்தகம் க) நான் ஆதாமுக்குள் பாவத்தில் விழும்முன் இருந்த சீரையும், உ) ஆதாமின் விழுகையினால் நான் அடைந்த நிலைமையையும்; ௩) நான் கிறிஸ்துவுக்குள் பெறக் கூடியதும், பெற வேண்டியதுமான சீரையும், ௪) மறுமையிலே நான் அடையப் போகிற மகிமையையும் எனக்குக் காண்பிக்கும் கண்ணாடியாயிருக்கிறது. முதலாம் காரியம் சுத்த தேவ சிநேகத்தை எனக்குக் காட்டி, அதினால் என்னை மெய்மனஸ்தாபத்துக்கு எழுப்பி விடுகிறது. இரண்டாம் காரியம் என்னைத் தானே பகைக்கிற பகையையும் என் மாமிசத்தைக் கொல்லுகிறதற்கான மனதையும் தாழ்மை மெத்தனவு பொறுமை என்கிறதுகளையும் என்னில் உண்டுபண்ணுகிறது. மூன்றாம் காரியம், விசுவாசத்தையும் தேவபத்தியையும் என்னில் உண்டாக்குகிறது. நாலாம் காரியம், மாயையாகும் காரியங்களை வெறுத்து மெய்மையை நாட என்னைப் படிப்பிக்கிறது. இந்த நாலு காரியங்களிலே கிறிஸ்துமார்க்கம் முழுவதும் அடங்கியிருக்கிறது.

௱௨௨. தியானம்.

## பண ஆசையைப் பற்றியது.

வெகு பணம் வெகு வலை.

இப்படியிருக்கையில் ஐசுவரியவானாக விரும்புகிறவனார்? ஐசுவரியவான்களாக வேண்டும் என்று இருக்கிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனிதரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான வெகு இச்சைகளிலும் விழுகிறார்கள். ௧ தீமோ. ௬, ௯. ஐசுவரியம் தன்னிலே தானே ஒருவனையும் நரக ஆக்கினைக்குப் பாத்திரம் ஆக்காது. பராபரன் தாமே அளவில்லாத ஐசுவரிய சம்பன்னர் ஆகையால், அவருடைய ஆசீர்வாதமே ஐசுவரியவானாக்குகிறது. மேலும் பராபரனுடைய வஸ்துக்கள் எல்லாம் தன்னிலே தானே நல்லதும் புறக்கணிக்கப் படாததுமாயிருக்கிறது. ஆனால் ஐசுவரியவானாக வேண்டுமென்று தானுமானான அடக்கக் கூடாத ஆசையும், வெகு பணங்களைச் சேர்க்கிறதற்கு வழி எப்படி என்று இரவும் பகலும் அதுவே கவலையும் அதுவே விசாரமுமாயிருக்கிறதும், அழிவுக்கு இடமான பாவமாயிருக்கிறது. வேட்டைக்காரன் மானைப் பின்தொடரு

கிருப்போல, பண ஆசைக்காரன் பொன்னைத் தேடித் திரிகி
றான். பிசாசோ ஒரு வேட்டைக்காரனைப்போல் அவன் பிற
கே திரிந்து அவனைப் பாவ வலைக்குள் போய் விழும்படி ஓட்டு
கிறது. ஒரு பாவத்திலிருந்து மறு பாவத்தில் விழுத்தள்ளு
கிறது; அந்தப்பாவங்களினால் தேவபத்தியும் மனச்சாட்சியும்
அடக்கம்பண்ணப்படும். அப்படிப்பட்டவர்களுக்குப் பண
மும் நன்றாய்த் தான் சேருகிறது. அப்புறம் பிசாசு பாவ
வலையிலிருந்து இச்சை வலையில் துரத்துகிறது. அத்தோடே
அவன் பண ஆசை வரவர அதிகரிக்க, பாவமும் அதிகரிக்
கிறது. எவ்வளவு உண்டாயிருக்கிறதோ, அவ்வளவு வேணும்
என்கிற ஆசை அவனை வாதிக்கிறது. பண ஆசைக்காரன்
அடிக்கடி தன் யோசனைகளிலேயும் ஆசைகளிலேயும் வெல
ளய் மாட்டிக்கொண்டு மயங்கி திரும்ப அதைவிட்டு கழற்
றிக்கொள்ள வகையறியாமல் கிடக்கிறான். அதுகளிலே எத்
தனை மதிகேடு சம்பவிக்கிறது! ரம்ப வைத்திருந்தும் ஒன்றும்
இல்லாதவனைப்போல் பறக்கிறது மதிகேடல்லவோ. பணக்
காரன் தனக்கு இருக்கிறதை அநுபவிக்க அவனுக்கு உத்தர
வில்லை. அதைத் தொட்டால் அவனை மம்மோன் என்கிற
சுவாமி கோபித்துக்கொள்ளும். நிறைய இருந்தும் எட்டே
தும் அதிகம் வேண்டும் என்று அலைகிறது மதிகேடல்லவோ.
இப்படிப்பட்ட பண ஆசையால் எத்தனை சேதம் வருகிறது!

இப்படிப்பட்ட பண ஆசைக்காரன் ஆருக்குஞ் சேதம்
வருவியான்? பிறர் உடைமைக்குச் சேதம் வருவிக்கிறான்.
ஏனெனில் தான் ஒரு முள்செடி போலிருந்து தன் கிட்ட
வந்தவர்களை எல்லாம் மாட்டி இழுத்துக்கொண்டு அவர்களைச்
சேதப்படுத்தி, பல விதத்திலும் தனக்கு ஆதாயம் வருவிக்கப்
பார்க்கிறான். அதினால் பராபரனுடைய கிருபையையும் ஆசீர்
வாதத்தையும் தனக்கு இல்லாமல் போகப்பண்ணி, மனச்
சாட்சியையும் நற்கீர்த்தியையும் கெடுத்து விட்டு, மனுஷரு
டைய தயவையும் பட்சத்தையும் போக்கடிக்கிறான். அவன்
தன் சுதந்தரவாளிகளை ஐசுவரியவான்களாக்க தான் அத்தனை
கஸ்திப்பட்டும் வெட்கத்தையும் இச்சையையும் பின்வைத்
து, அவர்களையும் பிச்சைக்காரராக்கிப் போடுகிறான். ஏனெ
னில் திருட்டு உடைமை ஆசீர்வாதமாய் லபியாது. எப்படி
வந்ததோ அப்படியே போம். கடைசியிலே பிசாசு அவனை
முழுதும் நரக வலைக்குள்ளே சிக்கப்பண்ணி, தண்ணீரில்லாத
பாதாளத்திலே அமிழ்த்துகிறது. பண ஆசைக்காரன் செய்த
வேலைக்கு இதுதான் தகுந்த கூலி. அவன் தன் இருதயத்
தைப் பணக்கவலையினாலும் உலகக்கவலையினாலும் பாரப்படுத்
தினான். பாரமானதெல்லாம் ஆழத்திலே அமிழ்ந்த வேண்



டும். அவன் மகோதர வியாதிக்காரனைப்போல் என்ன வந்தா
லும் போதாது என்று இருந்தான். இப்போது அவன் ஒரு
துளி தண்ணீராலும் அகப்படாத குழியிலே கிடக்கிறான்.
முன் அவன் ஒருக்காலும் நிரம்பாத நரகம் போலாகி, இன்
னம் வேண்டும் என்கிற ஓயாத ஆசையினால் எரிந்து கொண்
டிருந்தான். இப்போது அவன் நரக நெருப்பிலே வேக
வேண்டியதாயிற்று. அவன் பண ஆசையின் நெருப்பு அவி
யாமல் இருந்ததுபோல அவன் நரக சுவாலையும் அடங்காது.

ஆகையால் இருதயமே, நீ அதை நன்றாய் நினைத்து
பண ஆசையை விட்டுவிடு. உனக்கு இருக்கிற தீராத ஆசை
யினால் உனக்கு வரும் வேதனைக்கு இந்த உலகத்தின் திரவி
யங்கள் எல்லாத்தினாலும் வரும் ஆறுதல் ஈடல்ல. உன் ஆயுசு
எத்தனை குறுகினதென்கிறதைத் தியானி. நீ எல்லாவற்றை
யும் விட்டு ஒழியும் நேரம் கிட்டியிருந்தாலும் இருக்குமே.
அப்படியானால் நீ இத்தனை பணக் குப்பையைக் கூட்டுகிறது
வீணாமே. இயேசுவின் எளிமைத்தனத்தையும், பராபரன்
தம்முடைய பிள்ளைகளுக்குப் பரமண்டலத்தில் பத்திரமாக
வைத்திருக்கும் பொக்கிஷத்தையும் அவதானித்துக்கொள்.
போதும் என்ற மனதுடனே கூடிய தேவபத்தியே பெரிய
ஆதாயம். ஏனெனில் நாம் லோகத்தில் ஒன்றுங் கொண்டு
வந்ததில்லை. அதிலிருந்து ஒன்றுங் கொண்டுபோகவும் கூடா
தென்கிறது வெளியரங்கமாய் இருக்கிறது. உண்ணவும் உடுக்
கவும் நமக்கு இருந்தேயானால், அது போதும் என்று இருக்
கக்கடவோம். ௧ தீமோ. ௬, ௬-௮. பராபரன் உனக்கு ஐசு
வரியத்தைக் கொடுத்தால், அகந்தை பாராட்டாதே. சதம்
அல்லாத ஐசுவரியத்தை அல்ல, திரளாய் நமக்கு எல்லாவற்
றையும் அநுபவிக்கக் கொடுக்கிற சீவனுள்ள பராபரனை
நம்பு. நன்மைசெய்யவும் நற்கிரியைகளில் ஐசுவரியவானாக
வும், கொடுக்க மனப்பூர்வமாய் இருக்கவும், அநுசாரியாயிருக்
கவும், நித்திய சீவனைப் பிடிக்கத்தக்கதாக வருங் காலத்துக்கு
உனக்கு நல்ல அஸ்திவாரத்தைப் பொக்கிஷமாகக் கூட்டி
வைக்கவும் வேண்டும். ௰௭—௰௯. நான் சரீரபிழைப்புக்குத்
தேவையான காரியங்களிலே என் ஆசையை மட்டாய் வைப்
பேன். பராபரன் எனக்கு அதிகமாய்க் கொடுத்தால், என்
பிறருக்கு உதவியாயிருக்கும்படி வைப்பேன்.

௱௨௩. தியானம்.

# மிகுந்த படிப்பைப் பற்றியது.

அதிக படிப்பு, கொஞ்ச மனச்சாட்சி.

இந்த இரண்டும் ஒன்றோடொன்று தோழமையானதுகளும் சாதாரணமாய் ஒருமித்திருக்கிறதுகளுமாம். நீ உன்னுடைய மிகுந்த படிப்புக்காக மேன்மை பாராட்டுகிறாய். பிசாசுக்கள் உன்னிப்பார்க்க அதிகமாய்ப் படித்திருந்தும் என்றென்றைக்கும் நரக நெருப்பிலே கிடந்து வேக வேண்டியதாயிருக்கிறதை நினைத்துக்கொள். உன் வெகு படிப்போடே மனச்சாட்சியும் கூடி இராவிட்டால், வெறுவாய்ப் படித்தறி னால் பலன் என்ன. தன் எசமானுடைய சித்தத்தை அறிந்தும் அதின்படி செய்யாமல் போன ஊழியக்காரன் அநேகம் அடிகளால் அடிக்கப்படுவான் என்று கிறிஸ்து சொன்னதை அறியாயோ? லூக். ௰௨, ௪௭. நீ வேதபுஸ்தகத்தை விஸ்தரிக்கப் படித்தாய். ஆனால் அதில் அடங்கியிருக்கிற உள்ளான இரகசியப் பொருளையும் கண்டுபிடித்தாயோ? அது உன் இருதயத்தில் இராமல் ஞாபகத்திலும் நாவிலும் மாத்திரம் இருந்தால், பிரயோசனம் என்ன. படிப்பைவிட சிநேகம் சிறந்தது. சிநேகம் ஊன்றக்கட்டுகிறது, அறிவு உப்பிப்போகப்பண்ணுகிறது. ௧ கொரி. ௮, ௧. மதுபானம் வெறி கொடாத படிக்குத் தண்ணீர் அதின் பெலத்தைக் குறைக்கிறதுபோல், படிப்பும் கர்வத்தை உண்டாக்காதபடிக்கு சிநேகம் அதை அடக்க வேண்டும். சிநேகம் இல்லாமல் அறிவு மாத்திரம் சீர்ப்படுத்தாது. சரீரத்திலுள்ள அக்கினியானது சாப்பாட்டை சீரணமாக்காவிட்டால் சாப்பிட்ட சாப்பாடு சரீரத்துக்குப் பெலன் தராததுபோல், தேவ சிநேகத்தின் அக்கினியைக் கொண்டிராத அறிவினால் யாதொரு பிரயோசனமுமில்லை.

அப்பா, உன் படிப்புக்காக நீ உன்னை உயர்த்துகிறதேது. ஒரு அற்பவியாதியானது உன் ஞாபகத்தைப் பெலவீனமாக்கி, புத்தியைக் கலக்கி, நினைவைக் கெடுத்துப்போடலாகுமே. நீ உன்னை மிகவும் உயர்த்துகிறதேது? நீ எவ்வளவுதான் அறிந்தாலும் அந்த அறிவெல்லாம் மகா குறைவுள்ளதும் குழந்தையின் அறிவுமாயிருக்கிறது. ௧ கொரி. ௰௩. நீ செத்த பின் உன் படிப்பு எங்கே போம்! அது எவ்வளவு சீக்கிரத்தில் மறந்து போகப்படுகிறது! தான் அறிவுள்ளவனென்று எவன் தனக்குள்ளே தோற்றிக்கொள்ளுகிறானோ, அவன் தான் அறிய வேண்டியதை இன்னம் அறிந்தவன் அல்ல. தான் ஒன்றும் அறியாதவன் என்று சொல்லுகிறதே



உன்னத அறிவு. எல்லாவற்றையும் அறிந்திருக்கிறேன் என்கிறாய். உன்னையுங் கூட அறிந்திருக்கிறாயா? உனக்குப் புறம்பாயிருக்கிற காரியங்களை அறிய நீ எவ்வளவு பிரயாசப்படுகிறாயோ, அவ்வளவுக்கு அதிகமாய் நீ உன்னையும் உன் உள்ளத்தையும் அறிய மறக்கிறாய்.—எல்லாவற்றையும் அறிந்திருக்கிறேன் என்கிறாய். பராபரனையும் அறிந்திருக்கிறாயா? பராபரனை அல்லாத ஞானம் எல்லாம் பயித்தியமாமே. ஏனென்றால் அது மெஞ்ஞானத்தை விட்டு பிசகிப்போகப்பண்ணுகிறது. கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தின் துவக்கம். வாக். ௧, ௭. ஆகையினாலே இம்மையில் தானே விசுவாசத்தினாலே பராபரனோடே ஐக்கியமாகப் பார். அப்போது நீ மறுமையிலே பராபரனிடத்தில் எல்லாவற்றையும் கண்டறிந்து உணருவாய். சூரியன் அல்லாமல் சூரியனுடைய வெளிச்சத்தை நீ காணக் கூடாதது போலவும், தண்ணீர் அல்லாமல் தண்ணீர் மேல் யாத்திரை பண்ணக் கூடாததுபோலவும் பராபரனை அல்லாமல் நீ பராபரனை அறியக் கூடாது. ஆகையால் பராபரன் உனக்கு வெளிச்சம் கொடுக்க அவரை வேண்டிக்கொள்ளு. சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களை நீ உனக்குக் கண்ணாடியாக வைத்து அதிலே பராபரனைப் பார். அவர் சகல வஸ்துக்களுக்கும் ஆதிகாரணராயிருக்கிறார். எல்லாக் காரியங்களிலேயும் இருக்கிற நன்மை அவர் மூலமாய் அதிக நன்றாயிருக்கும். நீ அறிந்த நன்மையை அப்பியாசம் பண்ணு. கிரியையில்லாத படிப்பும் அறிவும் மழையில்லாத மேகம் போலும் கனியில்லாத மரம்போலும் இருக்கிறது. சிலுவையில் அறையுண்ட இயேசு கிறிஸ்துவை ஒழிய வேறொன்றையும் அறிந்திருக்கிறேனென்று நான் சொல்ல மாட்டேன். நான் வேறு அறிவை ஆசிக்கவும் மாட்டேன். அப்போது நான் வேறொன்றையும் அறியாதவனாயிருந்தாலும் நான் அறிந்திருக்கிறது போதும்.

௱௨௪. தியானம்.

# உயர்ந்த உத்தியோகத்தைப் பற்றியது.

பெரிய உத்தியோகம் பெரிய பாரம்.

இது நிசமே. அதிகார பாரம், அக்கிரம பாரம். பெரிய உத்தியோகங்களிலே இருக்கிறவர்கள் சாதாரண பிரசைகளுக்கு வருகிற ஆக்கினை தங்களுக்கு வராது என்கிற எண்ணமாயிருக்கிறதினாலும், மற்றவர்களை விட அதிக சோதனைக்

குள்ளானவர்களாயிருக்கிறதினாலும் அதிகமாய்ப் பாவம்செய்கிறதற்குச் சமயம் உண்டு. பிசாசுக்கு பெரியோர் மாளிகைகளில் இருக்கும் அநுகூலம்போல் பின் ஒரு இடத்திலும் இல்லை. ஏனெனில் பசாசும் பெரிய துரையும் இந்த உலகத்தின் தம்பிரானுமாயிருக்கிறது. ஆகையால் அது தனக்கு உகந்தவர்களைத் தேடிப்போகிறது. உயர்ந்த மரங்கள் காற்றினால் மிகவும் அசைக்கப்படுகிறதுபோல, உயர்ந்த இடத்திலே இருக்கிறவர்கள் பாவத்தால் மிகவும் அசைப்புண்டு பாவத்துக்குச் சார்பானவர்களாயிருக்கிறார்கள். பெருமீன் வலையிலே மாட்டிக்கொள்ளும். சிறுமீன் வலைக்குத் தப்பிப்போம். பெரிய உத்தியோகத்திலே இருக்கிறவன் உயர்ந்த கோபுரத்தின்மேல் நிற்கிறவனுக்குச் சமானமாயிருக்கிறான். அவன் விழுகிறது எத்தனை லேசு. சறுக்கலான வழியில் நடக்கிறவனைப்போல அவன் எவ்வளவு சடுதியாய் இடறுகிறான்.

அதிகாரபாரம் ஆக்கினைபாரம்.—பெரியோர் சிறியோர்களுக்கு நன்மாதிரியாயிருக்க வேண்டும். அவர்கள் பாவம் செய்தால், அப்படியே மற்ற சனங்களும் செய்வார்கள். அவர்களே குற்றவாளிகளானால், தங்களைப்போல் குற்றவாளிகளான மற்றவர்களை அவர்கள் தண்டிக்கிறதெப்படி. அவர்கள் தண்டிக்காமல் விடும்போது பராபரன் தண்டிக்கிறார். அதினாலே அவர்கள் வெகுவிசை தங்கள் தேசங்களும் அதிலுள்ள மனுஷர்களும் மிகுந்த பரதாபமாய்க் கெட்டழிந்து போவதை மிகுந்த துக்கத்தோடே பார்க்க வேண்டியதாகிறது. பராபரன் பெரிய உத்தியோகஸ்தர்களுடைய நற்கிரியைகளுக்கும் அவர்கள் மற்றவர்களுக்குக் காண்பிக்கிற நல்மாதிரிகளுக்கும் பலன் கொடுக்கிறதுபோல, அவர்கள் செய்கிற துர்க்கிரியைகளுக்கும் அவர்கள் காட்டுகிற துன்மாதிரிகளுக்கும் ஆக்கினை கொடுக்கிறார். பெரியோர்கள் எத்தனை பேர்களை பாவத்துக்கு உட்படுத்துகிறார்களோ, அத்தனைக்கு அதிகத் தாழ்வான நரகில் அமிழ்ந்த வேண்டும்.

உத்தியோக பாரம் உத்தரவாத பாரம்.—வேதவசனம் அவர்கள் உத்தியோகத்தை ஊழியம் என்று சொல்லுகிறது. பெரிய எசமான்கள் பெரிய ஊழியக்காரர். உன் உத்தியோகம் எவ்வளவு உயர்வோ அவ்வளவுக்கு அதிக காரியங்கள் உன் நம்பிக்கைக்குக் கையளிக்கிருக்கிறது. இதனால் நீ உன்னை மறந்து, நீ மற்றவர்களின் ஊழியன் என்பதை நினைத்து உன் சுயாதீனத்தை விட்டு அடிமைத்தனத்துக்குள்ளாக வேண்டியவனாயிருக்கிறாயே. உயர்ந்த உத்தியோகம் உயர்ந்த உத்தரவாதம். பெரிய உத்தியோகஸ்தரும் மற்றவர்களைப்போல நடுத்தீர்வைநாளில் கணக்கு ஒப்புக்கொடுக்கிறதல்லாமல் அத்



தோடே கூட தாங்கள் நடப்பித்த அதிக்கத்தைப்பற்றியும் கணக்குக்கொடுக்க வேண்டும்.

உத்தியோக பாரம் உபத்திரவப்பாரம்.—பெரிய உத்தியோகத்துக்கு எத்தனை பிரயாசமும் எத்தனை கலக்கமும் எத்தனை மோசமும் எத்தனை சதிகளும் உண்டாயிருக்கிறது! உச்சியிலே நிற்கிறவனுக்கு உண்டாயிருக்கிற மோசத்தைப்போல மற்றவர்களுக்கு இல்லை. உயர்ந்த பருவதங்கள் மேலே அதிக இடி விழுகிறது. ஆகையால் என் சிநேகிதா; நீ மேட்டிமையானதுகளைச் சிந்தியாதே. ரோமர் ௰௨, ௰௬. பாரத்துக்கு நீங்கக்கூடியவனாயிருக்கக்கொள்ள, உன்மேலே தானே பாரத்தை ஏன் சுமத்திக்கொள்ளுகிறாய்! நீ ஊழியக்காரனாயிருக்கிறதைப் பார்க்கிலும் ஆண்டவனாயிருக்க வேண்டுமென்கிற மனது உனக்கு உண்டாயிருக்கிறதென்ன! ஒருவன் பூமியிலே எவ்வளவு பெரியவனோ அவ்வளவு பரமண்டலத்தில் சிறியவன். "மனுஷனே நீ சாகவேண்டும்" என்கிறது மகா பெரியோரிடத்திலும் செல்லும். இன்றைக்கு இராசா, நாளைக்குச் சவம். நீட்டிக்கொண்டிருக்கிற கதிர்கள் அறிவாளுக்குத் தப்பக் கூடாததுபோல பெரியோரும் மரணத்துக்குத் தப்பக் கூடாது. செத்த பிறகு பெரிய மனுஷருக்கும் சின்ன மனுஷருக்கும் வித்தியாசம் இல்லை. குழியைத் திறந்து பார்த்தால் பேதம் இல்லாமல் எல்லாருடைய எலும்பும் மக்கினதாகக் காணலாம். எத்தனை பெரிய மனுஷர் பரதாபமாய்த் தங்கள் சீவனை விட்டார்கள்! அது உனக்குத் திகிலை வருவிக்கக் கடவது. நீ ஒருதரம் நரகத்தில் இறங்கிப்பார்க்கக் கூடுமானால், அங்கே பெரியோர்களில் எத்தனையோ பேர் பிசாசின் பந்தியில் முந்தின இடங்களிலிருந்து அதின் பாத்திரத்திலுள்ள கசப்பான பானத்தைக் குடிக்க வேண்டியதாயிருக்கிறதென்கிறதை நீ பார்ப்பாய். உலகம் என்னைப் பெரியதனப்படுத்தாதிருக்கிறது பராபரனால் எனக்குக் கிடைத்த கிருபை என்று எண்ணி பராபரனை இஸ்தோத்திரிக்கிறேன். உலகத்துக்கு என் உத்தியோகம் சற்று நல்லதாயிருந்தால் பராபரனுக்கு அது ஆகாததாயிருக்கும். ஆகிலும் நான் என் உத்தியோகத்தை அற்பமாய் எண்ணேன். நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனும் பராபரனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரனுமாயிருக்கிறேன். இதைவிட உயர்ந்தது என்ன. என் பராபரனே, உயர்ந்த உத்தியோகத்திலே தாழ்மையுள்ள இருதயத்தை எனக்குத் தாரும். அப்போது நான் தேவரீருக்குப் பிரியமாயிருப்பேன்.

௱௨௫. தியானம்.

## தான்தானே சரிக்குச் சரிக்கட்ட நினைப்பதைப் பற்றியது.

பராபரனுடையது பராபரனுக்கு இருக்கட்டும்.

நீ தானே சரிக்குச் சரிக்கட்ட வேண்டும் என்கிறாய். இது மதிகேட்டல்லவா? சரிக்கட்டுதல் நியாயாதிபதிக்கு அடுத்ததாமே. நீயே உனக்கு நியாயக்காரனாயிருக்கிறதெப்படி? சுயசிநேகம் மதியை மயக்குகிறது. பராபரன் அந்தப் பிரயாசத்தைத் தாமே ஏற்றுக்கொள்ளுகிறோமென்று சொல்லியிருக்கிறாரே. அல்லது இந்த வித்தையைப் பராபரனைப் பார்க்க நீ அதிகத்திட்டமாய் அறிவாயா? நீ பராபரனுடைய அதிகாரத்தில் தலையிடாதே. அவர் சிங்காசனத்தில் நீ உளுக்காராதே. அவர் அதைச் சகிக்க மாட்டார்.

மூன்று காரியத்தைப் பராபரன் ஒருத்தருக்குங் கொடாமல் தமக்கே வைத்துக்கொண்டிருக்கிறார். ௧) இருதயத்தை ஆராய்தல். இருதயம் திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யாவன். கர்த்தராகிய நாம் இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறோம் என்று சொல்லுகிறார். எரேமி. ௰௭, ௯. ௰. ௨) தமது மகிமையையும் அவர் ஒருவருக்குங் கொடுக்கிறதில்லை. நாம் கர்த்தர். இது நமது நாமம். நாம் நமது மகிமையை வேறொருவனுக்கும் நம்முடைய துதியை விக்கிரகங்களுக்கும் கொடோம் என்று சொல்லுகிறார். ஏசா. ௪௨, ௮. ௩) சரிக்கட்டுதலையும் அவர் தம்மைத் தவிர மற்ற ஒருவருக்கும் கொடுக்கிறதில்லை. நீதியைச் சரிக்கட்டுதல் நம்முடையது, நாம் பதிலுக்குக் கொடுப்போமென்று கர்த்தர் சொல்லுகிறார். ரோமர் ௰௨, ௰௯. ஆகையால் பராபரனுடையது பராபரனுக்கு இருக்கட்டும் என்று இரு.

அப்பா, சரிக்குச் சரிக்கட்ட நீ இத்தனையாய்த் தீவிரிக்கிறதென்ன! பிறன் உனக்குக் குறை வர நடந்தானோ? நீ பராபரனுக்கும் எத்தனை விசையோ குறை வர நடந்திருக்கிறாய். அப்போதே உன்னிடத்தில் சரிக்குச்சரிக்கட்ட சித்தமாயிருந்தால், நீ வெகு நாளைக்கு முன்தானே நரக அக்கினியில் வேக வேண்டியதாயிருக்குமே. நீங்கள் எந்த அளவால் அளக்கிறீர்களோ அந்த அளவால் உங்களுக்குந் திரும்ப அளக்கப்படுமென்று கிறிஸ்து சொன்னதை அறியாயோ? லூக். ௬, ௩௮. நீ கொடுத்த பணத்தைத்தான் பராபரன் உனக்குக் கொடுத்துச் சரிக்கட்டுகிறார். நீ உன் பிறனிடத்திலே பழிவாங்கினால், அவ-



ரும் உன்னிடத்திலே பழிவாங்குவார். ஏவாள் மரத்தின் கனியாலே பாவம் செய்தபடியால், வயிற்றின் கனியினாலே தண்டிக்கப்படலாயிற்று. பிறன் உனக்குக் குறை வருவிக்கக் கூடியதெப்படி? உன் பிறன் அல்ல, உன் இருதயமே உனக்குக் குறை வரப்பண்ணுகிறது. உன் பிறன் உனக்குக் குறை வரப்பண்ணினான் என்று வைத்துக் கொள்ளுவோம். ஆனால் அதற்காக நீ அதிலும் அதிகமாக உனக்குக் குறை வருவித்துக் கொள்ளப் போகிறாயோ? பிறன் உனக்குக் கோபம் மூட்டினால், நீ அதிலும் அதிகமாய் உனக்குக் கோபம் உண்டாக்கிக்கொள்ளப்போகிறாயோ? உன் பிறன் உன் பொருளுக்குச் சேதம் வருவிக்கையில் அதின் நிமித்தம் உனக்கு வருகிற ஆங்காரத்தால் உன் இரத்தம் பொங்கி உன் உயிருக்குச் சேதம் வருவிக்கிறாய். உன் பிறன் உன் சரீரத்துக்குச் சேதம் உண்டுபண்ணினால், நீ அதற்குப் பழிவாங்கப்போகிறதினாலே உன் ஆத்துமாவைச் சேதப்படுத்துகிறாய். நீ பொல்லாப்புக்குப் பொல்லாப்பைச் சரிக்கட்டினால், அப்போதும் நீ அறுக்குஞ் சரி என்னில், சேற்றைச் சேற்றாலே கழுவப்போகிறவனுக்கும், தன் புண்ணை பின் ஒருவன் புண்ணினாலே குணமாக்கப்பார்க்கிறவனுக்கும் சரியாயிருக்கிறாய். பிறனுடைய சுகக்கேட்டால் நீ சுகமடையத் தேடுகிறது என்ன. இது முட்செடியில் திவிராட்சப்பழங்களைத் தேடுகிறாப்போல் அல்லவோ? உன் பிறன் உனக்குக் குறை வருவித்தான் என்று நீ அவனுக்குத் திரும்பக் குறை வருவிக்கப்போகிறாய். அந்தச் சரிக்கட்டுதலால் வரும் மிகுந்த கஸ்தியை அனுபவிக்கிறது ஆர். நீயோ, அவனோ? பழிவாங்குகிறவன் பழிவாங்கப்படுகிறவனாகிய இரண்டுபேரையும் அந்தப்பழித் தொடர்ந்தாலும், பழியை அனுபவிக்கிறவனை விட பழிவாங்குகிறவனை அது அதிகமாய்த் தொடரும். தேனீயானது கோபத்தினாலே ஒரு மனுஷனைக் கொட்டி அத்தோடே அதின் கொடுக்கையும் இழந்துபோகிறது. நீ உனக்குக் குறைவு வருவிக்கிறவனைச் சேதப்படுத்துகிறாய். அதினால் அடிக்கடி உன் சீவனையும் மோட்சத்தையும் இழந்துவிடுகிறாய். கோபமும் பழிவாங்குகிற சிந்தையும் இந்த இரண்டும் தன்னைத்தானே அழித்துக்கொள்ளுகிற பெருங் காற்று மழைக்கு ஒப்பாயிருக்கிறது.

பழிவாங்குகிறதை விட மன்னிக்கிறது உத்தமம். ஏனென்றால் மன்னிக்கிறது மேன்குணத்துக்கும், பழிவாங்குகிறது ஈனகுணத்துக்கும் அடையாளமாயிருக்கிறது. பராபரன் உனக்கு மன்னிக்கிறாரே. நீ உன் பிறனுக்கு மன்னிக்க வேண்டியதில்லையா? மன்னியுங்கள், அப்பொழுது உங்களுக்கு மன்னிக்கப்படும். நன்மை செய்வதே சத்துருவினிடத்திலே

பழிவாங்கும் உத்தம வழி. உன் சத்துருவுக்குப் பசியானால், அவனுக்கு அசனம் கொடு. அவனுக்குத் தாகமானால், அவன் தாகத்தைத் தீர். ரோமர் ௰௨, ௨௰. நன்மை செய்கிறதினால் விரோதமான இருதயத்தை அனலாக்கலாம். உன் சிநேகத்தின் அக்கினியால் அவன் இருதயம் தணலாய்ப்பற்றி எரியும். உனக்குக் குறை வருவித்தவனை நீ ஆதாயப்படுத்தக் கூடாதே போனால், பராபரனிடத்தில் அமர்ந்திருக்கும் மெத்தனவின் ஆவியினாலே அந்த அநியாயத்தைச் சகித்துக்கொண்டு சரிக்கட்டுதலை அவருக்குக் கையளித்து பதில் செய்யும் நேரம் வருமட்டும் பொறுமையோடே காத்திரு. பராபரனுடைய நடுத்தீர்வைத் தாமதப்பட்டால் பதஷ்டப்படாதே. உனக்குக் குறை வருவித்தவன் தன்னுடைய பாவத்தின் அளவை நிரப்புமட்டும் நீ பொறுத்திரு. பராபரன் உடனே ஆக்கினையிடாமல் எத்தனைக்குத் தாமதிக்கிறாரோ, அத்தனைக்கு ஆக்கினை அதிகரிக்கிறது என்று அறி. என் சரிக்கட்டுதலைப் பராபரன் என்னிடத்தில் சரிக்கட்ட இடம் இராத வண்ணமையாக நான் பிறர் இடத்தில் சரிக்கட்டுவேன். அதெப்படியெனில், நான் முழு மனதாலும் அவனுக்கு மன்னித்துவிடுவேன். என் பராபரனே, நான் இப்படிச் செய்ய, தேவரீர், எனக்கு உதவி செய்யும். ஆமென்.

௱௨௯. தியானம்.

## பராபரனுடைய உண்மையைப் பற்றியது.

*மனுஷன் மனுஷனே; அவன் சொன்னது சொன்னதே.*

இப்படி நீ சொல்லுகிறாய். ஆனால் அது எதார்த்தம் அல்ல. மனுஷர் பொய்யர். அவர்கள் பேச்சுபெருக்கமும், கிரியையோ பூச்சியமுமாய் இருக்கிறது. அவர்கள் பிரமாண்டமான மேகங்களுக்குச் சமானம். அவைகள் ஆகாயத்தில் பெரிய பர்வதம்போல் தொங்கி நின்று பூமியெல்லாம் வெள்ளக்காடாய் நிரப்பத்தக்கதாய் வெடித்து விழுவதுபோல தோன்றுகிறது. ஆனால் கண் விழித்துப்பார்க்குமுன் காற்று அதை கலைத்து ஒரு துளி மழையாகிலும் கீழே விழாமல் அடிக்கிறது. அப்படித் தானே மனுஷரும் இருக்கிறார்கள். அவர்கள் அநேகத்தைச் செய்கிறதாகச் சொல்லுகிறார்கள், நிறைவேற்றுகிறதோ வெகு சொற்பம்.

ஆகலால் நான் சொல்லுகிறதேதென்றால்: பராபரன் பராபரனே, அவர் சொன்னது சொன்னதே என்பதுதான்.



தாவீது இராசா சொல்லுகிறதைக் கேள்: சேனைகளின் பராபரனாகிய கர்த்தாவே, உம்மைப்போல வல்லமையுள்ளவர் ஆர். உம்முடைய உண்மை உம்மைச் சுற்றியிருக்கிறது என்கிறார். சங்கீ. ௮௯, ௮. வேட்டைக்காரன் மிருகங்கள் தப்பிப்போகாதபடி சுற்றி வலையைக்கட்டி வைக்கிறான். அதுபோல் பராபரனுடைய உண்மை அவரைச் சூழ்ந்துகொண்டேயிருக்கிறது. எத்தனை வாக்குத்தத்தமோ அத்தனை வலை. ஒவ்வொரு வாக்குத்தத்தமும் அவரை நெருக்கி: கர்த்தாவே தேவரீர், இதைச் சொன்னீரே, அதை நீர் கைக்கொள்ள வேண்டும் என்கிறது. பராபரன் எனக்குத் தப்பிக்கொள்ளக் கூடாது. அவர் எனக்குச் சொன்ன வார்த்தைப்பாட்டை நிறைவேற்ற வேண்டும். அவருடைய உண்மை அவரைப் பற்றிப்பிடித்திருக்கிறது. வலைக்குள் அகப்பட்ட மிருகமாகிலும் ஒரு வேளை வலையைப் பீறிக்கொண்டு ஓடிப்போம். ஆனால் பராபரன் தமது வாக்குத்தத்தங்களுக்குத் தப்பிப்போகக் கூடுவதெப்படி? அவர் நாம் உனக்கு அப்படி வாக்குத்தத்தம் பண்ணினதில்லை என்று சொல்ல வந்தால், கர்த்தாவே நீர் சொன்ன வாக்குத்தத்தங்கள் இப்படியிருக்கிறதே என்று அதுகளை அவருக்கு முன்பாகச் சொல்லிக்காட்டுகிறேன். நாம் சொன்னதை உன்னிடத்தில் கைக்கொள்ள மாட்டோம் என்றால், கர்த்தாவே தேவரீர் என்னிடத்தில் பொய்யர் ஆகக் கூடாதே என்கிறேன். நீ அதற்குப் பாத்திரமல்லவே என்று அவர் சொல்ல வந்தால், கர்த்தாவே அப்படியிருந்தாலும் உம்முடைய உண்மை வெட்கப்படத்தக்கதல்லவே என்கிறேன்.

ஆ! என் இருதயமே, மெய் நம்பிக்கையுள்ள ஒரு மனுஷனுடைய வெறும் பேச்சை நீ நம்புகிறாயே. பராபரனுடைய கையெழுத்தும் முத்திரையும் உனக்கிருக்க, நீ இன்னும் அவரை நம்பமாட்டேனென்கிறதென்ன? உன் அவநம்பிக்கையினால் நீ பராபரனைப் பொய்யராக்குகிறாய். ஒருவன் உன்னைப்பார்த்து: நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே, உன்னை நான் பராமரிப்பேனென்று சொல்லியிருக்க, நீ கவலைப்பட்டால், நீ அவனைப் பொய்யனாக்கினாப்போலாயிற்றே. ஏனெனில் அதை நம்பப்படாது, நம்ப சொல்லுவார்கள், அந்தப்படிச் செய்கிறது அபூர்வம் என்று நீ நினைக்கிறதில்லையா? பராபரன் பேரில் அவநம்பிக்கைப்படும்போது அப்படியே உன் இருதயம் நினைக்கிறது. நானோ பராபரனை நம்புவேன். அவர் தாம் சொன்னதைக் கைக்கொள்ளுகிறார். அவர் தாம் சொன்ன விசேஷத்தை மறுதலித்தால் தமது உண்மையை மறுதலிக்கிறார். அவர் தமது உண்மையை மறுதலித்தால் தம்மையே மறுதலிக்கிறார். அப்போது அவர் தேவனாயிருக்

கக் கூடாது. அதையே நான் கெட்டியாய்ப் பிடித்திருக்கிறேன். பராபரன் பராபரனாயிருக்கிறது அற்றுப்போகுங் காலத்தில் அல்லவோ, அவர் தமது வார்த்தையைக் கைக்கொள்ளுகிறதும் அற்றுப்போம். அது மெய்யானால் அவர் சொன்ன வாக்குத்தத்தங்கள் ஏன் நிறைவேற இல்லை என்கிறாய். பராபரனுடைய வேளை வருமட்டும் பொறுத்திரு. அவர் நாமத்துக்கு மகிமையும் என் ஈடேற்றத்துக்கு வழியுமுண்டாகும்போது, அவருடைய வேளை வருகிறது. இடுக்கண் பெரிதாயிருக்கும் போது, ஒத்தாசையும் கிட்டியிருக்கிறது. தண்ணீர் ஆத்துமாமட்டும் வருமுன், பராபரன் சிறுவைக் கடலைவிட்டு உன்னை எடுப்பதில்லை. இடுக்கண் தலைக்கு மேல் ஏறிப்போயிற்று என்றும் இதைவிட பெரிய இடுக்கண் இல்லையென்றும், மனுஷனுடைய ஒத்தாசை கிடைக்காதென்றும் உனக்குத்தோன்றும் நேரத்திலே பராபரன் தம்முடைய ஒத்தாசையோடே வெளிப்பட்டுத் தாம் அதிசயங்களைச் செய்கிற கர்த்தர் என்கிறதைக் காண்பிக்கிறார். ஒரு தாய் தன் பிள்ளைக்கு ஒரு மோசம் வருகிறதென்று கேள்விப்பட்டால், அந்த மோசம் பெரிதாகுமுன் துவக்கத்திலே மனுஷனை அனுப்பி அதைப்பார்த்து ஒத்தாசை பண்ணச் சொல்லுகிறாள். ஆனால் பிள்ளைக்கு பிராணமோசமாகிறதென்றிருந்தால், அப்போ தாமதியாமல் ஓடி பிள்ளைக்கு பக்குவம் வரும்படி பார்க்கிறாள். ஆகையால் என் இருதயமே, துன்பம் எத்தனை அதிகரிக்கிறதோ, அத்தனைக்கும் அதிகமாய் மனோதைரியத்தைக்கொண்டிரு. ஏனெனில் அப்போதே ஒத்தாசையும் கிட்டியிருக்கும். மகா பெரிய இடுக்கணிலே தான் மகாப் பராபரத்தோடே கூப்பிடுகிறதுண்டு. அப்போ தான் பெருமூச்சும் ஒன்றின் பிறகே ஒன்றாய் முட்டிக்கொண்டு புறப்பட்டு உயர ஏறி பரமண்டலத்திலிருக்கும் பராபரனைத் தாக்கின், அவர் வந்து ஒத்தாசை செய்யும்படியாய் அவர் இருதயத்தை இடி[illegible]து ஒருவன் மகாப் பரதாபமாய் அழுகிறதை நீ [illegible], உன் மனம் சகிக்காமல் புறப்பட்டுப்போய் அவன் நிர்ப்பந்தத்தைப் பார்த்து அவனுக்கு உதவிசெய்யாமலிருக்க மாட்டாயோ. பராபரன் உன்னைவிட இரக்கவாளி. அவர் தமது வார்த்தையையும் கைக்கொள்ளுகிறார். நீ அவருக்குக் காத்திரு.



௨௨௭. தியானம்.

## பூமியிலே இருக்கும் கிறிஸ்தவர்களுடைய திருவாகத்தைப் பற்றியது.

முள்ளுக்களுக்குள்ளே லீலிய புஷ்பம் போல். உன்னதப்பாட்டு. ௨. ௨.

பூமியிலே கிறிஸ்துமார்க்கத்தின் நிலைமை இப்படி இருக்கிறது. அது நற்கந்தமான புஷ்பமாயிருக்கிறது. ஆனால் அது புஷ்பங்களுக்குள் இராமல் முள்ளுக்களுக்குள் இருக்கிறது. அது பிசாசாலும் அதின் மக்களாலும் துரத்தப்பட்டு வதைக்கப்படுகிறது. இப்படி அதின் திருவாகம் இருக்கிறது. இயேசுக் கிறிஸ்துவை உலகம் உத்தரிக்க மாட்டாது. யூதர் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். உலகம் அவருடைய அவயவங்களை இன்னம் சிலுவையில் அறைகிறது. இயேசு என்கிற ஆசீர்வதிக்கப்பட்ட இஸ்திரியின் வித்து உன்னில் இருந்தால், சபிக்கப்பட்ட சர்ப்பத்தின் வித்து உனக்கு விரோதமாயிருந்து உன்னைக் கொல்லவாங்காமல் தன் விஷப்பல்லால் கொத்துகிறது. நீ கிறிஸ்துவண்டையில் நல்ல நாளைத் தேடுகிறாய்; சரிதான். ஆனால் உன் மாம்சத்துக்கு நல்லதாயிருக்கிற நாளை நல்ல நாளென்று சொன்னால், அதினால் நீ உன்னை மோசம் போக்கிறாய் ஒழிய மற்றப்படியல்ல. முட்செடியில் திவிதிராட்சப்பழங்களையும் முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் தேடுகிறது எப்படி மதிகேடாயிருக்கிறதோ, அப்படியே நீ செய்கிறதும் இருக்கிறது. கிறிஸ்துநாதர் மாம்சத்துக்கு நல்ல உல்லாசத்தையும் செல்வத்தையும் கொடுக்க வராமல் சிலுவையையும் வெறுப்பையும் உண்டுபண்ண வந்தார். கிறிஸ்துவின் பாரிசமானவர்கள் தங்கள் மாம்சத்தை ஆசை இச்சைகளோடும் கூட சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். கலாத். ௫, ௨௪. நீ கிறிஸ்துவின் சீஷன் ஆனால், சிலுவையிலும் அவரைப் பின்செல்[illegible]வண்டும். நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே என் ஊழியக்காரனுமிருப்பான் என்று சொல்லுகிறார். யோவா. ௰௨, ௨௬. இது அவர் தாழ்ந்த நிலைமைக்கும் உயர்ந்த நிலைமைக்கும் செல்லும். ஏனென்றால் எவன் அவரோடு ராசாங்கம்பண்ண வேண்டுமென்றிருக்கிறானோ அவன் அவரோடு பாடு அடைய வேண்டும்.

நீ தாழ்ந்த நிலைமையிலே இயேசுவைக் கண்டு பிடிக்கிறது எங்கே. ஐசுவரியத்திலேயா? அல்ல. தரித்திரத்திலே தான் அவரைக் காண்பாய். எல்லாம் அவருடையதாயிருந்தும் அவருக்கு ஒன்றுமில்லாமல் போயிற்று. ஏனென்றால்

அவர் தலைசாய்க்கிறதற்கு இடம் இல்லாமல் போயிற்றே. மத். ௮, ௨௰. மகிமையிலே அவரைக் கண்டு பிடிக்கலாமா? அல்ல, வெட்கத்திலேயும் நிந்தையிலேயும் அவரைக் கண்டு பிடிப்பாய். அவர் மனுஷருடைய நிந்தனையும் சனத்தால் அசங்கிக்கப்பட்டவருமாயிருந்தார். சங். ௨௨, ௬. சந்தோஷத்திலும் மகிழ்ச்சியிலும் அல்ல, இரத்தத்திலும் கண்ணீரிலும் அவரைக்காணலாம். ஊழியக்காரன் தன் எசமானிலும், சீஷன் தன் போதகனிலும் பெரியவனல்ல. எசமான் கால் நடையாய்ப்போகையில், ஊழியக்காரன் குதிரைமேல் போகிறது மகா வெட்கமல்லவோ? ஆண்டவர் முள்ளாலே சூட்டப்பட்டிருக்கையில், சீஷன் பூச்சரம் சூட்டிக்கொள்ள வேண்டுமென்கிறது பயித்தியம் அல்லவோ? இயேசு நாதரைப் பார்க்கிலும் நீ பெரியவன் அல்லவே. ஆகையால் இப்பூவுலகில் அவரைப் பார்க்கிலும் அதிக வாழ்வைத் தேடுகிறதென்ன. "உன் வீட்டுக்குப்போய் உன் பெண்சாதியோடே சந்தோஷமாயிருக்கக்கடவாய்" என்று உரியாவுக்குத் தாவீது ராசா சொன்னபோது, அவன் மறுத்தாரமாக "உடன்படிக்கைப் பெட்டியானதும் இஸ்ரவேலும் யூதாவும் கூடாரங்களில் தங்கி என் ஆண்டவனாகிய யோவாப்பும் என் ஆண்டவனின் சேவகரும் வெளியிலே பாளயம் இறங்கி இருக்கையில், நான் புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் என் பெண்சாதியோடு சந்தோஷமாயிருக்கிறதற்கும் என் வீட்டுக்குள் பிரவேசிப்பேனோ. நான் இப்படிச் செய்கிறதில்லை என்று உம்முடைய சீவனைக்கொண்டும் உம்முடைய ஆத்துமாவின் சீவனைக்கொண்டும் சொல்லுகிறேன்" என்றான். ௨ சாமுவேல் ௰௧, ௰௧. ஆனால் உலகம் உன்னைப்பார்த்து: கிறிஸ்துவினிடத்திலே வாங்காக் கிலேசம் உண்டு, நீ எங்களண்டையில் வந்து சந்தோஷநாளைக்கொண்டாடென்று உன்னை அழைத்தால், நீ அதற்கு: உலகமே! இயேசு மரணபரியந்தம் துக்கமாயிருந்தாரே. நான் சந்தோஷமாயிருக்கிறதா? என் இயேசு அழுதாரே. நான் நகைக்கிறதா? நான் அப்படிச் செய்யேன் என்று நீ அதற்கு மறுமொழி சொல்லு. கிறிஸ்தவர்கள் சிலுவையைச் சுமக்கிறவர்களாயிருக்க வேண்டும். ஆகையால் நீ கிறிஸ்தவனாயிருக்க வேண்டுமென்றால், சிலுவைக்கு உன்னை உடன்படுத்து. சபை உடலும், கிறிஸ்து தலையுமாயிருக்க, தலைக்கு உபாதி வரும்போது, உடல் நன்றாய் இருக்கிறது எப்படி. நீ கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அவயவமாயிருந்தால், கிறிஸ்துவின் பாடுகளில் நீயும் பங்கு அநுபவிக்க வேண்டும். நீ அப்படியிராவிட்டால், உயிரான அவயவமாயிராமல் செத்த அவயவமாயிருக்கிறாய். கிறிஸ்துவோடே கூட பாடுபட நான் தலை



சொல்லேன். நான் அவர் சாயலுக்கு ஒப்பாகிறது எனக்கு மகா மேன்மையாம். கனிகொடாத மரம் கல்லெறிபடாது. அதை அடிப்பாருமில்லை, பறிப்பாருமில்லை, அதைக் குலுக்குவாருமில்லை. கடைசியிலேயோ அதை வெட்டி அடுப்பிலே போடுவார்கள். நான் கிறிஸ்துவின் தோட்டத்திலே தெரிந்துகொள்ளப்பட்ட மரம் என்பதுக்கு என்னிலே தானே நிச்சயமான அடையாளம் எனக்குண்டு. பராபரன் சிலுவையின் பிரம்பாலே தவசின் கண்ணீரை கண்ணிலே இருந்து சொரியப்பண்ணுகிறார். காந்தப் பஸ்பம் நரம்பிலிருக்கும் இரத்தத்தின் அழுக்கை வாங்கிப்போடுகிறாப்போல் சிலுவை பாவ இச்சையை இருதயத்திலிருந்து வாங்கிப்போடுகிறது. பொன்னுக்கு நெருப்பும், கருங்கல்லுக்குக் கல்லுளியும் எப்படியோ, அப்படி சிலுவையின் உபத்திரவமும் எனக்கு இருக்கவேண்டும். நான் பராபரனை அறிய உபத்திரவம் எனக்கு வெளிச்சங் கொடுக்கிறது. இயோசேப்பு தன் சகோதரருக்கு நன்மை செய்தபோது, அவர்கள் அவனை அறிந்துக்கொள்ளவில்லை. அவர்களுக்கு வியாகுலம் வருத்துவித்தபோது, அவர்கள் அவனை அறிந்துக்கொண்டார்கள். உபத்திரவம் என் மனதை பராபரன் வசமாய் உயர்த்துகிறது. சலப்பிரளயத்தின் தண்ணீர் உயரஉயர, நோவாவின் பேழையும் உயர்ந்தது. சிலுவையின் கசப்பு நான் பாவத்தில் அமுந்திப்போகாமல் என்னைக் காக்கிறது. அது கசப்பாய் இருந்தாலும் சுகப்படுத்துகிறது. கசப்பான உப்புத்தண்ணீரில் பெரும்மீன் பிடிக்கிறது. நல்ல தண்ணீரில் சிறுமீன் அகப்படுகிறது. சிலுவை எவ்வளவு பெரிதோ, அவ்வளவு அதைச் சுமக்கிற நாம் பரிசுத்தமுள்ளவர்களாகிறோம். காற்று பதரையும் மணியையும் பிரிக்கிறாப்போல, சிலுவை நீதிமானையும் அநீதக்காரனையும் பிரிக்கிறது. பொல்லாதவர்கள் சிலுவையில் நிலைநிற்காமல் காற்றிலே பறந்துபோகிற பதரைப்போலிருக்கிறார்கள். விதைமணி தூற்றும் வேளையில் தன்னைப் பயிரிட்டவன் காலண்டையில் விழுகிறதுபோல், நீதிமான்கள் சிலுவையின் உபத்திரவத்தில் பராபரன் பாதத்தண்டையில் விழுந்து அவருடைய சித்தத்துக்குத் தங்களைக் கீழ்ப்படுத்துகிறார்கள். கிறிஸ்து இப்படிப்பட்ட விதைமணியாயிருந்தார். பிதாவே! என் சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியாகக்கடவதென்றார். நானும் அப்படிப்பட்ட விதைமணியாயிருப்பேன். சிலுவையிலே ஒவ்வொருவன் குணமும் வெளியாகிறது. சிலுவைக்கடலைக் கடந்து போகிறவர்கள் பராபரனுடைய இஸ்ரவேலராயிருக்கிறார்கள். அதில் அமிழ்கிறவர்களே இப்பிரபஞ்ச எகிப்தியராயிருக்கிறார்கள். பராபரனு

டைய கண்டிப்பு நமக்கு வேண்டியதாயிருக்கிறது. இம்மையிலே அவர் நம்மை தகப்பனைவாய்க் கண்டிக்காவிட்டால், மறுமையில் நியாயாதிபதிபோல் கண்டிப்பார். நியாயாதிபதிக்கடுத்த அவருடைய கோபத்துக்குத் தப்ப அவருடைய பிதாவுக்கடுத்த பிரம்பை முத்தி செய்கிறேன். சிலுவையின் உபத்திரவம் இல்லாமல் பராபரன் என்னை வைக்க வேண்டுமென்று நான் அவரைக் கெஞ்சாமல் நான் என் சிலுவையைச் சுமக்கிறதுக்கான பொறுமையை எனக்குத் தர வேண்டுமென்று அவரைக் கெஞ்சி மன்றாடுகிறேன்.

௱௨௮. தியானம்.

## பெரிய மாளிகைகளைப் பற்றியது.

வீடு பெரியது, குடியிருப்பவன் சிறியவன்.

மனிதனே! நீ ஒரு துண்டு மாமிசம். ஆகிலும் நீ குடியிருக்கப் பெரிய மாளிகையைக் கட்டுகிறாய். ஆ மாயையே! கிறிஸ்து பிறந்த மாட்டுக்கொட்டிலும் அவர் கிடந்த முன்னணையும் உன் மாளிகையை வெட்கப்படுத்துகிறது. நீ இந்த பூமியிலே ஒரு பரதேசியல்லவோ? பரதேசநாட்டில் தனக்கு வீட்டைக் கட்டுகிறவன் உண்டா? மகாத்துமாக்களாகிய ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்கள் நூறுவருஷங்களுக்கு அதிகமாகப் பிழைத்து கூடாரங்களில் வாசம்பண்ணினார்களே. நீயோ அறுபது எழுபது வயதுமட்டும் இருப்பது அரிதாயிருக்க, பெரிய மாளிகையைக் கட்டுகிறாய். இன்னம் புதுப்புது மாதிரியாய்க் கட்ட வேண்டுமென்று தினந்தோறும் நினைக்கிறாய். ஆ அத்தனை சோர்த்தியான வீட்டை நீ யாருக்குக் கட்டுகிறாய்? நெருப்புக்கோ, வெள்ளத்துக்கோ, பாழாக்கும் சத்துருவுக்கோ? தெரியாதே. எருசலேம் விலையேறப்பெற்றக் கட்டடமாய் இருந்தும் கல்லின்மேலே கல்லிராதபடிக்குப் பரதாபமாய் நிர்மூலமாக்கப்பட்டதே. சில வருஷங்களுக்குமுன் வெகு பிரயாசப்பட்டு வெகுவாய் செலவழித்துக் கட்டின எத்தனையோ அரண்மனைகள் இப்போது நீறும் பொடியாய் கிடக்கிறது. பூமியும் அதிலுள்ள கிரியைகளும் வெந்துபோகும். அதனை நீ நினைக்கவில்லையோ? ௨ பேது. ௩, ௰. அப்போது உன் மாளிகை எங்கே போம்? உன் சிந்தையும் எங்கும் கைவேலையல்லாத வீட்டின்மேலிருக்க வேண்டும். நித்தியத்திலே உன் வீட்டைக்கட்ட வேண்டும். அதன் அஸ்திவாரம் அசையாது. பிள்ளைகள் தெருவில் விளையாடும்



போது, மண்ணாலே வீடுகட்டி இராசாக்களுடைய அரண்மனையைவிட பெரிதாய் எண்ணுவார்கள். நீயும் சிறுபிள்ளை புத்தியுடையவனாய் பூமிக்கடுத்த வீட்டிலே சந்தோஷப்பட்டு பரமவீட்டை மறந்துபோகிறாய். ஆத்துமம் சரீரத்திலே வாசமாயிருக்கிறது. அதிலே தங்கியிருக்கிற ஆத்துமத்தைவிட அதற்கு இருக்கிற வீடு பெரிதல்ல. ஆகையால் உன் சின்ன உடலுக்கு உன் பெரியவீடு. அது செத்தால், அதற்கு நாலு முழப்புடவைக்கு மேல் அதிகம் கவை இல்லையே. நீ பூமியின் மேல் கொஞ்சக்காலம் இருந்து அதின்கீழ் அதிககாலம் குடியிருக்கவும் அங்கே அதிக இடுக்கமான குழியில் தங்கவும் வேண்டியதாயிருக்க, நீ இப்போது உனக்காக உயர்ந்த விஸ்தாரமான மாளிகையைக் கட்டுகிறது ஏது. ஆ பயித்தியமே! ஆ மாயையே! நான் என் ஆத்துமத்துக்காக விசேஷமாய்க் கவலைப்படுவேன். அதை நான் பராபரனுக்குக் குடியிருப்பாய்க் கட்டுவேன். புழுப்பையாகிய என் உடலுக்கு ஒரு சிறு மண்குடிசை போதுமே. பூமிக்கடுத்த கூடாரமாகிய என்னுடைய வீடு இடிந்துபோனால், பராபரனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்தியவீடு எனக்குப் பரமண்டலங்களில் இருக்கிறதென்று அறிந்திருக்கிறேன். இந்த என் பரம குடியிருப்பைப் பூண்டுகொள்ள வாஞ்சையாய் இருக்கிறேன். ௨ கொரி. ௫, ௧. ௨.

௱௨௯. தியானம்.

## பராபரனுடைய தயவைப் பற்றியது.

எசமான் ஊழியக்காரன், ஊழியக்காரன் எசமான்.

நீ பராபரனுக்கு ஊழியம் செய்கிறாயோ, பராபரன் உனக்கு ஊழியம் செய்கிறாரோ என்று எனக்குச் சொல்லு. நீ கோவிலுக்குப் போகும்போதும், நற்கருணைக்குச் சேரும்போதும், நான் என் பராபரனுடைய ஊழியத்தைச் செய்யப் போகிறேன் என்கிறாய். அப்படியல்ல, நீ அதைத் திருப்பி, பராபரன் தம்முடைய ஊழியத்தை என்னிடத்தில் செய்கிறாரென்று சொல்லு. நீ கிணற்றிலே தண்ணீர் மொள்ளுகிற போது, குடம் கிணற்றிற்கு ஊழியஞ் செய்கிறதா, கிணறு குடத்திற்கு ஊழியஞ் செய்கிறதா? பிள்ளை தாய்மடியிலிருந்து முலை குடிக்கிறபோது, பிள்ளை தாய்க்கு ஊழியம் செய்கிறதா, தாய் பிள்ளைக்கு ஊழியம் செய்கிறாளா. பலன் பெறுகிறவன்

ஊழியம் செய்யாமல், பலன் கொடுக்கிறவனே ஊழியம் செய்கிறான்.

என் இருதயமே, பராபரன் உனக்கு ஊழியம் செய்கிறார். ஆண்டவர் அடிமைக்கு ஊழியம் செய்கிறார். நீ மாத்திரம் அவரையும் அவருடைய ஊழியத்தையும் புறக்கணியாதிருந்தால், அவர் உனக்கு உற்சாகமாய் ஊழியம் செய்வார். அவர் நன்மை செய்ய மனதுள்ள பராபரன். சூரியன் ஒளிவு நிறைந்து, பிரகாசம் கொடுக்கிறது அதின் சுபாவமானபடியால், அது தன் பிரகாசத்தை எங்கும் வீசுகிறதே அதற்கு ஒரு பெரிய மகிழ்ச்சி. அதுபோல பராபரன் சகல நன்மை சுரூபியாயிருக்கிறபடியால், நன்மை செய்கிறது அவருக்குப் பெரிய சந்தோஷமும் மகிழ்ச்சியுமாயிருக்கிறது. அவர் தமது வரப்பிரசாதங்களை வாரிக்கொண்டு நம்முடைய பிறகாலே ஓடிவருகிறார். தமது நன்மையைக் கை நீட்டி ஏற்றுக்கொள்ளுகிற ஒரு ஆத்துமத்தை அவர் கண்டால், அதற்காக மிகவும் சந்தோஷப்படுகிறார். அவர் தமக்குப் பிரயோசனமாக நன்மை செய்யாமல், நமக்குப் பிரயோசனமாக அதைச் செய்கிறார். மனுஷரும் அடிக்கடி நன்மை செய்கிறதுண்டு. ஆனால் அப்படி நன்மை செய்கிறதிலும் அவர்கள் சுய பொழிவை நாடுகிறார்களே. ஒரு வராகன் வதில் வரும் என்று கண்டால், ஒரு பணம் செலவழிக்கிறார்கள். தமது சுபாவ மகிமையிலே அளவில்லாத பாக்கியசாலியாகிய பராபரனுக்கு நம்முடைய உபகாரந் தேவை இல்லை. அவர் தமது அளவில்லாத நன்மை சுரந்துகொண்டிருக்கும் பெருக்குக்குப் போக்குவிடவும், நம்மைச் சந்தோஷிப்பிக்கவும் பார்க்கிறார். நாம் அவருடைய உபகாரங்களை அநுபவிக்கையில், அது நமக்குப் பிரயோசனமாயிருக்கிறது. அவருடைய விசாரிப்பு நமக்குப் போசனத்தையும் பானத்தையும் கொடுக்கிறது. அவர் அடைக்கலம் நம்மைக் காக்கிறது. அவர் ஆலோசனை நம்மை நடத்துகிறது. அவருடைய ஆறுதல் நம்மை முசிப்பாற்றுகிறது. அவர் வல்லபம் நமக்குப் பெலன் கொடுக்கிறது. அவர் கிருபை நம்மை ரம்மியப் படுத்துகிறது. நாம் அநுபவித்துத் தீர்ந்த அவருடைய உபகாரங்கள் பிற்காலத்திலும் உதவிக்கொண்டே இருக்கிறது. உபத்திரவம் உன்னைவிட்டு நீங்கின உடனே, இனி அவருடைய ஆறுதல் வேண்டியதில்லை என்று நினைக்கிறாய். பஞ்சகாலம் எல்லாம் தீர்ந்த உடனே, பராபரன் இனிமேல் என்னை விசாரிக்க வேண்டியதில்லை என்று உனக்குத் தோற்றலாம். நல்ல ஆத்துமாவே, அப்படி நினையாதே. உனக்கு மறுபடியும் உபத்திரவம் வந்தால், நீ முன் அநுபவித்த உபகாரமே உன்னில் நல்ல நம்பிக்கையை உண்டு



பண்ணி, பொறுமையைப் பெலப்படுத்தி, தைரியத்தையும் திடத்தையும் கொடுக்கும். முன் இருந்த பராபரன் இன்னம் இருக்கிறாரே. முன்நாளில் அநேகம் உதவிசெய்தவர் இப்போதும் உதவிசெய்வார். அவர் என்றும் தயாபரராயிருக்கிறார், அவர் என்றும் அழியாத வல்லமையுள்ளவர் என்று நீ நினைக்க வேண்டும். முற்காலங்களில் உமது சனத்தின் மேல் கிருபையாயிருந்த பராபரனே இப்போதும் கிருபையாயிரும். சங்கீ. ௮௫, ௧. ஆ பராபரனே, தேவரீர் என்றென்றைக்கும் இருந்ததுபோலவே இந்நாள்வரையும் நித்திய ஐசுவரியவானாயிருக்கிறீரே. என் நம்பிக்கை முழுவதும் உமது பேரில் இருக்கிறது.

பராபரன் இந்த ஏழைப்பூச்சிக்கு நன்மைசெய்ய இத்தனை ஆசையுள்ளவராயிருக்கையால், இந்த தேவதயவை நல்ல மனதோடு ஏற்றுக்கொள்ளுவேன். நான் அவருடைய உபகாரங்களை என் இருதயத்தில் வைத்து பரிசுத்த தியானத்தால் அதில் பதித்து கெட்டிப்படுத்துவேன். அப்போது எனக்கு அவருடைய ஆறுதல் ஒருக்காலும் தாழ்ச்சிப்படாதென்று அறிவேன்.

## ௱௯௰. தியானம்.

## உயர் குல மேன்மையைப் பற்றியது.

இரவல் உடுப்பு.

அத்தால் உன்னை அலங்கரித்துக் கொள்ளுகிறாய். நீ மதிகெட்டவன் அல்லவோ. உயர்ந்த குலத்தில் பிள்ளையாய்ப் பிறப்பதை விட தானே மேன்குணமாயிருக்கிறது நல்லது. வேறொருவன் கையிலே திரவியத்தைப் பிச்சை கேட்டு வாங்குகிறதிலும், தானே சொந்தமாய் வைத்திருக்கிறது அதிக நலம். உயர்ந்த சாதியின் குணமும் நடத்தையும் இல்லாமல் உயர்ந்த சாதியின் இரத்தம் என்னத்துக்கு. ஆபிரகாம் எங்கள் தகப்பன் என்று யூதர் வீம்பு சொன்ன போது, கிறிஸ்து அவர்களுக்கு "நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தீர்களானால், ஆபிரகாமுடைய கிரியைகளைச் செய்வீர்களாம்" என்றார். யோவா. ௮, ௩௯. அவனவன் செய்கிரியை அவனவன் இன்னான் என்கிறதற்குச் சாட்சியாயிருக்கும். உயர்குலம் என்கிறபேர் அவனவன் பிறப்பால் வராமல் அவனவன் நடத்தையினால் வருகிறது. தாவீது ஆடுமேய்க்கிற பிள்ளையாயிருந்தான். ஆனால் அவன் செய்த பராக்கிரமமான கிரி

னாகள் அவனை உயர்குலமாக்கிறது. சுகந்தமான ரோசா
புஷ்பமும் முள்ளும் ஒரே வேரிலிருந்து முளைக்கிறது. ஒரு
தாய் வயிற்றிலே பிறக்கிற பிள்ளைகளில் சிலர் கூலிக்காரராயும்
சிலர் துரைகளாயும் போகிறார்கள். காயீனும் ஆபேலும்
ஒரே கர்ப்பத்தினின்று பிறந்தார்கள். ஏசாவும் யாக்கோபும்
அப்படித்தான். ஆகிலும் அவர்கள் குணத்திலே ஒருவரைப்
போல் ஒருவர் இருந்ததில்லையே. வெகுவிசை பாழ்நிலத்
திலே வெள்ளியும் பொன்னும் அகப்படுகிறதுமுண்டு. நல்ல
நிலத்திலோ முள்ளும் குருக்கும் மிஞ்சிப்போகிறதுமுண்டு.
நல்ல இரத்தத்திலே துர்க்குணபிள்ளைகள் பிறக்கிறதும்
உண்டு. தாழ்ந்த குலத்திலே நல்ல சற்குணமான பிள்ளை
பிறக்கிறதும் உண்டே. நற்குண பாலன் உயர்குலத்தான்.
நல்ல வம்மிசத்தில் பிறந்தவன் என்கிற வெள்ளை வாசகத்தால்
நீ உன்னைப் பெருமை பாராட்டாதே. பிறப்பிலே நல்ல
குலம் உண்டாயிருக்கவில்லை. உன் பிதா மாதாவால் உனக்
குச் சுதந்தரமாகப் பலித்த குலம் பாவ குலமும் சாவுக்குரிய
குலமுமாயிருக்கிறது. நீ உன் மூதாக்களின் குழியைத் திறந்து
பார். அங்கே உன் சாதிகுல பெருமை நன்றாய்க் கண்ணுக்
குத் தெரியும். அழிவைப் பார்த்து நீ என் தகப்பன், புழுக்
களைப்பார்த்து நீங்கள் என் தாயும் சகோதரியும் என்கிறேன்
என்று யோபு என்கிறவர் சொல்லுகிறார். யோபு ௧௭, ௰௪.
இதுவே உன் உயர்ந்த வமிசம். நீ தூளாயிருக்கிறாய். உன்
னிடத்திலும் கூலிக்காரனிடத்திலும் புறப்படுகிற நாற்றத்
துக்கு வித்தியாசமில்லை. புழுவே, உன் உயர் குலத்தைக்
கொண்டாடுகிறாயோ? உன் உயர் குலம் எல்லா மனிதருக்
கும் பொதுவாயிருக்கிற ஜென்மகேட்டுக்கும் பாவக்கேட்டுக்
கும் உன்னை நீங்கலாக்கக் கூடுமானால், அப்போது அதை
உயர்ந்ததாக எண்ண வேண்டும். ஆனால் அதனாலே அது
கூடாதே. நீயும் கூலிக்காரனைப்போலே பாவம் செய்கிறாய்.
அடிக்கடி அவனை விடவும் அதிக பாவத்தைச் செய்கிறாய்.
இடுக்கணும் மரணமும் உன் வீட்டில் வராமல் போகவில்லை
யே. வல்லவர்கள் அநேகர் இல்லை. நற்குலத்தார் அநேகர்
இல்லை. பராபரன் உலகத்தில் இழிகுலமானதுகளையும் அற்ப
மாய் எண்ணப்பட்டதுகளையும் இல்லாததுகளையும் தெரிந்து
கொண்டாரென்று பவுல் அப்போஸ்தலன் சொன்னதை
நான் நினைவு கூரும்போது உன்மேல் எனக்கு மெத்த மனத்
துக்கம் உண்டாகிறது. ௧ கொரிந். ௧, ௨௬—௨௮.

தன் துர்க்குணத்தின் ஆசை இச்சைகளுக்கு அடிமை
யாய் இராதவன் உயர்குலத்தான். மேகம் சூரியனின் ஒளியை
மறைக்கிறதுபோலே, துர்நடத்தை வம்மிசத்தின் மேன்மை



யை மறைத்துப்போடும். அண்டங் காக்கையை வெண்ணிற
அன்னம் என்று ஒருவனும் எண்ணான். உயர்ந்த சற்குண
நடத்தையை உன்னில் நான் காணாத மட்டும் அல்லது தோன்
றிப்படாத மட்டும், நீ உயர்குலத்தானென்று நான் நம்பேன்.
அடிமை உயர்குலமாகிறது எப்படி கூடாத காரியமோ, அப்
படி பாவத்துக்கு ஊழியம் செய்கிற ஆத்துமமும் உயர்குல
மாகிறது கூடாது. உயர்குல சிந்தைக்கு அடையாளம் என்ன
வென்றால், a. அது மன உருக்கம் உள்ளதாயிருக்கிறது. பரா
பரனை விட உயர்குலம் ஆர். ஆனால் பராபரனை விட இரக்க
வாளி ஆர். b. அது நல்மனதுடன் பொறுக்கிறது. தேன் ஈக்
களுக்கு இராசா கொடுக்கில்லாதிருக்கிறது. c. அது ஈகைக்
குணமுள்ளதாய்த் தன்னை ஆருக்கும் பங்கிட்டுக் கொடுக்
கிறது. மகா உயர்ந்த வஸ்துவாகிய சூரியன் தன் பிரகாசத்தை
எல்லாருக்கும் கொடுக்கிறதே. எல்லாலோக வகைகளிலும்
உயர்ந்ததான பொன்னை அதிகமாய் நீட்டக் கூடும். d. உயர்
குல சிந்தையுள்ளவன் இன்பத்திலே உயர்வதும் இல்லை, துன்
பத்திலே தாழ்வதும் இல்லை. அவன் எவ்வேளையிலும் மனந்
தளராமல் இருக்கிறான். e. அவன் பூமிக்கடுத்ததுகளை அற்ப
மாய் எண்ணுகிறான். பரமண்டலத்தை விட அவனுக்கு ரம்
மியமானது ஒன்றும் இல்லை. f. அவன் சற்குணத்தையும்
ஒழுக்கத்தையும் சிநேகிக்கிறான். நீ உயர்குலமாயிருக்க வேண்
டுமென்றால் உயர்குணத்தை நாடு. உயர்குலம் குடும்பத்துக்
குரியது. உயர்குணம் உனக்குரியது. இந்த உயர்குணம் உனக்
குக் கொடுக்கிறதும் வாங்குகிறதும் நீயே அன்றி வேறொரு
வரல்ல. மகா உயர்ந்தகுலம் பராபரனிடத்தில் பிறக்கிறது
தானே. இந்த உயர்குலம் கிறிஸ்தவர்கள் எல்லாருக்கும்
பொதுவாயிருக்கிறது. நீ பராபரனுடைய பிள்ளை. நானும்
அப்படித்தானே. நான் உன்னிலும் என்னை அதிக மீசுரப்
படுத்தேன். நீயும் என்னிலும் உன்னை அதிகமாய் மீசுரப்
படுத்தாதே. நாம் இருவரும் சரியான உயர்குலமாய் இருக்
கிறோம்.

௱௬௧. தியானம்.

## போதகத்தொழில் அடைவதைப் பற்றியது.

*நீ தூங்கும்போது பராபரன் விழித்திருக்கிறார்.*

பராபரன் தம்முடையவர்கள் தூங்கும்போது, அவர்களுக்கு
வேண்டியவைகளை அளிக்கிறாரே. ஆதலால் என்னால் ஆவ
தென்ன. என்றே படித்தவர்கள் எல்லாரும் குருப்பட்

டம் பெறுவதில் எனக்கு முந்திக்கொள்ளுகிறார்கள். நானோ
பிந்திப்போகிறேன். என்னை நினைப்பார் இல்லையே. நானும்
கிரமப்படி பராபரனால் அந்த உத்தியோகத்துக்கு அழைக்
கப்பட ஆசைப்படுகிறேன் என்கிறாயே. சிநேகிதா, பரா
பரன் உன்னை அழைக்கும் மட்டும் பொறுத்திரு. அப்போது
உனக்கு நன்றாய் வாய்க்கும். சாமுவேலை அழைத்தது ஆர்?
பராபரன். எப்போது அழைத்தார்? அவன் இளைப்பாறி நித்
திரை பண்ணுகிறபோது தான். சாமுவேல் கர்த்தருடைய
தெய்வாலயத்திலே படுத்துக்கொண்டிருந்தபோது, கர்த்தர்
சாமுவேலைக் கூப்பிட்டார். அதற்கு அவன்: இதோ, இங்கே
இருக்கிறேன் என்று சொன்னான். ௧ சாமு. ௩, ௪.

போதகத்தொழிலினாலே இன்பத்தைத் தேடுகிறாயா?
எசேக்கியேல் தீர்க்கதரிசிக்குக் கர்த்தர் சொன்ன வார்த்தை
களை நீ சுத்தமாய் வாசிக்காததுபோல் காணுகிறது. அவர்:
மனுப்புத்திரனே, உன்னை இஸ்ரவேல் வீட்டாருக்குக் காவற்
காரனாக வைத்தோம்; நீ நம்முடைய வாயினாலே வார்த்தை
யைக் கேட்டு, நம்முடைய நாமத்தினாலே அவர்களை எச்சரிப்
பாயாக. சாவவே சாவாய் என்று நாம் ஆகாதவனுக்குச்
சொல்லுகையில், நீ அவனை எச்சரிக்காமலும், நீ ஆகாதவனைத்
தன் ஆகாத வழியில் இராதபடிக்கு எச்சரிக்கத் தக்கதாகவும்,
அவனை உயிரோடே காக்கத் தக்கதாகவும் அதை அவனுக்குச்
சொல்லாமலும் இருந்தால், அந்த ஆகாதவன் தன் அக்கிர
மத்திலே சாவான்; ஆனால் அவன் இரத்தப்பழியை உன்
கையிலே கேட்போம் என்றார். எசேக். ௩, ௰௭. ௰௮.
ஆ இதைச் சிந்தித்துப்பார். இயேசு நாதர் தம்முடைய பரி
சுத்த இரத்தத்தை ஒரு பாத்திரத்தில் நிரப்பி, உன் கையில்
கொடுத்து, பத்திரமாய் வை என்றால், அதில் ஒரு துளியும்
சிந்திப்போகாதபடிக்கு நீ வெகு எச்சரிக்கையோடே பத்
திரம் பண்ணுவாயே. இப்போதும் ஒவ்வொரு ஆத்துமாவும்
அப்படிப்பட்ட ஒரு பாத்திரம் நிறைந்த இரத்தத்தைவிட
அதிகமாமே. ஏனெனில் இயேசு நாதர் ஒவ்வொரு ஆத்துமா
வுக்கும் தமது இரத்தத்தை எல்லாம் சிந்திப்போட்டாரே.
அப்பா, அந்த ஆத்துமங்களில் ஒரே ஒரு ஆத்துமம் மாத்
திரம் கெட்டுப்போனால், நீ எப்படி கிருவாகம் பண்ணப்
போகிறாய். அந்த ஆத்துமத்துக்காக உன் ஆத்துமா உத்தர
வாதம் பண்ண வேண்டுமே. தங்கள் உத்தியோகத்தை நன்
றாய்ச் சிந்தித்து யோசேப்புடைய நொறுங்குதலுக்கு உண்
மையாய்க் கவலைப்படுகிற தேவ ஊழியக்காரருடைய இரு
தயத்திலே ஒருவிசையாகிலும் நல்ல சந்தோஷம் இருக்கு
மென்று நான் நம்பேன். ஆம், அப்படிப்பட்டவன் சந்தோ



ஷத்தோடே சாகக்கூடும் என்கிறதையும் நான் நம்பவில்லை.
சகல பாக்கியத்துக்கும் ஊற்றாகிய இயேசு என் இருதயத்
தில் இருக்கிறபடியினால், நான் பராபரனுடைய கிருபையி
னால் பாக்கியமாக மரிப்பேன். ஆனால் என்னாலே யாதொரு
ஆத்துமம் அலட்சியப்பட்டதென்கிற நினைவு என் கடைசி
நாழிகையில் எனக்குள்ளே தோன்றினால், அப்போது நான்
சந்தோஷத்தோடு சாகக் கூடுமா? அதினாலே தான் அடிக்
கடி நான் என் மனதைத் தேற்றிக்கொள்ளக் கூடாதபடியாய்
என்னிலே துக்கப்படுகிறேன். மெய்தான், நான் என்னில்
ஒரு குற்றத்தையும் அறியேன். நான் இரட்சிப்புண்டாகப்
போதிவிக்கவும் இரட்சிப்பின் உபதேசத்தை எல்லாத்திலும்
அலங்கரிக்கவும் பராபரன் எனக்கு உதவி செய்கிறதற்காக
அவரைத் தோத்திரம் பண்ணுகிறேன். தீத்து ௨, ௰. ஆகி
லும் இதினால் நான் நீதிமானாகிறவன் அல்ல. ௧ கொரிந். ௪, ௪.
பராபரன் தமக்கு ஏற்காத எத்தனை காரியங்களை என்னிடத்
தில் காண்கிறாரோ? அது ஆருக்குத் தெரியும். ஆதலால்
நீ இதுகளை எல்லாம் நன்றாய் நினைத்து, இந்த உத்தியோகத்
துக்குத் தீவிரப்பட்டு ஓடாதபடிக்குப்பார். பராபரன் உன்னை
அழைக்கும் மட்டும் பொறுத்திரு.

பராபரன் உன்னை அதற்கு அழைத்தால், அவர்
தாமே அதை வாய்க்கவும் பண்ணுவார். மனுஷராலே அதற்கு
அழைக்கப்படுகிறவன் மனுஷர் பேச்சாய்ப் பேசப்போகி
றான். மனுஷர் பேச்சு மனுஷர் பெலனும். பராபரனால்
நீ அந்த ஊழியத்துக்கு அழைக்கப்பட்டாய் என்கிற ஆறுதல்
உனக்கு இல்லாவிட்டால், பாவிகளைக் கண்டிக்கிறதற்கு உன்
வாயைத் திறக்க தயிரியம் எங்கே இருந்து உனக்கு வரும்.
பராபரன் என்னை அனுப்பாதிருந்தால், லோகத்தின் பாவங்
களைக் கண்டிக்கிற ஒரு பிரசங்கம் பண்ணுகிறதை விட, மரித்த
வர்கள் எல்லாருக்கும் கீழாக ஆயிரம் பாகம் தாழ்விலே
நுழைந்துகொள்ளுகிறது எனக்குத் தாவிலே. நீ இந்த உத்தி
யோகத்துக்கு அழைக்கப்பட வேண்டிய உத்தம விதமாய்
அழைக்கப்பட்டாய் என்கிற நிச்சயம் உன் மனச்சாட்சியில்
இல்லாவிட்டால், சிலுவையில் நீ திடமாயிருக்கக் கூடுவது
எப்படி? மனுஷர் உதவி உன்னை ஆதரிக்கக் கூடாது. மனு
ஷர் சாகிறவர்கள். பராபரன் என்னை அனுப்பினால், அவர்
தாமே என்னை ஆதரிப்பார். என்னைத் துன்பப்படுத்துகிற
வர்கள் என்னிடத்திலே முட்டிக்கொண்டு தங்கள் தலையை
உடைத்துக்கொள்ளும் படியாய், அவர் என்னைச் சூழ வெண்
கல அலங்கம் எடுத்திருக்கிறார். நான் அதை என் உத்தி
யோகத்திலே அடிக்கடி வெகுவாய்க் கண்டறிந்தேன் என்ப

தூங்காத பராபரனுக்கு ஸ்தோத்திரம். எனக்குச் சர்ப்பனை பண்ணினவர்கள் வெட்கத்துக்கு உட்பட்டார்கள். கர்த்தாவுடைய சித்தம் எப்படியும் நிறைவேறலாயிற்று. பராபரனை மாத்திரம் நம்பி இரு. உன்னை இந்த உத்தியோகத்துக்கு அழைக்கிற சரியான நேரம் இன்னதென்று அவருக்கு நன்றாய்த் தெரியும். மனுஷருடைய யோசனை அழிந்துபோம். தேவ யோசனை நிலைநிற்கும். மனுஷர் எப்படி வேண்டுமோ அப்படி ஓடிஓடி விரோதம் செய்யட்டும். பராபரனால் உனக்கு அந்த உத்தியோகம் வாய்த்தால், ஒரு மனுஷனாலும் அதைத் தவிர்க்கக் கூடாது. பராபரனை மாத்திரம் நம்பி இரு.

## ௱௩௨. தியானம்.

# தனுங் கோபத்தைப் பற்றியது.

உன்னோடு தானே கோபித்துக்கொள்.

நீ மற்றவர்களோடு கோபித்துக் கொள்ளுகிறாயே. அதினால் பலன் என்ன? இப்படி பிறனையும் உன்னையுங் கூடக்கொன்றுபோட்டு இரட்டிப்பான கொலைபாதகனாகிறாய். அவன் உயிரோடிருப்பதற்காகப் பொறுமை அடைந்து அவனுக்கு எல்லாக்கேடும் மரணமும் கூட வந்தால் தாவிளை என்று அவனை உன் இருதயத்திலே கொல்லுகிறாய். உன் கண்ணினாலே அவனை வெறிக்கப்பார்த்து உன் முகத்தை அவனுக்கு வேறாய்க் காட்டுகிறாய். அவன் சீவனைவிட அவனுக்கு அருமையாயிருக்கிற நல்ல பெயரை உன் நாவினால் பின்னப்படுத்துகிறாய். பலபல கசப்பான வார்த்தைகளினால் அவனைக் கஸ்திப்படுத்தி அவன் சாக விரும்புகிறாய்.

இப்படிச் செய்வதினால் உன்னைத்தானே ஆத்தும பிரகாரமாய்க் கொல்லுகிறாய். ஏனென்றால் உன் கோபம் பராபரனை விட்டு உன்னைப் பிரிக்கிறது. சரீரத்துக்கு ஆத்துமம் எப்படியோ, அப்படியே ஆத்துமத்துக்குப் பராபரன் உயிராக இருக்கிறார். பராபரனை அல்லாமல் இருக்கிற ஆத்துமம் செத்ததாயிருக்கிறது. கோபம் எங்கே ஆண்மை கொண்டு எழும்பி நிற்கிறதோ, அங்கே நீதியின் சூரியனாகிய கிறிஸ்து அஸ்தமித்துப் போகிறார். கிறிஸ்து ஆத்துமாவுக்குச் சீவன். அவரை அல்லாமல் இருந்தால், நீ ஆத்துமபிரகாரமாய்ச் செத்தவனாமே.

நீ உன் சரீரத்தையும் கோபத்தினால் கொல்லுகிறாய். பார், கோபவேளையிலே உன் கையும் காலும் உதடும் எப்படி



துடிக்கிறது! உன் முகத்திலே அந்தக் கொடூரமான வேசம் எப்படி காணப்படுகிறது! உன் கண் எப்படி நெருப்புத் தணலைப்போலே சிவந்துபோகிறது! உன் நாவும் அந்த வேளையில் எப்படிக் குளறுகிறது! உன் உடம்பு எல்லாம் எப்படி பதைபதைத்து நடுங்குகிறது! இது எல்லாம் மரணத்தின் அடையாளம் அல்லவா.

நீ உன்னை நித்திய மரணத்துக்குள்ளாகவும் கொல்லுகிறாய். ஏனென்றால் கோபம் வெளியரங்கமான மாமிசத்தின் கிரியைகளோடே சேர்ந்ததாயிருக்கிறது. இப்படிக் கொத்துகளைச் செய்கிறவர்கள் பராபரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார். கலா. ௫, ௨௧.

நீ கோபிக்க வேண்டுமேயானால், உன் பாவத்தைக் கோபித்துககொள். நீ கண்டிக்க வேண்டும் என்றால், உன்னைத்தான் கண்டிக்க வேண்டும். நடுத்தீர்க்க வேண்டுமேயானால், உன் சுய தப்பிதங்களிலே கடினமான நியாயாதிபதியாயிருக்க வேண்டும். இதுகள் கோபத்தால் விளையும் நன்மையாயிருக்கிறது. இப்படி இல்லாதிருந்தால் அதுகள் உன்னைச் சேதப்படுத்துகிறதாயிருக்கிறது. செனேக்கா என்கிறவர் தமது ௨௮-ம் நிருபத்தில் என்ன சொல்லுகிறாரென்றால், நீ தினந்தோறும் உன்னாலே கூடியமட்டும் உன்னைத்தானே நன்றாய்ச் சோதித்து, முதலாவது உன் பேரில் குற்றம் சாட்டிக்கொள், இரண்டாவது உனக்கு நியாயாதிபதியாய் இரு, கடைசியில் உனக்காக பொறுமை கேட்கிறவனும் மன்றாடுகிறவனுமாய் இரு. சில வேளை கோபம் வந்தால், உன் பேரிலே தானே கோபித்துக்கொள் என்கிறார். மந்தையிலே இடையனுக்குக் காவல்நாய் எப்படி உதவுகிறதோ, அப்படி கோபம் எனக்கு உதவியாயிருக்க வேண்டும். நான் அதைத் தூரப் போகவிடாமல் என்னண்டையிலே வைத்துக் கொள்ளுவேன். அதை மனிதர் மேலே அல்ல, என் ஆத்தும இரட்சிப்புக்குப் பகையான ஓனாய்கள் மேலே உசுப்பிவிடுவேன். அந்தக்கோபம் என்கிற நாய்க்குப் பிறனோடு கவை என்ன? என் சொந்த குற்றங்களைப் பார்த்தே குலைக்கட்டும், கடிக்கட்டும், தண்டிக்கட்டும். என் நிழல் நான் திரும்புகிறபோது என் பின்னே திரும்புகிறதுபோல், நான் அந்தக் கோபத்தையும் அப்படியே என் பின்னாலே வரப் பழக்குவேன்.

௱௩௩. தியானம்.

## நியாயமான வட்டியைப் பற்றியது.

ஒன்றுக்கு நூறு.

இது மிகுதி அல்லவோ? நூற்றுக்கு எட்டு அல்லது பத்து வாங்குகிறது தருமம். ஆனால் பண ஆசைக்காரனுக்கு மிகுதி என்பது உண்டா? எனக்குப் போதும் என்று நரகம் ஒருக்காலும் சொல்லுகிறதில்லை. கிறிஸ்தவர்கள் தரித்திரருக்குக் கடன் கொடுத்து அதில் ஒன்றையும் திரும்பவரப் பார்த்திருக்கிறதில்லை. லூக். ௬, ௩௪. கடன் கொடுக்கிறவனுடைய நிலைமையையும் அதை வாங்குகிறவனுக்கு உண்டாகும் பிரயோசனத்தையும் பார்த்து, அதற்குத் தக்கதாய்ச் சீரோடே வட்டியை மிதப்படுத்தி வாங்குவது சிநேகம். கடன் வாங்கினவனுக்கு வருகிற ஆதாயத்தை விட அதிக வட்டி வாங்குகிறது கிறிஸ்தவனுக்கு அடாதது.

ஒன்றுக்கு நூறு அல்லது ஆயிரம் வீதம் கொடுக்கிறதார்? அது வீண்பேச்சு என்கிறாய். பராபரனும் பூமியும் அப்படியே செய்கிறது. பராபரனைக் குறித்து இயேசு இரட்சகர் கொடுத்திருக்கிற வார்த்தைப்பாடு இன்னதென்று பார். என் நாமத்தின் நிமித்தமாக வீட்டையானாலும், சகோதரரையானாலும், சகோதரிகளையானாலும், தகப்பனையானாலும், தாயையானாலும், பெண்சாதியையானாலும் பிள்ளைகளையானாலும் நிலங்களையானாலும் விட்டவன் எல்லாம் நூறத்தனையாய் அடைந்து நித்திய சீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான் என்கிறார். மத். ௰௯, ௨௯. பராபரன் பூமிக்கடுத்த நன்மைகளுக்கு வதிலாக உனக்கு ரம்மியமான இருதயத்தைக் கொடுக்கிறார். பண ஆசைக்காரன் இன்னம் நூறு ரூபாய் வேண்டும் என்கிறான். நீயோ அன்ன வஸ்திரத்தின் அவசரத்துக்கு ஒரு ரூபாய் மாத்திரம் போதும் என்கிறாய். நீ ஆசைப்பட்டது அத்தனையும் அத்தனையாகவே உனக்கு உண்டாயிருக்கிறது. ஆசையினாலே தரித்திரமும் ஐசுவரியமும் இருக்கிறது. ஒன்றுக்கு நூறு என்றேனே. அதின் கருத்து இது தான். பண ஆசைக்காரன் இன்னம் வேண்டும் என்ற நூறு ரூபாய் உனக்கு உண்டாயிருக்கிறதே. இம்மைக்கடுத்ததுக்குப் பதிலாகப் பராபரன் மறுமைக்கு அடுத்ததை உனக்குக் கொடுத்திருக்கிறார். இது இரண்டு காசுக்கு மோட்சம் சம்பாதிக்கிறதுபோல் இருக்கிறது. ஆனால் மோட்சம் இரண்டு காசைப்பார்க்கிலும், ஆம், உலகத்தை எல்லாம் பார்க்க நூறு பங்கு அதிகம் அல்லவா? வட்டிக்கு விட உனக்கு மனது



உண்டு. ஆனால் அதைப் புத்தியாய்ச் செய்யத் தெரியாது. உன் பணத்தை வெளியிலே விடுகிறாய். அனால் அதைச் சரியான இடத்தில் வைத்து கெட்டிபண்ணத் தெரியவில்லை. பராபரனிடத்திலே அது காக்கப்படுகிறாப்போலே வேறிடத்திலே காக்கப்படுமா? நீ விவேகியாய் இருந்தால், வானத்திலே பொக்கிஷத்தைக் கூட்டி வைப்பாய். மத். ௬, ௨௰. ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். அவனுடைய உபகாரத்துக்கு இவர் அவனுக்குப் பதில் கொடுப்பார். வாக்கி. ௰௯, ௰௭.

பூமியும் நீ பயிரிடும்போது ஒன்றுக்கு நூறு கொடுக்கிறது. ஈசாக்கு என்பவனைக் குறித்து வேதவாக்கியம் அப்படிச் சொல்லுகிறது. ஈசாக்கு அந்தத்தேசத்தில் விதைவிதைத்து அந்த வருஷத்திலே நூறத்தனை பலன் அடைந்தான்; ஏனெனில் கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். ௧ மோசே ௨௬, ௰௨. பராபரனுடைய ஆசீர்வாதம் இருந்தால், பயிர் நன்றாய் விளைந்து பூமி ஒன்று நூறாய்ப் பலன் கொடுக்கிறது. நீ மகா இலச்சையான விதமாய் உன் பணத்தை வட்டிக்குக் கொடுக்கிறாய். அதினால் வெகுவிசை முதலையும் வட்டியையும் இழந்துபோகிறாய். ஆனால் பூமியிலே நீ போட்ட விதைக்குப் பழுதும் மோசமும் வரும் என்று நீ பயப்படத் தேவை இல்லை. அதினிடத்தில் நீ கொடுத்ததை அது திரும்ப ஒன்றுக்கு நூறாய்க் கூட்டிக்கொடுக்கிறது. பூமிக்கும் பரமண்டலத்துக்கும் வட்டிக்கு கொடுக்கிறவன் எவனோ, அவனைக் காட்டிலும் மற்றெவனும் நியாயமும் பிரயோசனமுமான வட்டி வாங்குகிறவன் என்று நான் எண்ணுகிறதில்லை. நீயும் அப்படியே எண்ணிக் கொள்.

௱௩௪. தியானம்.

## விவேகத்தைப் பற்றியது.

எல்லாவற்றையும் சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்துச் செய்.

தீவிரம் வேண்டின் அமர்ந்துசெய், துணியும் முன் சீர்தூக்கு என்பார்கள். விவேகசாலி பாக்கியசாலி. கவனித்து நடக்கிறவன் விவேகியானவன். வாக்கி. ௰௫, ௫. வண்டிக்குப் பின்னாலே குதிரையைக் கட்டி ஓடு என்றால் ஓடுமோ? முன்னே செய்து பின்னே யோசனை பண்ணுகிறதும், முன்னே துணிந்து பின்னே சீர்தூக்கிப் பார்க்கிறதும் உலக வழக்கம். இதில் புத்திகெட்ட வர்த்தகனுக்குச் சமானமாயிருக்கிறார்

கள். அவன் மாற்றும் நிறையும் அறியாமல் பொன்னைப் பதறி வாங்கிப்போட்டு, பிறகு தான் அதை விக்கிரயம் பண்ணுவதற்காக நிறுக்கப்போகையில், நிறை குறைகிறதென்று கண்டு தான் மோசம் போனேன் என்று வெட்கப்படுகிறான். யாராலே மோசம் போனான் என்றால், அவன் நிறுக்காமல் வாங்கினபடியினாலே, அவன் தன்னால் தான் மோசம் போனான் என்று சொல்ல வேண்டும்.

காரியம் நினைத்தபடி நடக்கிறதில்லை என்று முறையிடுகிறாயா? சிநேகிதா, துவக்கம் எப்படியோ அப்படி முடிவும் இருக்கும். நீ உன் காரியத்தை விவேகத்தோடே துவக்கினாயா? அல்ல என்றால் முடிவில் அது நன்மையாகாத குற்றம் உன்னால் உண்டாயிருக்கிறது. எபிரேய பாஷையிலே விவேகத்துக்கும் பாக்கியத்துக்கும் ஒரே சொல் வழங்கிவருகிறது. அதினாலே விவேகம் பாக்கியத்துக்குத் தாயும், பாக்கியம் விவேகத்துக்கு மகளும் என்கிறார்கள். ஒரு கோட்டிலே துவக்கமும் முடிவும் எப்படி பிரியாமல் இருக்கிறதோ, அப்படியே நம்முடைய கிரியையில் எல்லாம் விவேகமும் பாக்கியமும் பிரியாமல் இருக்கும். விவேகமாய்த் துவக்கினது நன்மையாய் முடியும். இதைப் பரிட்சை பார். அப்போது அறிந்து கொள்வாய்.

ஆராய்ந்து பாராமல் படபடப்பாய் ஒன்றையும் செய்யாதே. துணிவும் மதிகேடும் ஒன்றுக்கொன்று சகோதரிகள். தன் புத்தி போனபடி போய் முட்டிக்கொண்டால் வாய்க்கிறது அபூர்வம். துணிகரம் அநேகம் கேடுகளை உண்டுபண்ணுகிறது. சலுஸ்தியுஸ் என்கிற அஞ்ஞானி சொல்லுகிறதாவது: நீ யாதொன்றைச் செய்யத் தொடங்குமுன், நன்றாய் நினைத்து ஆலோசனைபண்ணி தேறின யோசனைப்படியே ஒரு தாமதமும் பண்ணாமல் உடனே அந்தக்காரியத்தைச் செய்து முடி என்கிறார். அதைக் கவனி, அஞ்ஞானியிடத்தில் நன்மையான யாதொன்றைப் படிக்கிறது வெட்கம் அல்ல. அது உனக்கு வெட்கமாய் இருந்தால், அஞ்ஞானிகளுடைய போதகங்களைப் பவுல் என்றவரை இந்த காரியத்திலே ஒரு போதகராக வைத்துக்கொள். அவர் ரோமருக்கு எப்படி புத்தி சொல்லுகிறார் என்றால், எல்லா மனிதருக்கும் முன்பாக நன்மையானதுகளைப் பராமரியுங்கள் என்கிறார். ரோமர் ௰௨, ௰௭. அவர் பிலிப்பியருக்கு: எதுகள் உண்மையாய் இருக்குதோ, எதுகள் இலக்கணம், எதுகள் நீதி, எதுகள் கற்பு, எதுகள் பிரியம், எதுகள் நற்கீர்த்தியாயிருக்குதோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அதுகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள் என்கிற[illegible] தான் செய்ய



நினைக்கிற காரியம் கர்த்தருக்குப்பட்டிருக்கிறதோ, அவருடைய வசனத்துக்கு ஏற்றதாயிருக்கிறதோ, அவருக்கு அதினால் மகிமை உண்டாகுமோ, அது எல்லாருக்கும் நன்மையாகக் காணப்படுகிறதோ என்று (௧ தெசலோ. ௫, ௨௨.) முன்னே யோசனைபண்ணி, பிறகு அந்தக் காரியத்தைத் தொடங்க வேண்டுமே அன்றி, மற்றப்படி அதைத் தொடங்க ஒண்ணாது. கர்த்தருக்குப்பட்டிருந்து செய்கிறதெல்லாம் நன்றாய் வாய்க்கும். நான் ஒரு காரியத்தைச் சீர்தூக்கிப் பார்க்குமுன் அதைச் செய்யத் துணியேன். நான் செய்யப்போகிற காரியம் பராபரனுக்குப் பிரியமாயிருக்கும் என்கிற நிச்சயம் எனக்கு உண்டாகும் முன்னே நான் ஒரு காரியத்தையும் துவக்கேன். பராபரனை முன்னிட்டு செய்யத் தொடங்குகிறதெல்லாம் நன்றாய் வாய்க்கும்.

௱௧௬. தியானம்.

## தேவபத்தியினால் வரும் பிரயோசனத்தைப் பற்றியது.

*நீ பராபரனை அண்டிக்கொள். அப்போது அவர் உன்னை அண்டிக்கொள்வார்.*

நீ செய்ய வேண்டியதைச் செய்தால், பராபரன் செய்ய வேண்டுமென்று நீ ஆசைப்படுகிறதையும் அவர் உனக்குச் செய்வார். நீ கொடுக்கிறபடி அவரும் உனக்குக் கொடுப்பார். உன் தராசாலே தான் அவர் உனக்கு நிறுப்பார். உன் அளவாலே தானே அவர் உனக்கு அளப்பார். நீ விதைத்ததையே அறுப்பாய். நீ வார்த்ததையே குடிக்க வேண்டும். பராபரனைப் பற்றி நீ எந்தச் சிந்தையாயிருக்கிறாயோ, அப்படியே அவரும் உன் இருதயத்துக்குத் தம்மைத் தோன்றப்பண்ணி, உன்னைப் பற்றி அந்தச் சிந்தையாகத்தானே இருக்கிறார். தாவீது இராசா சொல்லுகிறதைக் கேள். தேவரீர் சன்மார்க்கனுக்கு உம்மைச் சன்மார்க்கமாகவும், மன உண்மையான மனுஷனுக்கு உம்மை மன உண்மையாகவும், சுத்தனுக்கு உம்மைச் சுத்தமாகவும், மாறுபாடானவனுக்கு உம்மைக் கோணலாகவும் காண்பிக்கிறீர் என்கிறார். சங்கீ. ௰௮, ௨௫. ௨௬. மேலும் பராபரன் இஸ்ரவேல் சனத்துக்குச் சொன்னதைக் கேள். நீங்கள் நம்முடைய கட்டளைகளில் நடந்தால், நாம் உங்கள் நடுவிலே உலாவி, உங்களுக்குப் பராபரனாயிருப்போம். ஆனால் நீங்கள் நமக்கு எதிர்த்து நின்றால், நாமும் உங்களுக்கு எதிர்த்து

நடப்போம் என்கிறார். ௫ மோசே ௨௬, ௫. ௰௨. ௨௪. எப்படி அவர் உனக்கு இருக்க வேண்டுமென்று விரும்புகிறாயோ, அப்படியே அவரும் இருப்பார். நீ தேவபத்தியில் நிலைத்து அவருக்கு ஊழியம் செய்தால், அவரும் நீ செய்கிற கருமங்களில் எல்லாம் உன்னோடு கூட இருப்பார். நீ அவருக்கு எதிர் பாராட்டினால், அவரும் உனக்கு எதிர் பாராட்டுவார். நீ அவரை எப்படிப்பட்டவராகத் தேடுகிறாயோ, அப்படிப்பட்டவராகவே அவரைக் கண்டுபிடிப்பாய். நீ அவரைத் தகப்பனாக எண்ணினால், அவரும் உன்னைப் பிள்ளையாக எண்ணுவார். நீ அவரைக் கனம் பண்ணினால், அவரும் உன்னைக் கனம் பண்ணுவார். நீ அவரைச் சிநேகித்தால், அவரும் உன்னைச் சிநேகிப்பார். நீ அவரை உன் மெய்ப்பொருளும் திரவியமுமாக எண்ணினால், இவ்வுலகத்திலுள்ள திரவியங்களெல்லாவற்றுக்கும் மேலான அளவில்லாத ஐசுவரியம் அவரில் கண்டுபிடிப்பாய். நீ அவர் மேல் நம்பிக்கையாயிருந்தால், நீ வெட்கம் அடைய அவர் இடம் கொடுக்கமாட்டார். இதற்கு எதிராக நீ அவரைக் கனவீனப்படுத்தினால், அவரும் உன்னைக் கனவீனப்படுத்துவார். நீ அவரை அசட்டைபண்ணினால், அவரும் உன்னை அசட்டைபண்ணுவார். அவர் சவுல் இராசாவோடு சொன்னதென்னவென்றால், நீ நம்முடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே நாம் உன்னையும் நீ இராசாவாய் இராதபடிக்குப் புறக்கணித்தோம் என்கிறார். ௧ சாமு. ௰௫, ௨௩.

பராபரனை நான் வேண்டுமென்கிறபடி எனக்கு இருக்கப்பண்ண என்றால் ஆகும். இது மிகுதி அல்லவோ. பராபரன் என்னைக் குறித்து நினைக்கிறது இன்னது என்றும் எனக்குத் தெரியும்; ஏனென்றால் கண்ணாடியில் தெரிகிறது போல் அவர் இருதயம் என் இருதயத்தில் தெரிகிறது. பொல்லாதவனுக்கு அவகேடு வந்தால், அவன் மனம் குன்றிப்போகிறதென்கிறது ஆச்சரியமா? அவன் பராபரனுக்குச் செய்ததைப் பராபரன் அவனுக்குத் திரும்பச் செய்வார் என்று அவன் இருதயமே அவனுக்குச் சொல்லும். அவன் பராபரனைக் கைவிட்டான். அவரும் அவனைக் கைவிடுவார். அவன் இருதயம் பராபரனை விட்டு விலகிப்போகிறது. பராபரனுடைய கிருபையும் அவனைவிட்டு விலகிப்போகும். பராபரன் அவனைக் குணப்படுதலுக்கு அழைக்கும்போது, அவன் அவருக்குச் செவிகொடாமல் போனான். பராபரனும் அவன் செபத்துக்குச் செவிகொடாமல் போகிறார். ஆகலால் பராபரனை அண்டிக்கொள்வேன். அவரும் என்னை அண்டிக்கொள்வார். நான் அவருக்கு உண்மையாயிருந்தால், அவரும் எனக்கு



உண்மையாக இருப்பார். நான் சிலுவையின் கீழே மனத்திடனாக இருப்பேன். ஏனெனில் பராபரன் எனக்குச் சகாயர் என்று என் இருதயம் எனக்கு நிச்சயம் கொடுக்கிறது. எசேக்கியா இராசா தனக்கு இடுக்கண் வந்தபோது, கர்த்தாவின் அருகே சென்று: ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்துகொண்டு உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்கிறதை நினைத்தருளும் என்று சொல்லக் கூடியவனானான். ஏசாயா ௩௮, ௩. அப்படியே நானும் அவருக்குமுன் சென்று: கர்த்தாவே, தேவரீர் என் சிலுவையிலே என்னைவிட ஒண்ணாது. ஏனெனில் என் கால்கள் உம்மை விட்டு விலகினதில்லை. தேவரீர் என் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் நான் உமது வசனத்தை ஏற்றுக்கொண்டேன். தேவரீர் உமது ஆறுதலையும் ஆதரவையும் விட்டு என்னைத் தள்ளப்படாது. ஏனெனில் என் இருதயம் உமது அடைக்கலத்தை விட்டு விட்டதில்லை என்று சொல்லுவேன். அப்போது பராபரன் எனக்கு என்ன செய்வார்? அவர் ஒத்தாசை செய்ய வேண்டும். என் இருதயமும் அப்படியே எனக்குச் சொல்லுகிறது.

௱௩௯. தியானம்.

## மெய்ச் சிநேகத்தின் உற்பத்தியைப் பற்றியது.

எனக்கு மனதில்லை.

இப்படி நீ சொல்லுகிறாய். எனக்கு மனதில்லை என்று நானும் சொல்லுகிறேன். அப்படியானால் நாம் இருவரும் ஒருவருக்கொருவர் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறோம்? சிநேகிதரோ; சத்துருக்களோ? எனக்கு மனதானது உனக்கு மனதில்லாததும், உனக்கு மனதானது எனக்கு மனதில்லாததுமாயிருந்தால், நாம் விரோதிகளாயிருக்கிறோம். எனக்கு மனதில்லாதது உனக்கு மனதில்லாததும், உனக்கு மனதில்லாதது எனக்கு மனதில்லாததுமாயிருந்தால், அப்போது சிநேகிதராயிருக்கிறோம். மனதுண்டு; மனதில்லை என்கிறதே இவ்வுலகத்தில் சிநேகத்தையும் விரோதத்தையும் எல்லாம் உண்டாக்குகிறது. எனக்கு அநேக விரோதிகள் உண்டு என்று நீ முறையிடுகிறாய். யார் உனக்கு விரோதி? உனக்கு மனதானது தனக்கு மனதில்லாதது என்கிறவன் அல்லவா? இந்த விரோதத்தை இலேசாய் நீக்கிவிடலாம். எப்படி எனில், உனக்கு மனதானது எனக்கு மனதில்லை

என்று பிறன் சொல்லும் போது, உனக்கு மனதானது எனக்கும் மனதுதான் என்று நீ மறு உத்தரம் சொல்லு. அப்பொழுது நீங்கள் சிநேகிதராய்ப் போவீர்கள். மனதுதான் இதுக்குக் காரணம்.

என் மனதும் உன் மனதும் ஒரு மனதாயிருந்தால், நாம் நல்ல சிநேகிதராயிருக்கிறோம். நன்மையான காரியமாயிருந்தால், மனதென்று சொல். எனக்கும் மனதென்று சொல்லுவேன். கெட்ட காரியமாயிருந்தால், மனதில்லை என்று சொல்லு. எனக்கும் மனதில்லை என்று சொல்லுவேன். அப்போது நாம் இருவரும் சிநேகிதராய் இருப்போம். ஆனால் மனதைச் சம்மதப்படுத்துகிறதுபோல் வருத்தமானது வேறொன்றும் இல்லை. என் மனதை உன் மனதுக்கும், உன் மனதை என் மனதுக்கும் விட்டுக்கொடுக்கிறது, வானம் பூமியும் பூமி வானமும் ஆகிறது எவ்வளவு பிரமாதமோ, அவ்வளவு பிரமாதமாய் இருக்கிறது. எல்லாத்தையும் வளைக்கிற மனிதனுக்கு தன் மனதை வளைக்கிறதைவிட வருத்தமானது ஒன்றும் இல்லை. ஆகிலும் என் மனதும் உன் மனதும் பாரபரன் மனதோடு ஒரு மனதானால், இரண்டு துண்டு மெழுகை நெருப்பிலே போட்டு உருக்க இரண்டும் ஒன்றாய்க் கூடி ஒரு கட்டியாகிறதுபோல் நம்மிருவர் மனதும் பாரபரனுக்குள் ஒன்றாய்ப்போம். நாம் நம்முடைய மனதைப் பாரபரனுடைய மனதோடு இணைக்கப் பார்ப்போமாக. ஏனெனில் அவர் நம்முடைய தகப்பனும், நாம் அவருடைய பிள்ளைகளுமாமே. தகப்பன் மனதின்படியே பிள்ளையின் மனதும் இருக்க வேண்டும் அல்லவோ? அவர் நம்முடைய ஆண்டவர், நாம் அவருடைய ஊழியக்காரர். ஊழியக்காரன் தன் மனதின்படி அல்ல, தன் ஆண்டவன் மனதின்படி நடக்கவேண்டுமே. நாம் இருவரும் பாரபரன் மனதின்படி நடப்போமாக. அப்போது நாம் பாரபரனுக்குள் ஒன்றாய் இருப்போம். பாரபரனுக்கு மனதாயிருக்கிறது உனக்கும் எனக்கும் மனதாயிருக்கிறது. உன் மனதும் என் மனதும் பாரபரனுக்குள் ஒரே மனதுதான். சுயமனது உலகத்திலே அற்றுப்போனால், சண்டையும் அற்றுப்போம். சுயமனதிலே சுயபொழிவும் சுயசிநேகமும் சுயகனமும் வருகிறது. அது பகைக்கெல்லாம் காரணம். என் சிநேகிதனே, நம்மிருவருக்கும் ஒரே பாரபரனும் ஒரே இரட்சகரும் ஒரே ஆவியும், ஒரே விசுவாசமும், ஒரே மோட்சமும் உண்டு. ஆதலால் நாம் இருவரும் ஒரு மனதாகவே இருக்கக்கடவோம். இதுதான் நான் உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறது.



## ௱௯௭. தியானம்.

## சம்காரய [illegible]த்துக்கு ஏற்றதான கடிந்துகொள்ளுதலைப் பற்றியது.

### உப்பும் சர்க்கரையும் கலந்திருக்க வேண்டும்.

இப்படியே பவுல் அப்போஸ்தலன்: உங்கள் வசனம் எப்போதும் இனிதும் உப்பால் சாரம் ஏற்றினதுமாயிருக்கக்கடவது என்கிறார். கொலொ. ௪, ௬. உப்பு கரிக்கிறது, சர்க்கரை ஆற்றுகிறது. கடிந்துகொள்ளுதலிலே கைப்பும் நட்பும் சேர்ந்திருக்கவேண்டும். பாவப் புண்ணை உணர்ந்து வருத்தப்படக் கைப்பு தேவை. தோன்றின வேதனையை ஆற்ற நட்பு தேவை. சுறுக்கில்லாத கடிந்துகொள்ளுதல் வெறும் பரியாசமும் இச்சகமும்போலாகும். அன்பில்லாத கடிந்துகொள்ளுதல் முழு வெறுப்பும் வர்மமுமாய்ப் போம்.

பூர்வத்தாரிடத்தில் உப்பு ஞானத்துக்கு அடையாளமாயிருந்தது. அதினால் ஞானத்தின் உப்பு என்கிற பெயராயிற்று. தப்பிதத்தில் அகப்பட்ட மனிதனை ஞானத்தோடும் அன்போடும் நடத்தவேண்டும். பிறன் ஆங்காரமாய்ப் பாவஞ்செய்தானோ, அல்லது பெலவீனமாய்ச் செய்தானோ, கலங்கிப் பயந்து செய்தானோ, பயப்படாமல் செய்தானோ என்று நீ ஞானத்தினால் நன்றாய் விசாரிக்க வேண்டும். பெலவீனத்துக்குப் போடுகிற மருந்தை ஆங்காரத்துக்குப் போடலாகாது. பெலவீனனை மனம் முறியப் பண்ணுகிறதெதுவோ, அது ஆங்காரியை அகங்காரத்திலே பெலப்படுத்துகிறதுண்டு. ஆங்காரத்துக்குக் கோபமும், பெலவீனத்துக்கு இரக்கமும் காட்டவேண்டும். பெலவீனமான நோயாளியிடத்தில் யார் கோபத்தைக் காட்டுவார்கள்? கலக்கத்திலே மனுஷனுடைய நினைவு தப்பிப்போகிறது. அப்படிப்பட்ட வேளையில் அவன் பதறிப்பேசின வார்த்தை பிறகு அவனுக்கே ஞாபகம் இல்லாமல் போகிறது. அவன் நினைவு அவனுக்கு வந்தவுடனே தான் பேசினதற்காகக் கஸ்திபட்டு, அப்படிப் பேசாதிருந்தால் நன்றாயிருக்குமே என்று வருத்தப்படுகிறான். இப்படிப்பட்டவனை ஆர் கொடுமையாய்த் தண்டிக்கலாம்? அவனுக்குள்ளே உண்டாகிற மனஸ்தாபமே அவனைக் கண்டிக்கிறது போதுமான தண்டனை. அப்படிப்பட்ட புண்ணுக்கு சர்க்கரை அல்லாமல் உப்பு ஆகாது. இந்தக்காரியத்தில் யோபின் சிநேகிதர் மெத்தவும் தப்பிப்போனார்கள்.

விவேகம் காலம் அறிந்து கண்டிக்கிறது. இரகசியமாய்ப் பாவஞ்செய்தவனை அது வெளியரங்கமாய்த் தண்டிக்

கிறதில்லை. ஏனென்றால் அதின் கடிந்துகொள்ளுதல் பட்சத்தால் உண்டாகிறது. சிநேகம் திரள் பாவங்களை மூடும். ௧ பேது. ௪, ௮. அந்தரங்கமாய் நடந்த பாவங்களை வெளியரங்கமாய்க் கண்டிக்கிறவன் இடறலை உண்டுபண்ணி, பிறன் குணப்படுதலுக்கு இடம் பண்ணாமல் அவனை வெட்கப்படுத்திக் கோபமூட்டுகிறான். பிறன் மிகுந்த கோபங்கொண்டு ஆத்திரப்பட்டு, அல்லது தன்னை அறியாமல் வெறிகொண்டிருக்கும்போது, விவேகம் அவனைக் கடிந்துகொள்ளுகிறதில்லை. முன்னமே கலங்கிப்போயிருக்கிற ஒரு குடத்துத் தண்ணீரை பின்னும் அதிகமாய்க் கலக்கினால் அதின் வண்டல் கிளம்பிவருமல்லவா, அப்படி. குடிவெறியானவனைக் கடிந்துகொள்ளுகிறது முத்துக்களைப் பன்றிக்கும் பரிசுத்தமானதை நாய்களுக்கும் போடுகிறதுபோல் இருக்கும். மத். ௭, ௬. அவனைக் குணப்படுத்தாமல் உன்னை அதினால் வெட்கப்படுத்துகிறாய். உனக்கு அதின்மேல் உண்டான வெறுப்பைப் பெருமூச்சோடு தெரியக்கொடுத்து, உன் மனநோவைக் காட்டும் முகச்சுளிப்போடே அவனைவிட்டு விலகுகிறது நல்லது. அவன் நினைவு அவனுக்குத் திரும்பவரும் மட்டும் கடிந்துகொள்ளுதலை சற்றே நிறுத்திவை. நீ பன்றியை அல்ல, மனிதனைக் கடிந்துகொள்ள வேண்டும்.

விவேகம் பிறனை புத்தியோடும் மரியாதையோடும் கடிந்து கொள்ளுகிறது. பவுல் அப்போஸ்தலன் தப்பிதத்தில் விழுந்த பிறனை கழன்று பிசகிப்போன அவயவத்துக்கு ஒப்பிடுகிறார். கலா. ௬, ௧. அதைத் தன் நிலையிலே கொண்டுவரும் மட்டும் மெத்த புத்தியோடே செய்யவேண்டும். புத்தி எடுப்பிக்கிறது, புத்தியில்லாமை இடிப்பிக்கிறது. விவேகம் கடிந்துகொள்ளுதலின் உப்பை தெளிக்கும்போது, அன்பானது தன் சர்க்கரையை அதின்மேல் தூவவேண்டும். ஏனென்றால் உப்பு நல்ல வஸ்துவானாலும், மெத்தவும் கரித்தால் உதவாது. மிகவும் கைத்துப்போன சாப்பாட்டைச் சாப்பிட மனது வராது. குணப்படுதல் உண்டாக நீ ஒருவனைக் கண்டிக்கப்போனால், அன்பான சொல்லாலும் குறிகளாலும கடிந்துகொள். நீதிமான் என்னைத் தயவாய்க் குட்டி என்னைக் கடிந்து கொள்ள வேண்டும். அது தலைக்கு எண்ணெய்போல் இருக்கும். சங்கீ. ௱௪௧, ௫.

பரிமளதயிலம் புண்ணுக்கு எப்படியோ, அப்படி அன்பான கடிந்துகொள்ளுதல் காயம்பட்ட மனச்சாட்சிக்கு இருக்கும். கடிந்து கொள்ளுதல் ஆவியின் தொழிலும், அன்பு ஆவியின் கனியுமாயிருக்கிறது. யோ. ௰௬, ௮. அன்பல்லாத கடிந்துகொள்ளுதல் ஆவியால் வராமல், மாமிசத்தால் வரு



கிறது. சிநேகம் கடிந்து கொள்ளுதலிலேயும் அன்புள்ளதாயிருக்கிறது. ஆதலால் அன்பில்லாத கடிந்துகொள்ளுதல் சிநேகத்தால் வராது. அன்புள்ள இருதயத்திலிருந்து அன்புள்ள சொல் உண்டாகிறது. ஏனென்றால் இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். மத். ௰௨, ௩௪. கடுமசொல் இருதயத்தைக் கடினமாக்குகிறது. இனியசொல் இருதயத்தை இளக்குகிறது. சிநேகத்தின் வார்த்தை இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறது. ஆகிலும் அன்பு இச்சகமும் கபடமாயிருக்கப்போகாது. இயேசுநாதர் தமது நாவின் கீழ் தேனையும் பாலையும் வைத்திருக்கிறார். அப்படியே இயேசுவின் மனைவியும் மதுரமான துப்பரவும் உண்மையுள்ள சிநேகமும் என்கிற தேனையும் பாலையும் தன் நாவின் கீழ் வைத்திருக்கிறாள். உன்னதப்பாட்டு ௪, ௰௧.

நான் என் பிறனைக் கடிந்துகொள்ள வேண்டியிருந்தால், உப்பையும் சர்க்கரையையும் என் கடிந்துகொள்ளுதலிலே ஒன்றோடொன்று நன்றாய்க் கலக்கப் பிரயாசப்படுகிறேன். அவன் தன் புண்ணை நன்றாக உணராவிட்டால், காரமான நியாயப்பிரமாணம் என்கிற உப்பை அதற்குள்ளே தெளிக்கிறேன். அந்தப்புண் அவனுக்கு வலியை உண்டுபண்ணினால், சுவிசேஷத்தின் ஆறுதல் என்னும் சர்க்கரையினால் அதைத்திரும்ப ஆற்றப் பார்ப்பேன்.

௱௯௮. தியானம்.

## கிறிஸ்துவோடே ஐக்கியமாவதைப் பற்றியது.

கறுப்பும் வெள்ளையும் சேராது.

சொக்கட்டான் விளையாடுகிறவர்களுக்கு அது தெரியும். பிசாசு உன் ஆத்துமாவை வெல்ல உன்னோடு சொக்கட்டான் விளையாட வருகிறது. அது கறுப்பானது. நீயும் அப்படித்தானோ? அப்படியானால் இருவரும் ஒரு கட்டாயிருக்கிறீர்கள். ஆகையால் கறுப்பே கறுப்புக்கு ஒப்பு. பிசாசும் நீயும் ஒப்பரவாய் இருக்கிறீர்கள். உன் ஆத்துமா அதினுடையது. அதின் நரகம் உன்னுடையது. இந்த முடிச்சைப் பாவம் கெட்டியாக்குகிறது.

நான் சென்ம சுபாவத்தின்படியே முன் கறுப்பாய் இருந்தது உள்ளதுதான். இப்போதோ தேவ கிருபையால் வெண்மையானேன். சென்ம பாவம் என்னை கறுக்கடித்தது. இயேசுவின் இரத்தமோ ஞானஸ்நானத்தினால் என்னை

உறைந்த மழைபோல் வெண்மையாக்கிப்போட்டது. என்
இரட்சகர் வெண்மையும் சிவப்பும் ஆனவர். உன்னதப்பாட்டு
டு, ம. நானும் வெண்மையும் சிவப்புமாயிருக்கிறேன். அவ
ருடைய குற்றம் இல்லாமை என் குற்றம் இல்லாமை. அவர்
நீதி என் நீதி. நான் என் அங்கிகளை தேவ ஆட்டுக்குட்டியின்
இரத்தத்திலே தப்பி வெளுத்துக்கொண்டேன். அறிவிப்பு
எ, ம௪. இனிமேல் வெண் வஸ்திரம் தரித்தவனாக அவர் முன்
வந்து நிற்பேன். பிசாசே, நான் உன்னோடு ஒரு ஒப்பந்தமும்
பண்ணமாட்டேன். சதுரங்கம் முதலிய விளையாட்டில் வெள்
ளைக்காய் கறுப்புக் காயோடு சேராது. நீ கோட்டிலே இருந்து
என்னை வெட்டப்பார்க்கிறாயோ? ஆம் அந்த எண்ணத்திலே
தாழ்ச்சி இல்லை. நீ முன்னமே ஒரு பரிட்சை பார்த்தும்
இருக்கிறாய். ஏதேனெனில் பரதீசில் இருந்த என்னையும்
என் முந்தின ஆதித்தாய் தகப்பன்மாரையும் தோற்கடித்து
வெட்டினாயே. இளைப்பாறுதலை விட்டு கலகத்திலேயும், குற்
றம் இல்லாமையை விட்டு பாவத்திலேயும், சீவனைவிட்டு மர
ணத்திலேயும் விழத்தள்ளினாயே. ஆனால் நான் ஒண்டியாய்
துணையில்லாமல் இருக்கிறேன் என்று நினையாதே. உன்னை
விட்டுப்பிரிந்து இயேசுவோடு ஒண்டிப்போய் இருக்கிறேன்.
அவரும் நானும் ஒரே வர்ணமாயிருக்கிறோம். நான் வெள்ளை
யோடு வெள்ளையாயிருக்கிறேன். நீ கொந்தளிக்கிறாய். ஆனால்
என்னை வெட்ட மாட்டாய். ஏனென்றால் இயேசுநாதர் என்
னைக் காத்துக்கொண்டிருக்கிறார். விசுவாசத்தின் முடிச்சு
வெகு பெலனாயிருக்கிறது.

ஆம், என் இயேசுவே, நான் உம்முடையவன். நீர்
என்னுடையவர். நம்மைப் பிரிப்பதார்? நீர் என் மேய்ப்பர்.
நான் உமது ஆட்டுக்குட்டி. உம்மண்டையில் எனக்கு மேய்ச்
சல் உண்டு. நீர் என் தாய்க்கோழி. நான் உமது கோழிக்
குஞ்சு. நீர் உமது கிருபையின் செட்டைகளினால் என்னை
மூடிக்கொள்ளுகிறீர். நீர் என் மணவாளன். நான் உமது
மணவாட்டி. நீர் உமது வாயின் முத்தங்களில் ஒன்றால்
என்னை முத்தம் இடுகிறீர். உன்னதப்பாட்டு க, உ. நீர் இருக்
கிறதெல்லாம் எனக்காய் இருக்கிறீர். உம்முடையது எல்
லாம் என்னுடையது. உமது ஆசீர்வாதம் என் ஆசீர்வாதம்.
உமது சீவன் எனது சீவன். உமது பாக்கியம் என் பாக்
கியம். நான் தரித்திரன் ஆனாலும் நீர் என் ஐசுவரியமாயிருக்
கிறீர். பொக்கிஷங்கள் யாவிலும் நீரே என் பூரிப்பு. நீர்
எனக்கு உண்டானால், என்றென்றைக்கும் என்னை மனரம்
மியப்படுத்துவது எனக்கு உண்டு. நான் இடுக்கப்படுகிற
போது, நீர் என் ஆதாரவாயிருக்கிறீர். நான் புறக்கணிக்கப்
படுகிறபோது, நீர் என் அடைக்கலமாயிருக்கிறீர். நான் துக்
கப்படுகிறபோது, என் ஆறுதலும் சந்தோஷமுமாயிருக்கி
றீர்.

நான் இருக்கிறதெல்லாம் உமக்காய் இருக்கிறேன்.
பாவமே, என்னத்தைத் தேடுகிறாய். நான் இயேசுவை அடுத்த
வன். அவர் காயங்களில் இரட்சிப்பைக் கண்டடைகிறேன்.
பிசாசே, நீ என்னைவிட்டு அகல வேண்டும். இயேசு என்
கேடகமாய் இருக்கிறார். உன் அம்பு என்மேல் படாது. அவர்
மேல் படும். ஆகையால் உன்னால் ஆவது என்ன?—உலகமே,
நீ துணியாதே. இயேசு என்னோடு இருக்கிறார். நீ என்மேல்
விழுந்தால், இரும்பு மதிலோடே முட்டிக்கொள்வாய். அதி
னால் ஆருக்குச்சேதம் வரும்? எனக்கோ, உனக்கோ?—மர
ணமே, நீ தோற்றுப்போனாய். கிறிஸ்து என் சீவன். சாவு
என் ஆதாயம். இயேசுவே, நீர் என்னுடையவராயிருந்து
விடும். நான் உம்முடையவனாயிருந்து விடுவேன். இந்தச்
சிநேகம் என்றென்றைக்கும் இருக்கக் கடவது.

௱௯௧. தியானம்.

## தேவெத்தனமான மாறுதலைப் பற்றியது.

ஒன்று மாறி ஒன்று.

உடனே வெற்றி, உடனே தோற்பு. இப்படி பராபரன் மாற்
றிப்போடுகிறார். அவர் உன்னோடு எப்போதும் ஆதாயத்
திற்காவது நஷ்டத்திற்காவது விளையாடுகிறதில்லை. ஒன்றை
மாற்றி ஒன்றை விளையாடுகிறார். இன்றைக்குக் கொடுக்கிறார்,
நாளைக்கு வாங்குகிறார். இன்றைக்கு நிறைவு, நாளைக்கு குறை
வு. இன்றைக்கு அழுகிறாய், நாளைக்கு நகைக்கிறாய். இன்
றைக்குச் சுகமும் பெலனும், நாளைக்கு வியாதியும் சாவும்.
ஒரு வேளை பரமண்டலத்தில் உளுக்கார்ந்து சம்மனசுக்களோ
டே கெம்பீரிக்கிறாய். மறுவேளை நரகத்திலிருந்து பேய்க
ளோடுகூட புலம்பி அழுகிறாய். இஸ்தோபேயுஸ் என்கிற
அஞ்ஞானி சீவன் தாயவிளையாட்டுக்குச் சமானம் என்கி
றான். ஏனென்றால் தாயம் எப்படி எப்போதும் ஒன்றைப்
போல் விழுகிறதில்லையோ, அப்படியே இச்சீவனின் சம்ப
வங்கள் வேளைக்கு ஒருவிதமாயிருக்கிறது. இந்த மகா பெரிய
பூலோகத்திலே பூதியங்களுக்குள்ளே நடக்கிற விளையாட்
டைப் பாருங்கள். இப்போ வெளிச்சம், பிறகு இருள். இப்
போது காந்தி, இன்னம் சற்றே பொறுத்து குளிர்ச்சி. இப்

போது பகல், பிறகு இராத்திரி. இவ்விதமாகப் பராபரன் இந்தச் சிறிய உலகமாகிய மனிதனிடத்திலும் விளையாடுகிறார். இந்த விளையாட்டுக்கு உன்னைக் கீழ் அடக்க வேண்டும். இன்றைக்கு நலமானது நாளைக்கு இளப்பமாயும் இருக்கலாம். ஆகையாலே நீ உன்னை உயர்த்தாதே. இன்றைக்கு இளப்பம் கண்டால் நாளை நலம் காணலாம். ஆகையால மனம் சோர்ந்து போகாதே. உனக்குச் சில வேளை காரிய தாழ்ச்சியாக நடந்தால், தாயம் செவ்வையாய் விழாதபோது, அதைப் போடுகிறவன் வெறுப்படைகிறதுபோல நீயும் வெறுப்பாகிறாய். தாயக்கட்டை தாயக்கட்டையே. ஆனால் விழுகிற தாயம் எல்லாம் ஒன்றைப்போல இராதே. அப்படியே எல்லா நாளும் ஒன்றைப்போலே இராது. இப்போது நன்மையாயிருந்தால், பிறகு தீமையாயிருக்கும். இன்றைக்குத் துக்க நாளாயிருந்தால், நாளைக்குச் சந்தோஷ நாளாயிருக்கும்.

நல்ல நாள் மாத்திரத்துக்கு எப்போதும் பொறுக்காது. ஆகையால் பராபரன் அதை மாற்ற வேண்டும். தத்துவ சாஸ்திரம்: நீ வெளிச்சத்தை மாத்திரம் தனியே சீராக்கிக் கவனித்தால், அதன் மகத்துவத்தையும் மகிமையையும் நன்றாய் அறிகிறது மகா கடினம்; ஆனால் அத்தோடு கூட இருளையும் வைத்துப்பார்த்தால், வெளிச்சம் எத்தனை மகிமையும் பிரயோசனமுமாயிருக்கிறதென்று வெகு திட்டமாய் அறிந்து கொள்வாய் என்று சொல்லுகிறது. பராபரன் உன்னை ஒருக்காலும் வியாதியாய் விழப்பண்ணாதிருந்தால், சுகம் எத்தனை பெரிய பொக்கிஷம் என்று நீ அறியவும், அதற்காகப் பராபரனை உற்சாகமாய் ஸ்தோத்திரிக்கவும் மாட்டாய். ஆகையால் வியாதியை விட சுகம் அதிக உத்தமம் என்று உனக்குத் தெரியக் கொடுக்க, பராபரன் அந்த மாறுதலை உண்டுபண்ணுகிறார். அப்படியே எப்போதும் ஓர் வகையான சாப்பாடு சாப்பிட்டால் ருசிக்கிறதில்லை. நல்ல நாளும் கடைசியிலே வெறுப்பாய்த் தான் போகிறது. மாறுதல் இல்லாமல் ஆறுதல் இல்லை. பராபரன் தமது தயவையும் நீதியையும் நமக்கு அறியக்கொடுக்கிறார். தமது தயவை நம்பிக்கை பிறக்கிறதற்கும், தமது நீதியை பயம் பிறக்கிறதற்குமாக அறியக்கொடுக்கிறார். ஆகையால் அவர் அணைக்கிறதும் அடிக்கிறதும் மாறிமாறி வருகிறது. நானோ தாயத்திலே விழுகிறது எதுவோ, அது சந்தோஷமானாலும் துக்கமானாலும் எல்லாம் நன்மையே என்று மன ரம்மியமாயிருப்பேன். பராபரன் தீமைக்காக அல்ல, நன்மைக்கென்றே அதை வரவிடுகிறார். நான் எல்லா நிருவாகத்திலும் திடன்கொண்டு, எனக்குக் கொஞ்சம் இருந்தாலும் நிரம்ப இருந்தாலும் மனம் வேசாறா



மல் இருப்பேன். கொஞ்சம் இருந்தாலும் அதிகம் இருந்தாலும் நான் பெருமை பாராட்டேன். நான் எப்போதும் யோபு என்பவர்போல: பராபரன் கையிலே நன்மையை வாங்கின நாம் தீமையையும் வாங்க வேண்டாமோ? கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக் கடவது என்று சொல்லுவேன். யோபு க, உக-உ, ௰.

௱சு௰. தியானம்.

## இயேசுவை சிநேகிக்கிற சுத்த சிநேகத்தைப் பற்றியது.

இரண்டுபேர் ஒரு போர்வைக்குள்ளே.

அது ஒத்துவராது. நீ ஒரு இருதயத்தில் இயேசுவையும் உலகத்தையும் படுக்கவைக்கப் பார்க்கிறாய். சிநேகம் என்கிற ஒரே போர்வையால் இயேசுவையும் உலகத்தையும் போர்த்துவைக்கப் பார்க்கிறாய். அது முடியாது. ஏனெனில் படுக்கை நீட்டிக்கொள்ளக் கூடாத குறுகலும், மூடுகிலே மூடிக்கொள்ளக் கூடாத அகலக்கட்டையுமாய் இருக்கும் என்று எழுதியிருக்கிறது. ஏசாயா உஅ, உ௰. ஒருவன் லோகத்தைச் சிநேகித்தால் அவனில் பிதாவின் சிநேகம் இல்லை என்று யோவான் அப்போஸ்தலன் சொன்னதை மறந்து விட்டாயோ? க யோவான் உ, ௰ரு. லோக சிநேகம் பராபரனைப் பகைக்கிற பகை என்று அறியீர்களோ என்று யாக்கோபு அப்போஸ்தலன் எழுதியிருக்கிறது உனக்கு ஞாபகம் இல்லையோ? யாக். ச, ச. உலகம் தன் சிநேகிதர்களைப் பராபரனுக்குப் பகைஞராக்குகிறது. இதுதான் அதினால் வரும் பலன். நீ ஒரு செருப்பிலே இரண்டுகால் வைத்துக் கொள்ளலாமோ? ஒரு மெழுகுதண்டில் இரண்டு அச்சு பிடிக்கலாமோ? ஒரு உறையில் இரண்டு கத்தி சொருகலாமோ? ஒரே சமயத்தில் ஒரு காலால் மலையில் ஏறவும், மறு காலால் இறங்கவும் கூடுமோ? கூடாதே. அப்படிப்போல ஒரு சிநேகம் மற்றொரு சிநேகத்தைப் போக்கடிக்கிறது. நீ இயேசுவைச் சிநேகித்தால், உலகத்தைப் பகைப்பாய். உலகத்தைச் சிநேகித்தால், இயேசுவைப் பகைப்பாய். ஒரு ஆற்றிலே இருக்கிற தண்ணீர் பல வாய்க்கால்களிலும் பிரிந்தோடத் தொடங்கினால், அந்த ஆற்றுத்தண்ணீர் முன்போல் அத்தனை சுறுக்கில் ஓடாது என்கிறதும் கடைசியிலே தண்ணீர் முழுதும் வற்றிப்போம் என்கிறதும் நாம் அறிவோமே. அப்படிப்

போல் சிநேகம் பல பங்காய்ப்பிரிந்தால், அதின் பெலன்
குறைந்து முழுதும் அற்றுப்போம். சிநேகம் எங்கே அற்
றுப்போகிறதோ, அங்கே பகையும் துவக்கமாகிறது. உலகம்
சிநேகிக்கப்படுகையில் இயேசு கிறிஸ்து பகைக்கப்படுகிறார்.
மெய்தான், ஒரே வீட்டிலே இரண்டுபேர் குடியிருக்கலாம்.
ஆனால் இந்த இரண்டுபேரும் ஒருமனப்பட்டு இருக்க வேண்
டும். இயேசுவுக்கும் உலகத்துக்கும் ஒன்றுக்கொன்று எவ்
வளவும் ஒவ்வாது. ஏனென்றால் உலகம் பெருமையுள்ளது,
இயேசு தாழ்மையுள்ளவர். உலகம் பண ஆசையுள்ளது,
இயேசு போதுமென்ற சிந்தையுள்ளவர். உலகம் நகைக்கி
றது. இயேசு அழுகையோடு இருக்கிறவர். ஆகையால் இவ்வி
ரண்டில் ஒன்றை விட்டு ஒன்றோடே சேர்ந்திருக்க வேண்டும்.
நீ இப்போது உலகத்தோடே சேர்ந்திருக்கிறாயா? நானோ
இயேசுவோடு சேர்ந்திருக்கிறேன். அவருடைய தரித்திரம்
உலகத்தின் ஐசுவரியத்திலும், அவருடைய தாழ்மை உலகத்
தின் மகிமையிலும் எனக்குப் பிரியம். உலகம் என்னைச் சிநே
கிக்காது. நான் ஏன் அதைச் சிநேகிப்பேன். அது எனக்கும்
இயேசுவுக்கும் பகையை உண்டாக்குகிறது அல்லவா? உல்
கமே, என் இருதயத்தை விட்டு நீங்கு. அது இயேசுவுக்கு
மாத்திரம் சொந்தம்.

௱௪௧. தியானம்.

# கிரியையோடு கூடிய சிநேகத்தைப் பற்றியது.

*வார்த்தையில் ஐசுவரியம். கிரியையில் தரித்திரம்.*

உலகம் இப்படியாய் இருக்கிறது. உபசாரம் நிரம்ப, உள்
அன்பு கொஞ்சம். வாய்ச்சொல் மிகுதி, மனப்பூர்வம்
கொஞ்சம். இலைகள் மிகுதி, கனிகள் கொஞ்சம். பொன்
நிரம்ப, மாற்று குறைவு. வார்த்தையும் கிரியையும் இரு
தயத்திலிருந்து வரும். அந்த இரண்டும் சிலவேளை மாயமா
யிருந்தாலும், வார்த்தையானது கிரியையைப்பார்க்க அநேகம்
தரம் மாயம் செய்யும். ஆகையால் காதுகளைப்பார்க்க நமது
கண்களை அதிகமாய் நம்பலாம். ஏனென்றால் கண் எப்போ
தும் நிச்சயமானதைப் பற்றிப் பிடிக்கிறது. காது அடிக்கடி நிச்
சயமில்லாததைப் பிடிக்கிறது. நான் நாவின் பாஷையை விட
கையின் பாஷையை அதிகமாய் நம்புகிறேன். நிறைவேற்ற
மனம் இல்லாதபோது வாக்குத்தத்தம் கொடாதிருக்கிற
வனை நான் மதிக்கிறேன். வார்த்தைப்பாடு கொடுத்து அதை



நிறைவேற்றுகிறவனை அதிகமாய் மதிக்கிறேன். பேசாம
விருந்து செய்கிறவனையோ அதிலும் அதிகமாய் மதிக்கிறேன்.
ஆனால் சொல்லியும் செய்யாமலிருக்கிறவனை பரிச்சேதம்
மதிக்க மாட்டேன். ஏனென்றால் சொல் இருதயத்தின் ரூபத்
தைக் காட்டுகிறதாகையால, பொய்யான சொல் இருதயத்
தின் பொய்யான சுரூபத்தைக் காட்டுகிறது. பொய்ச்சாட்சி
களை எப்படி மதிக்கக் கூடும்? என் பிள்ளைகளே, நாம் வச
னத்தினாலும் நாவினாலும் அல்ல, கிரியையினாலும் உண்
மையினாலும் சிநேகிக்கக் கடவோம். ௧ யோவா. ௩, ௰௮.
சுத்த சிநேகம் கிரியையோடே கூடினதாயிருக்கிறது.
எப்படி விசுவாசம் எல்லாவற்றிற்கும் எசமானாயிருக்கிறதோ,
அப்படி சிநேகம் எல்லாருக்கும் ஊழியனாகிறது. ஒரு வேலைக்
காரன் நல்ல வார்த்தைகளைப் பேசிப்போட்டு தான் செய்ய
வேண்டியதைச் செய்யாதிருந்தால், அவனை நீ எப்படிப்பட்ட
வன் என்று எண்ணுவாய். ஊழியம் வார்த்தையினாலே அல்ல,
கிரியையினாலே செய்யப்படுகிறது. பவுல் அப்போஸ்தலன்
சிநேகத்தை நன்றாய் வர்ணித்து, சிநேகம் தயவாயிருக்கிறது
என்கிறார். ௧ கொரிந். ௰௩, ௪. அது நல்மனதுள்ளதும் உதவி
செய்கிறதுமாயிருக்கிறது. நன்மை செய்ய அதைக் கட்டா
யப்படுத்தத் தேவை இல்லை. அது எங்கும் போய், தன் நன்
மையைப் பெற்றுக்கொள்ள மற்றவர்களைக் கட்டாயப்படுத்து
கிறது. நல்யோசனை சொல்லவும் உதவி செய்யவும் நன்மை
செய்யவும் அது மிகுந்த ஆசையும் சந்தோஷமுமாயிருக்
கிறது. என் இருதயமே, நீ சிநேகிக்கிறவனுக்குப் பிரயோச
னம் உண்டாக அவனைச் சிநேகிக்க வேணும் என்பதை மறக்
காதே. வார்த்தையில் பிரயோசனம் இல்லை. கிரியையில் பிர
யோசனம் உண்டு. பராபரன் தமது சிநேகத்தினால் உனக்குப்
பிரயோசனமாயிருக்கிறார். அவர் எவ்வளவு மனப்பூர்வமாய்
உனது ஆத்துமாவுக்காகக் கவலைப்படுகிறார். அவர் தமது உப
காரத்தை எத்தனை திரளாய் உன்மேல் பொழிகிறார். சிருஷ்
டிக்கப்பட்ட வஸ்துக்கள் எல்லாம் கிரியையினாலே உனக்குப்
பட்சத்தை காண்பித்து, தம்மாலே ஆனமட்டும் உனக்கு
ஊழியம் செய்கிறது. சூரியன் உனக்கு ஒளி கொடுக்கிறது.
பூமி தன் பலனைக் கொடுக்கிறது. தண்ணீர் மீனைக் கொடுக்
கிறது. நீ உத்தமமாய்ச் சிநேகிக்க மனதிருந்தால், இந்தப்
படியே செய். நான் என் பிறனுக்கு என் இருதயத்தையும்
என் வாயையும் கையையும் கொடுப்பேன். அப்போது
சிநேகிக்க வேண்டியவிதமாய் சிநேகிக்கிறேன் என்பது நிச்
சயம்.

௩௪௨. தியானம்.

## மெய்க்கிறிஸ்தவனைப் பற்றியது.

*அவன் மனிதன், மனிதனிலும் அதிகம்.*

அவன் யார்? மெய்க்கிறிஸ்தவன் தான். செனனத்தால் மனுஷராயும் ஞானஸ்நானத்தால் கிறிஸ்தவர்களாயும் பிறந்தோம். அதேதென்றால் கிறிஸ்துவுக்குள்ளாக எத்தனை பேர் ஞானஸ்நானம் பெற்றோமோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டோம். கலாத். ௩, ௨௭. கிறிஸ்துவோடே ஐக்கியமாயிருக்கிறதிலே கிறிஸ்துமார்க்கம் அடங்கியிருக்கிறது. விசுவாசம் ஒருவனை மெய்க்கிறிஸ்தவனாக்குகிறது. அது எப்படியென்றால், ஒரு சேலையை உடுத்திக்கொள்ளுகிறதுபோல் விசுவாசம் கிறிஸ்துவின் உத்தரவாத புண்ணியத்தை நமக்கு உடுத்திவிட்டு இயேசு கிறிஸ்துவை ஆயுதமுள்ள நம்பிக்கையோடே நமக்குச் சொந்தமாக்குகிறது. கிறிஸ்து பராபரனால் எனக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தப்படுத்தலும் மீட்புமாக்கப்பட்டார் என்று அப்போஸ்தலனோடு சொல்லுகிறதே அந்த விசுவாசமாயிருக்கிறது. ௧ கொரி. ௧, ௩௰. நேசமோ ஒருவனைக் குறித்து அவன் கிறிஸ்தவன் என்கிற சாட்சிகொடுக்கிறதெப்படி என்றால், மனுஷன் வஸ்திரம் தரித்துக்கொண்டு புறப்படுகிறாப்போல் நேசம் கிறிஸ்துவின் ஆவியையும் சிந்தையையும் தரித்துக்கொண்டு, கண்ணாடியில் பார்க்கிறாப்போல கிறிஸ்துவைத் தனக்குள்ளே காண்பித்து, பவுல் அப்போஸ்தலனோடு கூட சந்தோஷம் அடைந்து: நான் பிழைத்திருக்கிறேன், ஆகிலும் நான் அல்ல, கிறிஸ்து எனக்குள் பிழைத்திருக்கிறார் என்று சொல்லுகிறது. கலாத். ௨, ௨௰. பொறுமை கிறிஸ்தவனை எப்படி அறியக்கொடுப்பதென்றால், அது அவனுக்கு விரோதமாக வருகிற மரணம், பிசாசு, உலகம் முதலிய தீங்குகள் எல்லாவற்றையும் தைரியமாய்ப் பொறுத்து, உறுதியாய் நின்று, அவனை அதுகள் தாக்கி வாதித்து அடித்தாலும் அடிக்கட்டும் என்று சொல்லுகிறது. என் சரீரத்தைத் தொட வேண்டும் என்று இருக்கிறவன் அந்தச் சரீரத்தை மூடியிருக்கும் வஸ்திரத்தையும் தொட வேண்டும். என்னை அடிப்பவன் என் இயேசுவையும் அடிக்க வேண்டும். நான் அதை உணரும்போது, அவரும் அதை உணருகிறார். எனக்கு வலித்தால், அவருக்கும் வலிக்கிறது. ஆகையால் அவர் உதவி செய்வாரென்கிறது நிச்சயம். என் இருதயமே, இதை நன்றாய்த் தியானி.



தீமையை விட்டு நன்மையைச் செய் என்று புத்தி சொல்ல வந்தால், நீ சுமந்துகொண்டு திரிகிற மனித சென்மத்தைக் குறித்து எப்போதும் முறையிட்டு: நான் மனுஷனாகையால், மனுஷன் யாதொரு தப்பிதமும் இன்றி குற்றமற்றவனாய் நடக்கக் கூடுவது எப்படி என்று போக்குச் சொல்லுகிறாய். மாமிசத்தில் மாமிசமாய்ப் பிறந்திருக்கிற ஒரு அஞ்ஞானி இப்படிச்சொன்னால் பொறுக்கலாம். ஆனால் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவன் என்று சொல்லுகிற உனக்கு அதை மன்னிக்கிறது எப்படி, நீ ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளவில்லையா? நீ அவருடைய ஆவியால் அபிஷேகம் பண்ணப்படவில்லையா? கிறிஸ்துவின் ஆவி மாமிசத்தின் கிரியைகளை உன்னில் அடக்கி அழிக்கமாட்டாதபடிக்கு அத்தனை பெலவீனமாய்ப் போய்விட்டாரோ? கிறிஸ்துவால் ஒன்றும் ஆகாதபடிக்கு அவர் இப்போது அத்தனை பெலன் அற்றுப்போனாரோ? பவுல் அப்போஸ்தலன் உன்னைப்போல் ஒரு மனிதன் அல்லவோ? அவர் உன்னைப்போல் மாமிசமும் இரத்தமும் உள்ளவராயிருக்க இல்லையோ? உன்னைப்போல் அவரும், மோசம்போக்குகிற கெட்ட உலகத்தோடே போராடி இருக்கவில்லையோ? பிசாசு உனக்கு விரோதம் பண்ணுகிறாப்போலே அவருக்குப் பண்ணினதில்லையோ? கிறிஸ்து அவருக்குக் கிட்டியிருந்தாப்போல் உனக்கும் கிட்டியிருக்கவில்லையோ? என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவுக்குள் எனக்கு எல்லாத்துக்கும் பெலன் உண்டு என்று அவர் மேன்மை பாராட்டி பேசினார். பிலிப். ௪, ௰௩. நீயோ என்றால் ஒன்றும் ஆகவில்லை, பத்தியோடு ஒரு பெருமூச்சும் விடக் கூட இல்லை, என் சிலுவையில் ஒரு சிராய் முதலாய் எடுக்க என்றால் ஆகவில்லை என்று முறையிடுகிறாய். அப்பா, இப்படிப்பட்ட போக்குகள் உனக்கு உதவும் என்று நீ நினையாதே. நீ இதினாலே உன் கர்த்தரை வெட்கப்படுத்துகிறாய் அன்றி வேறில்லை. அவர் உன்னோடே ஐக்கியமாயிருந்தால், நீ தீமையைப் பகைத்துத் தள்ளுவாய். ஏனென்றால் நீதிக்கும் அக்கிரமத்துக்கும் கூட்டேது? இருளுடனே வெளிச்சத்துக்கு ஐக்கியம் ஏது? பேலியாளுடனே கிறிஸ்துவுக்கு இசைவும் ஏது? ௧ கொரி. ௬, ௰௪. ௰௫. நீ தீமையைச் செய்து கிறிஸ்துவின் பேரிலே பெருமை பாராட்டினால், கிறிஸ்து அந்தத் தீமைக்குக் காரணம் என்கிறாப்போலாகும் அல்லவோ? உன் வாயானது தீமையைப் பேசுகையில் நீ வாயைக் குற்றப்படுத்தி, ஆத்துமம் அதற்கு உத்தரவாதியல்ல என்று பரிகரிக்கக் கூடுமோ? வாய் திறக்கவும் பேசவும் ஆத்துமத்திலிருந்து அதற்குச் சத்துவம்

பிறக்கிறதென்று அறியாயோ? உலகத்தில் செத்தவர்கள் பேசுவார்களோ? இதைப்போல் நீ பாவ நடக்கையிலிருந்து கொண்டே, நான் இயேசுவை அறிந்தவன் என்று வீம்புபேசினால், நீ செய்கிற தின்மைக்கு இயேசுநாதர் உத்தரவாதமாயிருக்க வேண்டும். ஆகையால் பவுல் அப்போஸ்தலன் உன்னைப் பார்த்து: நியாயப்பிரமாணத்தைக் குறித்து பெருமை பாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறுகிறதினால் பராபரனைக் கனவீனம் பண்ணுகிறாய். பராபரனுடைய நாமம் உங்களால் புறச்சாதிகளுக்குள் தூஷணிக்கப்படும் என்று நிதானமாய்ச் சொல்லுகிறார். ரோமர் ௨, ௨௪. கிறிஸ்து உன்னோடு ஐக்கியமாயிருந்தால், நீ நன்மையைச் சிநேகித்து, அதிலே அப்பியாசப்படுவாய். ஏனென்றால் கிறிஸ்து ஆத்துமத்திலே செத்தாப் போலேயாகிலும் வீணாகவாகிலும் இருப்பதில்லை. அவர் எங்கே இருக்கிறாரோ, அங்கே அவர் தம்மைக் கேட்கவும் பார்க்கவும் பண்ணுகிறார். விசுவாசத்தினால் நமது இருதயங்களில் வாசம் பண்ணுகிறார். விசுவாசம் ஒளித்துக் கொண்டிருக்கக் கூடாது. அது வெளிப்பட்டுப்போய் நற்கிரியைகளினாலே தன்னைக் காண்பிக்கிறது. சரீரம் அசைவில்லாமல் கட்டைபோலே கிடந்தால், அந்தச் சரீரத்திலே ஆத்துமம் இருக்கிறதென்று நீ நம்புவாயோ? நம்ப மாட்டாயே. கிறிஸ்து உன்னிலே ஞானப்பிரகாரமாய் அசையாமலும், யாதொரு அடையாளங்களைக் கொண்டாகிலும் அவர் அங்கே வந்திருக்கிறாரென்கிறதை வெளிப்படுத்தாமலும் இருந்தால், அவர் உன்னிடத்திலே இருக்கிறாரென்று நான் நம்புகிறதெப்படி? அவர் தமது சரீரத்திலே செத்த அவயவங்களை வைக்கிறதில்லை. நல்ல மரம் நல்ல கனிகளைக்கொடுக்கும். நல்ல கனிகொடாத மரம் எல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும். மத். ௭, ௰௭—௰௯. கிறிஸ்தவன் என்கிற பேரினாலே காரியம் ஒன்றும் இல்லை. பேரோடு கூட செயலும் இருக்க வேண்டும். அது தாவிளை:

௫௰௩. தியானம்.

## இகழவும் புகழவுந் தக்க பொருளாசையைப் பற்றியது.

வயது ஏறஏற பொருளாசையும் ஏறுகிறது.

மனுஷனுடைய சரீரம் முதிர்ந்தும், அதின் சகல துர்க்குணங்களும் கிழமாகியும், பொருளாசை ஒன்று மாத்திரம் இன்னம் இளந்தையாயிருக்கிறது ஆச்சரியம். விருத்தாப்பியம் ஆக ஆக மனுஷனுக்கு உண்டாயிருக்கிற சுபாவ அக்கினி



குறைந்துகொண்டே வருகிறது. அத்தோடு அவனுடைய ஆகாத ஆசை இச்சைகளும் தளர்ந்துபோகிறது. ஆனால் ஐசுவரியவான்களாக வேண்டும் என்கிற இச்சை மிச்சமானவர்களிடத்தில் அதிகரிக்கிறது. பொருளாசை தன் பொக்கிஷங்களைப் பத்திரம் பண்ணக் கூடாத மோசமான பழங்குடிசையிலே வசிக்க விரும்புவது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. பொருளாசைக்காரனே உன் சீவன் மலையிலிருந்து இறங்கிறாப்போல் இருக்கிறது, இறங்கும்போது சுமக்கிறது லேசாயிருக்கிறதென்று சொல்லுகிறான். அது மெத்த பிசகு. நீ கிறிஸ்தவனாயிருந்தால், உன் சீவன் மலைமேல் ஏறுகிறது போல் இருக்கிறது. நமது சஞ்சரிப்பு பரமண்டலங்களிலிருக்கிறதென்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார். பிலிப். ௩, ௨௰. நீ பணச்சுமையோடே மலைமேல் ஏறி பரமண்டலத்தை எப்படிச் சேருவாய். நீ ஆரைப் பின் செல்லுகிறாய்! உலகத்தையோ அல்லது கிறிஸ்துவையோ? அதை எனக்குச் சொல்லு. உலகம் உன்னை மலையைவிட்டு இறக்கிக் கொண்டு போகிறது. கிறிஸ்துவோ உன்னை மலைமேல் ஏற்றிக்கொண்டு போகிறார். நீ உலகத்தைப் பின்செல்ல மனதானால், நீ முற்றிலும் பொருளாசைக்காரனாயிரு. கிறிஸ்துவைப் பின்செல்லுகிறதானால், பொருளாசையை விட்டுவிடு. ஆனால் உன் சீவன் மலையிலிருந்து இறங்குகிறதென்று வைத்துக்கொண்டாலும், மலையிலிருந்து சுமையோடு இறங்குகிறது எத்தனை மோசம். அது வெகுவிசை கீழே தள்ளுகிறதே. பாரமானதெல்லாம் பள்ளத்தில் அமிழ்ந்தப்பார்க்குமே. பொருளாசை நரகத்திலே அமிழ்த்துகிறதே. ஐசுவரியவான் வான இராச்சியத்துக்குள் பிரவேசிப்பது அரிது. மத். ௰௯, ௨௩.

வயது ஏறஏற உன் கவலையும் குறைய வேண்டியது. உன் தோள் பெலவீனமாகிறதே. அப்படியிருக்க உன்மேல் பெரிய சுமையைச் சுமத்திக்கொள்ளுகிறாயோ? சாவு சமீபிக்கிறதை நீ காண்கிறாயே. அப்படியிருக்க இன்னும் வெகு ஆஸ்திகளையும் தானியதவசங்களையும் சேர்க்கிறாயா? சிநேகிதா, இது எல்லாம் ஆருடையதாம்? உன் பிள்ளைகளுடையதாகுமா? காக்கைக் குஞ்சுகளைப் பராமரிக்கிறவர் பராபரன் என்று உன் மனதில் தோன்ற இல்லையோ? உன் பிள்ளைகள் நாளைக்கு எங்கே இருப்பார்களோ. ஆருக்குத்தெரியும்? நீ வெகு வருஷமாய்ச் சேர்த்து வைத்ததை ஒரு பெருங் காற்று வந்து ஒரே நாளையிலே அடித்து. சின்னபின்னம் ஆக்கினாலும் ஆக்கும். அப்போது உன்னுடையவர்களுக்கு அது உதவாதே. ஆகையால் பொருளாசையை விட்டுவிடு. இந்த வயிற்றுக்கு இருக்கிறது போதும். உன் சவக்குழியை நினை.

நானும் விருத்தாப்பியன் ஆகஆக பொருளாசையில் அதிகரிக்க வேணுமென்றிருக்கிறேன். ஆனால் அழிந்துபோகிற இந்த உலக பொக்கிஷங்களின் பேரில் அல்ல, என்றென்றைக்கும் நிலைநிற்கிற அழியாத மோட்ச பொக்கிஷங்களின் பேரில் ஆசையாயிருக்கிறேன். — நீயோ நான் பணக்காரன், எனக்குத் தாழ்ச்சியில்லை என்று சொல்லுகிறாய். பராபரன் ஐசுவரியவான்களை வெறுமையாய் அனுப்பிவிடுகிறார் என்று வேதம் சொல்லுகிறதை நீ நினைக்கவில்லை. லூக். ௧, ௫௩. நான் வெகு காரியங்கள் எனக்குக் குறைகிறதென்கிறேன். ஆனால் பராபரன் பசித்தவர்களை நன்மைகளினாலே நிரப்புகிறார் என்று அறிவேன். நான் இந்த மட்டும் வந்து விட்டேன் என்றும் எனக்கு இருக்கிறது போதும் என்றும் என் இருதயம் எனக்குச் சொல்லி என்னை எத்த ஒட்டேன். நான் இலக்குக்கு இன்னம் வெகு தூரமாயிருக்கிறேன். காலமும் குறுகினதாயிருக்கிறது. பூப்போலே வாடுகிறோம். பூக்கும்போதே உதிருகிறோம். நாம் நம்மை வெறுக்கும்போதே நம்மை ஆகாயமாக்குகிறோம். ஆகையால் நாம் நம்மை திரும்பத்திரும்ப வெறுக்க வேண்டியிருக்கிறது. மரணம் என்னைப் பிடிக்கையில் தான் எனக்கு இருக்கிறதுபோதும் என்று சொல்லுவேன்.

௱௪௪. தியானம்.

## கிறிஸ்துவைப் பின் செல்லுவதைப் பற்றியது.

ஆர் என்று உற்றுப்பார்த்துப் பின் செல்லு.

மூன்றிலே ஒன்றைத் தெரிந்துகொள். மாமிசம், உலகம், இயேசுநாதர் இம்மூவரும் உனக்கு ஊழியம் செய்வதாகச் சொல்லுகிறார்கள். மாமிசம் என்னைப் பின்செல்லு, உனக்கு இச்சையானபடி செய் என்கிறது. இதற்கு மாட்டேன் என்பவன் ஆர்? சகல இச்சைகளோடும் கூடி வாழாத வாழ்வு என்ன வாழ்வு என்று நீ சொல்லுகிறாய். அப்பா, அதைப் பின்பற்றாதே. அது உன்னை வழிதப்பி நடக்கப்பார்க்கிறது. குருடன் குருடனுக்கு வழிகாட்டலாமா? இருவரும் குழியிலே விழுவார்கள் அல்லவோ? மாமிசம் குருடும் மயங்கப்பண்ணுகிறதுமாயிருக்கிறது. நீ உன் இச்சைக்கானபடி செய்தால், நீ இச்சிக்காததைப் பட்டு அநுபவிக்க வேண்டும். அதின் முடிவு மரணம். நாம் மாமிசத்தின்படி ஜீவனம் பண்ணினால் சாகப்போகிறோம். ரோமர் ௮, ௰௩.



உலகமும்: நீ என்னைப்பின் செல்லு, நான் செய்கிறபடி செய் என்கிறது. இதற்கு மாட்டேன் என்கிறவன் யார்? அப்படிச்செய்தால் ஐசுவரியமும், சங்கையும், சிற்றின்பமும் உண்டாம் என்கிறாய். ஐயோ, இப்பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷம் தரிக்காதே. ரோமர் ௰௨, ௨. விசாலமான வழிகேட்டுக்குக் கொண்டுபோகிறது. பூமிக்கடுத்த திரவியத்தின் வழியாய் நித்திய தரித்திரத்திற்கும், பூமிக்கடுத்த கனத்தின் வழியாய் நித்திய கனவீனத்திற்கும், பூமிக்கடுத்த சிற்றின்பத்தின் வழியாய் நித்திய வாதைக்கும் அது கொண்டுபோய் விடுகிறதே. டம்பக்காரனான அந்த ஐசுவரியவான் (லூக். ௰௬) அதைக் கண்டறிந்திருக்கிறான். நீ உன்னைக் காத்துக்கொள்.

இயேசுநாதரோ: ஒருவன் என் சீஷனாயிருக்க வேண்டுமானால், அவன் என்னைப் பின்செல்லக் கடவான் என்கிறார். இது யாராலே ஆகும்; அவர் இடுக்கணிலேயும் மரணத்திலேயும் கொண்டுபோகிறார் என்கிறாய். அப்பா, அவரைப் பின்செல்லு: இக்கட்டு மரணத்துக்குள்ளே கொண்டுபோகிறவர் அதை விட்டு உன்னை அப்புறப்படுத்தவும் அறிவார். அவர் பூமிக்கடுத்த தரித்திரத்தின் வழியாய் நித்திய ஐசுவரியத்துக்கும், பூமிக்கடுத்த கனவீனத்தின் வழியாய் நித்திய மகிமைக்கும், அழிந்துபோகிற துக்கத்தின் வழியாய் அழியாத சந்தோஷத்துக்கும், சரீரமரணத்தின் வழியாய் நித்திய சீவனுக்கும், நரகத்திலிருந்து மோட்சத்துக்கும் கூட்டிக்கொண்டு போகிறார். அவர் உன்னை வனாந்தரவழியாய் எந்த முகாந்தரத்தினாலே கூட்டிக்கொண்டுபோகிறார் என்று அறியாயோ? மன்னாவாலே உன்னைப் போஷிக்கவும், உன் இருதயத்தோடு பேசவும் தானே.

நான் என் இயேசுவைப் பின்செல்லுகிறேன். அவர் என்னை வழிதப்பி நடத்தமாட்டார். நான் வாழ்விலும் தாழ்விலும் சாவிலும் அவரைப் பின்செல்லுவேன். என் வாழ்விலே அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவேன். என் உபத்திரவங்களில் என் கால்களை அவரைவிட்டு அசைய ஒட்டேன். அவரும் தம்முடைய காலை என்னண்டையில் வைப்பார். மரணத்திலே அவர் சைகை காட்டும்போது ஆயத்தப்பட்டிருப்பேன். உலகத்திலே நன்மை ஒன்றும் இல்லை. என் இயேசுவே, என் வேண்டுதலைக் கேளும். ஆ என் இயேசுவே, நான் உம்மண்டையில் இருந்தால் தாவிளை.

Müller, *Spiritual Hours.*

௱௬௫. தியானம்.

## சிலுவை என்னும் உபத்திரவத்தில் செபம் பண்ண வேண்டும் என்பதைப் பற்றியது.

இந்த மூலிகை நல்ல சஞ்சீவி.

இது கைகண்ட மருந்து என்று பரிசுத்தவான்கள் எல்லாரும் சொல்லுகிறார்கள். இதுவே நல்ல வித்தை. இதுவே சரியான ருசு. நீயும் அதைப் பரிட்சைபார். உனக்கு சஞ்சலம் வந்தால் செபம்பண்ணு. ஆத்தும சரீர இடுக்கணிலே செய்வது என்ன என்று எசேக்கியா இராசாவைக் கேள். அவர்: செபம்பண்ணு என்று மறு உத்தரம் சொல்லுவார். இருதயமும் ஆத்துமமும் கலக்கப்பட்டிருந்தால், என்ன செய்வதென்று யோனா தீர்க்கதரிசியைக் கேள். அவரும் செபம்பண்ணு என்று மறுமொழி சொல்லுவார். வியாகுலப்படுகையில் செய்ய வேண்டியதென்ன, இளைத்த என் ஆத்துமத்தை எதினாலே முசிப்பாற்றுவேன் என்று தாவீது இராசாவைக் கேள். அவருடைய பிரத்தியுத்தரம் ௪௨-ம் சங்கீதத்திலே அகப்படும். அது என்னவெனில்: என் பராபரனே, என்னில் என் ஆத்துமம் முறிந்துகொண்டிருக்கிறது. ஆகையால் உம்மை நினைக்கிறேன். பகற்காலத்திலே கர்த்தர் தமது கிருபையைக் கட்டளையிடுகிறார். இராக்காலத்திலே என் சீவனுடைய பராபரனை விண்ணப்பம் செய்யும் அவருடைய பாட்டு என்னோடிருக்கும். நான் என் கன்மலையாகிய பராபரனோடே: ஏன் என்னை மறக்கிறீர், சத்துரு என்னை ஒடுக்குகிறதினால் நான் ஏன் கரிகறுத்துத்திரிய வேணும் என்கிறேன் என்பதுதான். இப்படியே செபம் கைகண்ட மருந்து என்று பரிசுத்தவான்களெல்லாரும் சொல்லுகிறார்கள்.

நாம் இடுக்கணிலே நம்மைத்தானே வாதித்து மனப்பிடை அடைந்துபோக வேண்டுமென்று பராபரன் மனதாயிருக்கவில்லை. அதினாலே காரியம் ஒன்றும் முடியாது. செபம்பண்ணி நமது இடுக்கணை அவருக்கு அறிக்கைபண்ண வேண்டும். எல்லாவற்றையும் அறிந்தவருக்கு நமது மனக்கவலையும் நன்றாய்த் தெரியும் என்பது மெய்தான். மழையின் ஒவ்வொரு துளியையும், கடற்கரையின் ஒவ்வொரு மணலையும், வருஷத்தின் ஒவ்வொரு நாளையும் எண்ணுகிறவர், நமது கண்ணீர் துளிகளையும் எண்ணுகிறார். நமக்கு நெருக்கிடையாயிருக்கிறது இன்னதென்று அவருக்குத் தெரியாமலிருக்கக்கூடுவது எப்படி. அவர் அதை நமதுமேல் சுமத்துகிறார். அவரே அதைச் சுமக்கவும் உதவிசெய்கிறார். எகிப்து சிறைமையில்



இஸ்ரவேல் புத்திரர் பட்ட பாடு அவர் நன்றாய் அறிந்தாரே. நமது இமிசையைக் கண்டு நமது துன்பத்தை நன்றாய் அறிந்திருக்கிறார். அப்படியிருந்தும் நாம் நம்முடைய இக்கட்டு இடைஞ்சலை தம்மோடு சொல்ல வேண்டுமென்றிருக்கிறார். ஏனெனில் செபத்தினால் செபம் பண்ணுகிறதற்கான கருத்து வரவர அதிகரித்து வருகிறது. நெருப்பிலே கரியைப்போடப்போட அது அதிக காங்கையாய் எரியுமே. செபத்தினாலே பராபரன் மேல் நமக்கு இருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறோம். ஏனெனில் நாம் தனதாய் நம்பியிருக்கிற சிநேகிதனோடே எல்லாவற்றையுஞ் சொல்லுகிறாப்போல, பின் ஒருவரோடும் அத்தனை தனதாய் நம்முடைய இருதயத்தைத் திறந்து சொல்லுகிறதில்லையே. செபத்தினாலே நாம் நம்முடைய இருதயத்துக்கு லகு உண்டு பண்ணுவோம். எந்தமட்டும் நமது இடுக்கணைப் பராபரனுக்குச் சொல்லி உதறிப்போடாமலிருக்கிறோமோ, அந்த மட்டும் அது நமது இருதயத்திலே ஒரு பாரக்கல்போலிருக்கிறது. நாம் பாரப்பட்ட இருதயத்தோடு இருக்கப் பராபரனுக்கு மனதில்லை. அவர் நமது இருதயத்தின் வியாகுலங்களை தமக்கு முன்பாகத் திறந்து புறப்பட்டு அழுகையோடே உதறிப்போட மனதாயிருக்கிறார்.

பராபரன் நமக்கு உதவிசெய்து நம்மை இரட்சிக்கும்படி, செபமானது அவருடைய மனதை இளக்குகிறது. நாம் நம்முடைய புண்ணை அவருக்குத் திறந்து காட்டினால், அவர் அதற்குச் சேர்வை போடாமல் போகார். ஆனால் செபம் பண்ண இங்கே ஆரால் ஆகப்போகிறது, போ என்கிறாய். என் இருதயமே, உனக்கு ஆறுதல் சற்றும் இல்லாதபோது, பராபரன் உன்னை வெகு பெலனாய் ஆற்றித் தேற்றுகிறார். அதுபோல நீ வியாகுலத்தினால் இப்போது செபம் பண்ணக் கூடாதென்று உனக்குத் தோன்றுகிறபோது அதிக கருத்தாய்ச் செபம் பண்ணுகிறதுண்டு. செபம் பண்ணக் கூடாதாகிலும் செபம் பண்ண ஆசைப்படுகிறது மகா உருக்கமான செபம் என்று எண்ணப்படும். நான் செபம் பண்ணக் கூடாவிட்டாலும் பெருமூச்சாகிலும் விடுகிறேன். பெருமூச்சுவிடக் கூடாவிட்டாலும் பராபரனை நினைத்துக்கொண்டாகிலும் இருப்பேன். பராபரனை நினைக்கவும் கூடாவிட்டாலும், அவர் எப்படியும் என்னை நினைத்து என் மன வியாகுலத்தைக் கிருபையாய் நோக்கிப் பார்ப்பார். அப்படிச் செய்வார். அதை நான் கெட்டியாய் நம்பியிருக்கிறேன்.

௨௬௬. தியானம்.

## மாமிசத்தைக் கொல்லுவதைப் பற்றியது.

எனக்கு மனதில்லை.

என்ன, நீ செத்துப்போனாயோ? மனதில்லை என்பது உயிர் இல்லை என்பதாம்.—ஆ, பழைய மனிதன் செத்தால் தாவிளை. அப்போது இரட்டிப்புச் சந்தோஷம் உண்டாயிருக்கும். நான் வேலைசெய்ய வேண்டுமானால், "எனக்கு மனதில்லை; சோம்பலாயிருந்து சுகமாய் வாழ்ந்திருக்கிறதே உத்தமம்" என்று மாமிசமும் இரத்தமும் சொல்லுகிறது. நான் செபம் பண்ண வேண்டுமானால், "எனக்கு மனதில்லை; உலகக் காரியங்களிலே சிதறிக் கிடக்கிற என் நினைவுகளைச் சேர்த்துப் பிடிக்கிறது வருத்தம்" என்று மாமிசம் சொல்லுகிறது. நான் கோவிலுக்குப் போக வேண்டுமானால், "மனதில்லை; நான் வீட்டிலே தானே இருந்தால், பத்து பணம் சம்பாதிக்கலாம்" என்று மாமிசம் சொல்லுகிறது. நான் எனக்குத் தீங்கு செய்தவனுக்கு மன்னிக்க வேண்டுமானால், "மனதில்லை; என் சங்கை அல்லவோ அவதிப்படுகிறது, என் மரியாதையை நான் காத்துக்கொள்ள வேண்டும்" என்று மாமிசம் சொல்லுகிறது. குறைச்சல் உள்ளவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமானால், "எனக்கு மனதில்லை; அதிகங் கொடையாளியானால் ஓட்டாண்டியாய்ப்போக வேண்டும்" என்று மாமிசம் சொல்லுகிறது.

ஆ, எனக்கு மனதில்லை என்கிற சத்துரு சாகிறதானால், அது சாவதற்கென்று என் ஜீவனையும் கொடுத்துவிடுவேன். அதேதென்னில் எனக்குள்ளே அதாவது என் மாமிசத்துக்குள்ளே நன்மை வாசமாயிருக்கிறதில்லை என்று அறிவேன். ஏனென்னில் நன்மைசெய்ய வேண்டும் என்குதல் என்னுடனே இருக்கிறது. ஆனால் அதை நடப்பிக்கிறதைக் காணேன். ஏனென்னில் நான் செய்ய வேண்டும் என்று இருக்கிற நன்மையைச் செய்யாமல் போகிறேன். நிர்ப்பாக்கிய மனுஷன் நான், ஆர் இந்த மரண சரீரத்துக்கு என்னை நீங்கலாக்கி விடுவான். ரோமர் ௭, ௰௮. ௰௯. ௨௪. எனக்கு மனதில்லை என்கிறது செத்தால், நான் பவுல் அப்போஸ்தலனைப்போல்: என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவுக்குள் எனக்கு எல்லாத்துக்கும் பெலன் உண்டு என்று கொண்டாடிச் சொல்லுவேன். பிலிப். ௪, ௰௩. அப்போது வேலைசெய்யவும், செபம் பண்ணவும், கோவிலுக்குப் போகவும், மன்னித்து விடவும், தர்மம் கொடுக்கவும் கூடியவனாயிருப்பேன். ஆகையால் நீ என்னைக்



கொல்லுகிறதோ, நான் உன்னைக் கொல்லுகிறதோ என்று துணிந்து ஒரு கை பார்க்க வேண்டும். பிந்தினதே உத்தமம். நான் நன்மையை விலக்கவும் தீமையைச் செய்யவும் ஏவுகிற உன் இச்சைகளை என்னில் உணருகிறேன். ஆனால் அதற்காக என்னில் மரண அவஸ்தையும் உண்டாகிறது. செத்த பிணம் எனக்கு எப்படி அரோசியமோ, அப்படி அதுவும் எனக்கு அரோசியமாயிருக்கிறது. உன் இச்சைகளை நான் நிறைவேற்றுவதை விட, நான் சாகிறது எனக்குத் தாவிளை என்கிறேன். இதிலும் அதிகமாய் உனக்கு என்ன செய்ய வேணும்? இதுவே உனக்கு மரணம் ஆச்சே.

இனி நான் பாவத்தோடு ஒட்டிக்கொள்வேனோ? அது எனக்கு மனதில்லை. மரித்தவன் பாவத்துக்கு நீங்கலானவன். நான் உலகத்தோடு சேர்ந்து கொள்வேனோ? அது எனக்கு மனதில்லை. செத்தவன் உயிரோடிருக்கிறவனைப் பார்த்து அவன் செய்கிறபடி செய்யக் கூடுமா? நான் பாவத்துக்கும் உலகத்துக்கும் செத்து நீதிக்குப் பிழைக்கிறேன். ௧ பேது. ௨, ௨௪. பிழைத்திருக்கிறேன், ஆனால் நான் அல்ல; கிறிஸ்து எனக்குள் பிழைத்திருக்கிறார். கலா. ௨, ௨௰. நீ செபம் பண்ண மாட்டாயா? நீ செபம் பண்ண வேண்டும். உனக்கு மனது உண்டு என்கிறது ஒன்று. உனக்குக் கடமை உண்டு என்கிறது வேறு. நான் உன் ஆண்டவன். ஆவி கற்பிக்க வேண்டும். மாமிசம் கீழ்ப்படிய வேண்டும். மனதில்லை என்கிறது செத்து மனதுண்டு என்கிறது என்னில் பிழைத்திருக்கிறது. செத்துப்போனது உயிரோடிருக்கிறதை எதிர்க்கப் போகாது. மாமிசமே, நீ ஆவிக்கு எதிர்த்து நிற்கப்போகாது; நீ கொலை செய்யப்பட்டிருக்கிறாய்.

௨௬௭. தியானம்.

## வீண் போகாத நம்பிக்கையைப் பற்றியது.

நம்பிக்கையாயிருக்கிறவன் மூடன்.

இப்படி உலகத்தின் மக்கள் தங்கள் அநுபோகத்தினால் சொல்லுகிறார்கள். அது நிச்சயமே. உலகம் எதிர்பார்க்கிறது வாராது. மாயக்காரன் வரப்பார்த்துக்கொள்ளுதல் அழியும். அவனுடைய வீண் நினைவு அறுந்துபோய் அவனுடைய நம்பிக்கை சிலந்திப்பூச்சிக்கூடு போலும் நாணல் போலும் இருக்கும். யோபு. ௮, ௰௩. ௰௪. நாணல் வளர்ந்து ஈரமுள்ள மட்டும் செழித்திருக்கிறது. வெய்யிலின் காணல் மிகுந்தால்

உடனே வாடிப்போகிறது. பொல்லாதவன் சிறிது காலம் மகிழ்ச்சியாய் வாழுகிறான். ஆனால் தேவகோபத்தின் காந்தி அவன்மேல் பட்ட உடனே அவன் நம்பினது எல்லாம் ஒருமிக்க நீங்கிப்போகிறது. பொருள் போன உடனே மனத்திடனும் போகிறது. ஆ இது என்ன இடுக்கண். இதென்ன நிர்ப்பாக்கியம்! உலகத்தின் மக்கள் மனுஷர் மேல் தங்கள் நம்பிக்கையை வைக்கிறார்கள். இது எத்தனை பயித்தியமான நடக்கை! மனுஷனுடைய இருதயத்தைப்போல பேதலிக்கிறது வேறொன்று உண்டோ? இன்றைக்கு மித்துரு நாளைக்குச் சத்துரு. இன்றைக்குப் புகழ்ச்சி நாளைக்கு இகழ்ச்சி. காற்றாடியைக் காற்று சுழற்றுகிறாப்போல ஒரே வீண் வார்த்தையும் வெறும் அசுவையும் சில வேளை மனதை மாற்றிவிடுகிறது. மனுஷனைப் பார்க்கிலும் மாயையானதென்ன? ஆம், எந்த மனுஷனும் மாயையே என்கிறது நிசம். சங்கீ. ௬௨, ௯. உதவி செய்கிற மனுஷனைப்போலல்லவோ அவன் செய்கிற உதவியும் இருக்கும். மனுஷன் மாயை, அவன் உதவியும் மாயை. தனக்கே உதவமாட்டாதவன் உனக்கு உதவுகிறது எங்கே? மனுஷனைப்பார்க்கிலும் நிலையற்ற வஸ்து வேறு உண்டோ? இன்றைக்குச் சீவன் நாளைக்குச் சாவு. அவன் செத்தால் அவனை உதவியும் செத்தது. உன் ஊன்றுகோல் உடைந்த உடனே நீயும் கூட விழுகிறாய். இதனால் மனிதனை நம்புகிறது பைத்தியம் என்கிறது நிசப்படுகிறது. பயித்தியக்காரா, நீ உன் வீட்டை மணலின் மேல் கட்ட நினைக்கிறாயோ. பெருங் காற்று அடித்தால் அது நிற்குமா? சொரிமணல் நங்கூரத்துக்கு ஏற்ற இடம் அல்லவே.

நம்பிக்கை பயித்தியம் என்று கிறிஸ்தவன் சொல்லக் காரணம் இல்லை. ஏனென்றால் அவன் தன் நம்பிக்கையை அசையாத அஸ்திவாரமாகிய பராபரன் மேல் வைக்கிறான். என் பராபரனே, உம்மை நம்பியிருக்கிறேன்; என் சத்துருக்கள் என்பேரில் களிகூராதபடிக்கு நான் வெட்கப்பட்டுப் போகாதிருப்பேனாக. உமக்குக் காத்திருக்கிற ஒருவராகிலும் வெட்கப்பட்டுப்போகாமல் முகாந்தரமில்லாமல் துரோகம் பண்ணுகிறவர்களே வெட்கப்பட்டுப்போவார்களென்று அவன் தாவீது இராசாவோடு கூட சொல்லலாம். சங்கீ. ௨௫, ௨௩. நம்பிக்கை வெட்கப்படுத்தாதென்று பவுல் அப்போஸ்தலன் (ரோமர் ௫, ௫) சொன்னது நல்லோர்களின் அனுபவசித்தாந்தமாயிருக்கிறது. விசுவாசமானது இன்னம் பெற்றிராததையும் பெற்றுக்கொண்டதுபோல நம்புகிற நம்பிக்கையாயிருக்கிறது. உலகம் தோன்றிய நாள்முதல் இந்நாள் வரைக்கும் நடந்து வருகிற பராபரனுடைய தயவை



யும் சர்வவல்லபத்தையும் நான் என் இடுக்கணிலே தியானித்தால், ஒத்தாசை எனக்கு வந்து விட்டதுபோல் நான் எனக்குள்ளே நிச்சயித்திருந்து, மனந்தேறி, சௌம்பீரமாகி, அவருக்கு ஸ்தோத்திரப்பலியைச் செலுத்த நினைக்கிறேன். பராபரன் என் நம்பிக்கையை வெட்கப்படுத்த மாட்டாரென்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். விசுவாசமும் பொறுதி நம்பிக்கையும் வீணாய்ப்போகிறது கூடாத காரியம். நான் விசுவாசிக்கிறபடி எனக்கு ஆக வேண்டுமென்று அறிந்திருக்கிறேன். பராபரன் விசுவாசத்துக்குப் பழுதுவரப்பண்ணினால்; அவர் பொய்யரும் எத்தருமாயிருப்பார். அப்போது அவரை ஆருக்கு ஒப்பிடலாம் என்றால், ஒருவன் கை நிரம்ப பணம் வைத்துக்கொண்டு பிச்சைக்காரனைக் கூப்பிட்டு: கையை நீட்டு, இந்தப்பணத்தைத் தருகிறேனென்று சொல்லி, அவன் கையை நீட்டி வாங்க வந்தவுடனே நீட்டின கையை முடக்கிக்கொண்டு பணத்தைப் பையிலே போட்டுக்கொள்ளுகிறவனுக்குச் சமானமாவார். இப்படிச்செய்கிறவனை எப்படிப்பட்டவனாக எண்ணுவாய். மனுஷரை ஏய்க்கிறவனாய் எண்ணுவாய் அல்லவா? துன்பகாலத்திலே பராபரன் நமக்கு ஒத்தாசையைத் தாமதப்படுத்துகிறது நம்முடைய விசுவாசத்தை மோசம்போக்கி நம்பிக்கையை வெட்கப்படுத்த அல்ல, அதைச்சோதிக்கவும் காப்பாற்றவும் அப்படிச்செய்கிறார். எவ்வளவுக்குத் தாமதமோ அவ்வளவுக்கு நலம். நாம் காத்திருந்து வாங்குவது நமக்கு அதிக அருமையாயிருக்கிறது. உமக்குக் காத்திருக்கிறேன்; என் பராபரனாகிய ஆண்டவரே, தேவரீர் மறு உத்தரவு கொடுப்பீர். சங்கீ. ௩௮, ௰௫.

௱௪௯. தியானம்.

## மீளாத சேதத்தைப் பற்றியது.

போயிற்று, போயிற்று.

எல்லாம் ஒருமிக்கப்போயிற்று. என்ன போயிற்று? என் பணம் போயிற்று என்கிறாய். பணம் மாத்திரம் போனால், ஒன்றும் போகவில்லை. பணம் பணம் தான். அது உலகத்திலே இருந்து விடும். சாலொமோன் இராசா வாக்கியப் புஸ்தகம் ௨௩, ௫-ல் சொல்லுகிறதுபோல் பணத்துக்குச் சிறகுண்டு. அது பறந்து விடாதேபோனால், சிறகு என்னத்துக்கு. ஐசுவரியம் நிலையற்றது. அது உன்னுடையதாயிராமல், அது உனக்கு இரவலாக மாத்திரம் கொடுக்கப்படுகிறது.

அது இங்கே அகப்படுகிறது, இங்கே விடப்படுகிறது. ஆகையால் கடைசியாக உன்னோடு வராதது உனக்குச் சொந்தமென்று சொல்லாதே.

பின் ஒன்றையும் போக்கடிக்கவில்லையா? ஆம் அப்பா, பொன்ஹன காலத்தைப் போக்கடித்தாய். ஆ, அது பாதாபமே. காலம் போயிற்றேயானால், வெகு நன்மை போயிற்று. காலத்தை விட விலையேறப்பெற்றது வேறென்ன? சம்பிரமமாய் வாழ்ந்திருந்த ஐசுவரியவான் இப்போது நரகத்தில் கிடந்து வேகிறானே. அவனுக்கு இப்போது ஒரு வருஷம் அல்லது ஒரு நாள் அல்லது ஒரு மணிநேரம் திரும்ப அகப்படக் கூடுமானால், அவன் அதற்காக எதைக் கொடுக்க மாட்டான். அவன் தன் ஆடை ஆபரணம் மகிமை மற்றெல்லாவற்றையும், கூடுமானால் இவ்வுலகம் முழுவதையும் கூட அதற்காகக் கொடுப்பான் என்று அறிவேன். அப்பா, அவன் குணப்படத் தனக்கு ஒரு நிமிஷம் மாத்திரம் அகப்படுமென்று கண்டால், அதின் நிமித்தம் ஆயிரம் வருஷத்திற்குத் தன் சரீரத்தை நரக சுவாலையிலே போட்டு வாதிக்கக் கூடச் சம்மதிப்பானே.

நீ போக்கடித்தது இன்னம் ஒன்றிருக்கிறதா? அப்பா, அதைச்சொன்னால் பாதாபமாயிருக்கும். ஆத்தும இரட்சிப்பைப் போக்கடித்தாயே. மோட்சம் போனால் எல்லாம் போயிற்றே. மனிதன் தன் ஆத்துமத்துக்கு ஈடாக எதைக் கொடுக்கலாம்? மனுஷன் லோகத்தை எல்லாம் ஆதாயப்படுத்திக்கொண்டு தன் ஆத்துமத்தைச் சேதப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? அல்லது மனுஷன் தன் ஆத்துமத்தை மீட்கிறதற்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? மத். ௧௬, ௨௬. நேரோ இராயன் சூதாடும்போது, ஒரு ஆட்டத்தில் ஆயிரம் ரூபாயைத்தோற்றான். பின் ஒருவன் ஒரு மணிநேரத்துக்குள்ளே பதினாயிரம் தங்கக்காசைத் தோற்றுவிட்டான். ஆனால் இதுகள் எல்லாம் ஆத்தும சேதத்துக்கு எம்மாத்திரம். ஒரு ஆத்துமத்தை இழந்துவிட்டால், இலட்சம் வராகன் கொடுத்துத் திரும்ப அதைக் கொள்ளலாமோ? அப்பா, திரும்ப விளையாடி கெலிக்கிறதற்கு ஒரு மணிநேரமாகிலும் மிகுந்திராதோ? இராது. ஆட்டமும் போயிற்று. தாயமும் போயிற்று. போனது போனதுதான். உன் காலம் ஆன உடனே நீ அப்புறப்பட வேண்டுமே. நீ தாயத்தை உருட்டினதற்குத் தக்கதாய் உன் வெற்றியும் இருக்கும். போயிற்று, போயிற்று. ஐயோ என்றென்றைக்கும் போயிற்றே. சுவாமி இரங்கும்.



௩௪௯. தியானம்.

# பராபரனுடைய உண்மையுள்ள ஊழியரின் சரியான பட்டத்தைப் பற்றியது.

எத்தராய்க் காணப்பட்டும், சத்தியவான்கள். உ கொரிந். ௬, ௮.

இயேசுநாதர் இப்படிப்பட்டவராய் இருந்தார். அவருடைய அப்போஸ்தலமாரும் அப்படித் தான். அத்தனாசியுஸ், லுத்தர், யோவான் ஆர்ந்து முதலிய பராபரனுடைய உத்தம ஊழியருக்கும்: எத்தராய்க் காணப்பட்டும் சத்தியவான்கள் என்கிற பேர் கிடைத்தது. கிறிஸ்தவனே, உனக்கும் இப்படிப்பட்ட பேர் வாய்க்குமா? அப்படி வாய்த்தால், எத்தனை பாக்கியம்! பூலோகத்திலே பரிசுத்தவான்களுக்கு உண்டாயிருக்கிற துன்பம் பரலோகத்திலே அவர்கள் தரிக்கிற கிரீடமாயிருக்கிறது. ஆகையால் மனதார சந்தோஷப்பட்டு, எத்தராகக் காணப்பட்டும் சத்தியவான்களாயிருக்கிறோம் என்கிற பட்டத்தைத் தரித்துக்கொள்.

நீ உன் பராபரனுக்கு முன்னே சத்தியவானாகவும் மனுஷருக்கு முன்னே எத்தனாகவும், நல்லோருக்கு முன்னே சத்தியவானும் பொல்லாருக்கு முன்னே எத்தனுமாயும் இருக்க வேண்டியது தான். காய்பாவும் அவனைச் சேர்ந்தவர்களும் கிறிஸ்துவை: சமாரியனும் எத்தனுமாக எண்ணினார்களே. நீக்கோதேமும் யோசேப்பு முதலிய தெய்வபத்தியுள்ள ஆத்துமாக்களோ அவரைச் சத்தியவானாக எண்ணினார்கள். கிறிஸ்தவன் புறம்பான கிரியைகளின் வேஷத்தை நாடாமல், உயிருள்ள விசுவாசத்தால் கிறிஸ்துவைப் பின்செல்ல வேண்டுமென்று நாம் கிறிஸ்துமார்க்கத்தின் சத்தியத்துக்கு ஏற்றபடி பேசிப் பிரசங்கிக்கும்போது, உத்தம இருதயத்தார் அந்தச் சத்தியத்தின் பெலனை அறிந்து, அதைக்கொண்டாடுகிறார்கள். தற்கால பரிசேயரோ: இவன் பதிதன், சனத்தை எத்தவும் மனச்சாட்சியில் கலக்கம் உண்டுபண்ணவும் பார்க்கிறான் என்று சொல்லுகிறார்கள். இது தேவதூஷணமும், வெளிச்சத்தை இருளாக்கி, சத்தியத்தைப் பொய்யாக்கி, கிறிஸ்துவை சமாரியனாக்கி, பராபரனையும் பிசாசாக்குகிறதும் அல்லவோ?

ஆனால் அப்படி அவதூறு சொல்லுகிறது அதிசயம் அல்ல. ஏனெனில் தேவ உபதேசத்தின் சத்தியத்தைக்கொண்டாடுகிறவர்களை அதைச் சிநேகிக்கிறவர்களிலும், அதைச் சிநேகிக்கிறவர்களையோ அதை அறிந்தவர்களிலும், அதை அறிந்தவர்களையோ பராபரனுடைய ஆவியினால் பிரகாசிப்பிக்கப்பட்டவர்களிலும் தேட வேண்டும். கண்தெரியாதவனுக்கு

நிறந்தெரியாததுபோல, பிரகாசிப்பிக்கப்படாதவனுக்குச் சத்தியமும் தெரியாது. கண் தெரியாதவன் கறுப்பை வெள்ளை என்றும், நீலத்தைப் பச்சை என்றும் சொல்லுகிறதுபோலே, இவனும் தீமையை நன்மை என்றும், அசத்தியத்தைச் சத்தியம் என்றும் சொல்லுகிறான். அந்தகாரப் பிரபுவினாலும் பொருளாசை பெருமையாலும் குருடனாகி, உலகத்தின் வெளிச்சமாகிய இயேசுவையும், அவர் அடியார்களையும் பகைத்துத் துன்பப்படுத்துகிறவன், தேவ வெளிச்சத்தையும் ஆவியையும் அடைவதெங்கே. நீ உனக்கு அருமையான பண்டங்களை அசுத்தமான இடத்தில் பத்திரம் பண்ணிவைக்கமாட்டாயே. பராபரன் தமது வெளிச்சத்தையும் கிருபையையும் நாறும் பாண்டமாகிய அசுத்த ஆத்துமாவிலே வைப்பாரோ? வெளிச்சமும் இருளும், கிறிஸ்துவும் பேலியாளும், பராபரனும் பிசாசும் ஒரே இருதயத்திலே கூடியிருக்கக் கூடுமோ? இயேசுவையும் சத்தியத்தையும் அறியாத பேய்பிடித்த மனிதர் உன்னைப் பரட்டன், எத்தன் என்று சொல்லிவைத்தால், அதற்காக நீ வருத்தப்படாதே. அசுத்த ஆவியின் பலவிமுட்டுகளும், ஆட்டுத்தோல் போர்த்துக்கொண்டிருக்கும் ஓநாய்களும், வெளிச்சத்தூதன் வேஷம் எடுத்திருக்கும் பிசாசுகளுமாகிய இவர்களைச் சுத்த போதகத்தைப்பற்றி நியாயஞ் சொல்ல வைத்தது ஆர்? சலதோஷங் கொண்டிருக்கிறவனுக்குச் சரியான ருசியும் வாசனையும் தெரியுமா? அவர்கள் அநியாயத்தைத் தண்ணீரைப்போலக் குடிக்கிறார்கள். யோபு ௰௫, ௰௬. கிணற்றிலிருந்து ஜலம் சுரந்துவருகிறதுபோல், துர்க்குணம் அவர்கள் இருதயங்களிலிருந்து சுரந்துவருகிறது. ஆகையால் அவர்களுக்குத் தித்திப்பும் கசப்பாய்த் தோற்றுகிறது. நன்மையை தீமை என்றும், மெய்யைப் பொய் என்றும் சொல்லுகிறார்கள். ஜீவனுக்குச் ஜீவ வாசனையாயிருக்கிற சுவிசேஷம், இவர்களுக்கு மரணத்துக்கு மரண வாசனையாய்ப் போகிறது. அவர்கள் பார்வோன் இராசாவைப்போல் மனக்கடினமுள்ளவர்களாகி, நாளுக்குநாள் தங்கள் பெருமையான சிந்தையிலே தங்களைக் கடினப்படுத்துகிறார்கள். நாம் அவர்களைப் பராபரனுக்கு ஒப்புவித்துப்போட வேண்டுமே யொழிய வேறொன்றுஞ் செய்யத்தக்கதில்லை. நியாயம் நீதியாகத் திரும்பும். செம்மை இருதயத்தார் அனைவரும் அதைப்பின் செல்லுவார்கள். சங்கீ. ௯௪, ௰௫.



௱௫ம். தியானம்.

# போர்க்கிறிஸ்தவர்களுடைய விக்கிரக ஆராதனையைப் பற்றியது.

தேவ ஆராதனை விக்கிரக ஆராதனை.

அப்பா, இதைக் குறித்து வேதனைப்படாமல் இருக்க யாருக்குத் தான் மனம் சகிக்கும்! பராபரன் தானே விக்கிரகத்தைச் சோதிக்க வேண்டியதாகிறதே. போர்க்கிறிஸ்தவர்கள் தேவ ஆராதனை என்கிற வெளிவேஷத்தையும் பேரையும் எடுத்துக்கொண்டு, விக்கிரக ஆராதனை செய்கிறார்கள்.

இக்காலத்து போர்க்கிறிஸ்தவர்களுக்கு நாலு ஊமையான கோவில்விக்கிரகங்கள் உண்டு. அதாவது: ஞானஸ்நானத் தொட்டி, பிரசங்க ஆசனம், பாவசங்கீர்த்தனம், நற்கருணை பீடம் தானே. ஞானஸ்நானம் பெற்றோம், தேவவசனம் கேட்கிறோம், பாவ சங்கீர்த்தனம் பண்ணுகிறோம், நன்மை வாங்குகிறோம் என்கிறதுகளால் தங்கள் புறம்பான கிறிஸ்து மார்க்கத்தைத் தேற்றிக்கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்கள் கிறிஸ்துமார்க்கத்தின் உள்ளான பெலனை மறுதலிக்கிறார்கள். ஞானஸ்நானம் மறுசெனனமுழுக்கும் பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலுமாயிருந்தும், அவர்கள் நவமான மனுஷன் அடவாய் அல்ல, பழைய மனுஷன் அடவாய் நடந்து ஞானஸ்நானத்தின் பெலத்தை மறுதலிக்கிறார்கள். அவர்கள் தேவவசனம் சொல்லுகிறபடி நடக்காமல், தங்கள் ஆசார நடக்கையினால் தேவவசனத்தோடே எதிர்த்து நின்று அதைப் பொய்யாக்கி அதின் பெலத்தை மறுதலிக்கிறார்கள். அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்று அதினால் தங்கள் இருதயங்களிலே ஆறுதல் அடைந்து, அப்புறம் பாவத்தைச் சிநேகிக்கவும் நன்மையைப் பகைக்கவும் கூடாதகாரியம் என்று அறிந்திருந்தும், அவர்கள் நாணப்படாமல் நேற்றைப்போலவே இன்றைக்கும் இருக்கிறபடியால், பாவமன்னிப்பின் பெலத்தை மறுதலிக்கிறார்கள். அவர்கள் நற்கருணையின் வழியாய் கிறிஸ்துவோடு ஐக்கியமாயிருந்தாலும் அவருக்குள் பிழைக்காமல், தங்கள் மாம்ச இச்சைப்படி நடந்து, எல்லாப்பாவங்களிலும் புரண்டு, பரிசுத்த நற்கருணையின் பெலத்தை மறுதலிக்கிறார்கள.—பேலியாளுடனே கிறிஸ்துவுக்கு இசைவு ஏது? இது எல்லாம் விக்கிரக பத்தியாய் இருக்கிறது. ஏனெனில் பராபரன் ஆவியாயிருக்கிறார். அவரைப்பணிந்துகொள்ளுகிறவர்கள் ஆவியிலும் உண்மையிலும் பணிய வேண்டியது. யோவா. ௪, ௨௪.

ஆனால் ஞானஸ்நானம், தேவவசனம், பாவசங்கீர்த்தனம் நற்கருணை என்றவைகளை ஊனமை விக்கிரகங்கள் என்று சொல்லுகிறபோது, அனபாப்திஸ்தர் செய்கிறதுபோல் அதுகளை மறுதலிக்கிறதுபோலாயிற்றே என்கிறாய். சிநேகிதா, சரியான கையாடுதலுக்கும் துர்வகையான கையாடுதலுக்கும் வித்தியாசம் இல்லையா? பராபரனை அன்றி மனது ஒன்றைச் சார்ந்து அதினிடத்திலே நம்பிக்கை வைத்தால் அது விக்கிரக பத்தி என்கிறேன். போர்க்கிறிஸ்தவனுடைய இருதயம் பராபரன் தவிர எந்தப்பொருளை நம்பி அதைச் சார்ந்திருக்கிறதோ அதுவே அவனுடைய விக்கிரகம். இப்படி ஞானஸ்நானம், தேவவசனம், பாவசங்கீர்த்தனம், நற்கருணை, அவர்களுக்கு விக்கிரகம் போலாகும். ஏனெனில் கிறிஸ்துவை விசுவாசிக்காமலும், சிநேகத்தினால் பலத்தைக்காட்டும் விசுவாசத்தை அடையாமலும், ஞானஸ்நானத்தின் பலத்தைக் கிரியைகளிலே காண்பிக்காமலும் இருந்தாலும், தான் சிறுவயதிலே ஞானஸ்நானத்தொட்டி அண்டையிலே தூக்கிக்கொண்டு போகப்பட்டதினால் மோட்சம் அடையலாம் என்று எண்ணுகிறான். வசனத்தை விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டு மனதிலே வைக்காமலிருந்தும், பிரசங்க ஆசனத்தின்மேலிருந்து அதைப் பிரசங்கிக்கிறவனைப் பார்த்து, அவர் சொல்லுகிறதைக்கேட்டதினால் மோட்சம் அடையலாமென்றும் நினைக்கிறான். தன் வாயினால் பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறது இன்னதென்று இருதயம் அறியாமலும், உணராமலும் இருந்தாலும், மூன்று மாதத்திற்கு ஒருவிசை பாவசங்கீர்த்தனத்திற்கு வருகிறதினாலே மோட்சம் அடையலாம் என்றும் நினைக்கிறான். நன்மை வாங்கும்போது பக்தியும் விசுவாசமும் இல்லாதிருந்தும், நன்மை வாங்குகிறவர்களோடே கூடத் தானும் பீடத்திற்கு முன்னே முழங்காலிருந்தால் மோட்சம் அடையலாம் என்றும் நினைக்கிறான். தான் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் மோட்சம் அடைய வேண்டும் என்று இராமல், பிரசங்க ஆசனம் ஞானஸ்நானத்தொட்டி நற்கருணை பீடம் கட்டப்பட்ட மரத்திலாவது, கல்லிலாவது நம்பிக்கை வைக்கிறது விக்கிரகபக்தி அல்லவா?

நாம் ஆவியினாலும் உண்மையினாலும் பராபரனுக்கு ஊழியம் செய்யவேண்டும் என்று அவர் தமது வசனத்திலே கேட்கிறபடி அவருக்கு ஊழியம் செய்யாமல், தேவபக்தியின் வேஷத்தினாலும், புறம்பான கிரியைகளினாலும் மாத்திரம் அவருக்கு ஆராதனை செய்கிறவன் விக்கிரக ஆராதனை செய்கிறான். தேவவசனம் அல்லாமல் மனிதன் தன் சுய தோற்றப்படி செய்கிறதெல்லாம் விக்கிரகம். அது மரத்தினாலும்



வெள்ளியினாலும் செய்யப்பட்ட சுரூபங்களுக்குச் செய்யும் விக்கிரக ஆராதனைக்கு ஒப்பாயிருக்கிறது. பாப்புமார்க்கத்தாருடைய ஆராதனை விக்கிரக ஆராதனை என்று நம்முடைய வேதசாஸ்திரிகள் சொல்லுகிறது எதினாலே? இவர்கள் தேவவசனத்தைப் பிரமாணமாய் வைத்துக்கொண்டு அதின்படியே எல்லாவற்றையும் செய்யாததினாலே அல்லவோ. அப்படியே கொழுப்பில்லாத பயிரங்கிய விசுவாசமில்லாத கிரியைகளை பராபரன் தமது வசனத்திலே புறக்கணித்துத் தள்ளுகிறபடியால், போர்க்கிறிஸ்தவர்களுடைய ஆராதனையை விக்கிரக ஆராதனை என்கிறேன். சிநேகிதா, அதைக் குறித்து அதிகமாய் ஆட்சேபிக்க வேண்டாம். கர்த்தாவுக்குள் நாம் எல்லாரும் தயிரியம்கொண்டு அந்தப்பிரகாரமே ஊழியக்காரருக்கு விரோதமாக வலியாவோடு பக்திவைராக்கியம் அடைந்து கர்த்தாவுடைய தேவாலயத்தைச் சுத்திகரிக்கவும், அவர்கள் தங்கள் இருதயங்களில் உண்டுபண்ணிக்கொண்ட விக்கிரகங்களை உடைத்துத் தள்ளவும் பிரயாசப்படக் கடவோம்.

ஞானஸ்நானத்தை மறுதலிக்கிறவர்கள் இந்த வார்த்தைகளை வியர்த்தமாக்கி தங்கள் பொய்யை இதினாலே சோடிக்கிறதற்கு இடம் ஆகிறது என்று சொல்லுகிறது உதவாது. பிசாசு பராபரனுடைய வசனத்தைக் கிறிஸ்துவுக்கு விரோதமாக வஞ்சகத்திலே மாறுபாடாய்ச் சொல்லிவந்தபோது, பராபரன் அதையும் சகிக்க வேண்டியதாயிருந்ததே. மத். ௪. பாவம் பெருகின இடத்திலே பராபரனுடைய கிருபை பின்னேயும் அதிகமாய்ப் பெருகிற்று என்று (ரோமர் ௫, ௨௰.) பவுல் அப்போஸ்தலன் மகா ஆறுதலாய்ப் போதித்ததை அக்கிரமக்காரரின் கூட்டங்கள் மகா துணிவோடே புரட்டி, "ஆம் அப்படியானால், கிருபை நம்மிடத்தில் பெருகும்படிக்கு நாம் பாவத்தின்மேல் பாவத்தைக் குவித்து வைக்க வேண்டும்" என்று எக்களிப்பாய்ச் சொல்லுகிறார்கள். இவர்களை இப்படிப்பட்ட தீர்மானம் பண்ணச் சொன்னது ஆர்? பவுலும் அவர் நற்கருத்தோடே சொன்ன இந்த இன்பமான வார்த்தையும் அல்ல, பிசாசும் அவர்களின் தாறுமாறான சிந்தையும் தானே. இது ரோஜாபுஷ்பத்திலே இருந்து விஷம் தோன்றினப்போலாகிறது. இதற்கு ஆராவது என்ன செய்யலாம்! தூஷணக்காரன் தேவ ஊழியக்காரருக்கும் கர்த்தருடைய வசனத்துக்கும் விரோதமாய்த் தன் விஷப்பல்லை தீட்டத்துணிந்தால், நாம் அதற்காகச் சஞ்சலப்படோம். இப்படிப்பட்ட பாடு என் அருமையான இரட்சகருக்கும் அவர் அப்போஸ்தலருக்கும் மற்றும் அவருடைய உண்மையுள்ள ஊழியக்காரருக்கும்

து கர்த்தருக்கும் சகோதரருக்கும் நடக்

தறுபோல், நமக்கும் நடந்தால் நமக்குப்போதும். எப்படியும் நியாயும் நீதியாகத் திரும்பும். செம்மை இருதயத்தார் அனைவரும் அதைப் பின்செல்லுவார்கள். சங்கீ. கூ௪, ௰௫. உலகம் பொல்லாததாயிருக்கிறபடியினாலே நன்மையைத் தூஷணிக்கிறது அதின் சுபாவம். மாமிசசிந்தையான மனுஷனானவன் அறியாததைத் தூஷணிப்பானே ஒழிய மற்றவர்கள் தூஷணிக்கமாட்டார்கள். உலகத்திலே எப்பொழுதும் இப்படி இருக்கும். பரிசேயனே, இது உனக்கு அடுத்தது தானே.

௱௫௧. தியானம்.

## பரமண்டலத்தின்மேல் உள்ள ஆசையைப் பற்றியது

ஆ, பரமண்டலத்துக்கு என்னை எடுத்துக்கொள்ளும்.

கர்த்தாவாகிய இயேசுவே, சுறுக்கில் என்னை எடும். பூமி எனக்கு வெறுப்பும், பரமண்டலம் விருப்பமுமாயிற்று. பூமி என் பாரம், பரமண்டலம் என் செல்வம். பூமி என் சிறைச்சாலை, பரமண்டலம் என் விடுதலை. பூமி எனக்குப் பாபேல், பரமண்டலம் என் எருசலேம். கர்த்தாவாகிய இயேசுவே, என்னை சீக்கிரம் பரமண்டலத்துக்கு எடும்.

நான் ஆட்டுக்குட்டி, என் மேய்ப்பர் பரமண்டலத்திலிருக்கிறார். நான் மணவாட்டி, என் மணவாளன் பரமண்டலத்திலிருக்கிறார். என் மேய்ச்சலும் அடைக்கலமும் ஆறுதலும் எங்கே? பரமண்டலத்தில் உண்டாயிருக்க வேண்டுமே. ஆ கர்த்தாவாகிய இயேசுவே, சுறுக்கில் என்னைப் பரமண்டலத்துக்கு எடும்.

என் சிநேகிதன் எங்கே? பரமண்டலத்திலே. என் வீடு எங்கே? பரமண்டலத்திலே. என் பொக்கிஷம் எங்கே? பரமண்டலத்திலே. என் சந்தோஷம் எங்கே? பரமண்டலத்திலே. என் நன்றான பொருள் எங்கே? பரமண்டலத்திலே. என் சகலமும் எங்கே? பரமண்டலத்திலே. என் இருதயம் ஏங்கிப் பெருமூச்சு விடுகிறது, என் கண் கண்ணீர் சொரிகிறது, என் வாய் பேசுகிறது, என் காது கேட்கிறது, என் கை பிடிக்கிறது, எதைப்பற்றி? பரமண்டலத்தைப்பற்றி. ஆ என் கர்த்தாவாகிய இயேசுவே, என்னை சுறுக்கில் பரமண்டலத்துக்கு எடும்.

மதுரமானதை ருசிக்கிறேன். அழகானதைப்பார்க்கிறேன். இனிதானதைக் கேட்கிறேன். கனியானதை



முகருகிறேன். விலை உயர்ந்ததைப் பிடிக்கிறேன். அதென்ன? பரமண்டலமே. ஆ என் கர்த்தாவாகிய இயேசுவே, சீக்கிரமாய்ப் பரமண்டலத்துக்கு என்னை எடும்.

நான் அழைக்கப்படுகிறேன். அழைக்கிறவருடைய சத்தம் எனக்குத் தெரிகிறது. நான் இழுக்கப்படுகிறேன், என்னை இழுக்கிறது இன்னதென்று எனக்கு நன்றாய்த் தோன்றுகிறது. எங்கே? உயர உயர. ஆ என் கர்த்தாவாகிய இயேசுவே, சீக்கிரத்திலே என்னைப் பரமண்டலத்துக்கு எடும்.

இங்கே எனக்கு என்ன இருக்கிறது? பிரயாசமும் கலக்கமும் மோசமும் இடுக்கமும் மரணமுமே. அங்கே எனக்கு என்ன அகப்படும்? இளைப்பாறுதலும் அச்சமில்லாமையும் சந்தோஷமும் இன்பமும் சீவனும் தானே. நஷ்டத்தைப் பார்க்கிலும் லாபம் அதிகமாயிருப்பது எங்கே? பரமண்டலத்திலே தான். ஆ, என் கர்த்தாவாகிய இயேசுவே சீக்கிரத்திலே பரலோகத்துக்கு என்னை எடும்.

பூமி என்னை மறக்கிறது, பரலோகம் என்னை நினைக்கிறது. பூமி என்னைக் கைவிடுகிறது, பரலோகம் என்னை தூக்குகிறது. பூலோகம் என்னை நெருக்குகிறது, பரலோகம் என்னை முசிப்பாற்றுகிறது. பூலோகம் என்னைப் பயமுறுத்துகிறது, பரலோகம் எனக்கு உதவிசெய்கிறது. பூலோகம் என்னைப் புறக்கணித்து தள்ளுகிறது, பரலோகம் என்னை ஏற்றுக்கொள்ளுகிறது. ஆ என் கர்த்தாவாகிய இயேசுவே சீக்கிரத்தில் பரமண்டலத்துக்கு என்னை எடும்.

நான் இந்த நெடுநாள் பிரயாணத்தினால் எத்தனை இளைப்படைந்திருக்கிறேன்! இந்த புளிப்பான சாப்பாடு எப்படி எனக்கு அரோசியமாயிற்று! கால்கள் பெலவீனமாயிருக்கிறது. நாவு வெந்துபோயிருக்கிறது. பரமண்டலம் என் பிறந்தகம். அதுவே எனக்கு மதுரந் தருகிறது. ஆ என் கர்த்தாவாகிய இயேசுவே, சுறுக்கில் என்னைப் பரமண்டலத்துக்கு எடும்.